இந்திய வரலாறு

(1858-லிருந்து 1964 வரை)

ஆசிரியர்

எஸ். அசோகன்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த. பா. நி. (க.வெ.) வரிசை எண்—734

இந்திய வரலாறு

(1858-லிருந்து 1964 வரை)

(பட்டப்படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகிறது)

ஆசிரியர்
எஸ். அசோகன், எம்.ஏ., பி.டி. (நிலநூல் டிப்ளோமா),
வரலாற்றுப் பேராசிரியர், மன்னர் கல்லூரி,
புதுக்கோட்டை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—December. 1976

T.N.T.B.S. (C.P.) No. 734

© Government of Tamilnadu

HISTORY OF INDIA (From 1858 to 1964)

S. ASOKAN

Price Rs. 7-70

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed out of the Paper allotted by the Government of India.

Printed by
Yasotha Printers,
48, Vaithiyanatha Mudali Street,
Madras-600001.

பதிப்புரை

இந்திய வரலாறு (1858-லிருந்து 1964 வரை) என்ற இந் நூல், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் **734**ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **769** நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்'தின்கீழ் வெளியிடப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

பொருளடக்கம்

பக்கம்

1. 1858-லிருந்து 1964 வரை அரசியல் தொடர்புகள் ... 1

(1) வடமேற்கு எல்லைப் பகுதி ... 1

(2) வடகிழக்கு எல்லைப் பகுதி ... 22

(3) ஆங்கிலேயர்களும் சுதேச அரசர்களும் ... 45

2. 1858-லிருந்து 1947 வரை வெள்ளை மாளிகையும் இந்திய அரசும் ... 61

(1) இங்கிலாந்து அரசு ... 61

(2) இந்திய அரசு ... 69

(3) பொதுப் பணிகள் ... 84

(4) தல தன்னாட்சி முறை ... 95

(5) மேல்நாட்டுக் கல்வி முறையின் வளர்ச்சி ... 105

(6) சமூக, சமய சீர்திருத்தங்கள் ... 116

(7) வாணிபமும் தொழிலும் ... 140

(8) போக்குவரத்தும் பொதுப்பணிகளும் ... 159

3. 1858-லிருந்து அரசியல் அமைப்பின் வளர்ச்சியும் விடுதலை இயக்கமும் ... 170

(1) 1861 ஆம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் ... 170

(2) இந்திய தேசிய காங்கிரஸ் ... 180

(3) மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாறும் கிலாபத் இயக்கமும் ... 201

(4) 1919ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் ... 213

(5) ஆங்கிலப் பேரரசின் முடிவும் இந்தியாவின் பிரிவினையும் ... 230

பக்கம்

4. சுதந்திர இந்தியா ... 238

(1) இந்திய சமஸ்தானங்களின் ஒருங்கிணைவு ... 238

(2) குடியேற்ற நாட்டு அந்தஸ்திலிருந்து குடியரசிற்கு ... 264

(3) ஜவகர்லால் நேரு (1889—1964) ... 279

5. இந்தியாவின் கவர்னர் ஜெனரல்களும் வைசிராய்களும் ... 317

6. கால வரிசைப் பட்டியல் ... 321

மேற்கோள் நூற்பட்டியல் ... 330

கலைச்சொற்கள் ... 331

1. 1858-லிருந்து 1964 வரை அரசியல் தொடர்புகள்

(1) வடமேற்கு எல்லைப்பகுதி
(North-West Frontier)

ஆப்கானிஸ்தானம், பாரசீகம் ஆகிய நாடுகளுடன் இந்திய அரசியல் தொடர்பு

வடமேற்கு எல்லைப்புறம் : ஆங்கிலேயர்கள் 1843-ல் சிந்து மாகாணத்தையும் 1849-ல் பஞ்சாப் மாகாணத்தையும் வென்ற போது இவற்றின் வடமேற்கு எல்லைப்பகுதிகளில் வாழ்ந்த மலை இனத்தவருடன் தொடர்புகொள்ள நேர்ந்தது. இந்திய எல்லையி லிருந்து ஆப்கானிஸ்தானம் வரையிலுள்ள மலைப் பகுதிகளில் பலூச்சி (Baluchi), பத்தான் (Pathan) ஆகிய இனத்தவர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் மற்றவர்கள் எளிதில் செல்லமுடி யாத மலைப்பகுதிகளில் கூட்டங்கூட்டமாக வாழ்ந்து வந்தனர். ஆப்கானிஸ்தானத்தின் மன்னர் அமீர் என்று அழைக்கப்பட்டார். இவர் இம் மலைஇனத்தவர்களின்மீது பெயரளவில் அதிகாரம் செலுத்தி வந்தார். உண்மையில் இம் மக்கள் எவரது கட்டுப் பாட்டிற்கும் அடங்காத சுயேச்சை உள்ளம் படைத்தவர்கள். இவர்கள் தாங்கள் பேசும் மொழியாலும் சமயத்தாலும் ஓரள விற்கு ஆப்கானிய அமீரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு வந்தனர். இவர்களுக்குள் பல உட்பிரிவுகளுண்டு. இவர்கள் ஜனநாயக முறைப்படி தங்களுடைய தலைவரைத் தேர்ந்தெடுத்துச் சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வந்தனர். 'ஜிர்கா' (Jirga) என்பது இவ் வினத்தவர்களின் மத்தியில் இயங்கிவரும் நீதிசபை. இதில் வாலிபர்களே பெரும்பாலும் பங்குகொண்டு தங்கள் சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண் கின்றனர். முதியோர்கள் கூடியமட்டும் இச் சபையில் பங்கு கொள்வதில்லை.

மலைஇனத்தவரின் வாழ்க்கை முறை

இம் மலைச்சாதியினரின் இருப்பிடம், சீதோஷ்ணநிலை, பொரு ளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்தே இவர்களின் குண

இயல்புகள் அமைந்துள்ளன. கரடுமுரடான மலைப்பகுதியில் வாழ்ந்து வருவதால், இவர்கள் வலுவான உடலையும் கொடிய குணத்தையும் பெற்றிருக்கின்றனர். இம் மக்கள் எவ்விதக் கட்டுப்பாட்டையும் பிறர் தலையீட்டையும் விரும்புவதில்லை. துர் அதிர்ஷ்டவசமாக இவர்களின் பொருளாதார நிலையும் வறுமையும் மற்றவர்கள் சுதந்திரத்துடன் வாழ்வதற்குப் பெருந் தடையாக இருந்தன. இவர்கள் தங்களுடைய சுயநலம் கருதி எத்தகைய கொடுமைகளையும் செய்யத் தயங்காதவர்கள். இவர்கள் வாழும் இடம் மரம், செடி கொடிகள் அற்ற வெறும் மலைப்பகுதி. தண்ணீர் கிடைப்பதும் அரிது. 'இறைவன் உலகத்தைப் படைத்தபொழுது முரடர்களை எல்லைப்புற மலைகளில் அடைத்து வைத்தார். ஆனால், இவர்களைப் படைத்த அதே இறைவன் மலை அடிவாரங்களில் செழுமையான நிலத்தையும், கிராமங்களையும், ஒட்டகங்கள் சென்று வரும் வியாபாரப் பாதைகளையும், இவ் வறுமைமிக்க மக்களின் பார்வையில் படும்படி படைத்துள்ளார்' என்று இம் மக்கள் கூறுவது வழக்கம். எனவே, நீண்ட நெடுங் காலமாக இம் மலைஇனத்தவர்கள் அண்டை மாவட்டங்களில் கொள்ளை அடிப்பதும் ஆடு மாடுகளைத் திருடுவதும் ஒட்டகக் கூட்டங்களை மறித்து வியாபாரப் பொருள்களை அபகரித்துச் செல்வதும் மலை அடிவாரங்களில் உள்ள கிராமங்களைக் கொள்ளை யடிப்பதும் மக்களைக் கொலைசெய்வதும் ஆகிய இவற்றைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். இத்தகைய கொடுமைக் குணம் படைத்த மலைச்சாதியினருக்கு இயற்கை பாதுகாப்பு அளிக்கின்றது. இவர்கள் இருப்பிடம் எவரும் எளிதில் சென்றுவர இயலாத மலைப்பகுதி இடுக்குகளில் அமைந்துள்ளது.

1846ஆம் ஆண்டு சுமார் 1,500 மலைச்சாதியினர், இந்திய அரசின் எல்லையான சிந்து மாகாணப் பகுதிக்குள் நுழைந்து இருபத்துநான்கு மணி நேரத்தில் 15,000 மாடுகளைக் கடத்திக் கொண்டு 75 மைல் தொலைவிலுள்ள தங்களுடைய இருப்பிடத் திற்குத் திரும்பினர். மேலும் இவ்வினத்தவர்கள், நீதிக்குப் புறம் பாக இந்திய எல்லைகளிலிருந்து தப்பிவரும் குற்றவாளிகளுக்குப் புகலிடம் கொடுப்பதும் கொள்ளை கொலை, திருடு ஆகியவற்றைச் செய்வதும், குறிப்பாக ஆங்கிலேயர்களைக் கொலை செய்வது போன்ற சட்ட விரோதமான காரியங்களில் எவ்விதத் தயக்கமும் இன்றி ஈடுபடுவதும் இவர்களின் இயற்கைப் பண்பு என்று இவ் வினத்தவர்களைப்பற்றி நன்கு அறிந்த சர் ரிச்சர்ட் டெம்பிள் (Sir Richard Temple) என்பவர் கூறியுள்ளார். எல்லைப்புற மலைச்சாதியினரின் கொடுமைகள், ஆங்கிலேயர்களின் நிர்வாகக் காலத்தில் மட்டும் நிகழவில்லை. இவர்களுக்கு முன் ஆண்ட சீக்கி

யர்களின் ஆட்சிக் காலத்திலும் இத்தகைய தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. பெஷாவருக்கு அருகில் உள்ள பல கிராமங்கள் மலைச்சாதியினரின் நிர்வாகத்தில் இருந்து வந்தன. இவை உண்மையில் ஆங்கிலேயருக்குச் சொந்தமானவை. மேலும், ரஷ்யாவிடம் கொண்ட அச்சம் காரணமாக ஆப்கானிஸ்தானத்தின்மீது ஆதிக்கம் செலுத்தவேண்டுமென்ற ஆவலும் வடமேற்கு எல்லைப் பகுதியில் தீவிர நடவடிக்கை எடுக்க இந்திய அரசைத் தூண்டியது.

சிந்து மாநிலத்தின் எல்லைப்புறத்தில் இந்திய அரசின் நடவடிக்கைகள்

சர் சார்லஸ் நேப்பியர் (Sir Charles Napier) என்பவர், மலைச் சாதியினரின் கொடுமைகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க சிந்து மாகாண எல்லைப்புறங்களில் பலமான பாதுகாப்புக் கோட்டைகள் அமைத்து, அவற்றில் ராணுவ வீரர்களை வைத்தார். அவ்வப் போது இவ் வினத்தவர்கள்மீது ராணுவ நடவடிக்கைகளும் எடுத்து வந்தார். இருப்பினும் இத்தகைய நடவடிக்கைகள் எவ் விதப் பயனும் அளிக்கவில்லை. இதையடுத்து மேஜர் ஜான் ஜாக்கப் (Major John Jacob) என்பவர், இம் மலைச்சாதியினரின் நடமாட்டத்தைக் கண்காணிக்க இரவு பகலாக வீரர்களை அனுப்பிக் கவனித்து வந்தார். சர் ராபர்ட் சாண்டிமென் (Sir Robert Sandeman) என்பவர், இம் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களுக்கு உதவித் தொகை அளித்துச் சட்டம், அமைதியைப் பாதுகாக்கவும் கணவாய்களையும் வியாபாரப் போக்குவரத்து வழிகளைக் கண்காணிக்கவும் வசதி செய்வித்தார். இத்தகைய முறைக்கு எதிர்ப்பு இருந்தபோதிலும் இம் முறை நல்ல பயனளித்தது. இம் முறையில் பலூச்சி இனத்தவர்களை இந்திய அரசு ஓரளவிற்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது.

பஞ்சாபின் எல்லைப்புறங்களும் ஆங்கிலேயர்களும் – டல்ஹௌசி பிரபுவின் நடவடிக்கைகள்

பஞ்சாப் மாநிலத்தின் எல்லைகளுக்கு அப்பால் வாழ்ந்தவர்கள் பத்தான் என்ற இனத்தவர்கள். இவர்கள் ஜனநாயக முறைப்படி அமைக்கப்பட்ட அமைப்பில் நம்பிக்கை உள்ளவர்களாகவும் தனி மனிதன் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்பவர்களாகவும் இருந்தனர். சமயத்துறையில் தீவிரவாதிகளாகவும், சமயத் தலைவர்களான முல்லாக்களின் வார்த்தைகளுக்கு லகுவில் கட்டுப்படுபவர்களாகவும் இருந்தனர். ரத்தவெறி கொண்ட இவர்கள், கொள்ளையடிப்பதற்காக எத்தகைய கொடுமையும் இழைக்க தயங்காதவர்கள். டல்ஹௌசி இம் மக்களுக்கு அமைதியான வாழ்க்கை

வாழ்வதற்கெனப் பல புதிய வழிகளை ஏற்படுத்தியிருந்தார். அத்துடன் அவர்களின் கொடிய நடவடிக்கைகளைத் தடுக்கும் பொருட்டுப் பல முக்கிய கோட்டைகள் கட்டுவித்தார். இம் முறைகளும் பயன் அளிக்கவில்லை. 1851ஆம் ஆண்டு திரு. கார்னி (Mr. Corne) என்ற சுங்க இலாகா அதிகாரியும் அவரது உதவியாளரும் இம் மக்களின் எல்லைக்குள் கொலை செய்யப்பட்டனர். குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டும் என்ற டல்ஹௌஸியின் வேண்டுகோளுக்கு இணங்க அம் மக்களின் தலைவர் (Khan) குற்றம் செய்த சிலரை ஆங்கில அரசிடம் ஒப்படைத்தார். இதை அறிந்த பத்தானியர், தங்கள் தலைவரின் இரண்டு கோட்டைகளைக் கைப்பற்றி, அவரைப் பெரும் தொல்லைகளுக்குள்ளாக்கினர். எனவே, 1825ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3,800 வீரர்கள் அடங்கிய ஆங்கிலப்படையொன்று இப் பகுதிக்குச் சென்று பத்தானியர்களின் பல கிராமங்களை அழித்தனர். பத்தானியர்களைப் போன்று மோமண்டுகள் (Mohmands) என்ற பிரிவினரும் கொடுமையானவர்கள். இவர்கள் இந்திய எல்லைக்குள் இருந்த பல கிராமங்களைக் கொள்ளையிட்டு எல்லைக் காவல் வீரர்களைக் கைப்பற்றிப் பெஷாவர் ராணுவ முகாமிலுள்ள ஆங்கிலேயர்கள் பலரைக் கொலைசெய்த குற்றத்திற்காக டல்ஹௌஸி பல ராணுவ நடவடிக்கைகள் மேற்கொண்டு பத்துப் பிரிவினர்களைத் தண்டித்துப் பழிக்குப் பழி வாங்கினர். இவ்வாறு தண்டிப்பது நியாயம் அற்ற செயல் என்று சர் கோலின் கேம்பல் (Sir Colin Cambell) என்ற ராணுவ அதிகாரி, டல்ஹௌஸியிடம் எடுத்துரைத்தார். டல்ஹௌஸியின் நடவடிக்கைகளை ஆங்கில மக்களில் ஒரு பகுதியினர் வன்மையாகக் கண்டித்தனர்.

மலைச்சாதியினரின் நடவடிக்கைகளை ஒடுக்க டல்ஹௌஸியின் நடவடிக்கைகள் இறுதியாக மூன்று வழிகளில் வடிவெடுத்தன. அவை முறையே, (1) பணத்தண்டனை; (2) அவர்களின் நடமாட்டத்தைத் தடை செய்தல்; (3) ராணுவ நடவடிக்கை என்பன. இவர்கள் செய்யும் கொள்ளை, கொலைகளுக்கு ஈடாகத் தண்டம் விதிப்பது உண்டு. ஆனால் இவர்களிடமிருந்து தண்டத்தொகை வசூலிப்பது மிகவும் கடினம். எனவே, மனிதர்களைக் கைப்பற்றி அபராதத் தொகை வசூலிக்கும்வரை பணத்திற்கு ஈடாகக் காவலில் வைப்பது உண்டு. மலைஇனத்தவர்களின் போக்குவரத்து வழிகளைத் தடுத்து அவர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது இரண்டாவது வழி. இம் முறைகளும் பயனளிக்காத போது ராணுவ நடவடிக்கைகளின்மூலம் இவர்களின் இடங்களுக்குச் சென்று எதிர்ப்படுவோரைச் சுட்டுவீழ்த்தி, அவர்களுடைய இருப்பிடத்தை அழித்துப் பயிர்களை நாசப்படுத்துவதும் உண்டு.

ஒரு சிலர் இழைக்கும் குற்றத்திற்காகப் பலரைப் பலியாக்குவது நீதியன்று என்று உயர்தர ஆங்கில அதிகாரிகள் டல்ஹௌசியிடம் எடுத்துரைத்தனர். ஆனால், இத்தகைய அடக்குமுறைகளும் தண்டனைகளும் சீக்கியர்களின் நிர்வாகக் காலத்தில் இருந்து வந்தன என்று டல்ஹௌசி தனது எதிரிகளுக்கு எடுத்துரைத்தார். மேலும், இந்தியாவில் ஆங்கில இனத்தவர்களின் உயிர், உடைமைகளையும் தங்கள் மதிப்பையும் இந்தியர்களின் மத்தியில் நிலை நாட்டுவது அவசியம் என உணர்த்தினர்.

1849-லிருந்து 1890-க்குள் 42 தடவைகளுக்குக் குறையாமல் இந்த முரட்டு இனத்தவர்களுக்கு எதிராக ராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று சில ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் எழுதியுள்ளனர். இந் நடவடிக்கைகளின்மூலம் ஆங்கிலேயர், 2,173 ராணுவ வீரர்களை இழந்திருக்கின்றனர். இதைப் போன்று பத்தானியர்களுக்கு ஆதரவளித்த வகாப்பியர்கள் (Wahabis) என்ற பிரிவினரை அடக்க எடுத்துக்கொண்ட ராணுவ நடவடிக்கையின் மூலம் 1863-ல் மட்டும் 908 வீரர்களை இழக்க நேரிட்டது.

(அ) ஆப்கானிஸ்தானம்

ஆங்கிலோ-ஆப்கானிய அரசியல் தொடர்பு

இந்திய சிப்பாய்க் கலகம் ஏற்பட்டதன் விளைவாகக் கம்பெனியின் ஆட்சியிலிருந்து இந்திய நிர்வாகத்தை ஆங்கில அரசு தனது நேரடி நிர்வாகத்தின்கீழ் எடுத்துக்கொண்டது. இந்தியாவின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை இந்திய அமைச்சர் (Secretary of State for India) என்ற அதிகாரியின்மூலம் ஆங்கில அரசு கவனித்து வந்தது. மத்திய ஆசிய நாடுகளில் செல்வாக்குப் பெற்ற ரஷ்யாவினால் இந்தியப் பேரரசுக்கு ஆபத்து விளையுமோ என்ற அச்சம் இந்திய அரசுக்கு இருந்து வந்தது. இமயமலைச் சாரலிலுள்ள ஹீரட், பாரா, காண்டகார் போன்ற பகுதிகளின் வழியாக இந்திய எல்லைக்குள் ரஷ்யர்கள் நுழையக் கூடும் என்று ஒரு சாராரும், மற்றொரு பெரும்படைகளுடனும் சுடு கருவிகளுடனும் போர் வண்டிகளுடனும் இப் பகுதிகளைக் கடந்து வர இயலாது என்று மற்றொரு சாராரும் கருதிவந்தனர். இருப்பினும், விஞ்ஞான முறைப்படி அமைக்கப்பட்ட ஐரோப்பிய ராணுவம், இத்தகைய மலைப்பாங்கான இடங்களை லகுவில் கடந்து இந்திய எல்லையை அடையக்கூடும் என்ற எண்ணம் இந்திய அரசுக்கு இருந்து வந்தது. எனவேதான் ஆப்கானிய அரசுடனும் அதை ஒட்டியுள்ள பல்வேறு மலைஇனத்தவர்களுடனும், ஒரு திடமான


ஆப்கானிஸ்தானமும்
வடமேற்கு எல்லையும்
பொகாரா
மேர்வ்
ஆக்ஸஸ் நதி
மசார் இ ஷரீப்
பாரசீகம்
ஹீரட்
சித்ரால்
கில்கித்
காபூல்
காபூல் நதி
கைபர் கணவாய்
பெஷாவர்
அட்டாக்
ஆப்கானிஸ்தானம்
கஜினி
போச்சி
துராண் எல்லைக் கோடு
ஹெல்மண்ட் நதி
காண்டகார்
சாமன்
குவெட்டா
போலன் கணவாய்
சிபி
பலுசிஸ்தானம்
சிந்து நதி
ஜீலம் நதி
லாகூர்
ராவி நதி
தர்மசாலை
பியாஸ் நதி
சட்லஜ் நதி

படம் 1.

கொள்கை ஒன்றை உருவாக்கவேண்டும் என்று விரும்பினர். இதை இங்கிலாந்திலுள்ள அரசும் ஏற்றுக்கொண்டது. எனவே, இரண்டாவது ஆப்கானியப் போருக்குப் பின், இங்கிலாந்திற்கும் ரஷ்யாவிற்கும் ஒரு நட்பு உடன்படிக்கை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து 1844ஆம் ஆண்டு ரஷ்ய மன்னர் முதலாம் நிக்கலஸ் (Czar Nicholas I) என்பவர், இங்கிலாந்து சென்று விக்டோரியா அரசியைச் சந்தித்து ஓர் உடன்பாடு செய்துகொண்டார். அதன்படி ரஷ்யாவுக்கும் இந்தியப் பேரரசுக்கும் இடைப்பட்ட இடங்களான பொகாரா, கீவ், சாமர்கண்ட் ஆகிய பகுதிகளை நடுநிலை எல்லைகள் என இரு சாராரும் ஏற்றுக்கொண்டனர். இதனால், இரு நாடுகளும் ஒன்றை ஒன்று மோதிக்கொள்ள அதிக வாய்ப்புகள் இல்லாமல் போகும் என்று எதிர்பார்த்தனர். ஆனால் இந்த உடன்பாடு நீண்டநாள் நீடிக்கவில்லை. ரஷ்யா துருக்கி நாட்டை வென்று தனது செல்வாக்கைத் தென்பகுதியில் ஏற்படுத்த விரும்பியது. அவ்வாறு நேர்ந்தால் இந்தியப் பேரரசிற்கு ஆபத்து ஏற்படும் என்று கருதி, கிருமியப் போரில் ஆங்கிலேயர்கள் ரஷ்யாவிற்கு எதிராகத் துருக்கியை ஆதரித்தனர். இந்திய அரசின் எல்லைகள் ஆப்கானிஸ்தானம்வரை பரவியிருந்ததால், இந்திய அரசு இப்பகுதிகளின் பாதுகாப்பை வலுப்படுத்த பலவித நடவடிக்கைகளை மேற்கொள்ள அவசியம் ஏற்பட்டது. இந்திய அரசின் எல்லைக்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் இடைப்பட்ட சுமார் 25,000 சதுர மைல்கள் கொண்ட மலைப்பகுதியில் பல்வேறு மலைச்சாதியினர் வாழ்ந்துவந்தனர். இவர்களில் பத்தானியர் (Pathans), மொகமாண்ட்கள் (Mohamands), வாசிரிகள் (waziris), அப்ரிடீஸ்கள் (Afridis) போன்றவர்கள் அடங்குவர். இவர்கள் பெயரளவில் ஆப்கானிய அமீரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு இருந்தனர். இருப்பினும் இம் மலைவாழ்மக்கள் சுதந்திர எண்ணங் கொண்டவர்களாக எவருடைய அதிகாரத்திற்கும் உட்படாது சுயேச்சையாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் கட்டுப்படுவது ஜிர்கா (Jirga) என்ற இளையவர் சபைக்குத்தான்.

முற்போக்குக் கொள்கையின் (Forward Policy) விளைவாக, இரண்டாவது ஆப்கானியப் போர் (Second Afghan War) இந்திய அரசிற்கும் ஆப்கானியருக்கும் ஏற்பட்டது. இதன் பயனாக, மலை இனத்தவர்களைப் பொறுத்தவரையில் அரசின் கொள்கையில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. காலாட் என்ற பகுதியின் தலைவருடன் ஏற்பட்ட உடன்படிக்கையால் ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகரித்தது. இதனால், குவெட்டா (Quetta) என்ற நகரில் கவர்னர் ஜெனரலின் பிரதிநிதி ஒருவர் பலூச்சிகளின் அரசியல் காரியங்களைக் கவனிக்க நியமிக்கப்பட்டார். 1877ஆம்

ஆண்டு பிப்ரவரி திங்கள் 21ஆம் நாள் மேஜர் சாண்டிமென் (Major Sandeman) என்பவர், முதன்முதலில் அரச தூதுவராக நியமிக்கப்பட்டார். இவர் முக்கியப் பகுதிகளில் ஆங்கில ராணுவ முகாம்களை நிறுவி, மலைஇனத்தவர்களின் நடவடிக்கைகளைக் கண் காணித்து வந்தார். இவர் காலத்தில் போரி (Bori), சாவப் (Zhob) என்ற இரு பள்ளத்தாக்குகளும் ஆங்கிலேயரின் அதிகாரத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இது பலூச்சிஸ் தான் நிர்வாகத்தின்கீழ் இணைக்கப்பட்டது. கோமால் கணவாய் (Gomal pass) பாதையைக் கண்காணிக்கும் பொறுப்பை அப் பகுதியில் வாழும் மக்களுக்கு அளித்து, அவர்களுக்கு மாதந் தோறும் ஊதியத்தொகை வழங்கப்பட்டது.

லிட்டன் பிரபு (Lord Litton)

சிந்து, பஞ்சாப் எல்லைப் பகுதியிலுள்ள மலைச்சாதி : லிட்டன் பிரபு இந்தயாவிற்கு வரும்வரை சிந்து, பஞ்சாப் எல்லைப்பகுதி மலைச்சாதியினரைப்பற்றிய கொள்கை தற்காப்பு முறையிலேயே அமைந்திருந்தது. இவர்கள் இந்திய எல்லைக்குள் நுழைந்து தொல்லை கொடுக்காதவரை அவர்கள் விஷயத்தில் ஆங்கி லேயர்கள் தலையிடாமல் இருந்தனர். ஆனால், நாளாவட்டத்தில் இக் கொள்கையை மாற்றினர். ஆங்கில நிர்வாக அதிகாரிகள் இம் மக்களின மொழியைக் கட்டாயம் கற்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டனர். இம் மலைஇனத்தவர்களின் அரசியல் தொடர்புகளைக் கவனிக்க அரசியல் ஏஜண்டுகள் (Political Agents), அரசியல் முகவர்கள் நியமிக்கப்பட்டனர். கைபர் கணவாய், குர்ரம், மலகண்ட், டோச்சி, வானு ஆகிய இடங் களில் இரண்டாவது ஆப்கானியப் போருக்குப்பின் அரசியல் ஏஜண்டுகள் நியமிக்கப்பட்டனர். இப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டன. அத்துடன் ஏராள மான பத்தானியர், இந்திய எல்லைக்குள் குடி அமர்த்தப்பட்டு அமைதி வாழ்க்கையை மேற்கொள்ள வசதிகள் அளிக்கப்பட்டன. பல பாதுகாப்புக் கோட்டைகள் எல்லைப் பகுதியில் அமைத்து, அவற்றை இணைக்கும் ராணுவச் சாலைகள் அமைக்கப்பட்டன.

பலூச்சிஸ்தானைப் பொறுத்தவரை, இந்திய அரசுக்கு வட பகுதியைப் போன்று அவ்வளவு கடினம் இல்லை. பிசின், சிப்பி, போன்ற பகுதிகள் ஏற்கெனவே ஆங்கிலேயரின் நிர்வாகத்தில் இருந்தன. மேலும், இப் பகுதி போக்குவரத்துக்கு வசதி யாகவே இருந்தது. இவை, முக்கிய ஆணையாளர் (Chief Commissioner) என்ற அதிகாரியின் அதிகாரத்திற்கு உட்பட் டிருந்தது. இவற்றுடன் காலாட் (Kalat), லாஸ்பெல்லா

(Las Bela) என்ற சுதேச அரசுகளும் இணைக்கப்பட்டன. இப் பகுதிகள் அனைத்திலும், சாலைகள் அமைக்கப்பட்டு, நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தி, மரங்கள் வளர்த்துக் காடுகள் உண்டாக்கினர். வரி வசூல், நீதி நிர்வாகம் போன்ற முறைகள் அமைத்து அபிவிருத்தி ஏற்படுத்தினர்.

ஆனால் பலுச்சிஸ்தானத்திற்கு வடபகுதியிலுள்ள மக்களை ஆங்கில அதிகாரத்திற்குள் கொண்டு வருவது மிகவும் கடினமாக இருந்தது. இவர்களின் இருப்பிடம், லகுவில் நுழைய முடியாத மலைப் பகுதிகளில் அமைந்திருந்தது. இரண்டாவது ஆப்கானிஸ்தான் போரில் (1878-80) இவர்கள் ஆங்கிலேயர்களுக்கு அதிகத் தொல்லை கொடுத்தனர். எனவே, மேற்குக் காஷ்மீர் எல்லைப் பகுதியிலிருந்து குன்சா (Hunza), சித்ரால் (Chitral) என்ற பகுதிகளும் குர்ரம் பள்ளத்தாக்கும் ஆங்கில அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. இம் மலை இனத்தவர்களை இஸ்லாமிய சமயத்தின் பேராலும் இனத்தின் பேராலும் ஆப்கானிய அமீர், மேலாணை செலுத்தி வந்தார். இந் நிலையில் ஆங்கிலேயருக்குட்பட்ட பகுதிகளைத் தனியாக எல்லை வகுத்து நிர்வாகம் செய்வது மிகவும் கடினமான செயலாகும். இருப்பினும், நாட்டின் நலன் கருதி ஆப்கானிய அமீர் அப்துர் ரகுமான் (Abdur Rahaman), எல்லைக்கோட்டை வரையறுக்கும் முயற்சிக்கு விருப்பம் தெரிவித்தார். இருப்பினும் எல்லைக்கோடு ஏற்படுவதற்கு முன்பு, மலைவாழ் கூட்டத்தினரைத் தன்பக்கம் சேர்த்துக்கொள்ள, ஆங்கிலேயருக்கு எதிராகப் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். கலகம் ஏற்படும்படி தூண்டினர். இதற்கிடையில் லேன்ட்டோனி பிரபு, எல்லைக்கோடு சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்த ஆப்கானிய அமீரை அழைத்தார். இதற்கு அமீர் இணங்கவில்லை. அதை அடுத்து ராபர்ட்ஸ் பிரபு (Lord Roberts) என்பவரின் சமாதான முயற்சிக்கும் அமீர் இடமளிக்கவில்லை. இறுதியாகச் சர் மார்ட்டிமர் டூராண்டு (Sir Mortimer Durand) என்பவர், 1893ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் எல்லைக் கோட்டை நிர்ணயிக்கும் பொருட்டுப் பெஷாவரிலிருந்து காபூலுக்குச் சென்றார். பெரும் முயற்சிக்குப் பின், 1893ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆங்கிலேயருடன் ஏற்படுத்திக்கொண்ட எல்லைக்கோட்டு உடன்படிக்கையில் ஆப்கானிய அமீர் கையெழுத்திட்டார். அமீரின் உதவித் தொகை 6 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. அத்துடன் அவர் யுத்த தளவாடங்களை இறக்குமதி செய்து கொள்ளவும், அனுமதிக்கப்பட்டார். உடன்படிக்கையில் கையொப்பம் இட்டபோதிலும், அமீர் எல்லைக் கோட்டின் வரைபடத்தில் கையெழுத்திட மறுத்து விட்டார். சுமார் இரண்டு ஆண்டுக் காலமாக எடுத்துக்

கொண்ட பெரும் முயற்சிக்குப்பின், ஆப்கானிய அமீரின் எல்லைகளுக்கும் ஆங்கிலேயர்களின் எல்லைகளுக்கும், முறையான வடிவம் கொடுத்து எல்லைக்கோடு வரையப்பட்டது (1894–96). இக் கோட்டிற்கு டுராண்டு எல்லைக்கோடு (Durand Line) என்று பெயர். இதைத் தொடர்ந்து இம் மலைவாழ் மக்கள், சுமார் 15 ஆண்டுகள் வரை ஆங்கிலேயருக்குத் தொல்லை கொடுத்தனர்.

சித்திரல் கைப்பற்றப்படுதல்

ரஷ்யர்களின் செல்வாக்கு மத்திய ஆசியாவில் அதிகரிக்கவே ஆப்கானிஸ்தானின் கிழக்கு எல்லைப்பகுதியிலுள்ள சித்திரல் என்ற இந்துகுஷ் கணவாயைப் பலப்படுத்துவதன் அவசியம் மேலிட்டது. எனவே, லிட்டன் பிரபுவின் ஆலோசனையின் பேரில் காஷ்மீர மன்னர், சித்திரல் என்ற சிறிய சமஸ்தானத்தையும் அதைச் சுற்றியுள்ள இடங்களையும் கைப்பற்றித் தனது அதிகாரத்திற்குட்படுத்தினார். இப் பகுதியில் வாழும் மக்கள் பத்தானியர்கள் அல்லாதவர்கள். எனவே, ஆப்கானிய அமீரின் மேல்அதிகாரத்தை விரும்பாது, இப் பகுதியின் தலைவர் அமானுல் முல்க் (Aman-ul-Mulk) என்பவர், காஷ்மீர மன்னரின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டார். இதற்கு ஈடாக அமானுல் முல்க் காஷ்மீர மன்னரிடமிருந்து ரூ. 12,000 உதவித் தொகை பெற்று வந்தார். கில்கிட் (Gilgit) என்ற இடத்தில் ஆங்கில ஏஜண்டு ஒருவர், 1889-ல் நியமிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து வாசிரிஸ்தான் (Waziristan) என்ற இடமும் ஆங்கிலேயரின் அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. இத்தருணத்தில் பத்தானியத் தலைவர் ஜண்டோல் (Jandol) என்பவர், ஆங்கிலேயர்மீது சமயப்போர் (Jihad) தொடர்ந்தார். திர், ஸ்வாட், பஜுர், சித்திரல் ஆகிய குறுநில அரசுகளும் ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். பிரிட்டிஷ் ஏஜண்டு ராபர்ட்சன் என்பவரைச் சித்திரல் கோட்டையில் முற்றுகையிட்டனர். சுமார் 45 நாட்கள் சித்திராலியர்களும் பத்தானியர்களும் நடத்திய முற்றுகையை ஆங்கிலப் படைகள் வந்து விடுவித்தன.

1895ஆம் ஆண்டு சித்திரல் என்ற ஒரு குறுநில அரசில், ஆங்கில ராணுவம் ஒன்றை அமைக்கத் தீர்மானித்துப் பெஷாவரிலிருந்து சுவாட் வழியாகச் சித்திரலுக்கு ராணுவச்சாலை ஒன்றும் அமைத்தனர். இத்தகைய நடவடிக்கைகளில் சந்தேகங்கொண்ட மலைச் சாதியினர்களான வாசிர்கள், மொகமண்டுகள், சுவாட், பஜாவுர், பூனர் போன்றவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகப் போர்

தொடுத்தனர். ஆங்கிலேய நடவடிக்கைகளில் தோன்றிய சந்தேகமும், அவர்களுடைய ஒருசில குறைகளுமே போருக்குக் காரணங்கள் ஆகும். சமயத் தலைவர்களான முல்லாக்களின் தூண்டுதல்களும், உப்பின் விலையை அதிகப்படுத்தியதும், மலை இனத்தவர்களின் பழக்கவழக்க முறைகளில் ஆங்கிலேயர்கள் தலையிட முயன்றதும் தாக்குதலுக்கு மற்றொரு காரணமாக அமைந்தது. ஒருசில மலைஇனத்தவர்களின் பெண்கள் ஆங்கிலேயரிடம் பாது காப்புத் தேடி வந்தனர். மலைச்சாதிப் பெண்களை அவர்களிடம் ஆங்கிலேயர் திருப்பி அனுப்ப மறுத்ததும் இத் திடீர்ப்போருக்குக் காரணமாகும். இவ் எளிய, ஆனால் சமய வெறிகொண்ட இனத் தவர்களை முல்லாக்கள் தங்கள் கைப்பொம்மைகளாக வைத்து தங்கள் விருப்பம்போல் மனமாற்றம் ஏற்படுத்தி வந்தனர். முல்லாக்களின் வார்த்தைகளை நிறைவேற்றுவதில் தங்கள் உயிரை இழக்க நேரினும் தயங்கமாட்டார்கள். லிட்டன் பிரபு உரு வாக்கிய முற்போக்குக் கொள்கையை (Forward policy), ஒருசில ஆண்டுகளுக்குப்பின் லான்ஸ்டவுன், எல்ஜின் ஆகிய பிரபுக்கள் புதுப்பித்துப் பயன்படுத்தி வந்தனர். எல்லைக்கோடு நிர்ணயம் செய்யும்போது இதில் ஈடுபட்ட அதிகாரிகளின் உயிரைக் காக்கும்பொருட்டு, அவர்களுடன் 3,000 ராணுவ வீரர் களும் பெரிய பீரங்கிகளும் உடன் சென்றன. இந் நடவடிக்கை மலைஇனத்தவரிடம் சந்தேகத்தை உண்டாக்கியது. எனவேதான், 1894ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் நாள் வானா (Wana) என்ற இடத்திலுள்ள எல்லைக் கமிஷன் முகாமை, மலைச்சாதியினர் திடீரென்று தாக்கினர். ஆனால், ஆங்கிலேயர் இவர்களின் தாக்கு தலை முறியடித்துக் கிராமங்களையும் அழித்தனர். அவர்களின் ஆடு மாடுகளையும் கைப்பற்றினர். இதைப் போன்று சித்திரல் என்ற பகுதியில் எல்லை நிர்ணய ஆணைக்குழு சென்றபோது பெருங் கலகம் ஏற்பட்டது. இத்தகைய கலகங்களுக்கு ஆப்கானிஸ்தான் அமீர் காரணம் என ஆங்கிலேய அதிகாரிகளும் வரலாற்று ஆசிரியர் களும் கூறியுள்ளனர். ஆப்கானிஸ்தான் அமீரின் செயலுக்குக் காரணம் இல்லாமல் இல்லை. ஆங்கிலேயர்களின் ஆதிக்கம், தனது எல்லைக்கருகில் ஏற்பட்டால் நாட்டின் அமைதிக்குப் பாதகம் விளையும் என்று அஞ்சினார். ஆங்கில நிர்வாகத்திற்குட்பட்ட எல்லைக்கும் தனது எல்லைக்கும் இடைப்பட்ட பகுதியில் மலைச் சாதியினர் பலர் வாழவேண்டும் என அமீர் விரும்பினார். எனவே தான், மலைச்சாதியினர் ஆங்கிலேயருக்கு எதிராகத் தூண்டிவிடப் பட்டனர். இருப்பினும், சுதந்திரத் தாகங்கொண்ட மலைஇனத்த வர்கள், அந்நியர்களான ஆங்கிலேயர்கள் தங்களின் எல்லைகளில் செல்வாக்குப் பெறுதலைக் கட்டோடு வெறுத்தனர்.

கர்சான் பிரபுவின் நிர்வாகம்

எல்ஜின் பிரபுவுக்குப் பின்னர், கர்சான் பிரபு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக 1899ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நியமிக்கப் பட்டார். ஆங்கிலேயரிடம் மலைச்சாதியினருக்குப் பகைமை இருந்த போதிலும், முன்புபோன்று எவ்விதக் கலகமோ தாக்குதல் களோ ஏற்படவில்லை. அப்ரிடிஸ் (Afridis) என்ற இனத்தவர்கள், திர்ரா (Tirah) என்ற கலகத்தில் ஈடுபட்ட காரணத்தால், அவர் களுக்குக் கொடுக்கப்பட்ட உதவித்தொகை நிறுத்தப்பட்டபோதி லும் எவ்விதக் கிளர்ச்சியும் ஏற்படவில்லை. இவர் இந்தியாவிற்கு வந்த ஐந்து ஆண்டுகளில் பாமீர் பீடபூமியிலிருந்து சித்திரல் வரை சென்று, அங்கிருந்து காபூல், கஜினி, காண்டகார், குவெட்டா போன்ற இடங்களுக்கும் சென்று மலைச்சாதியினரின் வாழ்க்கை முறை, மனப்போக்கு ஆகியவற்றை நன்கு தெரிந்திருந்தார். இதன் பயனாக இவர், தனித்தன்மையுள்ள எல்லைப்புறக் கொள்கை ஒன்றை உருவாக்கினார். முற்போக்குக் கொள்கை, லாரன்ஸ் பிரபு கையாண்ட தலையிடாக் கொள்கை ஆகியவற்றிற்குப் புறம் பான ஒரு புதிய முறையைக் கையாண்டார். இக் கொள்கை யின்படி இதுகாறும் மலைஇனத்தவர்களின் மத்தியில் அமைக்கப் பட்ட முகாம்களிலும் கோட்டைகளிலும் இருந்த ராணுவ வீரர் களை அங்கிருந்து அகற்றி, அவர்களை இந்திய எல்லைப்புறப் பகுதி களில் அமர்த்தினர். இவர்களுக்குப் பதிலாக ஆங்கில ராணுவ அதிகாரிகளால் பயிற்றுவிக்கப்பட்ட மலைச்சாதி வீரர்களையே பாது காவலுக்கு அமர்த்தினர். இம்முறை மூன்று ஆண்டுகளில் நல்ல பயன் அளித்தது. இதைப் போன்று கில்கிட் (Gilgit) என்ற பகுதியில் இருந்த காவல்படைகளையும் நீக்கி, அவற்றுக்குப் பதில் காஷ்மீர வீரர்களை அமர்த்தினர். கைபர் கணவாயின் பாதுகாப் பிற்கென இருந்த 3,700 ராணுவ வீரர்களை அகற்றி அவர்களுக்குப் பதில் அப்ரிடீஸியர்கள் (Afridis) என்ற மலை இனத்தவர்கள் அடங்கிய ராணுவம் ஒன்றை நியமித்தார். இவர்களைக் கண் காணிக்க ஆங்கில அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

வாசிரிஸ்தான் (Waziristan) என்ற மலைப்பகுதியில் மாத் திரம் கர்சான் பிரபுவின் முயற்சிக்கு எதிர்ப்பு இருந்தது. அத் துடன் மசூத்துகள் (Mahsuds) என்ற பிரிவினர், 1901ஆம் ஆண்டு இந்திய எல்லைகளில் புகுந்து கொள்ளையிட்டனர். கர்சான் பிரபு, இச் செயலைத் தடுக்க ராணுவ நடவடிக்கை எடுத்துக் கடுமையாகத் தண்டித்தார். இம் மக்களிடமிருந்து சுமார் 5 லட்சம் ரூபாய் பெரு மானமுள்ள பொருள்களைக் கவர்ந்து வந்தார். கர்சான் பிரபுவின் நிர்வாகக் காலத்தில் வடமேற்கு எல்லைப் பகுதியில் 5,000

ஆங்கில வீரர்களும், 24,000 இந்திய வீரர்களும், 9,800 மலைச் சாதி எல்லைப் பாதுகாப்பு வீரர்களும் (Border Militia) இருந்தனர் எனத் தெரிகின்றது.

கர்சான் பிரபு மலைச்சாதியினரின் தலைவர்களைச் சந்தித்து, அவர்களின் மக்களுக்கு ஆங்கில அரசு செய்துவரும் நன்மைகளை எடுத்துரைத்தார். 1902ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் நாள் பெஷாவரில் கூடிய தர்பார் நிகழ்ச்சியில் கர்சான் பிரபு, மலை இனத்தவர்களின் தலைவர்களிடம் ஆங்கில அரசு அவர்களுடைய எல்லைகளைக் கைப்பற்றும் எண்ணம் கிடையாது என்றும் அவர்களின் சுதந்திரத்தில் தலையிடப் போவதில்லை என்றும் எடுத்துரைத்தார். மலைச்சாதியினர், இந்திய எல்லைக்குள் வந்து, தொல்லைகள் கொடுக்காதவரை அவர்களின் அமைதியைக் குலைக்கும் எச் செயலிலும் ஆங்கிலேயர்கள் ஈடுபடப் போவதில்லை. ஆனால், இந்திய எல்லைகளில் தீங்கு விளைவிப்பாரேயானால், நிச்சயமாகப் பழிக்குப்பழி வாங்கப்படுவர் என்று வலியுறுத்தினர். இரண்டாவது, கைபர் கணவாய், கோஹாட் கணவாய் (Kohat pass), சித்திரல்சாலை ஆகியவற்றில் போக்குவரத்தை எவ்வித இன்னலும் ஏற்படாதவாறு பாதுகாப்பதற்கு உதவித் தொகை அளிக்கப்படும். மேலும், பல ஆயிரக்கணக்கான மலைச்சாதி இளைஞர்களுக்கு ராணுவத்தில் பணியாற்றும் வாய்ப்பு அளிக்கப்படுவதால், அவர்களின் பொருளாதார நிலை உயர்வடைகிறது. புதிதாக அமைக்கப்பட்ட ரயில் போக்குவரத்து, ராணுவ நடமாட்டத்திற்கு வசதி அளிப்பதோடு மலை இனத்தவர்களின் வியாபாரத்திற்கும் அவர்களின் பாதுகாப்பிற்கும், வசதி அளிக்கின்றது என்று ஆங்கில அரசின் நோக்கங்களை வலியுறுத்தினர். அத்துடன் ரயில் பாதைகள் இந்திய எல்லைக்குள்ளேயே அமைக்கப்பட்டிருப்பதால், அவர்கள் அனாவசியமாகப் பீதி அடைய வேண்டியது இல்லை என்றும் குறிப்பிட்டார்.

கர்சான் பிரபுவின் வடமேற்கு எல்லைக் கொள்கை இந்திய அரசின் நிர்வாகத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. லிட்டன் பிரபு காலத்தில் பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப் பகுதிகளைக் கொண்ட நான்கு மாநிலங்களையும் சேர்த்துப் பெரும் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்று விரும்பினர். ஆனல் இதற்குப் பஞ்சாப் மாகாணம் எதிர்ப்புத் தெரிவிக்கவே, இம் முயற்சி கைவிடப்பட்டது. லான்ஸ்டவுன் பிரபு காலத்திலும் இக் கருத்து விவாதத்திற்குள்ளாகிக் கைவிடப்பட்டது. ஆனல் கர்சான் பிரபு காலத்தில் வடமேற்கு எல்லைப்புற நிர்வாகத்தைத் தனது நேர்க் கவனத்தின்கீழ்க் கொண்டுவந்தார். காரணம் இப்

பகுதியைப்பற்றிய முடிவுகள் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். வடமேற்கு எல்லைப்பகுதி மாகாணத்தில் ஹசாரா, பெஷாவர், கோஹாட், பானு, டேரா, இஸ்மாயில் கான் என்ற மாவட்டங்களும், டூடன் எல்லைக்கோடு வரையி லுள்ள இடங்களும் அடங்கியுள்ளன. இப் பகுதிகளின் நிர்வா கத்தைக் கவனிக்க தலைமை ஆணையாளர் (Chief Commissioner) என்ற அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். இவர் கவர்னர் ஜெனரலின் நேர் அதிகாரத்திற்குட்பட்டுப் பணியாற்றி வந்தார்.

கர்சான் பிரபுவின் எல்லைப்புறக் கொள்கை நல்ல பலன் அளித்தது. காரணம் சுமார் ஏழு ஆண்டுகள் மலைச்சாதியினரின் ஊடுருவல் எதுவுமே ஏற்படவில்லை. ஆனால் இவருக்கு முந்திய நிர்வாகக் காலத்தில் சுமார் 5 ஆண்டுகளில் (1894-99) மலைச்சாதி யினரோடு ஏற்பட்ட போர் நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட் டுள்ள தொகை சுமார் 45 லட்சம் ரூபாய் என்று மதிப்பிடப்பட் டுள்ளது.

இரண்டாவது ஆங்கிலோ-ஆப்கானியப் போர் (1878-1880)

1843-ல் சிந்து மாகாணமும் 1849-ல் பஞ்சாப் மாகா ணமும் வெல்லப்பட்டுப் பிரிட்டிஷ் அரசுடன் சேர்க்கப்பட்டதால் வடமேற்கு எல்லைப்பகுதி மேலும் விரிவடைந்தது. இவற்றின் எல்லைகள் வரையறுக்கப்படாமல் இருந்ததால், மலைஇனத் தவர்களுடன் அடிக்கடி போரிட நேர்ந்தது. 1864-லிருந்து 1869 வரை இந்தியாவின் வைசிராயாக இருந்த ஜான் லாரன்ஸ் (John Lawrence) என்பவர், ஆப்கானியர்களின் விவகாரத்தில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றி வந்தார். ஆப்கானிய மன்னர் டோஸ்ட் முகமது என்பவர், 1863-ல் இறந்தார். இவ ருக்குப் பின் ஏற்பட்ட வாரிசுப் போரில் ஷெர் அலி (Sher Ali) என்பவர் ஆப்கானிய மன்னரானார். ஜான் லாரன்ஸ் இந்த உள் நாட்டுக் கலகத்தில் தலையிடவில்லை. இவர் ஷெர் அலியை ஆப்கானிஸ்தானத்தின் மன்னராக ஒப்புக்கொண்டார்.

இதற்கிடையில் ரஷ்யா, ஆப்கானிஸ்தானத்தை ஆக்ரமிக்கும் நோக்குடன் திட்டம் வகுத்தது. டாஷ்கன்டையும், சாமர் கண்டையும் ரஷ்யா கைப்பற்றிக் கொண்டது. இதனால் ஷெர்அலி ரஷ்யாவின் ஆக்ரமிப்பு நடவடிக்கையைத் தடுக்க, பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். ஜான் லாரன்ஸ் ஷெர் அலிக்குப் பணமும் ஆயுதமும் வழங்கினர். ஆனல் ரஷ்யா விற்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் போர் ஏற்படின் அதில் தலையிட முடியாதெனத் தெரிவித்தார். ஆப்கானிஸ்தானத்திற்கு

நிதி உதவியும் மக்களின் ஒத்துழைப்பும் இருந்தால் ரஷ்யர்களின் ஆக்ரமிப்பைத் தடுத்துவிடலாமென ஷெர் அலிக்கு லாரன்ஸ் ஆலோசனை கூறினர். இவ்வாறு ஜான் லாரன்ஸ் ஆப்கானியர்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாது தனித்து இருந்தமை இந்திய அரசுக்கு லாபமாக இருந்தது.

ஜான் லாரன்சுக்குப் பின் வந்த மேயோ பிரபுவும் நார்த்புருக் பிரபுவும் ஷெர் அலிக்கு அதிகமான உதவி எதுவும் செய்யவில்லை. அவ்வப்போது வார்த்தை அளவில் ஆதரவு காட்டி வந்தனர். ஆனல் இவர்களுக்குப் பின் வந்த லிட்டன் பிரபு, 'முற்போக்குக் கொள்கை'யைப் புதுப்பித்து, ஆப்கானிய மன்னர் ஷெர் அலியுடன் போர் தொடுத்தார். காலட் என்ற அரசின் தலைவரின் ஒத்துழைப்புடன் குவெட்டாவை 1876-ல் கைப்பற்றினர். காஷ்மீர் மன்னரின் துணைகொண்டு 'கில்கிட்' என்ற இடத்தில் பிரிட்டிஷ் ராணுவம் ஒன்று அமைக்கப்பட்டது. இதற்கிடையில் ஷெர் அலி, பிரிட்டிஷ் அரசியல் தூதுவரை வெளியேற்றியதால் கோபமுற்ற லிட்டன் பிரபு, ஷெர் அலிமீது 1878-ல் போர் தொடுத்தார். இதற்கு இரண்டாவது ஆப்கானியப் போர் என்று பெயர். பிரிட்டிஷ் ராணுவம் காபூல், காண்டகார் ஆகிய இடங்களைக் கைப்பற்றியது. ஷெர் அலி காபூலை விட்டு வெளியேறினர். மனமுடைந்து வெளிநாட்டில் ஷெர் அலி உயிர் துறந்தார். இப்போர் காண்டமாக் என்ற உடன்படிக்கையின்மூலம் முடிவடைந்தது. ஷெர் அலியின் மகன் யாகூப்கான் ஆப்கானிய மன்னராக்கப்பட்டார். பிரிட்டிஷ் அரசு, ஆப்கானிஸ்தானத்திற்கு ஆண்டொன்றுக்கு 6 லட்சம் ரூபாய் உதவித் தொகை அளிப்பதாகவும் வெளிநாட்டவரின் தாக்குதலிலிருந்து நாட்டைக் காப்பதாகவும் ஆப்கானிய மன்னருக்கு வாக்குறுதி அளித்தது.

மூன்ருவது ஆப்கானியப் போர்

ஆப்கானிய மன்னர் அமீர் ஹபிபுல்லா என்பவர், 1919-ல் கொல்லப்பட்டார். இவரது மூன்ருவது மகன் அமனுல்லா என்பவர் பட்டத்திற்கு வந்தார். இவர் பிரிட்டிஷ் அரசுடன் நட்புறவு கொள்ள விருப்பங்கொண்டபோதிலும், பிரிட்டிஷாரை வெறுத்த ஒரு கட்சியினரின் தூண்டுதலால் அமனுல்லா பிரிட்டிஷாருடன் போரிட நேர்ந்தது. இப் போருக்கு மூன்ருவது ஆப்கானியப் போர் என்று பெயர். இது 1919-ல் தொடங்கியது. ஆப்கானிஸ்தானத்திலுள்ள காபூல், ஜெலாலாபாத் ஆகிய இடங்களைப் பிரிட்டிஷ் விமானப்படை குண்டு போட்டு அழிவு ஏற்படுத்தியது. இப் போர் ராவல்பிண்டி உடன்படிக்கையின்மூலம்

முடிவுற்றது. இவ்வுடன்படிக்கையின்படி பிரிட்டிஷ் அரசு, ஆப்கானிஸ்தானத்திற்கு அளித்துவந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டது. ஆப்கானிய அமீர், இந்தியாவின்மூலம் ஆயுதம் இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டது. ஆப்கானிஸ்தானம் தனது அயல்நாட்டு உறவுகளைத் தானே கவனித்துக்கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது. இதற்குப் பின், இந்தியாவிற்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் இடையில் நட்புறவு வளர்ந்து வந்தது.

1919-க்குப் பின் ஆப்கானிஸ்தானத்தின் வரலாறு

ஆப்கானிய மன்னர் அமனுல்லா என்பவர், மேற்கத்திய நாகரிகத்தை ஆப்கானிஸ்தானத்தில் பரப்ப எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகப் பழமையை விரும்பிய மக்கள் அவரை வெறுக்க ஆரம்பித்தனர். எனவே, இவர் 1929-ல் முடிதுறந்தார். இதை ஒட்டி நாட்டில் சுமார் ஒன்பது மாதம்வரை குழப்பம் நீடித்திருந்தது. உள்நாட்டுக் கலகம் ஒன்று ஏற்பட்டது. இந்தியாவின் வைசிராய் இர்வின்பிரபு, ஆப்கானிய விஷயத்தில் தலையிடாது ஒதுங்கி இருந்தார். ஹபிபுல்லா என்பவர், தன்னை ஆப்கானிய அமீர் என அறிவித்துக் கொண்டார். அமனுல்லாவின் ஒன்று விட்ட சகோதரர், நாதிர்கான் என்பவர், ஹபிபுல்லாவை 1929-ல் நாட்டைவிட்டு விரட்டிய பின், பட்டத்திற்கு வந்தார். நாதிர்கான், இந்தியாவுடன் நட்புறவு வைத்திருந்தார். இவர் 1933-ல் கொல்லப்பட்ட பின், இவர் மகன் ஷாகிர் ஷா என்பவர் பட்டத்திற்கு வந்தார். ஷாகிர் ஷாவின் மைத்துனர் தளபதி மகமத் தாவுத் என்பவர், ஷாகிர் ஷாவை 1973-ல் பதவி நீக்கம் செய்துவிட்டு ஆப்கானிஸ்தானத்தை ஒரு குடியரசு நாடாக்கினர்.

ஆப்கானிஸ்தானம் இரண்டு உலக யுத்தங்களிலும் நடுநிலைமை வகித்து வந்தது. 1946-ல் இஃது ஐக்கிய நாடுகளின் சபையில் அங்கத்தினராகச் சேர்ந்தது. ஆப்பிரிக்க-ஆசிய நாடுகளின் கூட்டுறவுகளில் கலந்துகொண்டு வருகிறது. ரஷ்யாவுடனும் அமெரிக்காவுடனும் நட்புறவு கொண்டுள்ளது. பாகிஸ்தானிலுள்ள பத்தானியர்களுக்குப் பக்தூனிஸ்தான் அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்திற்கு ஆதரவு அளித்து வருகிறது. இந்தியாவுடன் நட்புறவு கொண்டுள்ளது. பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா ஆப்கானிஸ்தானத்திற்கு உதவி அளித்துள்ளது.

(ஆ) பாரசீகம்

இந்திய அரசும் பாரசீகமும் (Indian Government and Persia)

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் இந்திய அரசிற்குப் பெரும் எதிரி ரஷ்யா என்று ஆங்கில அரசியல்வாதிகள் பலர் கருதி வந்தனர். ரஷ்யா, தனது உள்நாட்டுப் பூசல்களைக் களைந்து, தன்னைப் பலப்படுத்திக்கொண்டு மத்திய ஆசிய நாடுகளில் தனது செல்வாக்கை அதிகப்படுத்தியதோடல்லாமல், கீழ்த்திசை நோக்கிக் குறிப்பாக, பாரசீகத்தை நோக்கி முன்னேறிய செயல் ஆங்கிலேயரின் அச்சத்தை உறுதிப்படுத்தியது. இந்தியத் தலை நகருக்கும், பாரசீக நாட்டின் தலைநகருக்கும் சுமார் ஆயிரம் மைல் தொலைவில் ரஷ்யப்படைகள் இருந்தன. ரஷ்யர்கள் பாரசீகத்தின் வழியாகவும், ஹீரத்தின் (Herat) (ஆப்கானிஸ்தானம்) வழியா கவும் இந்திய எல்லையை அடைய முடியும் என்ற அச்சமிருந்தது. எனவே, இவ்விரு வழிகளையும் செவ்வனே பாதுகாக்க வேண்டி, அவற்றில் ஆங்கிலேயர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிறுவ முற்பட் டனர். ரஷ்யர்களுடன் ஜெர்மனி, ஃபிரெஞ்சு, துருக்கி ஆகிய அரசுகளும் பாரசீகப் பகுதியில் தங்களுடைய செல்வாக்கை நிலை நிறுத்த முற்பட்டன.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலைகளைச் சமாளிக்கும் பொருட்டு ஆங்கில அரசு, கேப்டன் ஜான் மால்கம் (Captain Jhon Malcolm) என்பவரைப் பாரசீகத்திற்கு அனுப்பி, பாரசீக மன்ன ருடன் 1801ஆம் ஆண்டில் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள ஏற்பாடு செய்தது. இவ்வுடன்படிக்கையின்படி இவ்விரு நாடு களும் தங்களுக்கு எதிராக ஏற்படும் பகைமையையும், துரோகச் செயல்களையும் இணைந்து முறியடிக்கவேண்டும். ஆனால், இவ்வுடன் படிக்கையை மீறிப் பாரசீக அரசு, ஃபிரெஞ்சு அரசுடன் நட்புறவு கொள்ளத் தலைப்பட்டது. இப் போக்கை மாற்றி மறுபடியும் ஆங்கிலேயருடன் நட்புறவு கொள்ளும்படி 1812-ல் ஓர் உடன் படிக்கை செய்யப்பட்டது. இதன்படி வேறு எந்த ஐரோப்பிய நாடுகளும் பாரசீகம் வழியாக இந்தியா நோக்கி வர அனுமதிப்ப தில்லை என்றும், தனது செல்வாக்கைப் பயன்படுத்திக் கொரஸான், டார்டாரிஸ்தான், பொகாரா, சாமர்கண்ட் போன்ற நாடுகளின்மூலம் ஐரோப்பியர், படை எடுத்துவர அனுமதிப்ப தில்லை என்ற உறுதியை அம் மன்னர்களிடமிருந்து வாங்கித் தருவ தாகவும் பாரசீக மன்னர் உறுதியளித்தார். கைம்மாறாகப் பாரசீக நாட்டை வேறு எந்த ஐரோப்பிய நாடும் தாக்கினால் ராணுவ

உதவி அளிப்பதாக ஆங்கில அரசு உறுதி அளித்தது. ஆனால், 1828-ல் ரஷ்யா, பாரசீகத்தைத் தாக்கியபோது ஆங்கிலேயர்கள் உடன்படிக்கையின்படி உதவி செய்ய முன்வரவில்லை. ஆங்கிலேயர்களுக்கும் பாரசீக நாட்டிற்கும் ஏற்பட்ட உடன்படிக்கையில் இரு நிபந்தனைகள் அடங்கி இருந்தன. அவற்றில் ஒன்று, ஆங்கிலேயருக்கும் ஆப்கானியர்களுக்கும் போர் ஏற்பட்டால், பாரசீகர்கள் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாக ராணுவ உதவி அளிக்கவேண்டும். பாரசீகர்களுக்கும் ஆப்கானியர்களுக்கும் போர் ஏற்பட்டால் ஆங்கிலேயர்கள் நடுவுநிலைமை வகிக்க வேண்டும் என்பது இரண்டாவது நிபந்தனை.

பாரசீகத்தில் ரஷ்யர்களின் செல்வாக்கு

ரஷ்யர்களின் அரசியல் நடவடிக்கைகள் பாரசீகத்தில் அதிகரித்ததை உணர்ந்த ஆங்கிலேயர்கள், பாரசீகத்தின் அரசியலில் தீவிர கவனம் செலுத்தலாயினர். பாரசீக மன்னர் ஷா முகமத் (Shah Mohamad) ரஷ்யர்களின் தூண்டுதலின் பேரில் 1837ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் நாள் ஒரு பெரும்படையுடன் ஹீரட்டைத் தாக்கப் புறப்பட்டார். சில பாரசீக வீரர்கள், ஆங்கிலத் தூதர் அலுவலகத்தைத் தாக்கிப் பலரைக் கைதியாக்கினர். இச்செயலைக் கண்டிக்கும்படி ஆங்கிலேயர் கேட்டுக் கொண்டதைப் பாரசீக மன்னர் நிராகரித்து விட்டார். 1837ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானிலுள்ள ஹீரட்டுக்குச் சென்ற பாரசீக ராணுவம் அந்நகரை முற்றுகையிட்டது. இச்செயல் இந்தியப் பாதுகாப்பிற்கு மிகவும் பாதகமான செயல் என ஆங்கிலேயர்கள் கருதினர். ஹீரட் நகர் வீழ்ந்தால், அங்கிருந்து காபூல், காண்டகார் வழியாக அந்நியர் இந்தியாவிற்குள் நுழைய வசதியுண்டு. இத்தகைய இக்கட்டான நிலையில் ஆங்கிலேயர்கள் நடுவுநிலைமை வகிக்க நேர்ந்தது. பாரசீகம், ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளின் அரசியல் நடவடிக்கைகளைக் கவனிக்கவும், அப்பகுதிகளில் ரஷ்யர்களின் செல்வாக்கைக் குறைக்கவும், காபூலில் ஆங்கிலப் பிரதிநிதி ஒருவர் இருப்பது நலம் என்று இங்கிலாந்தின் பிரதமர் பாமர்ஸ்டன் (Palmerston) கருதினர். இக்கருத்திற்கு இணங்க இந்தியாவின் கவர்னர் ஜெனரல் ஆக்லண்டு பிரபு (Lord Auckland), கேப்டன் அலெக்ஸாந்தர் பர்ன்ஸ் என்பவரைக் காபூலுக்கு அனுப்பி வைத்தார். காபூல், காண்டகார் ஆகிய இரு நாடுகளுடன் நட்புறவு கொண்டாடி ரஷ்யர்களின் நடவடிக்கைகளைக் குறைக்கும்பொருட்டு அவர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டார். ரஷ்யர், பாரசீகர், இவ்விருவருடைய அரசியல் சூழ்ச்சிகள் அதிகமாக இருந்ததை அலெக்ஸாந்தர் பர்ன்ஸ் கண்டார். எனவே, ஆப்கா

ஷிஸ்தான மன்னர் தோஸ்த் முகமதுவை ஆங்கிலேயர்களின் பக்கம் இழுக்க எல்லா முயற்சிகளும் செய்தார். ஆனால், இதற்கிடையில் பர்ன்ஸ், தன் நாடு திரும்ப நேர்ந்ததால், தனது குறிக்கோளை இவரால் நிறைவேற்ற இயலவில்லை.

ஆங்கிலேயர்களின் தலையீடு

ஹீரட்டின் முற்றுகை ஓராண்டிற்குமேல் நீடித்தது. பாரசீகர்களின் முயற்சி எவ்விதப் பயனும் அளிக்கவில்லை. பாரசீக நாட்டின் தலைநகரில் இருந்த ஆங்கில அமைச்சர், மெக் நீல் (McNeil) என்பவர், ராணுவ முகாமில் பாரசீக மன்னரைச் சந்தித்து ஆங்கில–பாரசீக உடன்படிக்கையின்படி ஹீரட் படையெடுப்பு நேர்மையற்றது என்று எதிர்ப்புத் தெரிவித்தார். பாரசீகர்களின் தாக்குதலை ஹீரட்டிலுள்ள வீரர்கள் எல்ட்ரெட் போட்டிங்கர் (Eldred Pottinger) என்ற ஆங்கில அதிகாரியின் உதவி கொண்டு மிகவும் திறமையாக ஓராண்டிற்குமேல் சமாளித்தனர். இருப்பினும் ஹீரட்டின் நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. இத் தருணத்தில் மெக்நீல், ஆங்கிலப் படையொன்றைப் பாரசீக வளைகுடாவிற்கு அனுப்பிப் பாரசீக மன்னர் ஷா முகமதுவின் கவனத்தைத் திசைதிருப்ப இந்தியக் கவர்னர் ஜெனரல் ஆக்லண்டு பிரபுவிற்கு 1838-ல் கடிதம் ஒன்று எழுதினார். மெக்நீல் என்ற அமைச்சர், மறு முறையும் ராணுவ முற்றுகை இடத்திற்குச் சென்று, ஷா முகமதுவையும் முற்றுகையிடப்பட்ட ஹீரட் மன்னரையும் சந்தித்துச் சமாதான உடன்படிக்கை ஒன்றை இரு மன்னர்களும் செய்துகொள்ள உதவினார். ஆனால் ரஷ்ய தூதர் சிமோனிச் (Simonitch) என்பவரின் தூண்டுதலால் உடன்படிக்கையைப் பாரசீக மன்னர் ஷா முகமது உறுதி செய்ய மறுத்துவிட்டார். வெறுப்புற்ற மெக் நீல் இந்திய அரசின் தொடர்பை 1838-ல் முறித்துக்கொண்டார்.

மெக் நீலின் வேண்டுகோளின்படி ஆக்லண்டு பிரபு, பாரசீக வளைகுடாவிற்குக் கடற்படை ஒன்றை அனுப்பி வைத்தார். இப் படை அங்குள்ள கராக் (Kharak) என்ற தீவைக் கைப்பற்றிக் கொண்டது. ஹீரட்டின் முற்றுகையைக் கைவிட்டால் கராக் தீவைத் திருப்பித் தருவதாக ஷா முகமதுவுக்கு அறிவிக்கப்பட்டது. இதன்படி ஷா முகமது, ஹீரட் முற்றுகையைக் கைவிட்டு 1838ஆம் ஆண்டு செப்டம்பர் 9ஆம் நாள் பாரசீகம் திரும்பினார். இம் முயற்சியில் ஆங்கிலேயர்களின் வெற்றி மகத்தானது. பாரசீகத்திலிருந்து ரஷ்யர்கள் தங்கள் அரசியல் தூதுவரான சிம்மோனிச் என்பவரைத் திரும்ப அழைத்துக்கொண்டனர்.

பாரசீக வளைகுடாவில் ஆங்கிலேயர்களின் செல்வாக்கு

பாரசீக வளைகுடாவின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஆங்கிலேயர்கள் 1763ஆம் ஆண்டில் புஸ்ஸயர் (Bushire) என்ற இடத்தில் பொருள் உற்பத்திச் சாலை ஒன்றை நிறுவினர். 19ஆம்



படம் 2.

நூற்றாண்டின் ஆரம்பத்தில் பாரசீக வளைகுடாவில் கடல் கொள்ளைக்காரர்களின் தொல்லை அதிகமாகியது. எனவே, அங்கு அமைதி குன்றியது வளைகுடா அருகே அமைந்திருந்த சிற்றரசர்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டனர். ஆங்கில வியாபாரிகளின்

நலத்திற்காகவும் ஆங்கிலக் குடிமக்களின் பாதுகாப்பிற்காகவும் வளைகுடாவின் ஆதிக்கத்திற்காகவும் ஆங்கிலேயர்கள் இக் குழப்பத்தில் தலையிட்டனர். 1820ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒரு சிறிய போரின் காரணமாகப் பாரசீக வளைகுடாப் பகுதியில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் பெருகியது. அப் பகுதியில் இருந்த குறுநில மன்னர்கள், ஆங்கிலேயர்களின் மேலாணையை ஏற்றுக்கொண்டனர். ஆங்கிலேயரின் அனுமதியின்றி எந் நாட்டுடனும் உறவு வைத்துக் கொள்வதில்லை என்றும், தங்களின் எல்லைகளை ஆங்கில அரசின் அனுமதியின்றி மற்றவர்களுக்குக் கொடுப்பதில்லை என்றும் உறுதி அளித்து உடன்படிக்கை செய்து கொண்டனர். இவ் வுடன்படிக்கையின் மூலம் கர்சான் பிரபு, 1903-ல் பாரசீக வளைகுடாப் பகுதியிலுள்ள குறுநில மன்னர்களின் உறுதி மொழியைப் பெற்றுர். இவ்வாறு பாரசீகத்திலும், பாரசீக வளைகுடாப் பகுதியிலும், ஆங்கிலேயர்களின் செல்வாக்குப் பெருகியது. இந் நிலை 1947 வரை நீடித்தது.

பாரசீகம் ஒரு வளமை அற்ற பகுதியாக இருந்தபோதிலும், அதன் தென்பகுதிகளில் மண்எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டது. அதன் பயனாக, 1933ஆம் ஆண்டு ஆங்கிலோ-ஈரானியன் எண்ணெய்க் கம்பெனி ஒன்று உருவாக்கப்பட்டது. 1933ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கும் பாரசீகத்திற்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் மூலம், ஆங்கிலேயர்களே அதிக லாபம் பெற்றனர். இக் கம்பெனி 1951ஆம் ஆண்டு நாட்டுடைமை ஆக்கப்பட்டது. இதனால் ஆங்கிலோ-ஈரானின் தகராறு நீடித்து, இறுதியாக 1952ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் நாள் ஒரு முடிவிற்கு வந்தது. இதன்படி இரு நாட்டினருக்கும் சாதகமான ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. ஆங்கிலோ-ஈரானியன் கம்பெனியின்மூலம் பாரசீகமே தற்சமயம் அதிக லாபம் பெறுகின்றது.

பாரசீகமும் இரண்டாவது உலகப்போரும்

முதலாவது உலகப் போரில் பாரசீகம் நடுவுநிலைமை வகித்த போதிலும், ஆங்கிலேயர்களும் ரஷ்யர்களும் தங்களின் நலனைக் கருதிப் பாரசீகத்தின் பல பகுதிகளில் ராணுவ முகாம்களை அமைத்துக் கொண்டிருந்தனர். 1925ஆம் ஆண்டில் பல்லவி என்ற புதிய அரச வம்சம் ஒன்று ரேஷாகான் என்பவரால் பாரசீகத்தில் தோற்றுவிக்கப்பட்டது. 1935-ல் பாரசீகம் என்ற பெயர் ஈரான் என்று மாற்றப்பட்டது.

இரண்டாவது உலகயுத்தத்தின் ஆரம்பத்தில் ஈரான் ஜெர்மனியை ஆதரித்தது. ஈரான் மன்னர், நேச நாடுகளின்

படைகளைத் தனது எல்லைக்குள் அனுமதிக்காததால், ஆங்கிலோ ரஷ்யப் படைகள் ஈரானுக்குள் வன்முறையில் அதிகமாக நுழைந்தன. இதன் காரணமாக, 1941-ல் ரேஷாகான் முடி துறந்தார். அவர் மகன் மகமது ரேஷா பட்டம் பெற்றார். 1943-ல் புதிய மன்னர் மகமது ரேஷா, ஜெர்மனிக்கு எதிராகப் போர் தொடுத்தார். போருக்குப்பின் ஆங்கிலோ-ஈரானிய எண்ணெய்க் கிணறுகளின் காரணமாக இங்கிலாந்துடன் பகைமை ஏற்பட்டது.

பாரசீகமும் சுதந்திர இந்தியாவும்

இந்தியா சுதந்திரம் பெற்றபின், ஈரானுடன் நட்புறவு முறையில் அரசியல் தொடர்பு வைக்க விரும்பியது. ஆனால் பாகிஸ்தானிய அரசு, இதற்குப் பல இடையூறுகள் விளைவித்து வந்தது. இஸ்லாமிய மதத்தைச் சுட்டிக்காட்டி இரு நாடுகளின் நல்லுறவுக்குப் பாகிஸ்தான் இடையூறு விளைவித்து வந்தது. பாரசீக நாட்டின் எண்ணெய் வளத்தின் காரணமாக, அந் நாட்டின் செல்வம் பெருகியது. அமெரிக்க ஐக்கிய நாட்டிடமிருந்து ஏராளமான விமானங்களை ஈரான் பெற்றிருக்கிறது. 1965, 1971ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இந்தோ-பாகிஸ்தான் போர்களில் ஈரான் பாகிஸ்தானுக்கு ஆதரவாகப் போர் விமானங்களை அனுப்பியது. ஆனால், இவ் விமானங்களைப் போரில் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. போர் முடிந்தபின், இந்தியாவிற்கும் பாரசீக நாட்டிற்கும் பொருளாதார மேம்பாட்டு உடன்படிக்கைகள் ஏற்பட்டுள்ளன. அதன் பயனாக, இரு நாடுகளும் பயன் அடைந்து வருகின்றன. சென்னைக்கருகில் அமைந்த மணலி எண்ணெய் உற்பத்திச் சாலை ஈரானிய ஒத்துழைப்பால் ஏற்பட்டது. பல ஆண்டுகளுக்கு இந்தியாவிற்கு எண்ணெய் அனுப்புவதாகத் தற்போது உடன்பாடு இரு அரசிற்கும் ஏற்பட்டுள்ளது.

(2) வடகிழக்கு எல்லைப்பகுதி
(North Eastern Frontier)

திபேத் (Tibet)

திபேத்தின் இருப்பிடம் : திபேத், இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்த ஒரு சுயாட்சியுள்ள நாடு. இதன் தலைநகர் லாசா (Lhasa) என்பது. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக் காலத்தில் தங்கள் செல்வாக்கைப் பெருக்கும்பொருட்டு, திபேத் மன்னருடன் உறவுகொண்டு வியாபாரச் சலுகைகளைப் பெற்று வந்தனர். இந் நாடு இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்பகுதியில் அமைந்திருப்பதால், சீனர்களாலும் ரஷ்யர்களாலும் எவ்விதப்

பாதகமும் ஏற்படாதவாறு ஆங்கிலேயர் திபேத்தைக் கண் காணித்து வந்தனர். டார்ஜீலிங்குக்கு வடக்கு எல்லையிலுள்ள இமயமலைச் சிகரங்கள் திபேத்தின் இயற்கை எல்லைகளாக அமைந் துள்ளன. இருப்பினும், மக்கள் நடமாட்டம், போக்குவரத்து ஆகியவற்றுக்கு இவை தடங்கலாக அமையவில்லை. வியாபாரி களும் பயணிகளும் அடிக்கடி இமயமலைக் கணவாய்களின் வழியாகச் சென்று வருவது வழக்கமாகிவிட்டது. இந் நாட்டில் வியாபாரச் செல்வாக்குப் பெருகுவதோடு, தங்கள் நிர்வாகத்திற் குட்பட்ட பகுதிகளுக்கு முறையான எல்லை ஒன்று அமைக்கும் நோக்குடன் இந்திய அரசு, திபேத்தின் அரசியலில் தீவிரமாகத் தலையிட்டது.

திபேத் நாட்டின் ஆட்டு ரோமமும், ரோமத்தால் நெய்யப் பட்ட கம்பளிகளும் இந்தியாவிற்கு அதிகம் தேவைப்பட்டன. இந்தியத் தேயிலைக்குத் திபேத்தில் நல்ல வரவேற்பு இருந்தது. திபேத்தில் தங்கம் கிடைப்பதற்குரிய அடையாளங்கள் தென் பட்டன. எனவே, பொருளாதாரம், பாதுகாப்பு ஆகிய இரு காரணங்களால் இந்திய அரசு, திபேத்தின் உள்நாட்டு விவகாரங் களில் தலையிட்டது.

சீனர்களின் தலையீடு : திபேத்தின் அதிபரான தலாய் லாமா (Dalai Lama) என்பவருடன் சீனு, மூன்று சந்தர்ப்பங்களில் அர சியல் உடன்படிக்கைகள் செய்திருந்தது. இருப்பினும் திபேத், தன்னைச் சீனுவின் பிடியிலிருந்து விரைவில் விடுவித்துக் கொண் டது. சீனர்களின் செல்வாக்குத் திபேத்தில் 1792 வரை நீடித் திருந்தது.

திபேத்தும் கிழக்கிந்தியக் கம்பெனியின் தலையீடும்

திபேத் நாட்டின் இருப்பிடம், எல்லை அமைப்பு, பொருளா தாரம், வாணிபப் பெருக்கம் போன்ற காரணங்களால் இந்திய அரசு திபேத் நாட்டுடன் நெருங்கிய தொடர்புகொள்ள விருப்பங் கொண்டது. இந்தியாவின் கவர்னர் ஜெனரல் வாரன் ஹேஸ் டிங்ஸ் (Warren Hastings) என்பவர், 1774ஆம் ஆண்டில் ஜார்ஜ் பாக்லி (George Bogle) என்பவரை வியாபாரத் தொடர்பு காரணமாகத் திபேத்திற்கு அனுப்பினர். ஜார்ஜ், திபேத்தின் தலாய் லாமாவுடன் நட்புறவுகொள்ளும் சூழ்நிலையை உருவாக்கிய போதிலும், சீன அதிகாரிகளின் எதிர்ப்பால் வியாபாரச் சலு கைகள் எதுவும் பெற இயலவில்லை. இதைத் தொடர்ந்து காப்டன் சாமுவேல் டர்னர் (Captain Samuel Turner) என்பவரை வாரன் ஹேஸ்டிங்ஸ், 1783-ல் திபேத்திற்கு அனுப்பினர். அவரும்

வாணிபச் சலுகை எதுவும் பெற இயலாது இந்தியா திரும்பினர். இருப்பினும், வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தவரை திபேத்திற்கும் இந்தியாவிற்கும் வியாபாரம் செம்மையாக நடந்து வந்தது. ஆனால், இச் சூழ்நிலை 1792-ல் மாறியது. இவ் வாண்டில் திபேத்தின்மீது கூர்க்கர்கள் (Gurkhas) படையெடுக்கவே, இப் படையெடுப்பு ஆங்கிலேயர்களின் தூண்டுதலால் ஏற்பட்டதென்று எண்ணியதால், திபேத்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இருந்து வந்த நல்லுறவு முறிந்தது.

ஆனால், திபேத்தியர்கள் பிறர் தலையீடு இல்லாமல் வாழ அனுமதிக்கப்படவில்லை. ரஞ்சித்சிங் (Ranjit Singh) என்பவரால் நிறுவப்பட்ட சீக்கிய அரசு, திபேத்தைக் கைப்பற்ற விரும்பியது. ஆனால் இந் நிலை வளர ஆங்கிலேயர்கள் அனுமதிக்கவில்லை. சீக்கியருக்கும் திபேத்திற்கும் ஏற்பட்ட போர், 1842ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17ஆம் நாள் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையால் முடிவடைந்தது. இதன்படி திபேத்திற்கும் இந்தியாவிற்கும் நடந்து வந்த வியாபாரம் தடையின்றி நடைபெற வகை செய்யப்பட்டது. இருப்பினும் ஆங்கிலேயர்களின் நடவடிக்கைகள் திபேத்திய மக்களைச் சந்தேகிக்கும்படி செய்தது. இதற்கு முக்கியக் காரணம் சீனர்களின் தூண்டுதல்களேயாகும். உண்மையில் திபேத் தனித்து வாழவே விரும்பி வந்தது என்ற உண்மை, அதன் அரசியல் நிலையை அறிந்தவர்களுக்குத் தெரியும். இதற்கிடையில் ஆங்கிலேயர்களுக்கும் சீனர்களுக்கும் வியாபார வசதிக்காக யாடங் (Yatung) என்ற இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இது திபேத்திய எல்லையிலிருந்து 8 மைல் தொலைவில் அமைந்திருந்தது. திபேத்தியர்கள் ஆங்கிலேயர்களைத் தங்கள் எல்லைக்குள் நடமாட அனுமதிக்காததால் இவ் வியாபார ஸ்தலத்தின் முக்கியத்துவம் சிதைந்தது. மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகளால் சீனர்களின் ஆதிக்கம் திபேத்தின்மீது பெயரளவில் இருந்து வந்தது எனத் தெரிகின்றது. திபேத்தியர்கள், ஆங்கிலேயர்களின் நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்டதால் அவர்களை நெருங்கவிடாது தடுத்து வந்தனர்.

கர்சான் பிரபு (Lord Curson)

திபேத் நாட்டின்மீது படையெடுப்பு : கர்சான் பிரபு, இந்தியாவின் வைஸ்ராயாக நியமிக்கப்பட்ட பின்னர், இந்திய-திபேத்திய உறவு ஒரு புதிய திருப்பத்தை அடைந்தது. ஆங்கிலப் பேரரசை விரிவாக்கி வலுப்படுத்த முயன்ற பலருள் கர்சான் முக்கிய இடத்தைப் பெற்றவர். திபேத் நாட்டின்மீது சீனர்களின்

அரசியல் செல்வாக்கு அஞ்சத்தகுந்த அளவில் இல்லை என்பதை நன்கு தெரிந்துகொண்டு திபேத்தியர்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளத் தீர்மானித்தார். இவரது விருப்பத்தை ஆங்கிலப் பாராளுமன்றம் ஆதரித்தது. எனவே கர்சான், திபேத் நாட்டின் அதிபர் தலாய் லாமா (Dalai Lama) என்பவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பினார். இக் கடிதம் திறந்து பார்க்கப்படாமல் கர்சான் பிரபுவுக்குத் திரும்பி வந்தது. இந் நிகழ்ச்சியினால் இரு நாட்டிற்கும் போர் ஏற்படும் அளவிற்குப் பகைமையை உண்டு பண்ணவில்லையாயினும், திபேத்தின் அரசியல் விவகாரத்தில் தலையிடுவதற்குக் கர்சானுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. ரஷ்யர்களின் செல்வாக்கும் தலையீடும் திபேத்தில் அதிகரித்திருப்பதாக வழக்கமான காரணங்களைக் காட்டிக் கர்சான் பிரபு, திபேத்தின்மீது படையெடுக்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருந்தார். ரஷ்யர்கள் திபேத்தின் வழியாக இந்தியாவிற்குள் வரமுடியாது என்று ஆங்கிலேயர்களுக்குத் தெரிந்திருந்தும் திபேத்தின்மீது அரசியல் ஆதிக்கத்தை நிறுவ ஆர்வம் கொண்டனர்.

கர்னல் யங்கஸ்பண்ட் என்பவரின் நல்லெண்ணக் குழு (Mission Under Colonel Younghusband)

இந்திய அரசுடன் நல்லுறவு கொள்ள இணங்கும்படி கர்சான் பிரபு, கர்னல் யங்கஸ்பண்ட் என்ற ராணுவவீரரை ஒரு சிறிய படையுடன் 1903ஆம் ஆண்டு ஜூலை மாதம் திபேத்திற்கு அனுப்பி வைத்தார். இவர், சிக்கிம் எல்லையில் ஜூலை மாதத்திலிருந்து டிசம்பர்வரை திபேத்தியர்களின் பிரதிநிதிகளை எதிர்நோக்கி இருந்தார். ஆனால், திபேத்தியர்கள் எவரும் வராமையால், கர்னல் யங்கஸ்பண்ட், மேலும் முன்னேறிச் சும்பி பள்ளத்தாக்கை (Chumbi Valley) கைப்பற்றிக் கொண்டார். மேலும் தொடர்ந்து செல்லும்போது திபேத்தியர்கள், குரு (Guru) என்ற இடத்தில் கர்னல் யங்கஸ்பண்டைச் சந்தித்துப் போரிட்டனர். அவர்களிடம் நவீன ஆயுதங்களும் பயிற்சி பெற்ற ராணுவ வீரர்களும் இல்லாத காரணத்தால், சுமார் 600 பேர் கொல்லப்பட்டனர். ஆங்கிலப்படையின் பலம் பெருகியது. அவர்கள் திபேத்தின் தலைநகரான லாசா (Lhasa) வரை முன்னேறிச் சென்று, அதை 1904ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 3ஆம் நாள் கைப்பற்றிக் கொண்டனர். திபேத்தின் அதிபரான தலாய் லாமா மங்கோலியாவிற்குத் தப்பி ஓடிவிட்டார். எனவே, திபேத்தியர்கள் கர்னல் யங்கஸ்பண்டுடன் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளும்படி நேர்ந்தது.

உடன்படிக்கையின் வாசகங்கள்

(1) கியான்ஸே, கார்டோக் என்ற இரண்டு இடங்களும் வியாபாரத்திற்கெனத் திறக்கப்படவேண்டும். ஆங்கில வியா பாரப் பொருள்கள்மீது விதிக்கப்பட்ட வரி நீக்கப்படவேண்டும்.

(2) இந்திய அரசுக்குப் போர் இழப்பு ஈடாகத் திபேத்திய அரசாங்கம் 5 இலட்சம் பவுன் 75 தவணைகளில் கட்டவேண்டும். பணம் கட்டும்வரை சும்பிப் பள்ளத்தாக்கு ஆங்கிலேயர்களிடமே இருந்து வரவேண்டும்.

(3) ஆங்கிலேயர் அனுமதியின்றி எந்த அந்நிய அரசுடனும் திபேத் அரசு எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது. அந்நிய நாட்டு அரசியல் தூதுவரை வரவேற்கக்கூடாது. எல்லைப் பகுதிகளை எவருக்கும் கொடுத்தல் கூடாது; குத்தகைக்கு விடவும் சாலைகள் அமைத்தல், சுரங்கங்கள் வெட்டுதல் போன்றவற்றிற்கும் அனுமதி வழங்கக்கூடாது.

(4) சிக்கிம் (Sikkim) அரசின் எல்லைகளை மதிக்கவும், தொல்லை கொடாமல் இருக்கவும் திபேத் அரசு சம்மதம் தெரிவித்தது.

இந்திய அரசினர் திபேத்தில் தங்கள் செல்வாக்கை நிறுவினர். ரஷ்யாவின் மத்திய ஆசியக் கொள்கைக்கு முரண்பாடாக அமைந்துள்ளது என்று ரஷ்யா கருதியது. எந்த ஐரோப்பிய நாடும் திபேத்தில் செல்வாக்குப் பெறுதவரை தாங்கள் திபேத்தை எவ்விதத் தொல்லைக்கும் உள்ளாக்கமாட்டோம் என்று ஆங்கிலேயர்கள் ரஷ்யர்களுக்கு வாக்குறுதி அளித்தனர். ஆனால், மேலே குறிப்பிட்ட சரத்துகளும், குறிப்பாகத் திபேத்தியர்கள் ஐந்து இலட்சம் பவுன் அல்லது 75 இலட்சம் ரூபாய் நஷ்டஈடு ஆங்கிலேயருக்குக் கொடுக்குமவரை சும்பிப் பள்ளத்தாக்கு ஆங்கிலேயர்களின் அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்ற சரத்து உண்மையிலேயே திபேத்து நாடு ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டது என உணர்த்தியது. ஏனெனில், இந்திய எல்லைக்குள் நுழைய சும்பிப் பள்ளத்தாக்கைத் தவிர, வேறு நல்ல வழி இல்லை. மேலும், பர்மா, காஷ்மீர் ஆகிய பகுதிகளுக்கும் இவ் வழியின் மூலம் நுழைவது வசதியாக இருந்தது. இதற்கிடையில் இந்திய அரசுக்குத் திபேத்திய அரசு கொடுக்க வேண்டிய தொகையை 25 இலட்சம் ரூபாயாகக் குறைக்கவே, இத்தொகையை மூன்று ஆண்டுகளில் திபேத், இந்திய அரசுக்குக் கொடுத்து ஆங்கிலேயர்களைச் சும்பிப் பள்ளத்தாக்கிலிருந்து வெளியேற்றியது. ஆனால், தங்களுக்

குள் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையை மதித்து நடப்பதாக திபேத் உறுதியளித்தது. அத்துடன் லாசாவில் ஆங்கிலப் பிரதிநிதி ஒருவரை ஏற்றுக்கொள்ள திபேத் அரசு ஒப்புக்கொண்டது. திபேத்தில் ஆங்கில அதிகாரத்தை நிறுவியது நியாயமே என்று கர்சான் பிரபு வலியுறுத்திப் பேசியுள்ளார். ஆனால் ஆங்கிலேயர் களின் இறுதி நடவடிக்கைகள் திபேத்தில் சீனர்களின் செல்வாக்கை உயிர்ப்பிக்க வாய்ப்பாக அமைந்தது.

சுதந்திர இந்தியாவும் திபேத்தும்

கர்சான் பிரபுவின் திபேத்தியர் கொள்கையை ஆதரித்தும் எதிர்த்தும் அரசியல் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. ரஷ்யர் களின் செல்வாக்குத் திபேத்தில் ஏற்படாதபடி செய்தவர் என்று கர்சான் பிரபுவைப் புகழ்ந்தனர். ஒரு சிறிய நாட்டின் சுதந்திர வாழ்வைப் பறித்தவர் என்றும் இவர் இகழப்பட்டார். டாக்டர் வின்செண்ட் ஏ. ஸ்மித் (Dr. Vincent A. Smith) என்ற வரலாற்று ஆசிரியர், கர்சானின் திபேத்தியக் கொள்கை, சீனர்களின் செல் வாக்கைத் திபேத்தில் உயர்த்துவதற்கு வசதியாக அமைந்தது என்று கூறியுள்ளார். தரை மட்டத்திலிருந்து 19,000 அடி உயரத்திற்குமேல் உள்ள ஒரு நாட்டைப்பற்றிய நில அறிவு வளர்ந்ததோடு இத்தகைய புதிய இடத்திற்கு ராணுவ நட வடிக்கை மேற்கொண்ட கர்னல் யங்கஸ்பண்டைப் புகழாமல் இருக்க முடியாது என்று கூறியுள்ளார். இந்தியா, சுதந்திரம் பெற்ற பின்னரும், இந்திய அரசு, திபேத்தியர்களைச் சீனர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க இயலவில்லை. சீனர்கள், 1962-ல் திபேத்தின் அதிபரான தலாய் லாமாவைப் பதவி நீக்கம் செய் தனர். அதன் பயனாகத் தலாய் லாமா இந்தியாவிடம் அடைக்கலம் புகுந்தார். திபேத்தியர்களுக்கு ஆதரவளித்த காரணத்தால் சீனர்கள், 1962ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்திய எல்லை யைக் கைப்பற்றினர். இந்தியர்களுக்கு ராணுவ, பொருளாதார, இழப்பு அதிகம் ஏற்பட்டதோடு உலக அரங்கில் இந்தியர்களின் மதிப்புப் பெரிதும் குன்றியது. இந்தியாவின் வடகிழக்குப் பகுதி யில் சுமார், 12,000 சதுரமைல் நிலப்பரப்பைச் சீனர்கள் கைப் பற்றிக்கொண்டனர். இதனால் இந்தியாவிற்கும், சீனாவிற்கும் பகைமை ஏற்பட்டுள்ளது. 1962 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இரு நாடுகளுக்கும் நட்புறவு ஏற்படாமலிருக்கின்றது.

இந்தியா, சுதந்திரம் பெற்ற பின்னர், செஞ்சீனாவை உலக அரங்கில் ஆதரித்துப் பேசி வந்தது. முதல் முறையாக அதைச் சுயேச்சை நாடாக இந்தியா ஏற்றுக்கொண்டது. அந்நாடு ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கவேண்டும் என்று வற்புறுத்தியும்

வந்தது. 1950ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 7ஆம் நாள் சீனத் துருப்புகள் திபேத்திற்குள் நுழைந்தன. இச் செயலுக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்தது. ஆனால் சீனர்கள் பொருட் படுத்திலர். சீனுவின் பிரதமரான சூ. என். லாய் (Chou-En-Lai), 1954ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்தியப் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேருவை டெல்லியில் சந்தித்துப் பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையில் சமாதான உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டார். இந்தியர்களும் சீனர்களும் சகோதரர்கள் (Hindi - Chini - Bhai Bhai) என்ற குரல் இந்தியாவெங்கும் ஒலித்தது. ஆனால் அதே ஆண்டு ஜூலை மாதம் உத்தரப்பிரதேசத் திலுள்ள பரஹோட்டி (Barahoti) என்ற இந்திய எல்லையில் இருந்த இந்திய ராணுவத்திற்குச் சீன அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அந்த எல்லை சீனருடையது என்றும் தெரிவித் தனர்.

இத் தருணத்தில் சீனுவில் வெளியிட்ட உலகப் படத்தில் 50,000 சதுரமைல்கள் பரப்புள்ள இந்திய எல்லைகள் சீனுவி னுடையது என வரையப்பட்டிருந்தது. இதை நேரு, சூ என். லாய்க்குச் சுட்டிக் காட்டியபோது, அப் படம் பழைய படத்தின் பிரதி; ஆகவே, அதைப்பற்றி இந்தியா கவலைகொள்ளத் தேவை யில்லை என அறிவித்தார், 1955ஆம் ஆண்டிலிருந்து 1956ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்வரை சீன ராணுவ வீரர்கள் இந்திய எல்லைக்குள் பல தடவைகள் ஊடுருவல் நடத்தி இந்திய எல்லைக்குள் சுமார் 10 மைல் தூரத்தில் எல்லைக் கற்கள் நாட்டி ராணுவ முகா மையும் அமைத்துக்கொண்டனர்.

1956-ல் திபேத்தில் சீனர்களுக்கு எதிராகக் கம்பா (Khampa) என்ற மலைச்சாதியினர் கிளர்ச்சி செய்தனர். புத்த பகவானின் 2,500ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவது சம்பந்த மாகத் திபேத்தின் தலைவர் தலாய்லாமா (Dalai Lama) என்பவர், இந்தியாவிற்கு வந்தார். திபேத்தில் சீனர்கள் இழைக்கும் கொடுமை காரணமாக இந்தியாவிலிருந்து திபேத் நாட்டிற்குத் திரும்பிச் செல்ல மறுத்தார். இருப்பினும் இந்திய அரசு, அவரை அமைதிப்படுத்தி அனுப்பி வைத்தது. இறுதியாக 1959ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17ஆம் நாள் திபேத்தின் தலைநகரான லாசா (Lhasa) என்ற இடத்தில் சீனர்களுக்கு எதிராகத் திபேத் தியர்கள் பெரும் புரட்சி செய்தனர். இதன் விளைவாகத் திபேத்தின் அதிபர் தலாய் லாமா, அங்கு இருக்க இயலாத நிலை யில் தனது ஆதரவாளர்களுடன் இந்தியாவிடம் அடைக்கலம் புகுந்தார். இதற்குப் பின்னர், திபேத்தைச் சீனர்கள் கைப்பற்றிக்

கொண்டனர். தலாய் லாமா, இந்தியாவிற்கு வந்த பின்னர், சீனர்கள் இந்திய எல்லைக்குள் நுழைந்து பல ஆயிரம் சதுர மைல்கள் கொண்ட நிலப்பரப்பைக் கைப்பற்றிக்கொண்டனர். இச் செயலைத் தடுக்க பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க இந்தியா தவறி விட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். சீனு ஆக்கிரமித்துக்கொண்ட பகுதி, நிலமட்டத்திலிருந்து 18,000 அடி உயரமுள்ள பகுதி என்றும், அதில் புல் பூண்டுகூட முளைக்காது என்றும் ('Barren mountain tops where not even a blade of grass grows'), இந் நிலப் பரப்பில் இந்தியாவிற்கு எவ்விதத்திலும் பயன் இல்லை என்றும் அரசாங்கச் சார்பில் எடுத்துக் கூறப்பட்டது.

1961ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிக்கிம் என்ற நாட்டிலும், அதே ஆண்டு மே மாதம் லடாக் பகுதியிலும், ஜூலை மாதம் நேஃபா (Nefa) பகுதியிலும் சீனர்கள் நுழைந்தனர். 1962ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ஆம் நாள் நேஃபா எல்லையில் சீனர்கள் பெரும் ராணுவப்பலம் கொண்டு தாக்குதல் நடத்தினர். தக்லா மலைச்சரிவை (Thagla Ridge) கடந்து இந்திய எல்லைக்குள் நுழைந்தனர்.

1962ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் நாள் சீனர்கள் மக்மகான் எல்லைக் கோட்டை (McMahan Line) 25 மைல் பரப்பளவில் கடந்து இந்திய எல்லைக்குள் 8 மைல் வரை ஊடுருவி வந்தனர். இதைத் தொடர்ந்து அக்டோபர் மாதம் 26ஆம் தேதி இந்தியா அவசர நிலை ஒன்றை அறிவித்தது. தாவார், வாலாங், சேலா, போம்டிலா ஆகிய இந்திய நகரங்களைச் சீனர்கள் கைப்பற்றினர். சீனர்களை எதிர்த்து இந்திய வீரர்கள் போரிட்டு அழிவு பல ஏற்படுத்தியதால் அவர்களால் லடாக் பகுதியிலுள்ள சாகுல் (Chaushul) என்ற நகரத்தைக் கைப்பற்ற முடியாமல் பின் வாங்கினர்.

இருப்பினும், சீனர்கள் அஸ்ஸாம் பகுதியின் வடக்கு எல்லையைக் கடந்து எந் நேரத்திலும் அஸ்ஸாமுக்குள் நுழையக் கூடும் என்ற ஆபத்தான நிலை ஏற்பட்டது. எனவே, பிரதமர் நேரு அமெரிக்க இங்கிலாந்து நாடுகளை உதவும்படி வேண்டினர். இவ்விரு நாடுகளும், கனடா, மேற்கு ஜெர்மனி, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளும் உதவ முன்வந்தன. இதன் விளைவாகச் சீனர்கள், 1962ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21, 22ஆம் நாள் நடு இரவிலிருந்து போர் நிறுத்தம் செய்தனர். லடாக் பகுதியில் 12,000 சதுரமைல் பரப்புள்ள இந்திய எல்லை இன்றும், சீனர்

களிடம் இருக்கிறது. திபேத்திய அதிபர் தலாய் லாமாவிற்கு அபயம் அளித்ததன் பயனாக ஏற்பட்ட இந்தோ சீனா போர், இந்தியாவின் ராணுவப் பலவீனத்தை வெளிப்படுத்தியது உண்மையே. 1962ஆம் ஆண்டு போருக்குப் பின்னர், இந்தியாவின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்து, அதற்காக ஆண்டுதோறும் 1,000 கோடி ரூபாய்களுக்குமேல் செலவழித்து வருகின்றோம். இப்பொழுது இந்திய ராணுவம் உலகில் நான்காம் இடத்தையும், ஆகாய விமானப்படை 5ஆவது இடத்தையும் பெற்றுள்ளது என்ற செய்தி நமக்கு மகிழ்ச்சியூட்டுகின்றது.

பூட்டான் (Bhutan)

பூட்டான் என்பது, இந்தியாவின் வடகிழக்கு எல்லைப்பகுதியில் அமைந்துள்ள ஒரு சிறிய நாடு. இதன் பரப்பளவு சுமார் 47,000 சதுரக் கிலோ மீட்டராகும் (படம் 3). இதன் தலைநகர் திம்பு என்பது. 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இந்திய அரசுக்



படம் 3.

கும், பூட்டான் அரசுக்கும் ஏற்பட இருந்த நல்லுறவு பகையில் முடிந்தது. இரு நாடுகளுக்கும் வியாபாரத் தொடர்பு ஏற்பட வாரன் ஹேஸ்டிங்ஸ் எடுத்துக் கொண்ட முயற்சி சில காலம் பயனளித்தபோதிலும், அது நீண்டநாள் நீடிக்கவில்லை. குறிப்பாக, 1825ஆம் ஆண்டில் ஏற்பட்ட முதல் ஆங்கிலோ பர்மா போருக்குப்

(The first Anglo-Burmese war) பின்னர், இந்திய-பூட்டானிய நல்லுறவில் சிக்கல்கள் ஏற்பட்டன. அஸ்ஸாம்மீது படையெடுத்து வந்த பர்மியர்களை ஆங்கிலேயர்கள் போரிட்டு வெளியேற்றிய பின்னர், பூட்டான் மலையின் அடிவாரத்திலுள்ள செழுமையான 20 மைல்கள் அகலமுள்ள நிலப்பகுதியின் மீது ஆங்கிலேயர்களின் கவனம் சென்றது. சுமார் ஆயிரம் மைல்கள் பரப்பளவு கொண்ட இந் நிலத்திலிருந்து இந்திய எல்லைக்கு வர ஏழு குறுகிய மலைக் கணவாய்கள் அமைந்திருக்கின்றன. இதைப் போன்று வங்காளத்திலிருந்து இந் நிலப்பகுதிக்குச் சென்றுவர பதினொரு மலைவழிப் பாதைகள் (Duars) அமைந்துள்ளன. இங்குப் பருத்தி செழுமையாக வளர்கின்றது. ஆங்கில அறிஞரும், இந்திய அரசின் வெளிநாட்டுத் தூதுவருமான ஆஸ்லி ஈடன் (Ashley Eden), என்பவர் இவ்விடத்தைப்பற்றி மிகவும் புகழ்ந்து எழுதியுள்ளார். இந்திய அரசின் நிர்வாகத்தில் இருக்கும் பகுதிகளில் இது மிகவும் வளமுள்ளது. செல்வம் கொழிக்கும் பூமியாக விளங்குகிறது என்று குறிப்பிட்டுள்ளார். அத்துடன் ஐரோப்பியர்கள் குடி இருப்பதற்கு எல்லா வகையிலும் ஏற்றதாக அமைந்துள்ளது என்றும் பாராட்டியுள்ளார்.

இத்தகைய வளமுள்ள இடத்தைக் கவர ஆங்கிலேயர்கள் திட்டமிட்டனர். அஸ்ஸாமிலிருந்து பூட்டானுக்குச் செல்லும் மலைப்பாதைகளில் ஐந்தைப் பூட்டானியர்கள் தங்கள் அதிகாரத்தின்கீழ் வைத்திருக்கின்றனர். எஞ்சிய கூமா, காலிங் (Guma and Kalling) என்ற இரு மலைவழிப்பாதைகள் ஆங்கிலேயரிடமிருந்தன. இதனால் வியாபார முறையிலும் சுங்கம் வசூலிக்கும் முறையிலும் பல சிக்கல்கள் இரு அரசுகளுக்கும் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் இந்திய அரசு, கேப்டன் பெம்பர்டன் (Captain Pemperton) என்பவரின் தலைமையின்கீழ் ஒரு நல்லெண்ணக் குழுவை 1837 ஆம் ஆண்டு அனுப்பியது. ஆனால் பயனுள்ள முடிவு எதுவும் இவ்விரு நாட்டிற்கும் ஏற்படவில்லை. பெம்பர்டனின் நல்லெண்ணக் குழுவால் பூட்டான் நாட்டைப்பற்றிய பல விவரங்கள் இந்திய அரசுக்குத் தெரியவந்தன. அதனால் இந்தியக் கவர்னர் ஜெனரலாக இருந்த ஆக்லந்து பிரபு (Lord Auckland), பூடானின் ஒருசில அடாத செயல்களைக் காரணம் காட்டி ஆங்கிலேயரின் ஆதிக்கத்தில் இருந்த இரண்டு மலைவழிப்பாதைகளை ஆண்டிற்கு 10,000 ரூபாய் வீதம் நட்ட ஈடு கொடுத்து அவற்றைத் தங்களிடம் வைத்துக் கொண்டனர்.

இதை அடுத்து வங்காளப் பகுதியில் உள்ள பதினொரு மலைவழிப் பாதைகளின்மீது ஆங்கிலேயர்கள் கவனம் செலுத்தினர்.

இம் மலைவழிப் பாதைகளின் வழியாகப் பூட்டானியர்கள் அடிக்கடி இந்திய எல்லைக்குள் வந்து கொலை, கொள்ளை திருடு ஆகியவற்றை நடத்திவிட்டுத் தங்கள் எல்லைகளுக்குச் செல்வது வழக்கம். பலரைக் கைதிகளாக்கியும் கொண்டு செல்வதும் உண்டு. 1885 ஆம் ஆண்டு தாங்சோ பென்லோப் (Tongso Penlop) என்ற பலமுள்ள பூட்டானிய ராணுவத் தலைவர் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த டல்ஹௌசி பிரபுவுக்கு எதிராகப் பல நடவடிக்கைகளில் ஈடுபடவே, டல்ஹௌசி, பூட்டானுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க நேர்ந்தது. இதன் பயனாகப் பூட்டான் அரசு தொங்கசோ பென்லோப்பின் நடவடிக்கைகளுக்கு மன்னிப்புத் தெரிவித்ததோடு ஆங்கில ராணுவ முகாம் ஒன்றைத் தங்கள் எல்லைக்கு அருகிலுள்ள ஜல்பைகுரி (Jalpaiguri) என்ற இடத்தில் அமைக்க அனுமதிக்கவும் நேர்ந்தது. ஆனால் பூட்டானியர்கள் இந்திய எல்லைக்குள் நுழைந்து கொள்ளை, கொலை ஆகிய கொடுமைகள் இழைப்பதை நிறுத்தவில்லை. பூட்டானியர்களின் நடவடிக்கைகளை அடக்க கானிங் பிரபு (Canning), ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்பினார். ஆனால் இந்தியாவில் 1857-ல் சிப்பாய்க் கலகம் ஏற்படவே, இவ் வெண்ணம் கைவிடப் பட்டது.

சிப்பாய்க் கலகம் முடிவுற்ற பின்னர், பூட்டானியர்மீது இந்திய அரசின் கவனம் சென்றது. முதல் நடவடிக்கையாக அம்பாரி ஃபாலக்காட்டா (Ampari Falakata) என்ற தாலுக்காவின் குத்தகைத் தொகையான ரூபாய் 2 ஆயிரத்தையும் இந்திய அரசு பூட்டானிய அரசுக்குக் கொடுப்பதை நிறுத்தியது. இதனால், இரண்டு அரசுகளுக்கும் பகைமை தோன்றியது. 1862ஆம் ஆண்டு அம்பாரி பாலக்காட்டாவை வன்முறையில் கைப்பற்ற பூட்டானிய அரசு முயன்றது. இந்த நடவடிக்கைக்கு எதிராக ஆங்கிலப் படை ஒன்று அனுப்பப்பட்டது. இந்த ராணுவ நடவடிக்கை பகைமையை ஓரளவிற்குச் செம்மை செய்தது. இதைத் தொடர்ந்து மேலும் அமைதி ஏற்படுத்த சர். ஆஸ்லி ஈடன் என்பவரை இந்திய அரசின் நல்லெண்ணக் குழுவின் தலைவராகவும் தூதுவராகவும் அனுப்பிவைத்தனர். பூட்டானியர்கள் இந்திய எல்லையிலிருந்து கைதியாக்கிச் சென்றவர்களையும் கொள்ளையிட்ட பொருள்களையும் திருப்பித் தருவதுடன் மேலும் இத்தகைய நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடக் கூடாது என்ற உறுதிமொழி பெறவேண்டும் என்று ஆலோசனை கூறி அனுப்பப்பட்டார். ஈடனுக்குத் துணையாக நூறு ராணுவ வீரர்கள் கேப்டன் லான்ஸ் (Captain Lance) என்பவரின் தலைமையின்கீழ் அனுப்பப் பட்டனர்.

பூட்டானிய அரசு உண்மையிலேயே தாங்சோ பென்லோப் என்பவரின் அதிகாரத்தில் இருந்தது. சர் ஆஸ்லி ஈடன், பூட்டானிய அரச அவையில் அவமதிக்கப்பட்டார். இந் நல்லெண்ணக் குழு உயிர் தப்பினால் போதும் என்ற இக்கட்டான நிலையில் பூட்டான் நாட்டிலிருந்து இரவோடு இரவாகப் புறப்பட்டு 1864ஆம் ஆண்டு டார்ஜீலிங் நகருக்கு வந்து சேர்ந்தது. இதற்குப் பின்னரும், இந்திய அரசின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும்படி பூட்டானிய அரசு இசைவு தெரிவிக்கவில்லை. இறுதியாக, அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள பூட்டானிய மலைப்பாதைகளையும் அம்பாரி, பாலக்காட்டா ஆகிய இடங்களையும் ஆங்கிலேயர்கள் நிரந்தரமாகத் தங்களுடைய எல்லைகளுடன் இணைத்துக் கொண்டதாக அறிவித்தனர்.

வங்காளப் பகுதியில் அமைந்துள்ள மலைப் பகுதிகளையும் தங்களுடன் இணைத்துக்கொள்ள இந்திய அரசு தீர்மானித்தது. இப் பகுதியிலுள்ள ஒரு சில கோட்டைகளையும் கைப்பற்ற ஆங்கில ராணுவம் ஒன்று அனுப்பப்பட்டது. இக் கோட்டைகளை எவ்வித எதிர்ப்பும் இன்றி இப் படைகள் 1865ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் மத்தியில் கைப்பற்றின. இருப்பினும் தேவங்குரி, தேசிகாங் (Dewanguri, and Tazigong) ஆகிய இரு இடங்களையும் பூட்டானியர்கள் கைப்பற்றி ஆங்கிலேயப் படைகளை வெளியேற்றினர். ஆனால் ஆங்கிலப் படைகள் மறுபடியும் கைப்பற்றிக் கொண்டதோடல்லாமல், பூட்டானுடன் அண்டை நாடுகள் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளாதபடி செய்தனர். இருப்பினும், பூட்டானிய அரசு பிடிவாதமாக ஆங்கிலேயர்களின் நோக்கங்களுக்கு இசையவில்லை. தங்களிடமிருந்து கைப்பற்றிய இடங்களைத் திருப்பிக் கொடுத்தாலொழிய பேச்சு வார்த்தைகள் நடத்த முடியாதென மறுத்துவிட்டது. எனவே, பூட்டானியரை அடக்க வேறு வழியின்றி மழைக் காலத்திற்குப்பின், ராணுவ நடவடிக்கை எடுக்க இந்திய அரசு தீர்மானித்தது.

ராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர், இந்திய அரசுடன் பூட்டானிய அரசு சமாதான உடன்படிக்கைக்கு உடன்பட்டது. அதன்படி 1865ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் நாள் உடன்படிக்கை ஒன்று இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தாகியது. இதன்படி இந்திய அரசு, பூட்டான் எல்லையில் கைப்பற்றிய மலைப் பாதைகள், நிலப்பகுதிகள் அனைத்தையும் தன்னிடமே வைத்துக் கொள்வதென்றும் அதற்கு நஷ்ட ஈடாக முதல் ஆண்டு ரூபாய் 25,000-ம், இரண்டாம் ஆண்டு ரூ. 35,000-ம், மூன்றும் ஆண்டு

ரூ. 45,000-ம் நான்காம் ஆண்டு 50,000-ம் இந்திய அரசு, பூட்டான் அரசிற்குக் கொடுப்பதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. பூட்டான் அரசு, இந்திய அரசிற்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடுதலோ அல்லது பூட்டானியர் கொடுமை இழைக்கும்பொருட்டு இந்திய எல்லைக்குள் நுழைவதைத் தடுக்காவிட்டாலோ, இவ்வுதவித் தொகை உடனடியாக நிறுத்தப்படும் என்றும் இவ்வறிக்கையில் அடங்கியிருந்தது. சிக்கிம், கூச்பீகார் போன்ற பகுதிகளில் கைதியாக்கியிருந்த ஆங்கிலேயர்களை உடனடியாக விடுவிக்க ஒப்புக்கொண்டது. இதே போன்று ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய பூட்டானியர்களையும் விடுவிப்பதென்று முடிவாயிற்று. இரு நாடுகளுக்கும் தடையில்லா வாணிபம் நடைபெற வழிவகை செய்யப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட உடன்படிக்கையால், இரு நாடுகளுக்கும் இடையே அமைதி நிலவியது. 18 மலைப்பாதைகள் (Duars) இந்திய அரசிற்கு விட்டுக் கொடுக்கப்பட்டன. பூட்டான் மலைப்பகுதியின் அடியில் அமைந்த ஆயிரம் மைல் பரப்பளவுள்ள செழுமையான நிலப்பகுதியும் இந்திய அரசிற்குக் கிடைத்தது. இதற்குப் பின்னர், 1868, 1880ஆம் ஆண்டுகளில் இவ்விரு நாடுகளுக்கும் சிறிய சச்சரவு ஏற்பட்டது. ஆனால், அவை வெகு சீக்கிரத்தில் தீர்க்கப்பட்டன. திபேத்தியர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் 1904ஆம் ஆண்டு போர் ஏற்பட்டபோது பூட்டானியர்கள் திபேத்தியர்களுக்கு ஆதரவு அளிக்க மறுத்துவிட்டனர். இதற்கு மாறாகப் பூட்டானியர்கள் ஆங்கிலேயருக்கு ஆதரவு அளித்தனர்.

1904ஆம் ஆண்டுவரை பூட்டானிய அரசியல் விவகாரம் அனைத்தும் வங்காள அரசின்மூலமே மத்திய அரசிற்கு நடைபெற்று வந்தன. அதன்பின் சிக்கிம், பூட்டான், திபேத் ஆகிய மூன்று நாடுகளின் விவகாரங்கள் அனைத்தும், இந்திய அரசுடன் நேரடியாகத் தொடர்புகொள்ள வசதி செய்யப்பட்டது. இம்முறையால் இதுகாறும் ஏற்பட்டுவந்த பொருள் நஷ்டம், காலதாமதம், பகைமை ஆகியவை தவிர்க்கப்பட்டன.

சுதந்திர இந்தியாவும், பூட்டானும்

1865, 1900 ஆகிய ஆண்டுகளில் இந்திய அரசுக்கும், பூட்டானுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் நல்லுறவு நீடித்து வந்தது. இந்தியா, ஆங்கிலேயர்களின் ஆட்சியிலிருந்து 1947ஆம் ஆண்டு சுயாட்சி பெற்றபின்னர், சுதந்திர இந்தியா பூட்

டானிய அரசுடன் 1949ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 8ஆம் நாள் புதிய உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியது. இதன்படி இரு நாடு களுக்கும் இடையே நிரந்தர அமைதியும் நட்பும் நிலவவேண்டும் என்றும், இந்தியா, பூட்டானின் உள்நாட்டு அரசியல் விவகாரங் களில் தலையிடாது என்றும் உடன்படிக்கை ஏற்படுத்திக்கொள்ளப் பட்டது. வெளிநாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரை பூட்டான் இந்தியாவைக் கலந்து கொள்வதென்றும் உறுதி அளித்தது.

சுதந்திர இந்தியா, பூட்டானுக்குத் தேவநாகுரி (Dewanaguri) என்ற இடத்தைக் கொடுத்ததோடு இதுகாறும் அளித்துவந்த உதவித் தொகையை ரூ. 5 லட்சமாக உயர்த்தியது. 1958ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23ஆம் நாள் இந்தியப் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு பூட்டானுக்குச் சென்றார். அவருக்கு அளித்த வரவேற்பில் பேசும்போது, பூட்டான் நாட்டைத் தாக்கும் எந்த நாடும் இந்தியாவிற்கு விரோதி நாடாகக் கருதப்படும் என்று குறிப்பிட்டார். பூட்டானைப் பொறுத்தவரை இக் கருத்தையே தனது வெளிநாட்டுக் கொள்கையாக இந்தியா கடைபிடித்து வரு கிறது. 1959ஆம் ஆண்டு பூட்டானியப் பிரதமர், தனது நாட்டின் பாதுகாப்புச் சம்பந்தமாக நேருவைச் சந்தித்துக் கருத்துகள் பரி மாறிக் கொண்டார். 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் நாள் பூட்டானின் பிரதமர் ஜிக்மி டோர்ஜி (Jigme Dorji) என்பவர் கொலை செய்யப்பட்டார். இவர் இந்தியாவுடன் நட்புறவு கொள்ள விருப்பங்கொண்டவர். இக் கொலையால் பூட்டானின் அரசியல் நிலை சிறிது குழப்பமுற்றிருந்தது.

1965ஆம் ஆண்டு பூட்டானிய மன்னர் இந்தியாவிற்கு வந்து கல்கத்தாவில் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியைச் சந்தித்தார். பூட்டான் ஐக்கியநாடுகள் சபையில் அங்கத்தினராகச் சேர விரும்பு கிறது என்ற எண்ணத்தை மன்னர் தெரிவித்தார். இம் முயற்சிக்கு இந்திய அரசு இசைவு அளித்தது. பூட்டான், கொழும்புத் திட்டத்தில் (Colombo Plan) ஓர் அங்கத்தினராக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்திய நாட்டின் நட்பால் பூட்டான் பொரு ளாதார, தொழில்நுட்பத் துறைகளில் பல நன்மைகள் பெற் றுள்ளது.

பர்மா (Burma)

முன்னுரை: இந்தியாவின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ளது பர்மா நாடு. இது 1948ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆதிக்கத்தி லிருந்து விடுபட்டுச் சுதந்திர நாடாயிற்று. இந் நாடு பருவக் காற்றுப் பகுதியில் அமைந்திருப்பதால் ஏராளமான மழையை

ஆண்டுதோறும் பெருகின்றது. அதன் பயனாக நெல் ஏராள மாகப் பயிரிடப்படுகிறது. தேக்கு மரமும் இந் நாட்டிற்கு அந் நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றது. வைரக் கற்களும் இங்குக் கிடைக்கின்றன. பொதுவாக, இது கனிவளம் நிறைந்த நாடு. மக்கள் பௌத்த சமயத்தைப் பின்பற்றி வருகின்றனர். சுதந்திரம் பெற்ற பின், இந் நாடு பல துறைகளிலும் முன்னேறி இருக்கின்றது.

பர்மா நாட்டின் தோற்றமும், வளர்ச்சியும்

இராவதி நதியின் மேல்பகுதியில் அலம்ப்ரா (Alompra) என்ற வேடன், ஒரு சிறிய அரசை 1760ஆம் ஆண்டில் நிறுவினன். அதற்கு அவா (Ava) தலைநகராக இருந்தது. அவனது சந்ததியினர், இவ்வரசை இராவதி நதிக்குக் கிழக்குப் பகுதியிலுள்ள தெனு சரீம் என்ற பகுதியுடனும் மேற்குப் பக்கத்தில் உள்ள அரக்கான் பகுதியுடனும் இணைத்து, இதன் எல்லைகளை விரிவுபடுத்தினர். நதியின் கீழ்ப்பகுதிகள் தலைங்ஸ் (Talaings) என்பவரால் 1793ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டன. போடவ்பாயா (Bodawpaya) என்ற மன்னர், மணிப்பூர், கூச்சார், அஸ்ஸாம் ஆகிய அரசுகளை 1816ஆம் ஆண்டு வென்றார். இவ் வெற்றிகளின் காரணமாக இவரை வெள்ளையானையின் தலைவன் (The Lord of the white Elephant) என்று அழைத்தனர்.

வங்காள மாநிலத்திற்கும் பர்மா நாட்டிற்கும் இயற்கையான எல்லைகள் வகுக்கப்படாததால், அடிக்கடி இவ்விரு நாடுகளுக்கும் போர் நிகழ்ந்து வந்தன. வங்காளம் ஆங்கிலேயர்களின் ஆதிக் கத்தின்கீழ் வந்தபின், ஆங்கிலேயர்கள் பர்மியர்களுடன் போரிட நேர்ந்தது. இந்திய அரசிடம் அபயம் பெற்றிருந்த 50,000 அரக்கானியப் புரட்சிக்காரர்களைப் பர்மியரிடம் திருப்பி அனுப்ப வேண்டுமென்று கேட்டனர். ஆனால், இப் புரட்சிக்காரர்கள் வீணகச் சித்தரவதை செய்யப்பட்டுக் கொல்லப்படுவதை விரும் பாத இந்திய அரசு, இவர்களைப் பர்மியரிடம் அனுப்ப மறுத்து விட்டது. இந்தியக் கவர்னர் ஜெனரலின் (தலைமை ஆளுநர்) சமாதான முயற்சியும் பயனளிக்கவில்லை. இதற்கிடையில் பர்மாவின் மன்னர், 'பாக்கியிதா' என்பவர், தனது தளபதி மகா பண்டுலா என்பவரை வங்காள மாநிலத்தின்மீது படை யெடுத்துச் சென்று ஆங்கிலக் கவர்னர் ஜெனரல் ஆமர்ஸ்ட் பிரபுவைக் (Lord Amherst) கைவிலங்கிட்டு ரங்கூன் நகருக்குக் கொண்டு வரவேண்டும் என்று அனுப்பினர். எனவே, ஆமர்ஸ்ட் பிரபு, 1824ஆம் ஆண்டு பர்மா நாட்டின்மீது போர்தொடுத்தார்.

இதுவே முதல் பர்மியப்போர். இதன் விளைவாக அஸ்ஸாம், அரக்கான், தெனசரீம் முதலிய பகுதிகள் ஆங்கிலேயர் வசம் வந்தன. இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த டல்ஹௌசி காலத்தில் பர்மாவின் வடபகுதியிலுள்ள பெகு (Pegu) என்ற இடம் இந்திய அரசுடன் இணைக்கப்பட்டது. கீழ்ப் பர்மியப் பகுதியும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திற் குட்பட்டது. இந் நிகழ்ச்சிக்குப் பின்னர், இரண்டு அரசுக்கும் இடையில் அமைதி நிலவியது. இதைத் தொடர்ந்து கர்னல் பெய்ரி (Colonel Phayre) என்பவரால் வியாபார உடன்படிக்கை ஒன்று 1862-ல் இரு நாடுகளுக்கும் ஏற்பட்டது. இதன்மூலம் ஆங்கிலேய வியாபாரிகள் ஐராவதி நதிமூலம் சீனாவரை வியாபாரம்செய்யவும் பர்மாவில் எந்த இடத்திலும் தங்கலாம் என்றும் அனுமதி வழங்கப்பட்டது. 1867ஆம் ஆண்டில் ஏற்பட்ட வியாபார உடன்படிக்கையின்மூலம் சில சலுகைகள் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. மண்ணெண்ணெய், தேக்கு, வைரக்கற்கள் ஆகிய மூன்று பொருள்களைத் தவிர, ஏனைய பொருள்களை வியாபாரம் செய்யலாம் என்று பர்மா நாட்டின் மன்னர் ஆங்கிலேயர்களுக்கு அனுமதி வழங்கினார். அத்துடன் பர்மாவில் ரெசிடெண்ட் என்று வழங்கப்படும் அரசியல் தொடர்பு அதிகாரி ஒருவர், ஆங்கிலக் குடிமக்களின் நலனைக் கவனிக்க என்று அனுமதிக்கப்பட்டார். நீதி விசாரணை செய்யவும் அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது.

இத்தகைய சலுகைகள் போதாதென்றும், மேலும் பல சலுகைகள் ஆங்கிலேயர்களுக்கு வழங்கப்படவேண்டும் என்றும் பர்மிய மன்னர் வற்புறுத்தப்பட்டார். பர்மா எல்லைகளில் ஆங்கிலேயர்களின் வியாபாரப் பொருள்களுக்குச் சுங்கவரி வசூலிக்காது விட்டுவிடுதல், மண்ணெண்ணெய், தேக்கு, வைரக்கற்கள் போன்றவற்றை வியாபாரம் செய்ய ஆங்கிலேயர்களை அனுமதிப்பது, பர்மாவின் வடபகுதியில் பாமோ (Bhamo) என்ற இடத்தில் பிரிட்டிஷ் ராணுவ முகாம் அமைப்பது, ரங்கூன்வரை ஆங்கில வியாபரக் கப்பல்களை அனுமதித்தல் போன்ற சலுகைகளை அளிக்கும்படி கட்டாயப்படுத்தி வந்தனர். ஆங்லேயர்கள் பெற்ற இத்தகைய சலுகைகள் நாளாவட்டத்தில் பர்மிய மன்னரின் அதிகாரங்களைக் குறைத்து ஆங்கிலேய வியாபாரிகளின் பலத்தை அதிகப்படுத்தியது.

ரங்கூனிலிருந்து வடக்கே உள்ள புரோம் (Prome) நகருக்கும் அதிலிருந்து மாண்டலேக்கும் ரயில்பாதை அமைக்கவும், நதிகளின் வழியாக வேகமாகச் செல்லும் ராணுவக் கப்பல்களைக் கட்டவும் ஆங்கிலேயர்கள் திட்டமிட்டனர். பர்மியர்கள் ஆங்

கிலக் குடிமக்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள். எனவே, பர்மாவை இந்திய அரசுடன் இணைக்கவேண்டும் என்ற கூக்குரலைப் பர்மாவிலுள்ள ஆங்கில வியாபாரிகளும் அதிகாரிகளும் எழுப்பினர். உண்மையில் 1868-ல் ஆங்கில ஆய்வுக்குழு ஒன்று ராணுவ நடவடிக்கைகளுக்கு முன்னேடியாக வேவு பார்க்க அனுப்பப்பட்டது.

ஆங்கிலேயர்களின் உள் கருத்தை அறிந்துகொண்ட பர்மியர்கள், அவர்களைச் சிறிது கொடுமைப்படுத்தியும் அவமதித்தும் வந்தனர். இதனால், பல அரசியல் நிர்வாகச் சட்டப் பிரச்சினைகள் இரு சாரார்களுக்கும் இடையே ஏற்பட்டன. அத்துடன் செருப்புப் பிரச்சினை (shoe-question) ஏற்கெனவே இருந்து வந்த சிக்கலை மேலும் அதிகப்படுத்தியது. பர்மியர்களின் வழக்கப்படி மன்னரைப் பார்ப்பவர் எவராக இருப்பினும், அவர்கள் தங்கள் பாத அணிகளைக் கழற்றிவிட்டுப் பேட்டி காணவேண்டும். 1876ஆம் ஆண்டு இந்தியாவின் கவர்னர் ஜெனரல் இவ் வழக்கத்தை அனுசரிக்க மறுத்து விட்டார். இதனால், இரு சாராருக்கும் மன வேறுபாடு அதிகரித்தது. இச் சம்பவத்திலிருந்து ஆங்கிலக் குடிமக்கள் யாவருக்கும் பர்மியமன்னர் பேட்டி அளிக்க மறுத்துவிட்டார்.

ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு

ஆங்கிலேயர்களின் தொல்லைகள் பொறுக்க முடியாமல் இவர்களின் வன்முறைகளுக்கும் சூழ்ச்சிகளுக்கும் ஒரு முடிவுகட்ட பர்மா நாட்டு மன்னர் மிண்டான் (King Mindon), ஐரோப்பிய வல்லரசுகளுடன் தொடர்பு கொண்டு, அவர்களின் ஒத்துழைப்பை நாட விரும்பினர். முதலில் ஃபிரெஞ்சு நாட்டிற்கு நல்லெண்ணத் தூதுக் குழு ஒன்றை 1837-ல் அனுப்பி வியாபார உடன்படிக்கை செய்துகொண்டார். ஆனால் வியாபார உடன்படிக்கையை உறுதிப்படுத்தவும், ஃபிரெஞ்சு ராணுவ அதிகாரிகள் பலரைக்கொண்டு பர்மிய வீரர்களுக்குப் பயிற்சி அளிப்பது சம்பந்தமாகவும் எழுந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்பொருட்டு வந்த ஃபிரெஞ்சுப் பிரதிநிதி ஆங்கிலேயர்களின் தலையீட்டால் ஒப்பந்தத்தில் கையெழுத்து இடாமல் ஃபிரெஞ்சு நாட்டிற்குத் திரும்பி விட்டார். எனவே, ஃபிரெஞ்சுக்காரரின் ஒத்துழைப்பை அடைய எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியுற்றது. இரண்டாவது முயற்சியாக இத்தாலியிடம் ராணுவத் தளவாடங்கள் இறக்குமதி செய்ய விரும்பிய உடன்படிக்கையும் ஆங்கிலேயரின் தலையீட்டால் நிறைவேறவில்லை. இதேபோன்று பாரசீகம், ரஷ்யா போன்ற

நாடுகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள எடுத்துக்கொண்ட முயற்சிகளும் பயனளிக்கவில்லை. இந்தியாவின் கவர்னர் ஜெனரலுடன் உடன்படிக்கை செய்துகொள்வது தனது தகுநிலைக்கும் தகுதிக்கும் இழுக்கு என்று எண்ணி, இங்கிலாந்து அரசி விக்டோரியாவிடம் நேரடித் தொடர்புகொள்ள பர்மா மன்னர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளும் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. பர்மியர்களின் நோக்கம் ஒருவகையில் பலனளித்தது. அதாவது, ஐரோப்பியர் பலர் தனிப்பட்ட முறையில் பர்மாவில் பீரங்கி, துப்பாக்கிகள் செய்து கொடுக்கவும் கப்பல்கள் கட்டவும் முன் வந்தனர்.

பர்மா நாட்டின் மன்னர் மிண்டான் (Mindon), 1878ஆம் ஆண்டில் இறந்தபின், இருபது வயது நிரம்பிய அவரது மகன் தீபா (Thibaw) என்பவர் பட்டத்திற்கு வந்தார். இவர் காலத்தில் இருந்த இந்தியக் கவர்னர் ஜெனரல் லிட்டன் பிரபு (Lord Lytton), வழக்கம்போல் புதிய மன்னரிடம் பல சலுகைகளைப் பெறுவதற்காகப் பர்மாவில் ஆங்கிலக் குடிமக்கள் பல கொடுமைகளுக்கு ஆளாகிறுர்கள் என்றும், அவற்றை மன்னர் தீபா நீக்க வேண்டும் என்றும் எடுத்துக்கூறி வந்தார். மன்னர், சில குறைகளை நீக்கினுர். ஆனுல், மன்னரைப் பாத அணிகளுடன் ஐரோப்பியர்கள் பேட்டி காணும் பழக்கத்தை ஏற்றுக்கொள்ள அவர் மறுத்துவிட்டார். புதிய மன்னர், தமது அரச குடும்பத்தினர் பலரை வன்முறையில் 1879ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15-17ஆம் நாள் படுகொலை செய்தார். இச் சம்பவத்தைக் காரணமாகக் கொண்டு பர்மாவை ஆங்கிலேயர் கைப்பற்ற வேண்டும். இல்லையேல், ஆங்கிலக் குடிமக்கள், அதிகாரிகள், வியாபாரிகள் போன்றவர்களுக்குப் பர்மாவில் பாதுகாப்பு இருக்காது என ஏகோபித்த முறையில் கூக்குரல் எழுந்தது. ஆனுல், இக் கூக்குரலுக்கும் இந்தியக் கவர்னர் ஜெனரல் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இருப்பினும், அரசியல் தொடர்பை முறித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பொதுவாக இந்திய அரசியல் வட்டாரத்தில் இருந்து வந்தது.

மன்னர் தீபா, தனது தந்தை மிண்டான் ஆங்கிலேயருக்கு எதிராகப் பின்பற்றிவந்த கொள்கையைக் கடைபிடித்து வந்தார். ஆங்கிலேயர்களின் செல்வாக்கை அகற்றும் நோக்குடன் மறுமுறையும் 1883ஆம் ஆண்டில் வியாபார உடன்படிக்கை செய்து கொள்ள பாரிசுக்கு ஒரு நல்லெண்ணக் குழுவை அனுப்பிவைத்தார். இக் குழுவும் ஆங்கிலேயரின் தலையீட்டால் நல்ல பலன் அளிக்கவில்லை. இருப்பினும் வியாபார உடன்படிக்கை கையெழுத்

திடப்பட்டு நடைமுறை நிலைக்கு எட்டியது. ஆங்கிலேயருக்குச் சம மாகப் ஃபிரெஞ்சுக்காரர்களின் வியாபாரச்செல்வாக்கைப் பார்க்கப் பொறுது, பர்மா நாட்டை ஆங்கில அதிகாரத்தின்கீழ்க் கொண்டு வரவேண்டும் என்று ஆங்கிலேயர் குரல் எழுப்பினர். இதற்குப் பின், இங்கிலாந்து அரசு, ஃபிரெஞ்சுக்காரர்களின் தலையீட்டின் ஆபத்தை உணர்ந்து பர்மா நாட்டைக் கைப்பற்றுவதில் தீவிர மாக ஈடுபட்டது.

மணிப்பூர் மாநிலத்தின் எல்லைத் தகராறு காரணமாகப் பர்மா வுக்கும் இந்தியாவிற்கும் நீண்ட நாளைய பகைமை இருந்து வந்தது. 1881-ல் ஆங்கிலேயரின் எல்லைக் குழு நிறுவிய மணிப்பூர்-பர்மா எல்லையைப் பர்மியர் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த எல்லைக் கற்களை நீக்க வேண்டும் என்றும் அவ்வாறு செய்யாவிட் டால், தாங்களே எல்லைக் கற்களை அகற்றுவோம் என்றும் பர்மா அரசினர் 1884-ல் இந்திய அரசிற்குத் தெரிவித்தனர். பர்மிய அரசு, எல்லைக் கற்களை அகற்றினால் அந் நாட்டின்மீது ராணுவ நடவடிக்கை எடுக்கும்படி மணிப்பூர் அரசை ஆங்கிலேயர் தூண்டினர். மேலும் ஆங்கிலேய வியாபாரக் கம்பெனிகள் பல பர்மா நாட்டில் நேர்மையற்ற முறையில் ஏமாற்றுத்தனம் செய்து வந்தன. இக் காரணங்களால் பொதுமக்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர்.

இதன் தொடர்பாக, ஆங்கிலேயர்கள் பர்மா நாட்டின்மீது ராணுவ நடவடிக்கைகள் எடுக்கத் தலைப்பட்டனர். இதைப் போன்று பர்மா மன்னர் தீபாவும் தனது நாட்டின் தன்மானத் தைக் காக்கும்பொருட்டுப் போரிடத்தயாரானார். இந்த ஆங்கிலப் பர்மிய மோதலே மூன்றும் பர்மியப் போராகும். ஆங்கிலப் படைகள் அதிக எதிர்ப்பு இல்லாமல் மாண்டலே என்ற நகரத் தைக் கைப்பற்றினர். மன்னர் தீபாவும், அவரது ராணுவமும் 1886-ல் நவம்பர் 28ஆம் நாள் ஆங்கிலேயரிடம் சரண் அடைந் தனர். அதே ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளன்று பர்மா, ஆங்கில அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது என்று இந்திய வைசிராய் டப்ரினின் பிரபு (Lord Dufferin) அறிவித்தார். மூன்று பர்மியப் போர்களின்மூலம் ஒவ்வொரு பகுதியாகப் பர்மா நாடு முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குள் கொண்டு வரப்பட்டன. கடைசியாகப் பர்மா முழுதும் இந்தியப் பேரரசுடன் இணைக்கப் பட்டது.

மூன்றாவது பர்மியப் போர், 1885

மிண்டான் மின் (Mindon Min) என்ற மன்னர், 1853-லிருந்து 1878 வரை பர்மாவை ஆண்டு வந்தார். இவருக்குப்பின், இவர்

மகன் தீபா (Thibaw) என்பவர் பட்டத்திற்கு வந்தார். இவர் கொடுங்கோன்மையுள்ளவர். தான் பட்டத்திற்கு வருவதற்கு



படம் 4.

முன் தனது உறவினர் 80 பேர்களைக் கொன்று குவித்தார். இச் செயலுக்கு ஆங்கிலேயர்கள் எதிர்ப்புத் தெரிவித்தும் அதற்கு மன்னர் தீபா செவிசாய்க்கவில்லை. இதன்பயனாக ஆங்கிலேயர்

களுக்கும் பர்மியர்களுக்கும் இருந்து வந்த அரசியல் உறவு முறியத் தலைப்பட்டது.

இந்நிலையில் மன்னர், தீபா ஃபிரெஞ்சு அரசாங்கத்துடன் 1885-ல் வியாபார உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டு, அதன் மூலம் அவர்களுக்குப் பல சலுகைகள் அளித்து வந்தார். ஃபிரெஞ்சு அரசு, ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தைப் பர்மாவிலிருந்து நீக்க ராணுவ உதவி அளிப்பதாக மன்னர் தீபாவிற்கு வாக்களித்தது. ஃபிரெஞ்சு நாட்டுத் தூதுவர் ஒருவர் வடபர்மாவின் முக்கிய நகரமான மாண்டலேயில் நியமிக்கப்பட்டார். இவரது செல்வாக்கால் ஃபிரெஞ்சுக்காரர்களுக்கு மேலும் பல சலுகைகள் கிடைத்தன. ஃபிரெஞ்சுக்காரர்கள் பர்மாவில் அமைதியான முறையில் செல்வாக்குப் பெறுவதை ஆங்கிலேயர்கள் விரும்பவில்லை. இருப்பினும் தகுந்த காரணமின்றிப் பர்மாவுடன் போரிட விரும்பாத ஆங்கிலேயர்கள் தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருந்தனர்.

பாம்பே-பர்மா வியாபாரக் கம்பெனி ஒன்று, பர்மாவுடன் மர வியாபாரம் செய்து வந்தது. இஃது ஆங்கிலேயருக்குச் சொந்தமானது. இக் கம்பெனி, பர்மா அரசை ஏமாற்றியதற்காகப் பர்மா அரசு இக் கம்பெனிக்கு 23 லட்சம் ரூபாய் அபராதம் விதித்தது. ஆங்கில வியாபாரக் கம்பெனி, இது சம்பந்தமாக இந்திய அரசை அணுகியது. இந்த வழக்கை இந்திய வைசிராயின் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று இந்திய அரசு வற்புறுத்தியது. ஆனால், மன்னர் தீபா, இதற்கு இசையவில்லை. இத் தருணத்தில் ஃபிரெஞ்சுக்காரர்கள், இந்தோசீனாவில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரத்தால் வடபர்மாவிலிருந்து வெளியேறினர். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு இந்திய வைசிராய் டப்பிரின் பிரபு, பர்மா அரசு ஓர் ஆங்கிலத் தூதுவரை நிரந்தரமாகத் தனது அவையில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார். அத்துடன் அவர் மன்னரைப் பேட்டி காணும்போது பர்மிய முறைப்படி தாளிட்டு வணங்கவோ, பாதஅணியை நீக்கவோ வற்புறுத்தக் கூடாது என்றும் கேட்டுக்கொண்டார். மேலும், பர்மாவின் வெளிநாட்டு விவகாரங்களை ஆங்கில அரசைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்றும், பாம்பே-பர்மா வியாபாரக் கம்பெனி சம்பந்தப்பட்ட வழக்கை வைசிராயைக் கலந்து முடிவெடுக்க வேண்டுமென்றும் எடுத்துக் கூறப்பட்டது.

ஆங்கிலேயர்களின் வற்புறுத்தலுக்கு மன்னர் தீபா இணங்காததால், இந்திய அரசின் வைசிராய் டப்பிரின், பர்மாவின்மீது 1885ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் போர்தொடுத்தார். இதுவே மூன்றாவது பர்மியப் போர் என்று அழைக்கப்படுகிறது. இப் போர்

ஆரம்பித்த 20ஆவது நாளில் மாண்டலே நகரை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். ஆங்கில ராணுவத்திடம் போரிட முடியாமல் மன்னர் தீபா சரணடைந்தார். இவர் கைதியாக்கப்பட்டுச் சென்னைக்கு அனுப்பப்பட்டார். வடபர்மா வெல்லப்பட்டது. மூன்றுவது பர்மா யுத்தத்தின் முடிவில் பர்மா முழுவதும் இந்தியா வுடன் சேர்க்கப்பட்டது. 1886 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நாள், பர்மா இந்தியாவின் ஒரு மாநிலமென அறிவிக்கப் பட்டது. ஆனால், இதிலிருந்து சுமார் ஐந்தாண்டுகள்வரை ஆங்கிலேயர்களின் செயலுக்குப் பர்மாவில் எதிர்ப்புகள் இருந்து வந்தன. பழைய ராணுவ வீரர்களும், கலைக்கப்பட்ட ராணுவ வீரர்களும் கொரில்லா முறையில் ஆங்கிலேயர்களை எதிர்த்து வந்தனர். இவ் எதிர்ப்பு நாளாவட்டத்தில் குறைந்துவிட்டது. ரங்கூன் பர்மாவின் தலை நகராக்கப்பட்டது. 1935ஆம் ஆண்டின் இந்திய அரசியல் சட்டப்படி 1936-ல் பர்மாவை இந்தியாவி லிருந்து பிரித்துத் தனி நாடாக்கினர்.

சுதந்திர இந்தியாவும் பர்மாவும்

ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திலிருந்து பர்மா 1948ஆம் ஆண்டு விடுபட்டுச் சுயாட்சி பெற்றது. இந்தியாவைப் போன்று பல்லாண்டுக் காலம் ஆங்கிலேயர்களின் ஆட்சியின்கீழ் இருந்து வந்த காரணத்தால், இந்தியா, பர்மாவின் பிரச்சினைகளைப் பரிவுடன் நோக்கி, அதற்குத் தேவையான உதவிகளையும் செய்து வந்திருக்கிறது. அந் நாடு சுதந்திரம் பெற்றபின் அதற் குரிய அரசியல் சட்டத்தை உருவாக்க இந்தியா உதவியது. அந் நாட்டிற்கு ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல்களைப் போக்கிக் கொள்ள 10 கோடி ரூபாய் கடனாக அளித்தது. இருப்பினும் இரு நாட்டின் உறவு நன்மை பயப்பதாக அமையவில்லை. இதற்குக் காரணம் இந்தியாவிற்கு எதிராக அந் நாட்டில் ஏற்பட்ட பகைமை உணர்வேயாகும். இந்தியர்களின் பெரும்பாலோரின் சொத்துகள் தேச உடைமைகள் என்ற பெயரால் பறிக்கப் பட்டன. ஆனால், அவற்றுக்கு நஷ்டஈட்டுத் தொகை எதுவும் கொடுக்கப்படவில்லை. பர்மா அரசின் தகாத செயலால் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். பர்மா நாட்டில் இந்தியத் தூதுவராக இருந்த அட்மிரல் கட்டாரி யின் (Admiral Kadari) பெரும் முயற்சியின் பயனாக இந்தியா வைப்பற்றி அம் மக்களிடம் சிறிது நல்லெண்ணம் ஏற்பட்ட போதிலும், தொடர்ந்து அங்கு ராணுவத் தலைவர் ஆட்சி நடை பெற்று வருவதால், மேலும் இரு நாடுகளுக்கும் நல்லுறவு ஏற்படு வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது.

நேபாளம்

நேபாளத்தின் பழங்குடி மக்கள் திபேத்தியர் லெப்சாரர், குருங்கர், முருமியர் போன்றவர்களாவர். 1768-ல் கூர்க்கர்கள் நேபாளத்தைக் கைப்பற்றி அங்கு ஓர் அரசை நிறுவினர். கூர்க்கர்கள் திபேத்தின்மீது படை எடுத்தனர். ஆனால் சீனர்கள் தலையிட்டு இவ் வீரர்களைத் தோற்கடித்தனர். 1791-ல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கும் கூர்க்கர்களுக்கும் வியாபார உடன்டிக்கைப ஒன்று ஏற்பட்டது.

நேபாளத்தின் வடக்கு எல்லைகளில் சீனர்களின் செல்வாக்கு அதிகமாக இருந்ததால், கூர்க்கர்களின் எல்லையை வடபகுதிகளில் விரிவுபடுத்த இயலவில்லை. எனவே, இவர்கள் தெற்கு நோக்கி தங்கள் எல்லைகளை விரிவுபடுத்த முயலும்போது, அப் பகுதிகளில் செல்வாக்குப் பெற்றிருந்த ஆங்கிலேயர்களுடன் போரிட நேர்ந்தது. இப் பகைமையின் காரணமாக இருவருக்கும் 1814–16-ல் கூர்க்காப் போர் ஒன்று ஏற்பட்டது. ஹேஸ்டிங்ஸ் பிரபு, இதில் தலையிட்டுப் போரை வெற்றிகரமாக முடித்தார். நேபாள மன்னர், பிரிதிவி நாராயணன் என்பவருக்கும் ஆங்கிலேயருக்கும் 1816-ல் சகாலி என்ற இடத்தில் சமாதான உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. இதன் விளைவாகக் குமான், கார்வால் ஆகிய இரு பகுதிகளும் ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்தன. நேபாள மன்னர், தனது தலைநகர் காட்மண்டில் ஆங்கிலத் தூதுவர் ஒருவரை நியமித்துக்கொள்ள ஒப்புக்கொண்டார். இப் போருக்குப் பின்னர், இரு நாட்டவருக்கும் நட்புறவு அதிகப்பட்டது. நேபாளத்திலிருந்து வீரமிக்க போர் வீரர்கள் ஆங்கிலேயரின் ராணுவத்திற்குக் கிடைத்து வந்தனர்.

நேபாளம் ஒன்றுதான் உலகிலேயே இந்து மன்னரால் ஆளப்படும் ஓர் அரசாக இருந்து வருகிறது. திபேத், பூட்டான், சிக்கிம் போன்ற அண்டை நாடுகள் புத்த சமயத்தைச் சார்ந்தவைகளாக இருந்தபோதிலும், நேபாளம் ஓர் இந்து அரசாக இருக்கின்றது. வங்காளத்தை ஆண்டு வந்த சேன வம்சத்து மன்னர்கள் அவ்வப்போது இந்து பிரச்சாரகர்களை நேபாளத்திற்கு அனுப்பி, அங்குப் பௌத்த சமயம் பரவாதபடி செய்து வந்தனர். இதன் காரணமாக, நேபாளம் ஓர் இந்து அரசாக இன்றுவரை நிலைத்து வருகிறது. சுதந்திர இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் தற்சமயம் நட்புறவு நிலவி வருகின்றது. நேபாளத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா உதவி அளித்து வருகின்றது.

சிக்கிம்

சிக்கிம் என்பது, இமயமலைப் பகுதியிலுள்ள ஒரு சிறிய நாடு. இது நேபாளத்திற்கும் பூட்டானுக்கும் இடைப்பட்டு அமைந்திருக்கின்றது. பெருவாரியான மக்கள் இந்துக்களாக இருப்பினும், இதன் ஆட்சியாளர்கள் புத்தசமயத்தைச் சார்ந்தவர்கள். சிக்கிமின் எல்லைப்புறத்தில் அடிக்கடி ஏற்பட்ட கிளர்ச்சிகளின் காரணமாக, இப் பகுதி ஆங்கிலேயர்களின் பாதுகாப்பின்கீழ்ச் செல்ல நேர்ந்தது. இதற்குப் பின், இந் நாட்டின் எல்லைகள் சீர்திருத்தி அமைக்கப்பட்டன. ஆங்கிலேயர்கள், 1890-ல் சீனாவுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். இதன்படி சிக்கிமின்மீது ஆங்கிலேயருக்கு இருந்து வந்த உரிமையைச் சீனா ஏற்றுக்கொண்டது. சிக்கிமின் தலைநகரான கேங்டாக் என்ற நகரில் ஆங்கிலேய அதிகாரி ஒருவரை ஏற்றுக்கொள்ள சிக்கிம் அரசு விருப்பம் தெரிவித்தது.

இந்தியா சுதந்திரம் பெற்றபின், சிக்கிமுடன் நெருங்கிய உறவு ஏற்பட்டது. 1950ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் இந்தியாவுடன் தற்காலிக உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. 1950ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் புதிய உடன்படிக்கை ஒன்று இருநாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டது. இதன்படி இந்தியாவின் பாதுகாப்பைச்சிக்கிம் ஏற்றுக்கொண்டது. சிக்கிமுக்கு உள்நாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, போக்குவரத்து ஆகிய பொறுப்புகளை இந்தியா ஏற்றுக்கொண்டது. நாட்டின் வளர்ச்சிக்கும், நிர்வாக முறைக்கும் இந்தியா மூன்று லட்ச ரூபாய் உதவித் தொகை அளிக்க ஒப்புக் கொண்டது.

(3) ஆங்கிலேயர்களும் சுதேச அரசர்களும்

(British relations with the Princely State of India)

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆட்சிக் காலத்தில் கவர்னர்கள், கவர்னர்-ஜெனரல்கள் ஆகியோர் ஆட்சி செய்த போது இந்தியாவில் பல சுதேச அரசுகள் வெல்லப்பட்டும், உடன்படிக்கைகளால் இணைக்கப்பட்டும் இந்திய அரசுடன் சேர்க்கப்பட்டன. இதன் காரணமாகப் பிரிட்டிஷ் இந்திய அரசு விரிவடைந்து, பலம் வாய்ந்த பெரும் பேரரசாக உருவாயிற்று. இதில் கம்பெனியாரின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட மாநிலங்களுடன் பெரியனவாகவும் சிறியனவாகவும் சுமார் 600-க்கு மேற்பட்ட சுதேச அரசுகளும் இடம் பெற்றிருந்தன. இவை அனைத்தும்

கவர்னர்-ஜெனரலின் மேலாணை அதிகாரங்களுக்குக் கட்டுப்பட்டு இயங்கி வந்தன. இத்தகைய மேலாணைகளுக்கும், அதிகாரங் களுக்கும், சட்டப்பூர்வமான அதிகாரங்கள் கிடையா. சுதேச மன்னர்களுடன் அவ்வப்போது செய்துகொண்ட உடன்படிக்கை களால் ஆங்கிலேயர்கள் தங்களுடைய அதிகாரத்தை வலுப் படுத்திக்கொண்டனர்.

சுதேச மன்னர்கள் தாங்கள் செய்துகொண்ட உடன்படிக்கை களின்படி வெளிநாட்டு உறவுகள் தொடர்பான செய்திகளை இந்திய அரசிடம் ஒப்படைத்தனர். ஆனால் ஐதராபாத், அயோத்தி, பரோடா போன்ற பெரிய அரசுகள் தங்களுடைய உள்நாட்டு விவகாரங்களைப் பொறுத்தவரை முழு சுதந்திரத் துடன் இயங்கிவந்தன. தொடக்கநிலையில் ஐதராபாத், அயோத்தி, பரோடா போன்ற பெரிய அரசுகள், இந்திய அரசுடன் சம அந்தஸ்து பெற்று உடன்படிக்கைகள் செய்துகொண்டன. இதைப் போன்றே ஏனைய சுதேச அரசுகளும் பூரண சுயேச்சையுள்ள நாடு களாகக் கருதப்பட்டு வந்தன. ஆனால் நடைமுறையில் சுதேச அரசுகள் அனைத்தும் இந்திய அரசின் அதிகாரத்தின்கீழ்ப் பட்டவை என்ற முறையிலேயே கருதி நடத்தப்பட்டு வந்தன. துணைப்படை முறையே இதற்குக் காரணம். துணைப்படையின்படி ஒவ்வொரு சுதேச அரசும் ஆங்கிலப்படை ஒன்றைத் தனது செலவில் பராமரித்து வரவேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. சுதேச அரசர்களால் ஏற்படும் எத்தகைய எதிர்ப்புகளையும் துணைப்படை உதவிகொண்டு சமாளிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டிருந்ததால், சுதேச அரசுகளை இந்திய அரசு தனது அதிகாரத்தின்கீழ் வைத்துக்கொள்ள முடிந்தது. ஆனால் இந்நிலை 1857ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்திற்குப் பின் முற்றும் மாறிவிட்டது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொள்கை

சர் வில்லியம் லீ வார்னர் என்பவர், இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வளர்ச்சியை மூன்று கட்டங்களாகப் பிரித்திருக் கின்றார். முதல் கட்டம் 1757-லிருந்து 1813வரை நீடித்தது. இதில் பிரிட்டிஷ் அரசு, இந்திய அரசுகளின் உள்நாட்டு விவகாரங் களில் தலையிடாமல் தங்களையும் தங்கள் வியாபாரத்தையும் பாதுகாத்துக்கொண்டு வந்தனர். இதற்குக் காரணம் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி அப்பொழுது பலமுள்ளதாக இல்லை. சுதேச அரசுகளைத் தோற்கடிக்க அதற்குப் பொருள் வசதியோ படை வசதியோ எதுவும் இல்லாமல் இருந்தது. சருங்கச் சுறின் இந்தியச் சுதேச வல்லரசுகளில் இதுவும் ஒன்றெனக் கருதப்

பட்டது. ஏனைய வல்லரசுகள் முறையே மராத்தியர், ஃபிரெஞ்சுக் காரர், ஐதராபாத் நைசாம், மைசூர் சுல்தான் ஆகியோராவர். எனவே, பிரிட்டிஷ் அரசு சுதேச அரசுகளுடன் உடன்படிக்கைகள் ஏற்படுத்தும்போது சம அந்தஸ்திலேயே செய்து கொண்டது.

இரண்டாவது கட்டம், 1813-லிருந்து 1885 வரை நீடித்தது. இதில் பிரிட்டிஷ் அரசு, சுதேச அரசுகளின் படைப்பலத்தை ஒடுக்கித் துணைப்படைமுறைமூலம் நாடுகள் பலவற்றைச் சேர்த்தனர். துணைப்படை முறையின்மூலம் பிரிட்டிஷ் அதிகாரமும் செல்வாக்கும் வலுவடைந்தது. மூன்றாவது கட்டம், 1858-லிருந்து 1919 வரை நீடித்தது. இக் கட்டத்தில் சிப்பாய்க் கலகம் ஏற்பட்டதால், பிரிட்டிஷ் அரசு ஆக்கிரமிப்புக் கொள்கையைக் கைவிட்டுச் சுதேச அரசுகளிடம் நட்புறவு கொண்டாடி வந்தது.

1784ஆம் ஆண்டு பிட் இந்தியச் சட்டத்தின்படி இந்தியாவில் சுதேச அரசர்களின் எல்லைகளை அபகரிப்பதோ, இருக்கும் எல்லைகளை விரிவுபடுத்துவதோ கூடாது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு செய்வது பிரிட்டிஷ் அரசின் கொள்கைக்குப் புறம்பானது என்று வலியுறுத்தப்பட்டது. இக் கொள்கையை இந்தியக் கவர்னர் ஜெனரல் (தலைமை ஆளுநர்) செம்மையான முறையில் பின்பற்றவில்லை என்று அவர்மீது குறை கூறப்பட்டது. வெல்லஸ்லி கையாண்ட துணைப்படை முறையும் டல்ஹௌசி பின்பற்றிய உரிமை இழப்புக் கொள்கையும் (லாப்ஸ் கொள்கை) பிரிட்டிஷ் அரசின் கொள்கைக்குப் புறம்பானது என்று கருதப்பட்டது. 1858ஆம் ஆண்டில் ஏற்பட்ட அதிகார மாற்றமும், விக்டோரியா அரசியின் பிரகடனமும் சுதேச அரசுகளின் வரலாற்றில் ஒரு திசைதிருப்பும் சம்பவமாகக் கருதப்பட்டது. விக்டோரியா அரசியின் அறிக்கையின்படி இந்தியாவில் பிரிட்டிஷ் அரசு மேலும் இந்திய எல்லைகளைக் கைப்பற்றப் போவதில்லை என்றும், சுதேச அரசுகளின் விவகாரத்தில் தலையிடப் போவதில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த அறிக்கையைச் சுதேச அரசர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். இந்த அறிக்கைக்கு நம்பிக்கையூட்டும் வண்ணம் 1860-ல் கானிங் பிரபு ஓர் உத்தரவு வெளியிட்டார். இதன்படி இந்து சமயத்தைச் சார்ந்த மன்னர்கள் சுவிகாரம் எடுத்துக்கொள்ளலாமென்றும், முஸ்லீம்கள் இஸ்லாமியச் சட்டம் கூறும் முறையில் தங்கள் வாரிசைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாமென்றும் அறிவிக்கப்பட்டது. இருப்பினும் 1858-க்குப் பின்னர், பிரிட்டிஷ் அரசு சுதேச மன்னர்களின் விவகாரங்களில் அவ்வப்போது தலையிட்டுத்தான் வந்திருக்கின்றது.

நாட்டில் அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட்டதாலும், சுதேச மன்னர்களின் தவறான ஆட்சி முறையாலும், வாரிசுகளின் சிம்மாசனப் போட்டிகளினாலும், மன்னருக்கு எதிராக ஏற்பட்ட பொதுமக்களின் கிளர்ச்சிகளினாலும் பிரிட்டிஷ் அரசு, சுதேச மன்னர்களின் விவகாரங்களில் தலையிட நேர்ந்தது. இத்தகைய தலையீட்டால் ஏராளமான அரசர்கள் தங்களுடைய ஆட்சி உரிமைகளை இழந்தனர்.

மன்னர்களின் ஆலோசனைக் குழு (Chamber of Princes): 1919ஆம் ஆண்டுச் சட்டம் நிறைவேறிய பின்னர், இந்திய சுதேச மன்னர்களுக்கென 1921-ல் மன்னர்களின் ஆலோசனைக்குழு ஒன்றைப் பிரிட்டிஷ் அரசு நிறுவியது. இதில் 120 அங்கத்தினர் இடம் பெற்றிருந்தனர். 12 அங்கத்தினர் 127 அரசுகளின் சார்பில் அங்கம் வகித்தனர். மீதியுள்ள 108 அங்கத்தினர், தங்கள் சொந்த அரசின் பிரதிநிதிகளாக இருந்து வந்தனர். 327 சமஸ்தானங்களுக்கு எவ்விதப் பிரதிநிதித்துவமும் அளிக்கப்படவில்லை. சில முக்கிய சுதேச அரசுகள் இந் நிறுவனத்தில் சேரவில்லை.

பொதுவாக, இம் மன்றம் ஆண்டிற்கு ஒருமுறை டெல்லியில் கூடி வந்தது. இதற்கு வைசிராய் தலைமை வகித்து வந்தார். வைசிராய் இல்லாதபோது மன்றத்திற்குத் தலைமை தாங்க தங்களுக்குள் மன்னர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து வந்தனர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மன்னரே மன்றத்தின் நிரந்தரக் குழுவின் தலைவராக இருப்பார். இந்த நிரந்தரக் குழு ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் டெல்லியில் கூடிச் சுதேச அரசுகளை எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகளைப்பற்றி விவாதித்துத் தீர்வு கண்டு வந்தது. ஒவ்வோர் ஆண்டும் நிரந்தரக் குழு, தனது அறிக்கையை அரசர்களின் மன்றத்திற்குச் சமர்ப்பிக்கவேண்டும். சுதேச அரசர்களும் டெல்லி சென்றபோது மகாநாடு கூட்டித் தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வந்தனர். ஆரம்ப நிலையில் சுதேச மன்னர்களின் மன்றத்தையோ, அவர்கள் ஒன்றாகக் கூடுவதையோ பிரிட்டிஷ் அரசு விரும்பவில்லை, இவர்கள் தனித்தனியே இயங்குவதையே விரும்பினர். ஆனால் 1919ஆம் ஆண்டுச் சட்டத்திற்குப் பின்னர், சுதேச அரசுகள் தங்களுடைய மக்கள் நலங்கருதி இணைந்து செயல்படுவதைப் பிரிட்டிஷ் அரசு வரவேற்றது.

ஆங்கிலப் பேரரசின்கீழ் இந்தியா

அயோத்தி, நாகபுரி, ஜான்சி போன்ற சுதேச அரசுகளை ஆங்கிலேயர்கள் வன்முறையில் தங்கள் அதிகாரத்தின்கீழ்க்

கொண்டு வந்ததும், பொதுவாக இந்திய மக்களை அவர்கள் நடத்திய முறையும் 1857-ல் சிப்பாய்க் கலகம் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்களாகும். எனவே, இப் பெருங்கலகத்திலிருந்து இரு முக்கிய விஷயங்களை ஆங்கிலேயர்கள் தெரிந்துகொண்டனர். ஒன்று, சுதேச அரசுகள் எவ்வளவு பின்தங்கிய நிலையில் இருப்பினும், சமூகச் சீர்திருத்தம் என்ற முறையில் ஆங்கிலேயர் தலையிடக் கூடாது என்பதும், மற்றொன்று, தனிப்பட்ட சுதேச அரசுகள் எவ்வளவு பலமற்றவையாக இருப்பினும், அவை ஒன்றுசேர அனுமதிப்பது இந்தியப் பேரரசுக்கு ஆபத்தானது என்பதுமாகும். ஆகவே, சுதேச அரசுகளின் பலத்தைக் குறைக்க ஆங்கிலேயர்கள் பல நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர்.

சுதேச அரசுகளின் ஒத்துழைப்பையும், நல்லெண்ணத்தையும், உருவாக்கும் முயற்சியின் முதல் கட்டமாக விக்டோரியா அரசியின் பிரகடனம் அமைந்திருந்தது. அதன்படி சுதேச அரசுகள் இந்திய அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் ஆகியன பாதுகாக்கப்படும். இனிமேல் எல்லைகளை விரிவுபடுத்தும் எண்ணம் ஆங்கிலேயர்களுக்கு இல்லை. ஆங்கிலேயர்கள் இதுவரை கையாண்டுவந்த உரிமை இழப்புக் கொள்கை (லாப்ஸ் கொள்கை) (Doctrine of Lapse) கைவிடப்படும் என்று தெரிவித்தனர். அத்துடன் சுதேச அரசர்களின் செல்வாக்கு, சலுகைகள், அவர்களின் பாரம்பரியச் சலுகைகள் ஆகியன எவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டா எனவும் தெரிவிக்கப்பட்டது. சுவீகாரம் எடுத்துக் கொள்ளும் பிரச்சினைகளிலும் இந்திய அரசு தலையிடாது என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனல், சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்பட இருக்கும் சுதேச அரசர், இந்திய அரசுக்கு விரோதியாக இருக்கக் கூடாது என்று வலியுறுத்தப்பட்டது. சுதேச அரசுகளின் எல்லைகள் எதுவும் மாற்றி அமைக்கப்படவில்லை.

மைசூர், பெனரஸ், ஸ்வந்தவாடி ஆகிய அரசுகள், சுதேச மன்னர் அதிகாரத்தின்கீழ் இருந்தபோதிலும், இந்திய அரசின் நேரடி நிர்வாகத்தில் இருந்துவந்தன. 1886ஆம் ஆண்டு காஷ்மீர் மன்னர், ரான்பீர் சிங் (Ranbir Singh) இறந்த பின்னர், அவ்வரசு ஆங்கிலேயர்களின் நேர் ஆட்சியின்கீழ் வந்தது. இந்திய அரசின் ஆதரவின்கீழ் 1814 முதல் 1848 வரை இருந்த நேபாளம், ஜங் பகதூர் ராணு (Jung Bahadur Rana) என்பவரின் பெரும் முயற்சியால் மறுபடியும் சுயேச்சை நிலையை அடைந்தது. வெளி நாடுகளின் தொடர்புகளும். தொல்லைகளும் இல்லாதிருந்ததால் நேபாளம் தனித்துச் சுதந்திர நிலையில் இயங்க முடிந்தது. வட

மேற்கு எல்லைப் பகுதியிலுள்ள சித்தரல், ஸ்வாட்திர் ஆகிய இரு அரசுகளும் ஆப்கானிய அரசுக்கு எதிராக வலுப்படுத்தப்பட்டன. இறுதியில் பலுச்சிஸ்தானமும் ஆங்கிலேயரின் செல்வாக்கிற்குள் கொண்டுவரப்பட்டது. ஆனால், பல சுதேச அரசுகள், சிப்பாய்க் கலகத்திற்குப்பின் இந்திய அரசின் பாதுகாப்பு இன்மையால் பலவீனம் அடையத் தலைப்பட்டன.

தபால் தந்தி போக்குவரத்து முறைகள்

குவாலியர், பாட்டியாலா, நாபா, ஜின்ட் போன்ற அரசுகளைத்தவிர, ஏனைய சுதேச அரசுகளில் இந்திய அரசின் தபால், தந்தி அலுவலகங்கள் இயங்கிவந்தன. இந்திய அரசின் ரூபாய் நாணயமும் இப் பகுதிகளில் செலாவணியாக நடைமுறையில் இருந்து வந்தது.

கல்வி நிலையங்கள்

இந்திய அரசின் மாநிலத் தலைநகரங்களில் அமைந்த பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆகியன பல்வேறு பகுதிகளிலுள்ள இளைஞர்களைத் தம்பால் ஈர்த்தன. அத்துடன் வெவ்வேறு பகுதிகளிலுள்ள கல்லூரிகளைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்க வாய்ப்பு ஏற்பட்டது. இந்திய அரசின் நீதி மன்றங்கள், உயர்நீதி மன்றங்கள், ஒருங்கிணைக்கப்பட்ட சட்டங்கள் சுதேச அரசுகளுக்கு இத் துறையில் முன்மாதிரியாக அமைந்தன. இந்திய வருவாய் நிர்வாக முறையும், (British India Revenue Administration) சுதேச அரசுகளில் பின்பற்றப் பட்டன. நிர்வாகச் சீர்கேடான சுதேச அரசுகளை, இந்திய அரசு, அவ்வப்போது எச்சரித்தும் நன்முறையில் இயங்கிவந்த அரசுகளை ஊக்குவித்தும் ஆதரித்தும் வந்தது. சுதேச அரசுகளின் இளவரசர்களுக்கென்று தனிக் கல்லூரி ஒன்றை மேயோ பிரபு (Lord Mayo) ஏற்படுத்தி, அவர்களின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் அக்கறை காட்டினர். பெருவாரியான சுதேச அரசுகளின் முக்கிய நிர்வாக அதிகாரிகளை (திவான்களை) இந்திய அரசே நியமித்து வந்தது. பாட்டியாலா மகாராஜா, ராஜா சர் திங்கர் ராவ், ராஜா சர் டி. மாதவராவ் போன்றவர்களை அரசியல் ஆலோசனைச் சபையில் அங்கத்தினர்களாக நியமித்து இந்திய அரசு பெருமைப்படுத்தியது.

பொறுப்பற்ற முறையில் நிர்வாகம் செய்துவந்த பரோடா மன்னர், மல்கார் ராவ் கெய்க்வார் (Malhar Rao Gaekwar) என்பவருக்கு எதிராக இந்திய அரசு விசாரணைக் குழு ஒன்று நியமித்து, அவரைப் பதவி நீக்கம் செய்தது சுதேச அரசுகளின் வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. இவர் இந்திய அரசுக்கு உற்ற

நண்பராகவும் ஆதரவாளராகவும் பல சிறிய அரசுகளுக்குத் தலைவராகவும் இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது நேர் வாரிசுக்கு அரசர் பதவி இல்லாமலும் செய்துவிட்டனர். இச் செயல் ஏனைய மன்னர்களுக்கு ஒரு படிப்பினையாகவும் அமைந்தது. தங்கள் அரசில் பொறுப்புள்ள ஆட்சியை ஏற்படுத்த வேண்டுவதன் அவசியத்தைச் சுதேச மன்னர்கள் உணர்ந்தனர். நீண்ட நாட்களாகச் சச்சரவில் இருந்துவந்த மைசூர் அரசு, 1881ஆம் ஆண்டில் அதன் உரிமையாளரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. சுதேச அரசுகளால் நிறுவப்பட்டிருந்த ராணுவங்களும் மாற்றி அமைக்கப்பட்டுப் பேரரசப்பணி இம்பீரியல் சேவை (Imperial Service) என்ற பெயரில் இந்திய அரசிற்குப் பேருதவியாக இருக்கும்படி அமைக்கப்பட்டன.

சுதேச மன்னர்களின் பலம் ஒடுக்கப்படுதல்

இவ்வாறு சுதேச அரசுகளின் நிர்வாகம், கல்வி, தபால் தந்தி, ரயில் போக்குவரத்து, ராணுவம் ஆகிய துறைகளில் இந்திய அரசு தலையிட்டு அவர்களை இந்தியப் பேரரசுக்கு உறுதுணையாக அமையும்படி செய்தனர். கர்சான் பிரபுவின் (Lord Curzon, 1898—1905) காலத்தில் சுதேச அரசர்கள், இந்தியப் பேரரசின் நிர்வாக ஏஜண்டுகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவர்களுக்கென எவ்வித அதிகாரமும் இல்லை என்ற அளவுக்கு அவர்களின் பலமும், அதிகாரமும் குறைக்கப்பட்டன. சுருங்கக் கூறின், பரம்பரை அதிகாரிகள் (hereditary officers) என்ற அவலநிலைக்கு உள்ளாக்கப்பட்டனர். வைஸ்ராயின் உத்தரவின்றிச் சுதேச மன்னர்கள் வெளியிடங்களுக்குச் செல்லக்கூடாது; ஒரு குறிப்பிட்ட சீருடை தான் அணியவேண்டும் என்ற கட்டுப்பாடுகளையெல்லாம் விதித்திருந்தனர். இத்தகைய கட்டுப்பாடுகளின் காரணமாகச் சுதேச அரசர்களினிடையே இந்திய அரசின்மீது வெறுப்பும் வேற்றுமை உணர்ச்சியும் ஏற்பட்டன. இங்ஙனம் கர்சான் பிரபுவின் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்களின் குழுவிற்குப் பரோடா மன்னர், மூன்றாவது சாயாஜி ராவ் (Maharaja Sayaji Rao, III) என்பவர் தலைமை தாங்கினார். இதற்கிடையில் இந்தியத் தேசிய இயக்கம் நாட்டில் வலுவடைந்ததால், மறுமுறையும் ஆங்கிலேயர் சுதேச அரசுகளின் ஆதரவை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் பல கட்டுப்பாடு விதிகளை இந்திய அரசு தளர்த்த நேர்ந்தது.

சுதேச அரசுகளின் உரிமைகள் பறிக்கப்படுதல்

கீழ்க்காணும் உதாரணங்களால் ஆங்கிலேயர்கள் சுதேச சமஸ்தான மன்னர்களை எவ்வாறு நடத்தி, அவர்களின் உடைமை

களையும் உரிமைகளையும் பறித்தார்கள் என்பது நன்கு விளங்கும். விக்டோரியா பேரரசியின் பிரகடனத்தின்படி இந்திய அரசு, சுதேச அரசர்களின் எல்லைகளை இனிக் கவரப்போவதில்லை என்று 1858ஆம் ஆண்டில் அறிவித்திருந்தும் நடைமுறையில் நிர்வாகச் சீர்கேடு, பொருளாதாரச் சீர்குலைவு, நாட்டின் பொதுப் பாதுகாப்புப் போன்ற காரணங்களைச் சுட்டிக் காட்டிச் சுதேச அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு இந்திய அரசு, சுதேச அரசுகளின் எல்லைகளைக் கவர்ந்துகொண்டது. இவ்வாறு தங்கள் உடைமைகளை இழந்த சுதேச மன்னர்கள், இந்திய தேசிய இயக்கத்திற்குப் பலவகையில் ஆதரவு அளிக்கத் தலைப்பட்டனர். இவர்களின் ஒத்துழைப்பால் தேசிய இயக்கம் அதிவேகமாக வளர்ச்சியுற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பரோடா சமஸ்தானம்

பரோடா அரசை ஆண்டு வந்தவர் மல்கார் ராவ் கெய்க்வார் (1870—75) என்பவர் ஆவர். இவர் நீண்ட நாட்களாக இந்திய அரசின் நண்பராகவும் ஆதரவாளராகவும் இருந்தார். பல சிறிய அரசுகளுக்குத் தலைவராகவும், பலரால் மதிக்கத்தகுந்த குலப் பெருமை வாய்ந்தவராகவும் விளங்கினார். இவர், தனது உறவினர் களைச் சித்திரவதை செய்ததாகவும், வியாபாரிகளை வற்புறுத்தி வரி வசூல் செய்ததாகவும், அச் சமஸ்தானத்தின் ரெசிடெண்டாக (நிலையராக) இருந்த கர்னல் ஃபாய்ரி (Col. Phayre) என்பவர், இந்தியக் கவர்னர் ஜெனரலுக்குத் தெரிவித்தார். அதன் விளை வாக, மல்கார்ராவ் கெய்க்வார், ஒன்றரை ஆண்டுக்குள் அக்குறை களை நீக்கி, நாட்டின் நிர்வாகத்திலும் அவரது நடத்தையிலும் மாறுதல் காட்டவேண்டும் என்று கவர்னர் ஜெனரல் நார்த்புருக் பிரபுவால் (Lord Northbrook) எச்சரிக்கப்பட்டார். 1874ஆம் ஆண்டு வைரக்கல் பொடியை உணவில் கலந்து பரோடா அரசின் ரெசிடெண்ட் அதிகாரியைக் கொலைசெய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டைக் கூறி, மல்கார் ராவ் கெய்க்வார் கைது செய்யப் பட்டார். இக் குற்றச்சாட்டைப் பரிசீலிக்க விசாரணைக் குழு ஒன்று வங்காளத்தின் உயர்நீதிபதியின் தலைமையில் நியமிக்கப் பட்டது. இவ் விசாரணைக்குழுவில் மூன்று ஆங்கில அதிகாரிகளும் ஜெய்ப்பூர், குவாலியர் மன்னர்கள், ஹைதராபாத் நைசாமின் அமைச்சர் ஆகிய மூன்று இந்தியர்களும் நியமிக்கப்பட்டிருந் தனர். இவர்கள் மூவரும் கெய்க்வாரின்மீது சாட்டப்பட்ட குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று தீர்ப்புக் கூறினர்.

நிர்வாகச் சீர்கேடு, நடத்தைக் குறைவு போன்ற குற்றங் களைக் கெய்க்வாரின்மீது சுமத்தி, அவரை அரச பதவியிலிருந்து

நீக்கினர். மேலும், கெய்க்வாரின் நேர் வாரிசுக்கு அரச பதவி யைக் கொடுக்காமல், ஆங்கிலேயர் தேர்ந்தெடுத்த அரச குடும் பத்தைச் சேர்ந்த மற்றொருவருக்கு அளித்தனர். சாயாஜுராவ் (Sayaji Rao) என்ற சிறுவனைப் பரோடாவின் மன்னனாக்கி, அவனுக்கு முடிசூட்டினர். சர். டி. மாதவராவ் என்பவர், சாயாஜி ராவிற்கு ரீஜண்டாகவும் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். இவ்வாறு சிறிய குற்றங்களைச் சுட்டிக்காட்டி அரச பதவியைப் பறித்த செயல் கொடுமையிலும் கொடுமை என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளார்கள். பரோடா மன்னரின் பதவி நீக்கம், ஆங்கிலேயர்கள் எவ்வாறு சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னரும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டுச் சுதேச மன்னர்களின் உரிமைகளைப் பறித்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. 1857ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிப்பாய்க் கலகம், சுதேச மன்னர்களின் உள்நாட்டு விவகாரங்களில் ஆங்கிலேயர்கள் தலையிட்டதன் விளைவுதான் என்பது இக் கட்டத்தில் நினைவுகூரத் தகுந்ததாகும்.

குவாலியர் (Gwalior)

1857ஆம் ஆண்டுக்குமுன், குவாலியரை ஆண்ட மன்னர் களில் தௌலத் ராவ் சிந்தியா (Dawlat Rao Sindhia) என்பவர் முக்கியமானவர். ஆங்கிலேயர், இவரிடம் 1817ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் நாள் செய்துகொண்ட உடன்படிக்கை யின்படி, அவர் ஆங்கிலேயரின் மேலாணையை ஏற்று, அவர் களுடைய அதிகாரத்திற்கு அடங்கி நடக்கும் ஒரு சிற்றரசராகவே இருக்கவேண்டும் என்றும், அத்துடன் அவர்கள் குறிப்பிட்ட எண் ணிக்கையுடைய படையை அவர்கள் விரும்பும் இடத்தில் வைத் திருக்கவேண்டும் என்றும், அங்கிருந்து அவர்களின் உத்தரவின்றி அப் படையை வெளியேற்றக்கூடாது என்றும் ஆணை பிறப்பித் தனர். அசிர்கார், ஹிண்டியா ஆகிய இரு கோட்டைகளையும் மன்னரது நன்னடத்தைக்கு ஈட்டுப் பொருளாக வைக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டனர். 1818ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் நாள் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி அவரது எல்லைப்பகுதிகளில் சிலவற்றை ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்த தோடு, அசிர்கார் கோட்டையை நிரந்தரமாகவே அவர்களுக்கு அளித்துவிட்டார். ராஜபுதன பகுதியிலுள்ள சில அரசுகளின் ஆண்டு வருவாயையும் ஆங்கிலேயருக்குக் கொடுக்கவேண்டும். அதற்குப் பின்பும், தௌலத் ராவ் சிந்தியா இறந்த பின்னர், குவாலியர்மீது ஆங்கிலேயர் படையெடுத்துச் சென்று ஜெயாஜி ராவ் என்பவருடன் 1844ஆம் ஆண்டில் ஓர் உடன்படிக்கை செய்து

கொண்டனர். அதன்படி ஆண்டிற்கு 18 லட்சம் ரூபாய் வருவாய் உள்ள பகுதிகளை அவர் ஆங்கிலேயர்களுக்குக் கொடுக்க நேர்ந்தது. அத்துடன் அவரது குதிரைப்படை 6,000 ஆகவும், காலாட்படை 3 000 ஆகவும் குறைக்கப்பட்டன.

ஜெயாஜி ராவ் சிந்தியா, சிப்பாய்க் கலகத்தின்போது நடுநிலை வகித்ததன் காரணமாக, இந்திய அரசு, அவருடன் மற்றோர் உடன் படிக்கையை 1860ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் நாள் செய்துகொண்டது. அதன்படி அவருக்கு ஆங்கிலேயர் 3 லட்சம் ரூபாய் வருவாய் உள்ள இடத்தைத் திருப்பிக் கொடுத்ததோடு சுவீகாரம் எடுத்துக்கொள்ளவும் ராணுவ எண்ணிக்கையைச் சிறிது அதிகப்படுத்திக் கொள்ளவும் (3,000-லிருந்து 5,000 ஆக) அனுமதித்தனர். 32 பீரங்கிகளிலிருந்து 36ஆக உயர்ந்தன. இப் படைகளைக் கண்காணிக்க உதவிப்படை ஒன்றும் குவாலியரில் நிறுவப்பட்டது.

குவாலியரின் வெளிநாட்டுக் கொள்கையும் ராணுவமும் ஆங்கிலேயர்களால் கண்காணிக்கப்பட்டு வந்தன. உள்நாட்டுப் பாதுகாப்பிற்காகக் காவல்படை ஒன்றை நிறுவுவதற்கு மன்னர், ஆங்கிலேயரிடமிருந்து அனுமதி பெற்று இருந்தார். இந்தியக் கவர்னர் ஜெனரலின் மத்திய இந்தியப் பகுதியின் ஏஜன்டு மேஜர் மீட் (Major Meade) என்பவர், காவல் படையைப் பார்வையிட்ட போது, காவல் வீரர்கள் திறமையாகப் பயிற்சி செய்ததைப் பார்த்தார். இவர்களை எந்த நேரத்திலும் ராணுவ வீரர்களாக மாற்றமுடியும் என்று கருத்துத் தெரிவித்தார். மேலும் மன்னரின் போக்கு ஆங்கிலேயருக்கு எதிராக மாறி இருக்கிறது எனவும் அவர் அறிவித்தார். குவாலியர் மன்னர், தனது போலீஸ் படையிலுள்ள ஒரு சிலரை நிரந்தர ராணுவத்தில் சேர்த்துக்கொண்டு மற்றவர்களைக் கலைத்துவிடவேண்டும் என்றும், உள்நாட்டுப் பாதுகாப்பில் இருந்த பாதுகாப்புப் படை லட்சத்திற்கு அதிகப் படக்கூடாது என்றும், ராணுவம் தலைநகரிலிருந்து அகற்றப்பட்டு நாட்டின் பல இடங்களில் வைக்கப்படவேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சர் ஹ்யூக் ரோஸ் என்பவர், 1858ஆம் ஆண்டு குவாலியரைக் கைப்பற்றிக் குவாலியர் கோட்டையில் முகாம் அமைத்துத் தங்கி யிருந்தார். 1860ஆம் ஆண்டு சிந்தியாவுடன் ஏற்பட்ட உடன் படிக்கையின்படி குவாலியர் கோட்டையிலுள்ள ஆங்கிலப் படை வெளியேற்றப்படும் என்றும், அக் கோட்டை சிந்தியாவிடம் திருப்பிக் கொடுக்கப்படும் என்றும் கானிங் பிரபு (Lord Canning)

வாக்குறுதி அளித்தார். இதை அவருக்குப் பின் வந்த எல்ஜின் பிரபுவும் (Lord Elgin) வலியுறுத்தினர். ஆனால் ஆங்கிலேயர், குவாலியர் கோட்டையிலிருந்து 26 ஆண்டுகளுக்குப் பின்பே (1886), வெளியேறினர். இதிலிருந்து ஆங்கிலேயர் சுதேச அரசர்களின் விஷயத்தில் வரன்முறையற்றுத் தங்கள் விருப்பம்போல் சுய நலம் கருதி நடந்துகொண்டனர் என்று தெரிகின்றது.

மைசூர் (Mysore)

1831ஆம் ஆண்டு, மைசூர் மன்னரை நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாகப் பெண்டிங் பிரபு, அரச பதவியிலிருந்து நீக்கி, இரு ஆணையாளர்களின்மூலம் நிர்வாகம் நடைபெற ஏற்பாடு செய்தார். நிர்வாகச் செலவிற்கென வருவாயில் நான்கில் ஒரு பகுதியை ஆங்கிலேயர் பெற்று வந்தனர். 1834ஆம் ஆண்டு மறுபடியும் கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங்க் பிரபு (Lord Bentinck), மைசூருக்குச் சென்று, மைசூர் மன்னர் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைக்காக நகார், சித்தல்ரக், பெங்களூர் ஆகிய மூன்று மாவட்டங்களையும் இந்திய அரசிற்குக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டார்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட மைசூர் மன்னர், தனது அரசைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று பலதடவை கேட்டுக் கொண்டார். 1862ஆம் ஆண்டு இந்தியக் கவர்னர் ஜெனரலாக இருந்த கானிங் பிரபு, மைசூர் அரசை மன்னரிடம் திருப்பிக் கொடுக்க மறுத்து விட்டார். அதே ஆண்டு மைசூர் மன்னர், இங்கிலாந்து மன்னரிடமும் முறையிட்டுக் கொண்டார். அவரும் மறுத்து விட்டார். 1864ஆம் ஆண்டு சுவிகாரம், எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற மைசூர் மன்னரின் விருப்பத்தையும் முதலில் நிராகரித்துப் பின்னல் அதற்கு அனுமதி வழங்கினர், 1868ஆம் ஆண்டு மைசூர் மன்னர் இறந்தபின், அவ்வரசை அவரது சுவீகாரப் புதல்வருக்கு வயது வந்தபின் திருப்பிக் கொடுப்பதாக இந்திய அரசு அறிவித்தது. அதற்கிணங்க 1881ஆம் ஆண்டில் சுவீகாரப் புதல்வர் வயது அடைந்தபோது ரிப்பன் பிரபு (Lord Ripon), மைசூர் அரசைத் தானம் கொடுப்பது போன்று புதிய மன்னரிடம் சேர்ப்பித்தார். இதற்கிடையில் மைசூர் அரசு, இந்திய அரசின் நேரடி நிர்வாகத்தில் சுமார் 50 ஆண்டுகளாக இருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மைசூர் மன்னர், இந்திய அரசுக்கு நன்றியுள்ளவராக இருக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. சுதேச அரசின் ராணுவ

வீரர்களின் எண்ணிக்கையும் குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மிகக் கூடாது; புதிய கோட்டை அமைப்பதோ, பழைய கோட்டை களைப் பழுது பார்ப்பதோ இந்திய அரசின் அனுமதி இன்றி நடைபெறக்கூடாது; வெளிநாட்டு உறவும் இந்திய அரசின் முன்அனுமதி பெற்றே நடைபெறவேண்டும்; ரயில், தபால், தந்தி போன்றவற்றுக்கு வசதி செய்துகொடுக்க வேண்டும். இந்திய நாணயம் மைசூர் அரசில் புழக்கத்தில் இருக்கவேண்டு மென்றும் கட்டாயப்படுத்தப்பட்டது. நீதி நிர்வாகம், பொது நிர்வாகம் போன்றவற்றில் மாறுதல் ஏற்படக் கூடாது. ஆங்கில நிர்வாகக் காலத்தில் அளிக்கப்பட்ட நிலப்பட்டா, நன்கொடை, நிலவருவாய்த் திட்டம் போன்றவற்றில் எவ்வித மாறுதல்களையும் உண்டாக்கக்கூடாது. அவ்வப்போது இந்தியக் கவர்னர் ஜெனரல் நிர்வாக மேம்பாட்டின்பொருட்டு அளிக்கும் ஆலோசனைகளை மைசூர் மன்னர் ஏற்றுக்கொள்ளவேண்டும். இவை அனைத்தும் நிறைவேற்றப்படாவிட்டால் மறுமுறையும் மைசூர் அரசின் நிர்வாகத்தை இந்திய அரசு ஏற்கும் என்று அறிவித்திருந்தனர்.

மணிப்பூர் (Manipur)

1890ஆம் ஆண்டு மணிப்பூர் மன்னர், அவரது படைத்தலைவ ரான திகந்திரஜித் என்பவரால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். படைத்தலைவருக்கு உதவியாக மணிப்பூர் மன்னரின் சிற்றரசர் களும் வேறு பல தலைவர்களும் ஆதரவு அளித்தனர். அந்த அர சியல் பிரச்சினையை விசாரித்துத் தீர்வு காணும்பொருட்டு, இந்திய அரசு குயின்டன் (Quinton) என்பவரை அனுப்பியது. குயின்டன் என்பவர், அஸ்ஸாமின் கமிஷனராக (ஆணையாளராக) இருந்தார். குயின்டன் ஒரு சில பாதுகாப்பு அதிகாரிகளுடன் மணிப்பூருக்குச் சென்றார். இவரது வரவை விரும்பாத படைத் தலைவர் எதிர்ப்புத் தெரிவித்ததோடல்லாமல், இவர்களுடன் போரும் நடத்தினர். பிரச்சினையைச் சமாதான முறையில் தீர்ப்பது நலமெனக் கருதி சமாதான அரங்கிற்கு அழைத்தனர். ஆனால், எதிர்பாரத வகையில் ஆங்கில அதிகாரிகளையும், ஆணை யாளர் குயின்டனையும் சேனாபதி தாக்கிப் படுகொலை செய்தார். இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் மணிப்பூர் அரசின்மீதும், சேனாபதிமீதும் நடவடிக்கை எடுப்பது உசிதமில்லை என்று இந்திய அரசு கருதியது. ஆனால், சிறிது காலத்திற்குப்பின், ஆங்கிலப் படை ஒன்று மணிப்பூருக்குச் சென்று மணிப்பூரைத் தாக்கிக் கைப்பற்றியது. சேனாதிபதியால் நியமிக்கப்பட்ட மன்னரை நீக்கி விட்டு, அவருக்குப் பதிலாக முன்னாள் மன்னரின் மகனை மன்னராக்கியது. அவர் வயது வரும்வரை இந்திய அரசே

மணிப்பூரின் நிர்வாகத்தை ஏஜன்ட் ஒருவரின் மூலமாகக் கவனித்து வந்தது. இத்தகைய அரசியல் மாற்றத்திற்குக் காரணமாக இருந்து, ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்த சேனுதிபதி கைதியாக்கப்பட்டுக் கொல்லப்பட்டார், கூர்க், கர்நூல், போன்ற சுதேச அரசுகளும் ஆங்கில ஆதிக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்ததற்காக இந்திய அரசுடன் வன்முறையில் சேர்க்கப் பட்டன.

காஷ்மீர் (Kashmir)

காஷ்மீர் மன்னர் குலாப்சிங் (Gulab Singh) என்பவர், ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் இந்திய எல்லைக்கு அப்பாலும் பரவ வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர். இல்கிட் பகுதியில் ஆங்கிலேயரின் செல்வாக்குப் பரவ வழிவகை செய்ததன் காரணமாகச் சித்ரல், சில்லாஸ், குன்ஷா, நகார் போன்ற பகுதிகள் இவரது செல்வாக்கின்கீழ் வந்தன. 1886ஆம் ஆண்டில் காஷ்மீர் மகாராஜா ரான்பீர் சிங் (Maharaja Ranbir Singh) என்பவர் இறந்தார். இவருக்குப் பின்னர், பிரதாப் சிங் என்பவர் பட்டத்திற்கு வந்தார். இவரது காலத்தில் ஏற்பட்ட சிறிய அரசியல் குழப்பத்தைக் காரணமாக வைத்துக் காஷ்மீரத்தை 1889-ல் இந்திய அரசுடன் ஆங்கிலேயர் இணைத்துக்கொண்டனர். இதைப் போன்று சிக்கிம், பூட்டான் ஆகிய நாடுகளையும் இந்திய அரசின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தனர்.

ஹைதராபாத் (Hyderabad)

1798ஆம் ஆண்டு ஹைதராபாத் சமஸ்தானம் ஆங்கிலேயர்களின் துணைப்படை முறையை ஏற்றுக்கொண்டது. இதைத் தொடர்ந்து 1800ஆம் ஆண்டு ஹைதராபாத் நைசாமுடன் இந்திய அரசு உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டது. இதன் காரணமாக இந்திய அரசின் தலையீடு அதிகமாயிற்று. நைசாம், தமது முதலமைச்சரை நியமிப்பதுகூட இந்திய அரசைக் கேட்டுத் தான் நியமிக்க வேண்டும் என்ற நிலை 1808ஆம் ஆண்டிலேயே ஏற்பட்டுவிட்டது, சிக்கந்தர் ஷா (1803—1829) என்பவர், ஹைதராபாத்தை ஆண்டபோது நாட்டில் நிர்வாகச் சீர்கேடு ஏற்பட்டுக் குழப்பம் மேலிட்டிருந்தது. கொள்ளையும் கொலையும் மிகுந்திருந்தன, இந் நிலையைப் போக்க, இந்திய அரசு தலையிட்டு அமைதி ஏற்படுத்தியது. ஆனல், இவருக்குப் பின்வந்த நாசிர் உத் தௌலா (Nasir-ud-Daula) என்பவர், இந்திய அரசின் தலையீட்டை வெறுத்து அதை அறவே நீக்கினர். இந் நிலை சிறிது காலமே நீடித்தது.

ஹைதராபாத் நைசாம், தன் ராணுவத்தின் பராமரிப்பின் பொருட்டுக் கம்பெனியாரிடமிருந்து கடன் பெற்றிருந்தார். இது, 1853ஆம் ஆண்டு 45 லட்சம் ரூபாயாக உயர்ந்தது. இக் கடனைத் தீர்க்கும்பொருட்டுக் கவர்னர் ஜெனரலுக்கும் நைசாமுக்கும் 1853ஆம் ஆண்டு மே மாதம் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. இதன்படி ஹைதராபாத்தின் ராணுவம், 5,000 வீரர்களையும் 2,000 குதிரைப்படைகளையும் நான்கு பீரங்கிக் கம்பெனிகளையும் உடையதாக இருக்கவேண்டும். இதன் அதிகாரிகள் அனைவரும் ஆங்கிலேயர்களாகவே இருக்கவேண்டும். அத்துடன் இந்த ராணுவம் ஆங்கிலேயரின் துணைப்படையுடன் இணைந்து பணியாற்றவேண்டும் என்றும் பணிக்கப்பட்டது. இம் முறையினால் ஹைதராபாத் ராணுவம், இறுதியாக ஆங்கிலேயரின் அதிகாரத்தின்கீழ் வந்தது, நைசாம், ராணுவத்தைத் தனது விருப்பம்போல் பயன்படுத்தாதவாறு கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி பிரபு செய்துவிட்டார். ராணுவ வீரர்களின் ஊதியத்தின்பொருட்டுப் பீரார் (Berar) என்ற மாவட்டத்தை நைசாம், ஆங்கிலேயருக்கு அளித்தார். இஃது ஆண்டுதோறும் சுமார், 50 லட்சம் ரூபாய் வருவாய் அளிக்கக்கூடிய பகுதியாகும். இதன் வரவுசெலவை ஆண்டுதோறும் நைசாமுக்குத் தெரிவிக்கவேண்டும் என்ற நிபந்தனை இருந்த காரணத்தால், பிற்காலத்தில் சுமார் 40 ஆண்டுகள்வரை பல கசப்பான நிகழ்ச்சிகள் தோன்றின. கம்பெனி ஆட்சியிலிருந்து இங்கிலாந்து அரசின் நேர் ஆட்சிக்கு இந்தியாவின் நிர்வாகம் மாற்றப்பட்டபின், ஆட்சி முறையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. ஆனால் ஹைதராபாத்தின் பரப்பு, மக்கள் தொகை, இருப்பிடம் ஆகியவற்றின் காரணமாக மற்றைய அரசுகளைவிடச் சிறிது சுயேச்சையுடன் இயங்க இந்திய அரசு அதனை அனுமதித்திருந்தது. இருப்பினும், ஆங்கில ரெசிடென்டு அதிகாரியின் விருப்பமே இங்குச் செயல்படுத்தப்பட்டது.

நைசாம், தமது அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கவோ, பதவி நீக்கம் செய்யவோ அனுமதிக்கப்படவில்லை. சர். சலார் சங் (Sir Salar Jung) என்ற ஹைதராபாத்தின் முதலமைச்சரைக் கருத்து வேறுபாட்டின் காரணமாக நைசாம், பதவி நீக்கம் செய்தபோது இந்திய அரசு தலையிட்டுச் சலார் சங்கை மீண்டும் அமைச்சர் பதவியில் அமர்த்தியது. தபால், தந்தி போக்குவரத்துகளுக்கு இடையூறாக இருந்த கொள்ளைக் கூட்டத்தினரையும் கடிதங்களைத் திருடுபவர்களையும் தண்டிக்கும் வகையில் எல்லாச் சுதேச அரசுகளுக்கும் அபராதம் விதித்ததுபோல இந்திய அரசு, ஹைதராபாத்திற்கும் விதித்தது. ஆயுதங்களைப்

பொறுத்தவரை ஆங்கில ராணுவம் உபயோகப்படுத்தி வந்த என்ஃபீல்ட் துப்பாக்கியை (Enfield Riffles) சுதேச அரசர்களின் ராணுவம் பொதுவாக உபயோகிக்கக் கூடாது. நைசாமின் ராணுவமும் இதைப் பயன்படுத்தக்கூடாது என்று வலியுறுத்தப் பட்டது. உள்நாட்டில் செய்த சக்தி குறைவான ஆயுதங்களையே பயன்படுத்த வேண்டும் என்று இந்திய அரசு வற்புறுத்தியது. நைசாம், இந்திய அரசின் அனுமதியின்றி எந்தச் சுதேச அரசுடனோ அல்லது வெளிநாட்டு அரசுடனோ தொடர்பு கொள்ளக்கூடாது என்று கட்டுப்பாடு செய்யப்பட்டிருந்தார். 1874ஆம் ஆண்டு சர் சலார் சங், நைசாம் அரசில் இருப்புப்பாதை அமைக்க இங்கிலாந்தில் பணம் சேர்க்க முயன்றார். வெளியார்களின் பணத்துடன் ஹைதராபாத்தில் இருப்புப்பாதை அமைத்தால், ஆங்கிலேயர்களின் செல்வாக்கு வெகுவாகப் பாதிக்கப்படும் என்று இந்திய அரசு இவ்வேலை நிறைவேறாதவாறு தடுத்துவிட்டது.

காலாட் அரசு (Kalat)

காலாட் (Kalat) என்பது, பலுச்சிஸ்தானத்தில் உள்ள ஒரு சிறிய அரசு. இதன் மன்னர் மிகவும் கொடியவர். இவர் வாசிர் (Vizier) என்று வழங்கப்பட்ட தனது முதல் அமைச்சரையும் அவரது மகனையும் கொடுமையாகக் கொலை செய்தார். இவ்விவகாரத்தில் இந்திய அரசு தலையிட்டுக் காலாட் மன்னரை (Khan) 1829ஆம் ஆண்டில் பதவி நீக்கம் செய்து, அவர் மகனை அரச பதவியில் அமர்த்தியது.

1926ஆம் ஆண்டு இந்தூர் (Indore) சமஸ்தானத்தின் மன்னர் கொலைக் குற்றத்தில் ஈடுபட்டார் என்று விசாரணைக் குழு ஒன்று அமைத்து, அவரை ஆங்கிலேயர் விசாரிக்க முற்பட்டனர். இதன் காரணமாக மன்னர், தனது அரச பதவியிலிருந்து விலகினார். ஆள்வார் (Alwar) என்ற சுதேச அரசின் நிர்வாகம் செம்மையாக நடைபெறவில்லை என்றும், அங்கு ஏற்பட்ட விவசாயிகளின் கலகத்தை அடக்க இயலவில்லை என்ற காரணங்களையும் காட்டி, அவரை 1933ஆம் ஆண்டு அவரது நாட்டிலிருந்து 15 ஆண்டுக் காலம்வரை வெளியேற்றினர். இவ்வாறு கம்பெனி ஆட்சிக் காலத்தில் சம அந்தஸ்தில் இருந்து உடன்படிக்கைகள் செய்து கொண்ட சுதேச அரசுகள், விக்டோரியா பேரரசியின் பிரகடனம் வெளியிட்டபின், கப்பம்கட்டும் சிற்றரசர்கள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். இத்தகைய நிலை இந்தியா சுதந்திரம் அடையும் வரை நீடித்திருந்தது. 600-க்கு மேற்பட்ட அரசுகள் சர்தார் வல்லபாய் பட்டேலின் பெரும் முயற்சியால் இந்திய

அரசுடன் இணைந்து ஐக்கிய இந்தியாவை உருவாக்கின. இவற்றில் ஹைதராபாத், திருவிதாங்கூர், காஷ்மீர் போன்ற பெரிய சமஸ்தானங்கள் தனித்து இயங்க விரும்பியபோதிலும் இறுதியில் இந்தியாவுடன் இணைந்தன.

2. 1858-லிருந்து 1947 வரை வெள்ளை மாளிகையும் இந்திய அரசும்

(White Hall and the Government of India)

(அ) இங்கிலாந்து அரசு (Home Government)

அதிகாரம் மாற்றப்படுதல் *(Transfer of Power)*

1857ஆம் ஆண்டில் நிகழ்ந்த சிப்பாய்க் கலகத்தின் விளைவாக இதுகாறும் இருந்துவந்த கம்பெனி ஆட்சி நீங்கி, இங்கிலாந்தின் நேர் ஆட்சியின்கீழ் இந்தியா கொண்டு வரப்பட்டது. இதற்குக் காரணம் இங்கிலாந்தில் பொதுமக்கள் இந்திய அரசின்மீது காட்டி வந்த அக்கறையே ஆகும். கம்பெனியார்களின் ஊழல்களையும் நிர்வாகச் சீர்கேடுகளையும் இங்கிலாந்துப் பொதுமக்கள், பிரதமர் பாமர்ஸ்டனிடம் (Lord Palmerston) சுட்டிக் காட்டினர். அதன் விளைவாக, இந்திய நிர்வாகத்தை இங்கிலாந்து ஏற்றுக்கொண்டது. ஆனால், கிழக்கிந்திய கம்பெனிக் குழுத் தலைவரும் (Chairman) துணைத் தலைவரும் (Deputy Chairman) கம்பெனி நிர்வாகம் இங்கிலாந்து அரசின் வசம் செல்லக்கூடாது என்று இறுதிவரை போராடினர். சிப்பாய்க் கலகம் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்தறியாது திடீரென அதிகார மாற்றம் செய்வது முறையன்று என்று எடுத்துக் கூறினர். கம்பெனியின் சார்பில் இது சம்பந்தமான மனு ஒன்றைக் கம்பெனி நிர்வாகிகளும், இயக்குநர்களும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தனர். இம் மனுவை ஜான் ஸ்டுவர்ட்டு மில் (John Stuart Mill) என்ற அறிஞர் தயாரித்துக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கம்பெனியின் ஆட்சி, இந்தியாவில் சீர்குலைவதற்கு இங்கிலாந்து அரசவை நியமித்த நிர்வாகக் குழுத் தலைவரே காரணம் என்று கூறப்பட்டது. அந்த வகையில் பிரிட்டிஷ் அரசுதான் குற்றவாளியே தவிர, கம்பெனியன்று என்று சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், கம்பெனியாரின் மறுப்பு ஏற்கப்படவில்லை. பாராளுமன்றத்தில் அதிகாரமாற்றச் சட்டம் 1858ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டம் 1858ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இரண்டாம் நாள் அரசியாரின் ஒப்புதலைப் பெற்றது. இதன்படி அரசியின் பேரால் இந்தியா ஆளப்படும் என்றும், அதன்

நிர்வாகப் பொறுப்பை இந்திய அமைச்சரும் அவரது ஆலோசனைக் குழுவும் ஏற்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.



படம் 5.

அரசாள்பவர் (Crown)

1858ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்தியச் சட்டத்தின்படி இதுகாறும் இந்தியாவில் கம்பெனி ஆட்சியாளர்களால் வென்று

நிர்வகிக்கப்பட்டு வந்த எல்லா எல்லைகளையும், நேரடியாக இங்கிலாந்து அரசு ஏற்றுக்கொண்டது. விக்டோரியா அரசியாரின் பெயரில் இவ் வெல்லைகளை இந்திய அமைச்சரும் அவருடன் 15 செயலாளர்களும் இணைந்து நிர்வகித்து வருவார்கள். இந்திய அமைச்சர் (Secretary of State for India), இங்கிலாந்து அரசு அமைச்சர்களின் (Cabinet Ministers) அந்தஸ்துக்குச் சமமானவர்கள். இங்கிலாந்து அரசியே இந்தியாவின் தலைமை ஆளுநரையும் (Governor General) மாநிலங்களின் ஆளுநர்களையும் (Governors of Presidencies) நியமிப்பார். கம்பெனியாரின் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள், உடன்படிக்கைகள், பொறுப்புகள் அனைத்தும் நீடிக்கும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவின் நிர்வாகத்தை இங்கிலாந்து அரசி விக்டோரியா அம்மையார், நேரடியாக ஏற்றுக்கொண்ட விபரம், 1858ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதியில் எல்லா மாவட்ட நகரங்களிலும் வாசிக்கப்பட்டது. இஃது இந்தியர்களின் உரிமைச் சாசனமென்று சுமார் 50 ஆண்டுகள்வரை கருதப்பட்டு வந்தது. கானிங் பிரபுவை (Vis Count Canning) இந்தியாவின் முதல் வைசிராயாக விக்டோரியா அரசியார் நியமித்தார்.

பேரரசியின் பேரறிக்கை

1858ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதியன்று அலகாபாத்தில் நடந்த ஒரு பெரும் விழாவில் விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை இந்தியாவில் முதல் முறையாக வெளியிடப்பட்டது. அதில்,

(1) இந்திய சிற்றரசர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளும் ஒப்பந்தங்களும் பேரரசியால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதே போன்று அவர்களும் தங்கள் கடமைகளை உணர்ந்து நடந்துகொள்ளவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

(2) இந்திய மன்னர்களின் உரிமைகள் யாவும் உறுதிப்படுத்தப்பட்டன. அவர்களுக்கு வாரிசு இல்லாவிட்டால் தத்து எடுத்துக்கொள்ளலாம் என்று இப் பேரறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இம் மன்னர்களின் உள்நாட்டு விவகாரங்களில் ஆங்கில அரசு தலையிடுவதில்லை என்றும், இனி ஆங்கிலேயர்கள் தங்களுடைய எல்லைகளை விரிவுபடுத்த எத்தகைய முயற்சியிலும் ஈடுபடுவதில்லை என்றும் இவ் வறிக்கையில் கூறப்பட்டது. இவற்றிற்கான உறுதிப் பத்திரங்கள் மன்னர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழங்கப்பட்டன. இந்திய மன்னர்கள் ஆங்கில அரசின்

எல்லைகளை மதித்து நடக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எல்லாம் வல்ல இறைவன் அருளால் இந்தியர்களுக்கு ஆங்கிலேயர்கள் செய்யவேண்டிய கடமைகள் அனைத்தும் தவறின்றி நிறைவேற்றி வைக்க கடமைப்பட்டுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

(3) பொதுமக்கள் ஆங்கில ஆட்சியின்கீழ் எத்தகைய அச்சமும் இன்றி வாழலாம் என்றும், அவர்களின் உடைமை, பண்பாடு, பழக்கவழக்கங்கள் முதலியவற்றில் பேரரசியார் தலையிடுவதில்லை என்றும் இப் பேரறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. முறை வழங்குவதிலும் உரிமைகள் பாதுகாப்பதிலும் பதவிகள் வழங்குவதிலும் நீதி ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் என்றும், இவற்றில் ஜாதி, சமய வேறுபாடுகள் தலைகாட்டமாட்டா என்றும், இவ்வறிக்கையில் கூறப்பட்டிருந்தது. பெருங் கலகத்தில் பங்கெடுத்து ஆங்கிலேய குடிமக்களை வேண்டுமென்றே கொலை புரிந்தவர்களைத் தவிர, மற்றவர்களை மன்னிப்பதாகவும் இவ் வறிக்கையில் கூறப்பட்டது. இந்தியர்களின் நலமே தமது நலம்; அவர்களின் அமைதியே தமது அமைதி; அவர்களுடைய நல்வாழ்வே தமது வலிமை; அவர்களின் நன்றி உணர்வே தமது தலைசிறந்த கைம்மாறு என்பன போன்ற உறுதிப்பாடுகள் இப் பேரறிக்கையில் இடம் பெற்றிருந்தன.

இப் பேரறிக்கையில் மகாராணியார் புதிதாக எதுவும் கூறவில்லை. ஏற்கெனவே இந்திய ஆட்சியில் கொண்டு வரப்பட்ட சட்டங்களிலும் இவை காணப்படுகின்றன. எனினும், இப் பேரறிக்கையை மகாராணியார் நேரடியாக விடுத்ததால், இதனை இந்தியரின் பிறப்புரிமையை உறுதிப்படுத்தும் மாபெரும் முதல் அரசியல் சட்டம் என்கின்றனர்.

டிஸ்ரேலி (Disraeli) என்ற பிரதம அமைச்சர், இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் 1876ஆம் ஆண்டு விக்டோரியா அரசியார், 'இந்தியாவின் பேரரசியார்' ('Queen - Emperess of India') என்ற சட்டத்தைப் பெருவாரியான ஓட்டுகளைப் பெற்று நிறைவேற்றினார். 1877ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் தேதியன்று டெல்லியில் அரசவை (Durbar) ஒன்றைக் கூட்டி, விக்டோரியா அரசியை இந்தியப் பேரரசி என்று பிரகடனம் செய்தனர். அரசியாருக்குப் பின்னர், அவரது வாரிசான 7ஆவது எட்வர்டு (Edward, VII) என்பவருக்கு இந்தியப் பேரரசர் (King emperor of India) என்றும், இவருக்குப் பின் இதைப் போன்ற பட்டம் ஐந்தாவது ஜார்ஜ் என்பவருக்கும் (George, V) டெல்லி தர்பாரில் வழங்கப்பட்டது.

இந்திய அமைச்சர் (The Secretary of State for India)

இங்கிலாந்து அரசும் பாராளுமன்றமும் இணைந்து இந்திய நிர்வாகத்தை இந்திய அமைச்சர் (The Secretary of State for India) மூலம் கண்காணித்து வந்தன. இவருடைய ஊதியம் இந்திய அரசின் வருவாயிலிருந்து அளிக்கப்பட்டது. இவர் இங்கிலாந்து அரசின் அமைச்சர் அந்தஸ்தைப் பெற்றவர் (Cabinet Rank). இவர் பாராளுமன்றத்தின் ஏதாவது ஓர் அவையின் அங்கத்தினராக இருக்கவேண்டும். இவருக்கு உதவியாக 15 செயலாளர்கள் இவரது ஆலோசனைக் குழுவில் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 8 பேர் இங்கிலாந்து அரசரால் நியமிக்கப்பட்டனர். மீதி 7 பேர் கம்பெனியின் நிர்வாகக் குழுவினரால் (Courts of Directors) நியமிக்கப்பட்டனர். 15 செயலாளர்களில் குறைந்தது 9 பேராயினும் இந்தியாவில் 10 ஆண்டுக் காலத்திற்குக் குறையாமல் பணியாற்றியவர்களாக இருக்கவேண்டும். இவ் அங்கத்தினர்கள் 'நன்னடத்தை'யுடன் பணிபுரியும் நாள்வரை பதவியில் இருப்பர். இவர்கள் பாராளுமன்ற இரு சபைகளின் கூட்டு அறிக்கையின்மூலமே வேலை நீக்கம் செய்யப்படுவர். செயலாளர்களின் தீர்மானங்களைப் புறக்கணிக்க இந்திய அமைச்சர் உரிமை பெற்றிருந்தார். நிதி சார்ந்த செய்திகளில் செயலாளர்களின் தீர்மானமே முடிவானது.

இந்திய அமைச்சரின் அதிகாரங்கள் நாளாவட்டத்தில் ஆலோசனைக் குழுவினர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திற்று. இந்திய அமைச்சரே மிகவும் செல்வாக்குப் பெற்றவரானார். 1869ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்தியச் சட்டத்தின்படி ஆலோசனைக் குழு அங்கத்தினர்களை இந்திய அமைச்சரே நியமிக்கவும், அவர்களின் பணியின் காலவரையறையை நிர்ணயிக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டது. மேலும் இந்தியக் கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் குழு அங்கத்தினர்களையும் இந்திய மாநிலங்களின் கவர்னரின் ஆலோசனைக் குழு அங்கத்தினர்களையும் இந்திய அமைச்சரே நியமித்து வந்தார். இவ்வாறு இந்திய விவகாரங்களைப் பொறுத்தவரையில் இந்திய அமைச்சரே செல்வாக்குப் பெற்றவரானார். போர், அமைதி, அவசரக் காலம், ரகசிய செய்திகள் போன்றவற்றில் தன் விருப்பப்படியே செயலாளர்களைக் கலக்காமலேயே செயலாற்றி வந்தார். இந்தியாவின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை, அரச பிரதிநிதியிடமும் அவரது ஆலோசனைக் குழுவிடமும்தான் அதிகாரம் இருந்தது எனப் பலர் எண்ணியிருந்தனர். ஆனால், உண்மை அதிகாரம் இந்திய அமைச்சரிடமே

இருந்து வந்தது. அவர் வரம்பற்ற அதிகாரம் செலுத்தி வந்தார் எனலாம்.

செங்கடல் வழியாக இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் 1870ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட தந்தி போக்குவரத்துத் தொடர்பு, பல பிரச்சினைகளையும் நிர்வாகத் துறையில் இருந்து வந்த சிக்கல்களையும் தீர்த்து வைத்தது. இத் தொடர்புமுறை மூலம் இந்திய அமைச்சர், இந்தியாவிலுள்ள அரச பிரதிநிதியுடன் (Viceroy) நேரடித் தொடர்புகொண்டு அரசியல், மற்றும் நிர்வாகம் சார்ந்த செய்திகளுக்குத் தீர்வுகாண முடிந்தது. இதன் பயனாக, இந்திய அமைச்சர், நிர்வாகமுறைகளைச் செம்மையாகக் கவனிக்க முடிந்தது. ஆனால், அதே சமயத்தில் இந்திய அமைச்சருக்கும் வைஸிராய்க்கும் பல பிரச்சினைகளில் கருத்து வேற்றுமைகளும் தோன்றின. இந்திய அமைச்சர் சாலிஸ்பரி பிரபுவுக்கும் இந்திய வைஸிராய் நார்த்புரூக் பிரபுவுக்கும் செலவு வகைகளில் கருத்து வேறுபாடு கடுமையாக உருவெடுத்தது. இதைப் போன்று ரிப்பன் பிரபுவும் இந்திய அமைச்சரின் தலையீடு அதிகமாயுள்ளது எனக் குற்றம் சாட்டியுள்ளார். இத்தகைய கருத்து வேறுபாடு காரணமாகவே கர்சான் பிரபு (Lord Curzon), தனது வைஸிராய்ப் பதவியை ராஜினாமா செய்ய நேர்ந்தது.

1905-லிருந்து 1910 வரை இந்தியா அமைச்சராகப் பணியாற்றிய மார்லி பிரபு என்பவர், ஒரு சர்வாதிகாரப் போக்குடையவர் என்று கருதப்பட்டார். இந்திய ஆலோசனைக் குழுவின் 1869ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி ஆலோசனைக் குழு அங்கத்தினரின் எண்ணிக்கை பத்தாகக் குறைக்கப்பட்டது. 1907-ல் மார்லி பிரபு, இரண்டு இந்தியர்களை ஆலோசனைக் குழுவில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொண்டார். இஃது அவரது துணிச்சலான செயலைக் காட்டுகின்றது.

1919ஆம் ஆண்டுச் சட்டம் (மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம்): இந்திய அமைச்சரின் ஆலோசனைக் குழுவில் அங்கத்தினர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 8 பேராகவும் கூடிய எண்ணிக்கை 12 ஆகவும் இருக்க வேண்டும். இந்த எண்ணிக்கையில் பாதிப்பேர் இந்தியாவில் சேவை செய்தவர்களாக இருக்க வேண்டும். இவர்களின் பதவிக் காலம் 7 ஆண்டிலிருந்து 5 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.

இந்தியர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு உயர் ஆணையாளர் (High Commissioner) ஒருவரை இங்கிலாந்தில் நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவர் தலைமை ஆளுநரின் அதிகாரத்தின்கீழ்ப்

பணியாற்றி வந்தார். இதுவரைக்கும் இந்திய அமைச்சருக்கும் அவரது இலாகாவிற்கும் ஏற்படும் செலவை இந்திய அரசின் வருவாயிலிருந்து கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், 1919ஆம் ஆண்டுச் சட்டத்திற்குப் பின், இச் செலவுத் தொகையை இங்கிலாந்தே கொடுத்து வந்தது. இந்தியா அமைச்சரின் அதிகாரமும் வெகுவாகக் குறைக்கப்பட்டது. இவருடைய அதிகாரங்கள் பல, தலைமை ஆளுநர் ஆலோசனைக் குழுவிற்கு மாற்றப்பட்டன. வெளிநாட்டு விவகாரம், பொதுக்கடன், சுங்கவரி, நாணய நோட்டு, ராணுவம் ஆகியவற்றுக்கு இந்திய அமைச்சரின் முன் அனுமதி வேண்டும். ஏனைய துறைகளுக்கு இவரது முன் அனுமதி தேவையில்லை.

1935ஆம் ஆண்டுச் சட்டம்: 1935ஆம் ஆண்டுச் சட்டம் மாநிலங்களில் சுயாட்சியும் மத்திய அரசில் இரட்டை ஆட்சியும் ஏற்பட வகைசெய்தது. அதிகாரம் பரவலாக்கப்பட்டதால், இந்தியா அமைச்சரின் அதிகாரமும் ஓரளவு குறைந்தது. இருந்தாலும் இந்திய நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில் இந்திய அமைச்சர் பழைய செல்வாக்குடனே இயங்கி வந்தார். 1935ஆம் ஆண்டுச் சட்டம் இந்தியா அமைச்சரின் ஆலோசனைக் குழுவை அகற்றியது. ஆலோசனைக் குழுவிற்குப் பதில் இந்திய அமைச்சருக்குச் சில ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த ஆலோசகர்கள் மூன்று பேருக்குக் குறையாமலும் ஆறு பேருக்கு அதிகப்படாமலும் இருக்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டது. இவர்களில் பாதிப்பேராவது இந்தியாவில் பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றியிருக்க வேண்டும். அதுவும் இவர்கள் இந்தியாவிலிருந்து வெளியேறிய இரண்டு ஆண்டுகளுக்குள் நியமனம் செய்யப்படவேண்டும். இவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகள். இந்தியா அமைச்சர், தனது ஆலோசகர்களைக் கூட்டாகவோ, அல்லது தனித்தனியாகவோ சந்தித்து ஆலோசனைகள் பெறலாம். இவர்களின் ஆலோசனைப்படி இந்தியா அமைச்சர் நடக்கவேண்டுமென்ற அவசியமில்லை.

உயர் ஆணையாளர் அலுவலகம் (Office of High Commissioner) ஒன்று 1919-ல் லண்டனில் நிறுவப்பட்டது. மத்திய, மாநில அரசுகளின் ஏஜன்டாகப் பணியாற்றும்படி இவ்வலுவலகம் பணிக்கப்பட்டது. இதுவரை இந்த வேலையை இந்தியா அமைச்சர் செய்து வந்தார். உயர் ஆணையாளர் இந்திய அரசால் நியமிக்கப்பட்டு வந்தரர். இவருடைய மாத ஊதியமும் இந்திய வருவாயிலிருந்து அளிக்கப்பட்டது. இந்திய அரசுக்குத் தேவைப்பட்ட சாமான்களை வாங்குதல், வணிக விபரங்களை அரசுக்குத்

தெரிவித்தல், இந்திய வியாபாரத்தை ஊக்குவிக்க ஆவன செய்தல், இங்கிலாந்தில் பயிலும் இந்திய மாணவர்களின் நலனைக் கவனித்தல், இந்திய விவகாரங்களைப்பற்றி விசாரிப்பவர்களுக்குத் தகுந்த விவரங்களை வழங்குதல் போன்ற பணிகளை உயர் ஆணையாளர் ஆற்றிவந்தார்.

இங்கிலாந்துப் பாராளுமன்றம் (The Parliament)

எழுத்தளவில் பாராளுமன்றத்திற்கு இந்திய நிர்வாகத் துறையில் ஏராளமான அதிகாரங்கள் இருந்தும், நடைமுறையில் இந்திய அமைச்சரே அதிக செல்வாக்குப் பெற்றிருந்தார். ஆனால் தனது செயல்கள் அனைத்திற்கும் இவர் பாராளுமன்றத்திற்குப் பொறுப்புள்ளவராக இருந்தார். எனவே, பாராளுமன்றம் தொலைவிலிருந்து இந்திய நிர்வாகத்தைக் கண்காணித்தது என்பது உண்மையே. பிரிட்டிஷ் பாராளுமன்றம் தீவிரமாகவும் நேரடியாகவும் தலையிடாவிட்டாலும், ஆங்கிலக் குடிமக்களும் அவர்களின் வியாபாரம், உத்தியோகம் போன்றவை பாதிக்கப்படும் போது மட்டுமே எல்லாக் கட்டுப்பாடுகளையும் மீறிச் செயல்முறைகளில் ஈடுபடும். இச் சந்தர்ப்பங்களில் இந்திய அமைச்சர் (Secretary of State for India), பாராளுமன்றத்தின் செயலுக்குத் தடை செய்வதில்லை. இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதியாகும் துணிகளுக்கு 10% வரி விதித்தபோது, இந்திய வைஸிராய் எதிர்ப்புத் தெரிவித்துங்கூட, பாராளுமன்றம் இங்கிலாந்தின் துணி வியாபாரம் பாதிக்கப்படக்கூடாது எனத் தனது நிலையை வலியுறுத்தியது. பாராளுமன்றத்தின் போக்கிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ராஜப் பிரதிநிதி மேயோ பிரபு, ராஜினமா செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

1947ஆம் ஆண்டுவரை வெள்ளை மாளிகையில் இருந்து நிர்வாகம் செய்துவந்த இந்தியா அமைச்சரும் அவரது ஆலோசனைக் குழுவினரும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். இவர்கள் தங்களுடைய விருப்பப்படி இந்திய அரசின் நிர்வாகத்தில் தலையிட்டு இங்கிலாந்து நாட்டின் நலனைப் பாதுகாத்து வந்தனர். இந்தியா சுதந்திரம் பெற்றபின் இந்நிலை மாறியது. இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் அதிகாரத் தொடர்பு துண்டிக்கப்பட்டு நட்புத் தொடர்பு நீடித்து வருகிறது. இரு நாடுகளும் நட்பு நாடுகள் என்ற வகையில் உலக விவகாரங்களில் தலையிட்டு ஒன்றிற்கொன்று நன்மை பயக்கும் காரியங்களைச் செய்து வருகின்றன. பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளில் ஒன்றாக 1947ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இந்தியா இருந்து வருகின்றது. இரு நாடுகளின் வாணிகம், பொருளாதாரம்

தொழில் நுட்ப அறிவு போன்றவை பாதிக்கப்படாதவாறு இரு நாடுகளும் ஆண்டுதோறும் கூடும் மகாநாடுகளில் கலந்து கொள்ளுகின்றன.

(ஆ) இந்திய அரசு (The Indian Government)

இந்திய மத்திய அரசு (Indian Government at Centre)

18ஆவது நூற்றாண்டின் தொடக்கத்தில் சாதாரண வணிகக் குழுவாக இருந்த கிழக்கிந்தியக் கம்பெனி, நடாளும் நிலைக்கு உயர்ந்தது. எனவே, இதன் பொறுப்புகளும் அதிகமாயின. இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமாயிருந்த வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய மூன்று மாநிலங்களையும் அவர்கள் பலப்படுத்த முற்பட்டனர். அவற்றின் நிர்வாக உறவு முறைகளையும் சீர்படுத்த விரும்பினர். இதனால், இங்கிலாந்துப் பாராளுமன்றம் இந்திய அரசின் நிர்வாகத்தில் தலையிட நேர்ந்தது. 1773-ல் ஒழுங்குமுறைச் சட்டம் (Regulating Act) என்ற சட்டத்தை முதன்முதலில் இங்கிலாந்துப் பாராளுமன்றம் வெளியிட்டது. இதன்படி வங்காளக் கவர்னர், கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். பம்பாய், சென்னை ஆகிய இரு மாநிலங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு அவரிடம் கொடுக்கப்பட்டது. போர், அமைதி, வெளிநாட்டு உறவு போன்றவற்றை மிகவும் பொறுப்புடன் கவனிக்க வேண்டுமெனக் கவர்னர் ஜெனரலுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. கவர்னர் ஜெனரலும், அவரது நிர்வாகக் குழுவும் கம்பெனி இயக்குநர்களின் ஆணைகளுக்குக் கீழ்ப் படிய வேண்டுமென்றும், கம்பெனியைப் பாதிக்கும் விவகாரங்களை இயக்குநர்களுக்கு அவ்வப்போது தெரிவிக்கவேண்டும் என்றும் உணர்த்தப்பட்டது. 1833-ல் ஏற்பட்ட பட்டயச் சட்டத்தின்படி இந்தியாவில் சிவில் ராணுவ நிர்வாகங்களைக் கவர்னர் ஜெனரலும் அவரது ஆலோசனைக் குழுவும் கவனிக்கவேண்டும் என்று வலி யுறுத்தப்பட்டது. அஸ்ஸாம், மத்திய மாகாணம், பர்மா ஆகிய பகுதிகளைக் கவனிக்கும்பொருட்டுத் தலைமை ஆணையர்கள் (Chief Commissioners) கவர்னர் ஜெனரலால் நியமிக்கப் பட்டனர். இவர்கள் மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டவர்கள். வங்காளத்தின் நிர்வாகத்தை உதவி ஆளுநர் ஒருவர் கவனித்து வந்தார். 1858-ல் இந்திய நிர்வாகம் ஆங்கில அரசின் நேர் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டபோது விக்டோரியா அரசி இந்தியக் கவர்னர் ஜெனரலின் பெயரை 'வைஸிராய்' (Viceroy) என்று மாற்றி அமைத்தார். இவர் இந்தியாவின் நிர்வாகத் தலைவராக

இருப்பதோடு இங்கிலாந்து அரசரின் பிரதிநிதியாகவும் இருக்க வேண்டும் என்பதே இப் பெயர் மாற்றத்தின் நோக்கமென அறிவிக்கப்பட்டது. கானிங் பிரபு (Lord Canning), இந்தியாவின் முதல் வைசிராயாக நியமிக்கப்பட்டார்.

கவர்னர் ஜெனரல் (The Governor General)

பிரிட்டனில் மிகவும் செல்வாக்குப் பெற்ற குடிமகனை இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக 5 ஆண்டுகளுக்கு நியமித்து வந்தனர். பிரிட்டனைச் சார்ந்துள்ள வெளிநாடுகளில் மிகவும் செல்வாக்கும் பொறுப்பும் கொண்ட பெரும் பணியாளர் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் ஆவார். இவர் கட்சிச் சார்பற்றவராக இருக்கவேண்டும். இங்கிலாந்து நாட்டின் அரசியல் மாற்றம் இவரை எவ்வகையிலும் பாதிக்காது. இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை அங்கத்தினர்களுடனும், நிர்வாகக் குழுவினர்களுடனும் இணைந்து பணியாற்றவேண்டியிருந்தாலும், அவசரக் காலங்களில் அவர்களின் கருத்தை மறுக்க கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் உண்டு. இவர் செயற்குழுக் கூட்டங்களுக்குத் (Executive Councils) தலைமை வகிப்பார். இத்தகைய கூட்டங்களுக்குத் தான் இல்லாதபோது தலைமை வகித்து நடத்திச் செல்ல உபதலைவரைத் தேர்ந்தெடுக்கவும் இவருக்கு அதிகாரம் உண்டு. செயற்குழு அங்கத்தினர்களின் இலாக்காக்களை இவரால் மாற்றி அமைக்கவும் முடியும். இந்தியாவின் மத்திய, மாநிலச் சட்டசபைகளைக் கூட்டவும் கலைக்கவும் இவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. பண விவகாரங்களில் கவர்னர் ஜெனரல் எடுக்கும் முடிவே இறுதியானது. பொதுவருவாய், கடன், சமய உரிமைகள், பிரிட்டிஷ் குடிமக்கள், ராணுவம், வெளிநாட்டு உறவு, மாநிலச் சட்டங்கள் போன்ற விஷயங்களில் கவர்னர் ஜெனரலின் முன்அனுமதி பெற்றே சட்டசபைகளில் விவாதிக்கவேண்டும். ஆறுமாதக் காலம்வரையிலான அவசரச் சட்டம் பிறப்பிக்க இவருக்கு அதிகாரம் உண்டு. இவரது அனுமதி இன்றி, மாநிலங்களில் எவ்விதப் புதிய நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது. இங்கிலாந்துப் பேரரசரின் பிரதிநிதி என்ற முறையில் இவர் எந்த நாட்டுடனும் அரசியல் தொடர்பு வைத்துக்கொள்ளலாம். சுதேச மன்னர்களுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் நல்லுறவை வளர்க்கும் பணியும் இவரிடம் அளிக்கப்பட்டிருந்தது. இங்கிலாந்திலுள்ள பிரதமருக்கும் அவரது அமைச்சரவைக் குழுவுக்கும் இருந்த தொடர்பைவிட, இந்தியக் கவர்னர் ஜெனரலுக்கும் அவரது நிர்வாக ஆலோசனைக் குழுவுக்கும் இருந்துவந்த தொடர்பு வலிமையானதாக இருந்தது.

வெளிநாட்டு உறவு, உள்நாட்டு விவகாரம், சட்டம், வாணிபம், கல்வி, தொழில்கள், நிதி ஆகிய துறைகளையும் இவர் மேற் பார்வை செய்து வந்தார். அவ்வப்போது இங்கிலாந்து மன்னர், அரசியல் கொள்கையைப்பற்றி எடுத்துரைக்கும் ஆலோசனை களையும் கவர்னர் ஜெனரல் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

ஆலோசனைக்குழு

கவர்னர் ஜெனரலுக்கு மூன்றுபேர் அடங்கிய ஆலோசனைக் குழு ஒன்று இருந்தது. இது, நாட்டின் பாதுகாப்பு, வெளி நாட்டு உறவு, சமயம் சம்பந்தப்பட்ட விவகாரம் ஆகியவற்றில் கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூறிவந்தது. ஏனைய அரசியல், நிர்வாக முறைகளில் ஆலோசனை கூற அமைச்சரவைக் குழு ஒன்று இருந்தது. இக் குழு உறுப்பினர்களைக் கவர்னர் ஜெனரலே தேர்ந்தெடுத்து வந்தார். இவர்கள் மத்திய சட்டசபை அங்கத் தினராகவும் இருந்து வந்தனர். கவர்னர் ஜெனரலுக்கு நிதி சம்பந்தப்பட்ட வகையில் ஆலோசனை அளிக்க நிதி ஆலோசகர் என்பவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். பொதுவாக, கவர்னர் ஜெனரலின் அதிகாரங்களைக் கவனிக்கும்போது அவர், ஒரு சர்வாதிகாரி என்ற நிலையிலேயே நிர்வாகம் செய்துவந்தார். சட்டசபையில் இருந்த அரசாங்க அதிகாரிகள் அனைவரும் கவர்னர் ஜெனரலின் செயல்களை ஆதரித்து வந்தனர். தனியார் கொண்டு வரும் சட்டம் எத்தகையதாக இருப்பினும், அதை அவர்கள் ஆதரிப்பதில்லை. எனவே, அரசு கொண்டுவரும் தீர்மானங்கள் அனைத்தும் சட்டமாக வெளிவந்தன.

1861ஆம் ஆண்டு இந்தியக் கவுன்சில் சட்டம்

1861-ல் ஏற்பட்ட இந்தியக் கவுன்சில் சட்டம் மத்திய மாநிலச் சட்ட சபைகளில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியது. இந்தியர் கள் சட்டசபையில் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்றும், அவர் களுக்காக ஏற்படும் சட்டங்கள் தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவில் நிறைவேறத் தடங்கலாக உள்ளது என்றும் கூறப்படும் குற்றச்சாட்டைப் போக்க, 1861ஆம் ஆண்டு கவுன்சில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. கம்பெனி ஆட்சிக் காலத்தில் இந்தியா விற்கெனப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களும் இந்தியர்களுக்குப் பயனளிப்பனவாக இருக்கவில்லை.

1861ஆம் ஆண்டுக் கவுன்சில் சட்டம் தலைமை ஆளுநரின் செயற்குழு, சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியது. நீதிபதி ஒருவர் ஐந்தாவது அங்கத்தினராகச்

சேர்க்கப்பட்டார். இந்திய ராணுவத் தளபதியை இச் சட்ட சபையில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள இந்தியா அமைச்சருக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஏனைய அங்கத்தினர்கள் தலைமை ஆளுநரால் இரண்டு ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்தனர். சட்டம் இயற்றுவதற்கு வசதியாகத் தலைமை ஆளுநரின் சட்டசபை விரிவுபடுத்தப்பட்டது. இதில் 6 பேருக்குக் குறையாமலும் 12 பேருக்கு மிகாமலும் நியமிக்கப்பட்டிருந்தனர். இதில் பாதிப்பேர் அரசாங்க அதிகாரிகள் அல்லாதவர்களாக இருக்கவேண்டும். தலைமை ஆளுநரின் சட்டசபை, இந்தியா முழுவதற்கும் சட்டம் இயற்ற அதிகாரம் பெற்றிருந்தது. பொதுக் கடன், ராணுவம், பொது மக்களின் சமயம், ஆகியவற்றைப்பற்றிய சட்டங்களுக்குத் தலைமை ஆளுநரின் முன் அனுமதியைக் கோரவேண்டும். சட்டசபைகளில் இயற்றப்பட்ட சட்டங்களை நிறைவேறுதபடி செய்யத் தலைமை ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. அவசரக் காலத்தில் சட்டங்கள் பிறப்பிக்க தலைமை ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. மாநிலங்கள் தங்களின் நலனைக் கருதிச் சட்டங்கள் இயற்றிக்கொள்ளவும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அது மத்திய அரசின் அதிகாரத்தைப் பாதிக்காதபடி அமையவேண்டும்.

1892ஆம் ஆண்டுக் கவுன்சில் சட்டம்

1861-ல் ஏற்படுத்திய சட்டசபைச்சட்டம் இந்தியர்கள் எதிர் பார்த்த பலனை அளிக்கவில்லை. இதில் ஜமின்தார்கள், சுதேச மன்னர்கள், ஓய்வுபெற்ற அரசாங்க அதிகாரிகள் போன்றவர்கள் இடம்பெற்றிருந்தமையால், இந்தியப்பொதுமக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் முயற்சிகள் சட்டசபையில் ஏற்படவில்லை. 1885-ல் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரசின் பெரும் முயற்சியினால் 1892ஆம் ஆண்டுக் கவுன்சில் சட்டம் இயற்றப் பட்டது. இச் சட்டத்தின் பயனாகத் தலைமை ஆளுநரின் ஆலோசனைச் சபையில் கூடுதலான அங்கத்தினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதில் 10 அங்கத்தினர்களுக்குக் குறையாமலும் 16 அங்கத்தினர்களுக்கு மிகாமலும் இடம் பெற வகை செய்யப்பட்டது. கூடுதலான 16 அங்கத்தினர்களில் 6 பேர் அரசாங்க அதிகாரிகள். 5 பேர் அரசாங்க அதிகாரிகளல்லாதவர்களிலிருந்து நியமிக்கப்பட்டவர்கள். மீதியுள்ள 5 பேர் வணிகக் குழுவிலிருந்தும் பம்பாய், வங்காளம், சென்னை, வடமேற்கு எல்லைப்புற மாகாணங்கள் ஆகியவற்றின் சட்டசபைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநிலச் சட்டசபை அங்கத்தினர்களின் எண்ணிக்கையும் அதிகப்பட்டது. முதல்தடவையாக இந்தச்

சட்டசபைகள் நிதி சம்பந்தப்பட்ட விஷயங்களை விவாதிக்கவும் கேள்விகள் கேட்கவும் அனுமதிக்கப்பட்டனர்.

மிண்டோ மார்லி சீர்திருத்தம் (1909)

1892-ல் ஏற்பட்ட கவுன்சில் சட்டம் இந்திய தேசிய காங்கிரஸ் எதிர்பார்த்த பலன் அளிக்கவில்லை. அரசாங்கத்தில் மேலும் பல அரசியல் சலுகைகளை அடைய காங்கிரஸ் கிளர்ச்சி செய்தது. இதன் விளைவாக, 1909-ல் மிண்டோ மார்லி சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. மிண்டோ மார்லி சட்டம் மத்திய மாநிலச் சட்டசபைகளின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்தியது. மத்திய சட்டசபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை 16-லிருந்து 60 ஆக உயர்த்தப்பட்டது. இவற்றைத் தவிர, 9 பேர் தங்களுடைய பதவியின் காரணமாகச் சட்டசபை அங்கத்தினராக்கப்பட்டிருந்தனர். அவர்கள் முறையே தலைமை ஆளுநர், 6 சாதாரண சட்டசபை அங்கத்தினர், ராணுவத் தளபதி, சட்டசபைக் கூட்டம் நடைபெறும் மாநிலத்தின் ஆளுநர் ஆகியோராவர். மத்திய அங்கத்தினர் சட்டசபையில் மொத்த எண்ணிக்கை 69 ஆக ஆகியது. இதில் 37 பேர் அரசாங்க அதிகாரிகள், ஏனைய 32 பேர் அரசாங்க அதிகாரிகள் அல்லாதவர்கள். மாநிலச் சட்டசபைகளின் அங்கத்தினர் எண்ணிக்கையும் இரு மடங்காக்கப்பட்டன. இந்த எண்ணிக்கை அதிகப்பட்சம் 50க்கு மிகக் கூடாது. இத்தகைய சீர்திருத்தங்கள் இந்தியர்களுக்கு எவ்விதப் பலனும் அளிக்கவில்லை.

மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்

படிப்படியாக இந்தியர்களுக்குச் சுதந்திரம் வழங்குதலும் அதற்காக இந்தியர்களைத் தகுதியுடையவர்களாக ஆக்குவதும் இச் சட்டத்தின் நோக்கமாகும். இந்தியரை ஆட்சித் துறையின் ஒவ்வொரு கிளையிலும் தன்னாட்சி முறையிலும் பழக்கப்படுத்துவதும் இதன் குறிக்கோளாகும். 1909ஆம் ஆண்டில் இந்திய கவுன்சில் சட்டம் பயனற்றது என உணரப்பட்டது.

1919-ல் ஏற்பட்ட சட்டத்தின்படி மாநிலங்களின் சபை (Council States), சட்டசபை (Legislative Council) என்ற சபைகளைக் கொண்ட மத்திய சட்டசபை (Bicameral Legislation) ஒன்று அமைக்கப்பட்டது. இவ்விரு சபைகளுக்கும் ஒரு தலைவர் (President) உண்டு. மேல்சபையின் தலைவரைக் கவர்னர் ஜெனரல் மேல்சபை அங்கத்தினர்களிலிருந்து நியமித்து வந்தார். மற்றவர்களையும் தலைவராக நியமிக்க கவர்னர் ஜெனரலுக்கு

அதிகார முண்டு, கீழ்ச்சபையில் உபதலைவர் ஒருவரும் உண்டு. இவரைத் தலைமை ஆளுநரது சம்மதத்தின்பேரில் கீழ்ச்சபை நியமித்தது. மேல்சபையின் காலவரையறை ஐந்து ஆண்டுகள். கீழ்ச் சபைக்கு மூன்று ஆண்டுகள். காலவரையறையைக் கூட்டவும் குறைக்கவும் கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் உண்டு.

மாநிலங்களின் சபை (The Council of States)

நாட்டு மேல்சபையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை 60. இதில் 34 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மீதி உள்ளவர்கள் கவர்னர் ஜெனரலால் நியமிக்கப்பட்டனர். இவர்களில் 20 பேர் வரை அரசாங்க உத்தியோகஸ்தராக இருப்பர். நன்கு ஆராயாமல் அவசரமாகச் சட்டம் இயற்றும் முறையைத் தடுப்பதும் சட்டங்களை நன்கு ஆய்ந்து அதன் தன்மைகளை எடுத்துக் கூறுவதும் இச் சபையின் நோக்கமாகும். இம் முறையில் இச் சபை வெளிநாடுகளிலுள்ள மேல்சபையைப் (Upper House) போன்று பணியாற்றியது எனலாம். இருப்பினும் இங்கு ஓட்டெடுப்பு நிகழ்வது அபூர்வமாக இருந்தது. இச் சபை அங்கத்தினர்களில் சொத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டதால் செல்வந்தர்களும் வியாபாரிகளும் இடம் பெற்றனர். மேலும் ஜாதி அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்பட்டன. சென்னையிலிருந்து முகமதியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முகமதியர் ஒருவரும் இந்துக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு இந்துக்களும் மேல்சபையில் அங்கம் வகித்தனர். பஞ்சாபிலிருந்த சீக்கியர்களுக்கு ஓர் இடம் ஒதுக்கப்பட்டது. பர்மாவிலிருந்து பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரும், வணிகச் சங்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவருமாக இரண்டு அங்கத்தினர் மேல்சபையில் இடம் பெற்றனர். பொதுவாகச் செல்வந்தர்களே தங்களுடைய சுய நலம் கருதிப் பதவி வகித்து வந்தனர்.

(இ) இந்திய மத்திய அரசு–மாநில அரசுகள்

சட்டசபை: மத்திய சட்டசபை ஜனநாயக முறைப்படி அமைக்கப்பெற்றது எனக் கூறலாம். இச் சட்டசபையின் மொத்த உறுப்பினர் 145. இவர்களில் 105 பேர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். 26 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட அரசாங்க அதிகாரிகளாகவும் 14 உறுப்பினர்கள் அரசாங்க அதிகாரிகள் அல்லாதவர்களாகவும் இருந்தனர் (Nominated non-officials). நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினருள், பொதுத் தொகுதிமூலம் 53 பேர்களும், முகமதியர்

களால் 30 பேரும், சீக்கியர்களால் 2 பேரும், ஐரோப்பியரால் 9 பேரும், நிலக்கிழார்களால் 7 பேரும், வணிகக் குழுவால் (Chamber of Commerce) 4 பேரும், தாழ்த்தப்பட்ட மக்களில் சிலரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுள், 26 அரசாங்க அதிகாரிகளும் ஒரு குழுவாக ஒருங்கிணைந்து சட்டசபையில் பணியாற்றி வந்தனர். இக் குழுவில் மத்திய அரசுச் செயலகத்திலுள்ள ராணுவச் செயலாளர் (Military Secretary), வெளிநாட்டுத் துறைச் செயலாளர் (Foreign Secretary) போன்றவர்கள் இருந்தனர். இச் சட்டசபையில் இந்தியாவிலுள்ள பல்வேறு பிரிவு மக்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

மாநிலங்களின் சபை, மத்திய சட்டசபை ஆகிய இரு சபைகளுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. வரவுசெலவுத் திட்டத்தையும் மாற்றியமைக்க மேல்சபை இரு சட்டசபைகளுக்கிடையில் முட்டுக்கட்டைநிலை (dead lock) ஏற்பட்டால், தலைமை ஆளுநர், இவ்விரு சபைகளையும் ஒன்றாக அமரச்செய்தோ, கூட்டுக் குழுக்களின்மூலமோ, அல்லது கூட்டு மாநாடுமூலமோ சிக்கலைத் தீர்க்க வழிசெய்யலாம். இம் முறையும் பயனளிக்கவில்லையானால், கவர்னர் ஜெனரல் தனது தனி அதிகாரத்தைப் பயன்படுத்திச் சிக்கலைத் தீர்க்க வழி செய்யப்பட்டிருந்தது.

வெள்ளை அறிக்கை (White Paper)

வெள்ளை அறிக்கையில் கூட்டாட்சி முறையின் சட்டசபை அமைப்பைத் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. 53-லிருந்து 55-ஆவது பிரிவுவரை தலைமை ஆளுநரின் (Governor General) தனி அதிகாரங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. மத்திய சட்டசபையில் தலைமை ஆளுநரும் ஈரங்க சட்டசபைகளும் அமைய வேண்டும். இவை மாநிலங்களின் சபை (Council of States) என்றும் மத்திய சட்டசபை என்றும் வழங்கப்பட்டன. மாநிலங்களின் சபைக்கு 7 ஆண்டுகள் என்றும், மத்திய சட்டசபைக்கு 5 ஆண்டுகள் என்றும் காலவரையறை கணிக்கப்பட்டிருந்தது. இடையில் இவை கலைக்கப்படாவிட்டால், கால வரையறையை முழுமையாக இச் சபைகள் பூர்த்தி செய்ய வேண்டும். சபையின் மொத்த அங்கத்தினர்களின் எண்ணிக்கை 260. இவர்களில் 150 பேர் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். 100 பேர்களுக்கு அதிகப்படாமல் சுதேச மன்னர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தலைமை ஆளுநர், 10 அரசாங்க அதிகாரிகள் அல்லாதாரைத் தேர்ந்தெடுப்பார்.

மத்திய சட்டசபையில் தலைமை ஆளுநரின் ஆலோசகர்களைத் தவிர, 375 அங்கத்தினர்கள் பதவி வகித்தனர். இவர்களில் 250 பேர் பிரிட்டிஷ் இந்தியாவின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். சுதேச மன்னர்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுவோர் 125-க்கு அதிகப்படக்கூடாது. முந்திய சட்டங்களைவிட, வெள்ளை அறிக்கை எவ்வித மாறுதலையும் கூறவில்லை. தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழு அங்கத்தினர்கள் சட்டசபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற ஒரு புதிய மாற்றத்தை மாத்திரம் இதில் அமைத்திருந்தனர்.

மாநில அரசுகள் (The Provincial Government)

ஒரு சிறிய வியாபாரக் கம்பெனியைத் தொடங்கி இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர்களின் செல்வாக்குச் சுமார் 150 ஆண்டுகளில் இந்தியாவில் பெரும் அளவுக்கு வளர்ந்து, ஒரு பெரிய பேரரசு உருவாகுமளவுக்குப் பெருகியது, வெவ்வேறு காலங்களில் சிறுசிறு பகுதிகளாக வென்று இணைக்கப்பட்ட அப் பகுதிகளை முறைப்படுத்தி மாநிலங்களாக உருவாக்க முடியவில்லை. அவற்றை மொழிவாரியாகவோ, இனவாரியாகவோ ஆங்கிலேயர்களால் பிரிக்க இயலவில்லை. பம்பாயும் சென்னையும் தொடக்க காலத்திலிருந்தே மாகாணங்களாக ஆளுநரின் (Governor) நிர்வாகத்தில் இருந்து வந்திருக்கின்றன. 1853-ல் வந்த பட்டயச்சட்டம் மாகாணங்களை உருவாக்க ஆளுநர்களுக்கு அதிகாரம் வழங்கியது. 1854-ல் வங்காளம் ஓர் உதவி ஆளுநரின் ஆளுகையின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. இந்த நிலை 1912ஆம் ஆண்டுவரை நீடித்திருந்தது. இதற்குப் பின்னர், வங்காளம் முழு மாநில அந்தஸ்தைப் பெற்றது. 1859-ல் பஞ்சாப் மாநிலத்திற்கு உதவி அளுநர் (Lieutenant Governor) ஒருவரை நியமித்தனர். 1834ஆம் ஆண்டு வரை வங்காளத்தோடு இருந்த ஆக்ரா தனியாகப் பிரிக்கப்பட்டு, ஓர் உதவி ஆளுநரின் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. வடமேற்கு மாகாணமும் தனி மாகாணமாக உதவி ஆளுநரின் நிர்வாகத்தின்கீழ் வந்தது.

அயோத்தி, 1856-ல் இணைக்கப்பெற்று 1877ஆம் ஆண்டு வரை தலைமை ஆணையர் (Chief Commissioner) ஒருவரின்கீழ் இருந்து வந்தது. இறுதியாக, இது வடகிழக்கு மாகாணத்துடன் இணைக்கப்பட்டது. 1902-ல் இதற்கு ஐக்கிய மாகாணங்கள் (United provinces) என்று பெயரிட்டு இதனுடன் ஆக்ராவையும் இணைத்தனர். உதவி ஆளுநர் ஒருவர் இம் மாகாணத்தின்

பொறுப்பை ஏற்றிருந்தார். 1921-ல் இம் மாகாணத்திற்கு முழு அந்தஸ்துள்ள ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். புதிதாக இணைக்கப்படும் பகுதிகளுக்குத் தலைமை ஆணையர்களை நியமிக்க 1854-ல் கவர்னர் ஜெனரலுக்கு அனுமதி வழங்கப்பட்டது. சாகர், நர்மதா மாவட்டங்கள், நாகபுரி ஆகிய பகுதிகளை ஒருங்கிணைத்து மத்திய மாகாணங்கள் (Central Provinces) என்ற பெயரில் ஒரு மாநிலத்தை உருவாக்கி, அதற்கு ஒரு தலைமை ஆணையரையும் நியமித்தனர். 1903-ல் ஐதராபாத் நைசாம் அளித்த பீரார் மாவட்டமும் மத்திய மாகாணங்களுடன் இணைக்கப்பட்டது. பர்மாவின் பல்வேறு பகுதிகளை வென்று, எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து, 1923-ல் ஒரு மாநிலமாக உருவாக்கினர். இம் மாகாணத்திற்குக் கவர்னர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அஸ்ஸாம் ஒரு தனி மாகாணமாக்கப்பெற்றது. 1911-ல் ஆளுநர் ஒருவர் அதற்கென நியமனமானார். வடமேற்கு எல்லைப்புற மாகாணம் 1932-ல் மாநில அந்தஸ்தை அடைந்ததும் அஃது ஓர் ஆளுநரின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. தில்லி, ஆஜ்மீர், மார்வார், ராஜபுதனம், குடகு, அந்தமான் நிகோபார் தீவுகள் போன்ற சிறிய பகுதிகள் தலைமை ஆணையரின் ஆட்சியின்கீழ் இருந்தன.

1919-ல் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தச் சட்டம், மாகாணங்களுக்குள் இருந்த வித்தியாசங்களை நீக்கியது. ஆனால் வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய இம் மூன்று மாநிலங்களின் ஆளுநர்களை இங்கிலாந்திலிருந்தே நியமிக்கும் பழக்கம் தொடர்ந்தது. இவர்கள் இதற்கு முன் இந்தியாவில் பணியாற்றியவர்களாக இருக்கக்கூடாது. ஏனைய மாநிலங்களைப் பொறுத்தவரையில் இந்தியாவில் ஏற்கெனவே பணியாற்றி வந்தவர்களிலிருந்து ஆளுநர்கள், உதவி ஆளுநர்கள், தலைமை ஆணையர் ஆகியவர்களைத் தெரிந்தெடுத்து நியமித்துவந்தனர். மாநிலங்களுக்கு ஓர் அமைச்சரவை இருந்து வந்தது. அமைச்சர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட இலாக்காக்களுக்குப் பொறுப்பானவர்கள். ஒதுக்கப்பட்ட துறைகள், மாற்றப்பட்ட துறைகள் என்று இருதுறைகள் ஆளுநரிடமும் அமைச்சரவையிலும் இருந்து வந்தன. இவற்றுக்கெனத் தனியான நிதி ஒதுக்கீடு கிடையாது. வெவ்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் சிக்கல் ஏற்பட்டால், ஆளுநரே தீர்த்து வைப்பார்.

மாநிலங்களில் இரட்டையாட்சி (Diarchy in the Provinces)

1919ஆம் ஆண்டுச் சட்டத்தில் புதிய நிர்வாக முறை ஒன்றை அறிமுகப்படுத்தினர். இதற்கு இரட்டையாட்சி (Diarchy)

என்று பெயர். இதன்படி மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட இலாக்காக்கள் (Reserve Subjects) என்றும், மாற்றப்பட்ட இலாக்காக்கள் (Transferred Subjects) என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒதுக்கப்பட்ட இலாக்காவை ஆளுநரின் ஆலோசனைக் குழுவும், மாற்றப்பட்ட இலாக்காவை அமைச்சர்களின் உதவிகொண்டு ஆளுநரும் நிர்வகித்து வந்தனர். ஒதுக்கப்பட்ட இலாக்காவில் காவல்துறை, நீர்ப்பாசனம், நிலவருவாய், பஞ்ச நிவாரணம், செய்தித்தாள்களின் கட்டுப்பாடு போன்றவை அடங்கி இருந்தன. மாற்றப்பட்ட இலாக்காவில் தல தன்னாட்சி, பொதுச் சுகாதாரம், கல்வி, பொதுப்பணி, விவசாயம் ஆகியவை அடங்கி இருந்தன. இவ்வாறு மாநில நிர்வாக வேலைகளை இரு பிரிவுகளாகப் பிரித்து, இரு பகுதியினர் நிர்வகித்து வந்தனர். இவற்றுள் முந்திய பிரிவு மத்திய அரசுக்குப் பொறுப்பானது. பிந்தியது மாநிலச் சட்டசபைக்குப் பொறுப்பானது.

மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டிருந்த இரட்டையாட்சி, இந்தியர்களுக்கு எவ்விதப் பயனும் அளிக்கவில்லை. செயல்முறையில் இரட்டையாட்சி தோல்வியே கண்டது. காரணம், மாற்றப்பட்ட இலாக்காக்களை நிர்வகித்து வந்த இந்திய அமைச்சர்களுக்கு எவ்வித அதிகாரமும் நிதி வசதியும் அளிக்கப்படவில்லை. இந் நிலையைப்பற்றி கே. வி. ரெட்டி என்ற முன்னாள் சென்னை மாநில அமைச்சர் தெளிவாகக் கூறியுள்ளார்.

மாநிலங்களில் பொறுப்பாட்சி ஏற்படுத்துவதற்கு முன்பு, இரட்டையாட்சி (Diarchy) என்ற முறை செயல்பட்டு வந்தது. இம் முறைக்கு இந்தியத் தேசியத் தலைவர்களின் எதிர்ப்பு அதிகமாக இருந்ததாலும், இதில் குறைபாடுகள் மிகுந்திருந்ததாலும் வெற்றிகரமாகச் செயல்படவில்லை. இரட்டையாட்சியிலுள்ள குறைகளை நீக்கும்பொருட்டு, சர் அலெக்சாந்தர் முத்திமான் (Sir Alexander Mudhiman) என்பவரின் தலைமையில் ஒரு விசாரணைக் குழு 1924-ல் நியமிக்கப்பட்டது. இக் குழுவின் பரிந்துரைகள் இரட்டையாட்சியிலுள்ள குறைகளைப் போக்கிப் பொறுப்பாட்சி ஏற்படுத்துவதற்கு வகைசெய்தது. மாநில நிர்வாகம் அமைச்சரவையிடம் ஒப்படைக்கப்படவேண்டுமெனப் பரிந்துரை செய்யப்பட்டது. அமைச்சரவை அங்கத்தினர்கள் ஆளுநரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அமைச்சர்கள் தத்தம் இலாக்காக்களின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்கள் என்று வலியுறுத்தப்பட்டது. மேலும், தேவையான அமைச்சர்களை நியமிப்பது ஆளுநரின் விருப்பத்தைப் பொறுத்தது. வெள்ளை அறிக்கை 61-73ஆவது பிரிவுகள் ஆளுநரின் நிர்வாக அமைப்

யைப்பற்றிக் கூறுகின்றன. 66ஆவது பிரிவு ஆளுநர் நிர்வாகத்தை நடத்த அமைச்சரவை ஒன்று நிறுவவேண்டும் என்ற அவசியத்தைக் குறிப்பிடுகின்றது. அமைச்சர்களை நியமிக்கவும் பதவி நீக்கம் செய்யவும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு.

மாநிலங்களில் சட்டசபை வளர்ச்சி; 1797-ல் வங்காளத்திலும், 1807-ல் சென்னை, பம்பாய் ஆகிய இரு மாநிலங்களிலும், நிர்வாகச் சட்ட திட்டங்களை ஏற்படுத்த அதிகாரம் வழங்கப்பட்டது. 1833ஆம் ஆண்டுப் பட்டயச் சட்டத்தில் சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களில் சட்டம் இயற்றும் அதிகாரம் பறிக்கப்பட்டது. வங்காளம் மாத்திரம் தனக்கு வேண்டிய சட்டங்களை இயற்றிக்கொள்ளும் அதிகாரம் பெற்றிருந்தது. ஆயினும், கானிங் பிரபு காலத்தில் இத் தடை நீக்கப்பட்டது. மாநில ஆளுநரின் நிர்வாகச் சபையில் ஒரு தலைமை வழக்கறிஞரோடு (Advacate General) நான்கு பேருக்குக் குறையாமலும் எட்டுப் பேருக்கு மிகாமலும் அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். சட்டமியற்றும் அதிகாரம் பெற்ற இக் குழு இயற்றும் தீர்மானங்கள் சட்டமாவதற்கு முன்னர், ஆளுநர், தலைமை ஆளுநர் ஆகியவர்களின் கையொப்பங்களைப் பெறவேண்டும். வங்காளம், வடமேற்கு மாகாணம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களுக்குச் சட்டசபைகளை அமைப்பதற்குத் தலைமை ஆளுநருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இவ் வாணையின்படி 1862-ல் வங்காளத்திலும், 1886-ல் பஞ்சாப், பர்மா ஆகிய மாநிலங்களிலும் சட்டசபைகள் நிறுவப்பட்டன. 1905, 12 ஆகிய ஆண்டுகளில் கிழக்கு வங்கம், அஸ்ஸாம் மாநிலங்களிலும் 1913-ல் மத்திய மாகாணத்திலும் சட்டசபைகள் அமைக்கப்பட்டன.

1861-ல் அமைக்கப்பட்ட சட்டசபைகளில் ஜனநாயக அமைப்பு எதுவும் இல்லாதிருந்தது. சட்டசபைகளின்மூலம் உருவாக்கப்பட்ட சட்டங்கள் உண்மையில் அரசாங்க ஆணைகளே யாகும். காங்கிரஸ் தலைவர்கள் இச் சட்டசபைகளின் பயனற்ற தன்மையை வன்மையாகக் கண்டித்து வந்தனர். எனவே, இதிலுள்ள குறைகளைப் போக்க, 1892ஆம் ஆண்டுச் சட்டத்தை ஆங்கில ஆட்சியாளர் கொண்டு வந்தனர். இதன்படி சட்டசபை விரிவாக்கப்பட்டது. தேர்தல் முறைகள் புகுத்தப்பட்டன. சட்டசபை அங்கத்தினர்கள், நிர்வாகமுறைகளைப்பற்றிக் கேள்விகள் கேட்கவும், வரவுசெலவுத் திட்டத்தைப்பற்றி விவாதிக்கவும் உரிமைகள் வழங்கப்பட்டன. சட்டம் இயற்றுவது, ஆலோசனை கூறுவது மாத்திரமன்றி, சட்டசபைகள் நாட்டின் நிர்வாகத்தில் அக்கறை கொள்ளும்படியான உரிமைகள் வழங்கும் கருத்துகள் 1861ஆம் ஆண்டுச் சட்டத்தில் இடம் பெற்றிருந்தன.

தேசிய உணர்வு நாட்டில் வளரவே, காங்கிரஸ் தலைவர்கள் நிர்வாகச் சீர்திருத்தங்கள் பல வேண்டுமென்று வாதாடி வந்தனர். இதன் பயனாக, மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் (Mindo-Morley Reforms) 1909ஆம் ஆண்டு கொண்டுவரப் பட்டது. இச் சீர்திருத்தங்கள் மாநிலச் சட்டசபைகளில் பெரும் மாறுதல்களை உண்டாக்கின. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடியது. பெரிய மாநிலச் சட்டசபைகளில் 50 உறுப்பினர்களுக்கு மிகாமலும் சிறிய மாநிலங்களில் 30 பேருக்கு மிகாமலும் உறுப்பினர்கள் இருக்கலாம். அரசாங்க அதிகாரி களும், அதிகாரிகள் அல்லாதவர்களும் சிறிது அதிகமாகவே சட்ட சபைகளில் இடம் பெற இச் சட்டத்தில் வகை செய்யப்பட் டிருந்தது. வங்காளத்தில் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தது. சட்டமன்ற உறுப்பினர்கள் தல ஸ்தாபனங்கள், நிலச் சுவான்தார்கள், வணிகக் குழுக்கள் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். பஞ்சாப், பர்மா, மத்திய மாகாணங்கள் ஆகியவற்றைத் தவிர, ஏனைய மாநிலங்களில் முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதி களின்மூலம் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. இச் சட்டத்தின் மூலம் முதல் முறையாக இந்தியாவில் தனித் தொகுதிமுறையை அமலாக்கினர். இத்தகைய சலுகைகள் இன்றைய தேர்தல் முறையிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அரசியல் முக்கியத்துவம் உள்ள பிரச்சினை, வரவுசெலவுத் திட்டம் ஆகியவைகற்றைப்பற்றி மாநிலச் சட்ட மன்றங்கள் தீர்மானங்கள் இயற்ற இச் சட்டம் வகைசெய்தது.

மார்லி பிரபுவுக்கு இந்தியாவில் பாராளுமன்றப் பொறுப் பாட்சி ஏற்படுத்த விருப்பம் எதுவும் இல்லை. எனவே, 1909-ல் ஏற்பட்ட சீர்திருத்தச் சட்டம் சட்டமன்றங்களைக் கலந் தாலோசனை செய்யும் இடங்களாகவே உருவாக்கியது. சட்ட சபைகளுக்கெனத் தனி அதிகாரம் எதுவும் இல்லை. உண்மையான அதிகாரம் அரசாங்கத்திடமிருந்தது. இத்தகைய நிலைகளை மாற்றி அமைக்கும் விதத்தில் பொதுமக்களின் கருத்துகள் திரண்டு வரும்போது முதல் உலகப்போர் குறுக்கிட்டது. ஆங்கிலக் குடியேற்ற நாடுகளின் நல்லெண்ணங்களையும் ஒத் துழைப்பையும் அடைவது அவசியமென பிரிட்டிஷ் அரசு உணர்ந்தது. இதன் விளைவாகச் 1919ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வரப்பட்டது.

1919ஆம் ஆண்டுச் சட்டம்: மாநிலங்களில் சட்டசபை ஒன்று (Legislative Council) ஏற்படுத்த இச் சட்டம் வகைசெய்தது.

இதில் நிர்வாகக் குழு அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் ஆளுநரால் நியமிக்கப்பட்டவர்களுமாக இருந்தனர். அவர்களில் குறைந்தது 70 சதவீத உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும். தேர்தலுக்காகத் தனித் தொகுதிகள் என்று இரு பகுதிகளாகச் சட்டசபைத் தொகுதிகள் பிரிக்கப்பட்டிருந்தன. பொதுத் தொகுதியில் முகமதியர் அல்லாதவர் முகமதியர், கிறிஸ்தவர், ஐரோப்பியர், அல்லது ஆங்கிலோ இந்தியர், சீக்கியர் போன்றவர்களும், தனித் தொகுதியில் நிலச்சுவான்தார்கள், பல்கலைக் கழகங்கள், தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்கள், சுரங்கத்தொழில், வணிகம், தொழில் முதலியவை அடங்கி இருந்தன. ஒதுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு சில இடங்கள் அளிக்கப்பட்டன. நகர்ப்புறம், நாட்டுப்புறம் என்ற வகையில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டிருந்தன.

மாநிலச் சட்டசபையின் அதிகாரங்கள் இரண்டு வகைகளில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. (1) தீர்மானங்களைச் சட்டசபையில் சமர்ப்பிக்கு முன்னர், ஆளுநரின்மூலம் தலைமை ஆளுநரிடமும் இங்கிலாந்து மன்னரிடமும் அனுமதி பெற்றிருக்கவேண்டும். (2) இச் சட்ட சபைகள் இயற்றும் சட்டங்கள் தற்காலிகமானவை எனக் கருதப்பட்டன. மாநிலத்தின் சட்டம், அமைதி ஆகியவற்றைக் கருதி, ஒரு சட்டத்தைத் தலைமை ஆளுநரின் ஆலோசனை கூறி, அதனை ஆளுநர் செயல்படுத்தாமல் தள்ளி வைக்க முடியும்.

இந்தியச் சட்ட விசாரணைக் குழு (The Indian Statutory Commission) பெண்களுக்கும் ஓட்டுரிமை வழங்கி, விரிவான முறையில் தேர்தல்களை நடத்தவேண்டுமென்று பரிந்துரை செய்தது. சிறுபான்மை வகுப்பினருக்குக் கூடுதலாகச் சட்டசபையில் இடங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது. மாநிலச் சட்டசபைகள் விரிவுபடுத்தப்படவேண்டுமென்றும், தேர்தல் தொகுதிகள் சிறியனவாக அமையவேண்டும் என்றும் கூறப்பட்டது. மாநிலச் சட்டசபைகளில் மேல்சபை நிறுவுதல்பற்றி அங்கத்தினர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தன.

வெள்ளை அறிக்கையின் 74–109ஆவது பிரிவுகளில் மாநிலச் சட்ட சபைகளைப்பற்றி விரிவான முறையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. வங்காளம், மத்திய மாகாணங்கள், பீகார் ஆகிய

மாநிலங்களில் ஈரங்க சட்டசபைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவை, மேல்சபை (Legislative Council), கீழ்ச்சபை (Legislative Assembly) என்று வழங்கப்பட்டன. ஏனைய மாநிலங்களில் கீழ்ச் சபை ஒன்றுதான் (ஒற்றைச் சட்ட மன்றம்) இயங்கிவந்தது. மாநிலங்களின் அதிகாரங்கள் அனைத்தும் அமைச்சர்களிடமே ஒப்படைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு செய்தால் ஆளுநர், தலைமைஆளுநர் ஆகியவர்களின் அதிகாரங் களை அவை பாதிக்கும் என்று கருதி இம் முயற்சி கைவிடப்பட்டது.

இந்திய அரசு ஒருங்கிணைந்த அரசாக (Unitary Government) இயங்கி வந்தது. மாநிலங்கள் நிர்வாக வசதிகளுக்காக உருவாக் கப்பட்டவை என்று கருதப்பட்டு வந்தது. சுருங்கக் கூறின், மாநிலங்கள், மத்திய அரசின் ஏஜன்டுகளாக (Agents) இருந்தன. மாநிலங்களுக்குப் பல அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருந்தாலுங் கூட, ஆளுநரின் தனி அதிகாரங்களால் (Special power) நிர்வாக முறையில் எவ்வித மாறுதலையும் செய்ய முடியவில்லை.

மத்திய மாநில நிதி பகிர்வு: 1853, 1858ஆம் ஆண்டுகளின் சட்டங்களுக்குப் பின்பும் மத்திய அரசிடமே நிதி அதிகாரங்கள் குவிக்கப்பட்டு இருந்தன. மாநிலங்கள், தங்கள் பகுதிகளிலிருந்து வரும் வருவாயைத் தாங்களே செலவிட அனுமதிக்கப்படவில்லை. பெருவாரியான துறைகளிலிருந்து வருவாய் மத்திய அரசிடமே சென்று குவிந்தன. மாநிலங்களுக்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்யவில்லை. இக் குறைபாட்டினால் மாநிலங்களின் வளர்ச்சிகள் தடைப்படுமென்று சர் ரிச்சர்ட் ஸ்ட்ராட்சி (Sir Richard Stratchey) என்பவர், மத்திய அரசுக்கு எடுத்துக் கூறினார். மத்திய, மாநில நிதி பங்கீட்டு முறையில் சிறிது தாராளத் தன்மையை மேயோ பிரபு 1870-ல் புகுத்தினார். காவல்துறை, சிறைச்சாலை, கல்வி, மருத்துவம் போன்ற துறை களுக்கு ஒரு கணிசமான தொகையை மத்திய அரசு வழங்க வேண்டுமென்று வகை செய்யப்பட்டது. இதற்குமேல் செல வாகும் தொகையை மாநிலங்களே தலவரிகளின்மூலம் சரிசெய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது.

தீர்வை, பத்திர விற்பனை, சட்டம், நீதி நிர்வாகம் போன்ற துறைகளை மாநிலங்களுக்கு மாற்றி அமைத்து, மாநிலங்களின் வருவாயைக் கூடுதலாக்கினார். இதுகாறும் மாநிலங்களுக்கு அளித்து வந்த மானியத் தொகையை நீக்கினார். இதற்குப் பதில் நில வருவாயில் ஒரு பகுதியை எடுத்துக்கொள்ள மாநிலங்கள் அனுமதிக்கப்பட்டன. 1907-ல் நியமிக்கப்பட்ட அதிகாரப்

பன்முகப்படுத்து விசாரணைக் குழு (Royal Commission of Decentralisation) மத்திய, மாநில நிதி உறவுமுறைகளைப்பற்றிப் பரிசீலனை செய்து, தனது அறிக்கையை மறு ஆண்டு சமர்ப்பித்தது. இவ் வறிக்கையால் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. 1912-ல் ஹார்டிஞ்ச் பிரபு (Lord Hardinge), மத்திய அரசு, மாநிலங்களுக்கு அளிக்கும் மானியத் தொகையை நிரந்தரமாக்கியதோடு, அவ்வப்போது கிடைக்கும் கூடுதல் வருவாயிலிருந்தும் ஒரு பகுதியை மாநிலங்களுக்குப் பங்கிடு செய்ய ஏற்பாடு செய்தார்.

பல ஒழுங்கு முறைகள் வகுக்கப்பட்டிருந்தபோதிலும், மாநிலங்களின் நிதி விவகாரங்களில் மத்திய அரசு தலையிட்டு வந்தது. மாநில அரசுகளின் மறுப்புகளை மத்திய அரசு பொருட்படுத்தவில்லை. மத்திய அரசின் அனுமதியின்றி மாநில அரசுகள், புதிய வரி விதிக்கவோ, கடன் வாங்கவோ கூடாது. மாநிலங்களின் செலவினங்களையும் மத்திய அரசு கட்டுப்படுத்தி வந்தது. புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், அதிகாரிகளுக்குச் சம்பள உயர்வு அளித்தல் போன்றவை மத்திய அரசுக்குத் தெரியாமல் நடைபெறக் கூடாது என்றும் வற்புறுத்தியது.

மாநிலச் சட்டசபைகளுக்குத் தலைமை ஆளுநர் இயற்றும் சட்டத்தை மாற்றவோ, தள்ளி வைக்கவோ அதிகாரம் கிடையாது. பிரிட்டிஷ் குடிமக்களின் சமயம், வழிபாட்டுமுறை ஆகியவற்றைப் பாதிக்கும் எவ்விதச் சட்டத்தையும் மாநிலங்களால் இயற்ற முடியாது. இந்திய அரசின் வெளிநாட்டு உறவு, சுதேச அரசர்களுடன் கொண்டுள்ள தொடர்பு ஆகியவற்றிலும் தலையிட முடியாது.

மத்திய, மாநில அரசுகள், தனித்தனியே, பல துறைகளைக் கவனித்துவந்தன. பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, சுதேச அரசுகளின் தொடர்பு, ரயில்பாதைகள், கப்பல் போக்குவரத்து, தபால் தந்தி, சுங்க இலாக்கா போன்ற நாற்பத்தேழு துறைகளை மத்திய அரசும், கல்வி, தலஸ்தாபன நிர்வாகம், சுகாதாரம், மருத்துவம், நீர்ப்பாசனம், வேளாண்மை, நிலவருவாய், பஞ்ச நிவாரணம், கூட்டுறவு சங்கங்கள், காடு, தொழில், காவல்துறை, நீதி நிர்வாகம் போன்ற ஐம்பத்திரண்டு துறைகளை மாநிலங்களும் கண்காணித்து வந்தன. இவ்விரு பிரிவினரும் ஒற்றுமையுடன் ஒருங்கிணைந்து பணியாற்றும்பொருட்டு அவ்வப்போது தில்லி, சிம்லா போன்ற இடங்களில் மாநாடுகளைக் கூட்டிப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு வந்தனர். வருவாய் உள்ள துறைகள் அனைத்தும் மத்திய அரசிடமும், செலவினங்கள் உள்ள துறைகள் யாவும்

மாநிலங்களின் நிர்வாகத்திலும் இருந்து வந்தமையால், மாநிலங்கள் ஒவ்வொரு முறையும் மத்திய அரசையே எதிர்நோக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டது.

(3) பொதுப்பணிகள்
(Public Services)

தொடக்க நிலையில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வாணிபத்தையும் நிர்வாகத்தையும், அதன் அலுவலர்களான வியாபாரிகள், தொழிலாளர்கள், எழுத்தர்கள் போன்றவர்களே கவனித்து வந்தனர். ஆனால், இவர்கள் தங்கள் சுயநலம் கருதி, கொடுத்த பணியைச் செம்மையாக நிறைவேற்றாமல் பொறுப்பற்ற முறையில் நடந்து வந்தனர். கார்ன்வாலிஸ் பிரபு (Lord Cornwallis),லஞ்சமுறைகளை அகற்றிக் கம்பெனியின் நிர்வாகத்தைச் சீர் திருத்தி அமைத்தார். 1793ஆம் ஆண்டில் கொண்டுவந்த திட்டம், கம்பெனியில் ஏற்படும் வேலைவாய்ப்புகள் அனைத்தும் கம்பெனியில் பணிபுரிவோருக்கே அளிக்கவேண்டும் என்று கூறியது. பொதுப் பணி அலுவலர்கள் தனிப்பட்ட முறையில் வாணிபம் செய்யக் கூடாது என்றும், வெகுமதி எதுவும் பெறக்கூடாது என்றும் வலி யுறுத்தியது. தங்களுடைய பணியாளர்கள் பதவியைத் தவறாகப் பயன்படுத்தாதிருக்கும்பொருட்டு, அவர்களின் மாத ஊதியம் கணிசமாக உயர்த்தப்பட்டது. அத்துடன் உயர் பதவிகளில் ஒரு பகுதியும், இவர்களுக்கென ஒதுக்கப்பட்டது. 1800ஆம் ஆண்டில் வெல்லஸ்லி பிரபு (Lord Wellesley), போர்ட் வில்லியம் கல்லூரி (Fort William College) என்ற ஒன்றை இளம் பொதுப்பணி அதி காரிகளின் பயிற்சிக்கென ஆரம்பித்தார். இவ் வதிகாரிகளுக்கு இலக்கியம், விஞ்ஞானம், இந்திய மொழிகள் ஆகியவை போதிக் கப்பட்டன. இந்த நிறுவனம், பிற்காலத்தில் வங்காள சிவில் அலுவலர்களுக்கு இந்தியமொழி போதிக்கும் கல்வி நிலையமாக 1854ஆம் ஆண்டுவரை இயங்கிவந்தது. கிழக்கிந்திய நாடுகளில் தொண்டாற்றுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளுக்கு இரண்டாண்டுகள் பயிற்சி அளிக்க இங்கிலாந்திலுள்ள ஹெய்லிபரி (Haileburv) என்ற இடத்தில் கல்லூரி ஒன்றை 1806ஆம் ஆண்டு நிறுவினர்.

1853ஆம் ஆண்டுவரை நிர்வாக அலுவலர்களை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி இயக்குநர்களே தேர்ந்தெடுத்து வந் தனர். இயக்குநர் குழுத் தலைவர் சர் சார்லஸ் உட் (Sir Charles Wood) என்பவர், கிழக்கிந்தியக் கம்பெனியின் அலுவலர்களுக்கு எனத் தேர்வு நடத்தி, அதில் வெற்றி பெறுவோருக்கே பதவி அளிக்கவேண்டுமென ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குத் தெரி

வித்தார். இதன்மூலம் அறிவுத்திறனுள்ள இந்திய வாலிபர்கள் கிடைப்பார்கள் என்பது அவரது நோக்கம். இக் கருத்தை மெக்காலே பிரபு (Lord Macaulay) என்பவரும் வலியுறுத்தினர். 1853ஆம் ஆண்டின் சட்டம் 32ஆம் பிரிவின்படி, இந்தியாவில் பொதுப்பணிகளுக்கான தேர்வுக் கமிஷன் (Indian Public Service Commission) ஒன்றை நிறுவ வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது. 1860ஆம் ஆண்டின் சட்டத்தின்படி தேர்வு எழுதும் வேட்பாளர்களின் வயது 23-லிருந்து 22 ஆகக் குறைக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஓராண்டுப் பயிற்சிக் காலத்தை இங்கிலாந்தில் கழிக்கவேண்டும். 1866ஆம் ஆண்டிலிருந்து வேட் பாளரின் வயது 22-லிருந்து 21ஆகக் குறைக்கப்பட்டது. வெற்றி பெற்ற நபர்கள் இங்கிலாந்தில் ஏதாவது ஒரு பல்கலைக் கழகத்தில் இரண்டாண்டு பயிற்சிக் காலத்தைக் கழிக்கவேண்டும். இந்திய அமைச்சர் திரு. உட் (Mr. Wood) என்பவரின் முயற்சியால் உரு வாக்கப்பட்ட இந்தியன் சிவில்பணி, 1861ஆம் ஆண்டின் சட்டத் தின்படி (Indian Civil Service Act of 1861) சில உயர்பதவிகள் ஒப்பந்த உத்தியோகத்திலுள்ள அதிகாரிகளுக்கே ஒதுக்கப்பட் டிருந்தன.

1860ஆம் ஆண்டிற்குப் பின்னர், இந்தியப் பொதுப்பணி களுக்கான தேர்வுகளில் ஆங்கில வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. 1860ஆம் ஆண்டில் 80 இடங்களுக்கு 154 வேட் பாளர்களும் 1865ஆம் ஆண்டில் ஏற்பட்ட 50 இடங்களுக்கு 284 வேட்பாளர்களும் 1870ஆம் ஆண்டில் ஏற்பட்ட 40 இடங் களுக்கு 325 வேட்பாளர்களும் போட்டியிட்டனர்.

இந்தியர்களுக்குக் குறுக்கிட்ட தடைகள்

பிரிட்டிஷ் பல்கலைக் கழகத்தின் தரத்திற்கு ஒப்ப நடத்தப் படும் தேர்வுகளில் இந்திய வாலிபர்கள் இங்கிலாந்திற்குச் சென்று போட்டியிடுவது சக்திக்கு மீறியதாகத் தோன்றியது. இந்தி யாவிலிருந்து இங்கிலாந்து செல்வதற்குச் செலவும் சிரமமும் அதிகம். இந்துக்களுக்குக் கடல் கடந்து செல்வதும் ஒரு சமூகத் தடையாயிருந்தது. எனவே, பெருவாரியான பிராமண வகுப் பைச் சேர்ந்த வாலிபர்கள், இத் தடையை மீறத் துணியவில்லை. இக் கருத்தைச் சர் சுரேந்திரநாத் பானர்ஜீ, பல இடங்களில் தெரிவித்துள்ளார். இக் காரணங்களால் ஒரு சில இந்திய வாலிபர்களே தேர்வுப் போட்டியில் கலந்துகொள்ள முடிந்தது. விக்டோரியா அம்மையாரின் பிரகடனப்படி, இந்திய அரசின் வேலை வாய்ப்புகளில் இந்தியர்களுக்கும் கணிசமான பகுதி

ஒதுக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்திய வாலிபர்கள் பொதுப்பணிகளில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இக் குறைபாட்டைப் பிரிட்டிஷ் அரசியல் வாதி, ஹஃப்டன் பிரபு (Lord Houghton) போன்றவர்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றனர். 1858-க்குப் பின், இந்திய நிர்வாகம், கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேர் ஆட்சிக்கு வந்த பின்பும், சர் சார்லஸ் உட்டின் பரிந்துரைகள் நடைமுறைக்கு வரவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அதற்கிணங்க, அப்போது இந்திய அமைச்சராக (Secretary of State for India) இருந்தவர், சர் சார்லஸின் திட்டத்தைச் செயல்படுத்தும் படி 185? ஆம் ஆண்டில் கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆனல், அவர் அவ் விஷயத்தில் அக்கறை கொள்ளவில்லை.

இந்தத் தேர்வு முறைகள் நடைமுறைக்குக் கொண்டு வந்துங் கூட, இந்திய வாலிபர்கள் பொதுப்பணி அலுவலர்களாகவும், அதிகாரிகளாகவும் தேர்வுபெற அதிக வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. ஆங்கில வேட்பாளர்களே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். 1869ஆம் ஆண்டில் சர் சுரேந்திரநாத் பானர்ஜி (Sir Surendranath Banerji), திரு. ரமேஷ் சந்திர தத் (Mr. Ramesh Chandra Dutt); திரு. பிகாரிலால் குப்தா (Mr Biharilal Guptha) ஆகிய மூவரும், இவ் வரசாங்கப் பணிக்கான தேர்வில் வெற்றி பெற்றனர். 1870ஆம் ஆண்டில் நடந்த தேர்வில் 7 இந்திய வேட்பாளர்கள் கலந்து கொண்டதில் ஒருவர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டார். உயர்தர ஒப்பந்த உத்தியோகங்களுக்கு (Covenanted Civil Service) இந்தியர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று 1879 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் நாளில் சட்டம் இயற்றப்பட்டது. ஆனல், அது நல்ல குடும்பம், நல் நடத்தை, சமூகநிலை, கல்வி, திறமை ஆகியவை அமைந்த வாலிபர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருந்தது. அத்துடன் இவ் உயர் பதவிகளில் ஆறில் ஒரு பகுதியை இந்தியர்களுக்கு அளிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இவர்களை மாநில அரசுகள் தேர்ந்து அனுப்ப வேண்டும். இத் தேர்வை இந்திய அரசும், இங்கிலாந்திலுள்ள இந்திய அமைச்சரும் அங்கிகரிக்கவேண்டும். சட்டப்பூர்வமான சிவில் அலுவல் (Statutory Civil Service) இம் முறையில் உருவாகியது. இதனல் நல்ல பலன் எதுவும் இந்தியர்களுக்குக் கிடைக்கவில்லை.

இச் சட்டப்பூர்வமான சிவில் சேவைமுறை அமலில் இருந்த ஏழு ஆண்டுகளில் 60 பேர் வேலையில் நியமிக்கப்பட்டிருந்தனர்.

உயர் பதவிக்கான தேர்வை ஒரே சமயத்தில் இங்கிலாந்திலும், இந்தியாவிலும் நடத்த வேண்டும் என்று பம்பாயில் 1885ஆம் ஆண்டில் கூடிய இந்திய தேசீய காங்கிரசின் வற்புறுத்தலும் அரசாங்க உயர் பதவிகளில் அதிக இந்தியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற பொதுமக்களின் கிளர்ச்சியும் இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆட்சியாளரைத் தூண்டின. அத்துடன் தேர்வில் கலந்துகொள்ளும் இந்திய வாலிபர்களின் வயதையும் கூட்ட வேண்டுமென்ற கோரிக்கையும் வலுப்பெற்றிருந்தது. இப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் டப்ரின் பிரபு, 1886ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் நாள் பொதுப்பணிகளை ஆராய வென்று ஆணைக் குழு (Public Service Commission) ஒன்றை நிறுவினர். இக் குழுவிற்குத் தலைவராகப் பாஞ்சாலத்தின் உதவி ஆளுநர் சர் சார்லஸ் அட்சிசன் (Sir Charles Aitchison) என்பவர் நியமிக்கப்பட்டார். இவருடன் ஒரு செயலாளரும், 15 அங்கத்தினரும் நியமிக்கப்பட்டிருந்தனர். இப் பதினைந்து அங்கத்தினர்களில் நான்கு இந்துக்களும் இரண்டு முகமதியர்களும் இருந்தனர். ஐரோப்பியர்களில் 5 பேர் ஒப்பந்த சிவில் அலுவலாளர்கள் (Covenanted Civil Servants). மற்றொருவர், ஒப்பந்த சிவில் பணியாளராக இல்லாதவர். சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாகப் பணியாற்றியவர் ஒருவர், ஏனைய இருவர், ஆங்கில இனத்தைச் சார்ந்த தனியார். இதுகாறும் கிளர்ச்சிகள் செய்து வரும் இந்தியர்களுக்கு நிர்வாகத்தில் அதிக வாய்ப்பளிப்பதும், உயர் பதவிகளுக்கு ஏற்ற தகுதியும் திறமையும் இந்திய வேட்பாளருக்கு அமைந்துள்ளனவா என்பதைத் தெரிந்துகொள்வதுமே இக் குழுவின் நோக்கம்.

ஒப்பந்த சிவில் அலுவலாளர்களைத் தேர்ந்து எடுக்கும் தேர்வை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்துதல் ஆகாது என்றும், இங்கிலாந்தில் நடைபெறும் தேர்வுகளில் கலந்துகொள்ளும் இந்திய வேட்பாளர்களின் வயது 19-க்குக் குறையாமலும் 23 வயதிற்கு மேற்படாமலும் இருக்கவேண்டுமென்றும் இக் குழு கருத்துத் தெரிவித்தது. மேலும் ஒப்பந்த இந்திய சிவில் சேவையை (Covenanted Civil Service of India) இந்தியப் பேரரசு சிவில் சேவை (Imperial Civil Service of India) என்று மாற்றவேண்டும் எனத் தனது பரிந்துரையில் தெரிவித்தது. அத்துடன் இவ் வலுவலர்களை அரசு விரும்பும் எல்லா இடங்களுக்கும் சென்று பணியை மேற்கொள்ளச் செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தியது. மாநிலங்களுக்குத் தேவையான அலுவலர்களைத் தேர்ந்துகொள்வதற்கும் மாநிலச் சேவையை (Provincial Service) இக் குழு பரிந்துரை செய்துள்ளது. மாநிலங்களில் கீழ்நிலை சிவில

சேவை (Subordinate Civil Service) என்ற ஒன்றை நிறுவுவதற்கு வகை செய்தது. சட்டப் பூர்வமான சேவை என்பதை நீக்கியது.

இந்திய அரசும், இங்கிலாந்திலுள்ள இந்திய அமைச்சரும் சர் சார்லஸ் அடசிசன் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டனர். இதற்குப் பின், ஒப்பந்த சிவில் சேவை (Covenanted Civil Service), இந்திய சிவில் சேவை (Civil Service of India) (I.C.S.) என்று வழங்கப்பட்டது. இப் பரிந்துரைகளைச் செயல்படுத்த 1892ஆம் ஆண்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

நிர்வாகமுறைகளில் பல முற்போக்கான மாறுதல்கள் ஏற்படுத்தவே புதிய பல துறைகள் தோற்றுவிக்கப்பட்டன. அவை கல்வி, பொதுப்பணிகள், வேளாண்மை, நில அளவை, தபால், தந்தி, உப்பு, காடு, சுகாதாரம், சிறைச்சாலை, மருத்துவமனை ஆகியவையாகும். இவையும், பேரரசு (Imperial), மாநிலம் (Provincial), கீழ்நிலை (Subordinate) ஆகிய மூன்று தனிச் சேவைகளாகப் பிரிக்கப்பட்டன. சர் சார்லஸ் ஆட்சிசனின் குழு 'நிர்வாகத் துறைகளின் தரத்தை உயர்த்தியுள்ளது' என்று முப்பது ஆண்டுகளுக்குப் பின் ஏற்படுத்தப்பட்ட இஸ்லிங்டன் ஆணைக் குழு (Islington Commission) குறிப்பிட்டுள்ளது. ஆனால் இச் சீர்திருத்தங்கள் அனைத்தும் இந்தியர்களின் நோக்கங்களை நிறைவேற்றவில்லை.

இந்திய சிவில் சேவைக்கு, இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே நேரத்தில் தேர்வு நடத்தப்படும் என்ற தனது தீர்மானத்தை இந்திய அமைச்சருக்கும் இந்திய அரசுக்கும் 1893-ல் இங்கிலாந்துப் பாராளுமன்றம் தெரிவித்தது. ஆனால், இந்தியாவின் கவர்னர் ஜெனரல் லான்ஸ்டோன் பிரபு, மாநில ஆளுநர்களின் கருத்துகளை அறிந்து பாராளுமன்றத்தின் நோக்கத்திற்கு எதிராகத் தனது கருத்தை 1893ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதியில் அறிவித்தார். இந்தியாவில் உயர் பதவிகளுக்கெனத் தேர்வு நடத்தி, இந்தியர்களுக்கு நிர்வாகத் துறையில் அதிக வாய்ப்புகள் அளித்தால், அது பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஊறு விளைவிக்கும் என்றும், பிரிட்டிஷ் அதிகாரிகளின் எண்ணிக்கை நாளாவட்டத்தில் குறைந்து போவதுடன், இந்திய நிர்வாகத் துறையில் முகமதியர்கள், சீக்கியர்கள் போன்ற சிறுபான்மையினருக்கு வாய்ப்பு இல்லாமற் போய்விடும் என்றும் எடுத்துக் கூறினர். பொதுமக்கள் சபையின் (House of Commons) உத்தரவையும் செயல்படுத்தவில்லை. ஆனால், இந்திய அமைச்சரான ஃபவுலர் (Fowler) இந்தியர்களுக்கு எனச் சில உயர் சிவில் பதவிகளை உரு

வாக்கி, நிர்வாகத்தில் அதிகப் பங்குகொள்ள வைத்து இந்தியர்களின் வெறுப்பையும் கிளர்ச்சிகளையும் தவிர்க்கலாமென ஆலோசனை கூறினர். இருப்பினும், இந்தியா முழுவதிலும், உள்ள அரசியல்வாதிகள், பட்டதாரிகள், முற்போக்காளர்கள் அனைவரும் இந்திய நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு அதிக வாய்ப்பு அளிக்கவேண்டும் என்றும், குறிப்பாக, மேல்மட்ட உத்தியோகங்களுக்காக நடத்தப்படும் தேர்வு, இந்தியாவிலும் நடத்தப்பட வேண்டும் என்றும் கிளர்ச்சிகள் நடத்திவந்தனர். 1895ஆம் ஆண்டில் பூனாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில், சுரேந்திரநாத் பானர்ஜி, தமது தலைமை உரையில் மேலே குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்திப் பேசி உள்ளார். இந்தியர் என்ற காரணத்தால், அவர்கள் பிறந்த இந்திய மண்ணில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்படுவது கொடுமையிலும் கொடுமை எனக் கூறியுள்ளார். முஸ்லீம்கள் தேர்வு முறை நடத்தி, அதன்மூலம் உயர் பதவிகளை இந்தியர்களுக்கு வழங்குவதை எதிர்த்தனர். மேலும், இங்கிலாந்து, இந்தியா ஆகிய இரு இடங்களிலும், ஒரே நேரத்தில் தேர்வு நடத்தும் முறையையும் அவர்கள் ஆதரிக்கவில்லை. முஸ்லீம் அங்கத்தினர்கள் ஐரோப்பியர்களுடன் இணைந்து தேர்வுமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எதிர்ப்பாளர்களில் முக்கியமானவர், சர் சையத் அகமத்கான் (Sir Syed Ahamad Khan) என்பவர் ஆவர்.

கீழே கொடுக்கப்பட்ட அட்டவணை இந்தியர்களின் நிலையை உணர்த்தும்.

ஆண்டு	காலி இடங்கள்	வேட்பாளர்கள்	இந்திய வேட்பாளர்கள்	வெற்றி பெற்ற இந்தியர்
1870	40	332	7	1
1880	27	182	2	0
1890	47	205	10	5
1900	52	213	17	2
1910	60	184	20	1
1914	53	183	26	7

ஹார்டிஞ்ச் பிரபுவின் சீர்திருத்தம்

இஸ்லிங்டன் பிரபுவின் தலைமையில் அரசு உயர் ஆணைக் குழு (Royal Commission) ஒன்று அமைக்கப்பட்டது. அதில் ராம்சே

மேக்டனுல்ட், வேலண்டின் சிரோல், கோகலே, சர் அப்துல் ரஹ்மான் ஆகிய நால்வரும் இடம்பெற்று இருந்தனர். இவர்களின் அறிக்கை 1915ஆம் ஆண்டில் வெளியிடத் தயாராகியும்கூட, முதல் உலகப்போரின் காரணமாக, 1917ஆம் ஆண்டுவரை வெளியிடப்படவில்லை. ஆனல், இக் குழுவின் அறிக்கையால் எவ்விதப் பயனும் இந்தியர்களுக்கு ஏற்படவில்லை. 1919ஆம் ஆண்டில் வந்த திரு மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்த அறிக்கையில் (Mr. Montagu and Lord Chelmsford Reform Scheme of 1919) பொது நிர்வாகப் பணிகளைப்பற்றிய கருத்துகள் தெரிவிக்கப் பட்டன. அதன்படி அதிகாரிகள் நல்நடத்தையும், நம்பிக்கைக்கு உரிய தன்மையும் கொண்டு இருக்கவேண்டும் என்றும், அரசு விரும்பும் எவ்விடத்திற்கும் அவர்கள் சென்று பணியாற்ற வேண்டும் என்றும், அவர்கள் பொதுப்பணிக்குக் கீழுள்ள எந்த அதிகாரியாலும் வேலை நீக்கம் செய்யப்படக் கூடாது என்றும், இந்திய அமைச்சரின் ஆலோசனைக் குழுவினரால்தான் திரும்பவும், வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர் என்றும் குறிப்பிட்டிருந்தது. இந்தியர்கள் அதிக அளவில் அரசாங்கத்தில் பங்குகொள்ளவேண்டும்; அரசாங்கப் பணிகள் இந்தியர் மயமாகும் நிலையை விரைவுபடுத்த வேண்டுமென்பதை இவ்வறிக்கை வலியுறுத்தியது. நிர்வாகத் துறையில் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே, பிரிட்டிஷ் அதிகாரிகளிடையே பகைமை உணர்வும் வெறுப்பும் அதிகரித்தன. இந்திய அமைச்சர்களுக்கும் (Viceroy's Council Members) பிரிட்டிஷ் உயர்தர அதிகாரிகளுக்கும் இடையே மனத்தாங்கல்கள் ஏற்பட்டன. இந்நிலையைத் தவிர்க்க, 1920-க்கு முன்பு, அரசாங்கப் பணியில் சேர்ந்த ஊழியர்கள், தங்கள் ஓய்வுக்காலம் முடியும் முன்னரேயே தாங்கள் செய்த சேவைக்காலத்திற்குத் தகுந்த ஓய்வு ஊதியம் பெற்றுச் செல்லலாம் என்ற விதியை ஏற்படுத்தினர். இந்திய அதிகாரிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதுவே இவ் வுத்தரவின் நோக்கம்.

பொது சிவில் பணிகளை மேலும் ஆராய 1923ஆம் ஆண்டிற்குப் பின், மற்றோர் ஆணைக்குழுவினை லீ பிரபுவின் (Lord Lee) தலைமையின்கீழ் நிறுவினர். இது தனது அறிக்கையை 1924ஆம் ஆண்டில் வெளியிட்டது. இதன்படி இந்தியாவில் உடனடியாக ஐந்து அங்கத்தினர்கள் அடங்கிய பொதுப்பணி தேர்வுக்குழு (Public service Commission) ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும், அஃது அரசாங்கப் பணி அலுவலர்களின் நடத்தை, சேவை, போன்றவற்றைக் கண்காணிக்கவேண்டும் எனவும் தெரிவித்தது. மத்திய அரசின் அதிகாரத்திலுள்ள சிவில்

அலுவலக அதிகாரிகள், இந்தியன் பாதுகாவல் துறை, வேளாண்மை, பொறியியல் துறை, காட்டு இலாகா போன்ற துறைகளுக்குத் தேவையான அதிகாரிகளின் நியமனங்களை இந்திய அமைச்சர் அங்கீகரிக்கவேண்டும். சிவில் மருத்துவத்துறை ராணுவத்திலிருந்து வரும் சில மருத்துவ அதிகாரிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனப் பரிந்துரை செய்தது. மேலும் பொதுப்பணிக் குழு ஆங்கிலோ இந்தியர்களுக்கு உயர் பதவிகளில் சலுகைகள் வழங்க வேண்டுமென்று வற்புறுத்தியது, மத்தியக் கூட்டு அரசுக்கு ஒரு பொதுப் பணித் தேர்வுக்குழுவும் (Federal Public Service Commission), மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஒவ்வொரு பொதுப்பணித் தேர்வுக்குழுவும், நிறுவ வேண்டுமென்றும் பரிந்துரை செய்தது.

மேலும் லீ ஆணைக்குழு, இந்தியப் பொதுப்பணிகளில் கூடிய மட்டும் இந்தியர்களைச் சற்று அதிகமாகவே சேர்த்துக்கொள்ளும் படி கூறியது. இந்திய சிவில் பணிகளில் (Indian Civil Service) பத்துச் சதவீத இடங்கள் மாநில அதிகாரிகளால் நிரப்பப்பட வேண்டும். இப் பணிகளுக்கு நேரடித் தேர்வுகள் நடைபெறும் போது இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் சரிபாதியாக வேலை வாய்ப்புகள் வழங்கவேண்டும். இதே நிலை நீடித்தால், சுமார் 15 ஆண்டுகளில் இத்தகைய பொதுப்பணிகளில் இந்தியர் களின் எண்ணிக்கை பாதியாக உயருமென எதிர்பார்க்கப்பட்டது. காவல் துறையைப் பொறுத்தவரை ஐந்து ஐரோப்பியர்களுக்கு மூன்று இந்தியர்கள் என்ற விகிதத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்தது. இதில் மாநிலங்களில் கீழ் நிலையிலிருந்து உத்தியோக உயர்வு பெற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டது. இந்தச் சதவீதம் நீடித்தால் 1949-க்குள் காவல்துறை இலாக்காவில் பாதிக்குமேல் இந்திய அதிகாரிகளாக இருப்பர் எனக் கணக்கிடப்பட்டது. காட்டு இலாகாவைப் பொறுத்தவரை இந்தியர்களுக்கு ஏழு சதவீதமும். ஐரோப்பியர்களுக்கு 25 சதவீதமும் அளிக்கப்படவேண்டுமெனப் பரிந்துரை செய்யப்பட்டது. நீர்பாசன இலாகாவைப் பொறுத்த மட்டில் இந்தியர்களும், ஐரோப்பியர்களும் சரி பாதியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது இவற்றைப் போன்று உள்நாட்டு விவகாரம், சுங்கம், தபால் தந்தி, ரெயில்வே, கம்பியில்லாத்தந்தி போன்ற இலாகாக் களிலும் இந்தியர்களின் எண்ணிக்கைகளைக் கணிசமான வகையில் அதிகரிக்க வேண்டுமென்று லீ ஆணைக்குழு பரிந்துரை செய்தது.

இந்தியன் சிவில் பணியாளர்களின் மாதாந்திர ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று லீ ஆணைக்குழு பரிந்துரை செய்தது. ஐரோப்பியர் தங்களுடைய வருவாயிலிருந்து மாதாமாதம் தேவையான தொகையை இங்கிலாந்திலுள்ள தங்கள் உறவினர்களுக்கு அனுப்பவும் வசதி செய்யப்பட்டது. அத்துடன் இநதியன் சிவில் பணியாளர்கள் இங்கிலாந்திற்கு அரசாங்கச் செலவில் குடும்பத்துடன் போய்வர வசதி செய்து கொடுக்க வேண்டுமெனக் கூறப்பட்டது. ஐரோப்பியப் பணியாளர் ஒருவர் இறந்துவிட்டால் அவரது குடும்பத்தினரை இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் செலவையும் இந்தியாவே ஏற்கவேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டது. மருத்துவ வசதி குடும்ப உதவித்தொகை, விரும்பிய காலத்தில் ஓய்வு பெற வசதி ஆகியவை ஐரோப்பிய அதிகாரிகளுக்கு அளிக்கவேண்டும் என்று கூறப்பட்டது.

இந்தியாவிற்குப் பொதுப்பணிக்குழு ஒன்றை நிறுவவேண்டுமென்று 1919ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் எடுத்துக் கூறியது. 1923-ல் நிறுவப்பட்ட லீ ஆணைக்குழு இத்தகைய பொதுப்பணிக்குழு கட்டாயமாக நிறுவப்படவேண்டுமென்று வற்புறுத்தியது.

1935ஆம் ஆண்டு இந்தியச் சட்டம்

1935ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தின்படி ஐரோப்பியர்களின் அரசாங்கப்பதவி விகிதாசாரம் லீ ஆணைக்குழு ஏற்படுத்திய பரிந்துரைகளின்படி பராமரிக்கப்படவேண்டுமென்றும், இதில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தக் கூடாதென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இந் நிலைக்கு ஆபத்து ஏற்படாதவாறு ஆளுநரும், தலைமை ஆளுநரும் கண்காணித்துக் கொள்ளவேண்டும் எனவும் வற்புறுத்தப்பட்டது. இந்தியாவில் பணியாற்றும் அதிகாரிகளின் காலவரையறை இங்கிலாந்து மன்னர் விருப்பப்படி அமைந்திருக்கும். மன்னர் விரும்பினால் இவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம். தங்களை அரசாங்கம் வேலை நீக்கம் செய்தால், மன்னருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்காட உரிமை வழங்கப்பட்டது. ஓர் அதிகாரி பணியாற்றி வந்த பதவி ஒழிக்கப்பட்டால், அவருக்கு நஷ்ட ஈட்டுத் தொகை அளிக்க இச் சட்டத்தில் வகை செய்யப்பட்டது.

1935ஆம் ஆண்டுச் சட்டம், இந்தியாவில் பொதுப்பணிக்குழு (Public Service Commission) ஒன்று நிறுவப்பட வேண்டு

மென்றும் மாநிலங்களிலும் இத்தகைய குழுக்களை நிறுவ வேண்டு மென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் சேர்ந்து ஒரு பொதுப் பணிக்குழுவை நியமித்துக் கொள்ளவும் இச் சட்டத்தில் வகை செய்யப்பட்டது.

பொதுப் பணிக் குழுவின் அங்கத்தினர்ளின் எண்ணிக்கையை ஆளுநரோ, அல்லது தலைமை ஆளுநரோ நிர்ணயிக்க வேண்டும். இந்த எண்ணிக்கையில் பாதி இந்தியாவில் 10 ஆண்டுகள் பணி யாற்றியவர்களாக இருக்கவேண்டும். மத்திய அரசின் பொதுப் பணிக் குழுவின் தலைவர் ஓய்வு பெற்ற பின், ஊதியம் பெறும் எவ்விதப் பணியும் செய்யக்கூடாது எனச் சட்டம் வகுக்கப் பட்டுள்ளது. மத்திய, மாநில பொதுப் பணிக்குழு பல்வேறுபட்ட பணிகளுக்கு அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்க அவ்வப்போது போட்டித் தேர்வுகள் நடத்த வேண்டும். அதிகாரிகளின் உத்தி யோக உயர்வு, அவர்களின் நடத்தை சம்பந்தப்பட்ட பிரச்சினை, உதவித் தொகை போன்றவை சம்பந்தமாக அரசு பொதுப்பணிக் குழுவைக் கலந்து ஆலோசித்துக் கொள்ளவேண்டும்.

சுதந்திர இந்தியாவில் பொதுப் பணிக்குழு

இந்திய அரசியல் சட்டம் 315ஆவது சரத்தின்படி மத்திய அரசுக்கு ஒரு பொதுப் பணிக்குழுவும் ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் இணைந்து ஒரு பொதுப்பணிக் குழுவை நிறுவ விரும் பினால், அதற்குரிய சட்டத்தைப் பாராளுமன்றம் இயற்றித் தரு மென்று இச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஆளுநர், தனது மாநிலத்திற்கு மத்தியப் பணிக்குழுவே அதிகாரிகளைத் தேர்ந் தெடுத்து அனுப்ப வேண்டுமென்று அறிவித்தால், குடியரசுத் தலைவரின் இசைவு பெற்று மத்திய பொதுப் பணிக்குழு அதற்கும் ஆவன செய்யும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

316-வது சரத்தின்படி மத்திய அரசின் பொதுப்பணிக் குழுவின் தலைவரைக் குடியரசுத் தலைவரும், மாநிலப் பொதுப் பணிக் குழுவின் தலைவரை ஆளுநரும் தேர்ந்தெடுப்பார்கள். இக் குழுவின் பாதி அங்கத்தினர்கள் மத்திய, மாநில அரசுகளில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்களாக இருக்கவேண்டும். இவர்கள் ஆறு ஆண்டுக் காலம்வரை பதவியில் இருப்பார்கள்; அல்லது 65 வயது நிரம்பியபின் ஓய்வு பெறவேண்டும். மாநிலங் களின் பொதுப் பணிக்குழுவினர் 60 வயது வரை பதவியிலிருக் கலாம். அங்கத்தினர் விரும்பினால் ஓய்வுக் காலம் அடையு முன்பே

பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம்; அல்லது அவர் பதவி நீக்கம் செய்யப்படலாம். ஓய்வுக்குப்பின் அவர் எந்தப் பதவியும் வகிக்கலாகாது.

மத்திய மாநிலப் பொதுப்பணிக்குழு அரசாங்கப் பதவி களுக்குத் தேவையான அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு அவ்வப்போது போட்டித் தேர்வுகள் நடத்த வேண்டும். அரசாங்கப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கும்முறை, அவர்களின் பதவி உயர்வு, ஒரு வேலையிலிருந்து மற்றொரு வேலைக்கு மாற்றம் செய்தல், ஒழுங்கு நடவடிக்கை போன்றவற்றைப் பொதுப்பணிக் குழுவை அரசு கலந்து கொள்ளவேண்டும்.

மத்திய அரசியல் சட்டத்தின் 323ஆவது சரத்தின்படி மத்திய அரசின் பொதுப்பணிக்குழு, தனது நடவடிக்கைகளைப்பற்றி அறிக்கை ஒன்றைக் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதன் நகல் ஒன்றைக் குடியரசுத்தலைவர் பாராளு மன்றத்தில் சமர்ப்பிப்பார். இதைப்போன்று மாநிலப் பொதுப் பணிக் குழுவும் மாநில ஆளுநரிடம் தனது ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். அவர் மாநிலச் சட்டசபைக்கு அவ் வறிக்கையின் பிரதியை அனுப்பி வைப்பார். அரசாங்கத்திற்கும் பொதுப்பணிக் குழுவிற்கும் பல துறைகளில் கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன. தற்காலிகமான பணிகளுக்குப் பணி யாளர்களை ஓராண்டுக்குமேல் அமர்த்தக்கூடாது என்பது கருத்து வேறுபாடுகளில் ஒன்று. அவ்வாறு அந்தப் பதவியில் ஒருவரது சேவையை நீட்டிக்க வேண்டுமாயின் பொதுப்பணிக் குழுவின் முன் அனுமதியைப்பெற வேண்டுமென்று பொதுப்பணிக் குழு வற்புறுத்தி வருகிறது.

பொதுப்பணிக் குழுவின் குறைபாடுகள்

1. ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் இந்தியர்களைப் பெரிய பதவிகளில் நியமிக்கவில்லை. இச் செயல் இந்தியர்களின் தன்மானப் பிரச்சினையாக அமைந்திருந்தது. தங்கள் நாட்டிலேயே ஐரோப்பியர்களைவிட, இந்தியர்கள் எல்லாவகையிலும் தாழ்ந்த வர்கள் என்ற உணர்வை இச் செய்கை ஊட்டி வந்தது.

2. பொதுப்பணிக் குழு அங்கத்தினர்களுக்கு இந்திய அரசு ஏராளமான ஊதியத்தொகை வழங்கி வந்தது. இந்தியா போன்ற ஏழ்மையான நாட்டில் இவ்வளவு பெரிய ஊதியத் தொகைகள் அதன் வளமையைக் குலைப்பதாக அமைந்துள்ளது என்று காங் கிரஸ் கட்சி அரசிடம் எடுத்து முறையிட்டது.

3. இந்திய சிவில் அதிகாரிகள் பெரும்பான்மையோர் ஆங்கிலேயர்கள். இவர்கள் நிறைந்த அனுபவம் பெற்று ஒய்வு பெற்றபின் இங்கிலாந்திற்கே சென்று தங்கி விடுகின்றனர். இதனால் அத்தகைய அனுபவத்தை அடைந்த அதிகாரிகளால் இங்கிலாந்து நல்லபயன் அடைந்தது. வாய்ப்பளித்து ஊதியம் அளித்த இந்தியாவிற்கு அனுபவமுள்ள அதிகாரிகளால் பயனேதும் இல்லாமல் போய்விடுகிறது.

4. இந்திய சிவில் அதிகாரிகள் ஓர் இயந்திரத்தைப் போன்று தங்கள் நலங்கருதிப் பணியாற்றி வந்தவர்கள். மக்களின் நலத்தை அவர்கள் சிறிதேனும் கருதவில்லை. இதனால் வளர்ச்சித் திட்டம் எதுவும் இந்தியாவில் தோற்றுவிக்கப்படவில்லை என்று மார்லி பிரபு கூறியுள்ளார்.

சுதந்திர இந்தியாவிலும் பொதுப்பணி அதிகாரிகள் தங்கள் கடமையை உணர்ந்து பணியாற்றவில்லை என்று இந்திய அரசு நியமித்த கோரவாலா ஆணைக்குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

(4) தல தன்னாட்சி முறை
(Local Self Gevernment)

கிராம ஆட்சி

நீண்ட நெடுங்காலமாக இந்தியாவில் ஒருவகை கிராமத் தன்னாட்சி முறை இயங்கி வந்திருக்கின்றது. இஃது இந்தியாவில் ஏற்பட்ட பற்பல படையெடுப்புகள், அரசியல் மாற்றங்கள் போன்றவற்றில் அதிகம் பாதிக்கப்படாமல், 19ஆம் நூற்றாண்டின் தொடக்ககாலம்வரை நிலைத்திருந்தது இக் கருத்தைச் சர் சார்லஸ் மெட்காஃப் (Sir Charles Metcalf) என்ற கவர்னர் ஜெனரல் வலியுறுத்தியுள்ளார். 'கிராம சபைகள் ஓரளவு மக்களாட்சி முறையைக் கையாண்டு தங்கள் தேவைகளுக்கும், பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வந்துள்ளன. இந்தியாவில் இக் கிராமக் குழுக்கள் ஏனைய அமைப்புகளைவிட நின்று நிலைத்திருக்கின்றன. அரச பரம்பரைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி மறைந்திருக்கின்றன. மாற்றங்களும், கிளர்ச்சிகளும் தோன்றியிருக்கின்றன. இந்தியர், பத்தானியர், மராட்டியர், சீக்கியர், ஆங்கிலேயர் ஆகியோர் செல்வாக்குப் பெற்று நாடாண்டுள்ளனர். ஆனால் இந்தியாவில் கிராமத் தன்னாட்சி முறை மங்காமல் நிலைபெற்று வந்திருக்கிறது.

நாடு பறிக்கும் துறையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தாலும், கால மாற்றத்தின் காரணமாகவும் உள்நாட்டுக் கிராம சபைகளின் பணிகளை ஆங்கிலேயர் அபிவிருத்தி செய்ய இயலவில்லை. ஆனால் வாய்ப்புக் கிடைத்தபோது இச் சபைகளை இங்கிலாந்தில் இயங்கி வந்த தல ஆட்சி முறைப்படி அமைக்க முயன்றுள்ளனர். தேவையின் அவசியம் காரணமாகப் பழைய கிராமச் சபைகளின் மூலம் சிலகாலம் தல நிர்வாகம் நடத்திவந்தனர்.

வங்காளத்தில் 1816, 1819ஆம் ஆண்டுகளில் சாலைகள், பாலங்கள், கழிவுநீர் வடிகால், படகுப் போக்குவரத்து இடங்கள் ஆகியவற்றைப் பழுது பார்ப்பதற்கென வரி விதிக்கச் சட்டம் ஒன்று வந்தது. சென்னை, பம்பாய் போன்ற நகரங்களிலும் மாஜிஸ்ரேட்டுகளைத் தலைவராகக் கொண்ட குழுக்களின்மூலம் வரி வசூலித்துத் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர். 1865, 1869, ஆகிய ஆண்டுகளில் தல நிர்வாகத்தின்பொருட்டு ஒரு சிறிய வரித் தொகையை நிலத் தீர்வையுடன் வசூலிக்கும்படி சென்னை, பம்பாய் ஆகிய நகரங்களில் சட்டம் இயற்றப்பட்டன. 1869ஆம் ஆண்டு தல நிர்வாகத்திற்குத் தேவையான பணத்தை வசூலிப்பதற்கு மாத்திரமன்றி, அத் தொகையை நல்ல முறையில் செலவழிக்கவும் மாவட்ட தாலூகா, கிராம ரீதியாகவும் குழுக்கள் அமைக்கும் வகையில் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது.

மேயோ பிரபுவின் திட்டம்

மேயோ பிரபு, 1870ஆம் ஆண்டு ஏற்படுத்திய செயல் திட்டங்கள் தல ஸ்தாபனத்தின் வரலாற்றில் ஒரு திருப்பமாக அமைந்தது. இதற்கு அடுத்த ஆண்டு தல ஸ்தாபனத்தின் அபிவிருத்திக்கென உதவித்தொகை ஒதுக்கவும், அதைச் செம்மையாகப் பரிபாலிக்கவும், குழுத் தலைவர்களை நியமிக்கவும் பல மாநிலங்களில் சட்டங்கள் இயற்றப்பட்டன. இக் குழுக்களில் அரசாங்க அதிகாரிகளும், பொது மக்களின் பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். இக் குழுவின் தலைவராக அரசாங்க அதிகாரி ஒருவர் இருந்து வந்தார். இக் குழுக்கள் அனைத்தும் அரசாங்கக் கண்காணிப்பில் இயங்கி வந்தன.

ரிப்பன் பிரபு (Lord Ripon)

உள்துறை நிர்வாக முறையில் நகராண்மைக் கழகங்களுக்கு அதிக உரிமை வழங்கியவர் ரிப்பன் பிரபுவேயாவார். இங்கிலாந்தில் இயங்கி வந்த மாவட்டக் கழகங்கள் வட்டார ஆட்சிக் கழகங்கள் ஆகியவற்றைப் போன்று இந்தியாவிலும் ஏற்படுத்தித்

தேர்தல் முறைகள் கைக்கொள்ளப்பட்டன. இதில் அரசாங்க அதிகாரிகளைவிடப் பொது மக்களே அதிகப் பதவிகளை ஏற்க வழி வகை செய்தார். தொடக்கக் கல்வி, நகரச் சுகாதாரம், கழிவு நீர் அகற்றல், குடிநீர் வழங்குதல் முதலிய பொறுப்புகளை நகராண்மைக் கழகங்களுக்கு வழங்கினார். தத்தமது எல்லைகளுக்குட்பட்ட சாலைகளைப் பராமரித்தல், பஞ்ச நிவாரணப் பணி முதலியவற்றையும் இக் கழகங்கள் ஏற்று நிறைவேற்றின. இவற்றிற்கான வருவாயைத் தாமே சிறு வரிகளை நேர்முகமாகப் பெறுவதன் மூலமும், அரசாங்கம் தந்த மான்யத்தின்மூலமும் இக் கழகங்கள் பெற்றுவந்தன. இவற்றை அரசாங்கம் மேற்பார்வையிட்டது. இவ்வித ஆட்சிமுறையால் திறமைக் குறைவு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று பலர் குறைகூறினர். தன்னாட்சியில் குறைவு இருப்பினும் அதில் மகிழ்ச்சியும், பொறுப்பாட்சியில் பயிற்சியும் ஏற்படும் என்று ரிப்பன் பிரபு கருதினார். இந்தியர்கள் இத்தகைய தல ஆட்சியை விரும்பித் தம்மை மக்களின் சேவைகளுக்கு ஈடுபடுத்திக்கொண்டதைக் கண்டு மகிழ்ந்தார். நகராண்மைக் கழகங்களில் திறமை குறைந்தாலும், மூன்றில் ஒரு பகுதிக்கு மேற்படாமல் அரசாங்க அதிகாரிகளை நியமித்துக் குறைகளை நீக்கவும் வழி செய்தார். எவ்வாறேனும் தல ஆட்சி இந்தியாவில் நிலவ வேண்டுமென ரிப்பன் பிரபு விரும்பினார். அதை 1882 ஆம் ஆண்டு கொண்டுவந்த சட்டத்தால் செயல்படுத்தினார். எனவே தான், இந்தியர் இவரை 'ரிப்பன் எங்களப்பன்' என்றும் 'தல தன்னாட்சி முறையின் தந்தை' என்றும் வழங்குகின்றனர்.

1882ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சட்டத்தின்படி நாடு முழுவதிலும் தல தன்னாட்சிக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இவற்றுக்குத் தேவையான செலவுத் தொகையை அரசு வழங்க வேண்டும். கொடுக்கப்பட்ட பணி செம்மையாய் நிறைவேற வேண்டுமாயின், பணியாற்றும் இடம் குறுகிய எல்லைகளையுடையதாக இருக்க வேண்டும். தாலுகாவே நிர்வாகக் கடைசி எல்லையாக அமையவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. கிராமப்புற, நகர்ப்புற நிர்வாகக் குழுக்களில் கூடியமட்டும் அரசாங்க நிர்வாகிகளைவிடப் பிரதிநிதிகளே அதிகமாக இருக்க வேண்டும். எக் காரணத்தை முன்னிட்டும் அரசாங்க அதிகாரிகளின் எண்ணிக்கை மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் மிகக்கூடாது. அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், குறைந்தது இரண்டு ஆண்டுகள்வரை பணியாற்ற வேண்டும். தேவைப்பட்ட இடங்களில் தல தன்னாட்சி மன்றம் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். தேவையான இடங்

களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரே (அங்கத்தினர்களில்) தலைவராக இருக்கவேண்டுமென்று கவர்னர் ஜெனரலின் குறிப்பு ஒன்று கூறுகின்றது.

தல தன்னாட்சிமுறையைக் கண்காணிப்பதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. நிர்வாகச் செலவிற்கான வருவாயை உயர்த்துவது, கடன் வாங்குவது, புதிய வரிவிதிப்பது, நகரச் சொத்தை விற்பது, சமயப் பிரச்சினைகளில் தலையிடுவது போன்ற காரியங்களை அரசாங்கம் மாவட்ட உயர் அதிகாரிகளைக் கலந்தே செய்யவேண்டும். இரண்டாவது தல தன்னாட்சி மன்றத்தின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளாது மாற்றியமைப்பதும், நிர்வாகத்தில் ஊழல் காரணமாகத் தல தன்னாட்சி மன்றத்தைத் தற்காலிகமாகத் தள்ளி வைப்பதும் போன்ற காரியங்களை நிறைவேற்ற மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. மேலே குறிப்பிட்ட அம்சங்களைக்கொண்டு 1883-84ஆம் ஆண்டுகளில் பல்வேறு மாநிலங்களில் தல தன்னாட்சிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இத்தகைய உயர் இலட்சியங்களைக் கொண்ட தல தன்னாட்சிமுறை அரசாங்க உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் செம்மையாகச் செயல்பட இயலவில்லை.

மாவட்ட, வட்டாரக் கழகங்கள்

1909-ல் ஏற்பட்ட அதிகாரப் பன்முறைப்படுத்தும் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் வெளியிடப்பட்டன. அப்பொழுது இந்திய அரசின் உள்நாட்டுச் செயலாளராக இருந்த சர் ஹெர்பர்ட் ரிஸ்லி என்பவர், இந்திய மாவட்ட, வட்டார நகராண்மைக் கழகங்களுக்கு ஒதுக்கப்படும் பணம் மக்களின் அத்தியாவசியத் தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்யப் போதுமானதன்று என்றும், இப்போது ஒதுக்குவதைவிட, அதிகமான தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்றும் பரிந்துரை செய்தார். குறிப்பாக நகராண்மைக் கழகங்கள் குடிநீர் வசதி, சாக்கடைத் துப்புரவு போன்ற அவசியப் பணிகளை நிறைவேற்ற இயலாத நிலையில் உள்ளன என்று உணர்த்தப்பட்டது. அத்துடன் கிராமப் பஞ்சாயத்து முறைக்குப் புத்துயிரளிக்கவேண்டுமென்று இவ் விசாரணைக் குழு வற்புறுத்தியது. சிறிய சிவில், கிரிமினல் குற்றங்களைத் தண்டிக்கும் அதிகாரம், சுகாதாரத் தொழிலாளர்களின் பராமரிப்பு, அவர்களின் ஊதிய வசதி, சிறிய வேலை வாய்ப்புத் திட்டங்கள், கிராமத் தொடக்கப் பள்ளிகளின் கண்காணிப்புப் போன்ற பணிகளைக் கவனிக்கும் அதிகாரம் கிராமப் பஞ்சாயத்திற்கு அளிக்கவேண்டுமென்று மற்றொரு விசாரணைக்

குழு பரிந்துரை செய்தது. மேலும் இவ் விசாரணைக் குழு கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அதிக வருவாய் தரும் முறைகளுக்கு வழிவகை செய்யவேண்டும் என்றும், மாவட்ட அதிகாரிகளின் தலையீடு அதிகமாக இருக்கக்கூடாது என்றும், ஒவ்வொரு தாலுகாவிலும் உப மாவட்டக் கழகங்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும் இந்த உப மாவட்டங்கள் அனைத்தும் மாவட்டக் கழகங்களின் அதிகாரத்தின்கீழ் இயங்கவேண்டுமென்றும் பரிந்துரை செய்தது. மாவட்ட, வட்டாரக் கழகங்களுக்குத் தனி வருவாயும், வரி விதிக்கும் அதிகாரமும் அரசாங்கம் வழங்கவேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

நகராண்மைக் கழகங்களைப் பொறுத்தவரை, அதன்மீது இருந்துவந்த அரசாங்கக் கட்டுப்பாடுகளை நீக்கவேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டது. தொடக்கக் கல்வி நிலையங்களைப் பராமரிப்பது. விரும்பினால் நடுநிலைப் பள்ளிக்கூடங்களைக் கண்காணிப்பது போன்ற கடமைகளை நகராண்மைக் கழகங்கள் கவனிக்க வேண்டுமென வகைசெய்யப்பட்டது. அத்துடன் உயர்நிலைக் கல்வி, மருத்துவமனைகள், பஞ்ச நிவாரணம், காவல்படை, கால்நடை மருத்துவமனை போன்றவற்றை நகராண்மைக் கழகங்களின் பொறுப்பிலிருந்து அகற்றிவிடவேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டது.

1935ஆம் ஆண்டுச் சட்டம் : 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி மாநிலச் சுயாட்சிமுறை இந்தியாவில் அறிமுகப் படுத்தப்பட்டது. இதன் பயனாகத் தல தன்னாட்சி இலாக்கா இந்திய அமைச்சர் ஒருவரின் நிர்வாகத்தின்கீழ் இயங்கத் தலைப்பட்டது. எனவே, இவ் விலாக்கா, பயனுள்ளதாக இயங்குவதற்கு அதிகப்படியான நிதி ஒதுக்கப்படுமென்று எதிர்பார்க்கப் பட்டது. 1935ஆம் ஆண்டின் சட்டப்படி உள்ளாட்சித்துறைக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால், நிதி உதவி குறைவாகவே அளிக்கப்பட்டது. தொழில் வரி, வியாபார வரி போன்றவற்றை வசூலிப்பதில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டன. இதன் விளைவாகத் தல தன்னாட்சிமுறை எதிர்பார்த்த அளவிற்கு வளர்ச்சியடையவில்லை.

சுதந்திரத்திற்குப் பின் : 1947-ல் இந்தியா சுதந்திரம் அடைந்தது. கிராமங்கள் சுயாட்சி முறையில் இயங்கவேண்டுமென்பதற்காக இந்திய அரசியல் சட்டத்தின் 40ஆவது சரத்தில் கிராமப் பஞ்சாயத்துகள் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து ராஜ் சட்டம் பல மாநிலங்களில் தோற்றுவிக்கப்பட்டன. கிராமப் பஞ்சாயத்து

களுக்கு அதிக அதிகாரம் அளிக்கவேண்டு மென்பதே இச் சட்டத்தின் நோக்கம். சுதந்திரத்திற்குப்பின் நியமிக்கப்பட்ட தல ஆட்சி நிதி விசாரணைக்குழு, தனது அறிக்கையை 1951-ல் வெளியிட்டது. இது கிராமப் பஞ்சாயத்துகளின் மோசமான நிதி நிலைமையைச் சுட்டிக்காட்டி, அதைச் சீர்படுத்தி அமைக்கும் வழி முறைகளையும் எடுத்துக் கூறியது.

குறைபாடுகள்: தல தன்னாட்சி முறையில் அரசாங்க அதிகாரிகளின் தலையீடு அதிகமிருப்பதால், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் தங்கள் விருப்பம்போல் பணியாற்ற இயலவில்லை. நிதிநிலையும் பற்றாக்குறையாக அமைந்திருக்கிறது. அரசாங்கம் தாராளமாக நிதி உதவி அளித்தாலொழிய தல தன்னாட்சிமுறை பயனளிக்காது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் மக்கள் தல தன்னாட்சியில் அதிகப் பங்குகொள்ளும்படி தூண்டப்பட வேண்டும். தல தன்னாட்சி முறைகளைப்பற்றிய விவரங்கள் அடங்கிய நூல்கள் இந்தியாவில் அதிகமாக எழுதப்படவில்லை. இதனால் இந்த நிர்வாக முறைகளைப்பற்றி அதிகம் தெரியாதவர்களாக இருக்கின்றனர்.

நகரங்கள் (Towns)

1842ஆம் ஆண்டில் முனிசிபல் சட்டம் ஒன்று முதல் முறையாக வங்காளத்தில் உருவாக்கப்பட்டது. இச் சட்டம் 1850ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் பயன்படுத்தும்வண்ணம் இரண்டாவது முறை சட்டமாக்கப்பட்டது. நகரங்களில் வாழும் மக்களின் நலனுக்கேற்ப வசதிகள் அளிக்க வரி விதித்துக்கொள்ளும் அதிகாரமும் அரசாங்கத்தால் நகரங்களுக்கு அளிக்கப்பட்டது. சென்னை, வங்காளம் ஆகிய மாநிலங்களில் ஓட்டேரி தீர்வைமுறை செயல்படவில்லை. ஆனால் பம்பாய், வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களில் இது நடைமுறையில் இயங்கி வந்தது.

நகராண்மைக் கழகங்களின் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்த மக்கள், இதனை மேலும் நடைமுறைக்குக் கொண்டுவர விரும்பினர். 1865ஆம் ஆண்டில் சென்னை மாநிலத்திற்கும், 1864-ல் வங்காளத்திற்கும், 1868ஆம் ஆண்டில் பஞ்சாபிற்கும், மத்திய மாகாணங்கள், அயோத்தி, வடமேற்கு எல்லைப்புற மாகாணங்கள் ஆகிய மாநிலங்களுக்கும் நகராண்மைக் கழகங்கள் விரிவுபடுத்தப்பட்டன. இச் சபை முனிசிபல் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கவும், வரி விதித்து வசூல் செய்யவும் அதிகாரம் வழங்கியது. பஞ்சாப், மத்திய மாகாணங்களைத் தவிர, வேறு மாநிலங்களில் தேர்வுமுறை கையாளப்படவில்லை.

1870ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டம், கல்வி, சுகாதாரம், கழிவு நீர் அகற்றல், குடி நீர் வழங்குதல், மருத்துவ உதவி, உள்நாட்டுப் பொதுப்பணித்துறை ஆகிய துறைகளில் கவனம் செலுத்தி வருவதால், தல நிர்வாக முறையில் மக்களுக்கு நல்ல பயிற்சி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் மக்களுக்குத் தன்னாட்சி முறையில் பற்றுதலும், பயிற்சியும் கிடைக்குமெனவும் கருதப்பட்டது. இந்த நோக்கம் நிறைவேறும்பொருட்டு 1871-லிருந்து 1873 வரை சென்னை, பம்பாய், வங்காளம், வடமேற்கு எல்லைப்புற மாகாணங்கள், பஞ்சாப், மத்திய மாகாணங்கள் ஆகிய மாநிலங்களில் நகராட்சி மன்றச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இச் சட்டங்கள் நகராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளைச் செயல்படுத்திய தோடல்லாமல் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை களையும் வலியுறுத்தி வந்தன. தேர்வு முறைகள் மத்திய மாகாணங்களில் மாத்திரம் செயல்பட்டு வந்தன. வங்காளத்தில் மூன்று நகரங்கள், சென்னை மாநிலத்தில் நான்கு நகரங்கள் ஆகியவற்றில் மட்டுமே தேர்வு முறைகள் கையாளப்பட்டு வந்தன, வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களில் தேர்வுமுறைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் நல்ல பலன் கிடைக்க வில்லை. நகராட்சி மன்ற உறுப்பினர் அனைவரும் அதன் தலைவ ராகிய மாவட்ட அதிகாரியின் தயவை நாடியவர்களாக இருந்து வந்ததால், அவர்களால் சுயேச்சையாக மக்களுக்கு நற்பணியாற்ற முடியவில்லை. உண்மையில் நகராட்சி மன்றங்கள் அரசாங்க அதிகாரத்தின்கீழ் இயங்கி வந்தன.

இந்நிலையில்தான் ரிப்பன் பிரபு, தனது தல தன்னாட்சி முறைத் திட்டத்தை 1882ஆம் ஆண்டு கொண்டு வந்தார். 1870ஆம் ஆண்டு கொண்டு வந்த தல தன்னாட்சிமுறை ஓரள விற்குப் பயன் அளித்தது. இருப்பினும் இன்னும் இத் துறையில் முன்னேற்றம் வேண்டும் என்பதற்காகவே 1882ஆம் ஆண்டுச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ரிப்பன் பிரபு, 1882ஆம் ஆண்டு கொண்டுவந்த நகராட்சிமுறை தன்னாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டது. இதன்மூலம் நகராட்சி நிர்வாகம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தி னர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். அதன் தலைவர் அரசாங்க அதிகாரியாக இருக்கக்கூடாது. ஆனால், இறுதி மேற்பார்வை அரசாங்க அதிகாரியிடமே இருந்துவரவேண்டும். நகரக் காவலர் (City Police) அதிகாரிகளுக்கு ஊதியத் தொகையை அரசாங்கமே வழங்க வேண்டும். நகராட்சி மன்ற வருவாயிலிருந்து கல்வி, மருத்துவ வசதி, மக்களுக்கான ஏனைய வசதிகளுக்குச் செலவிட

வேண்டும். நகராட்சி மன்றத்திற்குக் கட்டாயத் தேர்வுமுறை வேண்டுமென்று 1883-84ஆம் ஆண்டுகளில் தனிச் சட்டம் கொண்டு வரப்பட்டது. நகராட்சி மன்ற நிர்வாக அதிகாரிகளுக் குப் பதில் அவைத் தலைவரை (Chairman) நியமிக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டது. ஆனால் நீண்ட நாட்களாக மாவட்ட அதி காரியே நகராளு மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். நாளாவட்டத்தில் அவைத் தலைவர் நகராட்சி மன்றத் தாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவராக ஆனார்.

மாநிலத் தலைநகரங்கள் (Presidency Towns)

மாநிலத் தலை நகரங்களில் நகராண்மைக் கழகங்கள் ஏனைய நகர மன்றங்களிலிருந்து வேறுபட்ட முறையில் இயங்கி வந்தன. ஆங்கிலேயர்கள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களைக் கைப்பற்றி அவற்றின் தலை நகர்களில் தங்களுடைய நிர்வாக அலுவலகங்களை அமைத்துக் கொண்டதன் காரணமாக, அந் நகர்களின் நிர்வாகம் சிறிது மாறுபட்டு இருந்தன. இவ்விடங்களில் தல தன்னாட்சி முறை நடைமுறையில் இருந்துவந்தது. இங்கிலாந்து மன்னர் மூன்றாவது ஜார்ஜ் (George III) காலத்தில் மாநிலத் தலைநகரங் களில் நகராளுமன்றங்களில் அமைதிகாண் நீதிபதிகளை (Justices of the peace) நியமிக்க வேண்டுமென்று இந்தியக் கவர்னர் ஜென ரலுக்கு உத்தரவு பிறப்பித்தார். இத்தகைய நீதிபதிகள், நீதி நிர் வாகப் பொறுப்பைக் கவனிப்பதோடு நகர்ப்புறத்தின் பாதுகாவ லுக்கென நியமிக்கப்பட்ட காவல்துறையினரைக் கண்காணிப்பது, சுகாதார வளர்ச்சிக்காகத் துப்புரவு செய்யும் பணியாட்களின் வேலைகளைக் கவனிப்பது. இவற்றிற்குத் தேவையான வருவாயை நகர்ப்புறத்து வீடுகளில் குடியிருப்போரிடம் வரிகளின்மூலம் வசூல் செய்வது போன்ற காரியங்களைக் கவனித்து வந்தனர். ஆனால் இந்த ஏற்பாடு வெற்றிகரமாக நடைபெறவில்லை. காரணம் இந்த நகரமன்ற நீதிபதிகள் தங்களின் பணிகளைச் செவ்வனே செய்யவில்லை. எனவே இத்தகைய அதிகாரங்கள் அனைத்தும் தலைமை மாஜிஸ்ட்ரேட் (Chief Magistrate) என்பவரிடம் சென்றன. இவருக்கு வரிவசூல் செய்வதிலும் நகர்ப்புறச் சுத்தம் செய்யும் துறையிலும், காவல்துறையின் அதிகாரி ஒருவர் ஒத்துழைப்பு நல்கி வந்தார்.

கல்கத்தா மாநகராட்சியாதல்

1856ஆம் ஆண்டு மாநிலங்களின் தலைநகர்களில் நகராட்சிக் கழகங்களின் பணி அபிவிருத்திக்கென மூன்று ஆணையர்களை (Commissioners), சென்னை, பம்பாய் ஆகிய தலைநகரங்களில்

நியமித்தனர். ஆவிவிளக்கு, மூடுசாக்கடை, நீர்க்கழிவு ஆகியவை ஏற்படுத்த கல்கத்தா ஆணையருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இம் முறையில் பல குறைகள் இருந்தன. பொதுமக்கள் நிர்வாகத்தில் அதிகமாகப் பங்குகொள்ளவில்லை. செலவுக்குத் தேவையான தொகையை வரிவசூல்மூலம் பெறுவதற்கு வசதியில்லை. கணக்குகள் செம்மையாகத் தணிக்கை செய்யப்படவும் இக் குறைகளைப் போக்கவும் 1863ஆம் ஆண்டு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மாநகராட்சித் தலைவர்கள் பதவி ஏற்றனர். இவர்களுக்கு மாத ஊதியம் வழங்கப்பட்டது. காவல்துறை அதிகாரி ஒருவர் (Police Commissioner) இவருக்கு உதவியாக நியமிக்கப்பட்டார். இதேபோன்று பீகார், ஒரிசா போன்ற மாநிலத் தலைநகரங்களுக்கும் இம்முறை விரிவுபடுத்தப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முறையும், மாநகர நீதிபதிகள், அரசாங்க அதிகாரிகள் ஆகியவர்களின் ஒத்துழைப்பின்றிச் செம்மையாக இயங்கவில்லை. எனவே, 1876ஆம் ஆண்டு கல்கத்தா மாநகராட்சிச் சட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. அதன்படி மாநகராட்சி மன்றத்தில் 72 மக்கள் பிரதிநிதிகளும், அவர்களில் மூன்றில் இருபகுதியினர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும், மீதியுள்ள மூன்றில் ஒரு பகுதியினர் அரசினுல் நியமிக்கப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு மாற்றியமைக்கப்பட்டமையால் நகரத்தின் குடிநீர் வழங்குமுறை, சாக்கடைக் கழிவுநீர்முறை, மூடுசாக்கடை, சுகாதாரம் ஆகிய துறைகளில் கணிசமான முன்னேற்றம் காணமுடிந்தது. ஆனுல், கல்கத்தா மாநகராட்சியின் வளர்ச்சி, கர்சான் பிரபு காலத்தில் தடைப்பட்டது. பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோரின் எண்ணிக்கை பாதியாகக் குறைக்கப்பட்டது. இதற்குக் காரணம் நகராட்சி மன்றத்தில் குறைவான வேலையே நடைபெற்று வந்தது. பொதுமக்களுக்கான பணியைவிட, அங்கு வெறும் பேச்சே அதிகரித்தது என்று கூறப்பட்டது. கர்சான் பிரபுவின் செயலுக்கு ஆ. சி. தத்தா, தேசபக்தர் சுரேந்திரநாத் பானர்ஜி போன்ற தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து 28 அங்கத்தினர்கள் கல்கத்தா நகராட்சி மன்றத்திலிருந்து வெளியேறினர். பதவி துறந்தவர்களில் சுரேந்திரநாத் பானர்ஜியும் ஒருவராவர்.

பம்பாய் மாநகராட்சி

1865ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மாநகராட்சி நிர்வாகச் சட்டத்தின்படி மாநகராட்சி மன்றத்திற்கு 500 அமைதிகாண் நீதிபதிகள் (Justices of peace) நியமிக்க வகை

செய்யப்பட்டது. இவர்களுக்கு அவைத்தலைவராக (Chairman) உயர்தர அரசாங்க அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். கணக்குகளைத் தணிக்கைசெய்யும் உயர்தர அதிகாரி ஒருவரும் பணியாற்றி வந்தார். இந்த அமைப்புச் செம்மையாக நடைபெற வில்லை. மாநகரத் தலைவரின் அதிகாரத்தின்கீழ்த் தணிக்கை அதிகாரி சுயேச்சையாகத் தனது கடமைகளைச் செய்ய இயலவில்லை. இரு அதிகாரிகளுக்குமிடையே பல செயல்திட்டங்களில் உடன்பாடு ஏற்படுவது கடினமாக இருந்தது. மேலும் 500 பேர்கள் அடங்கிய அவையில் எச் செய்தியும் சரியாகப் பரிசீலிக்கவோ, அவற்றுக்குப் பரிகாரம் தேடவோ இயலவில்லை. இதனால் பொதுப்பணிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன;

மாநகராட்சியில் மாற்றங்கள் (Corporations)

1872ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மாற்றுச் சட்டத்தின் படி 500 பேர்களடங்கிய மாநகராட்சி மன்றம் 64 பேர்களைக் கொண்டதாகக் குறைக்கப்பட்டது. இவர்களில் 32 பேர் வரி செலுத்தும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். 16 பேர் நகர்ப்புற கௌரவ அமைதிகாண் காவலர்களாலும் எஞ்சிய 16 உறுப்பினர்கள் அரசாங்கத்தாலும் நியமிக்கப் பட்டனர். அவைத்தலைவர் (Chairman), முன்பு போல் நிர்வாகம் அனைத்தையும் கவனித்து வந்தார். கணக்குத் தணிக்கை அதிகாரியின் பதவி நீக்கப்பட்டது. நகரப் பிரமுகர் சிலர் அடங்கிய குழு ஒன்று மாநகராட்சியின் கணக்கை வாரந்தோறும் தணிக்கை செய்து வந்தது. தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை மறுபடியும் ஊதியம் பெறற தணிக்கை அதிகாரிகள் மாதந்தோறும் தணிக்கை செய்ய வழிவகை செய்யப்பட்டது. இம்முறை ஒரு சில மாற்றங்களுடன் 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை நன்முறையில் செயல்பட்டு வந்தது.

சென்னை மாநகராட்சி மன்றம்

சென்னை மாநகராட்சி மன்றம் மூன்று தலைமை ஆணையாளர் கள் (Chief Commissioners) மூலம் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது. இம்முறை 1867 வரை இங்கு நீடித்திருந்தது. நிர் வாகத்தில் பொதுமக்களுக்குப் பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் சென்னை நகரம் எட்டு வார்டுகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு வார்டுக்கும் நான்கு கவுன்சிலர்களை அரசு நியமித்தது. நிர்வாக அதிகாரம், நிர்வாகத் தலைவரிடம் President) ஒப்படைக் கப்பட்டிருந்தது. புதிய வருவாய்க்கான வழிவகைகளைக் கண்டு வருவாயை அதிகப்படுத்திய போதிலும் பற்றுக்குறையிருந்து

வந்தது. 1878ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சென்னை மாநகர மன்ற 5ஆவது சட்டப்படி 32 அங்கத்தினர்களில் 16 அங்கத்தினர்கள் வரி செலுத்தும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட வகைசெய்யப்பட்டது. இதில் நிர்வாகத் தலைவரும் (President) துணைத் தலைவரும், ஊதியம் பெற்ற அரசாங்க ஊழியர்கள். பின்னர், வரி செலுத்தும் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப் படுவோரின் எண்ணிக்கை 16-லிருந்து 24ஆக உயர்த்தப்பட்ட போதிலும், வருவாய்ப் பற்றுக்குறை காரணத்தால் மாநகராட்சி நிர்வாகம் எதிர்பார்த்த அளவுக்குச் செவ்வையாகச் செயல்பட முடியவில்லை.

1899ஆம் ஆண்டு கல்கத்தா மாநகராட்சிச் சட்டம் போன்று சென்னையிலும் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அதன்படி மாநகர் மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்டோரின் எண்ணிக்கை 20ஆகக் குறைக்கப்பட்டது. நகரின் வணிகப் பிரமுகர்களுக்குச் சிறப்புச் சலுகையும் பிரதிநிதித்துவமும் அளிக்கப்பட்டன. இச் சட்டம் 1904ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.

மாநில நகரங்களில் பல்வேறு நிலைகளில் தல தன்னாட்சிமுறை கடந்த 200 ஆண்டுகள் வளர்ந்து வந்துள்ளது, இது தேர்வு முறை, பலமுள்ள அரசாங்க அதிகாரவரம்புக்குட்பட்ட நிர்வாக முறை, வருவாய்த்துறையின் பாதுகாப்பு, வரவுசெலவுமுறைகளைத் தணிக்கை செய்யும்முறை, மாநகரத் துப்புரவுத் தொழிலாளர்களின் வேலைப் பாதுகாப்பு, குடிநீர் வழங்குதல் போன்ற துறைகளில் வளர்ச்சி அடைந்துள்ளது. நிர்வாகச் சீர்கேடுகள் நேரிடும்போது அரசு தலையிடவும் வழிவகை செய்யப்பட்டது. அன்றுட நிர்வாகத்தில் அரசாங்கத்தின் தலையீடு இருந்தபோதிலும் தல தன்னாட்சிமுறை ஓரளவிற்கு வளர்ச்சியுற்று வந்தது. எனவே, முனிசிபல் நிர்வாகமுறை சுயாட்சிமுறைக்கு வசதியாக அமைந்திருந்ததால் மக்களிடம் செல்வாக்குப் பெற்றது. கடந்த 3000 ஆண்டுகளாக நம்மிடையே இயங்கி வந்திருக்கும் கிராம, நகர நிர்வாகமுறையைப் புறக்கணிப்பது நமது பண்பாட்டிற்கு முற்றும் புறம்பானது என்று R. C. தத்தா என்ற அரசியல் அறிஞர் கூறியுள்ளார்.

(5) மேல்நாட்டுக் கல்விமுறையின் வளர்ச்சி

(Growth of Western System of Education)

இந்தியாவின் பல்வேறு பகுதிகளைக் கிழக்கிந்தியக் கம்பெனியார் வென்று, தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டியபோது,

ஆங்காங்கே இந்துக்களும் இஸ்லாமியர்களும் தங்கள் சமய அடிப்படையில் கல்விமுறைகளை அமைத்துக்கொண்டிருப்பதைக் கண்டனர். இப் பள்ளிகளில் சமயம், கலை, கலாசாரம் ஆகியவை அடங்கிய கல்வி போதிக்கப்பட்டு வந்தது. 'பாடசாலைகள்' (Patasalas) என்று வழங்கப்படும் நிறுவனங்களில் சமஸ்கிருதம் பாடமொழியாக இருந்தது. பண்டிதர்கள் என்று வழங்கப்படும் ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சமஸ்கிருதப் பாடம் கற்பித்தனர். இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்த 'மௌல்விகள்' தங்கள் மசூதிகளில் மாணவர்களுக்கு உருது மொழியின்மூலம் பாடம் கற்பித்தனர். இக் கல்வி நிலையங்களுக்கு 'மதராசா' என்று பெயர். இத்தகைய கல்வி நிலையங்களை எவ்வித மாற்றங்களுக்கும் உள்ளாக்காமல், அவற்றுக்கு இந்திய மன்னர்களும் பிரபுக்களும் அளித்திருந்த மான்யங்களை அகற்றாமல் வழக்கம்போல் நடைபெற ஆங்கிலேயர் அனுமதித்தனர்.

வாரன் ஹேஸ்டிங்ஸ், 1781-ல் 'கல்கத்தா மதராசா' என்ற கல்வி நிலையத்தை நிறுவினார். கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அலுவலர்களை உருவாக்குவதே இக் கல்வி நிலையத்தின் நோக்கமாகும். காசி நகரத்தில் இந்துக்களின் கலை, கலாச்சாரம், சட்டம், இலக்கியம் போன்றவற்றைக் கற்பிக்கும் வடமொழிக் கல்லூரி ஒன்றை 1791-ல் ஜோநதன் டங்கன் ஆரம்பித்தார். ஐரோப்பிய நீதிபதிகளுக்கு உதவியாளர்கள் தேவைப்பட்டதால் இக் கல்வி நிலையம் தோற்றுவிக்கப்பட்டது. ஆசியக் கழகம் (ஏசியாடிக் சொசைட்டி) (Asiatic Society) என்ற ஸ்தாபனத்தைச் சர் வில்லியம் ஜோன்ஸ் வங்காளத்தில் தோற்றுவித்தார். மேற்றிசை விஞ்ஞானமுறைகளை இந்தியாவிற்கு அறிமுகப்படுத்திய பெருமை இந்த நிறுவனத்திற்கு உண்டு. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியில் இயக்குநராகப் பணியாற்றிய சர் சார்லஸ் கிராண்ட் (Sir Charles Grant), இந்தியர்களுக்கு ஆங்கிலக் கல்வியறிவைப் புகுத்த வேண்டும் என்று 1792ஆம் ஆண்டில் வலியுறுத்தியுள்ளார், இவரைப் போன்று வில்பர்போர்ஸ் (Wilberforce) என்பவரும் ஆங்கிலக் கல்வியின் அவசியத்தை அரசுக்கு எடுத்துரைத்தார். 1716ஆம் ஆண்டில் டேனிஷ் நாட்டுக் கிறிஸ்தவச் சங்கத்தார் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பள்ளிகளை நிறுவினர். 1793ஆம் ஆண்டில் கேரி மார்ஷ்மென், வார்டு (Carey, Marshman and Ward) ஆகிய பாதிரிமார்கள் ராம்பூர் என்னுமிடத்தில் கல்லூரி ஒன்றைத் தொடங்கினர். 1820ஆம் ஆண்டிற்குள் இவர்கள் பல கல்வி நிலையங்களை நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிறுவிக் கல்விப் பணி செய்து வந்தனர். இவர்களின் முக்கிய நோக்கம் கல்வியின் மூலம் கிறிஸ்தவ சமயத்தைப் போதிப்பதேயாகும். பம்பாயில்

வில்சன் கல்லூரியும், சென்னையில் கிறிஸ்தவக் கல்லூரியும் ஆக்ராவில் பரிசுத்த யோவான் கல்லூரியும் ஆரம்பித்தனர். அத்துடன் மசூலிப்பட்டினம், நாகபுரி ஆகிய நகரங்களிலும் கல்லூரிகள் திறக்கப்பட்டன. இக் கல்லூரிகளில் கிறிஸ்தவ சமய நூல்கள் கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்பட்டன. மேல்நாட்டுக் கல்வி பயின்றவர்களுக்கே அரசாங்க உத்தியோகம் வழங்க வேண்டுமென்று 1844ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டுச் செயல் படுத்தப்பட்டு வந்தது.

கிருஸ்தவ சமயத்தவரின் கல்வித் தொண்டு.

கல்கத்தாவிலிருந்து 16 மைல் வடக்கிலுள்ள டேனர்களின் குடி யிருப்பு நிலயமான செராம்பூர் என்னுமிடத்திலுள்ள பேப்டிஸ்ட் குழுவைச் சார்ந்த (Baptist Missionaries), தாமஸ், மார்ஷ்மென், வார்டு, கேரி (Thomas, Marshaman, Ward, Carey) ஆகியோர் வங்காளத்தில் ஆங்கிலக் கல்வி அறிவை ஏற்படுத்த அரும்பாடு பட்டனர். இங்கு இவர்கள் அச்சு நிலையம் ஒன்றையும், காகித உற்பத்திச்சாலை ஒன்றையும் நிறுவினர். கிறிஸ்தவ விவிலிய நூலை (Bible) வங்காளி, மராத்தி, தமிழ் போன்ற 26 மொழி களில் மொழி பெயர்த்தனர். 1801ஆம் ஆண்டு போர்ட்டு வில லியம் என்ற கல்லூரி இந்திய சிவில் பணியாளர்களுக்கென தோற்றுவிக்கப்பட்டது. இக் கல்லூரியில் கேரி (Carey) என்பவர், வங்கமொழிப் பேராசிரியராக 1801ஆம் ஆண்டில் நியமிக்கப் பட்டார். டேவிட் ஹேர் (David Hare) என்பவர், மற்றோர் அறிஞர். இவர் தனது உடைமைகள் அனைத்தையும் இந்தியர் களின ஆங்கிலக் கல்வி அறிவுக்கெனச் செலவிட்டார். 1820ஆம் ஆண்டில் ' பிஷப் கல்லூரி ' கல்கத்தாவில் நிறுவப்பட்டது.

இந்தியர்களின் தொண்டு

இந்தியர்களின் கல்விக்காகப் பாடுபட்டவர்களில் முக்கிய மானவர்கள் ராஜாராம் மோகன்ராய், ராஜா ராதா காந்ததேவ், மகாராஜா தேஜாஸ் கண்டரா ராய்பகதூர், ஜெயநாராயணன் கோசல் போன்றவர்களாவர். மகாராஜா தேஜாஸ் கண்டரா, பாரசீகம், ஹிந்தி, வங்காளி போன்ற மொழிகளைக் கற்பிக்கும் கல்வி நிலையம் ஒன்றைக் காசி நகரத்தில் தோற்றுவித்தார். ராஜாராம் மோகன்ராய், டேவிட்ஹேர், சர் ஹைடி ஆகியவர் களின் பெரும் முயற்சியால் 1816ஆம் ஆண்டில் 'இந்து மகாவித்யாலயா' என்ற இந்துக் கல்லூரி கல்கத்தாவில் ஆரம் பிக்கப்பட்டது. இதுவே பிறகாலத்தில மாநிலக் கல்லூரியாக வளர்ந்தது. ராஜாராம் மோகன்ராய் தமது சுயமுயற்சியால்

'சூரிபாரை' என்ற இடத்தில் ஆங்கில மொழி கற்பிக்கும் பள்ளி ஒன்றை நிறுவினார். அத்துடன் மேல்நாட்டுக் கல்வி, நாகரிகம், விஞ்ஞானம் போன்றவற்றை இந்திய மாணவர்கள் பயிலவேண்டுமென்று இவர் வற்புறுத்தி வந்தார்.

திரு கிராண்ட், வில்பர் போர்ஸ் ஆகிய இருவரும் இந்தியர்களுக்கு ஆங்கிலக் கல்வி போதிக்கும் அவசியத்தை வலியுறுத்தி வந்தனர். 1813ஆம் ஆண்டில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனச் சட்டம் புதுப்பிக்கப்பட்ட போது, இந்தியர்களின் கல்வி வளர்ச்சிக்கெனக் கம்பெனியின் வருவாயிலிருந்து ஆண்டுதோறும் ஒரு லட்சம் ரூபாய் செலவழிக்கப்படவேண்டுமென்று சட்டம் ஒன்று இயற்றினர். இத் தொகை கல்கத்தாவிலுள்ள நூல் வெளியிடும் இரண்டு நிறுவனத்திற்கும், பொதுக் கல்வி அலுவலகத்திற்கும் 1823ஆம் ஆண்டு ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் உத்தரவின் பேரில் செலவிடப்பட்டது. போதனை மொழி எம் மொழியாக இருக்க வேண்டும் என்ற பிரச்சினை தோன்றிய போது, வடமொழி கூடாது என்றும், ஆங்கிலமே பயிற்று மொழியாக வேண்டுமென்றும் ராஜாராம் மோகன்ராய் வாதிட்டு அதில் வெற்றியும் கண்டார். இச் சமயத்தில் மெக்காலே பிரபு (Lord Macaulay), கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் குழுவில் சட்ட ஆலோசகராக இருந்தார். 1835ஆம் ஆண்டு தனது புகழ்பெற்ற குறிப்பின்மூலம் இந்தியர்களுக்கு ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்படவேண்டுமென்று வலியுறுத்தி, இந்திய மொழிகளில் கல்வி போதிக்க வேண்டுமென்று கூறி வந்தவர்களின் வாயை அடக்கினர். அரசாங்கத்தால் கல்விக்கென ஒதுக்கப்பட்ட தொகை ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதற்கே பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் கூறினர். இக் கல்வி வளர்ச்சிக்கென நில வருவாயில் ஒரு சதவீதம் தீர்வையை வசூலிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இக் கொள்கை பயன் அளிக்காததால் கைவிடப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் கல்கத்தாவில் மருத்துவக் கல்லூரி ஒன்றும் (1835) ரூர்கி என்ற இடத்தில் தாம்சன் பொறியியற் கல்லூரி ஒன்றும், சென்னையில் பல்கலைக்கழக உயர்நிலைப் பள்ளியும், (Madras University High School) ஆரம்பிக்கப்பட்டன.

சார்லஸ் உட்ஸ் என்பரின் 1854ஆம் ஆண்டின் கல்வித் திட்டம் (Charles Wood's Despatches of 1854)

கம்பெனியின் நிர்வாகக் குழுவின் தலைவராக இருந்த சர் சார்லஸ் உட் (Sir Charles Wood) என்பவர், ஒரு புதிய கல்வி முறையை இந்தியாவிற்குக் கொண்டுவர வேண்டுமென்று

பரிந்துரை செய்தார். இதுவே தற்காலக் கல்விமுறையின் ஆதார மாக அமைந்தது. இக் கல்வித் திட்டத்தில் கீழ்க்கண்ட ஒன்பது அம்சங்கள் அடங்கி இருந்தன. அவை (1) கல்வி நிர்வாகத்தைக் கவனிப்பதற்கெனக் கல்வித்துறை ஒன்று தனியாக அமைத்தல்; (2) மாநிலத் தலைநகரங்களில் பல்கலைக்கழகங்கள் அமைத்தல்; (3) எல்லாவிதக் கல்வி நிலையங்களுக்குத் தேவையான ஆசிரியர்களை உருவாக்கும் பயிற்சி நிலையங்களை நிறுவுதல்; (4) ஏற்கெனவே இருந்துவரும் அரசாங்கக் கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகளை நல்முறையில் பராமரித்தல்; (5) புதிய நடுத்தரப் பள்ளிகளை (Middle Schools) ஆரம்பித்தல்; (6) சுதேச மொழிகள் பயிற்று விக்கும் ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தல்; (7) சமயச்சார்பு அற்ற கல்வி நிலையங்களுக்கு அரசாங்க உதவித் தொகை வழங்குதல்; (8) ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியவற்றுக்குப் பொருந்தும் வகையில் அவற்றில் பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்; (9) பெண்கள் கல்விக்கு அரசாங்கம் ஆதரவளித்தல் போன்றவை களாகும்.

இத் திட்டத்தின்படி 1856ஆம் ஆண்டிற்குள் எல்லா மாநிலங் களிலும், கல்வி இலாக்காக்கள் ஆரம்பிக்கப்பட்டன. பொதுக் கல்வி இயக்குநர் (Director of Public Instruction) என்ற ஓர் அதிகாரியும், அவருக்கு உதவியாகப் பள்ளி ஆய்வாளர்கள் பலரும் நியமிக்கப்பட்டனர்.

பல்கலைக்கழகங்களின் நிறுவனம்

1857ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிப்பாய்க் கலகங்களின் போது கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய மூன்று தலைநகரங்களிலும், பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவை லண்டன் பல்கலைக்கழகத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டன. கல்வி பயிற்றுவிக்கும் நிலயங்களாக மட்டும் இல்லாமல், மாணவர் களுக்குத் தேர்வு நடத்திப் பட்டங்கள் வழங்கும் நிறுவனங் களாகவும் இப் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அடுத்து, 1882ஆம் ஆண்டில் பஞ்சாப் மாநிலத்தின் தலைநகரான லாகூரில் ஒன்றும், அலகாபாத்தில் ஒன்றுமாக இரு பல்கலைக்கழகங்களை ஆரம்பித்தனர். இப் பல்கலைக்கழகங்களுக்குத் தற்போது அமைந் திருப்பது போன்று ஒரு புரவலரும் துணைவேந்தரும் (Vice Chancellor) பொது நிர்வாகக் குழுவும், பாடத்திட்டக் குழுவும், இணைக்கப்பட்ட கல்லூரிகளும் இருந்தன. உயர்நிலைக் கல்விக் கூடங்களும் விரைவில் பெருகின. 1882ஆம் ஆண்டில் இரு நிறுவனங்களிலும், கல்வி கற்றோரின் எண்ணிக்கை 25 லட்ச.

மாகும். இக் கல்வி நிறுவனங்களில் எங்கெங்கு ஆங்கிலக் கல்வியை விருப்புகின்றனரோ, அங்கெல்லாம் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. பல்கலைக்கழகங்களில் ஒவ்வொரு பாடப் பிரிவுக்கும் பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளை அரசாங்கக் கல்வி ஆய்வாளர்கள் பார்வையிட வேண்டுமென்ற முறை வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஹண்டர் உயர் ஆணைக்குழு 1882 (The Hunter Commission 1882)

1882ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ரிப்பன் பிரபு கல்வி உயர் ஆணைக்குழு ஒன்றை நிறுவி, அதற்கு சர் டபிள்யூ. டபிள்யூ. ஹண்டர் (Sir W. W. Hunter) என்பவரைத் தலைவராக நியமித்தார். இக் குழுவில் ஆங்கிலேயரும், இந்தியருமாக 22 அங்கத்தினர் இருந்தனர். 1854ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சர் சார்லஸ் உட் என்பவரின் கல்வித் திட்டத்தில் உள்ள நிறைவு, குறைவுகளை ஆய்ந்து அவற்றுக்குத் தக்க பரிகாரம் செய்யும் வழி முறைகளைப் பரிந்துரைக்கும் நோக்குடன் இக் குழு நிறுவப்பட்டது. குறிப்பாக ஆரம்பக் கல்வியைப் பரப்புவதற்கு ஏற்ற ஆலோசனைகளைக் கூறவேண்டும் என்று இக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. இக்குழு பல்வேறு இடங்களுக்குச் சென்று பயனுள்ள பல கல்வி விவரங்களைச் சேகரித்தனர். 1882-க்குப்பின் தல தன்னாட்சிமுறை நாடு முழுவதிலும் செயல்பட்டு வந்ததால், 1882-க்குப்பின் ஆரம்பக் கல்வியின் பொறுப்பை நகராட்சி குழுக்களிடமும், உள்ளாட்சி மன்றங்களிடமும் ஒப்படைக்கும்படி பரிந்துரைத்தனர். 1886ஆம் ஆண்டிலிருந்து 1901ஆம் ஆண்டிற்குள் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை 11,501-லிருந்து 23,009 ஆக உயர்ந்தது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை 4,29,093-லிருந்து, 6,33,728 ஆக உயர்ந்தது. இக் கல்விக்காக ஏற்பட்ட செலவும், 132·82 லட்சத்திலிருந்து 177·014 லட்சமாக உயர்ந்தது.

இக் குழுவின் பரிந்துரையின்படி ஆரம்பக் கல்வி ஊக்குவிக்கப் படவேண்டும் என்றும் மாநிலங்களின் வருவாயின் ஒரு பகுதி ஆரம்பக் கல்விக்கென ஒதுக்கப்பட வேண்டுமென்றும், இக் கல்வியின் நிர்வாகப் பொறுப்பை மாநிலங்கள், மாவட்டங்கள், நகராட்சிகள் போன்றவரிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் உயர்நிலைக் கல்விமுறையை உள்ளாட்சியின் பொறுப்பிலும், தனியார் முயற்சிகளிலும் அனுமதிக்கப்படவேண்டுமென்றும்

கூறியது. இதன் பரிந்துரைகளை இந்திய அரசு ஏற்றுக்கொண்டு பெருவாரியானவற்றைச் செயல்படுத்தியது.

கர்சான் பிரபுவின் உயர் ஆணைக்குழு

கர்சான் பிரபு (Lord Curzon), பல்கலைக்கழகக் கல்வியின் தன்மையும் வளர்ச்சியும்பற்றித் தெரிந்துகொள்ள உயர் ஆணைக் குழு ஒன்றை 1902ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிறுவினார். சர் தாமஸ் ராலி (Sir Thomas Raleigh) என்பவர், இக் குழுவிற்குத் தலைவர். திரு சையத் உசேன் பில் கிராமி என்பவர், நைசாம் சமஸ்தானத்தின் கல்வி இயக்குநராக இருந்தார். திரு சையத் உசேன் பில் கிராமி என்பவரும், கல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதியான சர் குருதாஸ் பானர்ஜி என்பவரும் அங்கத்தினர்களாக இருந்தனர். இக் குழு தனது அறிக்கையை 1902ஆம் ஆண்டில் அரசிடம் சமர்ப்பித்தது. இதுவே 1904ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் சட்டமாக உருவெடுத்தது.

1904ஆம் ஆண்டின் பல்கலைக்கழகச் சட்டம்

சர் தாமஸ் ராலே, ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளைக் கர்சான் பிரபு ஏற்றுக்கொண்டு இந்தியப் பல்கலைக்கழகச் சட்டம் கொண்டு வந்தார். இதன்படி பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழுக்கள் திருத்தி அமைக்கப்பட்டன. செனட் (மேல்சபை) சபையில் 50 பேருக்குக் குறையாமலும், 100 பேருக்குக் கூடாமலும், இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, கல்கத்தா பல்கலைக்கழகத்திற்கு 20 ஆகவும், மற்றும் பம்பாய், சென்னை ஆகியவற்றுக்கு 15ஆகவும் இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்துடன் இணையவிருக்கும் கல்லூரிகளுக்கு விதிமுறைகள் கடுமையாக்கப்பட்டன. தனிப் பாடத்துறைகளை நிறுவிப் பேராசிரியர்கள்மூலம் சிறப்புக்கல்வியும், ஆராய்ச்சி முறையும் போதிக்கப்படவேண்டுமென்று கூறப்பட்டது. இச் சட்டத்தால் பல்கலைக்கழகங்களுக்கு ஓரளவிற்குச் சுதந்திரம் அளித்திருந்த போதிலும், அவை அரசின் அனுமதியின்றித் தனித்து எக் காரியங்களையும் செயல்படுத்த இயலாமல் இருந்தன. இந் நிலையைக் கண்டித்துக் கல்கத்தா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த சர் அசுடோஷ் முகர்ஜி தீவிரமாக எதிர்த்தார். இந்தியர்களுக்கு உயர்கல்வி அளிப்பதில் தாராள மனப்பான்மை இல்லை என்று பலரும் கர்சான் பிரபுவின் கல்விக் கொள்கையை வெறுக்கத் தலைப்பட்டனர்.

1910ஆம் ஆண்டிலிருந்து கல்வித்துறை, உள்நாட்டுத் துறையிலிருந்து புதிய கல்வி இலாக்காத்துறைக்கு மாற்றப்பட்டது. சர் ஹார்கோர்ட் பட்லர் (Sir Harcourt Butler) என்பவர், கற்பிக்கும்

பல்கலைக்கழகங்களையும் தேர்வு நடத்திப் பட்டம் அளிக்கும் பல்கலைக்கழகங்களையும் நிறுவுமாறு பரிந்துரைகள் செய்தார். இதன்படி டாக்கா, பாட்னா பல்கலைக்கழகங்களின் ஆய்வுக்குழு நியமிக்கப்பட்டன. ஆனால் இக் குழுக்களின் பரிந்துரைகள் முதல் உலகப் போரின் காரணமாகச் செயல்படுத்தப்படாமல் கைவிடப்பட்டன. கடந்த 50 ஆண்டுகளாகப் பாட்னா, லக்னோ, டாக்கா, டெல்லி, நாகபுரி, வால்டேர், சிதம்பரம், பெனாரஸ், அலிகார், ஹைதராபாத் போன்ற பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. பூனா நகரில் தோற்றுவிக்கப்பட்ட பெண்கள் கல்லூரியும், இதில் அடங்கும். ரவீந்திரநாத் தாகூர் ஏற்படுத்திய சாந்திநிகேதன் (Shantiniketan) பல்கலைக்கழகம் உலகப் புகழ்பெற்றது.

கல்கத்தா பல்கலைக்கழக ஆய்வுக்குழு

செம்ஸ் போர்டு பிரபுவின் (Lord Chemsford) காலத்தில் சர் மைக்கேல் சாட்லர் (Sir Michael Sadler) என்பவரின் தலைமையின்கீழ்க் கல்கத்தா பல்கலைக்கழக ஆய்வுக்குழு (Calcutta University Commission) என்ற ஒன்று நியமிக்கப்பட்டது. இது கல்கத்தா பல்கலைக்கழகத்தின் செயல்முறைகளையும், அதனை அபிவிருத்தி செய்யும் வழிமுறைகளைப் பற்றியும் ஆராய்ந்தது. சர் அசுடோஷ் முகர்ஜி இக் குழுவின் பணிகளுக்கு உறுதுணையாக இருந்தார். இக் குழுவின் அறிக்கை 1919ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வெளியிடப்பட்டது. இதன்படி (1) நாட்டின் முன்னேற்றத்திற்குத் தகுந்த கல்வியை உயர்நிலைப்பள்ளிகள் அளிக்கத் தவறிவிட்டன. (2) உயர் கல்வியில் நடுநிலை (Intermediate Section) வகுப்புகள் பல்கலைக்கழகத்திலிருந்து அகற்றப்பட்டு உயர்நிலைப்பள்ளிகளுடன் இணைக்கவேண்டும். (3) மத்திய அரசின் ஆதரவில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவி அது ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு மாதிரியாகவும், அவற்றின் குறைகளை நீக்கவும் பயன்படும் வகையிலும் அமைக்கவேண்டும் என்று பரிந்துரை செய்தது, இக் குழுவின் பரிந்துரைகள் செம்மையாகச் செயல்படுத்தப்படவில்லை.

1924ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் நாள் பல்கலைக்கழக மகாநாடு ஒன்றை இந்திய அரசு சிம்லா நகரில் கூட்டியது. நாட்டில் உள்ள எல்லாப் பல்கலைக்கழகப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதில் பல்கலைக்கழகங்களுக்கிடையேயான குழு ஒன்று (Inter university board) அமைக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

பெண்கள் கல்வி : இந்தியாவில் நீண்ட காலமாகப் பெண்கள் கல்வி போற்றப்பட்டு வந்திருக்கிறது. பொதுவாகப் பெண்கள்

சமய சம்பந்தமான கல்வியையே விரும்பிப் பயின்றுவந்தனர். வில்லியம் பெண்டிங்க் பிரபுவால் நியமிக்கப்பட்ட கல்வி ஆய்வுக் குழுத் தலைவரான திரு வில்லியம் என்பவர், வங்காளத்தில் இருந்த பெண் கல்விமுறையைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பொதுவாக, ஜமீன்தார்கள் தங்கள் பெண்களுக்குக் கல்வியும், கணக்கும் பயிற்றுவித்து வந்தனர். தங்கள் கணவன் இறந்தபின் சொத்துகளை நல்ல முறையில் பராமரிப்பதற்குப் பெண்களுக்குக் கல்வி அவசியம் என்று உணர்ந்திருந்தனர். அரசாங்கம் பெண்கள் கல்வி அவசியத்தை உணர்வதற்கு முன்பு, ராஜாராம் மோகன்ராய், ராஜா பெய்தியநாத் ராய் போன்றவர்கள் இத் துறையில் கவனம் செலுத்திவந்தனர். திருமதி வில்சன் என்பவர், 1821ஆம் ஆண்டு பெண்களுக்கெனக் கல்விக்கூடம் அமைத்துப் பணியாற்றிவந்தார். ஆனால் அவரால் மேல்குடி மக்களைத் தன் கல்வி நிலையத்தில் சேர்க்கமுடியவில்லை. ஆனால் இத்தகைய முயற்சிகளுக்குப் பம்பாய், சென்னை போன்ற நகரங்களில் வரவேற்பு இருந்தது.

திரு டிரிங்வாட்டர் பெத்துன் (Mr. Drinkwater Bethune) என்பவரின் பெருமுயற்சியால் கல்கத்தாவில் 'இந்து வலிக வித்யாலயா' என்ற பெண்கள் உயர்நிலைப்பள்ளி முதல் முறையாகத் தொடங்கப்பட்டது. பண்டிட் ஈஸ்வர சந்திர வித்யாசாகர், ஜம்புநாத் பண்டிட், பாபுராம் கோபால் கோஷ், மதன்மோகன் தர்கலாங்கர் போன்றவர்கள் இக் கல்வி நிறுவனத்திற்கு ஆதரவு அளித்து வந்தனர். கானிங் பிரபு தனியார்த் துறையில் நடைபெறும் பெண்கள் கல்வியை ஆதரித்து வந்தார். இருப்பினும், ஏற்கெனவே இருந்துவந்த பெண்கள் பள்ளிகளுக்கு உதவித் தொகை அளிக்கப்பட்டுவந்தது. வங்காளத்தில் 1870ஆம் ஆண்டில் 1,173 பவுன்கள் அரசாங்கப் பள்ளிகளுக்கும், 4,462 பவுன்கள் தனியார் துறையிலிருந்த பெண்கள் பள்ளிகளுக்கும் செலவிடப்பட்டன. பம்பாயில் 4000 பவுன்களும், பஞ்சாப் வடமேற்கு மாகாணங்களில் 1,98,182 பவுன்களும் செலவழிக்கப்பட்டன. ஆனால் சென்னை மாகாணத்தில் அரசாங்கப் பெண்கள் கல்வி நிறுவனம் ஒன்றுகூட ஏற்படவில்லை. 1875ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்தியாவில் 1000 அரசாங்கப் பெண்கள் பள்ளிக்கூடங்கள் இருந்தன. அவற்றில் 34,000 பெண்கள் பயின்று வந்தனர். ரிப்பன் பிரபு காலத்தில் தான் பெண்கள் கல்வியின் அவசியம் உணரப்பட்டு அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்பட்டது.

பெண்கள் கல்வியில் சமயத்துறையின் தொண்டு.

பெண்கள் கல்வியில், கிறிஸ்தவசமயம் அரசாங்கம், ஆகியவற்றின் தொண்டுகளைத்தவிர. பிரம்மசமாஜம், ஆர்யசமாஜம்,

இந்திய சமூகத்தொண்டர்கள் கழகம் (Servants of Indian Society) போன்ற சமூக நிறுவனங்களும், பெண்கள் கல்வியில் பெரும் பங்குகொண்டன. ஆர்யசமாஜயத்தின் ஒவ்வொரு கிளைக் கழகமும், ஒரு பெண்கள் கல்வி நிலையத்தை நிறுவிக் கண்காணித்து வந்தது. பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர்களான கேசவ சந்திர சென், சசிபாதா பானர்ஜி, திருமதி ஜே. ஸி. போஸ், திருமதி பி கே. ரேய் போன்றவர்கள் வங்காளத்தில் பெண்கள் கல்விக்கென அரிய பெரிய சேவைகள் செய்துள்ளனர். இவர்கள் மாதப்பத்திரிக்கை ஒன்றை நிறுவி, அதன்மூலம் பெண்கள் கல்வியின் அவசியத்தை வற்புறுத்தி வந்தனர். தக்காணக் கல்விக் கழகமும் (Deccan Education Society) மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய பகுதிகளும் பெண்கள் கல்வித்துறையில் பெருந்தொண்டுகள் ஆற்றியுள்ளன. 1931ஆம் ஆண்டில் நிறுவிய கார்வி பெண்கள் பல்கலைக்கழகமும் (Karvi's Women's University) அத்துடன் இணைந்து செயல்பட்ட 24 கல்லூரிகளும், இக் கழகத்தின் பெரும் முயற்சியின் விளைவாகும். பூனாவிலுள்ள பெர்குசன் கல்லூரியைச் சேர்ந்த தோண்டோ கேசவ் கார்வி என்பவரும் வரலாற்று அறிஞர் சர் ஆர். ஜி. பந்தார் கார் ஆகிய இருவரும் இத்துறையில் குறிப்பிடத்தக்கவர்கள்.

பல்வேறு துறைகளின் மூலம் பெண்கள் கல்வி ஏனைய நாடுகளுக்குச் சமமாக முன்னேற்றம் அடையவில்லையாயினும் ஓரளவிற்கு வளர்ச்சி அடைந்துதான் இருக்கிறது. இந்தியப் பெண்களில் ஆசிரியர்கள் பேராசிரியர்கள், இலக்கிய கர்த்தர்கள், எழுத்தாளர்கள், புதினம் எழுதுவோர், மருத்துவர்கள், விஞ்ஞானிகள், அரசியல் வாதிகள், கவிஞர்கள் போன்றவர்கள் தற்காலத்தில் தோன்றி, இந்தியச் சமூகத்திற்கு அரும்பணிகள் ஆற்றி வருகின்றனர். பண்டித ரமாபாய், சரோஜினி நாயுடு, திருமதி விஜயலஷ்மி பண்டிட், இந்திரா காந்தி, சென்னையைச் சார்ந்த டாக்டர் முத்துலக்ஷ்மி, கிளப்வாலா ஜாதேவ் போன்றவர்கள் தங்களின் சமூக, அரசியல் சேவைகளாலும் உலகப்புகழ் பெற்றுள்ளனர்.

சார்ஜன்ட் கல்வித் திட்டம் (Sergeant Scheme for Education)

இக் கல்வித்திட்டம் இந்திய அரசின் கல்வி ஆலோசகராக இருந்த சர் ஜான் சார்ஜன்ட் என்பவரால் உருவாக்கப்பட்டது. 6-லிருந்து 14 வயதுவரை எல்லா ஆண், பெண்களுக்குக் கட்டாயக் கல்வி அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கம். இதற்குச் செலவாகும் தொகை ரூபாய் 200 கோடி என மதிப்பிடப்பட்டது. இதில் முதல் கட்டத்தில் ஐந்து ஆண்டுப் படிப்பும், அடுத்து

3 ஆண்டுப் படிப்புமாக இருகட்டங்கள் பிரிக்கப்பட்டிருந்தன. தகுதியுள்ள குழந்தைகளே உயர்நிலைப் பள்ளிகளுக்குச் செல்ல வழி வகை செய்யப்பட்டிருந்தது. அரசின் உதவிகொண்டே பெரு வாரியான பள்ளிகள் இயங்கவேண்டும் எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டது. கல்லூரியில் இடைநிலைக் கல்வி (Intermediate Course) உயர்நிலைப்பள்ளிகளுடன் இணைக் கப்படவேண்டும். பட்டப்படிப்பு மூன்று ஆண்டுகளாக இருக்க வேண்டும். தேசிய இளைஞர் இயக்கம் ஒன்று நிறுவி அதன்மூலம் இந்திய வாலிபர்களுக்குத் தங்கள் உடலைப் பேணி, நாட்டுச் சேவைகளில் ஈடுபடவைக்க வேண்டும்.

சர் ராதாகிருஷ்ணன் ஆய்வுக்குழு 1949 (Sir Radakrishnan Commission 1949), சுதந்திரத்திற்குப்பின் 1948-ஆம் ஆண்டு பல்கலைக்கழக விசாரணைக்குழு ஒன்று சர் எஸ். ராதகிருஷ்ணனின் தலைமையின்கீழ் நியமிக்கப்பட்டது. பல்கலைக் கழகக்கல்வியின் நோக்கமும், ஆராய்ச்சி, கல்வியின் தன்மைகளைப் பற்றியும், கல்வியில் மாற்றங்களின் அவசியத்தைப்பற்றியும், பொருளா தாரம், நிர்வாகமுறை, பயிற்றுமுறை, ஆசிரியர்களின் ஊதியம், பாதுகாப்பு, வேலைவாய்ப்புகள் போன்றவற்றை ஆராய்ந்து கூறும் படி நியமிக்கப்பட்டது.

நாடு முழுவதிலும் சென்று பல்வேறு பல்கலைக்கழகங்களையும், கல்வி நிபுணர்களையும், மாநில அரசுகளையும் கலந்து விரிவான கல்வித்திட்டம் ஒன்றை இந்திய அரசிடம் இக்குழு சமர்ப்பித்தது. இக் குழுவின் பரிந்துரைகளில் கீழ்க்கண்ட குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. சாந்திநிகேதன், ஜமியா மீலியா போன்ற வாழ்க்கை முறையின் அவசியங்களை அடிப்படையாகக் கொண்ட பல்கலைக் கழகங்கள் கிராமப்புறச் சூழ்நிலைகளில் அமைக்கப்பட வேண்டும். கல்விக்கென தற்போது செலவிடப்படும் தொகையை விட அதிகத்தொகையை ஒதுக்கவேண்டும். இத்தொகை நாட்டின் மொத்த வருவாயில் 5 சதவீதத்திற்குக் கூடுதலாக இருக்கக் கூடாது. ஏழை மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகை அதிகப்படுத்த வேண்டும். கல்லூரிகளில் 1000 மாணவர்களுக்கு மேல் சேர்க்கப்படக்கூடாது. ஆங்கிலம் பயிற்று மொழியாகக் காலவரையறையின்றி நீடிக்கவேண்டும். பல்கலைக்கழகங்களில் சமயக்கல்வி கூடாது, உயர்நிலைக்கல்விக் கூடங்களிலும் கல்லூரி களிலும் பெண்கள் சேர்ந்து படிக்கலாம். கல்லூரிகளில் போதனை முறையின் தரம் உயர்த்தப்பட எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும். தகுதியின் அடிப்படையிலேயே ஆசிரியர்

களின் உத்தியோக உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பன போன்ற பல பரிந்துரைகள் இடம் பெற்றிருந்தன. இதை அடுத்து டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியாரைத் தலைவராகக்கொண்ட உயர்நிலைக் கல்வி ஆய்வுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. அதன் பரிந்துரைகளையும் அரசு ஓரளவு ஏற்றுச் செயல்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழக மானியக்குழு (University Grants Commission)

1956ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றம் பல்கலைக்கழக மானியக்குழு ஒன்றை அமைக்க சட்டம் நிறைவேற்றியது. இதன்படி பல்கலைக்கழக மானியக்குழு ஒன்று மத்திய அரசால் நியமிக்கப்பட்டது. இதில் 9 அங்கத்தினர்கள் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் 6 ஆண்டுகள் வரை பணியாற்ற வேண்டும். இக் குழுவின் தலைவரை மத்திய அரசு நியமிக்கும். இவர் மாத ஊதியம் பெற்ற முழுநேர ஊழியர். இச்குழு அவ்வப்போது கூடி பல்கலைக்கழகக் கல்விப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஆராய்ந்து ஆவன செய்யும்.

கல்வியின் தரம், பயிற்றுமொழி, ஆராய்ச்சிக் கல்வி, ஆசிரியர்களின் நிலை, வேலைத் திட்டம் போன்றவற்றைப் பல்கலைக்கழகங்களைக் கலந்து இக் குழு செயல்பட்டு வருகிறது. பல்கலைக்கழகங்களுக்குத் தேவைப்படும் மானிய உதவிகளை அளிப்பது இதன் முக்கியக் கடமையாகும். புதிய பல்கலைக்கழகங்களைத் தோற்றுவிக்கத் தேவையான நடவடிக்கைகளையும் மத்திய அரசுக்குத் தெரிவித்து ஆவன செய்கின்றது. உதவித்தொகை அளிப்பதற்கும், புதிய ஆராய்ச்சிக் கல்வி நிறுவவும், இக் குழு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களைப் பார்வையிட்டுத் தேவையானவற்றை நிறைவேற்றி வைக்கிறது. எந்தப் பல்கலைக்கழகமாவது பரிந்துரைகளுக்குப் புறம்பாக நடந்துகொள்ளுமேயானல், பல்கலைக்கழக மானியக்குழு தனது உதவித் தொகையை அப் பல்கலைக்கழத்திற்கு அளிப்பதை மறுக்க உரிமையுண்டு.

(6) சமூக, சமய சீர்திருத்தங்கள்
(Social and Religious Reforms)

19ஆம் நூற்றாண்டில் தோன்றிய சமய, சமூக, பண்பாட்டு மலர்ச்சி, நாட்டில் தேசிய ஒற்றுமை உணர்வையும் தோற்றுவித்தது. 14ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டுவரை தோன்றிய சீர்திருத்த இயக்கங்கள் இடைக்காலப் பிற்போக்கான பழக்கவழக்கங்களோடும் இஸ்லாமிய சமய தீவிரவாதிகளோடும்

மோதி, எவ்விதப் பயனும் இல்லாமல் தனது சக்தியை இழந்து ஓய்ந்துவிட்டன. ஆயினும், 17ஆம் நூற்றாண்டிற்குப் பின் சீர்திருத்தக் கருத்துகள் இந்தியாவில் தோன்றி, முன்னைக் காட்டிலும் பன்மடங்கு வேகத்தில் மக்களை ஆட்கொண்டது. அதன் பயனாக, உறங்கிக்கிடந்த இந்தியா, விழிப்புணர்வு பெற்றுத் தான் அடையவேண்டிய குறிக்கோளை நோக்கிப் பீடுநடை போட ஆரம்பித்தது.

ராஜாராம் மோகன்ராய் (Rajaram Mohanroy)

சமய, சமூகத்துறைகளில் மாறுதல்கள் காணவேண்டுமென்று அயராது உழைத்த மேன்மக்களில் ராஜாராம் மோகன் ராய் முதன்மை இடத்தைப் பெற்றவர். இவர் வங்காளத்தில் 1772ஆம் ஆண்டில் மே மாதம் 22ஆம் நாளில் வைதீகப் பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் சிறு வயதிலேயே சமஸ்கிருதம், பாரசீகம், அராபிக், லத்தீன், கிரேக்கம், ஹீப்ரு போன்ற பண்டைய மொழிகளில் நல்ல பயிற்சி பெற்றிருந்தார். ஆங்கில மொழியைக் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாளராகச் சேர்ந்த பின் பயின்றுகொண்டார். தன் மூத்த சகோதரரின் மனைவி உடன்கட்டை ஏறித் துடிதுடித்து மாண்ட காட்சியைப் பார்த்து, அக் கொடிய பழக்கத்தை வெறுக்கத் தலைப்பட்டார். இந்துக்கள் பல கடவுளர்களை வணங்குவதைக் கண்டு அவற்றின் பொருளற்ற தன்மை குறித்துச் சிந்திக்கலானார். இதைப்போன்று சமயத்தில் பின்னிப் பிணைந்து கிடந்த பல்வேறு கண்மூடிப் பழக்கவழக்கங்களையும், சமூகத்தில் அமைந்திருந்த பகுத்தறிவுக்கு ஒவ்வாத செயல்களையும்பற்றி ஆராயத் தலைப்பட்டார். இந்து சமய சாத்திரங்கள் இறைவன் ஒருவனே என்ற உண்மையை வலியுறுத்தியுள்ளது என்றும், பிற்காலத்தில் கண்மூடிக் கொள்கைகளின் காரணமாக, இந்து சமயத்தில் பல்வேறு கடவுளர்கள் தோன்றினர் என்றும் ஆணித்தரமாக எடுத்துக் கூறிவந்தார். 1815-ல் இவர் கிழக்கிந்தியக் கம்பெனியின் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கல்கத்தாவில் தங்கியபின், சீர்திருத்த இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

ராஜாராம் மோகன்ராய் முதல் முயற்சியாக 'ஆத்மிய சபை' (Atmiya Sabha) என்ற ஒன்றை நிறுவி, சமயத் தத்துவங்களைத் தாராளமாகப் பலரும் தர்க்கம் செய்யும்பொருட்டு ஏற்பாடு செய்தார். இது, சுமார் நான்காண்டுகள் நீடித்திருந்தது. இதையடுத்து 1828ஆம் ஆண்டில் இவர் பிரம்ம சபை (Brahma Sabha) என்னும் கழகத்தை நிறுவினார். ஆங்கிலக் கல்வி இந்தியாவில் போதிக்கப்பட வேண்டும் என்று உழைத்த உத்தமர்களில் ராஜா

ராம் மோகன்ராய் முக்கியமானவர். டேவிட் கேரி என்பவரோடு ஒத்துழைத்துக் கல்கத்தாவில் இந்துக் கல்லூரி ஒன்றை நிறுவினார். இதுவே பிற்காலத்தில் மாநிலக் கல்லூரியாக மாறிற்று. இந்து மதத்திலுள்ள குறைபாடுகளையும், சதி (Sati), (உடன்கட்டை யேறுதல்) பலதார மணம் போன்ற பழக்கங்களையும் வன்மை யாகக் கண்டித்து அவற்றை நீக்க அரும்பாடுபட்டார். விதவை மறுமணம், பெண் கல்வி, தந்தைச் சொத்தில் பெண்களுக்குப் பங்கு போன்றவற்றை ஆதரித்தார். ஜாதிக் கொடுமைகளைத் தீவிரமாக எதிர்த்தார். செய்தித்தாள் சுதந்திரம், விவசாய மக்களின் உரிமை, ராணுவத்தில் இந்தியர்களை அதிகமாகச் சேர்ப்பது போன்றவற்றுக்காக அரசிடம் வாதிட்டு அரிய சேவை செய்து வந்தார். ராஜாராம் மோகன்ராய், இரண்டாவது ஷா ஆலம் என்ற முகலாய மன்னரின் சார்பில் இங்கிலாந்திற்குச் சென்றார். அங்கு மன்னரின் உதவித் தொகையை 18 லட்சமாக உயர்த்த வேண்டுமென்று கிழக்கிந்தியக் கம்பெனி இயக்குநர்களிடம் வேண்டிக்கொண்டார். இவர் கேட்ட முழுத் தொகையும் அளிக்கப்படாவிட்டாலும் மூன்று லட்சம் ரூபாய் அதிகம் கொடுப் பதாக வாக்குறுதி அளித்தனர். இந்தச் சேவைக்காக ராம் மோகன் ராய்க்கு 'ராஜா' என்ற பட்டத்தை இரண்டாவது ஷா ஆலம் அளித்தார். ராஜா ராம் மோகன்ராய், இங்கிலாந்தில் இருக்கும்போதே பிரிஸ்டல் (Bristol) என்ற நகரத்தில் 1833ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 27ஆம் தேதி உயிர் நீத்தார்.

தாய் நாட்டுப்பற்றும், எளிய மக்கள்மீது கொண்ட அன்பும் ராஜா ராம் மோகன்ராயைத் தீவிரவாதியாக்கின. ஆங்கில அரசை, வன்முறையால் வீழ்த்த முடியாது என அறிந்து, பொது மக்களிடம் தேசஉணர்வை உருவாக்கினார். இதற்காக, 'சாம்வாட் கமுதி' என்ற வங்காளிப் பத்திரிகையை நடத்தினார். மக்களின் பண்பாடு உயரவும் இவர் பாடுபட்டார். வில்லியம் பெண்டிங்க் பிரபுவுடன் ஒத்துழைத்து உடன்கட்டை (Sati) ஏறும் கொடிய பழக்கத்தை ஒழித்தார். ஐதீகர்கள் இச் சட்டத்தை எதிர்த்து இங்கிலாந்திலுள்ள பிரிவி கவுன்சிலில் 'மனு' ஒன்று தாக்கல்செய்த போது, இவர் அதற்கு எதிராகத் தனது நண்பர்கள் ஒத்துழைப் புடன் மற்றொரு மனுக் கொடுத்துத் தனது முயற்சியில் வெற்றி பெற்றார். ஐதீகர்களின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்திய நிர்வாக முறையில் மாறுதல் வேண்டுமென எழுதியும், பேசியும் வந்தார். இங்கிலாந்துப் பாராளுமன்றமும் இந்தியா சம்பந்தப் பட்ட விவகாரங்களில் இவரையும் கலந்தாலோசித்து வந்தது. ஐரோப்பியத் தத்துவ மேதைகள் பேகன், ஹூம், பெந்தாம், பிளாக்ஸ்டோன், மாண்டெஸ்க்யூ போன்ற அறிஞர்களின்

அரசியல் கருத்துகள், ராஜா ராம் மோகன் ராயை வெகுவாகக் கவர்ந்திருந்தன. இவர் நல்ல எழுத்தாளர். பன்மொழி மேதை. வங்காள இலக்கியத்தில் அழியாத இடம் பெற்றுள்ளார். 'புதிய இந்தியா தோன்ற வழிவகுத்தவர்' என்று ரவீந்திரநாத் தாகூர் ராஜா ராம் மோகன் ராயைப்பற்றிக் கூறியுள்ளார். இந்திய நிர்வாகத் துறையில் இந்தியர்களுக்கு அதிகப் பங்கு வழங்கவேண்டு மென்பது அவரது நோக்கம்.

பிரம்ம சமாஜம் (Brahmo Samaj) : ராஜா ராம் மோகன்ராய் 1814-ல ஏற்படுத்திய 'ஆத்மீய சபையின்' தொடர்பே பிரம்ம சமாஜம். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற அடிப்படையில் இந் நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. அத்துடன் 'தூய உள்ளமும், தூய வாழ்வுமே உய்யும் வழி' என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. எளியவர்களிடம் அன்பு பூண்டு ஒழுக வேண்டுமென்றும், நடமாடும் மானிடருக்குச் செய்யும் சேவையே தெய்வத்திற்குச் செய்யும் சேவை என்பன போன்றவை இவ்வியக் கத்தின் கருப்பொருளாக அமைந்திருந்தன. எல்லாச் சமயத் தவர்களிடமும் ஒருமைப்பாடும் சமத்துவமும் நிலவவேண்டு மென்று இவ்வியக்கம் கூறிவந்தது. பிரம்ம சமாஜம் ஒரு குறிப் பிட்ட சமயத்தையோ, சமய நூலையோ, ஞானியையோ, அவதாரத்தையோ மூலப் பொருளாகக் கொண்டு தோற்றுவிக்கப் பட்டதன்று. இது பல கடவுளர்கள் உருவ வழிபாடு, சாதிப் பிரிவுகள், கர்மவிதிகள், வர்ணாஸ்ரம தர்ம முறைகள், மறுபிறப்பு முதலியவற்றை மறுக்கிறது ராஜா ராம் மோகன்ராய் ஏற்படுத் திய பிரம்ம சபையில் ஆத்மீக சாந்தியே முக்கிய இடம் வகிக் கின்றது. சமாஜக் கட்டிடத்திற்குள் திரு உருவங்களும் சிலைகளும் நிறுவக்கூடாதென மோகன்ராய் கூறினார்.

ராஜா ராம் மோகன்ராய்க்குப்பின் பிரம்ம சமாஜம் — மகரிஷி தேவேந்திரநாத் தாகூர் (1817-1905)

ராஜா ராம் மோகன்ராயின் அகால மரணத்திற்குப் பின், அவர் தோற்றுவித்த பிரம்மசபை தகுதிவாய்ந்த தலைவரின்றிச் சிறிது தளர்வுற்றது. ஆனால், மகரிஷி தேவேந்திரநாத் தாகூர் இவ் வியக்கத்தில் 1843-ல் ஈடுபட்டு இதற்குப் புதுவாழ்வளித்தார். மகரிஷி தேவேந்திரநாத் தாகூர், புகழ் பெற்ற கவிஞர் ரவீந்திர நாத் தாகூரின் தந்தையாவார். இவர் பிரம்ம சமாஜத்தில் இறை வழிபாடு, இறைவனுக்கு நன்றி செலுத்துதல், இறைவனைப் புகழ்தல் போன்ற கூறுகள் அடங்கிய வழிபாட்டுமுறையை நடை முறைக்குக் கொண்டுவந்தார். இதற்கு முன்பு, இறைவழிபாடு வேதம், உபநிடதம் போன்ற நூல்களிலிருந்து சில பகுதிகள்

வாசிக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டு வந்தது. 'தத்துவ போதினிப் பாடசாலை' ஒன்று ஏற்படுத்தி அதில் பிரம்ம சமாஜத்தின் தத்துவங்களைப் பரப்பும் முறைகளில் பல தொண்டர்களுக்குப் பயிற்சி அளித்தார். இங்கு நாள்தோறும் 'பிரம்ம பஜனைகள்' நடத்தப்பட்டன. இந்தப் பஜனைகளில் மகா நிர்வாண தத்துவங்களில் காணப்படும் தோத்திரப் பாடல்களின் கருத்துகளைக் கொண்ட சூத்திரங்கள் பாடப்பட்டன. இவ்வாறு தேவேந்திர நாத் தாகூரின் தலைமையின்கீழ் பிரம்ம சமாஜம் வளர்ந்து, பல ஆயிரக்கணக்கான மக்களைக் கவர்ந்தது. ஆயினும் முற்போக்காளர்கள் அவருடன் மாறுபட்டனர். எனவே, பிரம்ம சமாஜம் பிளவுபட்டது. தேவேந்திரநாதரின் தலைமையிலான ஆதிப்பிரம்ம சமாஜம் என்றும், திரு கேசவ சந்திர சென் தலைமையிலான இந்திய பிரம்ம சமாஜம் என்றும் இரு அமைப்புகள் எழுந்தன.

திரு. கேசவ சந்திரசென் (Mr. Kesav Chandra Sen): திரு கேசவ சந்திர சென் என்பவர், பிரம்ம சமாஜ ஸ்தாபனத்தில் முக்கியத் தலைவர்களில் ஒருவர். இவர் கிறிஸ்தவ, வைணவ சமயங்களிலுள்ள அன்பு, நம்பிக்கை, வழிபாட்டுமுறை ஆகியவற்றைச் சமாஜத்தில் ஏற்படுத்தினர். சமூகச் சீர்திருத்த இயக்கமும் இவரது முயற்சியால் ஆக்கம் பெற்றது. இவரது சீர்திருத்தக் கருத்துகள் பலருக்குப் பிடிக்காததால் பிரம்ம சமாஜம் இரு பகுதிகளாகப் பிரிந்தது. சர்வசமய நம்பிக்கையும் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளையும் கொண்ட இவர், நல்ல கல்வி அறிவும் ஞானமும் நடைமுறை அறிவும், பெற்றுத் திகழ்ந்தார். 1872-ல் தோற்றுவிக்கப்பட்ட திருமணச் சட்டத்தை உருவாக்கப் பாடுபட்டவர்களில் திரு. சென் முக்கியமானவர். இளமை மணத்தை இச் சட்டம் தடுத்தது. ஆண்களுக்கு 18 வயதும் பெண்களுக்கு 14 வயதும் நிரம்பி இருக்க வேண்டுமென்று இத் திருமணச் சட்டம் வற்புறுத்தியது. ஆனல், இவரது வீட்டுத் திருமணம் இவரது வாழ்விலும், சமாஜத்தின வளர்ச்சியிலும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. திரு. சென் 14 வயது நிரம்பாத தனது மகளைக் கூச் பீகார் மகாராஜாவிற்கு 1878-ல் திருமணம் செய்து வைத்தார். மன்னருடைய வயதும் 16 நிறைவடையவில்லை. இச் செயலைக் குழந்தை மணம் என்று இவருடைய சீடர்கள் எதிர்த்தனர். அத்துடன் கேசவ சந்திர சென், கிறிஸ்துவின் போதனைகளையும், வைணவக் கொள்கைகளையும் பஜனையாக உருவாக்கி நாள்தோறும் சமாஜத்தில் வழிபாடு செய்து வந்ததால், பிரம்ம சமாஜத்தில் பிளவு ஏற்பட்டது. நவவிதான் பிரிவுக்குக் கேசவ சந்திர சென் தலைமை தாங்கினர். இவர் பிற்காலத்தில் தனது போக்கையும் வழிபாட்டு முறைகளையும் முற்றிலும் மாற்றிக்

கொண்டார். கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், யூதம், சௌராஷ்டிரம், கன்பூசியம் போன்ற எம் மதத்தைச் சார்ந்தவர்களும் இறைவனிடத்தில் செல்லலாம் என்று கூறி உலகப் பொது மறை உணர்வை ஏற்படுத்தினார். புத்தர், ஏசு, நபிநாயகம், சைதன்யர் போன்றோரின் வழியாக இறைவன் தன்னை வந்தடையும் வழிகளைக் கற்பித்தார். மானிடர் அவ் வழிகளைப் பின்பற்றுவதே நோக்கமாகக் கொள்ள வேண்டுமேயொழிய அதில் களங்கம் விளைவிக்கலாகாது எனக் கூறி வந்தார். இவர், பேரரசர் அக்பர், குருநானக், ராமலிங்க அடிகள் போன்றவர்களைப்போல் சமய ஒற்றுமையையும், சகோதரத் தன்மையையும் வளர்க்கப் பாடுபட்டார். இவருடைய போதனைகளின் பிரதிபலிப்பாக இராமகிருஷ்ண பரமஹம்ஸர் பிற்காலத்தில் தோன்றினார்.

'நவ விதான்' பிரிவுக்குத் தலைவரான பின், அதைப் பெருமளவில் அபிவிருத்தி செய்தார். இந்தியாவில் பல இடங்களில் இதன் கிளைகள் தோற்றுவிக்கப்பட்டன. உலகிலுள்ள எல்லாச் சமயங்களின் கருப் பொருள்களை ஒருங்கு திரட்டி 'சுலோக சங்ரஹா' என்னும் துதிப் பாடலாக வெளியிட்டார். 'ஏசு கிறிஸ்து', 'ஐரோப்பாவும் ஆசியாவும்', 'பெரிய மகான்கள்' போன்ற அவருடைய மெய்சிலிர்க்கும் சமயச் சொற்பொழிகள், சமரச சன்மார்க்க நோக்கமுடையவை. கிறிஸ்து நாதரின் தூய வாழ்வும், போதனைகளும் கேசவ சந்திர சென்னைக் கவர்ந்த போதிலும், ஏசு பிரானைக் கடவுளென்றோ அல்லது கடவுளின் அவதாரமென்றோ இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. பண்டித சித்தநாத் தத்துவபூஷன், நரேந்திரநாத் சட்டர்ஜி, பண்டித சிவாநந்த சாஸ்திரி போன்றவர்கள் இவ் வியக்கத்தில் குறிப்பிடத்தக்கவர்கள்.

பிரார்த்தனை சமாஜம் (Prarthana Samaj)

மகாதேவ கோவிந்த ரானடே: 1849-ல் பிரம்ம மகாசபை என்ற இயக்கம் மகாராஷ்டிரத்தில் தோன்றியது. இது வெகு விரைவில் மறைந்து போயிற்று. 1864-ல் கேசவ சந்திர சென் பம்பாயில் தனது சமாஜத்தின் கருத்துகளைப்பற்றி விளக்கி ஒரு கூட்டத்தில் பேசினார். அதன் பலனாகப் பம்பாயில் பிரார்த்தனை சமாஜம் என்ற இயக்கம் டாக்டர் ஆத்மராம் பாண்டுரெங் என்பவரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. பகுத்தறிவின் அடிப்படையில் இறைவழிபாடு நடத்துதல், சாதிக் கொடுமைகளை அகற்றுதல், விதவை மறுமணத்தை ஆதரித்தல், குழந்தை மணத்தை விலக்குதல், பெண் கல்வியை வளர்த்தல் போன்ற சீர்திருத்தக் கருத்துக்களை நோக்கமாகக் கொண்டு இப் பிரார்த்தனை சமாஜம் ஆரம்பிக்கப்பட்டது.

பிரார்த்தனை சமாஜத்தின் ஆதரவில் தொழிலாளர்களுக்கு இரவுப் பள்ளிகளும், தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தப் பாடுபடும் இயக்கங்களும், பெண் கல்விக்காகப் பெண்களின் கழகங்களும், அனாதைப் பள்ளிகளும், முடவர், குருடர், பித்தர் போன்றவர்களின் மறுவாழ்விற்கான நிறுவனங்களும் ஆரம்பிக்கப்பட்டு நல்லமுறையில் கண்காணிக்கப்பட்டு வந்தன. பம்பாய் உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற மகாதேவ கோவிந்த ரானடே என்பவர், இவ்வியக்கத்திற்குத் தலைவராக இருந்தார். இவருக்கு உறுதுணையாக வடமொழி வல்லுநரும் வரலாற்றுப் பேரறிஞருமான ஆர். ஜி. பந்தார் கார் என்பவர் இருந்து வந்தார். ரானடே அக் காலத்தில் தலைசிறந்த கல்விமானாகவும், சமூகச் சீர்திருத்த வாதியாகவும், இந்திய தேசிய இயக்கத்தின் வழிகாட்டியாகவும் இருந்தார். இந்திய தேசியக் காங்கிரஸ் கூட்டங்கள் கூடும்போது சமூகச் சீர்திருத்தங்களை வலியுறுத்தும்பொருட்டு ரானடே தனியாக மகாநாடுகள் நடத்துவதுண்டு. இத் துறையில் இவர் ராஜாராம் மோகன்ராய், சையத் அகமத்கான் போன்ற பெரும் தலைவர்களுக்கு ஒப்பாவார் என்று திரு ஆண்ட்ருஸ் (Mr. Andrews) என்பவர் கூறியுள்ளார். இவரது பெரும் முயற்சியால் 1884-ல் 'தக்காணக் கல்விக் கழகம்' (Deccan Education Society) ஆரம்பிக்கப்பட்டது. இப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், கோபாலகிருஷ்ண கோகலே, திலகர், கணேஷ் அகார்கார் போன்றோராவர். இக் கல்விச் சங்கத்தில் சேர்ந்தவர்கள் மாதம் ரூபாய் 75ஐ ஊதியமாகப் பெற்று எளிமையான வாழ்வை மேற்கொண்டு அரிய சேவைகள் செய்துவந்தனர். இவர்கள் ஆரம்பித்த சிறிய பள்ளிக்கூடம் நாளாவட்டத்தில் பெர்குசன் கல்லூரியாக வளர்ந்தது. இதில் 1931-ல் 1700 மாணவர்கள் கல்வி பயின்றனர். சங்கிலி என்ற இடத்தில் வெல்லிங்டன் என்ற கல்லூரி ஒன்றையும் சமாஜத்தினர் நடத்தி வந்தனர்.

இந்திய சமூகப் பணி மன்றம் (Servants of Indian Society)

கோகலே தனது கல்லூரிப் படிப்பை முடித்தபின், 1885-ல் 'தக்காணக் கல்விக் கழகத்தில் அங்கத்தினராகச் சேர்ந்தார். ஆனால் திலகருடைய தீவிரப் போக்குப் பிடிக்காத காரணத்தால் அவரை நீக்கிவிட்டு, இந்திய சமூகப் பணி மன்றத்தை 1905-ல் நிறுவினார். இவ்வியக்கம் மராட்டியப் பகுதியில் கல்வியின்மூலம் பெரும் சேவை செய்துள்ளது. இந்திய மக்களுக்குச் சேவை செய்யும் உண்மை ஊழியர்களைப் பயிற்றுவிப்பதே இதன் குறிக்கோளாக அமைந்தது. சமூகப் பணிகளுடன் ஆத்மீகப் பணிகளை

யும் இவர்கள் ஆற்றிவந்தனர். 1915-ல் கோகலே இறந்தபின் இந்திய சமூகப் பணி மன்றத்தின் தலைவராக வி. எஸ். சீனிவாச சாஸ்திரி நியமிக்கப்பட்டார்.

நாராயண மல்கார் ஜோஷி (Narayana Malhar Joshi) என்பவர், சமூகப் பணி மன்றம் (Social Service League) ஒன்றைப் பம்பாயில் நிறுவினார். இதன் மூலம் சமூக அமைப்பில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றுக்குத் தக்க பரிகாரம் தேடும் பணியில் ஈடுபட்டார். இவர் இப்பணியில் ஓரளவு வெற்றியும் கண்டார். 1920-ல் 'அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸ்' என்ற இயக்கத்தை ஆரம்பித்து அதில் 40 தொழிற் சங்கங்களை இணைத்தார். இதில் ஒரு லட்சம் தொழிலாளர்கள் அங்கத்தினராயிருந்தனர். இவருடைய தொண்டு 1927ஆம் ஆண்டு வரை நீடித்தது.

சேவா சமிதி (Seva Samithi)

இந்திய சமூகப் பணி மன்றத்தின் உப தலைவர் திரு. இருதய நாத் குன்ஸ்ரு என்பவர், 1914-ல் சேவா சமிதி என்ற இயக்கத்தை அலகாபாத்தில் ஆரம்பித்தார். இதன் பணி வெளிநாட்டவர்களையும் கவர்ந்துள்ளது. அலகாபாத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடும் கும்பமேளா விழாவில் ஒழுங்கு, கட்டுப்பாடு ஏற்படுத்துதல், பஞ்சம், வெள்ளம், தொத்து நோய் போன்ற துன்பங்கள் நேரிடும்போது மக்களுக்குச் சேவை செய்தல், கல்வி, கூட்டுறவு சுகாதரம், தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றம், நெறிதவறிய பெண்களுக்கு மறு வாழ்வளித்தல், குற்றவாளிகளைச் சீர்திருத்தல் போன்ற சமூகப் பணிகளைச் செய்வதை நோக்கமாகக் கொண்டு இச் சமிதி தோன்றிற்று. சேவா சமிதியின் மற்றொரு பிரமுகரான ஸ்ரீராம் பாஜ்பாய் என்பவரின் தலைமையில் சாரணர் (Scout) இயக்கம் ஒன்று தோன்றிற்று. இவ் வியக்கமும் பொது மக்களுக்கு நல்ல பணிகளை ஆற்றி வந்தது. இந்திய சமூகப் பணி மன்றத்தின் சென்னைக் கிளை கிராம அபிவிருத்தித் திட்டங்களில் கவனம் செலுத்திக் கிராம மக்களிடம் முன்னேற்றம் கண்டு வந்தது. 'பில் சேவா மண்டல்' என்ற நிறுவனம் ஆதிவாசிகள் மத்தியில் பணியாற்றி வந்தது.

ஆரிய சமாஜம் (The Arya Samaj)

சுவாமி தயானந்தர்: சுவாமி தயானந்தர் என்ற அறிஞர் ஆரிய சமாஜம் என்ற இயக்கத்தை 1875-ல் ஆரம்பித்தார். வசதி படைத்த குஜராத்துப் பிராமணக் குடும்பத்தைச் சார்ந்த

இவர், சிறுவயதிலேயே உண்மையை நாடி, வீட்டைவிட்டு வெளியேறினர். ஆங்கில அறிவு இல்லையாயினும், வடமொழியில் தேர்ச்சி பெற்றிருந்தார். சுவாமி விஜரானந்த் என்பவரிடம் ஞானப் பயிற்சி பெற்றுத் தனது எஞ்சிய வாழ்நாட்களை வேத சமயத்தைப் பரப்புவதிலும், இந்து சமூகத்தைச் சீர்திருத்துவதிலும், செலவிட்டார். தான் ஆரம்பித்த ஆரிய சமாஜ இயக்கத்தின் மூலம் நாடு முழுவதிலும் பல கல்வி நிறுவனங்களை ஆரம்பித்து மக்களுக்குக் கல்வி அறிவு புகட்டி வந்தார். கர்ம விதி, மறு பிறப்பு ஆகியவற்றை ஆரிய சமாஜத்தின் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டார். இக் கொள்கைகளைச் 'சத்தியார்த்த பிரகாசம்' என்னும் நூலில் மிகத் தெளிவாக விவரித்துள்ளார். வேதங்களைத் தவிர, ஏனைய நூல்களை இவர் ஏற்றுக் கொள்ள மறுத்தார்.

சுவாமி தயானந்தரும் அவரது அடியார்களும் தோற்றுவித்த கல்வி நிறுவனங்கள் பிற்காலத்தில் நாட்டுப்பற்றையும், விடுதலைப் பற்றையும் புகட்டும் நிலையங்களாகப் பணியாற்றி வந்தன. லாலா லஜபதி ராய், சுவாமி சிரத்தானந்தர் போன்ற அரசியல் பெருந்தலைவர்களை உருவாக்கிய பெருமை சுவாமி தயானந்தருக்கு உண்டு. புராணங்கள், சாதி, உருவ வழிபாடு ஆகியவற்றில் இவருக்கு நம்பிக்கை கிடையாது. மூடநம்பிக்கை, யாகங்கள் வளர்த்தல், இளமை மணம் இவற்றை எதிர்த்து வந்தார். மதம் மாற்றப்பட்ட இந்துக்களைத் திரும்பவும் இந்து சமயத்திற்குக் கொண்டுவரப் பாடுபட்டார். ஐதீக இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முகமதியர்கள் ஆகியவர்களின் தாக்குதல்களுக்குச் சுவாமி தயானந்தர் இலக்கானர். அவர் தனது கொள்கைகளைப் பாமர மக்களிடமே அதிகமாக எடுத்துரைத்தார்.

சுவாமி தயானந்தரின் கொள்கைகள் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் மூவர். அவர்கள் முறையே லாலா ஹன்ஸ்ராஜ் (Lala Hansraj), பண்டித் குரு தத்தா (Pandit Guru Datta), லாலா லஜபதி ராய் (Lala Lajapath Rai) ஆகியோர் ஆவர். இம் மூவரும் தங்கள் குருநாதரின் நினைவாகச் சிறிய பள்ளி ஒன்று நிறுவினர். இப் பள்ளி பிற்காலத்தில் தயானந்தா ஆங்கிலோ-வேதிக் (D A.V.) கல்லூரியாக லாகூரில் வளர்ந்தது. 1892ல் தயானந்தர் நிறுவிய ஆரிய சமாஜம் இரு பிரிவுகளாகப் பிரிந்து, ஒன்று லாலா ஹன்ஸ்ராஜ் என்பவர் தலைமையிலும், மற்றொன்று முன்ஷிராம் (சுவாமி சிரத்தானந்தர்) என்பவர் தலைமையிலும் இயங்கத் தலைப்பட்டது. லாலா ஹன்ஸ்ராஜ தயானந்தா ஆங்கிலோ-வேதிக் கல்லூரியின் பொறுப்பைக் கவனித்து வந்தார்.

இவர் இக் கல்வி நிறுவனத்தை அபிவிருத்தி செய்து பஞ்சாபில் மிகப் பெரிய கல்விக் கழகமாக உருவாக்கினார். இவர் மாமிச உணவு உண்பதைத் தடுக்கவில்லை. முன்சிராம் என்ற சுவாமி சிரத்தானந்தா வேதகால வாழ்க்கை முறைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்றும், இதற்குத் துறவு வாழ்க்கை மனிதனுக்கு அவசியம் என்றும் கூறி வந்தார். இவர் தனது கொள்கைகளைப் பரப்பும்பொருட்டு ஹார்வார் என்ற இடத்தில் குருகுல முறைப்படி அமைந்த ஒரு கல்வி நிலையத்தை நிறுவினார். இதில் சேரும் மாணவர்களை 7 அல்லது 8 வயதில் பொருக்கி எடுத்து 16 ஆண்டுகளுக்கு ஏழ்மை, வறுமை, உண்மை, நேர்மை, கீழ்ப்படிதல் போன்ற பண்புகளில் பயிற்சி அளித்து வந்தார். இக் கல்லூரியில் சமஸ்கிருதம் போதனமொழியாக இருந்தது. ஆங்கிலமும், விஞ்ஞானமும் ஓரளவுக்குக் கற்பிக்கப்பட்டது. இங்குள்ள ஆசிரியர்கள் குரு என்றே அழைக்கப்பட்டனர்.

இந்தியரை, இந்தியப் பண்பாட்டிலும், இந்து சமயத்திலும், இந்தியாவின்மீதும் பற்றுக்கொள்ளும்படி திசை திருப்பியவர்களில் முதன்மையானவர் சுவாமி தயானந்தர். சுதேசி இயக்கத்திற்கு வித்திட்டவரும் இவரே. 'வாய்மையே வெல்லும்' என்ற தாரக மந்திரத்தை இந்தியருக்கு வழங்கியவர் இவரேயாவர். ஆரிய சமாஜம் தில்லியை மையமாகக்கொண்டு இந்தியா வெங்கும் கல்வி நிலையங்கள், அறநிலையங்கள் ஆகியவற்றை நிறுவிப் பணியாற்றி வருகிறது. எனவேதான் சுவாமி தயானந்தரை 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய மறுமலர்ச்சியின் தந்தை என்று ரவீந்திர நாத் தாகூர், கேசவசந்திர சென், அரவிந்தர், கர்னல் ஆல்காட், பிளாவட்ஸ்கி அம்மையார் போன்றோர் கருதுகின்றனர்.

பிரம்ம ஞான சபை (The Theosophical Society)

பிரம்ம ஞான சபையை, ஹெலினா பெட்ரோவ்னா பிளாவட்ஸ்கி என்ற அம்மையாரும், கர்னல் ஆல்காட் என்பவரும் 1875-ல் அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் தோற்றுவித்தனர். இவர்கள் இந்தியாவிற்கு வந்து 1879-ல் பம்பாயில் பிரம்மஞானத்தின் மேன்மைகளையும், அது தழைத்தோங்க இந்தியாவில் சபைகள் பல ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதைப்பற்றியும் எடுத்துரைத்தனர். பின்னர், இவர்கள் இலங்கைக்குச் சென்று கொழும்பு நகரில் வித்யோதயா என்ற கல்லூரியில் புத்த சமயத்தைப்பற்றி விளக்கி, ஆத்மீக மார்க்கத்தை உயர்வுபடுத்த வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்தினர். இலங்கையில் பல பிரம்ம ஞான சபைகளை நிறுவினார்.

கேசவ சந்திர சென் தலைமையில் வளர்ந்த இந்திய பிரம்ம சமாஜம் 1878-ல் நவவிதான் என்றும் சாதாரண பிரம்ம சமாஜம் என்றும் பிளவுண்டது. காலப்போக்கில் முதலிரண்டும் செல்வாக்கிழந்தன.

1882ஆம் ஆண்டில் சென்னை அடையாற்றங்கரையில் பிரம்ம ஞான சபையின் தலைமைச் செயலகம் தோற்றுவிக்கப்பட்டது. உலகில் வேறெந்தப் பகுதியிலும் பூகம்பம் ஏற்பட்டால் சேதங்கள் அதிகம் ஏற்படும். ஆனால், தென்னிந்தியாவில் பூகம்பம் ஏற்படாது, அவ்வாறு ஏற்பட்டாலும் அதிக அழிவு ஏற்படாது என்ற தீர்மானமான எண்ணத்திலேயே பிரம்மஞான சபையின் தலைமை அகம் சென்னையில் தோற்றுவிக்கப்பட்டது என்று இதை ஆரம்பித்த அறிஞர்கள் கூறி இருக்கின்றனர். பிரம்ம ஞான சபையின் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தவர் டாக்டர் அன்னி பெசன்ட் அம்மையாராவார். இவர் இவ் வியக்கத்தில் 1889-ல் சேர்ந்து 1893-ல் அயர்லாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்தார். தனது வாழ்நாள் முழுவதும் இவ் வியக்கத்தின்பொருட்டுச் சேவை செய்யத் தீர்மானித்து, 1933-ல் தான் சாகும்வரை உழைத்து வந்தார். ஆத்மீகப் பணியோடு இந்திய நாட்டுப் பணியையும் தனது குறிக்கோளாகக் கொண்டிருந்தார். பெசன்ட் அம்மையார், இந்துப் பெண்மணிகளைப் போன்று உடை அணிந்து, இந்துக்களின் வாழ்க்கையை மேற்கொண்டார். இந்தியாவிலுள்ள பல புனித இடங்களுக்குச் சென்று ஆத்மீக விசாரணைகளில் ஈடுபட்டு வந்தார். இவர் காசி நகரில் பல ஆண்டுகள் தங்கி, அங்கு மத்திய இந்துக் கல்லூரியைத் (Central Hindu College) தோற்றுவித்தார். இதுவே பிற்காலத்தில் பெனாரஸ் பல்கலைக்கழகமாக மாறியது.

1910-ல் கர்னல் ஆல்காட் இறந்தபின், அன்னி பெசன்ட் அம்மையார் பிரம்மஞான சபையின் தலைவரானார். சமூக சேவையிலும், நாட்டின் சேவையிலும் மிகுந்த ஈடுபாடுகொண்டு சாதி ஒழிப்பு, பெண் கல்வி, நாட்டு விடுதலை முதலியவற்றிற்காக ஓயாது பாடுபட்டார். இவரது எழுச்சி மிக்க சொற்பொழிவுகள் 'இந்தியாவே விழித் தெழு' என்னும் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இவர் 'பொது வாழ்வு', 'நவ இந்தியா' ஆகிய வார, நாளிதழ்களை ஆரம்பித்து இந்திய மக்கள் தங்களுடைய பழம் பண்பாட்டையும், சமய மேன்மைகளையும் உணரும்படி செய்தார். இந்தியா தன்னாட்சி பெற வேண்டுமென ஓர் இயக்கத்தை (Home Rule Movement) ஆரம்பித்தார். இவரது அரசியல் போக்கை அறிந்த இந்திய அரசு, இவரை 1917-ல் சிறையிலடைத்தது. மக்கள் கிளர்ச்சி செய்யவே விடுதலை செய்யப்பட்டார். இந்திய

தேசிய காங்கிரசுக்குத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'இந்தியாவைத் தாயகமாகக் கொண்டு தன் வாழ்வு, தாழ்வு, இன்ப துன்பங்கள் அனைத்தையும் இந்தியருக்கே அர்ப்பணித்து, இந்தியாவில் உயிர் நீத்த பெசன்ட் அம்மையார், இந்தியாவினுள் ஒன்று கலந்து நிற்கிறார்' என்று காந்தியடிகள் புகழ்ந்துள்ளார். இந்து, சொராஸ்டியம் ஆகிய சமயங்களை இந்தியாவிலும், பௌத்த சமயத்தை இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலும் உயிர்ப்பித்து மக்கள் கடந்த காலத்தில் பெருமிதமும், வருங் காலத்தில் தன்னம்பிக்கையோடும், தன்மானத்தோடும் வாழ வைப்பதே தனது முக்கியக் குறிக்கோள் என்று கூறி வந்தார்.

இராமகிருஷ்ண மடங்கள் (Ramakrishna Mission)

ராமகிருஷ்ண பரமஹம்சர் என்பவர், 1834-ல் ஹுக்ளி நதிக்கரையிலுள்ள கமர் புகூர் என்னும் சிற்றூரில் பிறந்து சிறுவயதிலேயே ஆத்மீகத்துறையில் உயர்நிலை அடைந்தவர். இவர் கல்கத்தாவிள்ள காளிகோவில் ஒன்றில் பூசாரியாகப் பணியாற்றி வந்தார். தியான நிலையில் நினைத்த அளவில் சமாதி நிலையை அடையும் பேறுபெற்றிருந்தார். கல்வி அறிவு இல்லாத ராமகிருஷ்ணர், தனது தியானத்தில் உதித்த உயர்கருத்துகளைக் காளிகோவிலுக்கு வருவோருக்கு எடுத்துரைப்பார். இவ்வாறு வந்தவர்களில் ஒருவரான நரேந்திர நாத் தத்தா என்ற பட்ட தாரியைத் தனது ஆத்மீக வன்மையால் கவர்ந்து தனது சீடராக் கிக்கொண்டார். இச் சீடரே பிற்காலத்தில் சுவாமி விவே கானந்தர் என்ற பெயரில் வள்ளல் ராமகிருஷ்ண பரமஹம்சரின் கொள்கைகளை உலகறியச் செய்தவர். ராமகிருஷ்ண பரம ஹம்சர் ஒரு சர்வ சமயவாதி. உலக சமயங்கள் நாடும் பொருள் ஒன்றே என்றும், ஆறுகள் அனைத்தும் எவ்வாறு கடலைச்சென்று கலக்கின்றனவோ, அதைப்போன்று சமயங்கள் அனைத்தும் உண்மைப் பொருளாகிய இறைவனை அடையும் வெவ்வேறு பாதைகள் என்றும் வலியுறுத்தினர்.

சுவாமி, விவேகானந்தர் 1893-ல் அமெரிக்காவில் சிகாகோ என்ற நகரில் கூடிய பல சமயப் பாராளுமன்றம் (Parliament of Religions) என்னும் உலகசமய மாநாட்டில் கலந்து கொண்டபின் 1896-ல் இந்தியா திரும்பினர். தமது சீடர்களின் பொரு ளுதவியைக்கொண்டு பேலூரில் ராமகிருஷ்ணர் பெயரால் மடம் ஒன்று நிறுவித் தனது சமூக, சமய, நாட்டுப்பணிகளைத் தொடங் கினர். இத்தகைய மடங்கள் நாடு முழுவதிலும் ஆரம்பிக்கப் பட்டன. வெளிநாடுகளிலும் ஏராளமான மடங்கள் நிறுவப்பட் டுள்ளன. இனம், மொழி, நாடு, சமயம் முதலிய வேறுபாடின்றி,

பூகம்பம், வெள்ளம், தீ, தொத்து நோய் முதலியவைகளால் கேடு நேரும்போது ராமகிருஷ்ண மடங்கள் அரும்பணியாற்றி வருகின்றன. ராமகிருஷ்ணரின் சீடர்கள் பிரம்ம சமாஜம் கூறி வந்த தீவிரக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் முற்போக்கான சிந்தனையாளர்கள். சீர்திருத்தக் கொள்கைகளைக் கொண்டவர்கள், ஐதீகக் கொள்கைகளை வெறுப்பவர்கள். ராமகிருஷ்ணரின் சீடர்களில் இரு பிரிவினர் உண்டு. ஒரு பகுதியினர் துறவியாகிச் சமூக சேவையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள். மற்றொரு பகுதியினர் குடும்ப வாழ்வில் ஈடுபட்டுப் பகவான் ராமகிருஷ்ணர் காட்டிய வழிமுறைகளில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள். இவர்கள் சமூக சீர்திருத்தவாதிகள் அல்லர். ஆனால் சமூக நலனுக்காக எவ்விதப் பாகுபாடும் இன்றி அயராது பாடுபடும் உத்தமர்கள். ராம கிருஷ்ண இயக்கம் ஏராளமான பள்ளிகளும், அனாதை இல்லங்களும், மருத்துவ மனைகளும் தோற்றுவித்து நடத்திவருகின்றது.

முகமதியர்களின் மறுமலர்ச்சி

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இஸ்லாமிய சமயத்தில் சில சீர்திருத்தங்கள் செய்யப் பலர் முயன்றனர். இவர்களில் கிழக்கு வங்காளத்தைச் சார்ந்த ஹாஜி சாரியத் அல்லா, ரெய்பெரேலியைச் சார்ந்த சையத் அகமத், ஜான்பூரைச் சார்ந்த காரமாட் அலி, மௌலவி ஹபீஸ் அகமத் முஷின் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள் ஆங்கிலக் கல்வியையும் ஆங்கில நிறுவனங்களையும் வெறுத்தனர். இருப்பினும் இச் சீர்திருத்த வாதிகள், இஸ்லாமியர்களுக்குச் சுயேச்சை அளிக்கப்பட வேண்டு மென்று அரசை வலியுறுத்தி வந்தனர். இஸ்லாம் மதத்தைச் சீர்திருத்த வேண்டுமென்று இவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி நாடு முழுவதும் பரவி பிற்காலச் சீர்திருத்தங்களுக்கு மக்களைப் பக்குவப்படுத்திற்று.

முகமதியர்கள் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பொருளா தாரம், சமுதாயம், கல்வி, அரசியல் போன்ற துறைகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தனர். ஆனால் அதே காலத்தில் இந்துக்கள், சமய சமுதாயச் சீர்திருத்தவாதிகளின் தூண்டுதலால் பல துறைகளில் முன்னேறி இருந்தனர். எனவே இந்துக்களோடு சரிநிகர் சமானமாக இஸ்லாமியர்கள் வாழவேண்டுமாயின், அவர்கள் பலவகையில் உயர்வடைய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்து சமூகத்தில் இருந்த வைதீகர்களைப் போன்றே இஸ்லாமிய சமயத்திலும் பழமை விரும்பிகள் அதிகமாக இருந் தனர். இவர்கள் மகமதியப் பெண்கள் பர்தா முறையில் மறைந்து

கிடப்பதையும், கல்வி அறிவற்று இருப்பதையும் விரும்பினர். பலதாரமணத்தில் நாட்டம் கொண்டிருந்தனர். விவாகரத்துக்குப் பெண்கள் பலியாவதையும் ஐதீகர்கள் மாற்ற விரும்பவில்லை. ஆங்கிலக் கல்வி கற்காததால் இவர்கள் உயர்பதவிகளுக்கு வர இயலவில்லை.

சர் சையத் அகமத்கான் (Sir Syed Ahmadkhan)

சர் சையத் அகமத்கான் 1817ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் கிழக்கிந்திய வணிகக் குழுவில் ஸதர் அமீனகப் பணியாற்றி வந்தார். இவர் இஸ்லாமிய சமூகம், சமயம், கல்வி, அரசியல் போன்றவற்றில் காலத்திற்கேற்ற மாற்றம் வேண்டுமெனத் தனது பேச்சாலும், எழுத்தாலும் வலியுறுத்தி வந்தார். பழமைக்கும், புதுமைக்கும் பாலம் அமைக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர் அவர். அகமத்கான் 1869-ல் இங்கிலாந்து சென்று திரும்பிய பின், தன் நண்பர்கள், ஆதரவாளர்கள் ஆகியவர் களின் ஒத்துழைப்பால் முகமதியன் ஆங்கிலோ-ஓரியண்டல் கல்லூரி (Muhammadan Anglo-Oriental College) ஒன்றை அலிகார் என்ற இடத்தில் 1875-ல் நிறுவினர். இவரது செயலைப் பல ஐதீக முகமதியத் தலைவர்கள் எதிர்த்தனர். இருப்பினும் மனந்தளராது இக் கல்வி நிலையத்திற்காக இறுதிவரை பயன் கருதாது உழைத்து வந்தார். இன்று இஃது அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகமாகத் திகழ்கின்றது. இந்திய முஸ்லீம் இளைஞர் களைப் பயிற்றுவிப்பதற்காகத் தோன்றிய 'இந்திய முஸ்லீம் ஆக்ஸ்போர்டு' என்று இந்த ஸ்தாபனத்தைப்பற்றி டாக்டர் டைட்டஸ் என்பவர் கூறியுள்ளார். அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகம் இந்திய முஸ்லீம்களின் மையக் கல்வி நிலையமாக அமைந் துள்ளது. ஆங்கில மொழியிலுள்ள இலக்கியங்கள், விஞ்ஞான அறிவு ஆகியவைகளை இஸ்லாமியர்களின் மொழியான உருது மொழியில் மொழிபெயர்ப்புச் செய்து பலருக்கும் பெருவாரி யாகப் பயன்பட வைக்கவேண்டுமென்பது இவரது தீராத விருப்பம். மேல்மட்டப் படிப்புகளிலும் உருது மொழியைப் புகுத்த வேண்டுமென்று ஆவல் கொண்டார். இவரது விருப் பங்களை ஹைதராபாத் நைசாம் செயல்படுத்தினர். ஹைதரா பாத்தில் ஏற்படுத்தப்பட்ட உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் உருது மொழி எல்லா நிலைகளிலும் 1917ஆம் ஆண்டிலிருந்து பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

பெண் கல்வி, பர்தாமுறையை அகற்றுதல் போன்ற சமூக வளர்ச்சிக்காக அகமத்கான் தனது செய்தித்தாளின்மூலம் பிரச்

சாரம் செய்து வந்தார்; இவரது அலிகார் கல்வி நிலயமும், செய்தித்தாள் பிரச்சாரங்களும் இஸ்லாமிய மக்களிடம் ஒரு புதிய எழுச்சியை உண்டு பண்ணிற்று. மௌலவி சிராக் அலி, சையத் அமீர் அலி, சர். சேக்முகமது இக்பால், பேராசிரியர் எஸ். குதா பாச்சா, பேராசிரியர், ஏ. எம். மௌல்வி போன்ற அறிஞர்கள் இவரது இயக்கத்திற்குப் பெரும் ஆதரவு அளித்தனர். இதன் பயனாக, இஸ்லாமிய சமூகத்தின் வளர்ச்சிக்கெனப் பல கழகங்களும், செய்தித்தாள்களும் நாடு முழுவதிலும் தோன்றின. இஸ்லாமியப் பெண்களிடமும் ஒரு மாற்றம் தோன்றியது. போபால் ராணி தௌகார் பேகம் 1928-ல் கூடிய அகில இந்திய பெண்கள் மகாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். போபால் சமஸ்தானத்தில் இவர் பெண்களுக்காகக் கல்வி நிலயங்களும், சமூகப்பணி மன்றங்களும் நிறுவினார். செல்வாக்குள்ள குடும்பத்தைச் சார்ந்தவர்களும், கல்வி கற்ற பெண்களும் பர்தா முறையை அகற்றினர். உயர்கல்வி கற்கக் கல்லூரிகளுக்குச் சென்றனர். அரசியலில் பங்கு கொண்டனர். முஸ்லீம் லீக்கின் தோற்றமும், வளர்ச்சியும், இதற்கு ஆங்கில அரசு அளித்த ஆதரவும் இந்திய முஸ்லீம்களைப் பலமும், செல்வாக்கும் உள்ளவர்களாக ஆக்கியது. இங்ஙனம் உறங்கிக் கிடந்த முஸ்லீம் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி, உரிமைக்காகப் பாடுபடவைத்த பெருமை சர் சையத் அகமத்கானையே சாரும்.

அகமதியா இயக்கம் (Ahmadiya Movement)

அகமதியா இயக்கத்தை மிர்சா குலாம் முகமது என்பவர் தோற்றுவித்தார். இவ் வியக்கம் சர் சையத் அகமத்கான் ஏற்படுத்திய மறுமலர்ச்சி இயக்கத்திற்கு நேர்மாறானது என்று கூறலாம். இவர் 1839-ல் பஞ்சாபிலுள்ள குர்தாஸ்பூர் மாவட்டத்தில் குவாடியன் என்ற இடத்தில் பிறந்தார். இவர், தன்னை மேதி (இறைவனின் தூதுவர்) என்று கூறிக்கொண்டார். இதனால் இவருக்கு ஏராளமான ஆதரவாளர்கள் தோன்றினர். இஸ்லாமிய சமயத்தைச் சீர்திருத்த வந்தவர் தான் எனச் சொல்லிக் கொண்டார். ஆனால் இஸ்லாமிய சமயத்தில் தோன்றிய பகுத்தறிவாளர்களின் கருத்துகளைக் குலாம்முகமது வன்மையாகக் கண்டித்தார்.

சீர்திருத்தங்களைப் பொறுத்தவரை இவர் பழமை விரும்பியாகவே இருந்தார். பர்தா முறை (முகத்திரைப் பழக்கம்) பலதார முறை, இஸ்லாமிய மணவிலக்கு இஸ்லாமியச் சட்டம் போன்றவை முகமதிய இனத்தவர்களுக்குக் கட்டாயம் தேவை

என்று வாதிட்டு வந்தார். இருப்பினும், இவரது கொள்கை நாட்டின் பல இடங்களிலும், வெளிநாடுகளிலும் பரவியது. இவர் இறந்தபின் இவரது இயக்கத்திற்குக் கலிபா என்பவர் தலைமை தாங்கினார். இவர் காலத்தில் இவ்வியக்கம் 1914-ல் இரு பகுதிகளாகப் பிரிந்தது. ஒருபகுதி குவாடியானி கட்சி (Quadiani Party), என்று வழங்கப்பட்டது. இதுவே மிர்சாகுலாம் முகமது கொள்கைகளைப் பின்பற்றி வந்தது. இதற்குத் தலைவர் குவாஜா கமாலுதீன் என்பவர். மற்றொன்றிற்கு லகோரி கட்சி (Lahori) என்று பெயர். இதற்கு மௌலி மகமத் அலி தலைவராக இருந்தார். குவாடியானி கட்சியினர் மிர்சா குலாம் முகமதை நபிநாயகம் என்று கருதினர். லகோரி கட்சியினர் அவரை இஸ்லாமிய சீர்திருத்தவாதி எனக் கருதினர்.

பார்ஸிகள் (Parsees)

19ஆம் நூற்றாண்டில் தோன்றிய மறுமலர்ச்சி, இந்தியாவில் சிறுபான்மையினராகவுள்ள பார்சிகளையும் பாதித்தது. தாதாபாய் நௌரோஜி, ஜெ. பி. வாச்சா, எஸ். எஸ். பெங்காலி, நௌரோஜி பர்தோன்ஜி போன்ற பெருந்தன்மையும் திறமையும் ஒருங்கேபெற்ற பல பார்சிகள் சமய சீர்திருத்த சங்கம் (Rahnumai Mazdayasan Sabha) ஒன்றை நிறுவினர். இச் சங்கம் சௌராஷ்டிரிய சமயத்தைச் சீர்திருத்தியதோடு, பார்சிகளைக் கல்வி, கலை, பண்பாடு ஆகியவற்றில் முன்னேற்றம் அடையும்படி செய்யவும் பாடுபட்டது. இச் சமூகத்தின் முக்கியமானவர்களில் ஒருவரான கர்ஜெட்ஜி ரஸ்டம்ஜி காமா என்பவர், இங்கிலாந்திலிருந்து 1859-ல் திரும்பிய பின், பார்சி இனத்தவர்களின் கல்விக்காக அரும்பாடுபட்டார். 1854ஆம் ஆண்டில் பரோடாவில் பிறந்த பெஹராம்ஜி எம். மலபாரி என்பவர், இவ்வினத்தில் தோன்றிய ஒரு பெருந்தகையாளர். இவர் இந்தியப் பெண்கள் கல்விக்கும், குழந்தைகள் நலத்திற்கும், பத்திரிகைத் துறைக்கும் கல்விக்கும் ஆற்றிய தொண்டு இவரை இந்தியச் சீர்திருத்தவாதிகளின் முன் அணியில் வைத்து எண்ணும் அளவிற்கு உயர்த்தி உள்ளது. 1910-ல் சொராஸ்டிரிய சமயத்தவர்களின் மகாநாடு தாலா (Dhala) என்பவரின் தலைமையில் நடைபெற்றது. இவர் அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் சொராஸ்டிரிய அறிஞர், பேராசிரியர் ஜேக்ஸன் என்பவரிடம் கல்வி பயின்றார். தாலா நிருவிய கல்வி சமூக இயக்கம் பார்சி இனத்தவர்களின் கல்வி, பண்பாட்டை வளர்த்து அவர்களைப் பலதுறைகளில் முன்னேற வைத்துள்ளது.

சீக்கியர்கள் (Sikhs)

சிறுபான்மையினராகவும், பின்தங்கியவர்களாகவும் இருந்த சீக்கிய இனத்தவர்கள் 19ஆம் நூற்றாண்டில் மற்றவர்களைப் போன்று முன்னேறத் தலைப்பட்டனர். இம் மக்களின் சமய, சமூக சீர்திருத்தங்கள் வெகுவேகமாக நடைபெற்றது. இவர்களின் பழம் பெருமைகளையும், கட்டுப்பாட்டையும் சுட்டிக்காட்டி, சமூகத் தலைவர்கள் இவர்களை முன்னணிக்குக் கொண்டுவந்தனர். இச் சமூகத்தின் தலைவர்கள் அமிர்தசரசில் கால்சா கல்லூரியை நிறுவினர்; அத்துடன் அங்கு 'முக்கியக் கால்சா திவான்' என்ற மத்திய அலுவலகத்தையும் தோற்றுவித்தனர். இதனுடைய கிளைகள் நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டன. இக் கிளைச் சங்கங்கள் கல்வி, சமய சமூகச் சீர்திருத்தங்களில் ஈடுபட்டுச் சீக்கிய இனத்தவர்களை நல்ல நிலைக்குக் கொண்டுவந்துள்ளது. மேலும் இஃது ஏராளமான கல்வி நிறுவனங்களை அமைத்து நல்ல பணியாற்றி வருகிறது. 'சிரோன்மணி குருதுவாரா பிரபந்தக் குழு' என்ற ஒன்றை நிறுவி, சீக்கிய ஆலயங்களைச் சீர்திருத்திப் பராமரித்து வருகின்றனர்.

கிறித்தவ சமயம் (Christianity)

இந்தியாவிற்கும் கிறித்தவ சமயத்திற்கும் பன்னெடுங் காலமாகத் தொடர்பு ஏற்பட்டுள்ளது. முதல் நூற்றாண்டுக் காலத்தில் பரிசுத்த தோமையரும், (St. Thomas) கொண்டபாரிஸ் (Gondophares) என்பவரும் இந்தியாவிற்கு வந்து ஏசு நாதரின் போதனைகளை மக்கள் நடுவே எடுத்துரைத்தனர். ஆறாவது நூற்றாண்டில் சிரியன் கிறித்தவத் தேவாலயம் ஒன்று மலபார் பகுதியில் கட்டப்பட்டது. இதற்குத் தலைமைப்பீடம் பாபிலோனில் அமைந்திருந்தது. கிறித்தவப் பாதிரியார்கள் இந்தியாவிற்கு வந்து, தங்கள் சமயக் கொள்கைகளை மக்களிடம் பரப்பியதோடு கல்வி அறிவையும் புகட்டி வந்தனர். கிறித்தவ சமயத்திற்கு மதம் மாறிய இந்துக்களும், கலப்பினத்தவர்களான ஆங்கிலோ-இந்தியரும் ஆரம்பத்தில் மிகவும் பிற்பட்டவர்களாக இருந்தனர். மதம் மாறிய பெரும்பான்மையினர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்களே. இவர்களின் மத மாற்றம் இவர்களுக்கு அரசாங்கத்தில் உத்தியோகங்கள் அளித்தது. அதன்பயனாக அவர்களின் பொருளாதார நிலை சிறிது உயர்ந்தது. இம் மத மாற்றமுறையால் 19ஆம் நூற்றாண்டின் முதல் பாதியில் கிறித்தவ சமயம் இந்தியாவெங்கணும் மேலெழுந்தவாரியாகப் பரவி இருந்தது.

பிராட்டஸ்டன்ட் பிரிவைச் சேர்ந்த கிறித்தவர்கள் முதன் முதலில் தங்களுடைய ஆலயத்தைத் தமிழகத்திலுள்ள தரங்கம்

பாடி என்ற இடத்தில் ஆரம்பித்தனர். இங்கு டென்மார்க்கு நாட்டவர்கள் வியாபாரத்தின்பொருட்டு ஒரு குடியேற்ற முகாம் அமைத்திருந்தனர். 1820-ல் முதல் ஆங்கிலிக்கன் பிஷப் நியமிக்கப்பட்டார். கல்கத்தாவின் பிஷப்பாக மிடில்டன் (Middleton) என்பவர் நியமனம் செய்யப்பட்டார். இவர்கள் அப் பகுதிகளின் சமய நிலயங்களைக் கண்காணித்து வந்தனர். சென்னையிலும் பம்பாயிலும் 1833-ல் பிஷப்புகள் நியமிக்கப்பட்டனர்.

ஆரம்பத்தில், பம்பாய், வங்காளம், சென்னை ஆகிய மாநிலங்களில் மேல் ஜாதியினர் கிறித்தவ சமயத்தைத் தழுவி ஆங்கிலக் கல்விமூலம் பல நலன்களைப் பெற்றனர். வங்காளத்தில், வில்லியம் கேரே, ஜோசுவா, மார்ஷ்மேன், வில்லியம் வார்ட்டு, தானியேல், வில்லியம் கிரான்ட், ரெவரண்ட் அலெக்சாந்தர் டஃப் போன்றவர்கள் கிறித்தவ சமயம் வேகமாகப் பரவப் பாடு பட்டனர். இதைப் போன்று பம்பாயில் டாக்டர் ஜான் வில்சனும், சென்னையில் ராபர்ட் நோபிள் என்பவரும், பஞ்சாபில் டாக்டர் போர்மேன் என்பவரும் அரும்பணியாற்றியுள்ளனர். இவர்கள் சமயப் பிரச்சாரத்தோடு கல்வித் தொண்டும், இலக்கியத் தொண்டும் செய்துள்ளனர். 1813-ல் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின்படி இந்தியரின் சமய அறிவு, கல்வி, விஞ்ஞான வளர்ச்சி முதலியவற்றிற்காக ஆண்டொன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் செல விடப்பட்டது. இத் தொகையைப் பெரிதும் பாதிரியார்கள் நடத்தும் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும், சமய நிலயங்களுக்கும் அளித்தனர். இதனால் மதமாறிய இந்துக்கள் பெரிதும் பயனடைந்தனர்.

1857-ல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்திற்குப் பின் இந்திய உயர் ஜாதி இந்துக்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இருந்து வந்த நல்லுறவு கெட்டது. அதனால், கத்தோலிக்க, பிராட்டஸ்டன்ட் ஆகிய கிறித்தவ நிறுவனங்கள் தாழ்த்தப்பட்ட மக்களையும், மலைச் சாதியினரையும் சமயம் மாற்றி அவர்களை ஆதரிக்கலாயின. பழங்குடி மக்களான சார்ந்தவர்கள், ஒபிரன்கள், முண்டர்கள், நாகர்கள், காசியர்கள், காரோக்கள் போன்றவர்களைக் கிறித்தவப் பாதிரியார்கள் ஏராளமாக மதம் மாற்றி அவர்களுக்குக் கல்வி அறிவு புகட்டினர். இத்தகைய சீரிய பணியை இந்துக்களும், முஸ்லிம்களும் பிற்காலத்தில் செய்வதற்கு முன்வந்தனர். நீண்ட காலமாக ஒடுக்கப்பட்டிருந்த மக்கள், கல்வி அறிவு பெற்றுத் தன்மானத்துடன் வாழ முடிந்ததைக் கிறித்தவ சமயத்தைச் சார்ந்ததால் ஏற்பட்ட நன்மைகளில் முக்கியமானது எனக் கூறலாம். இதனைக் கண்டு வெட்கிய சாதி இந்துக்கள் தங்களின்

சகோதரர்களான தாழ்த்தப்பட்ட இந்துக்களுக்குத் தாம் இழைத்து வந்த கொடுமைகளை ஓரளவிற்கு மாற்றிக்கொண்டு இந்து மதத்தைப் புனிதமாக்கத் தலைப்பட்டனர். அரசியல் தலைவர்களும் தீண்டாமை அகற்றுதலை ஓர் இலக்காக அமைத்துக் கொண்டனர். இந்தியா முழுவதிலும் கிறித்தவர்கள் நிறுவிய கல்வி ஸ்தாபனங்கள் மக்களுக்கு அரிய தொண்டு ஆற்றி வருகின்றன. சமூக சேவை நிறுவனங்களும், பொதுமக்களின் வாழ்க்கையில் மாறுதல்கள் ஏற்படுத்தியுள்ளன.

சமூக சீர்திருத்தங்கள் (Social Reforms)

உடன்கட்டை ஏறுதல்: இந்தியாவில் தோன்றிய எல்லாச் சீர்திருத்த இயக்கங்களும் பெண்கள் முன்னேற்றத்தைப்பற்றி வலியுறுத்தி வந்துள்ளன. இச் சீர்திருத்த இயக்கங்களால் இந்தியப் பெண்கள் வாழ்வு முன்னேற்றம் கண்டுள்ளது என்றே கூறலாம். கணவன் இறந்த பின் மனைவி கணவனுடன் தீப்பாய்ந்து மாளும் வழக்கத்திற்குச் 'சதி' அல்லது 'உடன்கட்டை' ஏறுதல் என்று பெயர். இக் கொடிய பழக்கம் எப்படியோ இந்து சமூகத்தில் நுழைந்து நீண்ட நெடுங்காலமாக வழக்கில் இருந்து வந்தது. இதற்குச் சமய ஆதாரங்கள் எதுவும் கிடையாது. இந்திய மன்னர்கள் பலர் இக் கொடிய பழக்கத்தை அகற்ற முயன்று வெற்றி பெறாது கைவிட்டனர். 1789-ல் கிழக்கிந்தியக் கம்பெனியார் எடுத்துக்கொண்ட முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. ராஜாராம் மோகன்ராய் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழிக்க அரும்பாடு பட்டார். இவர் ஆங்கில அரசுடன் ஒத்துழைத்துத் தனது காலத்திலேயே இக் கொடிய பழக்கத்தை ஒழித்தார். வில்லியம் பெண்டிங்க் பிரபு இத் துறையில் அனுதாபம் காட்டி வந்தார். தனது ஆதரவாளர்களை ஒருங்கு திரட்டி ராஜாராம் மோகன்ராய், வில்லியம் பெண்டிங்க் பிரபுவைச் சதிமுறைக்கு எதிராகச் சட்டம் இயற்றும்படி வற்புறுத்தி வந்தார். ஆனால், இம் முயற்சிக்கு எதிராக, ராஜா ராதாகாந்த், நில்மணி, பவானி சரண்மித்திரா போன்ற தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இத்தகைய எதிர்ப்புகளுக்கிடையில் 'கமுதி' என்ற தனது வங்காளப் பத்திரிகையின்மூலம் சதிக் கொடுமைகளை இராஜாராம் எடுத்துரைத்து வந்தார். இறுதியாக 1829-ல் சதிப்பழக்கம் சட்ட விரோதமானது என்று வில்லியம் பெண்டிங்க் பிரபு சட்டம் இயற்றினார். இச் சட்டத்தை நீக்கவேண்டுமென்று ஐதீக இந்துக்கள் 'தர்மசபா' என்ற இயக்கத்தின் சார்பில் 1830-ல் 800 வங்காள இந்துக்களின் கையொப்பத்துடன் விண்ணப்பம் ஒன்று இங்கிலாந்திலுள்ள பிரிவு கவுன்சிலுக்கு (Privy Council) அனுப்பினர்.

அச்சமயத்தில் ராஜாராம் இங்கிலாந்தில் இருந்ததால் பாராளு மன்றத்தின் அனுமதிபெற்றுப் பிரிவி கவுன்சிலில் இச் சட்டத்திற்கு எதிராக வரும் மனுக்களையும், ஆட்சேபனைகளையும் தள்ளிவிடும்படி தனது திறமை முழுதும் பயன்படுத்தி வாதாடினுர். ராஜாராமின் ஆலோசனையின்படி 1832-ல் சதிமுறைக்கு ஆதரவாக இந்தியா விலிருந்து அனுப்பப்பட்ட விண்ணப்பம் தள்ளுபடி செய்யப் பட்டது. இத் துறையில் வில்லியம் பெண்டிங்க் பிரபு ஆற்றிய சேவைகளைப் போற்றும் வகையில் இந்திய முற்போக்குவாதிகள் மனு ஒன்று இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தனர்.

பலதார மணம், சிறுவர்கள் மணம் (Polygamy and Child Marriage)

பலதார மணத்தையும், சிறுவர்களின் மணத்தையும் மாற்றி அமைக்க வேண்டுமென்று இந்தியாவில் தோன்றிய சீர்திருத்த வாதிகள் அனைவருமே கூறியுள்ளனர். பலதார மணத்தை (Polygamy) முதன் முதலில் ராஜாராம் மோகன்ராய் அதிகாரப் பூர்வமாக எதிர்த்துள்ளார். அவரைப் பின்தொடர்ந்து வேறு பல சீர்திருத்தவாதிகளும் இத் துறையில் முயன்றுள்ளனர். கேசவ சந்திர சென் என்பவரின் முயற்சியால் 1872-ல் 'சுதேசிகள் திருமணச் சட்டம்' (The Native Marriage Act) ஒன்று நிறை வேற்றப்பட்டது. அதன்படி பலதார மணம், சிறுவர் மணம் ஆகியன சட்டவிரோதமானவை என அறிவிக்கப்பட்டது. கேசவ சந்திர சென் பெண்களின் திருமண வயதை 16ஆக உயர்த்த முயன்று அதில் வெற்றிபெற்றுர். ஆரிய சமாஜ இயக்கமும் சிறுவர்களின் திருமணத்தை அகற்றப் பாடுபட்டது. பி. எம். மலபாரி என்ற பார்சி இனத் தலைவரும் சிறுவர் திருமணங்களைப் போக்க அரும்பாடுபட்டார். இந்திய அரசின் வைசிராயாக இருந்த லான்ஸ்டவுன் பிரபு, இந்து வைதீக எதிர்பாளர்களுக் கிடையில் சிறுவர் திருமணம் சட்டவிரோதமானது என்று சட்டம் இயற்றினுர்.

சாரதாச் சட்டம்: 1901ஆம் ஆண்டில் பரோடா சமஸ் தானத்தின் மன்னர் கெய்குவார் என்பவர், சிறுவர்கள் திருமணத் தைத் தடை செய்யும் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார். இதில் திருமணப் பெண்ணின் வயது குறைந்தது பன்னிரண்டா கவும், மணமகனின் வயது பதினுருகவும் இருக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டிருந்தது. 1928ஆம் ஆண்டில் சிம்லாவில் கூடிய சமூக சீர்திருத்தக் குழு, இந்தியாவில் நடைபெறும் திருமணங்களில் பாதிக்குமேல் 15 வயதிற்கு உட்பட்டவையாக

இருக்கின்றன வென்று அறிவித்துள்ளது. இதன்பயனாக ராய் சாகிப்பு ஹரிபிலாஸ் சார்தா (Rai Saheb Harbilas Sarda) என்பவர், முயன்று 1930ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ஆம் நாள் சட்டசபையில் குழந்தைகளின் திருமணச் சட்டம் (Child Marriage Bills) என்ற ஒன்றை நிறைவேற்றினார். இதன்படி திருமணமாகும் பெண்ணுக்கு 14 வயதும், மணமகனுக்கு 18 வயதும் இருக்க வேண்டும். இதற்குக் குறைந்தால் சட்டப்படி குற்றம் என்று அறிவிக்கப்பட்டது. இச் சட்டத்திற்கு எதிராக வைதீக வர்க்கத்தினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் அது நாளாவட்டத்தில் அடங்கிவிட்டது. தற்காலக் கல்வியும் பொருளாதார நிலையும் திருமண வயதைத் தள்ளிப்போட பேருதவி செய்துள்ளன.

விதவை மறுமணம் (Widow remarriage): 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் டாக்காவைச் சார்ந்த ராஜா ராஜ்பல்லபா (Raja Rajballabha) என்பவர், விதவை மறுமணத்தின் அவசியத்தை இந்து சமூகத்தினர் உணர வைக்க வேண்டுமென்று எடுத்துக்கொண்ட முயற்சியில் தோல்வி அடைந்தார். இவரது முயற்சிக்குக் கிருஷ்ண நகர் மகாராஜாவும், அங்குள்ள பண்டிதர்களும் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தனர். உடன்கட்டை ஏறும் பழக்கம் 1829-ல் சட்ட விரோதமானது என்று ஏற்பட்ட பின், பாபு நிலக்கமால், ஸ்ரீசந்திரா போன்ற செல்வந்தர்களும், செல்வாக்கு உடையவர்களும் விதவை மறுமணத்தைச் சட்டப் பூர்வமாக்க முயன்றனர். ஆனால் வைதீகக் குடும்பங்களின் எதிர்ப்பால் அவர்கள் நோக்கம் நிறைவேறவில்லை. பண்டிட் ஈஸ்வர சந்திர வித்தியாசாகர் என்ற சமஸ்கிருத அறிஞர், ராஜா ராதாகாந்தேவ் என்பவரின் உதவிகொண்டு, தனது எழுத்தாலும், பேச்சாலும் விதவை மறுமணத்தின் அவசியத்தை எடுத்துரைத்தார். சாத்திரங்களிலிருந்தும், வேத நூல்களிலிருந்தும் இதற்கு ஆதரவாக ஆதாரங்கள் காட்டினார். ஆண்கள் பல பெண்களை மணக்கலாமென்றால், அது பெண்ணுக்கும் உரிய உரிமை என்று கொண்டால் சமூகம் தலைகீழாகப் போய்விடும். ஆணுக்கு ஒரு நீதியும், பெண்ணுக்கு ஒரு நீதியும் கூறுவது சரியல்ல என எடுத்துக் காட்டினார். மனைவி இறந்ததும் கணவன் மறுதாரம் கொள்வதை அனுமதிக்கும் சமுதாயமும், சாத்திரங்களும் கணவன் இறந்ததும் மனைவிக்கு மட்டும் ஏன் மறுமணத்தை அனுமதிக்கவில்லை என்று கேட்டார். விதவை மறுமணத்திற்குப் பிறக்கும் வாரிசுகளுக்குச் சொத்துரிமை வழங்க வேண்டுமென்று பண்டிட் ஈஸ்வர சந்திர வித்தியாசாகர் 984 பேர் கையொப்பம் கொண்ட மனு ஒன்றை இந்திய அரசுக்கு அனுப்பி வைத்தார்.

இவரைத் தொடர்ந்து மேலும் பலர் அரசுக்கு மனுச் செய்தனர். இதன்பயனாக, 1856ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26ஆம் நாள் விதவை மறுமணமும், அத் திருமணத்தின்மூலம் பிறக்கும் வாரிசுகளுக்குச் சொத்துரிமையும் உண்டு என்றும் இந்திய அரசால் சட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. பிரம்ம சமாஜத்தினரும் விதவை மறுமணத்தைத் தங்களுடைய கொள்கைகளில் ஒன்றாக ஏற்று அதற்காக நல்ல பணிகளைச் செய்துள்ளனர். பாபுச்சி பாதா பானர்ஜியும் இத் துறையில் அரும்பாடுபட்டுள்ளார்.

மராட்டிய மாநிலத்தில் விதவை மறுமண இயக்கம்

மராட்டிய மாநிலத்தில் பண்டிட் விஷ்ணு சாஸ்திரி என்பவர், 'விதவை மறுமண இயக்கம்' என்ற ஒன்றை 1861-ல் பம்பாய் நகரத்தில் ஆரம்பித்தார். இதில் பலர் அங்கத்தினர்களாகச் சேர்ந்தனர். வழக்கம்போல் வைதீக வர்க்கத்தினர் இவ்வியக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் எம். ஜி. ரானடே போன்ற அறிஞர்கள் பண்டிட் விஷ்ணு சாஸ்திரிக்கு ஆதரவளித்து மராட்டியத்தில் 1869-ல் இருந்து விதவை மறுமணச் சட்டம் செயல்படும்படி செய்தனர். குஜராத் மாநிலத்திலும் இத்தகைய இயக்கங்கள் ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்டன. இதில் பார்சி இனத் தலைவர் மலபாரி என்பவர், முக்கியப் பங்குகொண்டார். ஆர். ஜி. பந்தார்கார், ஜி. ஜி. அகர்கார், டி. கே. கார்வே போன்ற அறிஞர்களும் விதவை மறுமண இயக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு அரும்பணியாற்றியுள்ளனர். திரு. கார்வே பூனா நகரில் 'இந்து விதவைகள் இல்லம்' என்ற ஸ்தாபனத்தைத் தோற்றுவித்து அதன் செயலராக 1900வரை சுமார் ஏழாண்டுகள் பணிபுரிந்தார். இதுவே பிற்காலத்தில் பெண்களின் பல்கலைக்கழகமாக மாறியது.

சென்னை மாநிலத்தில் விதவைகளின் படிப்பு, பயிற்சிகளுக்காக உதவித் தொகை, உணவு முதலியவை அளித்து ஆதரித்தனர். பம்பாயில் பண்டித ராமாபாய் தோற்றுவித்த 'சாரதா சதன்', மைசூரிலுள்ள மகாராணியார் பள்ளி, பஞ்சாப்பில் ஆரிய சமாஜத்தின் நிறுவனங்கள், லக்னோவிலுள்ள 'இந்து விதவை சீர்திருத்தக் குழு' போன்றவை இத்துறையில் மேன்மையான பணிகளை ஆற்றிப் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டிருக்கின்றன.

தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றம் (Elevation of Depressed Classes)

இந்தியாவின் மக்கள் தொகையில் 20 சதவீதம் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டுமென்ற எண்ணம்

பொதுமக்களிடம் 18ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இந்தியாவில் தோன்றிய பல சமாஜங்களும், ராமகிருஷ்ண மடங்களும் இம் மக்களின் முன்னேற்றம் கருதி அரும் பணிகள் பல ஆற்றி இருந்தபோதிலும், ஆரிய சமாஜத்தின் பணிகள் மறக்க முடியாதனவாக அமைந்துள்ளன. கிறித்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களுக்கு மாற்றப்பட்ட இம் மக்களைத் திரும்பவும் இந்து சமயத்திற்குக் கொண்டுவந்த பெருமை ஆரிய சமாஜத்தையே சாரும். 'தாழ்த்தப்பட்டோரின் சங்கம்' ஒன்று பம்பாயில் 1906-ல் நிறுவப்பட்டது. இது மகார், சாம்பவர், பறையர், நாம சூத்திரர் போன்றவர்களின் சமூக, சமய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டது. 1923-ல் பெனாரசில் கூடிய இந்து மகாசபைக் கூட்டம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஜாதி இந்துக்கள் அனுபவிக்கும் சலுகைகள் வழங்கப்படவேண்டுமென்று தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இத் தீர்மானம் செயல்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. காந்தியடிகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரியசேவை செய்துள்ளார். சட்டமேதை பி. ஆர். அம்பேத்காரின் ஆலோசனையின் பேரில் மத்திய, மாநில அரசுகள் இம் மக்களின் முன்னேற்றங்கருதி ஆவன செய்து வருகின்றன. இத் துறையில் ஆற்ற வேண்டிய பணிகள் இன்னும் பல உள.

அடிமைமுறையும், பெண் குழந்தைக் கொலையும் (Slavery and infanticide)

18ஆவது நூற்றாண்டில் அடிமை முறையும், பெண் குழந்தைக் கொலையும் இந்தியாவில் பரவலாகப் பல இடங்களில் இருந்து வந்தன. ஆனால், இக் கொடிய பழக்கம் இப்பொழுது அறவே அகற்றப்பட்டு விட்டது. குழந்தைகளை அடிமையாக விற்கும் முறை வங்காளத்தில், குறிப்பாக, கல்கத்தா நகரில் இருந்தது என சர். வில்லியம் ஜோன்ஸ் (Sir William Jones) என்னும் அறிஞர் கூறியுள்ளார். 1807-ல் இங்கிலாந்துப் பாராளுமன்றம் அடிமை முறையை நீக்கியது. அதைத் தொடர்ந்து 1811-ல் கிழக்கிந்தியக் கம்பெனி வெளி நாடுகளிலிருந்து அடிமைகளை இறக்குமதி செய்யக் கூடாதெனச் சட்டம் இயற்றித் தடுத்தது. ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு அடிமைகளைக் கொண்டுவந்து விற்கவோ, வாங்கவோ கூடாதென்று 1832-ல் சட்டம் ஒன்று இயற்றினர். அடிமைமுறை இந்தியாவில் எங்கு, எந்த உருவத்திலிருந்தாலும், அதை அகற்ற இந்தியக் கவர்னர் ஜெனரலுக்கு உரிமை அளிக்கப்பட்டது. 1860-ல் அடிமைமுறை தண்டனைக்குரிய குற்றம் எனச் சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது.

பெண் குழந்தைகள் பிறந்தவுடன் கொன்றுவிடும் வழக்கம் இந்தியாவில் ராஜபுதனம், மத்திய இந்தியா ஆகிய பகுதிகளில் இருந்து வந்தது. இவ் வழக்கத்திற்குச் சமய சாத்திர ஆதாரங்கள் எதுவும் இல்லை. ரஜபுத்திரர்கள் தங்கள் குல மரபின் ரத்தத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளப் பெண்கள் பிறந்தவுடன் கொன்று விடுவார்கள் என்று ரஜபுத்திரர்களின் வரலாறு எழுதிய கர்னல் டோட் (Tod) கூறியுள்ளார். ராஜாராம் மோகன்ராய் போன்றவர்களின் சமய சமூகச் சீர்திருத்த இயக்கங்களால் பெண் குழந்தைக் கொலை தடுப்புச் சட்டம் 1795-ல் கொண்டுவரப் பட்டது. இச் சட்டம் கொண்டுவந்த பின்பும் பெண் குழந்தை களை நஞ்சிட்டுக் கொல்லுதல், பட்டினிபோட்டுக் கொல்லுதல் முதலியன நடந்தன. ராஜாராம் மோகன்ராய் போன்றவர்களின் ஒத்துழைப்பால் வில்லியம் பெண்டிங்க் பிரபு இக்கொடிய பழக்கத் தைச் சட்டம்மூலம் அகற்றினார். பிரிட்டிஷ் அதிகாரிகளான வில்கின்சன், வில்லோபி, எர்ஸ்கின், ஜேகப், போட்டிங்கர், மெல்வில்லி போன்றவர்கள் இத்துறையில் வில்லியம் பெண்டிங்க் பிரபுவுக்கு உறுதுணையாக இருந்து வந்தனர்.

சுதந்திரத்திற்குப் பின் சமுதாயச் சீர்திருத்தங்கள்

தேசத் தந்தை காந்தியடிகளின் பிரார்த்தனைக் கூட்டங்களில் நிகழ்த்திய சமய போதனைகள், இந்து சமயத்தின் மேன்மை களையும், மக்களிடையே சகோதரத் தன்மையின் அவசியத்தையும் வலியுறுத்தி வந்தன. இவர் மேற்கொண்ட தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டு இயக்கம் எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்தது. காந்தியடிகள் கடைபிடித்து வந்த உண்மை, அகிம்சை, எளிமை ஆகிய கொள்கைகளும், துன்பப்படும் ஏழை மக்களிடம் பரிவு காட்டுதல் போன்ற பண்புகள் அனைத்தும் இந்து சமயக் கோட்பாடுகளில் அமைந்த தத்துவங்களேயாகும். இந்தியப் பண்பாட்டின் உண்மைத் தன்மைகளை அறிந்து கொள்வதற்குக் காந்தியடிகளின் வாழ்க்கை பேருதவி புரிந்துள்ளது என்று நீல கண்ட சாஸ்திரி கூறியுள்ளார்.

சமூக மாற்றங்கள் (Social Changes)

மேற்கத்திய கல்வி, கலாச்சார முறைகளால், இந்தியர்களின் சமூக, சமய வாழ்க்கை பல வழிகளில் மாறுதல் அடைந்துள்ளன. கூட்டுக் குடும்ப முறையும் சிதைவற்றது. இந்திய அரசியல் சட்டத் தின்படி தீண்டாமை சட்ட விரோதமான செயல் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. ஜாதி இன அடிப்படையில் ஏற்பட்ட தொழில் களும் தற்காலத்தில் மாறுதல் அடைந்து வருகின்றன. ரயில்

பாதை, மோட்டார் போன்ற போக்குவரத்துச் சாதனங்களும், சினிமா, ரேடியோ, பத்திரிகை போன்றனவும் கிராமப்புற வாழ்க்கை முறைகளை முற்றிலும் மாற்றி அமைத்துக் கொண்டு வருகின்றன. இந்திய அரசின் ஐந்தாண்டுத் திட்டங்களின்மூலம் நாட்டில் பொருளாதார மேம்பாடு ஏற்பட்டுள்ளது. கலப்புத் திருமணங்கள், சமபந்திமுறை போன்ற சமத்துவ முறைகள் நாட்டில் பரவலாக ஏற்பட்டு வருகின்றன. பெண்கள் கல்வி வளர்ச்சிக்கென இந்திய அரசு பல கல்வி நிறுவனங்களைத் தோற்று வித்துள்ளது. அரசு நிறுவனங்களில் பெண்களுக்கு வேலை வாய்ப்பில் சமத்துவம் அளிக்கப்படவேண்டுமென்று வகை செய்யப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்விச் சலுகைகள் அளித்து உத்தியோக வாய்ப்புகளை அதிகரித்துள்ளது. இவர்களுக்குத் தேர்தல் முறையிலும் தனித்தொகுதி முறை வழங்கப்பட்டுள்ளது. நிலமில்லா ஏழைகளுக்கு நிலங்கள் அளித்து அவர்களின் பொருளாதார நிலையை இந்திய அரசு உயர்த்தி யுள்ளது.

(7) வாணிபமும் தொழிலும்
(Trade and Industry)

வாணிபம் (Trade)

ஆங்கிலேயர்கள் தங்கள் அரசியல் செல்வாக்கை முதன் முதலில் வங்காளத்தில் நிலை நாட்டினர். வியாபாரமே அவர் களின் முக்கிய நோக்கமாக இருப்பினும், உள்நாட்டு அரசியல் பலவீனத்தைப் பயன்படுத்தித் தங்களின் அதிகாரத்தை வலுப் படுத்திக் கொண்டனர். அரசியல் அதிகாரத்தை ஊன்று கோலாகக் கொண்டு ஆங்கிலேயர்கள் வங்காளிகளின் வாணி பத்தை அழித்துவிட்டனர். ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வருவ தற்கு முன்பு, வங்கத்தைச் சார்ந்த இந்து, முஸ்லிம் வியாபாரிகள் இந்தியாவிலும், துருக்கி, அரேபியா, பாரசீகம் போன்ற வெளி நாடுகளிலும் பஞ்சு, பட்டுத்துணி, சர்க்கரை, உப்பு, சணல், அபின் போன்ற பொருள்களை நல்ல விலைக்கு வியாபாரம் செய்து, அவற் றுக்கு ஈடாகத் தங்கத்தைப் பெற்று வந்தனர். டாக்கா மஸ்லின் துணியும், காஞ்சிபுரம் பட்டும் உலகப் புகழ்பெற்றவை. பதனிட்ட தோல்களும், கேரள நாட்டு மலைவளங்களான மிளகு, ஏலம், கிராம்பு, சந்தனக்கட்டை போன்ற வாசனைப் பொருள்களும், தமிழ் நாட்டின் முத்தும், பவளமும், அரிசியும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுப் பெரும் லாபத்தை ஈட்டித் தந்தன. இத்தகைய வியாபாரம் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை வளமையுடன் நடந்து வந்தது. ஆனால் ஆங்கிலேயர்கள் தங்கள்

ஆதிக்கத்தை இந்தியாவில், குறிப்பாக வங்காளத்தில் நிறுவிய பின், இத் தொழில்கள் அனைத்தும் சிதைந்து போயின.

வங்காள வாணிபம் சிதையக் காரணங்கள்

வங்காளத்தில் அதிகாரம் பெறும்பொருட்டு மீர்ஜாபர், மீர் காசிம் என்ற இரு சுல்தான்கள் ஒருவரோடொருவர் போட்டி யிட்டனர். இதன் காரணமாக இருவரும் ஆங்கிலேயர்களின் உதவியை நாடினர். இதற்காக 1757ஆம் ஆண்டிலிருந்து 1780ஆம் ஆண்டிற்குள் 380 லட்சம் பவுன்கள் செலவிட்டனர். இச்செலவுகளால் நாட்டின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக் கப்பட்டது. மேலும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் பணி யாட்கள் தனிப்பட்டமுறையில் வியாபாரம் செய்து இந்திய வியாபாரிகளின் தொழில்களைப் பாழ்ப்படுத்தினர். 1717ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட பேரரசப் பட்டயத்தின்படி (Imperial Charter of 1717) ஆங்கில வணிகர்கள் வரி செலுத்தாமல் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்திய வணி கர்கள் அரசிடம் அனுமதிபெற்றுச் சுங்க வரியும் செலுத்தி வியாபாரம் செய்யவேண்டிருந்ததால் இவர்களின் தொழில்கள் பாதிக்கப்பட்டன. சில இந்திய வணிகர்கள் பெருந்தொகை கொடுத்து ஆங்கில வியாபாரிகளிடமிருந்து சாசனங்களைப் பெற்று வியாபாரம் செய்ய நேர்ந்தது. மேலும் அதிகார வர்க்கத்தினர் என்ற ஆணவத்தில் இந்திய உற்பத்தியாளர்களிடம் குறைந்த விலைகொடுத்துப் பொருள்களை வாங்கி வந்தனர், குறைந்த விலைக்குக் கொடுக்க மறுத்த உற்பத்தியாளர்களைப் பிடித்துச் சித்திரவதை செய்தும் சிறைத் தண்டனை அளித்தும் கொடுமைப் படுத்தி வந்தனர். வங்காள மன்னர் மீர்காசிம் இந்திய வியா பாரிகளின் உள்நாட்டு வரிகளை நீக்க முயன்றார். ஆனால் அவரது அரச பதவி ஆங்கிலேயர்கலால் பறிக்கப் பட்டது.

துணி வியாபாரம்

வங்காள நெசவாளிகள் உலகப் புகழ் பெற்ற மஸ்லின் துணி களை நெய்து வந்தனர். இத்தகைய தொழிலாளர்களுக்குக் குறைந்த முன்பணம் கொடுத்து அவர்களுடன் ஒப்பந்தம் செய்து அத் துணிகளுக்குக் குறைந்த விலையே கொடுத்து வந்தனர். இவ் விலைக்குக் கொடுக்க மறுத்த நெசவாளர்களை அரசின் உதவி கொண்டு தொல்லை கொடுத்து வந்தனர். இந்திய வியாபாரி களுடன் நெசவாளர்கள் எவ்வித ஒப்பந்தமும் செய்யக்கூடாது என்றும் ஆங்கில வியாபாரிகள் கொடுக்கும் விலைக்கே துணிகளை

நெய்து கொடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டனர். ஆங்கில வியாபாரிகள் இழைத்துவந்த இத்தகைய கொடுமைகளுக்கு உள்ளான வங்க நாட்டு நெசவாளர்களுள் சிலர் தங்களுடைய பெருவிரல்களை இழக்கவும் நேரிட்டது.

பிரிட்டிஷ் உற்பத்திப் பொருள்களின் போட்டி

மான்செஸ்டர், லிவர்பூல் போன்ற இடங்களில் பஞ்சாலைகளும் நெசவாலைகளும் தோன்றுவதற்குமுன்பு, இந்தியத் துணிகளும், பட்டும் இங்கிலாந்தில் இறக்குமதி செய்யப்பட்டுப் பெருவாரியாக விற்பனையாகிவந்தன. தொழிற்புரட்சிக்குப்பின் நெசவுத் தொழிலில் யந்திரச் சாதனங்களை உபயோகப்படுத்திய தன் விளைவாக ஏராளமான துணிகளை ஆங்கிலேயர்கள் உற்பத்தி செய்தனர். எனவே, தங்களின் தொழிலுக்குப் பாதுகாப்பளிக்கும் பொருட்டு இந்தியத் துணிகளின்மீது காப்பு வரிகள் விதித்து அதன் உற்பத்திப் பெருக்கத்தைத் தடைசெய்தனர். இதற்குப்பின், இங்கிலாந்து இந்தியப் பருத்தி, பட்டுநூல் ஆகிய மூலப்பொருள்களை இறக்குமதி செய்து அவற்றைத் துணியாகவும், பட்டாகவும் யந்திரத் தறிகளில் நெய்து இந்தியாவிற்கு அனுப்பிவைத்தனர். துணிகள் மாத்திரமன்றி வேறு பல உற்பத்திப் பொருள்களும் இந்தியாவெங்கும் குவிந்தன. இதனுல் இந்தியாவின் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபம் சீர்குலைந்தது.

இந்திய அரசின் வணிகக் கொள்கை

இங்கிலாந்தின் வியாபாரம் எவ்வகையிலும் இந்தியாவில் பாதிக்கப்படாதவாறு இந்திய அரசு கண்காணிப்புடன் இருந்தது. இங்கிலாந்திலிருந்து இறக்குமதியாகும் பொருள்கள் ஒவ்வொன்றிற்கும் அவற்றின் மதிப்பில் 10 சதவீதம் வரிவிதிக்கப்பட்டிருந்தது. இவ் வரிவிதிப்பு ஆங்கில வியாபாரிகளையும், பிரிட்டிஷ் உற்பத்தியாளர்களையும் பாதித்ததால், இவ்வரி 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. ஆனுல் இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பருத்திக்கு 5 சதவீதம் வரிவிதிக்கப்பட்டது. இவ்வாறு இங்கிலாந்து வியாபாரப் பொருளுக்கு விதித்திருந்த வரியை நீக்கி இந்திய நூல், பஞ்சு ஆகியவற்றுக்குப் புதிதாக வரிவிதித்து இந்தியாவில் ஆங்கில வணிகப் பொருள்களுக்கு ஆதரவளித்தனர்.

இந்திய வாணிப வளர்ச்சி

19ஆம் நூற்றுண்டு முழுவதும் இந்திய வியாபாரம், ஆங்கிலேயரின் நலத்தையும், லாபத்தையும் கருதி நசுக்கப்பட்டது.

இவர்கள் ஏற்படுத்தும் எல்லாவித உடன்படிக்கைகளிலும்; தங்களின் வியாபாரம் தழைத்தோங்க வாய்ப்புகளை உருவாக்கிக்கொண்டனர். இங்கிலாந்தின் கடற்படை பலம்பெற்று இருந்ததால், உலகக் கடல் வாணிபத்தைத் தனது வசதிக்கேற்ப கட்டுப்படுத்திவந்தது. ஆனால் 20ஆம் நூற்றாண்டில் அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகள் இங்கிலாந்துடன் குடியேற்ற நாடுகள் பிடிப்பதிலும், கடல் வாணிபத்திலும் போட்டியிடவே, அதன் வியாபாரச் செல்வாக்கும் குறையத் தலைப்பட்டது. இதன்பயனாக இந்திய வியாபாரத்தில் இங்கிலாந்து அதிக அக்கறை காட்டவில்லை. 1869ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாய் வியாபாரத்தின்பொருட்டுத் திறக்கப்பட்டபின், இந்திய வியாபாரப் பொருள்கள் ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றன. இதனால் வெளிநாட்டு வியாபாரம் அதிகப்பட்டது. 1900ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட இந்திய வியாபாரப் பொருள்களின் மதிப்பு 200 கோடி. 1928ஆம் ஆண்டில் இது 600 கோடியாக உயர்ந்தது. இந்தியா, பொதுவாகச் சணல், பருத்தி, டீ, பதனிட்ட தோல்; எண்ணெய் வித்துகள் போன்ற கச்சாப் பொருள்களையே ஏற்றுமதி செய்துவந்தது. யந்திரங்களையும், யந்திர உற்பத்திப் பொருள்களையும் ஆடம்பரப்பொருள்களையும் இறக்குமதி செய்துவந்தது.

உள்நாட்டு வாணிபத்தின் வளர்ச்சி

ரயில் பாதைப் போக்குவரத்தாலும்; கப்பல்; கால்வாய் போக்குவரத்தாலும், தந்தி வசதி ஏற்பட்டதாலும் உள் நாட்டு வாணிபம் வளர்ந்தது. ஆங்கில அரசின் எல்லைகள் விரிவடைந்ததால் ஆங்காங்கே இருந்துவந்த சுங்க வரிகள் நீக்கப்பட்டன. அதனால் தடையில்லா வாணிபம் வளர்ச்சி பெற்றது. மாநிலங்களுக்குள் வியாபாரம் வளர்ந்தது. மாநில எல்லைகளைக் கடந்தும் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் அமைதி ஆட்சி நிலவியதாலும்; பல வங்கிகள் நிறுவப்பட்டதாலும், உள் நாட்டு வணிகம் மேலும் வளர்ச்சியுற்றது.

சுதந்திரத்திற்குப்பின் வாணிப வளர்ச்சி

இந்தியா சுதந்திரம் பெற்ற பின் யந்திரத் தொழிலில் கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளது, ஏராளமான யந்திர உற்பத்திப் பொருள்களை இந்தியா உலகில் சுமார் 60 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ், ரஷ்யா போன்ற முன்னேற்றம் அடைந்த நாடுகளும் இந்திய யந்திர உற்பத்தி சாதனங்களை வாங்குகின்றன. அத்துடன்

இந்தியாவின் கூட்டு முயற்சியால் எத்தியோப்பியா, கென்யா. லிபியா, மருசியஸ், நைஜீரியா, இலங்கை, ஈரான், மலேசியா போன்ற 22 நாடுகளில் தொழில் வளர்ச்சி உருவாக்கப்படுகிறது. அமெரிக்கா, ஜெர்மனி, இங்கிலாந்து, கனடா போன்ற வளர்ச்சியுற்ற நாடுகளில் இந்தியர்கள் தொழில் வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டிருக்கின்றனர். சுதந்திரத்திற்குப் பின் இந்தியாவின் ஏற்றுமதியின் மதிப்பு இரு பங்காக உயர்ந்தது. 1947-48ஆம் ஆண்டுகளில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியான பொருள்களின் மதிப்பு 864 கோடி. 1969-70ஆம் ஆண்டுகளில் இது 2981 கோடியாக உயர்ந்தது. 1953-54 ஆம் ஆண்டுகளில் ஏற்றுமதிப் பொருள்கள் 70 சத வீதம் உயர்ந்துள்ளன.

பஞ்சாலைத் தொழில் (Cotton Manufacture)

இந்திய ஆடைகளின் பெருமை: நெடுங்காலமாக நூல் நூற்புத் தொழிலில் இந்தியா புகழ்பெற்ற நாடாக இருந்திருக்கின்றது. இந்தியாவில் உற்பத்தி செய்த துணிகள் உலகெங்கிலும் விரும்பிப் பயன்படுத்தப்பட்டன. கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பு, எகிப்தில் இறந்த மன்னர்களின் உடலை இந்திய மஸ்லின் துணிகளில் சுற்றி அடக்கம் செய்தார்களென்று சங்க இலக்கியங்களிலும் கிரேக்க நாட்டவர்களின் குறிப்புகளிலிருந்தும் தெரிய வருகின்றது. கெஞ்ஜடிகா (Ganjetika) என்று வழங்கப்படும் இந்திய மஸ்லின் துணிகளைக் கிரேக்கர்கள் விரும்பி அணிந்தார்கள் என்றும், ஏராளமான துணிகளையும், வேறு ஆடம்பரப் பொருள்களையும் இந்தியாவிலிருந்து தருவிப்பதால் பெருவாரியான தங்கத்தை ரோமானியப் பேரரசு விரயம் செய்கிறது என்று பிளினி (Pliny) என்பவர் குறிப்பு ஒன்று எழுதியுள்ளார். 16ஆம் நூற்றாண்டுவரை ஐரோப்பியர்களும் இந்தியத் துணிகளைப் பயன்படுத்திவந்தனர். எனவே, நூற்புத் தொழிலும், நெசவுத் தொழிலும் இந்தியாவின் தேசியத் தொழில் போன்று அமைந்திருந்தது. இத் துணிகள் அந்நிய நாட்டின் தேவைகளையும், அரசர்களின் அவசியத்தையும், மக்களின் பிழைப்பையும் பூர்த்தி செய்து வந்தது. டாக்கா மஸ்லினுக்கும், முர்ஜிதாபாத் ஜரிகை வேலைக்கும், அகமதாபாத் வேஷ்டி, துண்டு ஆகியவற்றுக்கும், உத்தரப்பிரதேசம் பட்டுத் துணிகளுக்கும், காஞ்சிபுரம் பட்டாடைகளுக்கும், பெனரஸ் பட்டு உடைகளுக்கும் புகழ் பெற்றவை.

துணி நெசவு ஒரு குடிசைத் தொழில். எனவே, ஆதிக்காலந் தொட்டு இந்தியாவில் பலரால் மிக எளிய முறையில் நடத்தப் பட்டு வந்தது. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி வியாபாரிகள்

நெசவுத் தொழிலாளர்களுக்கு முன்பணம் கொடுத்து நெய்த ஆடைகளை அதிக லாபத்திற்கு விற்றுப் பெரும் லாபம் தேடி வந்தனர். இங்கிலாந்திலிருந்து கப்பனி ஆடைகளும், லாங்காஷயர் துணிகளும் இறக்குமதி செய்துவந்தபோதிலும், வங்காளக் கம்பெனி மாத்திரம் 67½ லட்சம் துணி உற்பத்தியில் முதலீடு செய்திருந்தது. ஆனால், லங்காஷயர் துணிகள் இவ் வியாபாரத்தை நாளாவட்டத்தில் நசுக்கிவிட்டது. ஆனால், டாக்கா மஸ்லின் துணிக்கு ஈடாக ஆங்கிலேயர்களால் துணி உற்பத்தி செய்ய இயலவில்லை. இந்திய மன்னர்களும், ஜமீன்தார்களும், செல்வந்தர்களும், ஆங்கிலேயர்களால் பதவி நீக்கம் செய்யப்பட்டுவந்ததால், அவர்கள் ஆதரித்து வந்த பட்டுத் துணிகளின் உற்பத்தியும் குறைந்தது. ஃபிரெஞ்சு, டச்சுக்காரர்களின் போட்டியும், நெப்போலியனுடைய போருக்குப் பின் ஒழிக்கப்பட்டது. இந்தியாவில் அழிக்கப்பட்டுவந்த நெசவுத் தொழிலுக்கு அமெரிக்கர்கள் ஆதரவு கொடுக்க முன்வந்த சமயத்தில் நூற்பு ஆலைகள் தோன்றியதால், இத் தொழில் முழுவதும் 1818ஆம் ஆண்டிற்குள் அழிந்துவிட்டது.

இந்தியர்கள் மான்செஸ்டர் துணிகளை விரும்பி உபயோகிக்கத் தலைப்பட்டனர். 1796ஆம் ஆண்டு 156 பவுன் மதிப்புள்ள துணி இறக்குமதியாயிற்று. ஆனால், 1818ஆம் ஆண்டில் இது 32 லட்சம் பவுனாக உயர்ந்தது. டாக்கா மக்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் மஸ்லின் துணியைவிட, மான்செஸ்டர் துணிகளையே விரும்பி வாங்கி அணிந்து வந்தனர் என்று பிஷப் ஹீபர் கூறியுள்ளார். பம்பாய், சென்னை போன்ற பகுதிகளிலும் மான்செஸ்டர் துணிகளை மக்கள் விரும்பினர். 1824ஆம் ஆண்டிலிருந்து நூற்கப்பட்ட நூல்கள் இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டன. நான்கு ஆண்டுகளில் இதன் மதிப்பு ரூ.3 லட்சத்திலிருந்து ரூ.33 லட்சமாக உயர்ந்தது. அத்துடன் இந்தியப் பஞ்சாலைத் தொழிலுக்கு வரி விதிப்புகள் செய்ததால் நூல் நூற்புத் தொழிலும் பலவீனம் அடைந்தது. அத்துடன் ஆங்கிலேயர்களின் தொழில் நிர்வாக முறையும், அவர்களின் பெரும் முதலீடுகளும் இந்திய நெசவுத் தொழிலை நசுக்கின.

இந்திய நூற்பாலைகளின் தோற்றம்

இங்கிலாந்தில் நெய்யப்பட்ட துணிகளால் இந்திய நெசவுத் தொழில் பாதிக்கப்பட்டதை உணர்ந்த இந்திய முதலாளிகள் 1860ஆம் ஆண்டில் யந்திர நூற்பு, நெசவுத் தொழிற்சாலைகளை பம்பாய், அகமதாபாத் ஆகிய இரண்டு இடங்களிலும் ஆரம்பித்தனர். பம்பாய் நூற்பு, நெசவுத் தொழிற்சாலை 1853ஆம்

ஆண்டு கௌவாஸ்ஜி நானாபாய் (Cowasjee Nanabhoy) என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இது 25,000 கதிர்களுடன் 1854ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியது. இதையடுத்து புரோச் (Broach) என்ற ஆலை 10,000 கதிர்களுடன் 1855ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. நூற்பாலைகள் பருத்தி விளையும் தக்காணப் பகுதியில் அமைந்திருந்ததாலும், பார்சிகளின் முதலீடுகளாலும், வியாபார அனுபவத்தாலும் சிப்பாய்க் கலகத்திற்குப் பின், ஆங்கிலத் துணிகளுக்கு வரி விதிக்கப்பட்டதாலும் இந்திய நெசவு ஆலைத் தொழில் வளர்ச்சியுற்றது. எனவே, பம்பாய் நகரில் 10 ஆலைகளும், ஆகமதாபாத் நகரில் 3 ஆலைகளும் ஆக மொத்தம் 13 ஆலைகள் 1861ஆம் ஆண்டில் இயங்கி வந்தன. தின்ஷா மானிக்ஜி என்பவர் 60,000 கதிர்களுடன் கூடிய ஆலை ஒன்று நிறுவினார். அமெரிக்க உள்நாட்டுப் போரினால் அமெரிக்கப் பருத்தியின் விலை ஏறியபோதிலும், இந்தியாவில் ரயில்பாதைகள் அமைத்ததாலும் அரசின் தாராள வியாபாரக் கொள்கையாலும் துணி வியாபாரத்திற்கு ஆக்கம் கிடைத்தது.

1870ஆம் ஆண்டில் ஏற்பட்ட விலைவாசியின் மந்தநிலை பஞ்சாலை, நெசவாலைத் தொழில்களைப் பாதித்தது. 1872ஆம் ஆண்டில் பம்பாயில் 18 ஆலைகளும், வங்காளத்தில் இரண்டு ஆலைகளும் ஆக மொத்தம் 20 ஆலைகள் இந்தியாவில் இருந்தன. ஆனால், அடுத்த 15 ஆண்டுகளில் இத் தொழில் வளர்ச்சி அதிகமாகி 1890ஆம் ஆண்டில் பம்பாய், ஷோலாப்பூர், நாகபுரி போன்ற இடங்களில் 137 ஆலைகளாக வளர்ந்தன. பம்பாயில் மாத்திரம் 94 ஆலைகள் இருந்தன. இவற்றில் பல, நூல் நூற்பையே மேற்கொண்டன. இந்தியாவில் நூற்கப்பட்ட இந் நூல் சீனாவிற்கு அனுப்பப்பட்டு வந்தது. இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட சன்ன ரக நூலும் துணிகளும் ஆங்கிலத் துணி வியாபாரத்தைப் பாதித்தது. 1895ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்த நூலின் மதிப்பு ரூ. 68 லட்சமும், துணிகளின் மதிப்பு ரூ. 34 லட்சமுமாக உயர்ந்தது. உள் நாட்டின் வியாபாரம் வரட்சியாலும் பஞ்சத்தாலும், 1895—1900 ஆண்டுகளில் பாதிக்கப்பட்டது. 1900ஆம் ஆண்டிற்குப் பின் பஞ்சாலைத் தொழில் மேலும் வளர்ச்சியடைந்தது.

சென்னை மாநிலத்தில் சென்னை, கோயம்புத்தூர், மேட்டூர், மதுரை, அம்பாசமுத்திரம், கோயில்பட்டி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் பஞ்சாலைகளும் நூற்பாலைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் அருகே பருத்தி விளையும் பகுதி அதிகமாக இருப்பதாலும், மென்மையான சீதோஷ்ண நிலை அமைந்திருப்பதாலும் அங்கு ஏராளமான நெசவாலைகள் தோன்றியுள்ளன.

எனவேதான், கோயம்புத்தூரைத் தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று கூறுகின்றனர். சென்னையிலுள்ள பக்கிங்ஹாம் கர்நாட்டிக் ஆலையின் துணிகள் உலகப் புகழ்பெற்றவை. பொதுவாக இவ் வாலைகளில் வெளிநாட்டு ஏற்றுமதிக்கெனவும், உள்நாட்டு உபயோகத்திற்கெனவும் தனி ரகங்களை உற்பத்தி செய்கின்றனர்.

இரும்பும் நிலக்கரியும் (Steel and Coal)

இரும்புத் தொழிலில் இந்தியா ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. சமுத்திரகுப்தர் நிறுவிய அலகாபாத் இரும்புத் தூணும், டெல்லியிலுள்ள சந்திரா (Chandra) என்ற இரும்புத் தூணும் பல நூற்றாண்டுகள் ஆகியும் துருப்பிடியாது இருக்கின்றன. இத்தகைய அபூர்வமான இரும்பு வேலைப்பாடுகளை அறிந்திருந்த இந்தியர்கள், நாட்டின் தேவைக்குத் தகுந்த அளவு இரும்பை உற்பத்தி செய்யவில்லை எனத் தெரிகிறது. இந்த நிலை 19ஆம் நூற்றாண்டு வரை நீடித்திருந்தது. 19ஆம் நூற்றாண்டிலும், உயர்தர இரும்புத் தாதுப்பொருள் கிடைக்காததாலும், அதை உருக்கத் தேவையான நிலக்கரி அகப்படாததனாலும் இரும்பு உற்பத்தி, இந்தியாவில் தடைப்பட்டிருந்தது. வங்காளத்தில் ஜெஸ்ஸோப் கம்பெனி (Jessop &Co.) 1839ஆம் ஆண்டில் பரக்கார் (Barakar) என்ற இடத்திலும், 1855ஆம் ஆண்டில் மாக்கே கம்பெனி ராணிக்கஞ்சிலும், வங்க இரும்புக் கம்பெனி 1875ஆம் ஆண்டில் அசன்சால் என்ற இடத்திலும் இரும்புத் தொழிற்சாலைகள் அமைக்க முற்பட்டன. ஆனால், இவற்றில் எதிர்பார்த்த லாபம் கிடைக்காததால் இம் மூன்று கம்பெனிகளும் அரசாங்கத்திற்கு விற்கப்பட்டன. மேஜர் டபிள்யூ. சி. லென்னன் (Major W. C. Lennan) என்பவர், 1808ஆம் ஆண்டில் சேலத்தில் நல்ல இரும்பு கிடைக்கின்றது என்று அறிவித்தார். அதன்பேரில் ஆண்ட்ரூ டங்கன் (Andrew Duncan) என்பவர் தொழிற்சாலை ஒன்று சேலத்தில் நிறுவ எடுத்துக்கொண்ட முயற்சியும் தோல்வி அடைந்தது. போர்ட்டோ நோவோ என்ற இடத்தில் இரும்பு ஆலை ஒன்று நிறுவ 1832ஆம் ஆண்டில் ஜெ. எம். ஹீத் (J. M. Heath) என்ற ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரி ஒருவர் எடுத்துக் கொண்ட முயற்சியும் பண முடையின் காரணமாகக் கைவிடப்பட்டது. சுமார் 30 ஆண்டுகள்வரை இவர் இத் தொழிலுடன் போராடிய பின்னரே கைவிட்டார் எனக் குறிப்புகள் கிடைக்கின்றன.

வங்காள அரசு அசன்சால் இரும்பு ஆலையை மார்டின் கம்பெனிக்கு 1889ஆம் ஆண்டில் விற்றுவிட்டது. ஆண்டொன்

றுக்கு 40,000-லிருந்து 50,000 டன் தாழ்ந்த ரக இரும்பை இத் தொழிற்சாலை உற்பத்தி செய்தது. இருப்பினும் இத் தொழிலில் தகுந்த லாபம் இல்லாததால் கைவிடப்பட்டது. இதற்கு அரசாங்க உதவியும் இருந்துவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

எனவேதான், 19ஆம் நூற்றுண்டில் இந்தியாவிற்குத் தேவைப்பட்ட இரும்பு முழுவதும் இங்கிலாந்திலிருந்து வரவழைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. முதல் உலகப் போருக்கு முன், இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட இரும்பின் அளவு 8,08,000 டன்கள். அதன் விலை உத்தேசமாக 12½ கோடி ரூபாயாகும். இத்தகைய நிலை இந்தியாவில் நீடித்து வந்ததால்தான் இங்குத் தொழில் புரட்சி ஏற்பட வாய்ப்பு இல்லாமற் போயிற்று.

இங்கிலாந்தில் ஆப்ரகாம் டர்பி (Abraham Darby) என்பவர், இரும்பை உருக்குவதற்குக் கட்டைக் கரிக்குப் பதில் கோக் (Coke) என்ற நிலக்கரியைக் கண்டுபிடித்ததால், இரும்பு உற்பத்தி பன்மடங்கு அதிகமாகியது. அத்துடன் உருக்கு இரும்பும் இம்முறையில் உற்பத்தி செய்ய முடிந்தது. இந்தியாவில் இத்தகைய வசதி கிடைக்கவில்லை. கோக் உற்பத்தி முறை மிகவும் பிந்திய காலத்தில் கையாளப்பட்டது.

1907ஆம் ஆண்டில் டாட்டா இரும்பு உருக்குத் தொழிற்சாலை, ஜம்ஷெட்பூர் என்ற இடத்தில் ஜெம்ஷெட்ஜி டாட்டா என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இவரே இந்திய இரும்பு, உருக்குத் தொழிலின் தந்தை எனக் கருதப்படுகிறுர். வங்காளத்தில் அசன்சால் என்ற இடத்தில் 1908ஆம் ஆண்டில் இந்தியன் இரும்பு உருக்குக் கம்பெனி (Indian Iron and Steel Co.) ஒன்று தொடங்கப்பெற்றது. 1923ஆம் ஆண்டில் மைசூர் இரும்பு உருக்குத் தொழிற்சாலை என்ற கம்பெனி (Mysore Iron and Steel Works) பத்ராவதியில் ஆரம்பிக்கப்பட்டது. 1937ஆம் ஆண்டில் வங்காள உருக்குக் கழகம் (Steel Corporation of Bengal) என்ற ஒரு தொழிற்சாலையும் நிறுவப்பட்டது. 1914-18ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட போரின் காரணமாக, இரும்புத் தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அந்நிய நாட்டின் போட்டி இருந்ததால் இந்திய அரசு இரும்புத் தொழிலுக்குக் காப்பு வரி விதித்து ஆதரவு அளித்து வந்தது.

நிலக்கரித் தொழில் (Coal Industry)

19ஆம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் வங்காளத்தில் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டது. 1820ஆம் ஆண்டிலிருந்து அலெக்சாந்தர் கம்பெனி (Alexander & Co.) இங்குச் சுரங்கம் அமைத்து நிலக்

கரியை வெட்டி எடுக்க ஆரம்பித்தனர். 1840 வரை ஒரு சுரங்கமும், 1854ஆம் ஆண்டு வரை மேலும் மூன்று சுரங்கங்களும் ஆக நான்கு சுரங்கங்களே இப் பகுதியில் இயங்கி வந்தன. கிழக்கிந்திய ரெயில் பாதை அமைத்தபின் வெட்டி எடுக்கப்பட்ட நிலக்கரியை உபயோகப்படுத்துவதற்கும், அவற்றை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் ஒரு பெரும் வசதி கிடைத்தது. 1879—80ஆம் ஆண்டில் ராணிகஞ்ச், ஜாரியா ஆகிய இரு பகுதிகளிலும் 56 நிலக்கரி சுரங்கங்கள் இருந்தன. இவற்றிலிருந்து ஆண்டொன்றுக்குப் பத்து லட்சம் டன் நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டது. உத்தரப்பிரதேசத்திலுள்ள மோப்பானி சுரங்கமும் வாரோரா சுரங்கமும் சிறிதளவு நிலக்கரியே அளித்து வந்தன. வங்காளச் சுரங்கங்களில் வெட்டி எடுக்கப்பட்ட நிலக்கரி, ரயில் பாதைகளுக்குத் தேவையான அளவு எட்டவில்லை. இந்திய அரசு ஆண்டு ஒன்றுக்கு 6,00,000 டன் நிலக்கரி வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வந்தது. நிலக்கரி வெட்டி எடுக்கும் முறையில் சிறிது சிறிதாக யந்திரச் சாதனங்கள் உபயோகப்படுத்தப்பட்டன. அத்துடன் தாராளமாக லைசென்சுகள் வழங்கப்பட்டதால் சுரங்கத் தொழில் பெருகியது. 1899ஆம் ஆண்டு 60 லைசன்சுகள் வழங்கப்பட்டன. இது 1907ஆம் ஆண்டு 400 ஆக உயர்ந்தது. இதன் பயனாக ஆண்டு ஒன்றுக்குச் சராசரி 120 லட்சம் டன் நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டது. புதிய சுரங்கங்கள் வெட்டுவதைவிடப் பழைய சுரங்கங்களையே ஆழப்படுத்தி உபயோகிப்பது பயனுள்ளதாகவும் லாபகரமாகவும் இருந்தது. ரயில் பாதைகள், சணல் உற்பத்திச்சாலை, நெசவாலைகள் ஆகியவற்றுக்கு நிலக்கரி அதிகம் தேவைப்பட்டதால் இத் தொழில் அதிகமாக விரிவடைந்தது.

காகிதத்தொழிலும் அச்சுத்தொழிலும் (Paper and Printing)

இந்தியாவில் 1854-க்கு முன்பு, காகிதத் தொழில் குடிசைத் தொழிலாகக் கருதப்பட்டுவந்தது. தேவையான காகிதத்தை உற்பத்திசெய்ய முடியவில்லை. 1854ஆம் ஆண்டில் முதல் முறையாக டாக்டர் வில்லியம் கேரி (Dr. William Carey) என்பவர், செராம்பூரில் காகிதத் தொழிற்சாலை ஒன்று நிறுவினார். இதைத் தொடர்ந்து வங்காளத்தில் பேலி மில் (Bally Mills) என்ற காகிதத் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. இதை அடுத்து 1882ஆம் ஆண்டில் டிட்டாகூர் காகிதத் தொழிற்சாலை (The Titaghur Paper Mills) தோற்றுவிக்கப்பட்டது. 1891ஆம் ஆண்டில் வங்காளக் காகிதத் தொழிற்சாலையும் (Bengal Paper Mill), 1892–94ஆம் ஆண்டுகளில் இம்பீரியல் காகிதத் தொழிற்சாலையும் (Imperial Mill) செயல்படத் தொடங்கின. இவற்றைத் தவிர, 1918ஆம் ஆண்டுவரை வங்காளத்தில் வேறு

தொழிற்சாலை எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. 1879ஆம் ஆண்டில் லக்நௌ (Lucknow) நகரிலும், 1887ஆம் ஆண்டில் பூனாவிலும் காகிதத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இத் தொழில்கள் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளின் போட்டிகளைச் சமாளிக்கவேண்டியிருந்தன. அத்துடன் இதற்கு வேண்டிய ரசாயனம், போக்குவரத்து, நிலக்கரி ஆகியவற்றின் விலையேற்றத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்தது.

கிறித்தவ சமயப் பாதிரியார்கள் தங்களின் சமயத்தைப் பரப்பும் நோக்குடன் இந்தியாவில் பல இடங்களில் அச்சுக் கூடங்களை நிறுவினர். இதன்மூலம் நாள், வார, மாதப் பத்திரிகைகளும் சமயப் புத்தகங்களும் பல மொழிகளில் வெளியிட்டனர். கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் கிறித்தவ சமயத்தினர் இந்தியாவிற்கு அரும்பணியாற்றியுள்ளனர். இஃது இவர்களின் காகித, அச்சுத் தொழில்களினால் சாத்தியப்பட்டது.

தோல் பதனிடும் தொழில் (The Tanning Industry)

இந்தியாவில் தோல் ஏராளமாகக் கிடைத்தபோதிலும் தோல் பதனிடும் தொழில் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தான் ஏற்பட்டது. 1845ஆம் ஆண்டில் சென்னையைச் சேர்ந்த சார்லஸ் டி சூசா (Charles De Susa) என்பவர், தோல் பதனிடும் முறையில் சில மாறுதல்கள் கொண்டு வந்தார். இதன் பின், இத்தொழில் வளர்ச்சி அடைந்து, வெளிநாடுகளுக்குப் பதனிடப் பட்ட தோல்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1880ஆம் ஆண்டில் சார்லஸ் டி சூசா பதனிட்ட தோல்களை ஜெர்மனிக்கு அனுப்பினார். இவ்வியாபாரம் இவருக்குப் பெரும் லாபத்தை அளித்தது. இத் தொழில் வட இந்தியாவில் ராணுவ அதிகாரிகளால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. தோல் தொழிற்சாலை ஒன்று கான்பூரில் 1860ஆம் ஆண்டில் அரசாங்கத் துறையில் நிறுவப்பட்டது. இதைத் தொடர்ந்து அரசாங்க உதவியுடன் ஆலன் கூப்பர் கம்பெனி (Messrs. Allan and Cooper) தனியார் துறையில் தொடங்கப்பட்டது. இதை அடுத்து, பம்பாயில் தோல் பதனிடும் தொழில் வளரத் தலைப்பட்டது. அமெரிக்கக் குரோம் தொழில் இந்தியாவின் தோல் பதனிடும் தொழிலைப் பாதிக்கவே, சென்னை மாநில அரசு இத் துறையில் ஆராய்ச்சி செய்து குரோம் முறையைக் கண்டுபிடித்தது. இத் தொழிலின் வளர்ச்சிக்குக் குரோம் பெரிதும் உதவியது. தமிழ்நாட்டில் சென்னை நகர் அடையாற்றுப் பகுதியில் மத்திய அரசின் ஆதரவின்கீழ்த் தோல் ஆராய்ச்சி நிலையம் ஒன்று இயங்கி

வருகின்றது. அத்துடன் தனியார் துறையில் திருச்சி, வேலூர் போன்ற இடங்களில் தோல் பதனிடும் தொழில் வளர்ந்துள்ளது.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சர்க்கரை, ரசாயனம், உரம், கண்ணாடி, சிமென்ட், தீப்பெட்டி, புகையிலை போன்ற தொழிற்சாலைகள் சிறியனவும் பெரியனவுமாகப் பல தோன்றி வளர்ந்தன. இரண்டாவது உலகப் போரினால் ஏற்பட்ட ஏற்றமும் ஆதரவும் இத் தொழில்களுக்கு ஒரு தனி வளர்ச்சியை அளித்தது. இந்திய அரசின் தாராளக் கொள்கையின் பயனாய் இத் தொழில்கள் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளன.

தொழில்கள் (Industry)

இந்தியாவில் பெருவாரியாக உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகள் ஆங்கிலேயர்களின் தொடர்பால் ஏற்பட்டது. பழைய இந்தியக் குடிசைத் தொழில்களுக்குப் பதில் புதிய புதிய பெருந் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1860ஆம் ஆண்டுவரை இத் தகைய தொழில்கள் கிழக்கிந்தியக் கம்பெனியாராலும், தனிப் பட்ட முறையில் ஆங்கில வியாபாரிகளாலும் தோற்றுவிக்கப் பட்டன. இதன் பயனாக இந்தியாவில் வாணிகப் புரட்சி ஒன்று தோன்றிற்று. அடுத்த 50 ஆண்டுகளில் பெரும் தொழிற் புரட்சி ஒன்று ஏற்படும் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக, இந்தியா விற்குத் தேவையான யந்திரங்களும், யந்திர உற்பத்திப் பொருள் களும் ஏராளமாக இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்பட்டன. ஒரு சில தொழில்கள் மாத்திரமே இந்தியாவில் வளர்க்கப்பட்டன. இங்குப் பழம் பெருமை பெற்ற குடிசைத் தொழில்கள் அனைத்தும் அழிக்கப்பட்டன. ஆங்கில அரசின் பொருளாதாரக் கொள்கை இந்தியாவில் தொழிற் புரட்சி ஏற்படுவதற்குத் தடங்கலாக இருந்தது என்று ஆர். சி. தத் (R. C. Dutt) என்ற அறிஞர் தெரி வித்துள்ளார். தங்களின் சுயநலம் கருதி ஆங்கிலேயர்கள் இந் தியத் தொழில்களை அழித்துவிட்டனர். ஜாதி அடிப்படையில் அமைந்த சமூக அமைப்பும், கிராமப்புறச் சூழ்நிலையும், ஏழ்மை யான வாழ்க்கைத் தரமும், செல்வந்தர்களின் முயற்சியின்மையும், தொழில் நுட்ப அறிவுக் குறைவும் இந்தியாவின் தொழில் வளர்ச்சி குன்றியதற்குக் காரணங்களாக அமைந்தன என்று குறிப்பிட்டனர்.

தொழில் வளர்ச்சிக்குப் போக்குவரத்திற்கான சாலைகள், கால்வாய்கள், கப்பல் தங்கும் துறைமுகங்கள், ரயில் பாதைகள், போன்றவையும், வீட்டுவசதி வளர்ச்சி, தொழில்நுட்பப் பயிற்சி, வேளாண்மையில் முன்னேற்றம் போன்றவையும் தேவைப்படு

கின்றன. ஆனால், இவற்றுள் எதுவும் இந்தியாவில் வளர்ச்சி அடையவில்லை. தொன்றுதொட்டு இருந்த நிலைகளே நீடித்து வந்தன. இங்கிலாந்திற்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களே இந்தியாவில் வளர்ச்சிபெற அனுமதிக்கப் பட்டன. இந்திய ரயில் பாதைகளும் வியாபார நோக்குடனே அமைக்கப்பட்டன. வேளாண்மையின்மீது அரசு கவனம் செலுத்த வில்லை. அதன் பயனாக உணவுப் பொருள்களின் தேவை நாட்டில் அதிகரித்தே இருந்திருக்கிறது. ஆங்கில வியாபாரிகளும் தங்கள் லாபத்தையே முக்கியக் குறிக்கோளாகக் கருதினர். இந்தியர் களும் தொழில் வளர்ச்சியில் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை. மேலும் அவர்களுக்கு இத் துறையில் அனுபவமும் இல்லை.

அவுரிப்பயிர் (Indigo)

தற்காலத் தொழில்களில் சாயத் தொழில் முதலிடம் பெறு கின்றது. லூயி போனர்ட் (Louis Bonard) என்ற ஃபிரஞ்சுக்காரர் ஒருவர், வங்காளத்தில் முதல் சாயத் தொழிலை ஆரம்பித்தார். ஃபிரான்கோ கிராண்ட் (Francois Grand) என்பவர், 1782-85-க்கு இடையில் பீகார் மாநிலத்தில் மற்றொரு சாயத் தொழிலை ஆரம் பித்தார். ஆனால், ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் குறிப்பு களிலிருந்து பிரின்செப் (Prinsep) என்பவரே இத்தொழிலை முதலில் ஆரம்பித்தவர் எனத் தெரிய வருகின்றது. வங்காளத்தில் ஆரம் பித்த தொழிற்சாலை 1795ஆம் ஆண்டில் 62 லட்சம் ரூபாய் மதிப் புள்ள 30 லட்சம் பவுண்டு சாயத்தை வெளி நாட்டிற்கு அனுப்பி வைத்தது.

கலப்படமும் விலையேற்றமும் இத் தொழிலை வெகுவாகப் பாதித்தன. 1801-1802ஆம் ஆண்டுகளில் இதன் ஏற்றுமதியின் மதிப்பு 38 லட்சம் ரூபாயாகக் குறைந்தது. ஆனால், இந் நிலை மாறி அவுரிக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டது. அதன் பயனாக வங்காளம், பீகார் ஆகிய மாகாணங்களில் சாயச் செடி ஏராளமாகப் பயிரிடப் பட்டது. 1815ஆம் ஆண்டு ஹென்றி லீ (Henry Lee) என்பவர், அதிக உற்பத்தியின் ஆபத்தைக் கம்பெனி அதிகாரிகளுக்கு எடுத் துச் சொல்லி எச்சரித்தார்.

ஐரோப்பாவில் நெப்போலியனுடைய போர்களினால் இவ் வியாபாரம் மறுமுறையும் மந்த நிலையடைந்தது. இந்தியாவி லிருந்து முதலாளிகளால் மேல் நாடுகளுக்குப் பணம் அனுப்ப இயலவில்லை. இங்கிலாந்திலிருந்து தங்கமும், லங்காஷயரிலிருந்து துணிகளும் அதிக அளவில் இறக்குமதி செய்யப்பட்டதன் பயனாக ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்தில் அபின் வியாபாரத்தின் ஏற்றமும்

அதிகப்பட்டது. இவ் வியாபாரத்தில் அதிக மூலதனத்தை முடக்கத் தலைப்பட்டனர். இச் சமயத்தில் அவுரித் தொழிலில் ஆண்டுதோறும் சுமார் 2 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டது. வங்காளத்தில் இப் பயிர் 30 லட்சத்திலிருந்து 40 லட்சம் ஏக்கர் வரை பயிரிடப்பட்டது. 899 தொழிற்சாலைகள் இப் பயிர்களிலிருந்து சாயம் எடுத்து வந்தன. இத் தொழிலில், இந்தியர்களின் போட்டியைச் சமாளிக்கவும், தொழிலாளர்களின் பிரச்சினைகளிலிருந்து விடுபடவும் ஆங்கில முதலாளிகள் அவுரிப் பயிரைத் தாங்களே பயிரிட உரிமை வேண்டும் என வாதாடினர். இக் கருத்தை வில்லியம் பெண்டிங்க் பிரபு தீவிரமாக ஆதரித்தார். ஆனால் மனிதாபிமான அடிப்படையில் கம்பெனி இயக்குநர்கள் இதை எதிர்த்தனர். இருப்பினும், 1833ஆம் ஆண்டில் ஏற்பட்ட சட்டத்தின்படி அவுரிப் பயிர்த் தோட்டங்கள் ஆங்கிலேயருக்குச் சொந்தமாக்கப்பட்டன. ஜமீன்தாரி முறைப்படியும் ஆங்கிலேயர்களுக்கு நிலங்கள் பயிரிடுவதற்கென வழங்கப்பட்டன. இந் நிலங்களில் குடியானவர்கள் ஒரு பீகா (Bigha) நிலத்தில் பயிரிடும் அவுரியை ரூபாய் இரண்டுக்குக் கொடுக்க வேண்டும். இவ்வாறு விளைவித்துக் கொடுக்கத் தவறினால், குடியானவன் ஆங்கில முதலாளிக்கு நஷ்ட ஈடு கட்டவேண்டும். அவுரிப்பயிர் நல்ல நிலத்தில் பயிரிட்டு வந்ததால் உணவுப் பொருள்கள் சரியாகப் பயிரிடப்படவில்லை. இதனால் உணவு விலை அதிகரிக்கத் தலைப்பட்டது.

1833ஆம் ஆண்டிற்குப் பின்னர், தொழிலாளர்களிடம் ஏற்பட்ட சிக்கல்கள் முற்றத் தொடங்கின. 1859ஆம் ஆண்டு இப் பிரச்சினை முற்றி, 1860-ல் பெரும் கிளர்ச்சியாக உருவெடுத்தது. கானிங் பிரபு, குற்றச் சட்டம் ஒன்றை இயற்றி, கிளர்ச்சியில் ஈடுபடும் தொழிலாளர்களைத் தண்டிக்க நீதிபதிகளுக்கு அதிகாரம் வழங்கினார். இந்திய அமைச்சர் சர் சார்லஸ் உட், இச் சட்டத்தைக் கொள்கை அளவில் எதிர்த்தாலும், இது தற்காலிக நடவடிக்கை முறை என்ற வகையில் தனது எதிர்ப்பை நிறுத்திக் கொண்டார். இத்தகைய தொழிலாளர்களின் கிளர்ச்சிகளுக்கிடையில் பெரும் லாபம் பெற முடியாதென உணர்ந்து, ஆங்கில முதலாளிகள் தங்கள் முதலீட்டை வங்காளத்திலிருந்து பீகார், பெனாரஸ், தோவாப் போன்ற பகுதிகளுக்கு மாற்றிக்கொண்டனர். இதன் பயனாக, அவுரியின் உற்பத்தி இவ் விடங்களில் ஆண்டொன்றுக்கு 34,857 மணங்குகளாகப் பெருகிற்று.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் (1897) செயற்கைச் சாயம் கண்டுபிடிக்கப்பட்டதால், அவுரித் தொழிலின் உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டது. இதன் ஏற்றுமதி 35 லட்சம் பவுனி

லிருந்து 4 லட்சம் பவுனுகக் குறைந்தது. இதைத் தொடர்ந்து அவுரி பயிரிடும் நிலத்தின் பரப்பளவும் குறைந்தது. இச் சமயத்தில்தான் அவுரித் தொழிலாளர்களின் கிளர்ச்சியின் தன்மையை அறிய பீகாரிலுள்ள சம்பரான் என்ற இடத்திற்குக் காந்திஜி சென்றார். இதற்குப் பின் அவுரி விளைவிக்கும் தொழில் வட இந்தியாவில் அழிந்தது. ஆனால், சென்னை மாநிலத்தில் சில இடங்களில் இத் தொழில் நடந்துவந்தது. 1921ஆம் ஆண்டில் பீகாரிலும் ஒரிஸாவிலும் 65 அவுரித் தோட்டங்களே (Indigo Plantation) இருந்தன. இவற்றில் 56 தோட்டங்கள் ஐரோப்பியர்களுக்கும் எஞ்சிய 9 தோட்டங்கள் இந்தியர்களுக்கும் சொந்தமானவை. ஆங்கிலேயர்களின் முதல் தொழிலான அவுரி உற்பத்தித் தொழில் இன்று அழிந்துபோயிற்று. இத் தோட்டங்களில் சிதைந்து கிடக்கும் கட்டடங்கள் ஐரோப்பியரின் முதல் முயற்சியை நினைவுபடுத்திக்கொண்டிருக்கின்றன.

தேயிலையும் காப்பியும் (Tea and Coffee)

சாயத் தொழில் அழிந்தபின், அந்த இடத்தைத் தேயிலை கைப்பற்றியது. 1833ஆம் ஆண்டு சீனாவுடன் கொண்டிருந்த தேயிலை வியாபாரம் துண்டிக்கப்பட்ட பின், ஆங்கிலக் கிழக் கிந்தியக் கம்பெனியார், இந்தியாவில் தேயிலை பயிரிடும் தொழிலை மேற்கொண்டனர். அஸ்ஸாம் மாநிலத்தில் தேயிலைப் பயிர்கள் காணப்படுகின்றன என்று கண்டவர் ராபர்ட் புரூஸ் (Robert Bruce) என்பவர் ஆவர். இவர் இவ் வுண்மையைத் தனது சகோதரர் அலெக்சாந்தரிடம் தெரிவித்தார். இவர் தனது அதிகாரி கேப்டன் ஜெங்கின்ஸ் என்பவரிடம் 1826ஆம் ஆண்டில் தெரிவித்தார். இதற்கிடையில் ஆன்ட்ரு சார்ல்டன் என்பவர், தனியாகவே தேயிலைப் பயிர்களைக் கண்டுபிடித்து ஆங்கிலக் கிழக் கிந்தியக் கம்பெனிக்கு 1832ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 21ஆம் நாள் தெரிவித்தார்.

தேயிலைக் கம்பெனிகளின் தோற்றம் : வில்லியம் பெண்டிங்க் பிரபு, 1834ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் நாள் தேயிலை பயிரிடும் தொழிலின் அவசியத்தை உணர்ந்து, இதற்கென ஒரு குழு அமைத்தார். டாக்டர் வாலிச் (Dr. Wallich) என்பவரின் தலைமையின்கீழ்ச் சீனத் தேயிலை விதைகளையும், இந்தியத் தேயிலை விதைகளையும் பயிரிட்டுப் பரிசோதனைசெய்ததில் இந்தியத் தேயிலை அதிகப் பயன் தருகிறது எனக் கண்டனர். எனவே, முதன்முதலில் இந்தியாவில் அஸ்ஸாம் மாநிலத்தில் தேயிலை பயிரிடுவதற்கென லண்டன் வியாபாரிகள் சேர்ந்து 1839ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ஆம் நாள் கம்பெனி ஒன்றைத் தோற்றுவித்தனர். இதன்

தொடக்க மூலதனம் 500,000 பவுன்கள். கல்கத்தாவில் உள்ள காக்கரில், பாயிட் என்ற இரு வியாபாரக் குழுக்கள் அஸ்ஸாம் தேயிலைக் கம்பெனிக்கு ஏஜன்டாக இருந்து வந்தன. இத் தருணத்தில் துவாரகாநாத் தாகூர் என்பவர், இந்தியக் கம்பெனி ஒன்றைத் தோற்றுவித்துத் தேயிலைத் தொழிலை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இக் கம்பெனி 10,000 பங்குதாரர்களைக் கொண்டு 50 லட்சம் ரூபாய் மூலதனத்துடன் இயங்கி வந்தது. இக் கம்பெனி இத் தொழிலில் ஏற்பட்ட லாப, நஷ்டங்களைச் சமாளித்துக் கொண்டு 1850 வரை நீடித்திருந்தது. 1845ஆம் ஆண்டில் இதன் உற்பத்தித் திறன் 194,800 பவுண்டு தேயிலைக்கு உயர்ந்தது. சிறிது சிறிதாக இதன் உற்பத்தி நிலத்தின் பரப்பளவும் அதிகரிக்கப்பட்டது. இருப்பினும், வேறு கம்பெனிகளின் போட்டியாலும், போக்குவரத்து வசதிக் குறைவினாலும், தொழிலாளர்களின் எண்ணிக்கைக் குறைவினாலும், இத் தேயிலைத் தோட்டத் தொழில் பாதிக்கப்பட்டது. இக் கம்பெனியின் இரு இயக்குநர்கள் பிரிந்து சென்று ஜோர்காட் தேயிலைக் கம்பெனி என்ற ஒன்றை நிறுவினர். மேலும் பலர் இத் துறையில் போட்டியிட்டனர்.

1859-லிருந்து 1865ஆம் ஆண்டிற்குள் சுமார் 20 தேயிலைக் கம்பெனிகள் லண்டனிலும் கல்கத்தாவிலும் தோற்றுவிக்கப் பட்டன. பல பதிவு செய்யப்படாத கம்பெனிகளும் உருவாயின. இதன் பயனாக, 1866-67ஆம் ஆண்டுகளில் 60 லட்சம் பவுண்டுகளுக்கு மேற்பட்ட தேயிலை இந்தியாவில் உற்பத்தியாகியது. ஆனால், இதே ஆண்டில் பெரும் போட்டியாலும், பண முடையாலும், நிர்வாகக் கவனக் குறைவாலும் தேயிலை உற்பத்தித் தொழில் பெரும் நஷ்டத்தை அடைந்தது. இவ்வாண்டு 6% பங்கீட்டு லாபமே பங்குதாரர்களுக்கு அளிக்க முடிந்தது. இதற்கு முந்திய ஆண்டுகளில் 12% வீதம் லாபம் அளித்து வந்திருக்கின்றனர். 1870ஆம் ஆண்டில் இத் தொழிலில் அதிக லாபம் கிடைத்தது. அஸ்ஸாம் கம்பெனி (Assam Company) 35% லாபத் தொகை தனது பங்குதாரர்களுக்கு அளித்தது குறிப்பிடத்தக்கது.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் தேயிலை உற்பத்தி அதிகரித்தது. 1885—1904ஆம் ஆண்டுகளில் தேயிலை பயிரிடும் நிலத்தின் பரப்பளவு கூடியதோடு உற்பத்தியும் இரு மடங்காயிற்று. அஸ்ஸாம், வங்காளம் ரயில் பாதை அமைக்கப்பட்டதாலும், சிட்டகாங் துறைமுகம் திறக்கப்பட்டதாலும் தேயிலைத் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் ஏற்பட்டது. 1918ஆம் ஆண்டில் 177 கோடி மதிப்புள்ள 3,240 லட்சம் பவுண்டு தேயிலையை இந்தியா

அந்நிய நாட்டிற்கு ஏற்றுமதி செய்தது. பங்குதாரர்களுக்கு 21 % லாபத் தொகை பிரித்துக் கொடுக்கப்பட்டது. 1920ஆம் ஆண்டு தேயிலை பயிரிடும் நிலத்தின் பரப்பு 704,059 ஏக்கராகவும், ஏற்றுமதி 3,450 பவுண்டுகளாகவும் உயர்ந்தன. தேயிலை உற்பத்தித் தொழில், இன்றுவரை இந்தியாவின் முக்கிய உற்பத்தித் தொழில்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

நாளாவட்டத்தில் ஐரோப்பியர்களின் கூட்டு முயற்சியால் சிறு சிறு கம்பெனிகள் இணைந்து பெரும் கம்பெனிகள் தோன்றின. சாயத் தொழிலில் முதலிடு செய்யப்பட்ட தொகையைவிடத் தேயிலைத் தொழிலில் ஆங்கிலேயர்கள் அதிக முதலீடு செய்தனர். சமீப காலங்களில் ஐரோப்பியர்களின் ஆதிக்கத்திலிருந்து இந்தியர்களின் நிர்வாகத்திற்குள் தேயிலைத் தோட்டங்கள் பல கொண்டு வரப்பட்டன. குறிப்பாக வங்காளம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில் இம் மாற்றம் அதிகம் காணப்படுகின்றது.

காப்பித் தோட்டத் தொழில்

வங்காளத்தில் உள்ள ஃபோர்ட் கிளாஸ்டர் (Fort Gloster) என்ற இடத்தில் காப்பித் தோட்டம் பயிரிடும்படி ஐரோப்பியர்களுக்கு 1823ஆம் ஆண்டு அனுமதி வழங்கப்பட்டது. இப் பகுதிகளில் உற்பத்தி அதிகமில்லாத காரணத்தால் காப்பி உற்பத்தித் தொழில் தென் இந்தியாவிற்கு மாற்றப்பட்டது. தென் இந்தியாவிலுள்ள பெருவாரியான மலைப் பிரதேசங்களில் தற்சமயம் காப்பிக் கொட்டை பயிரிடப்படுகிறது. 1860ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி அதிகமாகி 188,532 பவுன்கள் மதிப்புள்ள காப்பிக்கொட்டை மேல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. 1864ஆம் ஆண்டில் 801,908 பவுன்களும், 1879ஆம் ஆண்டில் 1,633,032 பவுன்கள் மதிப்புள்ள காப்பிக்கொட்டை ஏற்றுமதி செய்யப்பட்டது. காப்பிச் செடியில் ஏற்பட்ட போரர் (borer) என்ற நோயும், பிரேசில் நாட்டின் போட்டியும் இந்தியக் காப்பி உற்பத்தித் தொழிலை மந்தப்படுத்தியது. ஆனால், கடந்த நூற்றாண்டின் இறுதியில் காப்பியின் உற்பத்தி குறைந்தது. 1914ஆம் ஆண்டில் காப்பி 38,000 ஏக்கர் நிலத்தில் விளைவிக்கப் பட்டது. முதல் உலக யுத்தத்திற்குப் பின்னரும் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னரும் இந்தியாவில் காப்பி உற்பத்தி அதிகப்பட்டு வந்திருக்கிறது.

சணல் உற்பத்தித் தொழில்(Jute Industry)

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் சேமிப்புப் பணமே சாய உற்பத்தித் தொழிலுக்குப் பயன்பட்டது. இங்கிலாந்தி

லிருந்து எவ்வித மூலதனமும் இத் தொழிலைப் பொறுத்தமட்டில் கொண்டுவரப்படவில்லை. இதைப் போன்று காப்பி, தேயிலை உற்பத்தியில் ஐரோப்பியரின் மூலதனம் அதிகமாக இங்கிலாந்தி லிருந்து கொண்டுவரப்படவில்லை. ஆனல், சணல் உற்பத்தியில் ஏராளமான முதலீடு ஆங்கிலேயர்களால் இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்டது. எனவேதான் இன்று வரை இத் தொழிலில் ஆங்கிலேயரின் செல்வாக்கு நீடித்துவருகிறது.

1791ஆம் ஆண்டில் முதல் சணல் பொருள் சோதனைக்காக இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டது. கையால் நெய்யப்பட்ட சணல் பைகளின் தேவை அமெரிக்கா, பினங்கு, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அதிகரித்தது. 1833ஆம் ஆண்டிலிருந்து 1856ஆம் ஆண்டிற்குள் இதன் உற்பத்தி பெருக்கப்பட்டு 41,20,881 ரூபாய் மதிப்புள்ள கோணிப்பைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இந்தியாவில் குறிப்பாகக் கல்கத்தாவைச் சுற்றிச் சணல் ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கிரிமியாப் போருக் குப்பின், முதல் சணல் ஆலை ரிஷ்ரா (Rishra) என்ற இடத்தில் 1855ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. பிஷ்சாம்பர்சென் என்ப வரின் மூலதனத்துடன் ஜார்ஜ் ஆக்லண்ட் (George Ackland) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. 1859ஆம் ஆண்டில் யந்திரத் தறி மூலம் நெய்யப்படும் தொழிற்சாலை பாரா நகரில் (Baranagar) ஆரம்பிக்கப்பட்டது. முதல் தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 8 டன் சணல் உற்பத்தி செய்தது, இரண்டாவது 152 டன் சணல் உற்பத்தி செய்தது. இவற்றைத் தொடர்ந்து மூன்று புதிய ஆலைகள் கௌரிபூர், சிராஜ்கஞ்ஜ், இந்தியா என்ற பெயரில் தோன்றின. பாராநகர் தனது உற்பத்தியை 5 ஆண்டிற்குள் இருமடங்காக அதிகப்படுத்தியது. இவ்வாறு எல்லா ஆலைகளுமே ஏராளமான லாபத்தைப் பெற்றன.

சணல் உற்பத்தித் தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் இருப் பதைக் கண்டு 1872-78 ஆம் ஆண்டுகளில் 13 சணல் ஆலைகள் தோன்றின. வங்காளத்தில் தோன்றிய இத் தொழிற்சாலைகள் ஸ்காட்லாந்திலுள்ள டண்டி (Dundee) சணல் ஆலையை பாதித்தது. ஆசியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் சந்தைகளைக் கைப்பற்றின. இத் தொழிலில் 1895ஆம் ஆண்டுக் கணக்குப்படி ஐரோப்பியர்கள் சுமார் 5·47 கோடி முதலீடு செய்திருந்தனர். ஆண்டொன்றுக்குச் சுமார் 470 லட்சம் மதிப்புள்ள சணல் பொருள்களை ஏற்றுமதி செய்து வந்தனர். 20%வரை பங்குதாரர்களுக்கு லாபத் தொகை அளிக்கப்பட்டது. இந்திய அரசே இதைக் கண்டு பொறுமைப் பட்டு இதன் நடவடிக்கைகளை விசாரிப்பதற்கு விசாரணைக் குழு

ஒன்றை அமைத்தது. 1890ஆம் ஆண்டில் ஏற்பட்ட பஞ்சத்திற்குப் பின், இத் தொழில் சிறிது பாதிக்கப்பட்டது. ஆனால், விலைவாசி ஏற்றத்தினாலும், ரயில் பாதைகளின் தோற்றத்தாலும், வெளிநாட்டுத் தேவைகளின் அதிகரிப்பாலும் இத் தொழில் மேலும் ஓர் உயர்மட்டத்தை அடைந்தது. அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய இரு நாடுகளின் இறக்குமதி வரிகளாலும் சணல் உற்பத்தி இந்தியாவில் பாதிக்கப்படவில்லை. முதல் உலகப் போருக்கு முன் 7½ லட்சம் கதிர்களைக் கொண்ட 64 சணல் ஆலைகள் இந்தியாவில் இருந்தன. 1947ஆம் ஆண்டு கிழக்குப் பாகிஸ்தான் பிரிந்தபொழுது சணல் உற்பத்தி நிலங்களில் 75% கிழக்குப் பாகிஸ்தானுக்குச் சென்றது. ஆனால், பெருவாரியான சணல் ஆலைகள் இந்தியாவில், குறிப்பாகக் கல்கத்தா எல்லைக்குள் அகப்பட்டுக் கொண்டன. கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேஷ் என்று மாற்றமடைந்தபின், இந்தியாவிற்கும் பங்களாதேஷுக்கும் நட்புறவு ஏற்பட்டது. அதன் பயனாகச் சணல் உற்பத்தி சமீப காலத்திலிருந்து அதிகப்பட்டு வருகிறது.

சுதந்திரத்திற்குப்பின் இந்தியாவின் தொழில் வளர்ச்சி

இந்திய அரசு, தொழில் வளர்ச்சியின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் அவற்றுக்குத் தேவையான எல்லாவித உதவிகளும் அளித்து வருகிறது. பாதுகாப்புத் துறைக்குத் தேவைப்படும் உற்பத்திப் பொருள்கள், அணுசக்தி உற்பத்தி, இரும்பு, நிலக்கரி, கனரக யந்திரங்கள், ஆகாய விமானங்கள், கப்பல் கட்டும் தொழில், தொலைபேசிக் கருவிகள் போன்றவை அரசு உடைமையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அலுமினியம், உரத் தொழில், மருந்துகள் உற்பத்தி போன்ற ஏராளமான தொழில்கள் தனியார் துறைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தனியார் தொழில்கள் அரசாங்கம் மேற்கொண்டு நடத்திவரும் தொழில்களுக்குப் பேருதவியாக அமைந்துள்ளன.

மாநிலங்கள் விரும்பினால் எத்தகைய தொழிலையும் ஆரம்பிக்கலாமென வகை செய்யப்பட்டுள்ளது. இவற்றைத் தவிர, கூட்டுறவு முறையில் தனியார்களும் அரசும் தொழில்கள் பல ஆரம்பிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சர்க்கரை ஆலை, நூற்புத் தொழில், குடிசைத் தொழில் ஆகியவற்றை மேற்கொள்ள இக் கூட்டுறவு முறை மிகவும் ஏற்றதாக அமைந்துள்ளது. மத்திய அரசு, தொழில் வளர்ச்சிக்காக இதுகாறும் 3,900 கோடி ரூபாய் செலவிட்டுள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்களில் தொழில்கள் இந்தியா முழுவதிலும் ஏராளமாகத் தோன்றி வளர்ந்துள்ளன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

1948-ல் இந்திய அரசு, விசாகபட்டினத்தில் கப்பல் கட்டும் தொழிலை ஆரம்பித்து இதுவரை 50 கப்பல்களுக்குமேல் கட்டியுள்ளது. இரண்டாவது கப்பல் கட்டும் தளம் கொச்சியில் ஆரம்பிக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

பெங்களூர், கான்பூர், நாசிக் ஆகிய இடங்களில் நாட்டின் பாதுகாப்பிற்கும் போக்குவரத்திற்கும் பயன்படக் கூடிய விமானங்கள் கட்டப்படுகின்றன. இத் தொழில் ஏராளமான பேருக்கு வேலை வாய்ப்புகள் அளித்து வருகிறது. மாநில அரசுகள் இதுவரை 350 தொழில் பயிற்சி நிறுவனங்களை நிறுவியுள்ளன. சிறு தொழில்களின்மூலம் ஆண்டொன்றுக்கு 100 கோடி ரூபாய் அரசுக்கு வருவாய் வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறியபின் இந்தியா, தொழில் துறையில் தன்னிறைவு நிலையை எய்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

8. போக்குவரத்தும் பொதுப்பணிகளும்
(Communication and Public Works)

போக்குவரத்தின் ஆரம்ப நிலை

பொதுப்பணிகளைப் பொறுத்தவரையில் இந்தியாவிற்கு நீண்டகாலப் பாரம்பரியம் உண்டு. பேரரசர் அசோகர் காலத்தில் தமது பரந்த இந்தியப் பேரரசில் பல்வேறு இடங்களில் கல்தூண்களை நாட்டி அவற்றில் புத்த சமயக் கொள்கைகளைப் பொறித்து வைத்தார். இத்தகைய இடங்களுக்கு மக்கள் சென்று வர வசதியான சாலைகள் அமைத்திருந்தார். இவரைப் போலவே 16ஆவது நூற்றாண்டில் ஷெர்ஷா என்ற அரசரும் நீண்ட நெடுஞ்சாலைகளை அமைத்துப் போக்குவரத்துக்கும் வியாபாரச் செழுமைக்கும் வழிவகை செய்துள்ளார். ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரால் 1750, 1763 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் நியமிக்கப் பட்ட விசாரணைக் குழுக்களின் தலைவர்களான மார்டின் (Martin), ரேனல் (Rennel) ஆகியோரின் குறிப்புகளால் மக்களின் வசதிக்கெனப் பழங்கால மன்னர்கள் அமைத்த போக்குவரத்துச் சாலைகள், கால்வாய்கள், ஆற்றுத்துறைகள், நீர்ப்பாசன வசதிகள் ஆகியவை 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலுங்கூட நம் நாட்டிலிருந்து மறையவில்லை என்று தெரியவருகிறது. ஆயினும், 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் பொதுப்பணி, போக்குவரத்து வசதிகள் மிகவும் பிற்போக்கான நிலையில் இருந்தன. பொதுப்பணிகளும் போக்குவரத்து வசதிகளும் நாட்டின் நிர்வாகம், அரசியல், பொருளாதார நிலை,

இடத்தின் அமைப்பு போன்றவற்றைப் பொறுத்து அமையும். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி, தங்கள் ராணுவப் போக்குவரத்தின் வசதிக்கென இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ராணுவ முகாம்களைப் பழுது பார்த்து அமைத்தனர். பழைய நெடுஞ்சாலைகளையும் தேசிய நெடுஞ்சாலைகளையும் புதுப்பித்தனர். இத் துறையில் முதன்முதலில் கல்கத்தாவையும் வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களையும் இணைக்கும் பெரும் சாலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதைச் செப்பனிட்டுச் செயல்படுத்திய பெருமை வில்லியம் பெண்டிங்க் பிரபுவையே சாரும். அவருக்கு இத் துறையில் உறுதுணையாக இருந்தவர் திரு. தாம்சன் (Mr. Thompson) என்பவராவார். இவர், வடமேற்கு எல்லைப்புற மாகாணங்களின் உதவி ஆளுநராக 1843-53ஆம் ஆண்டுகளில் பணியாற்றியவர் ஆவார். டல்ஹௌசி பிரபு காலத்திலும் இப் பெருஞ்சாலையைப் புதுப்பிக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

நீர்ப்பாசன வசதிகள்

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மாநிலங்களில் சாலை, கட்டடங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கு ராணுவக் குழு (Military Board) ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால், 1854ஆம் ஆண்டில் டல்ஹௌசி பிரபு காலத்தில் பொதுப்பணித்துறை ஒன்று இந்திய அரசால் நிறுவப்பட்டது. சென்னையிலும் பம்பாயிலும் பொதுப்பணித் துறையின் கிளைகள் தொடங்கப்பட்டன. இதைத் தொடர்ந்து ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கவனத்தை நீர்ப்பாசன வசதிகள் ஈர்த்தன. காரணம், அது போட்ட முதலைவிட அதிக லாபம் அளித்ததோடு தொடக்க காலத்திலிருந்தே பயனளிக்கக்கூடியது என்று உணரப்பட்டது. ஆனால், இத்துறையில் டல்ஹௌசி பிரபு காலத்திலேதான் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. சர் புரோபி காண்ட்லி (Sir Proby Contley) என்பவரால் திட்டமிடப்பட்ட கங்கைக் கால்வாய் 1854-ல் முடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பாரி தோவாப் (Bari Doab) கால்வாயும், சென்னை மாநிலத்தில் கோதாவரி அணைக்கட்டும் அமைக்கப்பட்டன.

இருப்புப் பாதைகள் (Railways)

டல்ஹௌசி காலத்தில் முதன்முதலாக இந்தியாவில் ரயில் பாதைகள் அமைக்கப்பட்டன. தென் இந்திய ரயில்வே போன்ற ரயில்பாதைக் குழுக்கள் (Railway Companies) தொடங்கப் பட்டன. சர் வில்லியம் (Sir William) என்பவரால் தந்தி இலாக்காவும் செயல்படத் தொடங்கியது. டல்ஹௌசியின்

தீவிர முயற்சியால் 1853ஆம் ஆண்டில் பம்பாயிலிருந்து தானு என்ற நகருக்கும் 1854-55ஆம் ஆண்டில் வங்காளத்தில் உள்ள ஹௌராவிலிருந்து ராணிகஞ்சுக்கும், 1856ஆம் ஆண்டில் சென்னையிலிருந்து அரக்கோணத்திற்கும் இருப்புப்பாதைகள் அமைக்கப் பட்டன. இதனை ஏற்று நடத்திய தனியார்க் கம்பெனிக்கு ஐந்து சதவீத வட்டி உறுதிசெய்யப்பட்டது. உலகத்திலேயே முதன் முதலில் 1825ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஸ்டாக்டன்னியிலிருந்து டார்லிங்டன்வரை இருப்புப்பாதை அமைக்கப்பட்டது. அதை அடுத்து இந்தியாவில் 1853ஆம் ஆண்டு டல்ஹௌசி இருப்புப்பாதை அமைத்தார் என்பது பெருமைப்படவேண்டிய ஒன்றாகும்.

இந்திய அரசின் உறுதிமொழியின் அடிப்படையில் எட்டுப் பிரிட்டிஷ் இருப்புப் பாதைக் கம்பெனிகள் தொடங்கப்பட்டன. சுமார் 50,000 மைல் நீளத்திற்கு இருப்புப் பாதை அமைக்கும் நோக்கம் இருந்தபோதிலும் அரசின் உறுதிமொழி காரணமாக இக் கம்பெனிகள் செம்மையாக நடைபெறாததால், 1,66,50,000 ரூபாய் நட்டம் ஏற்பட்டது. இம் முயற்சியில் ஏற்பட்ட பேரிழப்பைக் கண்டு எல்லாத் தரப்பினரும், அரசின் செயலைத் தாக்கிப் பேசினர். இங்கிலாந்திலுள்ள இந்திய அமைச்சரும் (Secretary of State for India) இந்திய இருப்புப் பாதைக்குழுவின் பொறுப் பற்ற செயலைக் கண்டித்தார். அப்பொழுது இந்தியாவின் வைசிராயாக இருந்த சர் ஜான் லாரன்ஸ் (Sir John Lawrance) என்பவரும் இந் நெறியற்ற செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். இதன் காரணமாக, இருப்புப் பாதைக் கம்பெனிகளுக்கு உதவித் தொகை அளிக்கும் முறை நீக்கப்பட்டது. பிரிட்டிஷ் இருப்புப் பாதைக் குழுக்களுக்குப் பதில் மாநிலங்களே இருப்புப் பாதைகளை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இத் துறையில் அமைக்கப் பட்டவை சிந்து சமவெளி இருப்புப் பாதை, வடக்குப் பஞ்சாப், ராஜபுதனம், மாளவம், வடக்கு வங்காளம் போன்ற இருப்புப் பாதைகள் குறிப்பிடத்தக்கவை. இதன் மொத்த நீளம் 2932 மைல்கள். இவை 1869-லிருந்து 1880-க்குள் அமைக்கப்பட்டவை. 1874ஆம் ஆண்டு ஏற்பட்ட கொடிய பஞ்சமும், இரண்டாவது ஆப்கானியப் போரும் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்தமையால் மாநிலங்கள் மேலும் இருப்புப் பாதைகள் அமைக்கத் தயங்கின. இங்கிலாந்தில் பொதுமக்களின் கருத்து இந்திய இருப்புப் பாதை அமைப்பதற்கு எதிராக இருந்தது. ஆனால் 1880-ல் சமர்பிக்கப்பட்ட பஞ்ச விசாரணைக் குழு இந்தியாவில் மேலும் 5,000 மைல் நீளமுள்ள இருப்புப் பாதை அமைக்கப்பட வேண்டு

மென்ற அவசியத்தை வலியுறுத்தியது. இதற்குப்பின், பல நிபந்தனைகளின்பேரில் தனியார்த் துறையில் புதிய ரயில்பாதைகள் அமைக்க இந்திய அரசு அனுமதி வழங்கியது. இவ் விருப்புப் பாதைக் குழுக்களுக்கு 3½% (சதவீதம்) வட்டி அளிக்க அரசு ஒப்புக் கொண்டது.

தனியார்த்துறை இருப்புப்பாதைகள்: நான்கு தனியார்த்துறை இருப்புப்பாதைக் குழுக்களான நீலகிரி (Nilgiri), டெல்லி, அம்பாலா, கல்கா, மத்திய வங்காளம் (Central Bengal), வடமேற்கு வங்காளம் (Bengal-North-Western) ஆகியவைகள் லாபகரமாகச் செயல்படவில்லை. இத் தருணத்தில் சுதேச அரசுகளையும் இருப்புப்பாதைகள் அமைக்கும்படி இந்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க ஹைதராபாத் நைசாம் தனது எல்லைக்குள் 330 மைல் நீளம் இருப்புப்பாதை அமைத்தார். இதற்கிடையில் பொருளாதார நிலை சிறிது அபிவிருத்தி அடைந்ததால், சில துணை இருப்புப் பாதைகளும் அமைக்கப்பட்டன (Branch lines). இத் துறையிலும் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படாத காரணத்தால் இருப்புப் பாதைகள் அமைப்போருக்கு வட்டிவிகிதத்தையும், லாபப் பங்கீட்டையும் அதிகப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இருப்புப் பாதைகளின் நிர்வாகம் (Railway Administration)

1854ஆம் ஆண்டு டல்ஹௌஸி காலத்தில் பொதுப்பணி இலாக்கா ஒன்று நிறுவப்பட்டது. இதைப்போன்று கிளை நிறுவனங்கள் சென்னை, பம்பாய் போன்ற இடங்களிலும் அமைக்கப்பட்டன. இந்திய அரசின் பொதுப்பணி இலாக்காவிற்கு லெப்டினன்ட் கர்னல் பேக்கர் (Lieutenant Colonel Baker) தலைவராக நியமிக்கப்பட்டார். 1879ஆம் ஆண்டு இந்திய இருப்புப்பாதை சுதேச அரசு இருப்புப்பாதை ஆகியன அனைத்தும் ஓர் இயக்குநரின் (Director) கீழ்க் கொண்டுவரப்பட்டன. இதற்கிடையில் பல இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டமையால் திரு. தாமஸ் ராபர்ட்சன் (Mr. Thomas Robertson) என்பவரின் பரிந்துரையின்படி தற்போது உள்ள இருப்புப்பாதை ஆட்சிக் குழு (Railway Board)வைப் போன்ற நிறுவனத்தை 1905ஆம் ஆண்டில் அமைத்தனர். இதில் ஓர் அவைத் தலைவரும் (Chairman) இரண்டு அங்கத்தினர்களும் பதவி வகித்தனர். இவ் இருப்புப் பாதை ஆட்சிக் குழு (Railway Board), வாணிகம் மற்றும் தொழில் இலாக்கா (Department of Commerce and Industry) ஆகியவற்றின் நேரடி நிர்வாகத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டது.

1905-க்குப் பிறகு ரெயில்வே நிர்வாக வளர்ச்சி

தனியார்த் துறையிலுள்ள இருப்புப்பாதைகளின் நிர்வாக முறைகளைக் கண்காணிக்கும் பொருட்டு 1905ஆம் ஆண்டில் ரயில்வே குழு (Railway Board) ஒன்று நிறுவப்பட்டது. 1914ஆம் ஆண்டிற்குப்பின், இருப்புப் பாதைகளின் லாபம் மிகவும் குறைந்துவிட்டது. எனவே, சர் வில்லியம் ஆக்வொர்த் என்பவரின் தலைமையின்கீழ் விசாரணைக் குழு ஒன்று நிறுவி, இருப்புப்பாதைகளின் வளர்ச்சிக்கான வழிவகைகளை ஆராயும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. இவ் விசாரணைக்குழு தனது அறிக்கையை 1921-ல் வெளியிட்டது.

1921ஆம் ஆண்டில் வெளியிட்ட ரயில்வே அறிக்கையின்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை 150 கோடி ரூபாய் ரெயில்வேயின் வளர்ச்சிக்காகச் செலவிடப்படவேண்டும். ரயில் பாதைகளை மாநிலங்கள் நிர்வகிக்கவேண்டும். செய்தித் தொடர்புத்துறை ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்படவேண்டும். பொது வரவுசெலவுத் திட்டத்திலிருந்து ரயில்வே வரவுசெலவுத் திட்டம் தனியாகப் பிரிக்கப்படவேண்டும்.

ரயில்வே நிர்வாகத்தை மாநிலங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற பரிந்துரையை இந்திய அரசு ஏற்றுக்கொள்ள வில்லை. ரயில்பாதைகள் தனியார்க் கம்பெனி நிர்வாகத்தில் இயங்குவதைப் பொதுமக்கள் விரும்பவில்லை. காரணம் இதன் மூலம் கிடைக்கும் லாபம் அனைத்தும் தனிப்பட்டவர்களுக்கே போய்ச் சேர்கின்றது. அதுவும் வெளிநாட்டவருக்குச் செல்லு கின்றது. மேலும் தனிப்பட்ட கம்பெனியார் நாட்டின் பொது நலத்தில் அக்கறை எதுவும் காட்டுவதில்லை. பொதுமக்களின் விருப்பத்திற்கிணங்க இந்திய அரசு, ரயில் பாதைகளை அரசுடைமை யாக்கியது. 1925ஆம் ஆண்டில் ரெயில்வே வரவு செலவுத் திட்டம் பொது வரவுசெலவுத் திட்டத்திலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டது.

இந்தியா சுதந்திரம் பெற்றபின், ரயில்பாதைகள் அனைத்தும் நாட்டுடமையாக்கப்பட்டன. தற்போது இந்தியாவில் ஒன்பது ரயில்பாதை மண்டலங்கள் உள்ளன. அவை முறையே (1) தெற்கு ரெயில்வே, சென்னை. (2) மத்திய ரெயில்வே, பம்பாய் (3) மேற்கு ரெயில்வே, பம்பாய். (4) வடக்கு ரயில்வே, தில்லி (5) வடகிழக்கு ரயில்வே, கொராக்பூர் (6) கிழக்கு ரயில்வே, கல்கத்தா (7) தென்கிழக்கு ரயில்வே, கல்கத்தா

(8) வடகிழக்கு எல்லைப்புற ரெயில்வே, கௌகத்தி (9) தெற்கு மத்திய ரயில்வே, செக்கந்தராபாத் என்பன. இந்திய ரெயில்வே இலாக்கா காபினட் அந்தஸ்து உள்ள அமைச்சரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது.

தபால், தந்தி நிறுவனங்கள் (Post and Telegraph)

நாட்டிற்குத் தபால், தந்தி நிறுவனங்கள் எண்ணற்ற பணிகளைச் செய்து வருகின்றன. 1912ஆம் ஆண்டுவரை இந்திய அரசின் வாணிகம் மற்றும் தொழில்துறையின் நிர்வாகத்தின்கீழ், தபால், தந்தி நிறுவனங்கள் தனித்தனியே இயங்கி வந்தன. இவற்றுக்குத் தலைமை இயக்குநர் (Director-General) ஒருவர் இருந்தார். ஆனால், 1914ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள இந்திய அமைச்சர் இவ்விருத்துறைகளையும் ஒன்றாக இணைத்துச் செயல்படச் செய்தார். இப் பணி 1914ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியில் தொடங்கி, 1930ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிவுற்றது. இப்பொழுது தபால், தந்தி இலாக்கா இந்திய அரசின் வாணிகம் மற்றும் தொழில் துறையின்கீழ் இயங்கி வருகின்றது. இதன் தலைவர், தலைமை இயக்குநராவார் (Director-General). தற்காலத்தில் இந்தியாவின் எல்லாப் பகுதிகளுக்கும் தபால், தந்தி தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தபால், தந்தியோடல்லாமல் தொலைபேசி வசதி, கம்பியில்லாத் தந்தி, ரேடியோ, ஆகாய விமானங்கள்மூலம் தபால் அனுப்புதல் போன்றவற்றின்மூலம் இத் துறை மக்களுக்குச் சேவை செய்து வருகின்றது.

சாலைகள் (Roads)

சாலைகள் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உயிர் நாடி போன்றவை. இந்தியாவில் இருப்புப் பாதைகள் அமைத்த பின் அவற்றை முக்கிய சாலைகளோடும், ஊர்களோடும் இணைக்க இணைப்புப் பாதைகள் அமைக்கப்பட்டன. 1920ஆம் ஆண்டு சாலைகளைப் பாதுகாக்கவும், அபிவிருத்தி செய்யவும் மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. தல தன்னாட்சி முறையினால் வசதியான சாலைகள் அமைத்துக்கொள்ள ஆங்காங்கு உள்ள மக்கள் விரும்பினர். நகரமன்றங்கள், மாநில அரசுகள் தங்களின் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள் பல அமைக்கத் தலைப்பட்டனர். மாண்டேகு-செம்ஸ்போர்டு (Montague-Chelmsford) சீர்திருத்தக் குறிப்பில், சாலைகள் அமைப்பதும், அவற்றைப் பாதுகாப்பதும் மாநிலங்களைச் சார்ந்தது என அதிகாரப் பிரிவினையில் சுட்டிக் காட்டப்பட்டது. அஸ்ஸாம் மாநிலச்

சாலைகளை மத்திய அரசு நேரடியாகக் கவனித்து வந்தது. பேருந்துகளின் போக்குவரத்து அதிகரிக்கவே சாலைகளின் நீளத்தையும், அகலத்தையும் அதிகரிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மாநிலங்கள் தனியே சாலைகளைப் பெருக்கவும், பராமரிக்கவும், இயலாமையால் மத்திய அரசிற்குப் பெரும்பொறுப்பு ஏற்பட்டுள்ளது.

சாலை அபிவிருத்திக் குழு ஒன்று (Road Development Committee) நியமிக்கப்பட்டது. இதன்செயல் திட்ட உறுப்பினர் 1930ஆம் ஆண்டு தில்லியில் கூடினர். இக் கூட்டத்தின் பயனாகப் போக்குவரத்து வாகனங்கள் உபயோகப்படுத்தும் ஒரு காலன் பெட்ரோலுக்கு இரண்டு அணா வரி விதிக்கப்பட்டது. இதற்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 'சாலை நிரந்தரக் குழு' ஒன்று நிறுவப்பட்டது. சாலை அபிவிருத்திக் குழு அவ்வப்போது கூடி, தோன்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வந்தது. இந்திய சுதந்திரத்திற்குப் பின் தேசிய அரசு, மாநில அரசுகளும் 5 ஆண்டு திட்டங்களின்மூலம் தேசிய நெடுஞ்சாலைகள், சாலைகள் ஆகிய வற்றை அபிவிருத்திசெய்து பராமரித்து வருகின்றன. மத்திய அரசு தேசிய நெடுஞ்சாலைகளை நாடு முழுவதிலும் அமைத்துப் பாதுகாக்கின்றது. மாநில அரசுகளும் தங்கள் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் சாலைகளை அமைத்திருக்கின்றன. தமிழ்நாடு அரசைப் பொறுத்த வரையில் எல்லாக் கிராமங்களோடு குக்கிராமங்கள் அனைத்தையும் சாலைகளால் இணைக்க பல கோடி ரூபாய்த் திட்டம் தீட்டி, அதை முறையோடு செயல்படுத்தி வருகின்றது.

நீர்வழிப் போக்குவரத்து (Water Transport)

பண்டைக் காலத்திலிருந்தே நதிப் போக்குவரத்து இந்தியாவில் வளர்ந்துள்ளது. பெரிய நகரங்கள் பல நதிக்கரை ஓரங்களில் தோன்றி வளமை பெற்றுள்ளன. கங்கை, பாகீரதி, பிரம்மபுத்திரா, சிந்து ஆகிய ஆறுகள் ஆண்டின் பெரும்பாலான மாதங்களில் கழிமுகத்திலிருந்து பல நூற்றுக் கணக்கான மைல்கள் தூரம்வரை போக்குவரத்துக்குப் பயன்படுகின்றன. மத்திய இந்தியாவிலுள்ள நர்மதை, தப்தி ஆகிய நதிகளில் முகத்துவாரப் பகுதிகளில் மாத்திரமே போக்குவரத்திற்கு வசதியாக அமைந்திருக்கின்றன. கிழக்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள ஆறுகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா ஆகியவற்றிலும் முகத்துவாரப் பகுதியிலிருந்து சிறிது தூரமே போக்குவரத்து நடைபெற வசதி உள்ளது.

1918ஆம் ஆண்டு தொழில்துறை ஆணைக்குழுவின் (Industrial Commission) பரிந்துரைகளின்படி இருப்புப் பாதைகளின் நெருக்கடியைத் தவிர்க்க நீர்வழிப் போக்குவரத்தை வலுப்படுத்த வேண்டுமென்று இந்திய அரசு விரும்பியது. கடல் போக்குவரத்தின் வசதியை உணர்ந்து, 1923ஆம் ஆண்டில் கடல் வாணிகக் குழு ஒன்று நிறுவப்பட்டது. இது கடல் வாணிகத்திற்கான வழிமுறைகளை அரசுக்கு எடுத்துரைத்தது. இந்தியர்களுக்குக் கப்பல் போக்குவரத்துத் துறையில் பயிற்சி அளிக்கவேண்டும் என்பது இக்குழுவின் பரிந்துரைகளில் ஒன்றாகும்.

உள்நாட்டு கால்வாய்ப் போக்குவரத்து (Canal Navigation)

கால்வாய்கள் இருவகைப்படும். ஒன்று நீர்வழிப் போக்குவரத்துக்கென அமைக்கப்பட்ட கால்வாய்கள். மற்றொன்று விவசாய வசதிக்கென வெட்டப்பட்டவை. ஆனால் இவை, படகுப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும். போக்குவரத்திற்கென அமைந்த கால்வாய்களில் கிருஷ்ணா நதியின் உப நதியிலிருந்து சென்னை நகரம் வரை செல்லும் பக்கிங்காம் கால்வாய் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இது கிருஷ்ணா நதி தீரத்திலிருந்து கடற்கரையோரமாய்த் தெற்கு நோக்கிச் சுமார் 262 மைல் தூரம் சென்று சென்னை நகருக்கருகில் கடலில் கலக்கின்றது.

வங்காளத்தில் கல்கத்தாவின் கிழக்குக் கால்வாய்களும், நாடியா ஆற்றுக் கால்வாய்களும் முக்கியமானவை. இவ் விரு கால்வாய்களும் சுமார் 735 மைல்களுக்குப் போக்குவரத்து வசதியை அளிக்கின்றன.

நீர்ப்பாசனத்திற்கென ஏற்பட்ட கால்வாய்கள்

நீர்பாசனத்திற்கென அமைக்கப்பட்டுப் போக்குவரத்திற்கு உபயோகப்படுத்தப்படும் கால்வாய்களில் ஆந்திர மாநிலத்தில் அமைந்துள்ள கோதாவரி, கிருஷ்ணா கால்வாய்களும், கர்னூல்-கடப்பா கால்வாய்களும் முக்கியமானவையாகும். ஒரிஸா மாநிலத்திலுள்ள ஒரிஸா கால்வாய், பீகாரிலுள்ள மிட்னாப்பூர் கால்வாய், ஹிஸ்லிக் கால்வாய் ஆகியனவும் இவ்வினத்தைச் சேர்ந்தவையே. மத்திய மாகாணங்களில் கீழ்க்கங்கைக் கால்வாயும் (Lower Ganges canal), ஆக்ரா கால்வாயும் (Agra canal) முக்கியமானவை. மேற்கு யமுனைப் பகுதியும், சர்கின்ட் நீர்ப்பாசன நிலைகளும் பஞ்சாபில் நீர்வழிப் போக்குவரத்திற்குப் பயன்படுகின்றன

ரயில் பாதைகள் அமைக்கப்பட்டபின், உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து அதிகமாகப் புறக்கணிக்கப்பட்டது. காவேரி, கோதாவரி அணைக்கட்டுகளை நிறுவிய சர் ஆர்தர் காட்டன் (Sir Arthar Cotton) என்பவர், உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்திற்கென அழகிய திட்டம் ஒன்றைத் தீட்டி, அதை 1872ஆம் ஆண்டு பாராளுமன்றக் குழுவிடம் சமர்ப்பித்தார். ரயில் பாதைகளினால் ஆகும் செலவைவிட மூன்றில் ஒரு பங்கே கால்வாய்ப் போக்குவரத்திற்குச் செலவழியும் என்பதைத் தனது அறிக்கையில் எடுத்துக் காட்டி இருந்தார். ஆனால், இருப்புப் பாதைகளுக்குச் சொந்தக்காரர்களான ஆங்கில முதலாளிகள் இதில் தலையிட்டு இந்திய அரசு இத் திட்டத்தை ஏற்காதபடி செய்துவிட்டனர்.

நீர்ப்பாசனம் (Irrigation)

இந்தியாவில் 80 சதவீத மக்கள் வேளாண்மையையே தங்கள் முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவ் வேளாண்மை, பருவ மழையையே அதிகம் சார்ந்திருக்கிறது. இப் பருவ மழையும் அடிக்கடி இந்தியாவில் பொய்த்துப் போவதுண்டு. அதனால் அடிக்கடி நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. இந்த நிலையை உணர்ந்து, இந்தியாவை ஆண்ட பேரரசர்களும், சிற்றரசர்களும் நீண்ட நெடுங்காலமாக நீர்ப்பாசன வசதிகள் அமைத்து வேளாண்மையைக் கண்காணித்து வந்திருக்கின்றனர். எனவே, வேளாண்மைத் தொழிலுக்கு வசதியாக நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்துவது அரசின் முக்கியக் கடமைகளில் ஒன்றென உணரப்பட்டது.

கிழக்கிந்தியக் கம்பெனியாரின் நிர்வாகத்தில் நீர்ப்பாசன வசதிகள் மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுப்பது லாபகரமானது என்பதை அறிந்திருந்தனர். ஏனெனில், இதில் தொடக்க காலத்திலிருந்தே போட்ட முதலுக்கு வருவாய் வந்து கொண்டிருக்கிறது. 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டதன் காரணமாக, நீர்ப் போக்குவரத்துத் துறையில் அரசின் கவனக்குறைவு ஏற்பட்டது. இரு தனியார்த் துறைகளைச் சார்ந்த கம்பெனிகள், இப் பணியில் ஈடுபட்டன. ஒன்று சென்னை நீர்ப்பாசன கம்பெனி (Madras Irrigation Company), துங்கபத்திரா நதி நீர்ப்பாசனத் திட்டத்தையும், கிழக்கு இந்திய நீர்ப்பாசனக் கால்வாய்க் கம்பெனி (East India Irrigation and Canal Company) ஒரிஸா கால்வாய்த் திட்டத்தையும் நிறைவேற்ற முயன்றன. ஆனால் பொருளாதார இக்கட்டால் இக் கம்பெனிகள் எதிர்பார்த்த அளவுக்குத் தாங்கள் ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்ற இயலவில்லை. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அடிக்கடி

இந்தியாவில் பஞ்சம் ஏற்பட்டமையால், நீர்ப்பாசன முக்கியத்துவத்தை அரசு உணர்ந்தது. இத் துறையில் தீவிரமாகச் செயல்படத் தொடங்கியது. 1880ஆம் ஆண்டு ஏற்படுத்திய பஞ்ச விசாரணைக் குழு, நீர்ப்பாசன வசதிக்கு அரசு முதலிடம் அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தியது.

1901ஆம் ஆண்டு கர்சான் பிரபு நீர்ப்பாசன விசாரணைக் குழு (Irrigation Commission) ஒன்றை அமைத்தார். இது, தனது அறிக்கையை 1903ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது. இக் குழு 20 ஆண்டுத் திட்டம் ஒன்றைத் தனது பரிந்துரையில் குறிப்பிட்டிருந்தது. அதன்படி 65 லட்சம் ஏக்கர் நிலப் பரப்பிற்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தவேண்டும் எனவும் இதற்கு மூன்று கோடிப் பவுன் செலவாகும் எனவும் குறிப்பிட்டிருந்தது. இக் குழுவின் அறிக்கையே இந்திய அரசின் பஞ்ச நிவாரணக் கொள்கையின் ஆதாரமாக அமைந்தது. 1908ஆம் ஆண்டிலிருந்து வேளாண்மை, மற்றும் நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட கணக்கெடுப்புச் சேகரிக்கப்பட்டு வருகிறது. 1929–1930ஆம் ஆண்டுக் குறிப்புகளின்படி 10 லட்சம் ஏக்கர் அதிகப்படியான நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி அளிக்கப்பட்டது எனத் தெரிய வருகின்றது.

நீர்ப்பாசனச் சீர்திருத்தக் குழுவின் அறிக்கைக்குப் பின், மாநிலங்களும், இத் துறையில் தீவிரப் பங்கு கொண்டன. நீர்ப்பாசன முறையில பலவகை உண்டு. அவை, முறையே கால்வாய், ஏரி, கிணறு, குழாய்க் கிணறுகள், அணைக்கட்டுத் தேக்கம் போன்றவைகளாகும். சிந்து நதியில் அமைந்த சுக்கூர் அணை (1932), பஞ்சாபிலுள்ள சட்லஜ் நதி அணைத் திட்டம் (1933), மத்திய மாகாணங்களிலுள்ள சாரதா நதி நீர்ப்பாசனத் திட்டம், காவேரி ஆற்றில் மேட்டூர் அணைத் திட்டம் (1934), நைசாம் சாகர் திட்டம் (1934), தக்காணத்திலுள்ள பந்தாரதாரா அணை, பம்பாயிலுள்ள லாய்ட் அணை போன்றவை சமீப காலத்தில் தோன்றிய பாசனத் திட்டங்களாகும். இந்தியா சுதந்திரம் பெற்றபின் பக்ரா-நங்கல், கோசி, துங்கபத்திரா, குந்தா, மலம்புழா போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்தியாவில் வேளாண்மையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு ராயல் வேளாண்மை விசாரணைக் குழு (Royal Commission on Agriculture) ஒன்று நியமிக்கப்பட்டது. இக் குழுவின் சிபாரிசின்படி வேளாண்மைத் துறையும், நீர்ப்பாசனத் துறையும், ஒன்றுக்கொன்று இணைந்தே பணியாற்ற வேண்டும். அவ்வாறு இயங்கினுல் விவசாயிகள் தங்களுடைய பிரச்சினை

களுக்கு அதிகாரிகள்மூலம் தீர்வு காண்பது எளிது எனத் தெரிவித்துள்ளனர். மத்திய வேளாண்மை நீர்ப்பாசனக் குழு ஒன்று நியமிக்க வேண்டுமென்றும், இக் குழு மாநில வேளாண்மைத் தொடர்பான செய்திகளைச் சேகரித்து வழங்கவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் நீர்ப்பாசன ஆராய்ச்சிக் கழகம் ஒன்று நிறுவ வேண்டுமென்றும் இக் குழு தெரிவித்துள்ளது.

3. 1858-லிருந்து அரசியல் அமைப்பின் வளர்ச்சியும் விடுதலை இயக்கமும்

1. 1861ஆம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டம் (The Indian Council Act, 1861)

1861ஆம் ஆண்டு கவுன்சில் சட்டம் ஏற்படக் காரணங்கள்

1861 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்திய கவுன்சில் சட்டம் இந்திய சட்டசபை வரலாற்றில் ஒரு பெரும் மாற்றத்தை உண்டு பண்ணியது. 1853-ல் ஏற்பட்ட சட்டத்திலுள்ள குறைகளை நீக்குவதற்கே 1861ஆம் ஆண்டுச் சட்டம் ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. சென்னை, பம்பாய் ஆகிய இரு மாநிலங்களில் இயங்கி வந்த சட்டசபைகளை நீக்கியதன் காரணமாக, மத்திய மாநில அரசுகளுக்குள் சிக்கல் பல தோன்றின. வருமான வரி விதிப்பின் காரணமாகச் சென்னை மாநிலத்திற்கும், மத்திய அரசிற்கும் தகராறு ஏற்பட்டது. அத்துடன் 1857-ல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகம், 1855—57-ல் ஏற்பட்ட சாந்தவர்கள் கலகம் (Sandar Rebellion), 1860-ல் ஏற்பட்ட சாயத் தோட்ட தொழிலாளர்கள் கலகம் (Indigo riot) ஆகியவைகளாலும், நிர்வாகத் துறையில் இந்தியர்களுக்கும், ஆங்கிலேயர்களுக்கும் ஏற்பட்டிருந்த மனக்கசப்பாலும் இந்தியாவில் பதட்டநிலை ஒன்று உருவாகி இருந்தது. இத்தகைய நிலை நீடித்தால் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆபத்து நேரக்கூடும் என்று இங்கிலாந்து அரசு உணர்ந்தது. இத்தகைய ஆபத்தைத் தவிர்ப்பதற்கே 1861ஆம் ஆண்டு கவுன்சில் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இந்தியர்களைச் சட்டசபைகளில் அனுமதிக்காதது ஒரு பெருங் குறையாக இருந்தது. இதைப் பல பொறுப்புள்ள இந்தியர்கள் சுட்டிக் காட்டினர். சர் சையத் அகமத்கான் என்ற முகமதிய தலைவர் தாம் எழுதிய நூலில் முஸ்லீம்களைச் சட்டசபையில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளாதது சிப்பாய்க் கலகத்

திற்கு ஒரு காரணமாக அமைந்தது என்று கூறியுள்ளார். இக் கருத்தைச் சர் பார்டில் பிரீரி (Sir Bartle Frere) என்ற ஐரோப் பியரும் ஆதரித்துள்ளார். இச் சூழ்நிலைகளை உணர்ந்த இந்தியா அமைச்சர் சர் சார்லஸ் உட் (Sir Charles Wood) என்பவர் இந்தி யர்களின் பகைமையைப் போக்கி, அவர்களின் ஒத்துழைப்பைப் பெறும்பொருட்டு 1861ஆம் ஆண்டு கவுன்சில் சட்டத்தை உரு வாக்கி, அதை இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி வைத்தார்.

அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழு (Viceroy's Council)

இச் சட்டத்தின்படி அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழுவில் சாதாரண அங்கத்தினர்களின் எண்ணிக்கை 5 ஆக உயர்த்தப் பட்டது. சட்டம் இயற்றுவதற்கென 6-லிருந்து 12 அங்கத்தினர் களை அரசப் பிரதிநிதி தேர்ந்தெடுக்க உரிமை வழங்கப்பட்டது. இவர்களின் பணிக்காலம் இரண்டாண்டுகள். இவர்களில் பாதிக்குக் குறையாமல் அரசாங்க அதிகாரிகள் அல்லாதவர்களாக (non officials) இருந்தனர். இந் நிர்வாக சபை கூடும் இடங்களில் இருந்த படைத் தலைவர், ஆளுநர் அல்லது துணை ஆளுநர் ஆகியோர் தனி அழைப்பின்பேரில் கலந்து கொள்வர். சில குறிப் பிட்ட துறைகள் சம்பந்தப்பட்ட சட்டங்களை அரசப் பிரதிநிதியின் முன் அனுமதியின்றிச் சட்டசபையில் நிறைவேற்றக் கூடாது. அவரது இசைவின்றி எத்தீர்மானமும் சட்டமாக்கப்படாது. இதைத் தவிர இந்திய அமைச்சர், மன்னர் ஆகியவர்களின் அனுமதியும் இசைவும் சிலவற்றிற்குத் தேவைப்பட்டன.

அரசப் பிரதிநிதியின் நிர்வாக சபை இந்திய அரசின் நிர்வாகத் திலுள்ள பகுதிகளுக்கும், அவைகளிலுள்ள நீதிமன்றங்களுக்கும், மத்திய அரசுடன் நட்புறவு கொண்டுள்ள சுதேச அரசுகளுக்கும் தேவையான சட்டங்களை உருவாக்குவதற்கும், ஏற்கெனவே உள்ள சட்டங்களைத் திருத்தி அமைப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட் டிருந்தது. அவசரக் காலங்களில் அரசப் பிரதிநிதி நிர்வாக சபை யின் உதவியின்றி, சில மேலாணைகளைக் (ordinances) கொண்டுவர லாம். ஆனால், இத்தகைய ஆணைகள் ஆறுமாதங்களுக்கு மேல் அமலில் இருக்க இயலாது. 1833ஆம் ஆண்டுச் சட்டத்தின் படி அகற்றப்பட்ட சென்னை, பம்பாய் சட்டசபைகள் மீண்டும் செயல்பட அனுமதிக்கப்பட்டன. இம் மாநிலங்களில் சட்டங்கள் இயற்றுவதற்கு வசதியாக 4 பேருக்குக் குறையாமலும் 8 பேருக்கு மிகாமலும் அங்கத்தினர்களை நியமிக்க அரசப் பிரதிநிதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாநிலத்திலும்

தலைமை வழக்கறிஞர் ஒருவர் நியமிக்கப்பட்டார். இவர் சட்ட மன்றத்தில் சட்டங்கள் இயற்றுவதற்கு உதவியாக இருந்தார்.

மாநிலச் சட்டசபைகளில் இயற்றப்படும் சட்டங்கள அரசப் பிரதிநிதியின் ஒப்புதலைப் பெறவேண்டும். இதன்பின் இந்தியா அமைச்சரின் ஒப்புதலும் இவற்றுக்குக் கிடைக்க வேண்டும். இங்கிலாந்து மன்னர் விரும்பினால் இத்தகைய சட்டங்களைச் செயல் படாமல் செய்ய முடியும். அரசப் பிரதிநிதியின் நிர்வாகசபை நாடு முழுவதற்கும் சட்டம் இயற்ற அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. வங்காளம், வடமேற்கு எல்லைப்புற மாகாணங்கள், பஞ்சாப் ஆகிய மாநிலங்களுக்குச் சட்டசபைகள் அமைக்க அரசப் பிரதிநிதிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

நாட்டின் பொதுக்கடன், நிதி, நாணயம், தந்தி, தபால் துறைகள், சமயம், பதிப்புரிமை மற்றும் உரிமைப்பதிவுகள் முதலிய துறைகள் மத்திய அரசின் நிர்வாகத்தில் இருந்தன. புதிய மாநிலங்களை உருவாக்கும் அதிகாரம் அரசப் பிரதிநிதிக்கு அளிக்கப்பட்டிருந்தது. மாநிலங்களின் அதிகாரங்கள், எல்லைகள் முதலியவற்றைக் குறைக்கவும், கூட்டவும், மாற்றி அமைக்கவும் அரசப் பிரதிநிதி அதிகாரம் பெற்றிருந்தார். மாநிலங்களின் துணை ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரமும் இவருக்கு உண்டு.

1861ஆம் ஆண்டுச் சட்டம் இந்தியர்களுக்குத் தங்கள் நாட்டின் நிர்வாகத்தில் பங்குகொள்ளும் வாய்ப்பை அளித்தது. ஆனால் இந்த வாய்ப்புச் சட்டசபைகளில் உருவாக்கப்படும் சட்டத்திற்கு ஆலோசனை கூறுவதற்கே பயன்பட்டது. இவ்வாறு ஏற்படுத்தப் பட்ட சட்டங்கள் உண்மையில் அரசாங்க ஆணைகளே. இந்த ஆணைகளுக்கும் அரசாங்க ஆணைகளுக்கும் சிறிது வேற்றுமை இருந்தது. அரசாங்க ஆணைகள் அதிகாரிகளால் பிறப்பிக்கப்பட்டு, நிர்வாக அதிகாரிகளால் செயல்படுத்தப்பட்டன. சட்டசபைக் கட்டளைகள் பிரதிநிதிகளால் சட்டசபையில் விவாதிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. இச் சட்டங்களை நீதிமன்றங்கள் செயல் படுத்தி வந்தன.

1853ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட சட்டம், பாராளுமன்ற கூறுகளைக் கொண்ட சட்டசபையை நிறுவ வகை செய்திருந்தது. இதன்மூலம் தீர்மானங்களைப்பற்றிய கேள்விகள் கேட்டு, வாதிட்டு அதன்பின் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. வரவுசெலவுத் திட்டங்களும் வாதிடப்பட்ட பின்பே செயல்படுத்தப்பட்டு வந்தன. இத்தகைய பாராளுமன்ற முறை இந்திய சட்டசபை

வளர்ச்சியில் ஒரு முக்கியக் கட்டமாக அமைந்திருந்தது. ஆனால் 1861ஆம் ஆண்டுச் சட்டம் இத்தகைய சலுகைகளை நீக்கிச் சட்ட சபை வளர்ச்சிக்குத் தடைவிதித்தது எனலாம். சட்டசபை வளர்ச்சியில் இஃது ஒரு படிக்கல்லாக இருந்தபோதிலும் இச்சட்டம் இந்தியர்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்தது. எனவே, இந்தியர்கள் தங்கள் உரிமைகளை வலியுறுத்த 1885-ல் இந்தியத் தேசிய காங்கிரசை ஆரம்பித்தனர்.

இந்தியாவிற்குப் பாராளுமன்ற ஆட்சிமுறை உகந்தது அல்ல என்று இந்திய அமைச்சர்கள் ஒருவர் பின் ஒருவராகச் சுமார் 50 ஆண்டுகள்வரை கூறிவந்தனர். நெருக்கடிக் கால மேலாணைகளை (Ordinances) ஆதாரமாக வைத்துத் தலைமை ஆளுநர்களும், அரசப் பிரதிநிதிகளும் இந்தியாவில் ஏற்பட்ட கிளர்ச்சிகளை அடக்கி இந்தியர்களை அடிமைகளாகவே நடத்தி வந்திருக்கின்றனர். இத்தகைய கட்டளைகளை ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறும்வரை உபயோகித்து வந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

1892ஆம் ஆண்டு கவுன்சில் சட்டம் (Indian Council's Act of 1892)

1892ஆம் ஆண்டுச் சட்டம் ஏற்படக் காரணம்: 1861ஆம் ஆண்டு கவுன்சில் சட்டம் ஏற்பட்ட 30 ஆண்டுகள்வரை இந்திய அரசியல் துறையில் பிரிட்டிஷ் ஆட்சியினர் எவ்வித மாற்றமும் செய்யவில்லை. இருப்பினும் மக்களிடம் தேசிய உணர்வு துளிர் விட்டு வளர்ந்து வந்தது. இவ் வுணர்வின் பிரதிபலிப்பாக 1885-ல் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கம் தோன்றியது. இதை ஆரம்பித்தவர் ஏ. ஓ. ஹியூம் (A. O. Hume) என்பவர். ஆங்கிலக் கல்வி பயின்ற இந்திய இளைஞர்கள் இந்திய நிர்வாகத்துறையில் பங்குகொள்ள அதிக ஆர்வம் காட்டிவந்தனர். 1861ஆம் ஆண்டுச் சட்டம் இந்தியர்களின் நியாயமான ஆசைகளைப் பூர்த்தி செய்ய வில்லை. எனவே, இந்தியர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். சட்டசபையில் இடம்பெற்ற இந்தியர்கள் அனைவரும் ஆளுநராலும், அரசப் பிரதிநிதியாலும் நியமிக்கப்பட்டவர்கள். இவர்களில் ஒரு சிலரைத்தவிர, எஞ்சியவர்கள் சட்டசபைகளுக்குப் பெயரளவில் சென்றுவந்தனர். எனவே, இந்தியர்களுக்குச் சட்ட சபைகளிலும், நிர்வாகத் துறையிலும் அதிக வாய்ப்புகள் அளிக்க வேண்டுமென்று காங்கிரஸ் வற்புறுத்தி வந்தது.

காங்கிரஸ் இயக்கம் தோன்றிய காலத்திலிருந்து சட்ட சபைகளை விரிவுபடுத்த வேண்டுமென்றும், தேர்வு முறைகளைப்

பரவலாக்க வேண்டுமென்றும் அரசாங்கத்தை இக் கட்சியினர் வலியுறுத்தி வந்தனர். இந் நிலையை உணர்ந்த டஃப்ரின் பிரபு (Lord Dufferin) ஆய்வுக் குழு ஒன்றை அமைத்துச் சட்டசபைகளை விரிவுபடுத்தும் வழிமுறைகளைக் கண்டறிய வகை செய்தார். இக் குழுவின் கண்டுபிடிப்புகளை வகைப்படுத்தி இந்தியர்களுக்குச் சட்டசபைகளில் அதிகப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற தனது பரிந்துரைகளை இங்கிலாந்திற்கு அனுப்பி வைத்தார். இவருக்குப்பின் அரசப் பிரதிநிதியாக வந்த கிராஸ் பிரபு (Lord Cross), டஃப்பிரின் பிரபுவின் பரிந்துரைகளை ஒதுக்கி வைத்தார்.

திரு. பிராட்லா (Mr. Bradlaugh) என்பவர், டஃப்பிரின் பிரபு கொண்டுவந்த திட்டத்தை இங்கிலாந்துப் பாராளுமன்ற பொதுமக்கள் சபையில் 1890-ல் சமர்ப்பித்தார். அதே ஆண்டு இத் திட்டம் பிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பட்டது. மறுமுறையும் இத் திட்டம் 1892-ல் பொதுமக்கள் சபையில் சட்டமாக நிறை வேற்றப்பட்டது. இச் சட்டத்தை உருவாக்குவதில் முக்கியப் பங்கு கொண்டவர் ஜார்ஜ் நதானியல் கர்சான் (George Nathaniel Curzon) என்பவர். இவர் அப்பொழுது இந்திய அமைச்சராக இருந்து வந்தார்.

1892ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அரசப் பிரதிநிதியி னுடைய சபையின் எண்ணிக்கை 10க்குக் குறையாமலும் 16க்கு மிகாமலும் இருக்க வேண்டுமென்று வகை செய்யப்பட்டது. சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களின் சட்டசபையில் 8 பேருக்குக் குறையாமலும் 20 பேருக்கு மிகையாகாமலும் இருக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. இம்முறையில் கூடுதலாக வந்த உறுப்பினருள் ஒரு பகுதியினர் தேர்ந்தெடுக்கப்படவேண்டு மென்று நிர்ணயிக்கப்பட்டது.

வங்காளம், வடமேற்கு எல்லைப்புற மாகாணங்கள், அயோத்தி ஆகிய மாநிலச் சட்டசபைகளுக்கு அங்கத்தினர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் அதிகாரம் அரசப் பிரதிநிதிக்கு வழங்கப்பட்டிருந்தது. வங்காளத்திற்கு 20 அங்கத்தினர்களும், ஏனைய மாநிலங்களுக்கு 15 அங்கத்தினர்களுமாகத் தீர்மானிக்கப் பட்டது. வரவுசெலவுத் திட்டத்தை விவாதிக்கவும், கேள்விகள் கேட்கவும் உறுப்பினர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் துணைக்கேள்விகள் கேட்க அனுமதியில்லை. அங்கத்தினர்கள் கேள்விகளை 6 நாட்களுக்கு முன்பே எழுதிக்கொடுக்க வேண்டும். அவற்றுக்குப் பதிலளிப்பது அரசப் பிரதிநிதியின் விருப்பத்தைப் பொறுத்தது. நிதி சம்பந்தப்பட்ட புதிய தீர்மானங்கள் எதையும் அங்கத்தினர்கள் கொண்டுவர அனுமதிக்கப்படவில்லை.

1892ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி, அரசப் பிரதிநிதி நிர்வாகக் குழுவில் இருந்த 16 கூடுதலான அங்கத்தினர்களில் 10 பேர்களுக்கு மேற்படாமல் அரசாங்க அதிகாரிகள் அல்லாதவர்களிடமிருந்து நியமிக்கப்பட்டனர் அரசாங்க அதிகாரிகளின் எண்ணிக்கை நிர்வாகக் குழுவில் கூடுதலாக இருக்கவே இவ்வாறு செய்யப்பட்டது. இந்த 10 பேர்களில் நால்வர் மாநில நிர்வாகக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களை அரசாங்க அதிகாரிகள் அல்லாதார் சிபாரிசு செய்ய வேண்டும். ஒருவர் கல்கத்தா வணிகக் குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மீதியுள்ள 5 அரசாங்க அதிகாரிகள் அல்லாதாரை அரசப் பிரதிநிதி (Viceroy) நியமிப்பார்.

மாநிலச் சட்டசபைகளுக்கு 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். இவர்களைப் பெரிய நகரங்கள், நகராண்மைக் கழகங்கள் மாவட்டக் கழகங்கள், பெருநிலக் கிழார்கள், வணிகக் கழகங்கள், பல்கலைக் கழகங்கள் போன்றவை தேர்ந்தெடுத்து அனுப்பி வந்தன.

இச் சட்டத்தின் செயல்முறைகள் மக்களுக்கு நன்மை பயப்பனவாக அமையவில்லை. மேலும் மத்திய, மாநில அரசுகள் இச் சட்டத்தைச் சீரிய முறையில் செயல்படுத்தவில்லை என்று காங்கிரஸ் இயக்கம் 1894-ல் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியது. 1897ஆம் ஆண்டுவரை பஞ்சாப் மாநிலத்திற்குச் சட்டசபை நிறுவ அனுமதி வழங்கப்படவில்லை. இச் சட்டசபை செயல்படத் தொடங்கிய பின்பும் அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டுவந்தார்களே தவிர ,தேர்ந்தெடுக்கப்படவில்லை இச் சட்டத்தால் இந்திய மக்கள் மன நிறைவு பெறாவிடினும், கிடைத்த வாய்ப்பை நல்ல வகையில் பயன்படுத்த ஆர்வங்கொண்டிருந்தனர். இந்தியத் தலைவர்களான கோபாலகிருஷ்ண கோகலே, சுரேந்திரநாத் பானர்ஜி, ராஜ் பிகாரி கோஷ், அசுடோஷ் முகர்ஜி, பிரோஸ்ஷா மேத்தா, பி. ஆநந்தாச்சார்லூ, மதுசூதன் தாஸ், ஆர். எம். சயானி, ஜி. ஆர். எம். சிட்னிவிஸ், பி. கே. போஸ், எஸ். பில்கிராமி, பிஷ்ஷாம்பர் நாத் போன்றவர்கள் சட்டசபைகளில் தங்களின் அறிவின் திறத்தையும் அரசியல் ஞானத்தையும் வெளிப்படுத்தினர். இவர்கள் அனைவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நிர்வாகக் குழுவில் அரசாங்க அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால், இந்திய அங்கத்தினர்கள் பிரிட்டிஷ் அரசின் கொள்கைகளை மாற்ற இயலவில்லை. ஆனால் சூழ்நிலைகளைக்

கூர்ந்து கவனித்தால் இந்தியா, பழைய இந்தியாவாக இல்லை என்றும், சுதேச உணர்வால் எழுச்சி பெற்ற இந்தியா உருவாகி இருந்தது என்றும் உணரலாம். 1892ஆம் ஆண்டுச் சட்டத்தில் இந்தியா விரும்பிய சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்திருந்தால் காங்கிரஸ் இயக்கத்தின் ஒத்துழைப்பை ஆங்கிலேயர்கள் அடைந்திருப்பர் என்று சர் வாலண்டைன் சிரோல் (Sir Valentine Chirol) கூறியுள்ளார். எனினும், பிற்கால இந்திய சட்டசபை வளர்ச்சிக்கு இச் சட்டம் வழிவகுத்தது எனலாம்.

இச் சட்டத்தின் குறைகள் : சட்டசபைகளில் அங்கத்தினர்கள் துணைக் கேள்விகள் கேட்கமுடியாது. தேர்வு முறைகள் எல்லா இடங்களிலும் ஒரே சீராக நடைபெறவில்லை. ஒரு சில வகுப்பினர்களுக்குக் கூடுதலான பிரதிநிதித்துவமும் மற்றவர்களுக்குக் குறைவாகவும் வழங்கப்பட்டிருந்தது. அரசாங்க அதிகாரிகளே அதிகமான இடத்தைப் பெற்றிருந்தனர். அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழுவில் பஞ்சாப் மாநிலத்திற்கு இடமளிக்கப்படவில்லை.

மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் (Minto Morley Reforms)

மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் ஏற்படக் காரணம் : கர்சான் பிரபுவின் நிர்வாகத்தில் (1905) வங்காளப் பரிவினையால் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களை அடக்க அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க நேர்ந்தது. நாட்டில் பத்திரிகைகளின் உரிமைகள் பறிக்கப்பட்டன. பத்திரிகைகள் ரூபாய் 500-ல் இருந்து 10,000 வரை ஜாமீன் தொகை கட்ட உத்தரவிடப்பட்டது. பொதுக் கூட்டங்கள் நடைபெறத் தடைகள் விதிக்கப்பட்டன. புரட்சிக்காரர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டன. வெடி மருந்துகள் தயாரிப்பது தடை செய்யப்பட்டது. இருப்பினும், அரசாங்க நடவடிக்கைகளால் நாட்டில் ஏற்பட்டிருந்த கலவரத்தை அடக்க முடியவில்லை. இங்கிலாந்து நாட்டுப் பொருள்களை மக்கள் வாங்க மறுத்தனர். சுதேசிப் பொருள்கள் ஆதரிக்கப்பட்டன. புரட்சிக்காரர்களால் ஆங்கில அதிகாரிகள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். தலைமை ஆளுநர் மிண்டோ பிரபுவையும் அவரது மனைவியையும் அலகாபாத் நகரில் கொலை செய்ய முயற்சிகள் நடந்தன. பாலகங்காதர திலகர் கைதியாக்கப்பட்டு ஆறுஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டார். இச் சிறைத் தண்டனையைப் பர்மாவிலுள்ள மாண்டலே சிறையில் கழிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. அரசாங்க நடவடிக்கைகளால் நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பத்திற்குத்

தீர்வு காணமுடியாது என உணரப்பட்டது. எனவே குழப்பங்களுக்கான காரணங்களை அறிந்து ஆவன செய்யவேண்டுமென அரசு தீர்மானித்தது.

1905-ல் ஆசிய நாடுகளில் ஒன்றான ஜப்பான், ஐரோப்பிய நாடான ரஷ்யாவைப் போரில் தோற்கடித்த நிகழ்ச்சியினால் இந்தியத் தேசிய உணர்வுக்கு வேகமும் விறுவிறுப்பும் தோன்றியது. 1907-ல் இந்திய தேசிய காங்கிரஸ், தீவிரவாதிகள், மிதவாதிகள் என்று இரு பிரிவுகளாகப் பிரிந்தது. இச் சமயத்தில் மிதவாதிகளின் பலம் ஓங்கி இருந்தது. மிதவாதிகளின் தலைவர்களான கோபால கிருஷ்ண கோகலே, சர். பிரோஸ்ஷா மேத்தா போன்றவர்கள் பொறுப்பாட்சியுடன் கூடிய குடியேற்ற நாட்டு அந்தஸ்தே இந்தியாவின் குறிக்கோள் என்று பிரச்சாரம் செய்து வந்தனர். கம்பெனி நிர்வாகத்திலிருந்து இங்கிலாந்தின் நேர் ஆட்சியின்கீழ் இந்தியா கொண்டுவரப்பட்ட 50ஆவது ஆண்டு விழாவில் பேரரசர் ஏழாவது எட்வர்டு (Edward VII) இந்தியாவிற்குப் புதிய அரசியல் சட்டம் ஒன்று விரைவில் வெளியிடப்பட இருக்கிறது என்று கூறினார். முற்போக்குக் கொள்கையுடைய லிபரல் கட்சி, இங்கிலாந்தில் அமைச்சரவை அமைத்தது. இச் சமயத்தில் மார்லி (Morley) என்பவர், இந்தியா அமைச்சரானார். இவரது முயற்சியால் மின்டோ மார்லி சீர்திருத்தங்கள் (Minto Morley Reforms) 1909-ல் சட்டமாக வெளியிடப்பட்டன. மின்டோ என்பவர், அப்பொழுது இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்தார்.

அரசப் பிரதிநிதியின் நிர்வாக சபை: மின்டோ மார்லி சீர்திருத்தச் சட்டத்தின்படி அரசப் பிரதிநிதியின் நிர்வாகக் குழுவில் இந்தியருக்கென ஓர் இடம் ஒதுக்கப்பட்டது. இவ்விடத்திற்குச் சத்தியேந்திர சின்ஹா (Satyendra Prasanna Sinha) என்பவரை நியமித்தனர். இவர் பிற்காலத்தில் சின்ஹா பிரபு (Lord Sinha) என்று அழைக்கப்பட்டார். இவர் ரைப்பூரைச் சார்ந்தவர். சென்னை, பம்பாய் ஆளுநரின் நிர்வாகக் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்காக உயர்த்தப்பட்டது.

பேரரசின் சட்டசபை (Imperial Legislative Council) அங்கத்தினர்களின் எண்ணிக்கை 21-லிருந்து 60 ஆக உயர்த்தப் பட்டது. இவர்களில் 33 பேர் நியமன உறுப்பினர்கள். 27 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்னை, வங்காளம், ஐக்கிய மாகாணங்கள், பம்பாய், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் 50 இடங்களும், பஞ்சாப், பர்மா, அஸ்ஸாம் மாநிலங்களில் 30

இடங்களுமாக உயர்த்தப்பட்டன. பேரரசின் சட்டசபையில் அரசாங்க அதிகாரிகள் (Government Officials) பெரும்பான்மையினராக இருக்க வேண்டுமென மார்லி பிரபு விரும்பினர்.

மாநிலச் சட்டசபைகளில் அரசாங்க அதிகாரிகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. அரசாங்க அதிகாரிகள் அல்லாதவர்கள் (Non-Officials) அதிகமாக இருந்தனர். இவர்களில் சிலரை ஆளுநர் நியமித்து வந்தார். இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளையே ஆதரிப்பர். இதன்மூலம் அரசாங்க அதிகாரிகளாலும், ஆளுநரால் நியமிக்கப்பட்டவர்களாலும் அரசாங்க நடவடிக்கைகள் தடங்கலின்றி நடைபெறுவது உறுதியாயிற்று.

இந்தியர்களுக்கு இன அடிப்படையில் தேர்தல் நடத்துவது தான் உகந்ததென்று இந்திய அரசின் குறிப்பு ஒன்று கூறிற்று. இக் கொள்கையைப் பின்பற்றி மின்டோ மார்லி சீர்திருத்தச் சட்டம் பலருக்கு இன அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளித்தது. எஞ்சிய இடங்கள் நகராட்சிக் கழகங்களுக்கும், மாவட்டக் கழகங்களுக்கும் (District Boards) ஒதுக்கப்பட்டன. சட்டசபைகளின் நடவடிக்கைகளும் கூடின. அரசாங்கக் கடன் தொகையின் வட்டி விகிதம், சமயத்தின்பொருட்டுச் செலவிடப்படும் தொகை, சுதேச அரசுகளின் ரயில்வே துறை போன்றவற்றைப்பற்றி அங்கத்தினர்கள் பேசுவதற்கு உரிமை வழங்கப்படவில்லை. நிதியைப் பொறுத்தவரை ஆய்வுக் குழுவிடம் முதலில் சமர்ப்பிக்க வேண்டும். விவாதத்திலிருக்கும் பொருள்பற்றி மேலும் அறிய துணைக் கேள்விகள் கேட்க உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகள் அனைத்திற்கும் அமைச்சர்கள் பதிலளிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. கேள்விகளுக்குத் தகுந்த பதிலுரைக்க அமைச்சர்கள் அவகாசம் கேட்டுக்கொள்ளலாம்.

அங்கத்தினர்கள் சட்டசபையில் தீர்மானங்கள் கொண்டுவர அனுமதிக்கப்பட்டிருந்தனர். இத் தீர்மானங்கள் அரசாங்கத்திற்கு விரோதமாக அமையக்கூடாது. சட்டசபைத் தலைவர் (President) அங்கத்தினர் கொண்டுவரும் தீர்மானங்களைக் காரணங் கூறாமல் தள்ளிவைக்க அதிகாரம் உண்டு. பொதுமக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளைப்பற்றிப் பேச அங்கத்தினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு உறவு (Foreign Affairs), சுதேச அரசர்களின் தொடர்பு, நீதிமன்றங்களில் தீர்ப்புக்கென இருக்கும் வழக்குகள் ஆகியவைகளைப்பற்றிச் சட்டசபையில் பேசக்கூடாது.

பம்பாய், வங்காளம், சென்னை ஆகிய மாநிலங்களின் நிர்வாகக் குழு (Executive Council) அங்கத்தினர்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்தது. உதவி ஆளுநர்களின் ஆட்சியிலிருக்கும் மாநிலங்களுக்கு நிர்வாகக் குழு ஒன்று அமைக்க இச் சட்டம் வழிசெய்தது. பல்கலைக் கழகம், நிலக்கிழார்கள், மாவட்ட ஆட்சிக்குழு, நகராண்மைக் கழகங்கள், வணிகக் குழு, ஆகியவை சட்டசபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். முஸ்லீம் அங்கத்தினர்களுக்குத் தனித்தொகுதி வழங்கப்பட்டிருந்தது.

அரசியல் குற்றவாளிகள் தேர்தல்களில் நிற்கக்கூடாதென தடுக்கப்பட்டிருந்தனர். இத்தகைய குற்றவாளிகளை அரசாங்கம் குற்றத்தை மன்னித்துத் தேர்தலில் நிற்க அனுமதி அளிக்கலாம்.

திறனாய்வு: 1909ஆம் ஆண்டுச் சட்டத்தினால் இந்தியர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர். நாட்டில் பொறுப்பாட்சி நடக்க வகை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் விவேகமுள்ள வல்லாட்சி (benevolent despotism) முறையை ஏற்படுத்தியது. இச் சட்டத்தை இங்கிலாந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன் இந்தியர்களுக்குப் பொறுப்பாட்சியளிக்கத் தனக்கு விருப்பமில்லை என்று மார்லி பிரபு கூறி வந்தார். இத்தகைய எண்ணத்துடன் உருவாக்கப்பட்ட சட்டம் மக்களுக்கு நலம் பயக்காது என்பது கண்கூடு. இச் சட்டத்தால் பாராளுமன்ற ஆட்சி முறையை ஏற்படுத்தியபோதிலும் பொறுப்பாட்சி அளிக்கவில்லை என்று காங்கிரஸ் தலைவர்கள் இச் சட்டத்தை வன்மையாகக் கண்டித்தனர்.

இச் சட்டம் தேர்வு முறையை அறிமுகப்படுத்தியபோதிலும் ஓட்டுரிமை பெற்றோரின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. சில இடங்களில் வாக்காளர்களின் எண்ணிக்கை 9 அல்லது 10-க்கு மேல் இல்லை. வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையால் தேர்வாளர்கள் இவர்களைத் தம் வசப்படுத்த அதிக வாய்ப்பு இருந்தது. பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்படவில்லை. மறைமுகத் தேர்தலாததால் வாக்காளர்களுக்கும், வேட்பாளர்களுக்கும் எவ்வித கடமை உணர்வும் இல்லாதிருந்தது.

இச் சட்டம் முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதி முறை வழங்கியது. இதன் விளைவாக 1919-ல் சீக்கியர்களுக்கும், 1935-ல் இந்தியக் கிறிஸ்தவர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆகியோர்களுக்கும் தனித் தொகுதி முறை

வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நிலக்கிழார்கள், வணிகக் குழுவினர் ஆகியவர்களுக்குத் தனிச் சலுகைகள் அளித்ததால் தனித்தனி இனத்தை உருவாக்க வழி செய்ததுபோல் ஆயிற்று. பேரரசச் சட்டசபையில் இந்தியர்களுக்கு அதிக இடம் ஒதுக்காமல் அரசாங்க அதிகாரிகளுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் அளித்ததால் வளர்ச்சித் திட்டங்கள் எதையும் செயல்படுத்த முடியவில்லை. மாநிலச் சட்டசபைகளில் அரசாங்க அதிகாரிகள் அல்லாதவர்கள் அதிகமாக இடம் பெற்றிருந்தபோதிலும் ஆளுநரின் தனி அதிகாரங்கள், அவர்களைச் செயலற்றவர்களாக ஆக்கிற்று. மேலும் அதில் பலர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்களாதலால் அவர்கள் அரசாங்கத்தின் போக்கை அனுசரித்து நடந்து கொண்டனர். எனவே, மக்கள் சார்பில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் சட்டசபை நடவடிக்கைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்த முடியாத சிறுபான்மையினராக இருந்தனர்.

மக்கள் எதிர்பார்த்த சுயாட்சியின் முறைகள் எதுவும் இச் சட்டத்தில் இடம் பெறவில்லை. அரசாங்க அதிகாரிகளும், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்களும் இணைந்து சட்ட சபையில் அலுவலர்கள் பிரிவாக (Official bloc) செயல்பட்டதால் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வலிமைகுன்றி இருந்தனர். எனவே, இந்திய அரசு பழைய மன்னர்களைப் போன்று 'தர்பார்' ஆட்சி நடத்திவந்தது என்று சர் பேர்டில் பிரீரி (Sir Bartle Frere) கூறியுள்ளார்.

2. இந்திய தேசிய காங்கிரஸ் (Indian National Congress)

தேசிய உணர்வு ஏற்படக் காரணங்கள்

வியாபாரத்தின் பொருட்டு 1600-ல் இருந்து இந்திய எல்லைக்குள் நுழைந்து, உள்நாட்டு அரசியல் சூழ்நிலைகளையும், பலவீனங்களையும் பயன்படுத்திக் கொண்டு, இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் சுமார் 200 ஆண்டிற்குள் ஆங்கிலேயர்கள் தங்கள் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தனர். இவர்கள் மக்களுக்கு இழைத்த கொடுமைகளினாலும், நாடு பறிக்கும் கொள்கையினாலும், கொடிய அடக்குமுறை நடவடிக்கைகளாலும் வெறுப்புற்ற இந்தியர்கள் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து நீக்க பல வழிகளில் முயன்று கொண்டிருந்தனர். இது, 1857-ல் ஏற்பட்ட சிப்பாய் கலகத்தின்மூலம் ஒரு பகுதி வெளிப் பட்டாலும், பொது மக்களின் எதிர்ப்பும் பகையும் இலைமறை காய்மறையாக மனத்தில் மறைந்து கிடந்தன.

1. தேசிய உணர்வு மக்களிடம் மலர்வதற்குப் பல காரணங்கள் இருந்தன. அவை, 1. நாடு முழுவதும் ஆங்கில நிர்வாகத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டதால், இந்தியர் அனைவரும் ஓர் இனத்தவர், ஒரே நாட்டினர் என்ற ஒற்றுமை உணர்வு ஏற்பட்டது. மேலும் ஆங்கிலக் கல்வியாலும், ஆங்கிலேயர்களின் தொடர்பாலும் ஏனைய ஐரோப்பிய இனத்தவர்களின் தொடர்பு இந்தியர்களுக்கு ஏற்பட்டது. இதன் பயனாக, அங்கு நிலவி வந்த தேசிய இயக்கம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், தாராள மனப்பான்மை போன்ற உயரிய கருத்துகள் நம் நாட்டு மக்களிடையே பரவத் தொடங்கின.

2. இந்தியாவில் ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்ட ரயில் போக்குவரத்து, தபால் தந்தி முறைகள் போன்ற போக்கு வரத்துச் சாதனங்கள் பொது மக்களிடமிருந்த வேற்றுமைகளை அகற்றித் தேசிய உணர்வை உண்டு பண்ணின. இந்திய இலக்கியக் கர்த்தாக்கள், நாவலர்கள், அறிஞர்கள், சிந்தனையாளர்கள் இத் துறையில் பெரும் பங்குகொண்டு உழைத்தனர். சமய, சமூகத் தலைவர்களான ராஜாராம் மோகன்ராய், தேவேந்திரநாத் தாகூர், கிஷோர்சந்திர சென், பி. சி. சர்க்கார், ஈஸ்வரசந்திர வித்தியாசாகர், சுவாமி தயாநந்த சரஸ்வதி, ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் போன்றவர்கள் இந்தியாவின் பழம் பெருமைகளை மக்களுக்கு எடுத்துக் கூறினர். ஆங்கில ஆட்சியில் மக்கள் அடைந்த இழிவையும், ஏழ்மை நிலையையும் சுட்டிக்காட்டித் தங்கள் நிலையை உணரும்படி செய்தனர். இத்தகைய உணர்வுகளுக்கு உறுதுணையாக இருந்தவை ஆங்கிலப் பத்திரிகைகளும் உள் நாட்டு மொழிப் பத்திரிகைகளுமாகும்.

3. பெருவாரியான இந்திய மக்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தனர். ஆங்கில அரசு, இம் மக்களின் வறுமையைப் போக்க எவ்வித நிர்மாண வேலைகளையும் மேற்கொள்ளவில்லை. தங்கள் நாட்டின் சுயநலங் கருதியே இந்தியப் பொருளாதாரத்தை அமைத்தனர். படித்தவர்களும், மத்தியதர வர்க்கத்தினரும் வேலையில்லாக் கொடுமையால் அவதியுற்றனர். ஆங்கிலேயர்கள் இந்தியாவின் செல்வத்தை இடையறாது சுரண்டிச் செல்கின்றனர் என்ற உணர்வு எல்லார் மனத்திலும் ஆழப்பதிந்திருந்தது. இத்தகைய சூழ்நிலை இந்தியர்களின் உணர்வை ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் திருப்பிற்று.

4. 1857-ல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்தின் காரணமாக ஆங்கிலேயர்கள் இந்தியர்கள்மீது சந்தேகம்கொண்டு அவர்களை

வெறுக்கத் தலைப்பட்டனர். கல்கத்தில் ஈடுபட்ட ராணுவ வீரர்களையும், தலைவர்கள் பலரையும் சித்திரவதை செய்து. கொன்று குவித்த மிருகச் செயல், இந்தியர்களின் மனத்தை வெகுவாகப் பாதித்தது. சுருங்கக் கூறின், ஆங்கிலேயர்களும், ஆங்கில அரசும் சிப்பாய்க் கலகத்திற்குப்பின் இந்தியர்களின் அனுதாபத்தை இழந்துவிட்டனர்.

5. ராஜாராம் மோகன்ராய் போன்ற பல இந்தியத் தலைவர்களின் பெரும் முயற்சியால் இந்தியாவில் பயிற்றுவிக்கப்பட்ட ஆங்கில மொழி இந்திய அறிஞர்களின் சொந்த மொழியாயிற்று. இதனால் வெவ்வேறு இனத்தவர்களிடம் இருந்துவந்த ஏற்றத் தாழ்வும், பாகுபாடுகளும ஓரளவு நீக்கப்பட்டு, ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வசதி ஏற்பட்டது. இதன் பயனாக அறிஞர்கள் ஒருங்கே திரண்டு தங்களது உரிமைகளுக்கு அரசாங்கத்திடம் போராடத் தலைப்பட்டனர்.

6. மேக்சிமுல்லர், மோநிர் வில்லியம், கோல்புருக் போன்ற மேல்நாட்டு அறிஞர்களும், ரானடே, பிரசாத் சாஸ்திரி, ஆர். சி. பந்தார்கார், ராஜேந்திரலால் மித்திரா போன்ற இந்திய அறிஞர்களும் பண்டைய இந்தியாவின் இலக்கியங்களின் பெருமையையும் வளமையையும் எடுத்துக் கூறி, இந்தியர்கள் எதிர் காலத்தில் நம்பிக்கை கொள்ளும்படி ஏசியாட்டிக் கழகத்தின் மூலமாக உணர்த்தினர்.

7. தென்னிந்தியாவில் 1877ஆம் ஆண்டு பஞ்சத்தால் மக்கள் அவதியுற்றபோது, லிட்டன் பிரபு, பெரும் தர்பார் ஒன்றை டெல்லியில் கூட்டி, லட்சக் கணக்கில் பணத்தை விரயம் செய்த செயல் அறிஞர்கள், சமூகத் தலைவர்கள் போன்றவர்களின் மனத்தில் வெறுப்பை வளர்த்தது.

இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுத் தந்த இந்திய தேசிய காங்கிரஸ், பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் விளைவாகத் தோன்றிற்று எனலாம். இந்த ஆங்கில ஆதிக்கம் இனத்தால், மொழியால், கலாச்சாரத்தால், சமயத்தால் பிரிந்து கிடந்த இந்தியர்களை ஒற்றுமைகொள்ளச் செய்தது. ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வருவதற்குமுன் பொதுவாகத் தென்னிந்தியா தனித்தே இருந்தது. பேராசிரியர் மூன் (Prof. Moon) என்பவர் கூறுவதுபோல் பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியர்களுக்கு அரசியல் ஒற்றுமை அளித்தது.

இந்தியாவில் தேசிய ஒற்றுமை உணர்வு வளர்ந்ததன் காரணமாக, 1885ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் தோற்று

விக்கப்பட்டது. இவ்வியக்கத்தை ஆரம்பித்தவர் ஆலன் அக்டேவியன் ஹியூம் (Allan Octavian Hume) என்பவர். இவர் இந்திய நிர்வாகத்திலிருந்து ஓய்வு பெற்ற உயர் அதிகாரி (A retired I.C.S. Officer). பிரிட்டிஷ் நிர்வாகத்தில் இந்தியர்கள் அதிருப்தி அடைந்து வெறுப்புற்றிருக்கின்றனர் என்பதை உணர்ந்த இவர், இந்தியர்களின் எண்ணங்களைத் திசைதிருப்புவதற்கு இயக்கம் ஒன்றை நிறுவ விரும்பினார். கல்கத்தா பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கடிதம் ஒன்று எழுதினார். அதில் இந்தியாவின் துன்பம் துடைக்க தன்னலமற்ற ஐம்பது இளைஞர்கள் துணிந்தால், அது பெரும் செயலாக அமையும் என்று குறிப்பிட்டிருந்தார். ஹியூம் வைசிராய் டப்ரின் பிரபுவைச் சந்தித்து இந்தியர்களின் அவல நிலையையும், அவர்களின் அதிருப்தியையும் எடுத்துரைத்தார். மேலும் இந்தியர்களின் கவனத்தைச் சமூகப் பொருளாதாரச் சீர்திருத்தங்களில் திசைதிருப்பிவிட்டால், ஆங்கில நிர்வாகத்தின்மீது அவர்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்புக் குறையும் என்று எடுத்துக் கூறினார். ஹியூமின் கருத்தை வைசிராய் டப்ரின் ஏற்றுக்கொண்டார். வைசிராயின் அனுமதியின்பேரில் ஹியூம் பல இந்தியத் தலைவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களை 1885ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பம்பாயில் கூடும்படி கேட்டுக் கொண்டார். இவ் வேண்டுகோளுக்கிணங்க நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 450 பிரதிநிதிகளும், தலைவர்களும் பம்பாயில் சந்தித்தனர். இம் மகாநாட்டிற்கு வங்காளத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் டபிள்யூ. சி. பானர்ஜி என்பவர் தலைமை தாங்கினார்.

காங்கிரசின் நோக்கங்கள்

இனம், சமயம் போன்ற பாகுபாடின்றி இந்தியர்களைத் தேசிய உணர்வுகொள்ளப் பாடுபடுதல், நிர்வாகச் சீர்கேடுகளை நீக்குதல், எல்லாருக்கும் கல்வி வசதி அளித்துப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடையச் செய்தல், இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் நட்புறவு ஏற்படுத்தல் போன்றவை, இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. சுமார் 20 ஆண்டுகள்வரை தேசிய இயக்கம் இக் கொள்கைகளைப் பின்பற்றி வந்தது.

பம்பாயில் கூடிய முதல் காங்கிரஸ் மகாநாட்டில் ஒன்பது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் முதல் தீர்மானத்தைக் கொண்டுவந்த பெருமை இந்து பத்திரிகையின் ஆசிரியராக இருந்த திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரைச் சாரும். ராணுவச் செலவைக் குறைக்க வேண்டும், சிவில் சர்வீஸ் பணிகளுக்காக

நடத்தப்படும் தேர்வுகள் இங்கிலாந்திலும், இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்தப்படவேண்டும்; இந்திய மத்திய, மாநிலச் சட்டசபைகளில் 50 சதவிகித அங்கத்தினர்கள் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும் என்பது போன்ற தீர்மானங்களும் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது மகாநாடு 1886ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பார்சிகளின் தலைவரான தாதாபாய் நௌரோஜி (Dadabai Naoroji) என்பவரின் தலைமையில் கல்கத்தா நகரில் நடைபெற்றது. மூன்றாவது மகாநாடு முஸ்லீம் இனத் தலைவரான தயாப்ஜி (Tyabji) என்பவரின் தலைமையில் சென்னையில் நடந்தது. இம் முறையில், ஆண்டுதோறும் இந்தியப் பெரும் நகர்களில் காங்கிரஸ் கூட்டம் நடந்துவந்தது. இந்திய அரசின் பண நோட்டுக் கொள்கை, கல்வி, அடக்குமுறைச் சட்டம், நீதி நிர்வாகம், தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களின் அவல நிலை, பத்திரிகைச் சட்டம் போன்ற அரசாங்கக் கொள்கைகளைப்பற்றி வாதிட்டு, திர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தன. இந்திய அரசின் வரவு செலவு திட்டத்தைப்பற்றி விவாதிக்க மாநிலச் சட்டசபைகளுக்கு உரிமை வேண்டுமென்று வாதிட்டனர். கர்சான் பிரபுவின் சர்வாதிகாரப் போக்கு, காங்கிரஸ் தலைவர்களை அதிருப்தி கொள்ளச் செய்தது.

காங்கிரசில் பிளவு ஏற்படுதல்: மராட்டிய மாநிலத்தின் பெருந்தலைவராக விளங்கிய பால கங்காதர திலகரும், பஞ்சாபின் சிங்கமென அழைக்கப்பட்ட லாலா லஜபதிராய் என்பவரும் ஆங்கிலேயரிடம் நிர்வாகச் சீர்திருத்தங்கள் கோருவது இந்தியர்களின் தன்மான உணர்வுக்கு இழுக்கு என எடுத்துரைத்தனர். சுதந்திரம் நமது பிறப்புரிமை. அதை நாம் அடைய முயல வேண்டுமென வற்புறுத்தினர். ஆனால் சுரேந்திரநாத் பானர்ஜி, கோபாலகிருஷ்ண கோகலே, மேத்தா போன்ற தலைவர்கள் சட்டப் பூர்வமான முறையில் அரசிடமிருந்து சலுகைகள் பெறவேண்டுமென்று கூறிவந்தனர். அரசியல் சீர்திருத்தங்கள் செய்வதிலும் ஆக்கப்பூர்வமான வழிகளைப் பின்பற்றவேண்டுமென எடுத்துரைத்தனர். இந்த முறையில், காங்கிரஸ் மிதவாதிகள் கட்சி என்றும், தீவிரவாதிகள் கட்சி என்றும் இரு பிரிவுகளாகப் பிரிந்தது. 1907-ல் கூடிய சூரத் மகாநாட்டில் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்போது குழப்பம் ஏற்பட்டது. இக் குழப்பத்தில் மேடையின்மீது வீசப்பட்ட செருப்பு ஒன்று பானர்ஜியின்மீது பட்டு மேதாவின் மேல் விழுந்தது. அக் கூட்டத்தில் மிதவாதிகள் அதிகமாக இருந்தனர். சட்டப் பூர்வமான

முறையில் இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து (Dominion Status) பெறுவதே அரசியல் நோக்கமாக இருக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினர். மிண்டோ-மார்லி சீர்திருத்தத்திலுள்ள குறைபாடுகளுக்குத் தீவிரவாதிகள் கண்டனம் தெரிவித்தனர். அரசாங்கம் தீவிரவாதிகள் பலரைக் கைதுசெய்து சிறைப்படுத்தியது. திலகர் பர்மாவில் மாண்டலேயி லுள்ள சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்.

மிதவாதிகளும் தீவிரவாதிகளும் ஒன்றுபடுதல்

சென்னை அடையாறிலுள்ள பிரம்மஞான சபைக்குத் (Theosophical Society) தலைவியாக இருந்த டாக்டர் அன்னி பெசன்ட் அம்மையார் மிதவாத, தீவிரவாதக் கட்சியினரை ஒன்றுசேர்க்கும் முயற்சியில் 1912-ல் ஈடுபட்டு இத் துறையில் வெற்றிபெற்றார். 1914-ல் திலகர் விடுதலை அடைந்தார். இதற்கிடையில் கோபாலகிருஷ்ண கோகலேயும் மேதாவும் மறைந்தனர். 1916ஆம் ஆண்டு காங்கிரஸ் லக்னௌ நகரில் அம்பிகாசரண் மஜூம்தார் என்பவரின் தலைமையின்கீழ் கூடிற்று. தீவிரவாதிகளும் மிதவாதிகளும் ஒன்றுசேர்ந்தனர். 1906ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட முஸ்லீம் லீக்கும் காங்கிரசுடன் இணைந்தது. குடியேற்ற நாட்டு அந்தஸ்தே இந்தியா அடைய வேண்டிய குறிக்கோள் என்று இம் மூன்று கட்சியினரும் ஒருங் கிணைந்து தீர்மானம் நிறைவேற்றினர். இவ்வாறு 1885-ல் தோற்றுவிக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரஸ் முப்பது ஆண்டு களில் அகில இந்திய இயக்கமாக மாறியது.

சுயாட்சி கட்சி தோன்றுதல் (Home Rule Movement)

சுயாட்சிக் கட்சி என்ற ஒன்றைத் திலகர் தோற்றுவித்தார். சுதந்திரத்திற்குக் குறைந்த அந்தஸ்து நாட்டிற்குத் தேவையில்லை என்று திலகர் வாதாடினார். அன்னிபெசன்ட் அம்மையார் இவ் வியக்கத்தைச் சென்னை நகரில் ஆரம்பித்தார். இது காங்கிர சையும் பலப்படுத்தியது. 1919-ல் ஏற்பட்ட ரௌலத் சட்டமும், ஜாலியன் வாலாபாக் படுகொலையும் தீவிரவாதிகளின் பலத்தை ஓங்கச் செய்தன. சிலகாலம் காங்கிரஸ், தீவிரவாதிகளின் செல்வாக்கில் இயங்கி வந்தது.

காங்கிரசும் காந்தியடிகளும்: 1915-ல் தென் ஆப்பிரிக்கா விலிருந்து இந்தியா திரும்பிய காந்தியடிகள், இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்து பணியாற்றலானார். 1920-ல் காங்கிரசின் தலைமைப் பீடத்தைப் பெற்றார். இதுகாறும், செல்வந்தர், படித்

துப்பட்டம் பெற்ற நடுத்தர வர்க்கத்தினர், வழக்கறிஞர் போன்ற செல்வாக்குள்ளவர்களிடம் பின்னிப் பிணைந்து தேங்கிக் கிடந்த காங்கிரஸ் இயக்கத்தைப் பொதுமக்களிடமும், பாமர மக்களிடமும், எடுத்துச் சென்று பரப்பிய பெருமை காந்தியடிகளையே சாரும். இத் துறையில் அவர் பல ஆண்டுகள் சிறை சென்றுள்ளார். அரசின் அடக்குமுறைகளால் சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்துள்ளார்.

ஒத்துழையாமை இயக்கம்: மான்போர்டுச் சட்டத்திற்கு எதிராக காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். சட்டசபைகள், கல்லூரிகள், நீதிமன்றம் ஆகியவற்றுக்கு இந்தியர்கள் போகாமல் இருத்தல் வேண்டும். அந்நிய நாட்டுப் பொருள்களை வாங்கக்கூடாது என்ற கருத்துகளை மக்களிடையே பரப்பி வந்தார். நாட்டில் குழப்பம் ஏற்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டுக் காந்தி 6 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு எரவாடா சிறைக் கூடத்தில் அடைக்கப்பட்டார். நாட்டில் ஆங்கிலேயருக்கு எதிராகக் கிளர்ச்சி வலுக்கவே காந்தியடிகளும், மற்றத் தலைவர்களும் 1924-ல் விடுவிக்கப்பட்டனர். சைமன் விசாரணைக் குழுவில் இந்தியர்கள் சேர்க்கப்படவில்லை என்று 1927-ல் காந்தியடிகள் சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தார். உப்புக் காய்ச்சிய குற்றத்திற்காகக் காந்தியடிகளையும் சட்டமறுப்புச் செய்த ஆயிரக்கணக்கான தேசியத் தொண்டர்களையும் அரசு சிறைப்படுத்தியது. இதைத் தொடர்ந்து இந்தியாவிற்கு உடனடியாகக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் வற்புறுத்தியது. ஆனால் இந்திய அரசு இதற்கு இசைய வில்லை, 1929ஆம் ஆண்டில் ஜவகர்லால் நேருவின் தலைமையின்கீழ் கூடிய லாகூர் காங்கிரஸ் மகாநாட்டில் இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து உகந்தது அன்று. பூர்ண சுயராஜ்யமே இந்தியாவின் இலக்காக இருக்கவேண்டுமென்று தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

வட்டமேஜை மகாநாடு ; இந்திய அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் இர்வின் பிரபு (Lord Irwin), லண்டனில் வட்டமேஜை மகாநாடு ஒன்றிற்கு ஏற்பாடு செய்தார். இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளிக்காததால் காங்கிரஸ் கட்சி இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. எனவே, இம் மகாநாட்டினால் எப்பயனும் இந்தியா அடையவில்லை. இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் காந்தியடிகள் கலந்து கொள்ள இசைந்து காங்கிரஸின் பிரதிநிதியாக லண்டன் சென்றார். இக் கூட்டத்தில் சிறுபான்மையினரின் நிலையைப்பற்றிக் காரசார

மாக விவாதிக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் இம் மக்களின் நிலையைப்பற்றி வாதிடுவதைக் காந்தியடிகள் விரும்பவில்லை. எனவே, காந்தியடிகள் இந்தியா திரும்பியபின் இந்தியா முழுவதிலும் சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்தார். வைசிராயாக இருந்த வெல்லிங்டன் பிரபு, காந்தியடிகளையும் ஏனைய இந்தியத் தலைவர்களையும் கைதியாக்கிச் சிறையில் அடைத்து, காங்கிரஸ் இயக்கத்தைச் சட்டவிரோதமானதென அறிவித்தார். காங்கிரஸ் கட்சியின் உடைமைகளையும் பறிமுதல் செய்தார். காந்தியடிகள் 1934-ல் விடுதலை செய்யப்பட்டார். ஆனால் இவர் காங்கிரஸ் இயக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். மூன்றாவது வட்டமேஜை மகாநாடு காங்கிரஸ் பிரதிநிதி எவருமின்றி லண்டனில் கூடியது. இதன் முடிவில் இந்தியாவிற்கு 1935ஆம் ஆண்டில் அரசியல் சாசனத்தை உருவாக்கினர். இந்த அரசியல் சாசனத்திலுள்ள குறைகளை ஜவகர்லால் நேரு மிகவும் வன்மையாகக் கண்டித்தார். காந்தியடிகள் காங்கிரஸ் இயக்கத்திலிருந்து விலகி இருந்த போதிலும், இந்திய மக்கள் அவரைத் தங்களை அந்நிய ஆட்சியிலிருந்து விடுவிக்கத் தோன்றிய தலைவர் என்றே போற்றிப் புகழ்ந்தனர்.

'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் (Quit India Movement)

இந்திய மக்களின் விருப்பத்திற்கிணங்க காந்தியடிகள் திரும்பவும் காங்கிரஸ் இயக்கத்தின் தலைமைப் பதவி ஏற்றார். இரண்டாவது உலகப் போரின்போது இந்தியத் தலைவர்களைக் கலக்காமல் இந்தியாவை யுத்தத்தில் ஈடுபடுத்திய செயலை எதிர்த்துக் காங்கிரஸ் இயக்கம் கண்டனம் தெரிவித்து வந்தது. 1942-ல் 'வெள்ளையனே வெளியேறு' (Quit Indian Movement) என்ற இயக்கத்தைக் காந்தியடிகள் பம்பாய் நகரில் ஆரம்பித்தார். இதன் விளைவாக இந்திய அரசிற்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டது. 1946-ல் ஏற்பட்ட ராயல் இந்தியன் கடற்படையின் புரட்சி (Royal Indian Navy Mutiny) தேசிய இயக்கத்தின் இறுதிக்கட்டமாக அமைந்தது. இக் கிளர்ச்சியில் ஆங்கில அதிகாரிகளின் கொடுமைகளைப் பொறுக்கமுடியாது, இந்திய கடற்படை வீரர்கள் 1946 ஆம் ஆண்டில் 'தல்வார்' என்ற கப்பலிலுள்ள பல ஆங்கில அதிகாரிகளைக் கொலை செய்தனர். இப் படுகொலையைக் கண்டு அஞ்சி ஆங்கில அரசு தன்னம்பிக்கை இழந்தது. இந்திய ராணுவத்திலும், இந்திய ஆகாய விமானப்படைப் பிரிவிலும், ஆங்கில அதிகாரிகளின் கொடுமையைத் தாங்காது, அப்படைகளும் புரட்சி செய்யும் நிலையில் இருந்து வந்தன. இதுகாறும் போர்ப் படைகளின் உதவிகொண்டு இந்தியாவை அடக்கி ஆண்டு வந்த ஆங்கிலேயர்கள் அப் படைகளே தங்களுக்கு எதிராகக் கிளர்ந்

தொழிற் கட்சி தலைப்பட்டபோது இந்தியாவை விட்டு வெளியேற மனப்பூர்வமாகத் தீர்மானித்தார்கள்.

இந்தியா சுதந்திரம் அடைதல்: 1906-ல் தோற்றுவிக்கப் பட்ட முஸ்லீம் லீக் என்ற கட்சி சிறிது சிறிதாகப் பலம் பெற்று இந்திய முஸ்லீம் மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றிருந் தது. இரண்டாவது உலக யுத்தத்தின்போதும் அதற்குப் பின்பும் திரு மகமது அலி ஜின்னு என்பவர், முஸ்லீம் லீக் கட்சியின் தனிப் பெரும் தலைவராக விளங்கினர். இவர், இரு தேசிய இனக்கோட் பாட்டை (Two Nations Theory) வலியுறுத்தி வந்தார். இஸ்லாம் சமயத்தைச் சார்ந்த முஸ்லீம்கள் எல்லாவகையிலும் இந்துக்களிட மிருந்து மாறுபட்டவர்களே என்று கூறப்பட்டு வந்தது. இஸ்லாமி யர்களின் வளர்ச்சிக்கும் கலாச்சாரப் பாதுகாப்பிற்கும் தனி நாடு தரப்பட வேண்டுமென்று ஆங்கிலேயரை இஸ்லாமியர் வற்புறுத்தி வந்தனர். இச் சமயத்தில் இங்கிலாந்து அரசு, சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் (Sir Stafford Cripps), பெத்திக் லாரன்ஸ் பிரபு (Lord Pethick Lawrence), ஏ. வி. அலெக்சாந்தர் (A. V. Alexander) ஆகிய மூன்று அறிஞர்களைக்கொண்ட ஓர் அரசியல் தூதுக்குழுவை இந்தியாவிற்கு அனுப்பியது. இப் பெருமக்களின் திட்டமும் முயற்சிகளும் இந்தியத் தலைவர்களை மன நிறைவு கொள்ளச்செய்ய வில்லை. மகமது அலி ஜின்னு, முஸ்லீம்களுக்குத் தனி நாடு பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று உறுதியுடன் வாதாடினர். நாட்டைத் துண்டாடியாவது சுதந்திரம் பெற வேண்டும் என்ற அவசியநிலை ஏற்பட்டதால், இந்திய அரசியல் தலைவர்களான காந்தி, நேரு, சர்தார் வல்லபாய்படேல் போன்றவர்கள் நாடு விரைவில் விடுதலை அடையத் தேவையான செயல்களில் முழுமனத்துடன் இறங்கினர்.

ஆங்கில அரசின் அதிகார மாற்றத்தை நன்முறையில் நிறை வேற்றிவைக்கும்பொருட்டு இங்கிலாந்தை ஆண்டுவந்த தொழிற் கட்சி பிரதமர் சர் அட்லி என்பவர், தூரக்கிழக்குப் போர்க்களத் தின் தலைமைத் தளபதியாக இருந்த லூயி மவுண்ட் பேட்டன் பிரபுவை இந்தியாவின் வைஸ்ராயாக நியமித்தார். இவர் 1948ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதாகத் தனது அரசாங்கத்தின் கருத்தை அறிவித்தார். இதற்கிடையில் இந்து முஸ்லிம் கலகம் நாடு முழுவதிலும், குறிப் பாக வங்காளம், பீகார் மாகாணங்களில் ஏற்பட்டுப் பெரும் அழிவை ஏற்படுத்தியதால், இந்தியாவிற்கு 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் நாள் சுதந்திரம் வழங்குவதெனத் தீர்மா னித்து அதன்படி குறிப்பிட்ட தேதியில் இந்தியா, பாக்கிஸ்தான்

என்ற இரு நாடுகளாகப் பிரித்துச் சுதந்திரம் வழங்கினர். சுதந்திர இந்தியாவுக்கு அரசியல் சட்டம் ஒன்று ஏற்படுத்தும்வரை நேருவின் தலைமையின்கீழ் இடைக்கால அரசு ஒன்று இயங்கி வந்தது. சட்ட அறிஞர் டாக்டர் அம்பேத்கார் தலைமையின்கீழ் இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. 1950ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26ஆம் நாளிலிருந்து இந்தியா குடியரசுமுறையில் ஆளப்பட்டு வருகிறது. இந்தியா சுதந்திரம் அடைந்து வளமான வாழ்வடைய, தமது உயிர், உடைமை, நேரம் அனைத்தும் அர்ப்பணித்த சுதந்திரத் தந்தை காந்தியடிகள் எவ்விதப் பதவியும் ஏற்காது அரசியலிலிருந்து ஒதுங்கி, எளிமையான வாழ்வை மேற்கொண்டு வாழ்ந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

மிதவாதிகள் (Moderates)

1906ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டம் கல்கத்தாவில் கூடியது. இக் கூட்டத்திற்குத் தாதாபாய் நௌரோஜி தலைமை வகித்தார். இவர் சுயராஜ்யக் கொடியை ஏற்றியபின், சுயாட்சி, சட்டமறுப்பு, சுதேசி இயக்கம், தேசியக் கல்வி ஆகிய நான்கு தீர்மானங்களை நிறைவேற்றினர். இதற்கு அடுத்த கூட்டம் நாகபுரி என்ற இடத்தில் நடக்க இருந்தது. அங்குச் சூழ்நிலை நன்கு அமையவில்லை ஆதலால், அது சூரத்திற்கு மாற்றப்பட்டது. கல்கத்தாவில் இயற்றப்பட்ட சுயராஜயத் தீர்மானமே இந்தியாவின் நோக்கமாக இருக்கவேண்டுமென்று திலகர் வற்புறுத்தினர். காங்கிரஸ் இக் கொள்கையைக் கைவிடக்கூடாது என்று எடுத்துக் கூறினர். 1907ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் நாள் சூரத் காங்கிரஸ் கூடியது அக் கூட்டத்தில் மிதவாதிகள் அதிகமிருந்தனர். திலகர் மேற்கண்ட தனது கருத்துகளை எடுத்துரைத்தார். ஆக்கப்பூர்வமான வழிகளில் சென்று இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்தைப் பெறுவதே மிதவாதிகளின் நோக்கம். வன்முறைகளையும் சட்ட எதிர்ப்புகள் போன்ற முறைகளையும் கையாண்டு இந்தியாவிற்குச் சுதந்திரம் பெறுவதே தீவிரவாதிகளின் நோக்கம். கொள்கை அடிப்படையில் மாறுபட்ட இவர்கள் காங்கிரஸ் இயக்கத்தை இரு பிரிவாகப் பிரித்தனர்.

மிதவாதிகளையும், தீவிரவாதிகளையும் ஒருங்கிணைக்க திலகர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. சூரத் காங்கிரஸ் கூட்டத்தின் தீர்மானங்களைக் கோகலே தயாரித்திருந்தார். இத் தீர்மானங்கள் சுயாட்சி பெறுவதைக் கொண்டதாக அமையவில்லை. இதற்கு மாறாகக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து பெறுவதே இந்தியாவிற்கு நலம் பயப்பதாக இருக்குமென குறிப்பிடப்பட்

டிருந்தது. மிதவாதிகளின் பிரதிநிதி இக் கூட்டத்தில் பெருவாரி யாக இருந்ததால் தங்கள் விருப்பம்போல் நடக்கத் தலைப்பட்டன. 1907ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் நாள் சூரத் மகாநாடு கூடியபோது பதட்ட நிலை நிலவி இருந்தது. டாக்டர் ராஜ் பிகாரி கோஷ் என்பவரைத் தலைவராக நியமிக்கத் தீர்மானித்தனர். இதை ஆமோதிக்க சுரேந்திர நாத் பானர்ஜி எழுந்தபோது மகாநாட்டில் குழப்பம் நிலவியது. எனவே, அன்று கூட்டம் தள்ளிவைக்கப்பட்டது. மறுநாள் கூட்டத்தில் டாக்டர் ராஜ் பிகாரி கோஷ் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் தனது தலைமை உரையை நிகழ்த்த எழுந்தபோது, திலகர் மேடைக்குச் சென்று தன்னைப் பேச அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஆனால் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. தீவிரவாதிகள் குழப்பம் விளைவித்தனர். திலகரை மேடையி லிருந்து அகற்ற மிகவும் சிரமம் ஏற்பட்டது. திலகர் மடித்த கைகளுடன் மேடைமீது அசையாது நின்று கொண்டிருந்தார். சிலர் கைகளில் கம்புகளுடன் மேடையை நோக்கிச் சென்றனர். மேடைமீது செருப்பு ஒன்று எறியப்பட்டது, அது பிரோஸ்ஷா மேத்தா என்ற தலைவர்மீது வீழ்ந்தது. இதைத் தொடர்ந்து நாற்காலிகள் மேடைமீது வீசப்பட்டன. வன்முறை அதிகரிக்கவே காங்கிரஸ் மகாநாடு ரத்துச்செய்யப்பட்டது.

1907ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் நாள் சூரத் காங்கிரஸ் பந்தலில் மிதவாதிகளின் கூட்டம் நடைபெற்றது. இதில் தீவிர வாதிகள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. தீவிரவாதி களும் மற்றொர் இடத்தில் கூடி காங்கிரசின் பணிகளை நிறைவேற்றும் வழிமுறைகளை ஆராய்ந்தனர். இவ்வாறு சூரத் காங்கிரஸ் குழப்பத்திலும், வெறுப்பிலும் முடிவடைந்தது. இதற்குப் பின், மிதவாதிகள் தீவிரவாதிகளுக்கு விட்டுக்கொடுப் பதாக இல்லை. இரு கட்சிகளின் இணைவுக்கும் முயலவில்லை. தீவிர வாதிகளின் தலைவராக விளங்கிய திலகர் துரோகி என மிதவாதி களால் அழைக்கப்பட்டார். இவரைப்பற்றி மிதவாதிகளின் பத்திரிகைகள் மிகவும் மோசமாக எழுதிவந்தன. இத்தகைய எதிர்ப்புகளுக்கிடையில் திலகர் தனது கொள்கையில் பிடிவாதம் காட்டிவந்தார். அதே சமயத்தில் மிதவாதிகள் தங்களின் போக்கை மாற்றிக்கொண்டால் அவர்களை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருப்பதாகவும் அறிவித்து வந்தார். தனது நோக்கங் களையும் 'கேசரி' என்ற பத்திரிகையில் வெளியிட்டு வந்தார். தேச நலத்தின்பொருட்டுப் பகையை மறந்து ஆக்கப் பணிகளில் ஈடுபடுவதுதான் தற்போது வேண்டற்பாலது என்று கூறி வந்தார்.

1908-ல் இந்திய தேசிய காங்கிரசின் அமைப்பு முறையில் மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. காங்கிரஸ் மகாநாடுகளுக்குச் செல்லும் பிரதிநிதிகளைப் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டியும், அதைச் சார்ந்த கழகங்களும் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டும் என்றும், பொதுக் கூட்டங்களில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கக் கூடாதென்றும் யாறுதல் செய்யப்பட்டது. இதன் பயனாகத் தீவிரவாதிகள் காங்கிரசைவிட்டு வெளியேறித் தனித்து இயங்கிவந்தனர். இதற்குப்பின் 1915-ல் இவ்விரு பிரிவினருக்கும் ஒற்றுமை ஏற்பட்டுக் காங்கிரஸ் இயக்கத்தைப் பலப்படச் செய்தனர். இந் நிகழ்ச்சிக்குப்பின் காங்கிரஸ் இயக்கம் காந்தியடிகளின் தலைமையின்கீழ் இயங்கிவந்தது.

தீவிரவாதிகள் (Extremists)

தீவிரவாதிகள் தோன்றக் காரணம் : இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரவாதிகள் தோன்ற பல காரணங்கள் அமைந்திருந்தன. ஆங்கில அரசிடம் இந்தியர்கள், பல சலுகைகளுக்காகவும், சமூக, பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்காகவும் வேண்டுகோள் விடுப்பது சரி இல்லை என்றும், அது தன்மானக் குறைவும் இந்திய சமூகத்திற்கு இழுக்கும் ஆகும் என்றும் கருதப்பட்டது. இம் முறைகளால் பலன் எதுவும் ஏற்படவில்லை. வேண்டுகோள்கள் விடுப்பது இந்தியர்களின் பலவீனம் என்று அரசாங்கம் கருத இடமிருக்கிறது என்று எடுத்துக் கூறப்பட்டது. தீவிரவாதிகளின் தலைவராகத் திலகர் திகழ்ந்தார். இவர் 'சுதந்திரம் நமது பிறப்புரிமை. அதை நாம் அடைந்தே தீரவேண்டும்' என முழக்கமிட்டார்.

1. அந்நியர்களின் ஆதிக்கத்தின் காரணமாக, நாட்டின் செல்வங்கள் அனைத்தும் கொள்ளை கொண்டு போகப்படும் செயல் மக்கள் மனத்தில் அரசின்மீது வெறுப்பை உண்டுபண்ணியது. தீன்ஷா வாச்சா, ஆர். சி. தத். தாதாபாய் நௌரோஜி ஆகியவர்கள் மக்களின் வறுமைக்கு ஆங்கிலேயர்கள் பின்பற்றி வரும் மோசமான பொருளாதாரக் கொள்கையே காரணம் என்று பத்திரிகைகளின்மூலம் எழுதி வந்தனர். இங்கிலாந்தின் தொழில் வளர இந்தியத் தொழில்கள் அழிக்கப்பட்டன என்று மக்கள் உணரும்படி எடுத்துரைத்தனர்.

2. பம்பாய் மாநிலத் தில் தோன்றிய பிளேக் நோயும் அதைத் தடுக்க ஆங்கிலேயர்கள் எடுத்துக்கொண்ட பயனற்ற நடவடிக்கைகளும் பொதுமக்கள் கொதித் தெழக் காரணமாக அமைந்திருந்தன. நோயைத் தடுக்கப் பலவித நடவடிக்கைகளை

அரசு எடுத்துக்கொண்ட போதிலும், அதை ராணுவ வீரர்களின் உதவி கொண்டு செயல்படுத்திய முறை வரவேற்கத் தகுந்ததாக அமையவில்லை. நோய்க் கிருமிகளை அகற்றுகின்றோம் என்று கூறி மக்களுடைய உடமைகள் அனைத்தையும் தீக்கிரையாக்கி வறுமைக்குள்ளாக்கினர். பூனா நகரப் பகுதியில் பிளேக் நோய்த் தடுப்புக்குழுவின் தலைவரான ரேண்டு (Mr. Rand) என்பவர், மக்களுக்கு இழைத்த துன்பம் சோல்லும் தரமன்று. மக்கள் உபயோகப் படுத்தும் உடை, உணவுப் பொருள், படுக்கை ஆகியன யாவும் பறிமுதல் செய்யப்பட்டு எரிக்கப்பட்டன. எனவே, மக்கள் வெறுப் புற்றுத் திரு. ரேண்டையும் அவரது நண்பரையும், அவர்கள் பம்பாய் நகரில் நடந்த விக்டோரியா மகாராணியாரின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்திலிருந்து வெளிவரும்போது சுட்டுக் கொன்றனர்.

3. இந்து மதத்தின் மறுமலர்ச்சியும் ஒரு காரணமாக அமைந்தது. சுவாமி விவேகானந்தர், இந்து சமயத்தின் பெருமைகளை மக்களுக்குத் தனது நாவன்மையால் உணர்த்தி வந்தார். இந்தியா சுயேச்சை அடையாவிடின், மக்களுக்கு வாழ்வு இல்லை என்றும், தங்களுடைய சமயம், கலை, கலாச்சாரத்தைப் பாதுகாக்க இயலாதெனவும் கூறினார். புரட்சித் தலைவர் அரவிந்த கோஷ் என்பவரும் 'சுதந்திரம் வாழ்க்கையின் லட்சியம், இச் சுதந்திரத்தை இந்து சமயம் ஒன்றே இந்தியர்களுக்கு வழங்கவல்லது' என்று கூறிவந்தார். திலகரும், இந்து சமய விழாக்களையும், சிவாஜியைப் போன்ற சமூக வீரர்களையும் கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பிரம்ம ஞான சபையினரான சர். வேலண்டைன் சிரோல், கர்னல் ஆல்காட், திருமதி அன்னி பெசன்ட் அம்மையார் ஆகியோரும் இந்து சமயத்தின் தத்துவக் கருத்துக்களின் மேன்மைகளைப் பிரச்சாரம் செய்து வந்தனர், ஆங்கிலேயர்களின் கிறிஸ்தவ சமயத்தைவிட இந்து சமயம் எவ்விதத்திலும் தாழ்ந்ததில்லை என்றும், அதனால் இந்துக்கள் எந்த விதத்திலும் தங்கள் சமயம், கலை, கலாச்சாரத்தைப்பற்றி வெட்கப்பட அவசியம் இல்லை என்றும் பிரம்ம ஞான இயக்கத்தைச் சார்ந்தவர்கள் எடுத்துக் கூறிவந்தனர்.

4. இந்தியாவிற்கு விரோதமான காரியங்களைக் கர்சான் பிரபு செய்து வந்ததால், மக்களுக்கு ஆங்கில அரசின்மீது வெறுப் புணர்ச்சி ஏற்பட்டது. இவர் 1905ஆம் ஆண்டில் வங்காளத்தை இரு பகுதிகளாகப் பிரித்தது, தேசியவாதிகளின் மனத்தைப் புண் படுத்தியது. இப் பிரிவினை, பொது மக்களைப் பல்வேறு இன்னல்

களுக்கு ஆளாக்கிற்று. மேலும் ஆங்கிலேயர், இந்தியரை ஆளப் பிறந்தவர்கள் என்று கர்சான் பிரபு கூறி வந்தது பொதுவாக எல்லா இந்தியர்களுக்கும் பிடிக்கவில்லை. இந்தியர்களுக்கு உயர் பதவி அளிக்காததும் தீவிரவாதிகள் தோன்றுவதற்குக் காரண மாக இருந்தது. கர்சான் பிரபு, தல சுயாட்சி முறையில் அரசாங்க அதிகாரிகள் பலரை நியமித்ததால் இந்திய நிர்வாக முறை பாதிக்கப்பட்டது. நிர்வாக முறையில் இந்தியர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன என உணர்ந்தனர். இதைப் போன்று பல்கலைக்கழகக் கல்வியும் ஐரோப்பிய அதிகாரிகளின் மயமாயிற்று.

5. ஆங்கிலக் குடியேற்ற நாடுகளில் இந்தியர்களை நடத்தி வந்த கொடுமையும் வெறுப்புக்குக் காரணமாக அமைந்தது. தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் அடிமைகளிலும் கீழாக நடத்தப் பட்டனர். இத்தகைய இழிவான செயல்கள் இந்தியர் மனத்தைப் புண்படுத்தின. 1904-05-ல் ஜப்பானியர்கள் ஐரோப்பிய வல்லர சான ரஷ்யாவைத் தோற்கடித்த செயல், இந்தியர்களுக்கு ஒரு தெம்பு உணர்வை ஊட்டியது. இந்தியர்கள் முயன்றால், ஆங்கில அதிகாரத்தை ஏன் அகற்ற முடியாது என்று கேட்கத் தலைப்பட்டனர்.

தீவிரவாதிகளின் முறைகள் : தீவிரவாதிகள் சட்டமறுப்பு, சுதேசிப் பொருள்களுக்கு ஆதரவளித்தல், தேசியக் கல்வியை ஆதரித்தல் போன்றவற்றை ஆயுதமாகக்கொண்டு தங்கள் குறிக்கோளாகிய பூரண சுதந்திரத்தை அடைய பீடுநடை போட்டனர். சட்டமறுப்பும், சுதேசிப் பொருள்களுக்கு ஆதரவு அளிக்கும் முறையும் இவர்களுக்குப் பெரும் வெற்றியை அளித்தது. பஞ்சாப்பின் சிங்கம் என்று அழைக்கப்பட்ட லாலா லஜ்பதி ராய் என்பவரும் தீவிரவாதிகளில் ஒருவர். இவர்கள் வேத இலக்கியங்களை எடுத்துக்காட்டி, இந்து சமயத்தில் பற்றுதல் ஏற்பட வழிவகுத்தனர். அசோகர், சந்திரகுப்தர், ராணு பிரதாப்சிங், சிவாஜி, ராணி இலக்குமிபாய் போன்ற இந்திய வீரர்களின் பெருஞ் செயல்களை எடுத்துக் கூறினர். அத்துடன் துர்க்கா, காளி, பவானி போன்ற தெய்வங்களை வணங்கவும் மக்களை வேண்டிக்கொண்டு சமய உணர்வை வளர்த்தனர். பி. சி. பால் என்பவர், சுய ஆட்சியை நாம் முயன்று பெறவேண்டும். ஆங்கிலேயர், சுயாட்சியை நமக்கு வலியக் கொடுத்தாலும் நாம் பெறுதல் கூடாது. எனவே நமது வாழ்வு நமது உழைப்பால் உயரவேண்டும் என்று மக்கள் மத்தியில் கடமை உணர்வை வலியுறுத்தி வந்தார்.

சூரத் காங்கிரஸ் கூட்டத்திற்குப்பின், திலகர் தீவிரவாதி களுக்குத் தலைமை தாங்கிப் பல ஆக்கப்பூர்வமான நடவடிக் கைகளில் ஈடுபட்டார். பம்பாய் மாநிலத்தின் எல்லாப் பகுதி களுக்கும் சென்று தமது அயரா உழைப்பினால் தேச உணர்வை ஊட்டினார். நாட்டின் சேவைக்கெனப் பல இடங்களுக்குச் சென்று பணம் திரட்டினார். சிவாஜி மன்னர், 200 ஆண்டுகளுக்குமுன் சுயராஜ்ய அரசு ஒன்றை நிறுவினார் என்றால், நாம் ஏன் அத்தகைய அரசை நிறுவக்கூடாது என்று மக்களைக் கேட்டு அறிவூட்டினார். சுயராஜ்யம் எனது பிறப்புரிமை. அதை நான் அடைந்தே தீர்வேன் (Swarajya is my birth right, I will have it) என்று கூறிவந்தார்.

அரசாங்கம் தீவிரவாதிகளைச் சிறையிலிட்டது. தேசியவாதி களுக்குத் தகுந்தாற்போல் இந்தியக் குற்றச் சட்டம் (Indian Penal Code) திருத்தி அமைக்கப்பட்டு, 124(a) and 153(a) கொடிய முறையில் பயன்படுத்தப்பட்டது. அரசியல் குற்றம் செய்தோர்களை விசாரணையின்றித் தண்டிக்கும் சட்டமும் இயற்றப் பட்டது. 1908, 1910 ஆகிய ஆண்டுகளில் பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பறிக்கும் இரு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. பொதுக்கூட்டங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் மிண்டோ பிரபு 1907-ல் சட்டம் ஒன்று பிறப்பித்தார்.

ஹார்டிஞ்ச் பிரபு காலத்தில் அரசாங்கத்திற்கும் தேசிய வாதிகளுக்கும் இடையில் நல்லுறவு நிலவியது. இவர் காலத்தில் வங்காளப் பிரிவினை ரத்துச் செய்யப்பட்டது. இந்தியர்கள் தென் ஆப்பிரிக்காவில் படும் துன்பங்களைக் கண்டு ஹார்டிஞ்ச் பிரபு கண்கலங்கினார். எனவே காங்கிரஸ், அரசுடன் ஒத்துழைக்க இசைந்தது. ஐந்தாவது ஜார்ஜ் மன்னர், 1911-ல் இந்தியாவிற்கு வந்தபோது காங்கிரஸ் தலைவர்கள், தங்கள் ஒத்துழைப்பை நல்கினர். 1908-ல் இருந்து 1914 வரை திலகர் மாண்டலே சிறைச்சாலையில் இருந்ததால், இந்திய அரசியல் நிலை சிறிது மந்த நிலையில் இருந்தது. மிதவாதிகள் இச் சமயத்தில் மகிழ்வுடன் இருந்தனர். திலகர், இந்தியா வந்தபோது இவ் விருசாராருக்கும் நட்புறவு ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், பிரோஸ்ஷா மேத்தாவால் இம் முயற்சி தடைப்பட்டது. மிதவாதி களின் தலைவர்களான கோகலேயும், பிரோஸ்ஷா மேத்தாவும் இறந்தனர். தின்சா வாச்சா, சந்திரவர்க்கா ஆகிய இருவரும் வயோதிகர்களாக இருந்ததால், அரசியலில் தீவிரப் பங்குகொள்ள வில்லை. எஸ். என். பெனர்ஜி ஒதுங்கி வாழ்ந்தார். எஞ்சி இருந்த மதன்மோகன் மாளவியா மிதவாதிகளின் போக்கில் காங்கிரஸை

நடத்திச் செல்ல இயலவில்லை. அன்னி பெஸன்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கமும் (Home Rule Movement) அவரது பேச்சுகளும் மிதவாதிகளுக்கு ஒரு சோதனையாக அமைந்தன. 1915-ல் கூடிய பம்பாய் காங்கிரஸ் மகாநாட்டில் தீவிரவாதிகளின் பலம் ஓங்கியது. மிதவாதிகளின் செல்வாக்குக் குறைந்தது. காந்தியடிகளின் தலைமையில் இவ்விரு பிரிவினரும் ஒருங்கிணைந்து நாட்டின் நலம் கருதி செயல்படத் தொடங்கினர்.

மிகத் தீவிரவாதிகளின் இயக்கம் (The Terrorist Movement)

ஆங்கிலேயர்களின் கொடுங்கோன்மை ஆட்சியை அகற்றி, இந்தியா சுயாட்சிபெற வன்முறை ஒன்றே ஏற்ற வழி என்று சில தேசியவாதிகள் எண்ணினர். அத்தகையோர் திலகரைத் தலைவராகக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு அஹிம்சை போன்ற அமைதி முறைப் போராட்டங்களில் நம்பிக்கை இல்லாதிருந்தது. ஆங்கில அதிகாரிகளின் அடக்குமுறை ஆட்சியும், அவர்கள் தேசியவாதிகளுக்கு அளித்துவந்த கொடுமையான தண்டனைகளும் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை அதிகப்படுத்தின. இந்திய அரசாங்க நிர்வாகத்தைக் குலைத்து, ஆங்கில அரசுக்கு ஆதரவாக இருப்பவர்களுக்கு இன்னல்கள் விளைவிப்பதே அவர்களின் நோக்கமாக அமைந்திருந்தது.

மிகத் தீவிரவாதிகளின் ஆரம்ப நடவடிக்கைகள் மராட்டிய மாநிலத்தில் தோன்றின. இங்கு ராண்ட் (Rand) என்ற ஆணவம் மிக்க ஆங்கில அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். சியாம்ஜி கிருஷ்ண வர்மா என்பவர், இக் கொலைக் குற்றத்தில் ஈடுபட்டவர் எனக் கருதப்பட்டார். இவர் லண்டனுக்குத் தப்பிச் சென்று இங்கிலாந்திலுள்ள தேசியவாதிகளுக்குத் தலைவராக இருந்தார். இவருக்குப்பின் விநாயக் சவர்கார் என்பவர், இந்த மிகத் தீவிரவாதிகளுக்குத் தலைவரானார். இவர், 20 சுழல் துப்பாக்கிகளையும், வெடிகுண்டுகளையும் இங்கிலாந்திலிருந்து பம்பாயிலுள்ள அபினவ பாரத் என்ற கழக அங்கத்தினர்களுக்கு அனுப்பி வைத்தார். இக் கழகம் விநாயக் சவர்காரின் சகோதரர் கணேஷ் சவர்கார் என்பவரின் தலைமையின்கீழ் இயங்கி வந்தது. இவர்மீது தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார். அடுத்து இக் கழகத்தின் அங்கத்தினர்கள் திரு. ஜாக்சன் என்ற மாவட்ட நீதிபதியைக் கொலைசெய்தனர். இவர்கள் மின்டோ பிரபுவையும் அவரது மனைவியையும் அகமதாபாத்தில் கொலைசெய்ய எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியுற்றது.

வங்காளத்தில் ஸ்ரீ அரவிந்தகோஷ் என்பவரின் சகோதரரான திரு பரீந்திரகுமார் கோஷ் என்பவராலும், சுவாமி விவேகா

னத்தரின் சகோதரரான திரு பூபேந்திர நாத் தத்தா என்பவ ராலும் யுகாந்தர் (Yugantar) என்ற பத்திரிகையின்மூலம் தீவிரக் கருத்துகள் பிரச்சாரம் செய்யப்பட்டன. இப் பிரச்சா ரத்தின் பயனாக வங்காளத்தில் புரட்சிக் கழகங்கள் பல இடங்களில் தோற்றுவிக்கப்பட்டன. இத்தகைய கழகங்களில் அங்கத்தினர் களுக்குத் தீவிரப் புரட்சிக் கருத்துகளும், உடற்பயிற்சியும், துப்பாக்கி சுடும் முறைகளும் பயிற்றுவிக்கப்பட்டன.

1907ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ஆம் தேதி வங்காள உதவி ஆளுநர் பிரயாணம் செய்யும் ரயிலைத் தகர்க்க இக் கழகத்தார் எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியுற்றது. 1908-ல் கென்னடித் தம்பதிகள் கொல்லப்பட்டனர். கல்கத்தா சதிவழக்கில் 39 பேர்களைக் கைதியாக்கித் தண்டித்தனர். ஸ்ரீ அரவிந்தகோஷும் அவரது சகோதரரும் இச் சதி வழக்கில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மதன்லால் திங்ரா என்பவர், இந்தியாவில் மிகத் தீவிரவாதிகளுக்குக் கொடிய தண்டனை ஆங்கிலேயர்கள் அளிக்கின்றனர்கள் என்று எதிர்ப்புத் தெரிவித்து, சர் வில்லியம் கர்சான் வில்லி என்ற அரசியல் அதிகாரி ஒருவரை இங்கிலாந்தில் சுட்டுக்கொன்றார். மதன்லால் விசாரிக்கப்பட்டுத் தூக்கிலிடப் பட்டார். விநாயக் சவர்காரும் விசாரிக்கப்பட்டு ஆயுள்தண்டனை அடைந்தார்.

1907-ல் பி. சி. பால் என்பவரை அரசு கைதியாக்கியதன் விளைவாகத் திருநெல்வேலியில் பெருங் கலகம் ஒன்று ஏற்பட்டுக் காவல் நிலையங்கள் பல தாக்கப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டன. இவ் வழக்கில் 27 பேர் சிறைத்தண்டனை அடைந்தனர்.

பாண்டிச்சேரியில் M. P. திருமலை ஆச்சாரியாவும் V. V. S. ஐயரும் மிகத் தீவிரவாதிகளுக்குப் பயிற்சி அளித்து ஊக்குவித்து வந்தனர். இவர்களிடம் பயிற்சி பெற்றவர்களில் ஒருவரான வாஞ்சி ஐயர் என்பவர், திரு. ஆஷ் என்ற ஆங்கில அதிகாரியை மணியாச்சி சந்திப்பில் 1911ஆம் ஆண்டு ஜூன் 17ஆம் தேதியில் சுட்டுக்கொன்றார். திரு. ஆஷ் திருநெல்வேலி மாவட்ட நீதிபதி யாகப் பணியாற்றிவந்தார்.

சியாம்ஜி கிருஷ்ண வர்மா, அவரது மனைவி, எஸ். ஆர். ராணா ஆகியவர்கள் பாரீஸ் நகரத்திலிருந்துகொண்டு வெளிநாட்டி லுள்ள இந்திய மிகத் தீவிரவாதிகளுக்கு உதவிகள் பல அளித்து வந்தனர். அமெரிக்காவிலும் இவ் வியக்கத்தினர் இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்டனர்.

1913-லிருந்து 1916 வரையிலுள்ள ஆண்டுகளில் வங்காளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் மிகத் தீவிரவாதிகளின் நடவடிக்கை அதிகப்பட்டிருந்தது. இந் நாட்களில் சுமார் 16 பயங்கரச் சம்பவங்கள் ஏற்பட்டன. கவர்னர் ஜெனரல் ஹார்டிஞ்ச் பிரபுவைக் கொல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இச் சதிவழக்கில் அமீர்சந்தும் அவரது சகாக்களும் தூக்கிலிடப் பட்டனர். கனடா நாட்டிலிருந்து திரும்பிய பல சீக்கியர்கள் பஞ்சாப்பில் பல புரட்சிவாதிகளுக்கு உறுதுணையாக ஊக்கமளித்து வந்தனர்.

மிகத் தீவிரவாதிகளின் இயக்கம் நாளாவட்டத்தில் தனது செல்வாக்கை இழந்தது. இவ் வியக்கத்திற்குப் பொதுமக்களின் ஆதரவு இல்லாது போயிற்று. இதில் ஒரு சில வாலிபர்களே ஈடுபட்டிருந்தனர். இவ் வியக்கத்தை முறையோடு இயக்கிச்செல்ல மத்திய அமைப்பு எதுவும் இல்லை. அஸுடோஷ் முகர்ஜி, S. N. பெனர்ஜி போன்ற தலைவர்கள் இவ் வியக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். காந்தியடிகளின் சத்தியாக்கிரக முறை பொதுமக்களைக் கவர்ந்தது. இருப்பினும், சர்தார் பகத்சிங், சுரேந்திர நாத் தாஸ், சந்திரசேகர் அஜாத் போன்றவர்கள் நாட்டின் சுதந்திரத்திற்காகத் தங்கள் உயிரை அர்ப்பணித்தனர். 1942-ல் ஏற்பட்ட 'வெள்ளையனே வெளியேறு' என்ற அரசியல் கிளர்ச்சியிலும், ராயல் இந்தியன் கடற்படைப் புரட்சியிலும் மிகத் தீவிரவாதிகளின் பங்கு அதிகமாகவே இருந்தது என்பது குறிப் பிடத்தக்கது. இவ் வியக்கத்தால் பல ஆங்கில அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இந்தியர்களை இவர்கள் இழிவுபடுத்திவந்த நிலை மாறியது. பல அரசியல் சீர்திருத்தச் சட்டங்கள் தோற்று விக்கப்பட்டன.

முஸ்லீம்களின் இயக்கம் (Muslim Nationalism)

முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதி வழங்குதல்: இந்தியா விற்கு அரசியல் சட்ட ரீதியாகச் சில சலுகைகள் ஆங்கிலேயர்கள் அளிக்க விருப்பம் கொண்டபோது, 1906-ல் இந்திய முஸ்லீம்கள் தங்களுத் தனித் தொகுதி வழங்கவேண்டு மென்றும், சட்டசபைகளில் தங்கள் இனத்தவர்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். இத்தகைய சலுகைகள் அளிக்கப்படவேண்டுமென்று முஸ்லீம் களின் சார்பாக, சர் ஆகாகான் (Sir Agha Khan) என்பவர், வைசிராய் மின்டோ பிரபுவிடம் வற்புறுத்தினார். அலிகார் கல்லூ ரியின் முதல்வராக இருந்த ஆர்சிபால்ட் என்பவர், இவ்விருவரும் சந்தித்துப் பேச வழிவகுத்துக் கொடுத்தார். இச் சந்திப்பில

முஸ்லீம்கள் விரும்பினுல் அவர்களுக்குச் சட்டசபை, மாநகராட்சி, மாவட்ட ஆட்சி, நகராட்சி, தாலுகா நிர்வாகக்குழு போன்றவற்றில் தனித்தொகுதி வழங்குவதாக வைசிராய் மின்டோ பிரபு அறிவித்தார். இத்தகைய சலுகைகள் முஸ்லீம்களுக்கு அளித்தது இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தமென்று ('An epoch in Indian History') மின்டோ பிரபுவின் மனைவியின் குறிப்பேட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மின்டோ பிரபு அளித்த இச் சலுகைகளை இந்தியா அமைச்சராக இருந்த மார்லி பிரபு (Lord Morley) ஏற்றுக்கொள்ள மறுத்தார். மின்டோ பிரபுவின் வற்புறுத்துதலின் பேரில் மார்லி பிரபு இதை ஒப்புக்கொண்டு 1909-ல் ஏற்பட்ட சட்டத்தில் முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதி (Separate electorates) அளிக்க வகைசெய்தார். எனவே, முஸ்லீம்களின் தனித் தொகுதியின் தந்தை மின்டோ பிரபு என்று கூறினுல், அஃது உண்மையேயாகும். இச் சலுகை கிடைக்க ஆங்கில அதிகாரிகளும் முஸலீம் இனத்தவர்களுக்குப் பேருதவி அளித்துள்ளனர். இந்த நிகழ்ச்சிக்குப்பின், டாக்கா நகரைச் சார்ந்த நவாப் சலீம் உல்லா கான் (Nawab Salim Ulla Khan) என்பவர், முஸ்லீம் லீக் என்ற அமைப்பை உருவாக்கினுர். இந்த அமைப்பு, 1905-ல் ஏற்பட்ட வங்காளப் பிரிவினையை ஆதரித்தது. ஆங்கிலப் பொருள்களை இந்துக்கள் பகிஷ்கரித்ததை இவர்கள் வெறுத்தனர். இந்துக்கள் வாங்க மறுத்த பொருள்களை முஸ்லீம்கள் வாங்கி ஆங்கிலேயர்களுக்கு ஆதரவு அளித்து வந்தனர்.

முஸ்லிம் லீக்கின் தோற்றம்: 1906ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் நாள் அகில இந்திய முஸ்லீம் லீக் ஆரம்பிக்கப்பட்டது. இஸ்லாமியச் சமயத்தைக் காக்கவும், ஆங்கில அரசுக்கு வேண்டிய ஆதரவு அளிக்கவும், வளர்ந்து வரும் இந்திய தேசிய காங்கிரசின் பலத்தை ஒடுக்கவும் இவ் வியக்கம் தோற்றுவிக்கப்பட்டது என்று கூறப்பட்டது. அகில இந்திய முஸ்லீம் லீக், சர் சையத் அகமத்கான் என்பவரின் ஆலோசனையின் பேரில் உருவாக்கப்பட்டது என்று சாகா உல்லா என்பவர் குறிப்பிட்டுள்ளார். காங்கிரசுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே எவ்வித ஒற்றுமையும் இல்லாததே முஸ்லீம் லீக் தோன்றியது என்று ஓர் ஆங்கில அறிஞர் கூறியுள்ளார். முஸ்லீம்கள் ஆங்கில அரசுக்கு நன்றி உள்ளவர்களாக இருக்கும்போது, காங்கிரஸ் வாதிகள் ஆங்கில அரசை இந்தியாவிலிருந்து அகற்ற முயற்சிக்கின்றனர். சமூக முறையில் இந்து முஸ்லீம்கள் ஒன்றுபட்டுப் பழகினுலும் அரசியல் துறையில் ஒருக்காலும் இந்துக்களுடன் இணைய மாட்டோம் என்று சர் சையத் அகமத்கான் கூறியுள்ளார். அகில இந்திய முஸ்லீம் லீக்கிற்குச் சர் அகாகான் தலைவராக இருந்தார்.

இந்திய முஸ்லீம்களின் நல்வாழ்விற்கும் தளர்ச்சிக்கும் ஆங்கில நிர்வாகமே ஆதரவளிக்கும். எனவே, ஒவ்வொரு முசல்மானும் ஆங்கில அரசு இந்தியாவில் நிலைத்திருக்கப் பாடுபடவேண்டுமென்று சர் அகாகான் அறிவுரை வழங்கினர்.

முதல் முஸ்லீம்லீக் மகாநாடு : முதல் அகில இந்திய முஸ்லீம் லீக் மகாநாடு, 1907ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ஆம் நாள் கராச்சியில் கூடியது. சிந்து மாகாணத்திலுள்ள கராச்சி நகர், வேண்டுமென்றே இம் மகாநாடு நடைபெறும்பொருட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மகமது பின் காசிம் என்பவர், முதன் முதலில் இங்குத்தான் படை எடுத்து வந்து இஸ்லாமிய சமயத்தைப் புகுத்தினர். எனவே, இஃது இஸ்லாமியர்களுக்குப் புனிதமான இடம். சிறுவயதினரான காசிம் தலைமையின்கீழ் ஒரு சில வீரர்கள் சிந்துவில் இஸ்லாமிய சமயத்தைப் போதித்து, மக்களை நல்வழிப்படுத்த முடிந்ததென்றால், ஏழு கோடி மக்களைக்கொண்ட நாம், ஏன் நமது வாழ்வை மாற்றி அமைத்து வளப்படுத்திக் கொள்ளக்கூடாது என்று இம் மகாநாட்டின் தலைவர் எடுத்துக் கூறினர். மேலும் ஆங்கில அரசில் முஸ்லீம்களுக்குத் தனித்தொகுதி சலுகை வழங்கப்பட்டதற்கு அரசுக்கு இஸ்லாமிய மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்தார். மின்டோ-மார்லி சீர்திருத்தத்தை அகில இந்திய முஸ்லீம் மகாநாடு வரவேற்றது. காரணம் அவர்கள் கேட்ட சலுகைகள் அனைத்தும் அரசு அளித்தது.

துருக்கியும், இந்திய முஸ்லீம்களும் : 1911-ல் திரிபோலி (Tripoli) யைக் கைப்பற்ற இத்தாலி, துருக்கி நாட்டைத் தாக்கிய போது, இந்திய முஸ்லீம்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இங்கிலாந்து அரசைத் துருக்கி நாட்டிற்கு உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அலி சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டவர்களில் ஒருவரான மௌலாஞ மகமது அலி, துருக்கிக்கு இங்கிலாந்து நாடு இந்த ஆபத்துக் காலத்தில் உதவி அளித்தாலொழிய துருக்கி, தன் நாட்டில் செய்ய விரும்பும் சீர்திருத்தங்களை நிறைவேற்ற இயலாது என்று ஆங்கில அரசப் பிரதிநிதியைச் சந்தித்து எடுத்துக் கூறினர். துருக்கி, போரில் வெற்றிபெறுமாறு இந்திய முஸ்லீம்கள் இறைவழிபாடு நடத்தினர். இத்தாலி, துருக்கியைத் தாக்கியதை எதிர்த்துத் தீர்மானங்கள் நிறைவேற்றினர். பல கூட்டங்கள் கூட்டி இத்தாலியை வன்மையாகக் கண்டித்தனர். போருக்குப் பொருள் திரட்டி அனுப்பிவைத்தனர். ஆங்கிலப் பேரரசிற்கு இந்திய முஸ்லீம்கள் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். இத்தாலியப் பொருள்களை வாங்கக்கூடாதென இந்திய முஸ்லீம்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

பால்கன்போரும் இந்திய முஸ்லீம்களும் : 1912-13-ல் ஏற்பட்ட பால்கன் போர்களின் காரணமாக மறுபடியும் இந்திய முஸ்லீம்கள் ஒரு இக்கட்டான நிலைக்கு ஆளாக்கப்பட்டனர். பால்கன் போர்களால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் துருக்கி மிகவும் அவதியுற்றது. துருக்கி முஸ்லீம்களுக்கு உதவ வேண்டுமென்று இந்தியாவில் வேண்டுகோள் விடப்பட்டது. மதிப்பிற்குரிய அகாகான், 2,000 பவுன் நன்கொடை வழங்கியதோடு, இந்திய முஸ்லீம்கள் அனைவரும் தங்களால் இயன்ற உதவிகளை அளிக்கும்படி கேட்டுக்கொண்டார். சகோதர முசல்மான் துன்புறும்போது அவர்களுடைய துன்பம் துடைப்பது தான் இஸ்லாமியர்களின் பண்பு என்று, மௌலானா சௌகத் அலி கூறி, இஸ்லாமிய வாலிபர் பலரைத் திரட்டித் துருக்கியின் சேவைக்காக இந்தியாவிலிருந்து அனுப்பி வைத்தார். அலிகார் கல்லூரி மாணவர்கள் தங்கள் உணவைக் குறைத்துக்கொண்டு, அதன் மூலம் எஞ்சிய பணத்தைச் சேகரித்துத் துருக்கி நாட்டிற்கு அனுப்பி வைத்தனர். மாணவர்கள் இவ் விஷயத்தில் காட்டும் அக்கறையைக் கண்டு, மாணவர் படிக்கும் காலங்களில் அரசியலில் தலையிடக்கூடாதென்றும், உணவைக் குறைத்துக் கொண்டு தங்கள் உடல் நலத்தைக் கெடுத்துக்கொள்ளலாகாதென்றும் யு. பி.-ன் உதவி ஆளுநர் அறிவுரை கூறினார்.

முதல் உலகப்போரும் இந்திய முஸ்லீம்களும்

1914-ல் முதல் உலகப் போர் ஆரம்பித்தபோது துருக்கி நாடு, பிரிட்டனுக்கு எதிராகப் போர் தொடுத்தது. மறுபடியும் இந்திய முஸ்லீம்களை ஒரு சோதனைக்குள்ளாக்கியது. துருக்கி நாடு அழியாது பலமுள்ள நாடாக இருக்கவேண்டும் என்று இந்திய முஸ்லீம்கள் விரும்பினர். அத்துடன் ஆங்கிலப் பேரரசுக்கு நன்றி உள்ளவர்களாகவும் இருக்க ஆசைப்பட்டனர். எனவே இந்த இக்கட்டான நிலையில் என்ன செய்வதெனத் தெரியாது தவித்தனர். இறுதியாக ஆங்கிலேயருக்கு எதிராக எதிலும் இறங்காமல் இருப்பது நலம் என எண்ணி அமைதி அடைந்தனர். இதையே ஹாஜி ரஹ்மான்பக்ஸ், என்பவர் ராவல்பிண்டியில் கூடிய மகமதியர்களின் 28ஆவது கல்வி மகாநாட்டில் வலியுறுத்தினார். இதைப்பற்றி அகாகான் குறிப்பிடும்போது, 'ஜெர்மனி துருக்கி நாட்டை போரில் ஈடுபடச் செய்துவிட்டது, இச் செயலை இந்திய முஸ்லீம்களாகிய நாம் வேதனையோடு பொறுத்துக்கொள்ள வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார். மின்டோ இறந்தபோது முஸ்லீம் இனத்தவர்கள் மிகவும் வேதனைப்பட்டனர். கர்சான் பிரபுவும், மின்டோ பிரபுவும் முஸ்லீம்களுக்குப் பல

சலுகைகள் அளித்து அவற்றின்மூலம் அரசியல் உலகத்தில் ஏற்றத்தை அளித்தவர்கள் என்று இஸ்லாமியப் பத்திரிகை ஒன்று கூறியது.

லக்நௌ ஒப்பந்தம் (Lucknow Pact)

முஸ்லீம் லீக்கின் தலைவராக இருந்த மகமது அலி ஜின்னாவிற்கும் இந்திய தேசிய காங்கிரசுக்கும் 1916ஆம் ஆண்டில் லக்நௌ என்ற நகரில் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அதன்படி முஸ்லீம்களுக்கு அரசு அளித்த தனித் தொகுதி முறையைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. அத்துடன் இதுவரைக்கும் கொடுக்கப்படாத பஞ்சாப், மத்திய மாகாணங்களிலும் தனித் தொகுதித் தேர்தல் முறையை ஏற்கவும் காங்கிரஸ் சம்மதித்தது. இவ் வுடன்படிக்கையின் பலனாக இதுகாறும் 25 சதவீதமாக இருந்த முஸ்லீம்களின் பிரதிநிதித்துவம் 50 சதவீதமாக உயர்ந்தது. வங்காளத்தில் முஸ்லீம் மக்கள் தொகையின் அடிப்படையில் 75 சதவீதம் இடங்கள் ஒதுக்கப்பட்டன. இருந்தும் வங்காளத்தில் குறைவான இடங்கள் ஒதுக்கப்பட்டன என்று முஸ்லீம்கள் குறைபட்டுக்கொண்டனர். சிறுபான்மையாக இருக்கும் மாநிலங்களில் முஸ்லீம்களுக்குத் தனித் தொகுதி தேர்தல் அளித்துப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. ஆனால் முஸ்லீம்கள் பெருவாரியாக இருக்கும் இடங்களில் இம்முறை தேவை இல்லை என்று எடுத்துக் கூறப்பட்டது. மத்திய அரசு சட்டசபைக் குழுவில் முஸ்லீம்களுக்கு மூன்றில் ஒரு பகுதி இடம் ஒதுக்கப்பட்டது. முஸ்லீம்களுக்கென ஏற்படும் சட்டத்தை நான்கில் மூன்று பகுதி அங்கத்தினர்கள் எதிர்த்தால், அது சட்டமாக்கப்படக் கூடாது என்று வசதி செய்து கொடுக்கப்பட்டது. இவை அனைத்தும் 1919ஆம் ஆண்டில் நிறைவேறிய சட்டத்தில் இடம் பெற்றுள்ளன. லக்நௌ ஒப்பந்தம் இந்து முஸ்லீம்களின் ஒற்றுமையை உணர்த்தும் ஒரு சாசனமாகக் கருதப்படுகின்றது. ஆங்கிலம் படித்த நடுத்தர வர்க்கத்தினர் இந்து முஸ்லீம் ஒற்றுமை உணர்வை உருவாக்க முடியும் என்பதற்கு லக்நௌ ஒப்பந்தம் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

3. மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாறும் கிலாபத் இயக்கமும்

கத்தியவார் என்று வழங்கப்பட்ட குஜராத் மாநிலத்தில், போர்ப்பந்தர் என்னுமிடத்தில் 1869ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி பிறந்தார்.

இவரது தந்தையார் பெயர் காபா காந்தி, தாயார் பெயர் புத்திலி பாய் என்பது. உயநிலைப்பள்ளிக் கல்வியை முடித்தபின் இவர், 1888ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்று மூன்று ஆண்டுகள் தங்கி பாரிஸ்டர் பட்டம்பெற்று 1891ஆம் ஆண்டில் இந்தியா திரும்பினார். ராஸ்கோட், பம்பாய் ஆகிய இரு இடங்களிலும் அவர் வழக்கறிஞராகப் பணியாற்றினார். ஆனால் இத் தொழிலில் இவர் வெற்றி பெறவில்லை. 1893ஆம் ஆண்டில் போர்பந்தரிலுள்ள ஒரு முஸ்லிம் வணிகரின் வழக்குச் சம்பந்தமாகத் தென் ஆப்பிரிக்காவிலுள்ள நேட்டால் என்ற இடத்திற்கு இவர் செல்ல நேர்ந்தது. அங்கு வாழ்ந்த இந்தியர்களின் அவல நிலையைக் கண்டு மனம்பொறாத இவர், அவர்களின் துன்பம் துடைக்கத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். இத் துறையில் இவர் தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்தாலும், ஐரோப்பியர்களாலும் பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டார். இவரைக் கொல்லவும் ஐரோப்பியர்கள் முயன்றதுண்டு. ஆனால் இவர் இவை அனைத்தையும் பொறுமையுடன், அமைதியான முறையில் ஏற்றுவந்தார். 1906ஆம் ஆண்டில் ஏற்பட்ட போயர்கள் போரில் 24 இந்தியர்களைச் சேர்த்துக்கொண்டு ஆம்புலன்ஸ் படை ஒன்றை உருவாக்கி, ஆங்கிலேயருக்கு ஆபத்து நேர்ந்தபோது பேருதவி அளித்தார். இத் தருணத்தில் இந்தியாவில் அரவிந்தர், திலகர் போன்ற தலைவர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் பல தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

தென் ஆப்பிரிக்காவிலுள்ள ஆசிய நாட்டவர், பெருவிரல் ரேகை வைத்துத் தம்மை அந்நியர் என்ற முறையில் அழகு செய்துகொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டனர். அப்பொழுதுதான் இவர் தமது அரசியல் ஆயுதமான சத்தியாக்கிரகத்தைப் (Satyagraha) பயன்படுத்தி, 'செய் அல்லது செத்துமடி' என்ற உணர்வை இந்தியர்களுக்கு ஊட்டி, தம் முயற்சியில் வெற்றி கண்டார். இந்தியர்கள் டிரான்ஸ்வாலுக்குள் நுழையக்கூடாது என்று தென் ஆப்பிரிக்க அரசு, 1907ஆம் ஆண்டில் அறிவித்தபோது சத்தியாக்கிரக முறையைப் பயன்படுத்தி அதிலும் வெற்றி கண்டார். இறுதியாகத் தென் ஆப்பிரிக்க அரசியல் தலைவரான தளபதி ஸ்மட்ஸ் (General Smuts) என்பவர், காந்தியுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டு இந்தியர்களுக்கு எதிராக இருந்த பல சட்டங்களை நீக்கினார். தென் ஆப்பிரிக்காவில் காந்தியடிகள் 21 ஆண்டுகள் பணியாற்றி, வெள்ளையர்களிடம் ஒப்பந்தக் கூலிகளாக வேலை பார்த்து வந்த இந்தியர்களின் இழிநிலையையும், துன்பத்தையும் ஓரளவு துடைப்பதில் வெற்றி கண்டார்.

காந்தியடிகளின் ஆரம்ப அரசியல் பணிகள்

கோபாலகிருஷ்ண கோகலே, காந்தியை லண்டன் வழியாக இந்தியாவிற்கு வருமாறு அழைத்தார். அதற்கிணங்க காந்தி முதலாவது உலகப் போர் ஆரம்பித்த இரண்டாவது நாளில், அதாவது, 1914ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6ஆம் நாள் லண்டன் நகர் வந்து சேர்ந்தார். இங்கிலாந்திலுள்ள இந்தியர்கள், இத் தருணத்தைப் பயன்படுத்தி, இந்தியா தனது விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்தனர். இதற்கு மாருக, காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் செய்ததுபோல் ஆம்புலன்ஸ் படை ஒன்றை நிறுவி, ஆங்கிலேயர்களுக்குப் போரில் உதவி புரிந்தார். ஆனல், ஆங்கில அதிகாரிகள் இந்தியர்களை நடத்திய முறையைக் கண்டு காந்தியே மனம் வெதும்பி, சத்தியாக் கிரக முறையைக் கொண்டு இந்தியர்களின் இழிநிலையைப் போக்க முனைந்தார்.

1915ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவிற்கு வந்த இவரை, இந்திய சமூகத்தின் பணியாளர்கள் (Servents of Indian Society) குழுவில் சேர்த்துக்கொள்ள கோகலே விரும்பியபோது பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். எனவே, காந்தி தனித்துச்சென்று அகமதாப்பாத்திலுள்ள சபர்மதி ஆற்றின் அருகில் ஆசிரமம் ஒன்று அமைத்துச் சத்தியாக்கிரகப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தார். காந்தியடிகள் அரசியலில் நேரடியாக இறங்கா விடினும், அவ்வப்போது அரசாங்கத்தின் தவருன போக்குகளைச் சுட்டிக்காட்டி வந்தார். சபர்மதி ஆசிரமத்தில் இருந்தவாறு ஏழை மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த கதர் இயக்கம் போன்ற ஆக்கப்பணிகளைத் தொடங்கினர். தீண்டாமைப் பழக்கத்தை ஒழிக்க அரும்பாடுபட்டார். கிராமக் கைத்தொழில் களுக்குப் புத்துயிர் அளித்து அவற்றை முன்னேறச் செய்தார். தியாக உணர்ச்சி முதலிய அரிய பண்புகளை மேலோங்கச் செய்தார். இவர் மானிட இனத்தவரிடங்கொண்ட பற்றையும், அவர்களுக் காகச் செய்யும் அரிய சேவைகளையும் கண்டு மக்கள் இவரை 'மகாத்மா' என்று போற்றலாயினர்.

இந்தியப் போராட்டத்தில் காந்தியடிகளின் பங்கு

1917-ல் காந்தியடிகள் பீகார் மாகாணத்திலுள்ள சம்பரான் என்னும் இடத்திற்குச் சென்றார். அங்கு அவுரி பயிரிடும் தோட்டத் தொழிலாளிகள் படும் துன்பங்களுக்குப் பரிகாரம் தேடச் சத்தியாக்கிரக முறையைப் பயன்படுத்தினர். இம் முயற்சி யில் இவர் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டபோதி லும், தோட்டத் தொழிலாளர்களின் துன்பங்களை, வெளி

உலகிற்கு எடுத்துரைப்பதில் வெற்றி பெற்றார். காந்தியடிகள் கையாண்ட சத்தியாக்கிரகம், அல்லது அமைதியான முறையில் நடைபெற்ற சட்டமறுப்பு இயக்கம் பெரும் வெற்றி பெற்றது. இவ் வெற்றியே காந்தியடிகளை இந்திய அரசியல் தலைமைப் பதவிக்கு ஆளாக்கியது. சம்பரான் கிராமங்களில் மக்களுக்கு நிர்மாணப் பணிகள் புரியும்போது, அகமதாபாத்தில் நூற்பாலைகளில் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. காந்தியடிகள், அகமதாபாத் நகருக்குச் சென்று 21 நாள் நடந்த வேலை நிறுத்தத்திற்குத் தலைமைதாங்கி அதனை வெற்றிப் பெறச் செய்தார். இதை அடுத்து, கெய்ரா (Kaira) மாவட்டத்தில் விவசாயிகளிடையே வரிகொடா இயக்கம் ஒன்றை ஆரம்பித்து அதிலும் சத்தியாக்கிரக முறையைப் புகுத்தி இறுதியில் வெற்றி கண்டார். இம் முயற்சியில் சர்தார் வல்லபாய்ப் பட்டேல் காந்திக்கு உறுதுணையாக இருந்தார். இச் சம்பவம் விவசாய மக்களையும் இந்திய விடுதலை இயக்கத்தில் பங்குகொள்ள வைத்தது.

ரௌலட் சட்டத்திற்கு எதிராகக் கிளர்ச்சி (Agitation against Rowlatt Bills).

ரௌலட் கமிட்டி கொண்டுவந்த இரண்டு அடக்குமுறைச் சட்டங்களும் 1919-ல் நிறைவேற்றப்பட்டபோது, காந்தியடிகள் அதை எதிர்க்கத் தீர்மானித்தார். 'சத்தியாக்கிரக சபை' என்ற ஒன்றை நிறுவி அதற்குத் தலைமை வகித்தார். இம் முயற்சியில் முதல்படியாக நாடு முழுவதும் 1919ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ஆம் நாள் ஹர்த்தால் அல்லது வேலைநிறுத்தம் செய்யவேண்டுமென்று மக்களைக் கேட்டுக்கொண்டார். அதன்படி அன்று நாடு முழுவதும் வேலை நிறுத்தம் அனுசரிக்கப்பட்டது. இது காந்தி அடிகளுக்கு ஒரு பெரும் வெற்றியே. தில்லியில் நடந்த வேலை நிறுத்தத்தில் சில உயிர்ச் சேதமும் ஏற்பட்டது. பலர் காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோது, ஆங்கிலச் செவிலியர்கள் (Nurses) மருத்துவ உதவி செய்ய மறுத்துவிட்டனர். இதைத் தொடர்ந்து பம்பாய், அகமதாபாத் ஆகிய இடங்களில் கிளர்ச்சிகள் எழுந்தன. வேலைநிறுத்தத்தின்போது வன்முறைகள் அதிகரித்ததால் மூன்று நாள் உண்ணாவிரதம் இருந்தார். வேலைநிறுத்தத்தையும் விலக்கிக் கொண்டார்.

பஞ்சாப் படுகொலை (The Tragedy of Punjab): காந்தியடிகள் சத்தியாக்கிரக முறையைக் கைவிட அறிவிக்கும் முன்பே, பஞ்சாப்பில் நிலைமைக் கட்டுக்கடங்காது கொந்தளிப்பில் இருந்தது. பஞ்சாப் மாநிலத்தின் ஆளுநர், சர் மைக்கேல் ஓ'டயர் (Sir Michael O'Dwyer) என்பவர் மக்களை அவமானத்திற்

குள்ளாக்கிக் கொடுமைப்படுத்தி வந்தார். இவர் மக்களிடம் போருக்காகக் கட்டாயப் பணம் வசூலித்து வந்தார். ராணுவத்திற்கு வீரரை அனுப்பாத குடும்பங்களின் நிலங்களைப் பறிமுதல் செய்து வந்தார். ஏப்ரல் 6ஆம் நாள் நடந்த வேலைநிறுத்தம் அமைதியாகச் சென்றது. 10ஆம் நாள் காந்தியடிகள் பம்பாயில் கைதுசெய்யப்பட்டார் என்ற செய்தி லாகூரில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. 200 அல்லது 300 மாணவர்கள் கொண்ட ஊர்வலம் ஒன்றைப் போலீசார் சுட்டுச் சேதம் விளைவித்தனர். அமிர்தசரசில் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில் கூடிய 15,000 மக்களைக் கலைந்து போகும்படி அறிவிக்காமல் ராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டனர். தப்பிச்செல்ல இயலாத கூட்டத்தின்மீது துப்பாக்கிக் குண்டுகள் காலியாகும்வரை சுட்டனர். ஏராளமான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் இதில் உயிரிழந்தனர். இச் சம்பவத்தைப் போன்று, குஜ்ரன்வாலா, கசூர் போன்ற இடங்களிலும் போலீசின் வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. ஜாலியன் வாலாபாக்கில் இறந்தவர் மாத்திரம் 1,000 பேர் என கணக்கிடப்பட்டது. மொத்தம் 1,650 சுற்றுகள் சுடப்பட்டன.

அரசாங்கம் காந்தியடிகளைக் கைதுசெய்து ஆறுண்டு சிறைத் தண்டனை அளித்தது. அப்போது காந்தியடிகள் தமது வாக்குமூலத்தின்மூலம் தமது அரசியல் கொள்கைகளின் உயரிய நோக்கத்தை உலகமே அறியச் செய்தார். இவரது உயர்ந்த கொள்கைகளை நீதிபதியே ஒப்புக்கொண்டார். எரவாடா சிறையில் இருந்தபோது காந்தியடிகளுக்குக் கடுமையான வயிற்று நோய் கண்டது. அதனால் இவர் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்பட்டார்.

1924ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்து–முஸ்லீம் வகுப்புக் கலவரங்கள் மூண்டன. இவற்றில் ஏராளமான பேர் கொல்லப்பட்டனர். இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்காகக் காந்தியடிகள் அவ்வாண்டு செப்டம்பர் மாதம் 24ஆம் நாள் முதல் 21 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். 1932-ல் தாழ்த்தப்பட்ட மக்களை இந்து சமூகத்திலிருந்தும் பிரித்து, தேர்தலில் தனித் தொகுதியாக்க அரசாங்கம் முயன்றது. இதை எதிர்த்துக் காந்தியடிகள் பூனா நகரில் சாகும் வரை உண்ணா நோன்பு ஆரம்பித்தார். டாக்டர் பி. ஆர். அம்பேத்காரின் உடன்பாட்டின்பேரில் அரசு, தன் திட்டத்தைக் கைவிடவே உண்ணாவிரதத்தை நிறுத்திக்கொண்டார். இதைத் தொடர்ந்து சைமன் குழு புறக்கணிப்பு (1927), உப்புச் சத்தியாக்கிரகம் (1930) போன்ற இயக்கங்களை நடத்தி வெற்றி கண்டார்.

லண்டனில் நடந்த வட்டமேசை மகாநாட்டிலும் (1931) கலந்து கொண்டார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்தியடிகளின் பங்கு

காந்தியடிகள் தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டினைத் தமது வாழ்க்கையின் முக்கியக் குறிக்கோள்களில் ஒன்றாகக் கருதினார். இதைத் தொடர்ந்து கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்குக் கதர் உற்பத்தியையும், குடிசைத் தொழில் வளர்ச்சியையும் வலியுறுத்தி வந்தார். சைமன் குழுவின் அறிக்கை மாநிலச் சுயாட்சியை வலியுறுத்தியதால், காந்தியடிகள் சத்தியாக்கிரக முறையை ஆரம்பித்துத் தமது வெறுப்பைத் தெரிவித்துக் கொண்டார், 1930-ல் காந்தியடிகள், தமது சகாக்களுடன் கால்நடையாகச் சென்று தண்டி (Dandi) என்ற இடத்தில் உப்புக் காய்ச்சினார். இதற்கு புகழ்பெற்ற ‘டண்டி உப்புச் சத்தியாகிரகம்’ என்று பெயர், இம் முயற்சியில் காந்தியடிகளும் வேறுபல தலைவர்களும் கைதியாக்கப்பட்டனர். 1931-ல் காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டதால் காந்தியடிகள் சத்தியாகிரக முறைகளை நிறுத்திக்கொண்டார். கைதியானவர்களை விடுவித்து அடக்குமுறைகளை அகற்றுவதாக இர்வின் உறுதியளித்தார்.

இரண்டாவது உலக யுத்தத்தில் இந்தியர்களைக் கலக்காமல் இந்தியாவை யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதற்காக இந்தியத் தலைவர்கள் போர் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க மறுத்தனர். 7 மாநிலங்களில் பதவியிலிருந்த அமைச்சர்கள் ராஜினாமா செய்தனர். பிரிட்டிஷ் அரசாங்கம் சர் ஸ்டாபோர்ட்டு கிரிப்ஸ் என்பவரை இந்திய அரசியலில் ஒரு சுமுகமான உறவு ஏற்படுத்த இந்தியாவிற்கு அனுப்பிவைத்தது. இவரது முயற்சி எதிர்பார்த்த பயனை அளிக்கவில்லை.

வெள்ளையனே வெளியேறு இயக்கம்

இரண்டாவது உலகப் போரின்போது இந்திய சுதந்திரப் போராட்டம் தீவிரம் அடைந்தது. 1942ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8ஆம் நாள் ‘வெள்ளையனே வெளியேறு’ என்ற இயக்கத்தைக் காந்தியடிகள் பம்பாய் நகரில் ஆரம்பித்தார். இதன் பயனாக நாட்டில் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டது. கிளர்ச்சியை அடக்கும்பொருட்டுக் காந்தியடிகளையும் ஏனைய இந்தியத் தலைவர்களையும் அரசாங்கம் சிறையில் அடைத்தது. இவருடைய மனைவியார் கஸ்தூரிபாய் 1944ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ஆம் நாளில் சிறையிலேயே காலமானார். 1945-ல் காந்தி

யடிகளும் மற்றத் தலைவர்களும் விடுதலையாயினர். இரண்டாம் உலகப் போருக்குப்பின் பிரிட்டன் தனது செல்வாக்கை இழந்தது. இங்கு நடந்த பொதுத் தேர்தலில் இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்குவதை ஆதரிக்கும் தொழிற்கட்சி அரசைக் கைப்பற்றியது. இதன் பயனாக, 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள் இந்தியா விடுதலை அடைந்தது. நாடு இந்தியா, பாக்கிஸ்தான் என இரு பகுதிகளாகப் பிரிந்த காரணத்தால், இந்துமுஸ்லீம் வகுப்புக் கலவரங்கள் நாடு முழுவதிலும், குறிப்பாக வங்காளம், பீகார் மாநிலங்களில் ஏற்பட்டன.

முஸ்லீம் மக்களிடம் அன்பாக இருக்கவேண்டும் என்றும், பாக்கிஸ்தான் வளர்ச்சிக்காக இந்தியா 12 கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும் காந்தியடிகள் கூறிவந்தார். இச் செயல் இந்துக்களுக்குக் குறிப்பாக, மராட்டியருக்குக் காந்தியடிகளின்மீது வெறுப்புத் தோன்றியது. 1948ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் நாள் மாலையில் காந்தியடிகள் பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் பிர்லா மந்திர் என்ற மாளிகையிலிருந்து வந்தபோது, 'கோட்சே' என்ற மராட்டிய இனத்தைச் சேர்ந்தவன் துப்பாக்கியால் காந்தியடிகளின் மார்பில் சுட்டான். கூப்பிய கைகளுடன் ராம், ராம் என்று இறைவன் பெயரைக் கூறிக்கொண்டே மகாத்மா காந்தி மண்ணில் வீழ்ந்து உயிர் நீத்தார். காந்தியடிகளின் மறைவு உலகெங்கும் ஆழ்ந்த துக்கத்தை உண்டு பண்ணியது. இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு உயிர்நீத்தபோது அவருடைய சீடர்கள் எத்தகைய துன்பக் கண்ணீர் சிந்தினரோ அத்தகைய துன்பக் கண்ணீர் உலகமாந்தர் சிந்தினர்.

கிலாபத் இயக்கம் (Khilafat Movement)

முதல் உலகப்போரின்போது துருக்கி நாடு, ஜெர்மனியோடு ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போரிட்டது. இப் போரில் ஜெர்மனி தோல்வி அடைந்ததால் அதன் நட்பு நாடான துருக்கியை ஆங்கிலேயர் கைப்பற்றினர். 1919ஆம் ஆண்டில் செய்துகொண்ட செவரிஸ் (Severes) என்ற உடன்படிக்கையின் படி துருக்கிப் பேரரசு சீர்குலைந்தது. துருக்கியின் சுல்தான் மோசமான நிலைமைக்கு ஆளாக்கப்பட்டார். இதைப்போன்று ஆங்கிலேயர்கள் ஆப்கானிய மன்னர் மீதும் அடிக்கடி போர் தொடுத்து அவரைப் பல இன்னல்களுக்கு உள்ளாக்கி வந்தனர். இவ்விரு சம்பவங்களும், இந்திய முஸ்லீம் இனத்தவர்கள் மனத்தை வெகுவாகப் பாதித்தன. அவர்களின் சினம் ஆங்கில அரசின்மீது திரும்பியது. துருக்கிப் பேரரசை அழிக்காமல் பாது காக்கவேண்டும் என்று இந்திய அரசு, இங்கிலாந்து அரசிடம்

வற்புறுத்த வேண்டும் என்பதற்கு இந்தியாவில் முஸ்லீம் களிடையே ஓர் இயக்கம் தோன்றியது. இதற்குக் கிலாபத் இயக்கம் (Khilafat Movement) என்று பெயர். அலி சகோ தரர்கள் (Ali brothers) என்று அழைக்கப்பட்ட மகமது அலியும் சௌகத் அலியும் (Muhamad Ali and Shaukat Ali) இவ் வியக்கத்தின் தலைவர்கள். இவ்வியக்கத்திற்குக் காந்திஜீயின் முழு ஆதரவு இருந்ததால், இந்திய முஸ்லீம்களிடையே இது பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தது. மௌலானா அபுல் கலாம் ஆசாத் (Maulana Abul Kalam Azad) போன்ற தேசிய முஸ்லிம் தலைவர் களும் இதில் தீவிர அக்கறை காட்டினர்.

முதல் உலகப் போர் நடந்தபோது ஆங்கிலப் பிரதமராக இருந்த லாயிட் ஜார்ஜ், இந்திய முஸ்லீம்களுக்குத் துருக்கியைப் பற்றிப் பல உறுதிமொழிகள் அளித்திருந்தார். அதை நிறைவேற் றும் பொருட்டும் துருக்கியர்களுக்கு அநீதி இழைக்காமல் இருக்கும் பொருட்டும், இந்துக்களின் ஆதரவைக் கிலாபத் இயக்கத்திற்கு அளிப்பது நியாயமே எனக் காந்திஜி உணர்ந்தார். அவர் கிலாபத் இயக்கத்தை இந்திய சுதந்திர இயக்கத்திற்குச் சமமாக வைத்து எண்ணும் அளவிற்கு இதற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தார். இந்திய வைசிராய்க்கும் இக் கருத்துப்பட காந்தியடிகள் கடிதம் ஒன்று எழுதினர். அதில் இஸ்லாமியர்களின் சமய உணர்வுக்கும், இந்திய விடுதலைக்கும் வெகு விரைவில் தீர்வு காண்பதே ஆங்கிலப் பேரரசின் தலையாய நோக்கமாக இருக்கவேண்டும், இதற்கு மாறுபட்ட எச்செயலும் ஆங்கிலப் பேரரசின் நலத்திற்குப் பாதகமாக முடியும் எனச் சுட்டிக் காட்டினர். எனவே, 1919ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் நாள் டெல்லியில் கூடிய கிலாபத் இயக்க மகாநாட்டில் காந்திஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இந்து முஸ்லீம் ஒற்றுமை என்றும் காணாத உச்சக் கட்டத்தை அடைந்தது. முதல் உலகப் போரின் வெற்றி விழாவில் இந்திய முஸ்லீம்கள் கலந்துகொள்ளக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. துருக்கி நாட்டின் பிரச்சினையை இந்திய முஸ்லீம்களின் விருப்பத்திற்கிணங்க தீர்க்காவிடில் ஆங்கில அரசுக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கம் செயல்படுத்தப்படும் என்றும், அந்நியப் பொருள்கள் ஒதுக்கித் தள்ளப்படும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. காந்தியடிகள் இத்:தீர்மா னங்களில் முக்கியப் பங்கு எடுத்துக்கொண்டார் என்பது வெளிப்படை. இத் தீர்மானங்கள் கல்கத்தாவில் நடந்த முஸ்லீம் லீக் கூட்டத்திலும் வலியுறுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்டன.

அலி சகோதரர்களும்—கிலாபத் இயக்கமும்

துருக்கி நாட்டைத் துண்டாவதைத் தடுக்கும் முயற்சியில் அலி சகோதரர்கள், இந்திய முஸ்லீம்களிடையே தீவிரப் பிரச்சாரம் செய்து வந்தனர். எனவே, இந்திய அரசு இவர்களைப் பிடித்து நான்கு ஆண்டுச் சிறைத் தண்டனை அளித்தது. 1919ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதியில் இவர்கள் விடுவிக்கப்பட்டனர். இச் சமயத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் (Indian National Congress) அமிர்தசரசில் கூடியது. அலி சகோதரர்களின் விடுதலை இம் மகா நாட்டில் பெரும் மாறுதலைத் தோற்றுவித்தது. காந்திஜிக்கு அலி சகோதரர்களிடம் மிகுந்த பற்றுதல் இருந்ததால், அமிர்தசரஸ் காங்கிரஸில் கிலாபத் இயக்கம்பற்றி விவாதிக்கப்பட்டது. இந்திய தேசிய காங்கிரஸ், கிலாபத் இயக்கத்திற்குத் தனது முழு ஆதரவையும் அளிக்க முன்வந்தது. காந்திஜியின் தலைமையில் இவ்வியக்கம் வலுவடையத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன.

அமிர்தசரசில் காங்கிரஸ் மகாநாடு முடிந்தபின், அகில இந்திய கிலாபத் மகாநாடு ஒன்றை நடத்தினர். அதன் பயனாக வைசிராயைச் (Viceroy) சந்திக்கத் தூதுக்குழு ஒன்றை மகமது அலி தலைமையின்கீழ் அனுப்புவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இக் குழுவில் இந்து முஸ்லீம் பிரதிநிதிகள் கலந்திருந்தனர். 1920ஆம் ஆண்டு ஜனவரி 19ஆம் நாள் இக் குழு வைசிராயைச் சந்தித்துத் தங்கள் கோரிக்கைகளை எடுத்துரைத்தது. அவர்கள் கொடுத்த விண்ணப்பத்தில் இந்து அரசியல் தலைவர்களான காந்திஜி, சுவாமி சித்தானந்தா, பண்டித மோதிலால் நேரு, பண்டித மதன்மோகன் மாளவியா போன்றவர்கள் கையொப்பமிட்டிருந்தனர். ஆனால் இந்திய வைசிராயும், இங்கிலாந்துப் பிரதமர் லாயிட் ஜார்ஜும், (Lloyed George) அளித்த பதில் முஸலீம்களுக்கு ஊக்கம் அளிப்பதாக அமையவில்லை. ஆகவே, ஆங்கில அரசின் போக்கை உணர்ந்த காந்தியடிகள், தமது ஒத்துழையாமை, அஹிம்சை முறைகளை (Non-Co-operation and Non Violent) முதல் முறையாக அரசியல் துறையில் பயன்படுத்தும்படி மக்களுக்கு எடுத்துரைத்தார். வன்முறையால் இங்கிலாந்தைப் பணியவைப்பது என்பது இயலாத காரியம் என்று காந்தியடிகள், கிலாபத் இயக்கத்தினர்களுக்கு உணர்த்தினர். மேலும் கிலாபத் இயக்கம் முஸ்லீம்களின் உயிர்ப் பிரச்சினையாக இருந்தது. இந்திய முஸ்லீம்களின் ஒத்துழைப்பை யும், நட்பையும் அடைய காந்திஜி கிலாபத் இயக்கத்தை ஒரு கருவி யாகப் பயன்படுத்தித் தமது முழு ஆதரவையும் அளித்து வந்தார். ஆனால் கிலாபத் இயக்கம் இந்தியாவில் தோன்றிய ஐந்து ஆண்டு

களுக்குப்பின் துருக்கி நாட்டில் காலிபேட் (Caliphate) பதவி அகற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து உலகில் உள்ள முஸ்லீம் மக்களிடம் எவ்விதக் கிளர்ச்சியும் எதிர்ப்பும் ஏற்படவில்லை.

கிலாபத் இயக்கத்தால் இந்தியத் தொழிலாளர்களிடையே அமைதியின்மை காணப்பட்டது. 1919–1920ஆம் ஆண்டில் சுமார் 200 வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்தன. அகிம்சை, ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றின்மூலம், மக்களின் சக்தியைத் தேசிய ஆக்கப்பணிகளுக்குப் பயன்படுத்த விரும்பினார். 1920-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நாகபுரியில் கூடிய காங்கிரஸ் மகா நாட்டில் காந்திஜியின் ஆக்கப் பூர்வமான இக் கொள்கைகள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஒத்துழையாமை இயக்கம் (Non-Co-operation Movement): கிலாபத் இயக்கத்தை ஆங்கில அரசும், இந்திய வைசிராயும் புறக்கணித்து ஒதுக்கிய அவல நிலையைக் கண்டு காந்திஜி வேதனைப் பட்டார். இவ் வியக்கத்தால் இந்து முஸ்லீம் இனத்தவர்களிடம் தோன்றிய ஒற்றுமை நல்லுணர்வைத் தேசிய இயக்கத்தின் நலனுக்காகப் பயன்படுத்த எண்ணினார். எனவே, புதிய அரசியல் திட்டத்தின்படி நடக்க இருந்த தேர்தல்களைப் (Elections) புறக்கணிக்கும் படி 1920ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மக்களுக்கு வேண்டு கோள் விடுத்தார். அதற்கிணங்க சுமார் மூன்றில் இரண்டு பகுதி வாக்காளர்கள் தங்களுடைய வாக்கைப் பதிவு செய்யவில்லை. சி. ஆர். தாஸ் (C. R. Das), பண்டித மோதிலால் நேரு (Pandit Motilal Nehru) போன்ற புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்லாது நின்றனர். ஏராளமான மாண வர்கள் பள்ளிக்கூடம், கல்லூரி ஆகியவற்றை விட்டு வெளி யேறினர். ஆங்கிலத் துணிகள் ஆங்காங்கே எரிக்கப்பட்டன. சுதேசி இயக்கம் (Swadesi Movement) ஆதரிக்கப்பட்டது. இந்திய ராணுவத்தில் முஸ்லீம்கள் பணியாற்றுவது சட்ட விரோதம் என்று கிலாபத் இயக்கத் தலைவர்கள் அறிவித்தனர். வேல்ஸ் இளவரசர் (Prince of Wales) இந்தியாவிற்கு வந்தால் மக்கள் பகைமையை மறந்து வரவேற்பு அளிப்பர் என்று இந்திய அரசாங்கம் கருதியது. ஆனால், வேல்ஸ் இளவரசர் 1921ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் நாள் பம்பாயில் வந்து இறங்கிய போது காங்கிரஸ் கடையடைப்புச் செய்தது. இதைத் தொடர்ந்து கிளர்ச்சிகளும், கலகங்களும் ஏற்பட்டன. காந்திஜி வன்முறைகளைக் கண்டித்து 5 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். எனினும் வன் முறைகள் குறைந்தபாடில்லை. அவை நீடித்துக் கொண்டிருந்தன. அகமதாபாத் காங்கிரஸ் கட்சி, காந்திஜியை 1921ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பிரதேசக் காங்கிரஸ் கட்சித் தலைவராக்கியது.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள சௌரி சௌரா என்ற கிராமத்தில் கலகக்காரர்கள் காவல் நிலையத்தைத் தாக்கி 22 போலீஸ்காரர்களையும், ஒரு போலீஸ் அதிகாரியையும், தீக்கிரையாக்கினர். இச் சம்பவம் காந்திஜியை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. உடனே ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டார். இதற்குப் பதில் தீண்டாமையை அகற்றுதல், மதுவிலக்கு, காதி இயக்கம் போன்ற நிர்மாணப் பணிகளில் தமது கவனத்தைச் செலுத்தினார். தேசத் துரோகம் குற்றம் சாட்டிக் காந்திஜிக்கு ஆறு ஆண்டுச் சிறைத் தண்டனை இந்திய அரசு விதித்தது.

மாப்பிள்ளைமார் கலகம் (Moplah Rebellion): மாப்பிள்ளைக் கலகம், கிலாபத் இயக்கத்தின் ஒரு பகுதியே ஆகும். மாப்பிள்ளை என்ற முஸ்லீம் இனத்தவர், மலபார் கடற்கரை ஓரங்களில் வாழ்ந்து வந்தனர். 8, 9ஆம் நூற்றாண்டுகளில் அரேபியாவிலிருந்து இப் பகுதிக்கு வந்து தங்கியவர்களின் சந்ததியினரே மாப்பிள்ளை என்று அழைக்கப்படுபவர்கள். கொள்ளை, கொலை, கொடுமைகளுக்கு அஞ்சாதவர்கள். ஆங்கில அரசின்கீழ் இவர்கள் 35 தடவை கிளர்ச்சிகளும் கலகங்களும் செய்துள்ளனர். 1921ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஏற்பட்ட கலகமே பெருங்கலகமாகக் கருதப்படுகிறது. இது கிலாபத் இயக்கத்தின் தொடர்ச்சியே என்று டாக்டர் அன்னிபெஸண்ட் அம்மையார் கூறியுள்ளார்.

அலி சகோதரர்களின் கிலாபத் இயக்கத்தின் பேச்சுகள் மலபார் முஸ்லீம்களை வெகுவாகக் கவர்ந்தன. 1921ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மாப்பிள்ளை முஸ்லீம்களின் கூட்டம் அடிக்கடி தனிப்பட்ட இடங்களிலும், மசூதிகளிலும் நடந்தன. கத்தி, வாள், ஈட்டி போன்ற ஆயுதங்களை ஏராளமாகத் தயார் செய்தனர். இஸ்லாம் அரசை மலபார் பகுதியில் நிறுவும் நாள் நெருங்கிவிட்டதென்று ஒவ்வொரு முஸ்லிமும் தன்னைத் தயார் செய்துகொண்டான். 1921ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20ஆம் நாள் காலிகட் (Calicut) என்ற இடத்தில் முஸ்லீம்கள் பலர் ஆயுதம் வைத்திருப்பதாகச் சில தலைவர்களை மாஜிஸ்ரேட் காவல் துறையினரின் உதவி கொண்டு கைது செய்ய முயன்றனர். இச் சம்பவம் பெரும் கலகமாக உருவெடுத்து அந்த வட்டாரம் முழுவதும் பரவியது. சாலைகள் அடைக்கப்பட்டன; தந்திக் கம்பிகள் துண்டிக்கப்பட்டன. ரயில் பாதைகள் பல இடங்களில் அழிக்கப்பட்டன. இக் கொடுமைகளுக்குத் தப்பிச் செல்ல முடியாத பல ஐரோப்பியர்கள் வன்முறையில் கொல்லப்பட்டனர்.

மாப்பிள்ளையர்களின் பெரும் கலகத்தால் நிர்வாகச் சீர்கேடு ஏற்பட்டபோது, இவர்களில் பலர் சுயராஜ்யம் ஏற்படுத்தப் பட்டது என்று அறிவித்தனர். இவ் வரகக்கு அலி முசாலியார்

(Ali Musaliar) என்பவர் மன்னராக நியமிக்கப்பட்டார். கிலாபத் கொடி ஏற்றப்பட்டது. எரநாடு, வள்ளுவ நாடு ஆகிய இரு பகுதிகளும் கிலாபத் அரசு என்று பிரகடனம் செய்யப்பட்டது. இப் பகுதியில் வாழ்ந்த மக்கள் பெருவாரியானவர்கள் இந்துக்களாகவே இருந்தபோதிலும், முஸ்லீம்களின் கோபத்திற்கும், வெறுப்புக்கும் ஆளாகி நூற்றுக் கணக்கான பேர்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் உடைமைகள் சூறையாடப்பட்டன. பெண்கள் வன்முறையில் கற்பழிக்கப்பட்டனர். இஸ்லாம் சமயத்தில் சேர விரும்பாதவர்களின் தலைகள் கொடுமையாகத் துண்டிக்கப்பட்டன. குழந்தைகள் கொல்லப்பட்டனர். இவர்கள் இழைத்த கொள்ளையும் கொடுமையும் சொல்லும் தரமன்று. சுருங்கக் கூறின் அமைதி ஏற்படும் வரை மிருக வெறி இவ்வட்டாரங்களில் தாண்டவமாடியது.

கிளர்ச்சி அடக்கப்படுதல் : மலபார் பகுதியில் பெருவாரியான இடங்களில் மாப்பிள்ளைக் கலகம் நடைபெற்றதால், சென்னை மாநிலத்திலுள்ள காவல் துறையினரும், ராணுவத்தினரும் கலகத்தை அடக்க முடியவில்லை. மேலும் ராணுவம் வரவழைக்கப்பட்டு மொத்தம் நான்கு பட்டாளியன்களும், கவச வண்டிகள் பலவும், பீரங்கிகளும் இணைந்து செயல்பட்டதால் கலகம் ஓரளவிற்கு ஓய்ந்தது. கலகக்காரர்கள் மலைகளுக்குள் சென்று ஒளிந்து கொண்டனர். பாண்டிக்காடு என்ற இடத்தில் 60 கூர்க்கா வீரர்கள் மாப்பிள்ளை முஸ்லீம்களால் கொல்லப்பட்டனர். அரசாங்கத் தரப்பின் காவல் துறையைச் சார்ந்த 43 பேர் கொல்லப்பட்டனர். 126 பேர் காயம் அடைந்தனர். கலகக்காரர்களில் 3,000 பேர் கொல்லப்பட்டனர். ஆனால் இவ்வெண்ணிக்கை சுமார் 10,000 இருக்கும் என்று முஸ்லீம் தலைவர்கள் கூறி வந்தனர். இறுதியாக, 1921ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் நாள் 70 மாப்பிள்ளைக் கைதிகளை ரயில் பெட்டிகளில் அடைத்துச் சென்னைக்கு அனுப்பி வைத்தனர். ரயில் பெட்டி காற்றுப் புகாமல் அடைக்கப்பட்டிருந்ததால், அத்தனை பேரும் சென்னை வருவதற்குள் இறந்து விட்டனர். இக் கலகத்தைப்பற்றி அறிய விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இவ் விசாரணையில் மாப்பிள்ளை முஸ்லீம்கள் தங்களுடைய சமயத்தைக் காக்கும் பணியில் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போரிடும்போது இந்துக்கள் நடுநிலை வகிக்காமல் ஆங்கிலேயர்களுக்கே எல்லாவித வசதிகளையும் செய்து மாப்பிள்ளை கலகத்தை அடக்க உதவி செய்தனர். எனவேதான் அவர்களைக் கொல்லவும், அவர்களின் குடும்பங்களை அழிக்கவும், மாப்பிள்ளைகள் தலைப்பட்டனர் எனத் தெரியவந்தது. முஸ்லீம்

மதத் தலைவர்களும், அரசியல் தலைவர்களான ஹசரத் மொகானி, அலி சகோதரர்களான மகமது அலி, சவுக்கத் அலி ஆகியவர்கள் மாப்பிள்ளைக் கலகத்தை ஆதரித்து வந்தனர். கல்கத்தாவில் பாதிக்கப்பட்ட மாப்பிள்ளை இனத்தவர்களின் மறுவாழ்விற்காகப் பணம் திரட்டி வழங்கினர். அலி சகோதரர்களே இரு அனாதை மாப்பிள்ளைக் குழந்தைகளின் பராமரிப்பை ஏற்றுக் கொண்டனர். இம் முறையில் கிலாபத் இயக்கம் மாப்பிள்ளைக் கலகத்துடன் ஓரளவிற்கு முடிவுக்கு வந்தது.

4. 1919ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் (The Government of India Act, 1919)

மான்ட்போர்டு சீர்திருத்தங்கள்

1919ஆம் ஆண்டுச் சட்டம் ஏற்படக் காரணங்கள் : 1919ஆம் ஆண்டின் புதிய அரசியல் சட்டம் ஏற்படுவதற்கு முதல் உலகப் போரைத் தவிர, ஏனைய பல காரணங்களும் அமைந்திருந்தன. தீவிரவாதிகள், மிதவாதிகள் என இரு கட்சிகளாகப் பிரிந்திருந்த காங்கிரஸ் இயக்கம், 1916-ல் ஒன்றாக இணைந்து இந்தியாவிற்குக் குடியேற்ற அந்தஸ்து (Dominion Status) அளிக்க வேண்டுமென்று இங்கிலாந்தை வற்புறுத்தி வந்தது. 1916-ல் ஏற்பட்ட லக்னோ உடன்படிக்கையின் (Lucknow pact) மூலம் முஸ்லீம் லீக் கட்சி, காங்கிரசுடன் இணைந்து இந்தியாவிற்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து வேண்டுமென்று கேட்கத் தலைப்பட்டது. டாக்டர் அன்னிபெஸன்ட் அம்மையாரும், திலகரும் சுயாட்சி இயக்கம் (Home Rule Movement) ஒன்றைத் தொடங்கி, இந்தியாவிற்குப் பொறுப்பாட்சி அளிக்கவேண்டுமென்று நாடு முழுவதும் சென்று பிரச்சாரம் செய்து வந்தனர். இந் நடவடிக்கை காங்கிரஸ் கொள்கைக்கு ஆதரவாக அமைந்திருந்தது. இந்திய அரசு, காங்கிரஸ்மீது எதிர் நடவடிக்கைகள் எடுத்தது. அன்னி பெஸன்ட் அம்மையார், திரு. அருண்டேல், பி. பி. வாடியா போன்றவர்களை அரசு கைது செய்து உதகமண்டலத்தில் சிறையில் வைத்தது.

முதல் உலகப் போரில் இந்திய வீரர்கள் செய்த தியாகங்களுக்குக் கைம்மாறாக இந்தியர்களுக்குப் பொறுப்பாட்சி அளிக்க வேண்டுமென்று இங்கிலாந்துப் பொதுமக்களின் எண்ணம் இருந்து வந்தது. இதைப் பலர் வெளிப்படையாகவே அறிவித்துவந்தனர். உலகில் அநீதியை ஒழித்துக் குடியரசைக் காப்பதற்கே இங்கிலாந்து போரிடுகிறது என்று முதல் உலகப் போரின்போது கூறியது. இக் கொள்கைக்கு இணங்க இந்திய மக்களுக்கு ஆட்சிப் பொறுப்பு

அளிப்பது மேன்மையான செயல் என உணர்த்தப்பட்டது. இந்தியச் செயலாளராக இருந்த இ.எஸ். மான்டேகு (E.S. Montague) என்பவர். இந்தியாவிற்குப் பொறுப்பாட்சி அளிப்பதே இங்கிலாந்தின் நோக்கம் என்று 1917-ல் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் அறிவித்தார். இவர் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து அரசியல் தலைவர்களுடைய கருத்துகளைத் தெரிந்துகொண்டு அரசியல் சீர்திருத்தச் சட்டம் ஒன்றை அறிவித்தார். இச்சமயத்தில் இந்தியாவின் அரசப் பிரதிநிதியாக இருந்த செம்ஸ்போர்டு பிரபுவின் பெயரையும் சேர்த்து, அவர் வெளியிட்ட அறிக்கைக்கு மான்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தங்களென அறிவித்தார். இதுவே 1919ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் (The Government of India Act 1919) என நிறைவேற்றப்பட்டது. இந்தியாவிற்குப் படிப்படியாகப் பொறுப்பாட்சி வழங்குவதும், ஆட்சியின் ஒவ்வொரு பிரிவிலும் இந்தியர்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்வதும், தன்னாட்சி நிறுவனங்களைப் படிப்படியாக வளர்ப்பதுமே இங்கிலாந்து அரசின் நோக்கம் என இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

1919ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் : மான்டேகு செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்த அறிக்கை 1918ஆம் ஆண்டு, ஜூலை மாதம் வெளியிடப்பட்ட போதிலும் அதை இங்கிலாந்து பாராளுமன்றம் சட்டமாக நிறைவேற்ற சிறிது காலதாமதம் ஏற்பட்டது. இச் சட்டத்தின் தன்மைகளை ஆராய மூன்று ஆய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இக் குழுக்களின் ஆய்வுக்குப் பின் பாராளுமன்றத்தின் கருத்தை அறிய இத் தீர்மானங்கள் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டன. இறுதியாக 1919ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் நாள் பொது மக்கள் சபையிலும், 18ஆம் நாள் பிரபுக்கள் சபையிலும் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. டிசம்பர் 23ஆம் நாள் இச் சீர்திருத்தச் சட்டத்தில் மன்னர் கையொப்பமிட்டார். மத்திய, மாநில அரசுகளின் நிதிப் பங்கீட்டு முறைகளைப்பற்றி மெஸ்டன் பிரபுவின் (Lord Meston) தலைமையில் ஒரு குழு ஆய்வு நடத்தியது. இக் குழு, தனது அறிக்கையை 1920ஆம் ஆண்டு மார்ச்சு 2ஆம் நாள் சமர்ப்பித்தது. இப் புதுச் சீர்திருத்தச் சட்டம் 1921ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் செயல்முறைக்கு வந்தது.

சட்டத்தின் முக்கியக் கூறுகள்: 1919ஆம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டம் இந்திய ஆட்சிமுறையில் பல மாற்றங்களைச் செய்தது. இச் சட்டம் மாநிலங்களில் இரட்டையாட்சியை ஏற்படுத்தியது. இதுகாறும் இந்தியச் செயலாளரின் சம்பளம் இந்திய வருவாயிலிருந்து

கொடுக்கப்பட்டு வந்தது. இச் சட்டத்தின் பரிந்துரையின்படி இந்தியச் செயலாளரின் சம்பளம் இங்கிலாந்துப் பாராளுமன்றமே கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இந்திய அமைச்சரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. படை, அயல் நாட்டு உறவு, அரசாங்கக் கடன், நாணயச் செலாவணி போன்ற காரியங்களை மட்டுமே அரசப் பிரதிநிதி இந்தியச் செயலாளரைக் கலந்து செயல்பட வேண்டுமென்று இச் சட்டம் வழி வகுத்தது.

இந்தியச் செயலாளரின் ஆலோசனைக் குழுவில் பல மாறுதல்கள் செய்யப்பட்டன. உறுப்பினர்களின் எண்ணிக்கை எட்டுக்குக் குறையாமலும், பன்னிரண்டிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது. அங்கத்தினரின் பதவிக் காலம் ஐந்தாண்டுகள்.

இங்கிலாந்தில் இந்திய வணிகர்கள், மாணவர்கள் ஏனைய இந்தியக் குடிமக்களின் நலன்களைக் கவனிக்கும்பொருட்டு இந்திய உயர் ஆணையர் (High Commissioner for India) என்ற புதிய அதிகாரி ஒருவரை நியமிக்க இச் சட்டம் வகை செய்தது. இவரது சம்பளம் ஆண்டொன்றுக்கு 3,000 பவுன்கள். இவர் ஐந்து ஆண்டுகள்வரை பதவியில் இருக்கலாம். இந்த அதிகாரி, தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழுவின் பிரதிநிதியாக இங்கிலாந்தில் பணியாற்றினார். இவரது ஊதியம் இந்திய வருவாயிலிருந்து கொடுக்கப்பட்டது. இந்தியப் பொதுப்பணிக் குழு (Indian Public Service Commission) ஒன்று நிறுவ இச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டிருந்தது. பத்து ஆண்டுகளுக்குப்பின் இச் சட்டத்தின் செயல்முறையை எவ்வாறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று சில ஆலோசனைகள் இதில் குறிப்பிடப்பட்டிருந்தன.

தலைமை ஆளுநரும் நிர்வாகக் குழுவும்

1919ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி தலைமை ஆளுநரின் அதிகாரம் மாறுமல் இருந்தது. தலைமை ஆளுநரும் அவரது ஆலோசனைக் குழுவும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்குத் தொடர்ந்து பொறுப்பானவர்களாக இருந்தனர். தலைமை ஆளுநரின் அதிகாரம் இந்தியப் பாராளுமன்றத்தை எவ்வித அதிகாரமும் அற்ற ஒரு சாதாரண அவையாக மாற்றியது. இந்தியப் பாராளுமன்றம் உருவாக்கும் சட்டங்கள் ஆளுநரின் உத்தரவு இன்றிச் செயல்படுத்த முடியாது. 1919ஆம் ஆண்டுச் சட்டம் தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவில் இரண்டு பேருக்குப் பதில் மூன்று இந்தியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு வகை செய்தது.

மத்திய-மாநில அரசுகளின் அதிகாரப் பிரிவினை

1919ஆம் ஆண்டு இந்தியச் சட்டம், மத்திய, மாநில அரசுகளின் பணிகளைத் தெளிவாகப் பாகுபடுத்திக் காட்டியுள்ளது. ராணுவம், அயல்நாட்டுத் தொடர்பு, நாட்டின் பாதுகாப்பு, தபால், தந்தி, இந்திய நாணயம், பொதுக் கடன், வாணிபம், குற்றவியல் சட்டம், சமயச் செய்திகள், இந்தியப் பணித்துறை ஆகியன மத்திய அரசின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. மாநில அரசுகளுக்கு உள்நாட்டுச் சட்டம், அமைதி, நீதி நிர்வாகம், சிறைச்சாலைகளின் பராமரிப்பு, நீர்ப்பாசனம், வேளாண்மை, காடுகள், தொழிற்சாலைகளைப் பார்வையிடல், பஞ்ச நிவாரணம், நிலவரி, நிர்வாகம், தல சுயாட்சி, கல்வி, மருத்துவம், சுகாதாரம், மராமத்து வேலைகள், ஆயத்தீர்வை, கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கொடுக்கப்பட்டன.

மத்திய சட்டசபைகள் : 1919ஆம் ஆண்டின் இந்திய அரசின் சட்டப்படி மத்திய அரசில் ஈரங்க சட்டசபைகள் (Bicameral Legislative) அமைக்கப்பட்டன. அவற்றுக்கு நாட்டு மேல் சபை (Council of State) மாநிலங்களின் சபை என்றும், சட்ட சபை (Legislative Assembly) என்றும் பெயர்.

மாநிலங்களின் சபை : 1919ஆம் ஆண்டின் இந்தியச் சட்டப் படி நாட்டு மேல்சபையில் 60 அங்கத்தினர்கள் இடம் பெற்றிருந் தனர். இவர்களில் 34 பேர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களும் 26 பேர் தலைமை ஆளுநரால் நியமிக்கப்பட்டவர் களாகவும் இருப்பர். இவர்களில் 20 பேர் அரசாங்க அதிகாரி களாக இருப்பர். அரசாங்க அதிகாரிகள் அல்லாதவரும் (Nominated non-officials) நியமனமானவர்களில் உண்டு. நேரடி யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் பொதுத் தொகுதிகளி லிருந்து 19 பேர்களும், 11 முஸ்லிம்கள், 1 சீக்கியர், 3 ஐரோப் பியர் ஆகியோரும் அடங்கி இருந்தனர். நாட்டு மேல்சபை உறுப்பினர்களின் பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள். அரசப் பிரதிநிதி விரும்பினால் இவர்களின் பதவிக் காலத்தைக் கூட்டவோ குறைக்கவோ முடியும்.

மத்திய சட்டசபை (Legislative Assembly)

மத்திய சட்டசபையின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கை 145. இதில் 105 பேர் பொது மக்களிடமிருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். மீதியுள்ளவர்கள் நியமன உறுப்பினர்கள். அவர்களில் 26 பேர் அரசாங்க அதிகாரி களாகவும் (Nominated officials) 14 பேர் அதிகாரிகள் அல்லாத வர்களாகவும் இருப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட 105 அங்கத்தினர்

களில் 53 பேர் பொதுத் தொகுதிகளிலிருந்தும் 30 பேர் முஸ்லீம்களாலும், இருவர் சீக்கியர்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மீதியுள்ள 20 இடங்களை நிலச்சுவான்தார்கள், ஐரோப்பியர், வணிகக் குழுவினர் நிரப்பி வந்தனர். இவ்வங்கத்தினர்கள் மூன்று ஆண்டுக் காலம் பதவியிலிருப்பர். தலைமை ஆளுநர் விரும்பினால் இப் பதவிக்காலத்தை நீட்டிக்கலாம். சட்டசபையின் முதல் தலைவரை அரசாங்கமே நியமிக்கும். இவருக்குப்பின் வரும் தலைவரைச் சபை அங்கத்தினர்களே தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

ஓட்டுரிமைக்கான தகுதிகள்: ஓட்டுரிமையின் தகுதி மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டது. நாட்டின் மேல்சபை அங்கத்தினராக விரும்புபவருக்கு ஆண்டின் வருவாய் பத்தாயிரத்திலிருந்து இருபதாயிரம் ரூபாயாக இருக்க வேண்டும். மத்திய சட்டசபைக்கு ஓட்டளிப்பவர் நகரசபைக்குக் குறைந்தது ரூபாய் 15-லிருந்து 20 வரை வரி செலுத்துபவராக அல்லது ரூபாய் 180-க்குக் குறையாத மதிப்புள்ள வீட்டுச் சொந்தக்காரராக இருக்க வேண்டும். சட்டசபைகளைக் கூட்டவோ, கலைக்கவோ அல்லது இரு சபைகளையும் ஒருங்கு இருக்க வைத்து (Joint sitting) ஆலோசனை பெறவோ தலைமை ஆளுநருக்கு உரிமை உண்டு.

மத்திய சட்டசபைக்கு இந்தியா முழுவதற்கும் சட்டம் இயற்ற உரிமையுண்டு. இவர்கள் இயற்றும் சட்டம் ராணுவத்திற்கும் செல்லுபடியாகும். உயர்நீதிமன்றத்தை அகற்ற இந்தியச் செயலாளரின் அனுமதி தேவை. இங்கிலாந்துப் பாராளுமன்றம் இயற்றும் சட்டத்தை மத்திய சட்டசபைகள் மறுக்கவோ மாற்றவோ இயலாது.

கீழ்கண்ட சட்டங்களை நிறைவேற்ற தலைமை ஆளுநரின் முன் அனுமதி பெறவேண்டும்.

1. இந்தியாவின் பொதுக்கடன் அல்லது வரவுசெலவுத் திட்டம்.
2. இந்தியாவில் வாழும் பிரிட்டிஷ் குடிமக்களின் சமயம்.
3. ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் நிர்வாகம், பராமரிப்பு.
4. வெளிநாட்டு உறவு, சுதேச மன்னர்களின் உறவு.

சட்டசபைகள் இயற்றும் தீர்மானங்கள் இந்தியாவின் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பனவாக இருந்தால் அவற்றைச் சட்டமாக்காமல் தள்ளுபடி செய்யத் தலைமை ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. இவ்விரு சபைகளும் நிறைவேற்ற மறுக்கும் தீர்மானத்தைச் சட்டமாக்கவும் தலைமை ஆளுநருக்கு அதிகாரம்

உண்டு. இம்முறையில் இயற்றப்படும் சட்டங்கள் இறுதியாக மன்னரின் அனுமதியைப் பெற வேண்டும். அவசரக் காலச் சட்டங்கள் பிறப்பிக்க தலைமை ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப் பட்டிருந்தது. மத்திய சட்டசபைகள் இயற்றும் சட்டங்களுக்குச் சமமாகத் தலைமை ஆளுநர் சட்டம் இயற்றமுடியும். ஆனால் இவரது சட்டம் ஆறு மாதங்கள் மட்டும்தான் அமலில் இருக்கும். எச் சட்டத்தையும் இவர் மறு பரிசீலனைக்கு அனுப்பமுடியும். மத்திய சட்டசபையோ, தலைமை ஆளுநரோ இயற்றும் சட்டங்களை ரத்துச் செய்ய இங்கிலாந்து மன்னருக்கு அதிகாரம் உண்டு.

சட்டசபையில் அங்கத்தினர்கள் கேள்விகள் கேட்கவும், தீர்மானங்கள் நிறைவேற்றவும், சபையின் நடவடிக்கைகளைத் தள்ளிவைக்கவும் உரிமை இருந்தது. இரண்டு சட்டசபைகளிலும் அங்கத்தினர்களுக்குப் பேச்சுரிமை வழங்கப்பட்டிருந்தது. தலைமை ஆளுநர் விரும்பினாலொழிய சில தீர்மானங்கள் ஓட்டுக்கு விடப்படுவதில்லை. ஆயினும், மற்ற தீர்மானங்களை இறுதியில் சட்டசபை ஓட்டுக்கு விடவேண்டும்.

'ஆளுநர்களின் மாநிலங்கள்' ('Governors' Provinces') என்று வழங்கப்பட்ட ஒன்பது மாநிலங்களுக்கென தனி அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இம் மாநிலங்கள் முறையே சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாகாணம், பீகார், ஒரிசா, மத்திய மாகாணங்கள், அஸ்ஸாம், பர்மா ஆகியவை களாகும்.

மாநில அரசுகள் (The Provincial Government)

நிர்வாகம் (The Executive): பிரிட்டிஷ் இந்திய மாநிலங் களின் நிர்வாகத் தலைவர் ஆளுநர் (Governor) என்று அழைக்கப் பட்டார். மாநிலங்களில் இரட்டையாட்சி (Dyarchy) நிர்வாக முறை பின்பற்றப்பட்டு வந்தது. மாநிலங்களுக்குச் சட்டசபை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களில், மாற்றப்பட்ட துறைகள் (Transferred Subjects) என்றும், ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Subjects) என்றும் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒதுக்கப்பட்ட துறைகள், ஆளுநரின் நேர் நிர்வாகத்தில் இருந்தன. அவர் நிர்வாக ஆலோசனைக் குழுவின் துணைகொண்டு இத் துறைகளைக் கவனித்து வந்தார். மாற்றப்பட்ட துறைகளை அமைச்சர்கள் துணைகொண்டு நிர்வகித்து வந்தார். நிர்வாகக் குழு அங்கத்தினர்களை ஆளுநர் தமது விருப்பம்போல் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். ஆனால் அமைச்சர்களை மாநிலச் சட்டசபை அங்கத்தினர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கவேண்டும்.

உள்ளாட்சி, பொது சுகாதாரம், மருத்துவம், கல்வி, வேளாண்மை, நீர்ப்பாசனம், கால்நடைக் கூட்டுறவு சங்கங்கள், வரி, ஆவணப் பதிவு, சமயப் பரிபாலனம், தொழில் வளர்ச்சி போன்ற துறைகள் மாற்றப்பட்ட துறை (Transferred Subjects) யின்கீழ் இயங்கிவந்தன.

பம்பாய், சென்னை, வங்காளம் ஆகிய மாநிலங்களிலுள்ள நிர்வாகக் குழுவில் (Executive Council) நான்கு அங்கத்தினர்கள் இருந்தனர். மீதியுள்ள 6 மாநிலங்களின் நிர்வாகக் குழுவில் இரண்டு அங்கத்தினர்களே இருந்தனர். இவர்களில் ஒருவர் இந்தியர். ஒதுக்கப்பட்ட துறைகளின் (Reserve Subjects) பொறுப்பு ஆளுநரின் நிர்வாகக் குழுவினிடம் இருந்தன. பெரும்பான்மையோரின் அபிப்பிராயத்தின் முடிவே சட்டமாக வெளியிடப்படும். ஆயினும் மாநிலத்தின் பொது நன்மையைக் கருதிப் பெரும்பான்மையோரின் முடிவைத் தள்ளிவைக்க ஆளுநருக்கு அதிகாரம் உண்டு.

அமைச்சரவை : மாற்றப்பட்ட துறைகளின் பொறுப்பு அமைச்சர்களிடமிருந்து வந்தன. அமைச்சர்களின் ஆலோசனைப்படி ஆளுநர், மாநில நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். அவசியமானால் அமைச்சர்களின் ஆலோசனைகளைப் புறக்கணிக்க ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. ஒவ்வொரு மாநில அவையிலும் இரண்டு மூன்று அமைச்சர்கள் இருந்து வந்தனர். ஆனால், இந்த எண்ணிக்கை அவ்வப்போது மாறுவதும் உண்டு. ஆளுநர் விரும்பினால் அமைச்சர்களின் பதவிக் காலம் நீட்டிக்கப்படும். அமைச்சர்கள் தத்தம் துறைகளுக்குப் பொறுப்பானவர்கள் என்ற நிலைக்குச் சட்டத்தில் தெளிவுபடுத்தப்படாமல் இருந்தது.

மாநிலச் சட்டமன்றம் (Provincial Legislature)

1919ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தில் மாநிலங்களில் சட்டசபை ஏற்படுத்த வகை செய்யப்பட்டிருந்தது. இச் சபையின் அங்கத்தினர்களில் 70 சதவீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். மீதியுள்ள 30 சதவீதத்தினர் ஆளுநரால் நியமிக்கப்பட்டு வந்தனர். நியமிக்கப்பட்டவர்களில் சிலர் அரசாங்க அதிகாரிகள். எஞ்சியவர்கள் அரசாங்கப் பதவிகளில் இல்லாதவர்கள். சட்டசபையின் காலவரையறை மூன்று ஆண்டுகள். இக் காலக்கட்டத்தைக் கூட்டவோ, குறைக்கவோ ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. அவையில் அங்கத்தினர்கள் கேள்வி கேட்க உரிமை வழங்கப்பட்டிருந்தது.

ஆளுநரின் அதிகாரங்கள் : சட்டசபையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் சட்டங்களாக்கப்படுவதற்கு அவை

ஆளுநர், தலைமை ஆளுநர் ஆகியவர்களின் கையொப்பத்தைப் பெற வேண்டும். மாநிலத்தில் நில வருவாயைப் பாதிக்கும் தீர்மானம், சமயம் போன்றவற்றைப்பற்றிய தீர்மானங்களைத் தலைமை ஆளுநரின் கருத்தை அறியும்பொருட்டு ஆளுநர் அவற்றை ஒதுக்கி வைத்துக் கொள்ளலாம். சட்டசபை நிராகரித்த தீர்மானங்களைச் சட்டமாக்கி அமலுக்குக் கொண்டுவர ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. ஒதுக்கப்பட்ட துறைகளுக்கு வேண்டிய நிதியை வழங்க சட்டசபை மறுத்தபோதிலும், ஆளுநர் தம் தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி அம் மசோதாவைச் சட்டமாக்கலாம். இத்தகைய சட்டங்கள் தலைமை ஆளுநரின் ஒப்புதலைப் பெறவேண்டும். மாற்றப்பட்ட துறைகளில் அதிகாரம் செலுத்த ஆளுநருக்கு உரிமையுண்டு. ஆயினும், அமைச்சர்களின் ஆலோசனைப்படியே இவர் நடக்கவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மாநிலச் சட்ட சபை (Legislative Councils): ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு சட்டசபை அமைந்திருந்தது. மாநிலம் முழுவதிலிருந்தும் இச் சபைக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டனர். முஸ்லீம், ஐரோப்பியர், சீக்கியர் ஆகியவர்கள் சில இடங்களில் தனித் தொகுதிகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். 105 இடங்களில் 48 இடங்கள் தனித் தொகுதிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. இவற்றைத் தவிர, நிலச்சுவான்தார்கள் வணிகக்குழு ஆகியவர்களுக்கெனத் தனிப்பட்ட தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இந்திய செயலாளர் (Secretary of State for India)

1919ஆம் ஆண்டின் இந்திய சட்டத்தின் மூன்றுவது பகுதியில் இந்திய செயலாளரின் அதிகாரமும், அவரது ஆலோசனைக் குழுவின் பணிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்திய விவகாரங்கள் நிதி வருவாய் ஆகியவற்றைப்பற்றிய அதிகாரங்கள் அனைத்தும் இந்திய செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்தியாவில் வேலை வாய்ப்புகளைத் தோற்றுவித்தல், தற்காலிக வேலைகளை நிரந்தரமாக்குதல், உத்தியோகங்களிலிருந்து ஓய்வு பெறுவோருக்கு உதவித்தொகை வழங்குதல் போன்ற காரியங்களுக்கு இந்திய செயலாளரின் முன் அனுமதிபெறவேண்டும். இந்திய அமைச்சரின் செயலாளரின் ஆலோசனைக் குழுவில் 8 பேருக்குக் குறையாமலும், 12 பேருக்கு மிகாமலும் அங்கத்தினர்கள் இடம் பெற்றிருந்தனர். இவர்களின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள். இவர்கள் இந்திய செயலாளரால் நியமிக்கப்படுவர். இவர்களில் பாதிபேர் இந்தியாவில் 10 ஆண்டுகளுக்குக் குறையாமல் பணியாற்றியவர்களாக இருக்கவேண்டும். இவர்கள் அனைவரும் பாராளுமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள்.

1919ஆம் ஆண்டுச் சட்டத்தின் நிறைவுகள்; 1919ஆம் ஆண்டுச் சட்டத்தின் பயனாகத் தலைவர்களுக்கும், பொது மக்களுக்கும் அரசியலில் நல்ல பயிற்சி ஏற்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நாட்டின் நிர்வாகத்திலும், சட்ட மன்ற நடவடிக்கைகளிலும் பெரும் பங்கு கொண்டனர். பரந்த நேரடித் தேர்தல்முறை இந்தியாவில் முதல் முறையாக அறிமுகப் படுத்தப்பட்டது. இச் சட்டம், சுயாட்சியே இந்தியாவின் குறிக்கோள் என்பதை உறுதிப்படுத்தியது.

குறைகள்: இந்திய நிர்வாகத்தில் ஒதுக்கப்பட்ட துறைகளும், மாற்றப்பட்ட துறைகளும் ஒன்றுக்கொன்று எவ்வித ஒற்றுமையும் இன்றி இயங்கி வந்தமையால் முற்போக்குச் செயல்கள் எதுவும் செம்மையாக இந்தியாவில் நடைபெறவில்லை. அமைச்சர் களுக்குள் கருத்து ஒற்றுமையும், செயல் ஒருங்கிணைப்பும் இல்லாமை யால் நிர்வாகத்தில் குழப்பம் ஏற்பட்டிருந்தது. அரசு நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டிவந்தனர். அதனால் வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்பட்டன.

1919ஆம் ஆண்டுச் சட்டம் இந்திய தேசிய இயக்கத்தில் ஒரு பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. மிதவாதிகள் இச் சட்டத்தினால் முழு நிறைவு அடையாவிட்டாலும் இச் சட்டத்தைச் செயல் படுத்தத் தங்களுடைய ஒத்துழைப்பை நல்க அவர்கள் முன் வந்தனர். திலகர், இச் சட்டத்திற்குத் தமது ஆதரவை அளிப்பதாக மன்னருக்குத் தந்தி மூலம் தெரிவித்தார். காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த சி. ஆர். தாஸ், இச் சட்டத்தை வரவேற்றார். காந்தியடிகள், இளையபாரதம் (Young India) என்ற பத்திரிகையில் இச் சட்டத்தை ஆதரித்துக் கட்டுரை ஒன்று எழுதினார். இக் கருத்தைக் காங்கிரஸ மகாநாட்டிலும் எடுத் துரைத்து மக்களின் ஏகோபித்த ஆதரவையும் பெற்றார். இத் திட்டத்திற்காக உழைத்த மதிப்பிற்குரிய இ. எஸ். மான்டேகு (E. S. Montague) என்பவருக்கு இந்தியத் தலைவர்கள் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் (The Government of India Act 1935) தோன்றக் காரணம்

லண்டனில் நடந்த இரண்டாவது வட்டமேஜை மகாநாட் டிற்குக் காங்கிரசின் சார்பில் காந்தியடிகள் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். இந்தியாவில் ஏற்பட இருக்கும் அரசியல் மாற் றங்களைப்பற்றியும், அதனால் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்பொருட்டும் இக் கூட்டம் கூட்டப்பட்டது. இம் மகா நாட்டினால் இந்தியாவிற்கு எவ்வித நன்மையும் கிடைக்கவில்லை.

சிறுபான்மையினரின் பிரச்சினைகளைப்பற்றி இம் மகாநாட்டில் விவாதிக்கப்பட்டது. ஆங்கிலேயர் சிறுபான்மையினரைப்பற்றி அவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டது காந்தியடிகளுக்குப் பிடிக்கவில்லை. எனவே, காந்தியடிகள் இந்தியா திரும்பியதும் சத்தியாக்கிரக நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இந்திய அரசு, சத்தியாக்கிரகிகளின்மீது கடும் நடவடிக்கை எடுத்துக் காந்தியடிகளையும், ஏனைய காங்கிரஸ் தலைவர்களையும் சிறையிலடைத்தது. காங்கிரஸ் இயக்கத்தைத் தடை செய்தது. இங்கிலாந்தின் தேசிய அமைச்சரவையின் தலைவரான ராம்சே மெக்டொனல்ட், சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண 1932-ல் புதிய சட்டம் ஒன்றை வெளியிட்டார். இச் சட்டத்தால் இந்து சமூகம் உயர்ந்த இனம், தாழ்ந்த இனம் என்று இரு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. இஃது இந்துக்களின் தன்மான உணர்வுக்கு இழுக்கு என உணரப்பட்டது. எனவே, இச் சட்டம் திருத்தப் படாவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என்று காந்தியடிகள் எரவாடா சிறையிலிருக்கும்போது அறிவித்தார்.

காந்தியடிகளின் அறிக்கையின் காரணமாக, பூனா ஒப்பந்தம் (Poona pact) ஏற்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் தனித் தலைவரான அறிஞர் டாக்டர் பி. ஆர். அம்பேத்கார், இவ்வொப் பந்தத்தில் கையெழுத்திட்டுக் காந்தியடிகளின் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார். சிறுபான்மையினரின் சட்டத்தில் அம் மக்களுக்குத் தனித்தொகுதிமுறை வழங்கப்பட்டிருந்தது. பூனா ஒப்பந்தத்தினால் தனித் தொகுதிமுறை நீக்கப்பட்டு அதற்குப் பதில் அவர்களுக்கு மத்திய சட்டசபையில் மேலும் சில இடங்கள் ஒதுக்கப்பட்டன.

மூன்றாவது வட்டமேஜை மகாநாடு 1933ஆம் ஆண்டில் லண்டனில் கூடியது. இதில் காங்கிரஸ் பங்கு கொள்ளவில்லை. இக் கூட்டத்தின் விளைவாக, இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தைப் பற்றி வெள்ளையறிக்கை (White paper) ஒன்று வெளியிடப்பட்டது. இவ் வறிக்கையால் இந்திய அரசியல் சிக்கல்களுக்குத் தீர்வு காண முடியவில்லை. எனவே, இவ் வறிக்கையை இந்தியத் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்துப் பேசினர். இருப்பினும் லின்லித்கோ பிரபுவின் தலைமையிலான பாராளுமன்றக்குழு ஒன்று இவ் வறிக் கையை ஆராய்ந்து 1934-ல் அறிக்கை வெளியிட்டது. இதன் அடிப் படையில் இங்கிலாந்துப் பாராளுமன்றம் 1935ஆம் ஆண்டுச் சட்டத்தை அறிவித்தது.

1935ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசியல் சட்டம் இந்திய அரசியல் நிர்வாக வளர்ச்சியில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இச் சட்டத்தில் 10 பெரும் பிரிவுகளும், 321

வாசகங்களும் அடங்கி இருந்தன. இது மூன்று அரசியல் கொள் கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அவை, முறையே அகில இந்தியக் கூட்டாட்சி (All India Federation), மாநில சுயாட்சி (Provincial Autonomy), பாதுகாப்புடன் கூடிய பொறுப்பாட்சி (Responsibility with safeguard) என்பன. இச் சட்டம் ஒருமுகப்படுத்தப்பட்ட (Unitary system) அரசாங்க முறையை நீக்கி, கூட்டாட்சி முறையை ஏற்படுத்த வழிசெய்தது. இக் கூட்டாட்சியில் பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களும் சுதேச அரசு களும் இணைந்திருக்க வேண்டும். இது பிரிட்டிஷ் இந்தியாவையும் சுதேச அரசுகளையும் இணைக்கும் முறையில் எடுத்துக் கொண்ட முதல் முயற்சி. மத்திய, மாநில அரசுகளுக்கிடையில் உள்ள அதிகாரப் பிரிவினை, நெகிழா அரசியல் சட்டம் (Rigid Constitution), கூட்டாட்சியின் தலைமை நீதி மன்றம் (Federal Court) போன்ற எல்லா இயல்புகளும் இச் சட்டத்தில் இடம் பெற்றிருந்தன.

மத்தியில் கூட்டாட்சி இரட்டையாட்சி முறை

1919ஆம் ஆண்டுச் சட்டம் மாநிலங்களில் இரட்டையாட்சி முறையைக் கொண்டுவந்தது போலவே 1935ஆம் ஆண்டுச் சட்டம் மத்தியக் கூட்டாட்சியில் இரட்டை ஆட்சிமுறையைக் கொண்டு வந்தது. துறைகள் மாற்றப்பட்டவை, மாற்றப்படாதவையென இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டன. மாற்றப்பட்ட துறைகளை பத்துக்கு மேற்படாத அமைச்சர்கள் நிர்வகிக்க வேண்டும். இந்த அமைச்சர்களைத் தலைமை ஆளுநரே நியமிப்பார். இவர்களைத் தலைமை ஆளுநர் தாம் நினைத்தபோது பதவி நீக்கம் செய்யலாம்.

தலைமை ஆளுநரின்கீழ் உள்ள மாறாத் துறைகளான அயல்நாட்டுத் தொடர்பு, நாட்டின் பொதுப்பாதுகாப்பு, சமயம், மலைஇனத் தவர்களை ஆளுதல் முதலியவற்றை அவரும், அவருக்கு நிர்வாகத்தில் உதவி புரியும் மூன்று ஆலோசகர்களும் நிர்வாகம் செய்வர். அமைச்சரவைக்கு மாற்றப்பட்ட துறைகளிலும், நாட்டின் பாதுகாப்பிற்கும், சிறுபான்மையோர் நலனுக்கும், மத்திய ஆட்சியின் நிதி சீர் அமைப்புக்குமாகப் பலதரப்பட்ட பொது நன்மைகளுக்காகத் தலைமை ஆளுநர் தலையிடலாம். மற்றும் மத்திய சட்ட மன்றங்களிலும் இவருக்குச் சிறப்புரிமைகள் பல உள்ளன. இச் சட்டத்தின்படி மத்திய கூட்டாட்சி, கனடா, ஆஸ்திரேலியா போன்ற முழு உரிமை பெற்ற கூட்டாட்சிபோல் விளங்காமல், தலைமை ஆளுநர் இந்திய செயலாளருக்குக் கட்டுப்பட்டே நடந்தார். இந்தியாவில் சட்டம் இயற்றும் அதிகாரத்தை ஆங்கிலப் பாராளு மன்றம் இன்னமும் கொண்டிருந்ததால் கூட்டாட்சித் தலைவரின் நிர்வாகக் குழு சுதந்திரமற்றே இயங்கியது.

தலைமை ஆளுநரின் அதிகாரங்கள்

அரசியல் சட்டத்தின் நடுநாயகமாக விளங்கியவர் தலைமை ஆளுநர். டொமினியன் நாட்டு அந்தஸ்து உள்ள ஏனைய நாடு களின் தலைமை ஆளுநர்களைப்போல் அல்லாது, இந்தியத் தலைமை ஆளுநர் நாட்டின் நிர்வாகத் துறைகளில் முக்கியப்பங்கு கொண் டிருந்தார். இவரை, இங்கிலாந்துப் பிரதமரின் ஆலோசனையின் பேரில் மன்னர் நியமித்து வந்தார். இவரது பதவிக் காலம் ஐந்து ஆண்டுகள். இவர் இந்தியச் செயலாளருக்குப் பொறுப்பானவர். நாட்டின் பாதுகாப்பு, நிர்வாகம், அமைதி காத்தல் ஆகிய வற்றுக்குத் தலைமை ஆளுநரே பொறுப்பானவர். சட்டசபையைக் கூட்டவோ, கலைக்கவோ, நீட்டிக்கவோ, தள்ளி வைக்கவோ தலைமை ஆளுநருக்கு அதிகாரம் உண்டு. சட்டசபைக்குக் கொண்டு வரும் தீர்மானங்கள், இவரது முன் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். இவரது ஒப்புதல் இன்றி எத்தீர்மானமும் சட்டமாக முடியாது. தலைமை ஆளுநர் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்தத் தீர்மானத்தையும் நிறுத்தலாம்; ரத்துச் செய்யலாம்; அல்லது மறு பரிசீலனைக்கு அங்கத்தினர்களிடம் அனுப்பி வைக்கலாம்.

மாநில ஆளுநர்கள் அனுப்பும் தீர்மானங்களை, மன்னர் பெய ரால் நிறுத்தி வைக்கவோ, ரத்துச் செய்யவோ தலைமை ஆளுந ருக்கு அதிகாரம் உண்டு. தலைமை ஆளுநர் விரும்பினால் அவசரக் காலச் சட்டம் பிறப்பிக்கலாம். இச் சட்டம் ஆறு மாதக் காலம் வரைதான் நீடித்திருக்க முடியும். 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின் 45வது பிரிவுப்படி நாட்டின் அரசியல் சட்டத்திற்கு இடையூறு நேர்ந்தால், தலைமை ஆளுநரே எல்லா அதிகாரங்களையும் ஏற்று நாட்டின் நிர்வாகத்தை நடத்திச்செல்லலாம். இந்தியாவில் அவசரச் சட்டம் பிறப்பித்திருப்பதை இந்தியா அமைச்சருக்குத் தலைமை ஆளுநர் அறிவிக்க வேண்டும். இத்தகைய அவசரக் காலம் ஆறுமாதங்களுக்கு மேல் நீடிக்கக்கூடாது. இங்கிலாந்துப் பாராளு மன்றம் விரும்பினால் அவசர நிலையை ஆண்டுதோறும் புதுப்பித்து மூன்று ஆண்டுகள்வரை நீட்டிக்க அதிகாரம் உண்டு. அவசரக் கால நிலைகளைப்பற்றி அமைச்சர்களுடன் தலைமை ஆளுநர் கலந் தாலோசிக்க வேண்டும். ஆனால் அவர்களின் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற அவசியமில்லை.

ஆளுநரின் ஆலோசனைக்குழுவும் அமைச்சர் அவையும் : பத்து அமைச்சர்களுக்கு மேற்படாத அமைச்சரவை ஒன்று தலைமை ஆளுநருக்கு உதவியாக இயங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சட்டசபையின் பெரும்பான்மைக் கட்சியின் (Majority party) தலைவரின் ஆலோசனையின்படி தலைமை ஆளுநர்

அமைச்சர்களை நியமிப்பார். சிறுபான்மையினருக்கும், சுதேச மன்னர்களுக்கும், ஒதுக்கப்பட்ட இடங்கள் அவர்களுக்குக் கிடைத்துள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது ஆளுநரின் கடமைகளில் ஒன்று. தலைமை ஆளுநர் விரும்பினால் அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்யலாம். அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்து அவர்களுக்குள் ஐக்கியம் ஏற்படுத்துவது இவரது தலையாய கடன்.

அமைச்சர்கள் மாற்றப்பட்ட துறைகளின் (Transferred Subjects) பொறுப்புகளைக் கவனித்து வந்தனர். நாட்டின் பாதுகாப்பு, சமயம், வெளிநாட்டு உறவு, மலைச்சாதியினர் விவகாரம் (Tribal affairs) போன்ற ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserve Subjects) பட்டியலில் இடம் பெற்றிருந்தன. இத்துறைகள் அமைச்சர்களின் பொறுப்பில் விடப்படவில்லை. ஒதுக்கப்பட்ட துறைகள் சம்பந்தமான ஆலோசனைகளைக் கூற மூன்று பேர்களுக்கு மிகாத ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருந்தது. இவர்களைத் தலைமை ஆளுநரே நியமித்து வந்தார். அமைச்சர்கள், கூட்டாட்சியின் சட்டசபை அங்கத்தினர் ஆகியவர்களின் ஆலோசனையின்படி தலைமை ஆளுநர் நடக்கக் கடமைப்பட்டவர். ஒதுக்கப்பட்ட துறையைப் பொறுத்தவரை அமைச்சர்களின் ஆலோசனைகளின்படி நடக்க வேண்டிய அவசியமில்லை. தலைமை ஆளுநர், பிரிட்டிஷ் பாராளும் மன்றத்திற்கே பொறுப்பானவர்.

மாநிலங்கள் சபை (Council of State): கூட்டாட்சி சட்டசபையில் (Federal Legislature) நாட்டு மேல் சபை (Council of State) என்றும், கீழ்ச்சபை (Legislative Assembly) என்றும் இரு அங்கங்களைக் கொண்ட சட்டசபை அமைக்க வகை செய்யப்பட்டிருந்தது. நாட்டு மேல்சபையின் மொத்த உறுப்பினர்கள் 250 பேர். இவர்களில் 156 பேர் பிரிட்டிஷ் இந்தியா மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். 104 பேர் சுதேச மன்னர்களால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அனுப்பப்பட்டனர். மாநிலங்களிலிருந்து வரும் உறுப்பினர்களில் 6 பேர்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், பெண்கள் ஆகியோர் சார்பில் தலைமை ஆளுநர் தேர்ந்தெடுத்தார். மீதி 150 பேரும் வகுப்புவாரி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். நாட்டின் மேல்சபையைக் கலைக்கத் தலைமை ஆளுநருக்கு அதிகாரம் இல்லை. இஃது ஒரு நிரந்தரச் சபை. இச்சபையில் மூன்றில் ஒரு பகுதியினர் மூன்றாண்டிற்கு ஒரு தடவை பதவி விலகுவர். அதே எண்ணிக்கையுடைய புதிய அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். எனவே, இச் சபைக்கு ஒரு

தடவை தேர்ந்தெடுக்கப்பட்டால் இவர்கள் ஒன்பது ஆண்டுகள் வரை பதவி வகிக்கலாம்.

கீழ்ச்சபை (Legislative Assembly): மத்தியிலுள்ள கீழ்ச் சபைக்கு 375 அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் 250 பேர் பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர். 125 பேருக்கு மிகாமல் சுதேச அரசுகள் தேர்ந்தெடுத்து அனுப்பின. மாநிலங்களின் பிரதிநிதிகளை அந்தந்த மாநிலக் கீழ்ச்சபையிலுள்ள இந்துக்களும், முஸ்லீம்களும் மற்ற உறுப்பினர்களும் ஒற்றை மாற்று வாக்குமுறைமூலம் தேர்ந்தெடுப்பார்கள். சுதேச அரசுகளின் பிரதிநிதிகளைச் சுதேச மன்னர்களே நியமித்தனர். இச் சட்டசபையைத் தலைமை ஆளுநர் இடைக் காலத்தில் கலைக்காவிட்டால் 5 ஆண்டுகள்வரை தொடர்ந்து நீடித்திருக்கும்.

இவ்விரு சபைகளிலும் மசோதாக்களைக் கொண்டு வரலாம். ஆனால், பண மசோதாவைக் கீழ்ச்சபையில்தான் முதலில் சமர்ப்பிக்க வேண்டும். கீழ்ச்சபையால் நிராகரிக்கப்பட்ட மசோதா, தலைமை ஆளுநரின் அனுமதியின்றி மேல்சபைக்கு வரமுடியாது. இவ்விரு சபைகளுக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டால் தலைமை ஆளுநர், இருசபைகளையும் கூட்டி (Joint Sitting), அதில் கிடைக்கும் பெரும்பான்மை வாக்குப்படி முடிவு எடுப்பார். தலைமை ஆளுநரோ, இரண்டு அல்லது மூன்று மாநிலங்களோ அவசரச் சட்டத்தை விரும்பினால், மாநிலங்களுக்குத் தேவையான சட்டங்கள் அனைத்தையும் கூட்டாட்சி சட்டசபையே உருவாக்கும். இருப்பினும், தலைமை ஆளுநர் தமது தனி அதிகாரங்களைப் பயன்படுத்தி இச் சட்டங்களைச் செயல்படாமல் செய்து விடலாம். நிதியைப் பொறுத்தவரை கூட்டவோ, குறைக்கவோ இவ்விரு சபைகளுக்கும் எவ்வித அதிகாரமும் கிடையாது.

தலைமை ஆளுநர் விரும்பினால் சட்டமன்றத்தில் நிறைவேறிய மசோதாக்களுக்கு தமது ஒப்புதலை அளிக்காமல் அவற்றை மறு பரிசீலனைக்குத் திருப்பி அனுப்பலாம். அயல்நாட்டு உறவு, சுதேச அரசர்களின் விவகாரம் ஆகியவற்றைப்பற்றித் தலைமை ஆளுநரின் அனுமதியின்றிச் சட்டமன்றம் விவாதிக்க முடியாது. தலைமை ஆளுநரின் ஊதியம், சுதேச அரசர்களின் செலவினம் ஆகியவைகளைப்பற்றியும் விவாதிக்க சட்டமன்றங்களுக்கு உரிமை இல்லை. மத்திய மாநிலங்களுக்குள் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கெனக் கூட்டாட்சி நீதிமன்றம் ஒன்றை நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாநில ஆட்சி (Provincial Administration): மத்திய அரசின் தலையீடு அதிகம் இல்லாத மாநில நிர்வாகமுறையை முதல்

முறையாக 1935ஆம் ஆண்டின் சட்டத்தின் மூலம் ஏற்படுத்தினர். 1919 ஆம் ஆண்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டிருந்த பொறுப்பாட்சியைவிட (இரட்டை ஆட்சி) அதிகமான சலுகைகளும், உரிமைகளும் இச் சட்டத்தில் வழங்கப்பட்டிருந்தன. மாநிலங்களிலுள்ள எல்லாத் துறைகளையும் அமைச்சர்களே நிர்வகித்து வந்தனர். தலைமை ஆளுநரைப்போல் மாநில ஆளுநர்களும் இங்கிலாந்து மன்னரால் நியமிக்கப்பட்டுப் பல தனி அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். மாநிலத்தின் நிர்வாக அதிகாரி என்ற முறையில் அங்கு நடைபெறும் காரியங்கள் அனைத்திற்கும் ஆளுநரே பொறுப்பானவர்.

மாநில ஆளுநருக்கு (Governor) உதவியாக நிர்வாகத்தைக் கவனிக்க அமைச்சரவை ஒன்று இருந்தது. சட்டசபையில் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரின் ஆலோசனையின்பேரில் சட்டசபை அங்கத்தினர்களிடமிருந்து அமைச்சர்களைத் தேர்ந்தெடுத்து வந்தார். இரட்டையாட்சியில் ஏற்படுத்தப்பட்டிருந்த நிர்வாகக் குழு நீக்கப்பட்டது. அத்துடன் இரட்டையாட்சியும் அகற்றப்பட்டது. ஒதுக்கப்பட்ட துறைகளாய் இருந்த நிதி, நீதிநிர்வாகம், சிறைச்சாலை போன்றவையும் அமைச்சர்களின் பொறுப்பில் விடப்பட்டன. மாநிலத்தில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டால், தலைமை ஆளுநரின் அனுமதிபெற்று மாநிலச் சட்டசபைகளையும், அமைச்சரவையையும் கலைத்து விட்டு ஆளுநர், தாமே மாநில நிர்வாகத்தை மேற்கொள்ள வகை செய்யப்பட்டிருந்தது. சட்டசபைகள் இன்றி, இங்கிலாந்துப் பாராளுமன்றத்தின் அதிகாரம் பெற்று மூன்றாண்டுகள் வரை ஆளுநர் மாநிலங்களில் நிர்வாகத்தை நடத்திச் செல்லலாம்.

மாநிலச் சட்டசபையின் அங்கத்தினர்கள் விரிவான வாக்கெடுப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் பல்வேறு சமூகங்களிலிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர அங்கத்தினர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருந்ததால், இவர்களுக்கு நிர்வாகத்துறையில் அதிகச் செல்வாக்கு இருந்து வந்தது. பண மசோதாக்களைப்பற்றி 1919ஆம் ஆண்டுச் சட்டத்தைவிட, இதில் அங்கத்தினர்கள் விரிவாக விவாதிக்கலாம். மக்களின் குறைகளை அரசு கவனிக்காவிடின் ஒட்டின்மூலம் பண மசோதாக்களைத் தள்ளி வைக்கவோ, நிறைவேற்ற மறுக்கவோ அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணங்கள், பீகார், வங்காளம், அஸ்ஸாம் ஆகிய ஆறு மாநிலங்களில் ஈரங்க சட்டசபைகளும், மீதியுள்ள மாநிலங்களில் ஓரங்க சட்டசபையும் இயங்க வகை செய்யப்பட்டிருந்தது. கீழ்ச் சபைகளில் 50 முதல்

200 வரையிலான உறுப்பினர்கள் இடம் பெறவேண்டும். இவ்விரு சபைகளும் ஒற்றுமையுடன் கடமையாற்ற வேண்டும். இவற்றுக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டால் இரண்டு சபைகளையும் ஒன்றாகக் கூட்டி வைத்து (Joint Session) கருத்து வேறுபாடுகளைக் களைவது ஆளுநரின் பொறுப்பாகும்.

கூட்டாட்சி நீதிமன்றம் (Federal Court) : 1935ஆம் ஆண்டின் சட்டத்தின்படி, கூட்டாட்சியில் நீதிமன்றம் ஒன்று டெல்லியில் அமைக்க வகை செய்யப்பட்டிருந்தது. மாநிலங்களிலிருந்து மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்க அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அரசியல் சட்டங்களின் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் பொறுப்புக் கூட்டாட்சி நீதிமன்றத்தினுடையது. கூட்டாட்சி நீதிமன்றத்தில் ஒரு தலைமை நீதிபதியும், மற்றும் ஆறு உதவி நீதிபதிகளும் இருப்பர். இவர்கள் அனைவரும் இங்கிலாந்து மன்னராலேயே நியமிக்கப்படுவர். இவர்கள் 65 வயதுவரை பதவி வகிக்கலாம்.

கூட்டாட்சியின் அரசியல் சட்டம்பற்றி எழும் வழக்குகளை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. மாநில அரசுகள், சுதேச அரசுகள் ஆகியவற்றுக்கிடையேயும் கூட்டாட்சி அரசு, மாநில அரசு ஆகியவற்றுக்கிடையிலும் எழும் வழக்குகளை இந்த நீதிமன்றம் விசாரிக்கும். இவ் வழக்குகளில் இங்கிலாந்து (அரசுப் பேரவையின்) பிரிவி கவுன்சிலின் (Privy Council) தீர்ப்பே இறுதியானது. மாநில உயர் நீதிமன்றங்களின் தீர்ப்பின்மீது எழும் மேல்முறையீடுகளை (Appeals) கூட்டாட்சி மன்றம் விசாரிக்கும். 1935ஆம் ஆண்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கு இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்கே உரிமை வழங்கப்பட்டது.

இந்தியச் செயலாளர் (Secretary of State for India): இந்தியா அமைச்சருக்கு உதவியாக இருந்து வந்த இந்திய ஆலோசனைக் குழு (Indian Council) 1935ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி நீக்கப்பட்டது. இதற்குப் பதில் மூவருக்குமேல் ஆறுபேருக்கு உட்பட்ட மற்றோர் ஆலோசனைக் குழு நிறுவப்பட்டது. இந்த ஆலோசகர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகள். இந்தியச் செயலாளரின் அதிகாரங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டன.

1935ஆம் ஆண்டுச் சட்டத்தின் குறைகள் : மாநிலங்களுக்கு, இச் சட்டத்தின்மூலம் சுயாட்சி அதிகமாக அளிக்கப்படவில்லை என்று குறை கூறப்பட்டது. தலைமை ஆளுநரின் கட்டுப்பாட்டிலிருந்து மாநில நிர்வாகமும், சட்டசபைகளும் விடுபட்டிருந்த போதிலும் அவர் விரும்பினால் இவ்விரண்டின் செயல் முறைகளைக்

கட்டுபடுத்த முடியும். ஆளுநருக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரங்கள், மாநிலத்தில் பொறுப்பாட்சி ஏற்படுவதற்கு இடையூறாக இருந்து வந்தது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரே பொறுப்பாட்சியின் உண்மையான தலைவராக இருக்க முடியும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்படவில்லை. தனித் தொகுதி முறையும், வகுப்பு அடிப்படையில் ஓட்டுரிமையும் சட்டசபை அங்கத்தினர்களிடம் ஒத்துழைப்பும், ஒருமைப்பாடும் ஏற்பட முடியாமல் தடுத்தன. ஒவ்வோர் இனத்தவரும் தங்களைச் சார்ந்தவர்களின் உரிமைக்காக வாதாடும் நிலை ஏற்பட்டது.

மாநிலங்களிலுள்ள மேல்சபை முற்போக்கான சட்டதிட்டங்கள் ஏற்படுத்தத் தடையாக இருக்குமெனக் கருதப்பட்டது. நிதி சம்பந்தப்பட்டவரை ஒவ்வொரு தடவையும் அரசிடம் கெஞ்சவேண்டிய நிலை இச் சட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ளது என்று சர் ஷாபத் அகமதுகான் கூறியுள்ளார். அமைச்சர்கள் நிர்வாக அதிகாரிகளின்மீது அதிகாரம் செலுத்த இயலாதவாறு இச் சட்டம் செய்திருந்தது.

இச் சட்டம் இந்திய மாநிலங்களில் மக்களுக்குத் தேர்தல் முறையை அறிமுகப்படுத்தி, ஜனநாயக முறைப்படி அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க வாய்ப்புகள் அளித்தது. ஆனல் கூட்டாட்சியின் ஒரு பகுதியாக அமைந்திருந்த சுதேச அரசுகளில் மக்களுக்கு எவ்விதத் தேர்தல் வாய்ப்பும் அளிக்கப்படவில்லை. மன்னர்களே தங்களுக்குப் பிடித்தமானவர்களைச் சட்டசபை அங்கத்தினர்களாக நியமித்து வந்தனர். எனவே, நாட்டின் நிர்வாகத்தில் சுதேச அரசுகளில் வாழ்ந்த மக்களுக்கு எத்தகைய பங்கும் கிடைக்கவில்லை. மாநிலங்கள் கட்டாயமாகக் கூட்டாட்சியில் சேர வேண்டுமென்ற நிபந்தனை இருந்தது. ஆனல் விருப்பப்பட்டால் கூட்டாட்சியில் சேரலாம் என்ற சலுகை சுதேச அரசுகளுக்கு அளிக்கப்பட்டிருந்தது. இத்தகைய பாகுபாடு நாட்டின் நிர்வாகத்துறையில் பல சிக்கல்களை உண்டுபண்ணின. சட்டம் இயற்றுதல், நிர்வாகம், நிதி போன்றவற்றில் அதிகாரம் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டிருந்தது.

அமைச்சர்கள் சுயேச்சையாகச் செயல்பட இச் சட்டம் அனுமதிக்கப்படவில்லை. மொத்தத்தில் 20 சதவீதம் செலவினமே அமைச்சர்களின் பொறுப்பில் விடப்பட்டது. பிரிட்டீஷாரின் பொருளாதாரக் கொள்கை இந்தியத் தொழிலையும், வணிகத்தையும் வளர்ச்சி அடையாதபடி கட்டுப்படுத்தியது. நாட்டின் பாதுகாப்பும், வெளிநாட்டுறவும் ஒதுக்கப்பட்ட துறையைச் சார்ந்திருந்தமையால் இந்தியர்கள் இவை சம்பந்தமான தீர்மானங்

களைச் சட்டசபைகளில் கொண்டுவர வாய்ப்புப் பெறவில்லை. எனவே, இவ்விரு துறைகளுக்கும் செலவிடப்படும் தொகையைக் கூட்டவோ, குறைக்கவோ இந்தியர்களுக்கு உரிமை இல்லை. இச் சட்டம் மக்களின் உரிமைகளுக்கு வாய்ப்பளிக்காமையால் காங்கிரஸ் கட்சி சுயாட்சிக் கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டது. இந்திய மக்களின் பொறுப்பாட்சிக் கோரிக்கையைத் தட்டிக் கழிக்கும் வகையில் இச் சட்டம் அமைந்திருந்தது. எனவே, இச் சட்டத்தைக் காங்கிரஸ், முஸ்லீம் லீக் ஆகிய கட்சித் தலைவர்கள் ஒருமுகமாகக் கண்டித்தனர்.

மாநிலச் சுயாட்சி என்று மாநிலங்களுக்கு அளித்த அதிகாரங்கள் பெயரளவிலே இருந்து வந்தன. செயல் முறைக்கு அனுமதிக்கவில்லை. இரட்டையாட்சி மாநிலங்களிலிருந்து அகற்றப்பட்டன. ஒதுக்கப்பட்ட இலாக்காவிற்கும், மாற்றப்பட்ட இலாக்காவிற்கும் உள்ள வித்தியாசங்கள் நீக்கப்பட்டன. மாநில ஆளுநர், அமைச்சர்களின் ஆலோசனைகளின்படி நிர்வாகம் செய்ய வகை செய்யப்பட்டது. 1919ஆம் ஆண்டுச் சட்டத்தைவிட 1935ஆம் ஆண்டு ஏற்பட்ட சட்டத்தில் அமைச்சர்களின் நிலை உயர்வடைந்திருந்த போதிலும் வளர்ச்சித் திட்டங்கள் எதுவும் செயல்படுத்த முடியவில்லை. பிரிட்டிஷ் பாராளுமன்றம், கவர்னர் ஜெனரல், மாநில ஆளுநர் ஆகியவர்களின் அதிகாரப் போக்கு, மாநிலச் சுயாட்சிக்கு எந்த வகையிலும் பயனுள்ளதாக அமையவில்லை.

ஆங்கிலப் பேரரசின் முடிவும் இந்தியாவின் பிரிவினையும்

ஐரோப்பாவில் 1945ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரண்டாவது உலகப் போரின் முழக்கம் நின்றபோது, இந்திய அரசின் அரசியல் நிலை 1942-ல் இருந்ததைவிட எல்லாவகையிலும் வலுப் பெற்றதாகத் தோன்றியது. உலகப்போரின் வெற்றி, இந்திய அரசின் வெற்றி போன்று தோன்றியது. இந்தியர்களின் அரசியல் கிளர்ச்சிகளை வழக்கம்போல் அடக்கி ஒடுக்கி விடலாமென இந்திய அரசின் மேல்மட்ட அதிகாரிகள் எண்ணினர். இந்த எண்ணம் சிறிது காலம்தான் நீடித்தது. இந்திய அரசியலில் காணப்பட்ட அமைதி, வருங்கால மாற்றத்தின் அறிகுறியாக அமைந்திருந்தது. ஆங்கில அரசின்மீதும், இந்திய ஆட்சியாளர்களின்மீதும் இந்திய மக்களுக்கு இருந்த வெறுப்பும், கொதிப்பும் அதிகரிக்கத்தான் செய்தன. யுத்தத்தில் வெற்றி பெற்றிருந்த பிரிட்டிஷாரிடத்தில் காங்கிரஸ் கட்சி முன்னையைவிட அதிகச் சந்தேகமும் அச்சமும் கொண்டிருந்தது. ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்குவர் என்ற எண்ணம் காங்கிரசாரிடம் மறைய ஆரம்பித்தது. அரசியல் பேச்சுகள் அனைத்திலும் சிறுபான்மை

யினரின் உரிமைகளையும், குறிப்பாக முஸ்லீம் இனத்தவர்களுக்கு அளிக்கவிருக்கும் சலுகைகளையும் ஆங்கிலேயர்கள் வலியுறுத்திப் பேசி வந்தனர் என்பதே இதற்குக் காரணமாகும்.

மத்திய, மாநிலச் சட்டசபைகளில் முஸ்லீம்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தபோதிலும், அவர்கள் கேட்கும் பாக்கிஸ்தான் பிரச்சினை ஒரு வலுவற்ற குறிக்கோள் என்று காங்கிரஸ் தலைவர்கள் எண்ணி வந்தனர். முஸ்லீம் லீகிற்கு என்று தனியாகப் பாக்கிஸ்தான் நாட்டைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று பிடிவாதமாக இருப்பது, பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்குப் பேருதவியாக இருக்குமென்று நம்பி வந்தனர். ஆனால் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவரான மகமது அலி ஜின்னாவும், அவரது தோழர்களும் காங்கிரசின் போக்கில் சந்தேகம் கொண்டிருந்தனர். வளர்ந்து வரும் தங்கள் அரசியல் வலிமையில் லீக் கட்சியினர் பூரண நம்பிக்கை கொண்டிருந்தனர். அதனால், அவர்கள் பிரிவினையைத் தீவிரமாக வலியுறுத்தவில்லை. தகுந்த சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தனர். இஸ்லாமிய சமூகம் வாழ வேண்டுமாயின் தனி நாடு பிரித்தாக வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். இச் சமயத்தில் காங்கிரஸ் கட்சியினர் பிரிட்டிஷாரிடம் சந்தேகம் கொண்டிருந்தனர். முஸ்லீம் லீக் கட்சியினர், காங்கிரசிடம் அவநம்பிக்கை கொண்டிருந்தனர். காங்கிரஸ் கட்சியினர் முஸ்லீம்களின் பலத்தைக் குறைவாக எடைபோட்டிருந்தனர்.

வேவல் பிரபு (Lord Wavell)

லின்லித்கோ பிரபு (Lord Linlithgow)விற்குப் பிறகு, வேவல் பிரபு (Lord Wavell), 1943-ல் இந்தியாவின் வைசிராயாக நியமிக்கப்பட்டார். இவர் இந்திய விவகாரங்களில் சிறிது தாராள மனப்பான்மையுடன் நடந்துகொண்ட போதிலும் காங்கிரஸ் கட்சியிடம் ஓரளவிற்குக் கண்டிப்பாகவே நடந்து கொண்டார். 1943-ல் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சத்தையும், உணவு நெருக்கடியையும் நல்லமுறையில் சமாளித்துவிட்டார். போர் நடவடிக்கைகளுக்கு இந்தியரின் ஒத்துழைப்பையும் பெற்றிருந்தார். பணவீக்கத்தைத் தடுத்தார். நிர்வாகத்திலும் கணிசமான முன்னேற்றம் கண்டார். இருப்பினும், இந்தியாவில் இருந்து வந்த அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய இக்கட்டான நிலையில் அவர் இருந்தார். பிரிட்டிஷ் மக்கள்மீது இந்து, முஸ்லீம் மக்கள் கொண்டிருந்த அவநம்பிக்கையைப் போக்க வேண்டிய நிலையிலும் இருந்தார். இவ்விரு கட்சியினரின் ஒத்துழைப்புடன் இந்திய அரசியலை நடத்திச் செல்லவேண்டிய

அவசியம் வேவல் பிரபுவுக்கு ஏற்பட்டது. இம் முயற்சியில் தோல்வி யுற்றால், நாடு துண்டாடப்படுவது நிச்சயம் என்பதைத் தெரிந் திருந்தார். இவற்றை மனத்தில்கொண்டு வேவல் பிரபு தமது பணியைத் தொடங்கினார்.

சர் ஸ்டாபோர்ட்டு கிரிப்ஸ், 1942-ல் அறிவித்த திட்டப்படி நாட்டின் நிர்வாக முறையைத் திருத்தி அமைப்பது அவரது முதல் வேலையாக அமைந்தது. உலகப் போரில் ஜப்பானியருடனான போர் முடிவுற்றதும் இந்தியாவிற்கு அளிப்பதாகத் தெரிவித்த அரசியல் சட்டத்தைச் செயல்படுத்துவது இரண்டாவது பணி யாக அமைந்தது. முஸ்லிம்களுக்கு மத்திய, மாநிலச் சட்டசபை களில் அளிக்கப்பட இருக்கும் இடங்கள் சம்பந்தமாகக் காங்கிரஸ் கட்சிக்கும், இந்திய அரசுக்கும் 1945-ல் தொடர்ந்த பேச்சு வார்த்தைகள் முறிந்தன. முஸ்லீம் லீக் கட்சி இந்திய முஸ்லீம் கள் அனைவருடைய கட்சி என்ற கருத்தைக் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ள மறுத்தது. 1945ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் ஜப்பானியப் போர் திடீரென்று முடிவுற்றமையால் அஃது இந்திய அரசியல் போக்கில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திற்று. மத்திய, மாநிலத் தேர்தல்களைச் சந்திக்கும்படி முஸ்லீம் லீக் தலைவர் களை வேவல் பிரபு கேட்டுக்கொண்டார். இதற்கிடையில் 1945-46-ல் இந்திய அரசியல் நிலையில் பரபரப்பும், பதட்ட நிலையும் நிலவி வந்தன. அனைத்து இந்துக்களின் பொதுவான கட்சியென காங்கிரஸ் விளங்குவதைப் போன்று, முஸ்லீம்கள் அனைவரின் பொதுவான கட்சியாக முஸ்லீம் லீக் விளங்கியது. 1946ஆம் ஆண்டில் ஏற்பட்ட கப்பற்படைப் புரட்சி ஆங்கிலேயர்களைச் சீரிய முறையில் சிந்திக்க வைத்தது. பாதுகாப்புப் படை (Defence forces) யினரின் ஆதரவு பிரிட்டீஷ் ஆட்சிக்கு இனிமேல் கிடைக்காது என்ற நிலை கடற்படையின் கிளர்ச்சிக்குப் பின் தெளிவாயிற்று. இக் கிளர்ச்சிக்கு இந்திய மக்கள் அளித்த உதவி யும், ராணுவ வீரர்கள் சர்தார் படேலின் சமரச முயற்சிக்குச் செவி சாய்த்த முறையும் ஆங்கிலேயரைச் சந்தேகிக்க வைத்தன. இத்தகைய புரட்சி விமானப் படையிலும் தோன்றும் அறிகுறிகள் இருந்தன.

இங்கிலாந்தின் தலையீடும், புதிய திட்டமும்

இங்கிலாந்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அமைச்சரவை, பெத்திக் லாரன்ஸ் பிரபு (Lord Pethick Lawrence) என்பவரின் தலைமையில் அரசியல் நல்லெண்ணக் குழு ஒன்றை இந்தியாவிற்கு அனுப்பியது. இக் குழுவில் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்,

ஏ. வி. அலெக்சாந்தர் ஆகிய இருவரும் அங்கத்தினர்களாக இருந்தனர். இந்த அரசியல் நல்லெண்ணக் குழு 1946ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் இந்தியாவிற்கு வந்தது. காங்கிரஸ், முஸ்லீம்லீக் ஆகிய இரு கட்சியினரின் தீர்மானமான கருத்துகளைக் கேட்டு அறிந்தபின் இக் குழு, தனது சொந்தத் திட்டத்தை மே மாதம் அறிவித்தது. முஸ்லீம்களுக்குக் கொடுக்கத் தீர்மானித்த பல உரிமைகளையும் சலுகைகளையும் அளித்த பின்பு, அவர்கள் நாட்டைத் துண்டுபோடாமல் இருக்கச் சம்மதிக்க வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தனர்.

இத் திட்டத்தின்படி இந்தியாவில் மத்தியக் கூட்டாட்சி ஒன்று அமைக்கப்படவேண்டும். இக் கூட்டாட்சி நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, போக்குவரத்து ஆகியவற்றைக் கவனித்துக் கொள்ளும். சுதேச அரசுகளை இந்தியக் கூட்டாட்சியுடன் இணையும்படி செய்யவேண்டும். இத் திட்டத்தில் இரு புதிய அம்சங்கள் அடங்கி இருந்தன. ஒன்று முஸ்லீம்களின் விருப்பப்படி மத்தியக்கூட்டாட்சியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. தனிப்பட்ட மாநிலங்கள், தங்கள் விருப்பம்போல் அந்த வட்டாரத்திலுள்ள சுதேச அரசுகளை இணைத்துக்கொள்ள வகைசெய்யப்பட்டது. மேலும் இம் மாநிலங்களே தங்களுடைய அதிகார வரம்புகளை நிர்ணயித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டன. இத் திட்டத்தின்படி எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் நிர்ணயசபை ஒன்று கூட்டப்படவேண்டும். இடைக்கால அரசு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலே குறிப்பிட்ட திட்டத்தை இரு சாராரும் ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாகியது. தங்கள் இசைவை அவர்கள் தெரிவித்தனர். ஆனால் இன அடிப்படையில் இடைக்கால அரசாங்கத்தில் (Interim Government) இடங்கள் ஒதுக்கும் பிரச்சினையில் சிக்கல் எழுந்ததால், அரசியல் பேச்சு வார்த்தைகள் முறிந்தன. ஐந்து இடங்களில் நான்கு இடங்களே முஸ்லீம் லீக்கிற்கு அளிக்கப்படவேண்டுமென்றும், ஓர் இடத்தைத் தேசிய முஸ்லீம் ஒருவருக்குக் கொடுக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் வற்புறுத்திற்று. முஸ்லீம் லீக் கட்சியினர் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. இவர்கள் தேசிய முஸ்லீம்களைத் துரோகிகள் என்று கருதி வந்தனர்.

நேரடி நடவடிக்கை நாள் (Direct Action Day)

இத்தகைய சூழ்நிலையில் மேற்கொண்டு அரசியல் பேச்சு வார்த்தைகள் நடத்துவது சரியல்ல என்ற நிலை ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் முஸ்லீம்லீக் கட்சியினர் தங்களிடம் அரசாங்கப்

பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்று வைசிராயிடம் வற்புத்தினர். ஆனால், அவர் இதற்கு இசையவில்லை. இதனால் வைசிராய் மீது முஸ்லீம்லீக் கட்சியினர் வெறுப்புற்றனர். இடைக்கால அரசை நிறுவ விடுத்த வேண்டுகோளைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. காங்கிரசுடன் முஸ்லீம் லீக் இச் சமயத்தில் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு லீக் அதை நிராகரித்தது. தங்களிடம் அரசை ஒப்படைக்காதது நம்பிக்கைத் துரோகமான செயல் என்று ஆகஸ்டு மாதம் 16ஆம் நாள் நேர்நடவடிக்கை நாள் (Direct Action Day) என்று மூஸ்லீம் லீக் தலைவர்கள் அறிவித்தனர். ஏற்கெனவே புகைந்து கொண்டிருந்த இனப் பூசல் சண்டை இப்பொழுது அனல் கக்கியது. கல்கத்தாவில் ஆகஸ்ட்டுக் கலவரம் கோரத் தாண்டவமாடியது. இக் கலவரத்தில் இந்துக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். பீகார் மாநிலத்தில் இக் கலவரம் பரவியபோது, அங்குப் பாதிக்கப்பட்டவர்கள் முஸ்லீம்கள். எனவே, இம் மக்களில் பெரும் பகுதியினர் பாதுகாப்பின் காரணமாகக் கிழக்கு வங்காளம் சென்றனர். கிழக்கு வங்காளத்திலும், மத்திய மாகாணங்களிலும் இந்து முஸ்லீம் கலவரங்கள் தோன்றின. 1946ஆம் ஆண்டிலேயே ஐக்கியச் சுதந்திர இந்தியா (United Independent India) என்ற கனவு கனவாகவே முடிந்தது. நாட்டின் பிரிவினை ஒன்றே கலவரங்களையும், அரசியல் குழப்பங்களையும் தவிர்க்கும் வழி எனத் தலைவர்கள் உணர்ந்தனர். இருப்பினும், இரு கட்சியினரையும் சமாதானப்படுத்தி, ஒரு தீர்மானமான முடிவை எடுக்க மேலும் ஒன்பது மாதங்களாயின. இந்த ஒன்பது மாத இந்திய வரலாறு ரத்தக்கறை படிந்த வரலாறு என்றால், அஃது உண்மையேயாகும்.

1946ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முஸ்லிம் லீக் கட்சி நிர்வாகக் குழு இடைக்கால அரசாங்கத்தில் கலந்து கொண்டது. ஆனால், இவர்களின் நுழைவு நாட்டின் அமைதிக்கு ஊறு விளைவித்ததேயல்லாமல் பயனுள்ளதாக அமையவில்லை. அதே மாதம் பண்டித ஜவஹர்லால் நேரு வடமேற்கு எல்லைப்புறத்திற்கு விஜயம் செய்தபோது சமய வெறிகொண்ட பட்டாணிய முஸ்லிம்களால் அவரது உயிருக்கே ஆபத்து நேர இருந்தது. 'எல்லைப்புறக் காந்தி' என்று அழைக்கப்படும் கான் அப்துல் கபார்கான் என்பவர், இந்த ஆபத்தை உடனிருந்து தவிர்த்தார். இப் பகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்த செஞ்சட்டை (Red Shirt) இயக்கத்தின் தலைவரான கான் அப்துல் கபார்கான், நேருவின் கருத்துகளுக்கு ஆதரவளித்தபோதிலும், அம் மக்கள், இந்துக்கள் பெருவாரியாகவுள்ள சிந்தியாவுடன் இணைந்திருக்க விரும்பவில்லை. டிசம்பர் மாதத்தில் கூடிய அரசியல் நிர்ணய சபையில்

முஸ்லிம் லீக் சேர மறுத்து வெளிநடப்புச் செய்தது. அமிர்தசரஸ், மூல்டான் ஆகிய இரு இடங்களில் ஏற்பட்ட கலவரங்களின் காரணமாகப் பஞ்சாப்பில் பதவியிலிருந்த 'கிசிர்' அமைச்சரவை வீழ்ந்தது. பெரும் அழிவை ஏற்படுத்திய இவ்வின வெறிக் கலகம் வெகு விரைவில் அடக்கப்பட்டது.

இரண்டாவது நேர் நடவடிக்கை (Direct Action Again)

1945ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில் மொத்த இடங்களான 296-ல் 202 காங்கிரசுக்கும் 73 லீக் கட்சியினருக்கும் கிடைத்தன. காங்கிரஸ் பெரும்பான்மை கொண்ட இந்தச் சட்டசபையில் கலந்துகொள்ள ஜின்னா விரும்ப வில்லை. சட்டசபை மறுபடியும் டிசம்பர் மாதம் 9ஆம் நாள் டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் தலைமையில் கூடி அரசியல் நிர்ணய சட்டத்தை உருவாக்கப் பல குழுக்களை நியமித்தது. இந்தியா சுதந்திரமுள்ள நாடென அறிவிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சிகளை ஏற்றுக்கொள்ள விரும்பாத ஜின்னா, சட்டசபையைக் கலைக்கும்படி பிரிட்டிஷ் அரசைக் கேட்டுக்கொண்டார். இதற் கிடையில் இந்தியர்கள் சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் 1948ஆம் ஆண்டு ஜூன் மாதத் திற்குள் இந்தியாவிற்குச் சதந்திரம் அளிக்கப்படுமென்று இங்கிலாந்தின் பிரதமர் திரு அட்லி (Mr. Attlee) அறிவித்தார். இந்திய மக்களின் நலனைக் கருதி மத்திய அரசுக்கு அதிகாரம் மாற்றப்படாவிட்டாலும் மாநில அரசுகளுக்காவது அதிகாரம் மாற்றப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. லீக் கட்சியினரைத் தவிர, மற்ற அனைவரும் அதிகார மாற்றத்திற்கு மகிழ்ச்சி தெரிவித்தனர். இந் நிலையில் தாங்கள் விரும்பும் பாக்கிஸ்தான் கிடைக்குமோ என்ற சந்தேகத்தில் லீகினர் இரண்டாவது தடவையாக நேரடி நடவடிக்கையில் இறங்கினர். இதன் பயனாகப் பஞ்சாப், வங்காளம், வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஆகிய இடங்களில் கலவரம் ஏற்பட்டது. கொள்ளை, கொலை, பொருள் இழப்பு ஆகியவை பெருமளவில் நடந்தன. ராவல்பிண்டியில் ஏராளமான இந்துக்களும், சீக்கியர்களும் கொல்லப்பட்டனர். கான் அப்துல் கபர்கான் பத்தானியர்களுக்குச் சுதந்திரத் தனி நாடு வேண்டுமென்று நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டார்.

மவுண்ட் பேட்டனின் நியமனம்

இந்து, முஸ்லீம் கிளர்ச்சிகளுக்கிடையில் பிரிட்டிஷ் அமைச்சரவை மற்றொரு சமாதான முயற்சியில் ஈடுபட்டது. பண்டித ஜவஹர்லால் நேரு, மகமது அலி ஜின்னா, சர்தார் பலதேவ் சிங் ஆகிய மூவரையும் இங்கிலாந்திற்கு வரவழைத்து

சமாதானம் செய்துகொள்ள முயன்றது. இம் முயற்சியும் வழக்கம் போல் பயனற்றுப் போயிற்று. இச் சமயத்தில் தூரக்கிழக்குப் போர்களுக்குத் தலைமைத் தளபதியாக இருந்த மவுன்ட் பேட்டன் பிரபு, இந்தியாவின் வைசிராயாக, வேவல் பிரபுவுக்குப் பின் நியமிக்கப்பட்டார். காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகிய இரு கட்சியினரின் தீவிரப் போக்கைப் புதிய வைசிராயால் எவ்வகையிலும் மாற்ற முடியவில்லை. ஜின்னாவின் வெற்றி நிச்சயமாயிற்று. அவர் விரும்பிய பாக்கிஸ்தான் எவ்வகையிலும் கிடைத்தே தீரும் என்று அவரும், அவரது நண்பர்களும் உறுதியாக நம்பினர். நாடு பிரிக்கப்படாவிட்டால் உள்நாட்டுக் கலகம் ஏற்படுவது நிச்சயம் என்று மகமது அலி ஜின்னா கூறிவந்தார். பஞ்சாபும், வங்காளமும் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று தெரிவித்தார்.

மவுன்ட் பேட்டனின் திட்டம்

பாக்கிஸ்தானை உருவாக்கித்தான் தீரவேண்டும் என்ற நிலையை உணர்ந்தபின், மவுன்ட் பேட்டன் பிரபு, இங்கிலாந்திற்குச் சென்று தமது திட்டத்தை அமைச்சரவையிடம் சமர்ப்பித்தார். அமைச்சரவை அவரது திட்டத்தை ஏற்றுக்கொண்டது. இதன்படி, (1) இந்தியா இரு பகுதிகளாகப் பிரிக்கப்படவேண்டும். முஸ்லிம்கள் பெருவாரியாக வாழும் மாகாணங்களை இணைத்துத் தனி நாடாக உருவாக்கவேண்டும். அதற்குத் தனி சட்டசபை ஒன்று அமைய வேண்டும். (2) பஞ்சாப், வங்காளம் ஆகிய இரு மாகாணங்களின் சட்டசபையிலுள்ள இந்து அங்கத்தினர்கள் விரும்பினால், அவ்விரு மாகாணங்களும் பிரிக்கப்படவேண்டும். (3) வடமேற்கு எல்லைப்புற மாகாணம் எந் நாட்டுடன் இணைய விரும்புகிறது என்பதை அறிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இதைப் போன்று வங்காளத்திலுள்ள சில்ஹெட் (Sylhct) மாவட்டத்திலும் வாக்கெடுப்பு நடைபெறவேண்டும். (5) வங்காளம், பஞ்சாப் ஆகிய இரு மாகாணங்களிலும் எல்லை நிர்ணயக் குழு ஒன்று நிறுவப்படவேண்டும், (6) இத்திட்டங்களை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றப்படவேண்டும்.

இத்திட்டத்தால் நாடு பிளவுபட இருக்கிறது என்றாலும், வேறு வழியின்றிக் காங்கிரசும், சீக்கியர் கட்சியைச் சார்ந்தவர்களும் இதனை ஏற்றுக்கொண்டனர். பிரிவினையால் தமது குறிக்கோள் நிறைவேறுகின்றது என்றாலும், தாம் கேட்ட பாக்கிஸ்தான் முழுமையாகக் கிடைக்கவில்லை என்று ஜின்னா குறைபட்டுக் கொண்டார். மேலும் ஒருவரை ஒருவர் பகைப்பதால் எவருக்கும் லாபம் இல்லை என இரு கட்சியினரும் உணர்ந்து கொண்டனர்.

கொலையும், கலவரமும் தடுக்கப்படவேண்டும் என்ற எண்ணம் இரு சாராரிடமும் இருந்தது. பிரிவினையால் பாதிக்கப்படு பவர்கள் சீக்கியர்களே. சீக்கியர்கள் சிறுபான்மையினர். இவர் களுக்குத் தகுதிவாய்ந்த தலைவர்கள் அப்பொழுது இல்லை. தங்களுக்குள் இவர்கள் பல உட்பிரிவையும், கட்சிகளையும், கொண்டிருந்தனர். உண்மையில் நாடு இரு பிரிவாகப் பிரிந்தபின், அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் சீக்கியர்களே. மகாத்மா காந்தி மன வேதனையுடன் பிரிவினைக்குச் சம்மதம் தெரிவித்தார்.

பிரிவினைக்குரிய சட்டத்தை இங்கிலாந்துப் பாராளுமன்றம் 1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதியன்று நிறைவேற் றியது. இச் சட்டத்தை யாரும் எதிர்க்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இங்கிலாந்தின் பழய பிரதமர் திரு. வின்சென்ட் சர்ச்சில், இச் சட்டத்திற்கு நல்லாசிகூறி வாழ்த்தினார். காரணம் இவரால் 1942-ல் அனுப்பப்பட்ட கிரிப்ஸ் தூதுக் குழுவினர் இந்தியாவிற்கு அளிக்கவிருந்த திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது. சுதந்திரம் வழங்குவதற்கெனத் தனியாகக் கூட்டப்பட்ட தில்லி சட்டசபையில் 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14, 15ஆம் தேதி நள்ளிரவில் இந்தியா, பாக்கிஸ்தான் ஆகிய இரு நாடு களுக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டது உலகம் முழுவதும் தூக்கத்தி லிருக்கும்போது இந்தியா விழித்திருந்து சுதந்திரம் பெற்றது. இத் தகைய சுதந்திரத்தைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாப்போம் என்று இந்தியத் தலைவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

இந்தியா, பாக்கிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் தனிச் சட்டசபைகள் ஏற்படுத்தப்பட்டன. நாட்டின் பொதுச் சொத்து, கடன் ஆகியவை பிரிக்கப்பட்டன. பாதுகாப்புப் படைகள் இரண்டாகப் பிரிப்பட்டன. இரு நாடுகளிலும் அகதிகள் பிரச்சினை எழுந்தது. லூயி மவுன்ட் பேட்டன், இந்திய டொமினி யனின் முதல் தலைமை ஆளுநராக (Governor General) நியமன மானார், திரு மகமது அலி ஜின்னா பாக்கிஸ்தானின் தலைமை ஆளுநரானார்.

4. சுதந்திர இந்தியா

1. இந்திய சமஸ்தானங்களின் ஒருங்கிணைவு

(Integration of Indian States)

1947க்கு முன் இந்திய சமஸ்தானங்களின் நிலை

ஆங்கிலேயர்கள் இந்தியத் துணைக் கண்டத்தைப் பல வழிகளில் வென்று தங்களுடைய ஆட்சியை நிறுவியபோது அவர்களின் நேர் ஆட்சியின்கீழ் இல்லாத சுதேச சமஸ்தானங்கள் பல இருந்து வந்தன. அவை சுதேச அரசர்களால் சில சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஆளப்பட்டு வந்தன. இத்தகைய சுதேச அரசுகள் தனித்து இயங்க முடியாமல் ஆங்கிலேயர்களின் மேலாண்மையை (Paramount power) ஏற்றுக்கொண்டு அவர்கள் அவ்வப்போது அறிவிக்கும் ஆணைகட்கு அடங்கி ஒடுங்கி நடந்து வந்தன. ஆங்கிலப் பேரரசு இந்தியாவில் நிலைத்திருக்க சுதேச அரசர்களின் ஒத்துழைப்புத் தேவைப்பட்டது. எனவேதான், சுதேச அரசுகளுடன் ஆங்கிலேயர்கள் நட்புக் கொண்டு ஒரு வகையில் அவர்களின் நிலையை ஊக்குவித்து வந்தனர். இந் நிலையை வலுப் படுத்திக் கொள்ள ஆங்கில அரசாங்கம் பல உடன்படிக்கைகளைச் சுதேச அரசுகளுடன் செய்து கொண்டிருந்தது. இத்தகைய உடன் படிக்கைகளின் மூலம் சுதேச அரசர்கள் இங்கிலாந்து மன்னருக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டுமென்றும், அவருக்கு விரோதமான செயல்கள் எதிலும் ஈடுபடக்கூடாது என்றும் குறிப் பிட்டு இருந்தது. மேலும் இவர்கள், ஆங்கில அரசின் அனுமதியில் லாமல் எந்த அன்னிய அரசுடனும் சண்டையோ, சமாதானமோ செய்து கொள்ளக்கூடாது. இவற்றுக்கு ஈடாக இந்திய சுதேச அரசின் பாதுகாப்பு, நல்ல நிர்வாகமுறை ஆகியவற்றிற்கு ஆங்கில அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருந்தது. ஆங்கில ரெசிடென்ட் (நிலையர்) (British Resident) ஒருவர் பொதுவாக எல்லாச் சுதேச அரசுகளிலும் இருந்து மன்னருக்கு நிர்வாக முறை, வெளி நாட்டுக் கொள்கை ஆகியவற்றில் ஆலோசனை கூறி வந்ததோடு அங்கு வாழ்ந்த ஆங்கிலேயர்களின் நலனையும் கவனித்து வந்தார்.

மத்திய அரசுக்கு அவ்வப்போது சுதேச அரசுகளின் நடவடிக்கை களைப்பற்றித் தகவல்கள் அனுப்புவதும், ரெசிடென்டின் வேலை களில் ஒன்றாக இருந்தது. மறைந்த மன்னரின் வாரிசுகள் நிர் வாகப் பொறுப்பை ஏற்பதற்குமுன், ஆங்கில அரசின் அனு மதியைப் பெறவேண்டும். சட்டம், அமைதி ஆகியவைகளைப் பாது காப்பதற்கும், நிர்வாகச் சீர்கேட்டை நீக்குவதற்கும் இந்திய சமஸ் தானங்களில் தலையிட ஆங்கில அரசுக்கு உரிமை இருந்தது. சுதேச அரசுகளில் உள்ள ரயில்வே, தந்தி, தபால் ஆகியவற்றின் நிர்வா கத்திலும் ஆங்கிலேயர்களுக்குப் பெரும் பங்கு இருந்து வந்தது.



படம் 6.

சுதேச மன்னர்கள் நரேந்திர மண்டல் (Narendra Mandal) என்ற ஸ்தாபனத்தை நிறுவி அதன் மூலம் தங்கள் நிறைவு

குறைவுகளை ஆங்கில அரசாங்கத்திற்குத் தெரிவித்து வந்தனர். மன்னர்கள் சங்கத்தின் நிரந்தரக் குழுவில் (Standing Committee) 35 மன்னர்களும், அமைச்சர்களும் இடம் பெற்றிருந்தனர். இச் சங்கத்திற்குக் கவர்னர்-ஜெனரல் (Govenor General) தலைவராக இருந்தார். 1935ஆம் ஆண்டு ஏற்பட்ட சட்டத்தின்படி சுதேச மன்னர்களுக்கும், இந்திய அரசுக்கும், இடையில் கூட்டாட்சிமுறை வலியுறுத்தப்பட்டது. ஆனால், இதை ஆரம்பத்தில் சுதேச அரசர்கள் விரும்பவில்லை. முதல் வட்டமேஜை மகாநாட்டிற்குப் பின் (First Round Table Conference) தங்களுடைய செல் வாக்கைக் கூட்டாட்சி மன்றத்தில் நல்லவகையில் வலியுறுத்திப் பயன்பெற வாய்ப்பு அதிகம் உள்ளதென உணர்ந்து கூட்டாட்சி முறையை (Fedaration) அவர்கள் வரவேற்றனர். ஆனால் 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதியில் இரண்டாவது உலகப்போர் மூண்டமையால் சுதேச அரசுகளுக்கும் இந்திய அரசுக்கும், ஏற்பட்ட பேச்சுவார்த்தைகள் செயல் முறையில் ஈடுபடுத்தாது தள்ளிவைக்கப்பட்டன. இக் கூட்டாட்சி முறையின்கீழ் சுதேச மன்னர்கள் அதிகச் சலுகைகள் பெறு கின்றனர்கள் என்று இந்திய தேசிய காங்கிரசும், முஸ்லிம் லீக் கட்சியும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இருப்பினும் சுதேச மன்னர்களைக் கலக்காமல் எவ்வித அரசியல் மாற்றமும் செய்யப்போவதில்லை என்று ஆங்கில அரசு சுதேச மன்னர்களுக்கு உறுதி கூறி வந்தது.

அமைச்சரவைத் தூதுக்குழுத் திட்டம்

இரண்டாவது உலகப்போர் முடிந்தபின், தாங்கள் வாக்களித் ததற்கிணங்க ஆங்கில அரசின் பிரதமராக இருந்த திரு அட்லி (Mr. Attlee) இந்தியாவின் அரசியல் அமைப்பை மாற்றி அமைக்க 1946ஆம் ஆண்டில் ஓர் அமைச்சரவை ஆய்வுக்குழுவை (Cabinet Mission) இந்தியாவிற்கு அனுப்பிவைத்தார். அதில் சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் (Sir Stafford Cripps), பெத்திக் லாரன்ஸ் (Pethick Lawrence), ஏ. வி. அலெக்சாந்தர் (A. V. Alexander) ஆகிய மூவரும் இடம் பெற்றிருந்தனர். இம் மூவரும் ஏனைய அரசியல் திட்டங்களுடன் சுதேச அரசுகள்பற்றிய விஷயங்களை விவாதித்து ஒரு திட்டத்தை வெளியிட்டனர். இத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு: (1) இந்திய அரசும் சுதேச அரசு களும் அடங்கிய மத்திய அரசு ஒன்று அமைக்கப்பட வேண்டும். அந்த அரசு வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, போக்குவரத்து ஆகியவற்றை மட்டும் கவனித்துவரும். மத்திய அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள்தவிர, மற்ற எல்லா அதிகாரங்

களையும் சுதேச அரசுகளே வைத்துக்கொள்ளும். (2) இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி மறைந்தபின் ஏற்படும் அரசாங்கம், அல்லது அரசாங்கங்களுடன் ஒரு கூட்டாட்சி உடன்படிக்கையைச் சுதேச அரசுகள் செய்துகொள்ளலாம். அவ்வாறு செய்து கொள்ள விரும்பவில்லை யென்றால், அந்த அரசாங்கம், அல்லது அரசாங்கங்களுடன் குறிப்பிட்ட நிபந்தனைகளோடு அரசியல் ஏற்பாடுகளைச் சுதேச அரசுகள் செய்துகொள்ளலாம். இந்த அரசியல் அமைப்புச் சுதேச அரசுகள் தம் விருப்பப்படி இந்தியாவுடனோ, அல்லது பாக்கிஸ்தானுடனோ சேர்ந்துகொள்வதற்கு உரிமை அளித்தது. இத் திட்டத்தை மன்னர்கள் சங்கத்தின் நிர்வாகக் குழு பரிசீலனை செய்து பேச்சுவார்த்தைகளின்மூலமே இந்திய அரசுடன் இணையமுடியும் என்ற தீர்மானத்தை வெளியிட்டது. ஆனால், 1947ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் நாள் கூடிய அகில இந்திய காங்கிரஸ் குழு, இக் கருத்தை நிராகரித்ததோடு, சுதேச அரசுகள் சுதந்திரமாக இயங்க விரும்பும் கருத்தை வன்மையாகக் கண்டித்தது. ‘ஆங்கிலேய மேலாண்மை (Paramountcy) முடிவடைந்ததால், சுதேச அரசுகள் சுதந்திர அரசுகளாக ஆகிவிட முடியாது. தங்கள் எதிர்காலம்பற்றி முடிவுசெய்ய அவ் வரசுகளின் மக்களே உரிமையுடையவர்கள்’ என்று அகில இந்திய காங்கிரஸ் கூறியது. இக் கொள்கையை நேரு, தமது தலைமையுரையில் அன்று வலியுறுத்தினார்.

சுதேச சமஸ்தானங்களின் ஒருங்கிணைவு (Integration of Indian States)

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வலுவான அரசு ஒன்றை நிறுவிய பின்பு, தங்களுடைய நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கும் இந்திய நிர்வாகத்திற்கும் எவ்வித ஊனமும் ஏற்படாதவாறு பல சுதேச சமஸ்தானங்களை ஊக்குவித்து வந்தனர். 1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றபின் இத்தகைய சுதேச அரசுகள் சுமார் 554 இருந்தன. இவற்றின் மொத்தப் பரப்பு 5 லட்சம் சதுர மைல்கள். இங்கு 8 கோடியே 65 லட்சம் மக்கள் வாழ்ந்து வந்தனர். இவ்வளவு பரந்த எல்லைகளையும், மக்களையும் சுதந்திர இந்தியாவுடன் இணைத்து அவர்களுக்குச் சுதந்திர வாழ்வு அளித்த செயல் இதுகாறும் உலகில் இடம்பெறாத ஒன்றாகும். இந்தியாவைப் பொறுத்தவரையில் இஃது எவராலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு செயலாகும். இத்தகைய செயற்கரிய செயலைச் சாதித்தவர், இந்தியாவின் இரும்பு மனிதர்; ஐக்கிய இந்தியாவின் சிற்பி; இந்திய பிஸ்மார்க் என்று பெருமையுடன் அழைக்கப்பட்ட சர்தார் வல்லபாய்பட்டேல் ஆவார்.

இப்பெருமகனுருக்கு இந்தியாவும் இந்திய மக்களும் என்றென்றும் கடப்பாடு உடையவர்களாவர்.

சுதந்திர இந்தியாவின் கடைசி ஆங்கில வைசியராக இருந்த மவுன்ட்பேட்டன் பிரபு (Lord Louis Mountbatten), ஆங்கிலப் பேரரசிற்கும் இந்திய சுதேச சமஸ்தானங்களுக்கும் இதுகாறும் இருந்து வந்த உடன்படிக்கைகள் 1947ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3ஆம் நாளிலிருந்து செல்லாதனவாக்கப்பட்டு விட்டன என்று அறிவித்தார். அத்துடன் ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதிக்குப்பின், அவர்கள் தங்கள் விருப்பம்போல் இந்தியா, அல்லது பாக்கிஸ்தான் டொமினியனுடன் இணைந்துகொள்ளலாம் எனவும் தெரிவித்தார். அப்படி இணையாமல் சுதந்திரமாகச் செயல்படவும் அவைகளுக்கு உரிமையுண்டு என்றும் அறிவித்தார். இவ்விரு நாடுகளுடனும் இணைய விருப்பம் உள்ளவர்கள் தங்கள் நோக்கம்போல் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகளையும் உரிமைகளையும் வாதிட்டுப் பெற்று உறுதிப்படுத்திக்கொள்ளவும் வழிவகை செய்து கொடுத்திருந்தார். ஆங்கிலேயரின் மேலாணை நீக்கப்பட்டபின், சின்னஞ்சிறிய அரசுகளை இணைத்துக்கொண்டு யதேச்சை அதிகாரங்களுடன் அரசாளலாம் எனச் சுதேச அரசுகள் மகிழ்வும் பெருமிதமும் கொண்டிருந்தன.

சிறிதும் பெரிதுமாக இந்தியா முழுவதும் பரவிக்கிடந்த 554 சுதேச அரசுகளில் மிகப்பெரியது ஐதராபாத் சமஸ்தானமாகும். இஃது இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் சேர்ந்த பரப்பளவை உடையது. இதன் மக்கள் தொகை ஒரு கோடியே 60 லட்சம் ஆகும். மிகச் சிறிய அரசு நான்கு மைல் பரப்பளவுடையதாக இருந்தது. சுதேச சமஸ்தானங்களில் வாழ்ந்த 8 கோடியே 60 லட்சம் மக்களின் விருப்பத்திற்கிணங்கவோ, அல்லது அவர்களின் நலம் கருதியோ ஆட்சி நடைபெறவில்லை. பரோடா போன்ற சில சமஸ்தானங்களைத் தவிர, ஏனைய இடங்களில் மன்னர்கள் பரம்பரையாகக் கொடுங்கோலாட்சி நடத்தி வந்தனர். மன்னரது வாக்கு மகேசன் வாக்காகவும் சட்டமாகவும் கருதப்பட்டது. மன்னர்கள் மக்களிடம் சுதந்திர உணர்வு தலை எடுக்காதபடி தங்களுடைய யதேச்சாதிகாரத்தால் அழித்து வந்தனர். பெரும்பாலான மன்னர்களுக்கு நிர்வாகமுறை என்ன என்பது தெரியாதிருந்தது. அவர்கள் சொந்த வருவாய்க்கும், நாட்டின் கருவூல வருவாய்க்கும் பாகுபாடு காட்டாது, தங்களுடைய தேவைகளுக்காக இரண்டையும் பயன்படுத்தி வந்தனர். ஆங்கில மேலாணைக்கு (English paramount power) எவ்வித ஊனமும் இழைத்துவிடக் கூடாது என்பதும், மக்களிடம் எவ்வாறு அதிகவரிப் பணம்

திரட்டுவது என்பதுமே சுதேச மன்னர்களின் நோக்கமாக இருந்தன. பரோடா சமஸ்தானங்களில் மக்களின் நலன் கருதி பல சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன. திறமையுள்ள இந்திய அதிகாரிகளை நியமித்தும், நீதித்துறையில் நேர்மையை நிலைநாட்டியும் சட்டசபைகள் நிறுவியும் பொதுக்கல்வி, தொழிற்கல்விக் கூடங்கள் ஏற்படுத்தியும், அரசியல் முற்போக்குக் கருத்துகளுக்கு இடங்கொடுத்தும் வந்திருந்தன.

இந்தியா சுதந்திரம் பெற்றபின், சர்தார் வல்லபாய் பட்டேல் மத்திய அரசவையில் உதவிப் பிரதமராகவும் உள்நாட்டு அமைச்சராகவும் பதவி ஏற்றிருந்தார். சந்திரகுப்த மௌரியர், அசோகர், சமுத்திரகுப்தர் போன்ற பேரரசர்களின் காலங்களைத் தவிர, வரலாற்றுக் காலங்களிலிருந்து தற்காலம்வரை இனத்தால் மொழியால், கலை, கலாச்சாரங்களால் பாகுபட்டுப் பிரிந்து கிடந்த இந்தியப் பெருநாட்டை இணைத்து, ஓர் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்து 'நாம் அனைவரும் இந்தியரே' என்ற உணர்வை உண்டு பண்ணியது சர்தார் வல்லபாய் படேல் என்றால் அது மிகையாது. இத்தகைய ஒரு பெரு மகனாரின்கீழ்ச் சுதேச அரசுகளின் துறை (Iadian States Department)செயல்படத் தொடங்கியது. 'ஐக்கிய இந்தியா' என்ற குறிக்கோளைத் தலையாயதாகக் கருத்தில் கொண்டு சர்தார் வெகு வேகமாகச் செயலில் ஈடுபட்டார். தமது உள்துறை இலாகாவிற்குச் செயலாளராக வி. பி. மேனன் (V. P. Menon) என்ற அனுபவமும் திறமையும் மிக்க அதிகாரியை நியமித்தார். இந்தியாவின் வைஸிராயாக இருந்த லார்டு மவுண்ட்பேட்டனும், தமது ஒத்துழைப்பையும் செல்வாக்கையும் சர்தார் பட்டேலுக்குச் சிறிதும் தயக்கமின்றி நல்கினார். சுதேச அரசுகள் இந்தியாவுடனோ, பாகிஸ்தானுடனோ இணைந்து கொள்ளலாமென்றும், அல்லது சுயேச்சையாக இயங்கலாமென்றும் லார்டு மவுண்ட்பேட்டன் அறிவித்திருந்தார். அவ்வாறு இரு நாடுகளுடன் இணையும்போது இயற்கையான தொடர்பும் போக்குவரத்து வசதிகளும் புவியியல் ஒற்றுமைக்கூறும் அமைந்திருக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்.

சுதேச அரசுகள், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுடனும் இணையாது தனித்து இயங்க விரும்புகின்றன என்பதை சர்தார் படேல், தமது அரசியல் அனுபவத்தையும் அறிவுத் திறமையையும் சமயோசித புத்தியையும் பயன்படுத்தி உரிமைகளையும், சலுகைகளையும் அளித்துப் பல மன்னர்களை இந்திய அரசுடன் இணையும்படி செய்தார். சில சுதேச அரசுகளுக்கு எதிராக ராணுவ நடவடிக்கைகள் எடுத்து இந்தியாவுடன் ஒருங்

இணைப்பதில் வெற்றி கண்டார். காஷ்மீரப் பிரச்சினையைத் தவிர, ஏனைய சுதேச அரசுகளின் விவகாரங்களில் பிரதமர் நேருவும் இதரத் தலைவர்களும் தலையிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுதேச மன்னர்கள், இந்தியாவுடன் விரும்பிச் சேரும் வகையில் இணைவுப் பத்திரம் (Instrument of Accession) ஒன்று உருவாக்கப் பட்டது. அதன்படி அரசின் பாதுகாப்பு, அயல் நாட்டு உறவுகள், போக்குவரத்துச் செய்தித் தொடர்புகள் ஆகியவற்றை இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், ஏனைய விவகாரங்களில் சுதேச மன்னர்கள் தங்கள் விருப்பம்போல் நடந்து கொள்ளலா மென்றும் அறிவிக்கப்பட்டது. அத்துடன் சுதேச மன்னர்களின் உள்நாட்டு விவகாரங்களில் மத்திய அரசு தலையிடாது என்றும் உறுதியளிக்கப்பட்டது. 'நாம் வரலாறு படைக்கும் தருணத்தில் வாழ்கின்றோம்'; ஆகவே, இந்தியர்களாகிய சுதேச மன்னர்களே நாட்டுப் பற்றுடன் 'ஐக்கிய இந்தியா' ஒன்றை உருவாக்க உங்களுடைய ஒத்துழைப்பையும் நல்ல எண்ணங்களையும் நல்கு மாறு விரும்பி வேண்டிக் கொள்கிறேன் என்று சுதேச அரசர் களுக்குச் சர்தார் வல்லபாய் பட்டேல் அறிக்கை விடுத்தார். சுதேச அரசுகளில் வாழும் மக்களும், பிரிட்டிஷ் இந்திய மாநிலங்களில் வாழும் மக்களும் இனத்தால், மொழியால், பண்பாடு கலாச் சாரத்தால் ஒன்றுபட்டவர்கள் என்ற உண்மையை எடுத்துரைத் தார். இந்தியாவின் முன்னேற்றங் கருதி யாவரும் இம் முயற்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்ற அவசியத்தையும் உணர்த்தினார்.

இத்தகைய முக்கியக் கட்டத்தில் முஸ்லீம் லீக் தலைவர் திரு. முகமது ஜின்னா, சர்தார் படேலின் முயற்சிக்குப் பலவகைகளில் முட்டுக்கட்டையாக இருந்தார். சுதேச அரசுகள் பலவற்றைப் பாக்கிஸ்தானுடன் இணைத்துக்கொள்ள விரும்பினார். பாக்கிஸ் எல்லைப்பகுதியில் உள்ள பல சுதேச அரசுகளையும், முஸ்லீம் மன்னர்கள் ஆண்டு வந்த அரசுகள் பலவற்றையும் தன்னுட் டுடன் இணைத்துக்கொள்ள முயன்றார். அவற்றில் முக்கியமானவை ராஜஸ்தானத்திலுள்ள ஜோத்பூர், ஜெய்சல்மிர், குஜராத், கட்ச் ஆகிய பகுதிகளிலுள்ள ஜூனகாத் என்ற அரசுகளாகும். இவ் வரசுகளில் மன்னரின் விருப்பத்திற்கு எதிராகப் பொது மக்களின் கிளர்ச்சி அதிகமாக இருந்ததால், ஜின்னாவின் நோக்கம் நிறைவேறவில்லை. மேலும், இந்திய வைசிராய் லார்ட் மவுண்ட் பேட்டனும் தமது அதிகாரத்தைப் பயன்படுத்திப் பல சுதேச அரசுகளைப் பாகிஸ்தானுடன் இணையாமல் தடுத்துவிட்டார். பாட்டியாலா, குவாலியர், பரோடா, பிக்கானிர் போன்ற 136 அரசுகள் ஒரு மாதத்திற்குள் இந்தியாவுடன் இணைந்தன.

போபால் நவாப் தன்னுடன் பலரை இணைத்துக்கொண்டு தனித்து இயங்க முயன்றார். ஆனால், அவரது ஆதரவாளர்கள் சில நாட்களுக்குப்பின் அவருடன் ஒத்துழைக்க மறுக்கவே, அவரும் வேறு வழியின்றி இந்தியக் கூட்டாட்சியில் இணைந்தார். இவ்வாறு இணைந்த அரசுகளில் மக்களாட்சி ஏற்படுத்தப்பட்டது. இணைய மறுத்த மன்னர்களுக்கு அப் பகுதியில் மக்களிடையே ஏற்பட்டிருந்த விழிப்புணர்ச்சியையும் சர்தார் சுட்டிக் காட்டிச் சட்டம், அமைதியைத் தங்களுடைய எல்லைகளில் பாதுகாக்கும்பொருட்டு, அவர்கள் இந்தியாவுடன் இணைவது நன்மை பயக்கும் செயலாகும் என்று எடுத்துக்கூறினார். இதன்பின், தங்களுடைய மக்களின் எதிர்ப்பாலும் கோபத்தாலும் ஏற்பட இருக்கும் தவிர்க்க முடியாத ஆபத்துகளை உணர்ந்த எஞ்சிய சுதேச மன்னர்கள், இந்திய மைய அரசுடன் இணைய இசைந்தனர். இவ்வாறு சர்தார் படேல் பொறுப்பேற்ற ஓராண்டுக்குள் ஐதராபாத், காஷ்மீர் ஆகிய இரு சுதேச அரசுகளும், ஃபிரான்சு, போர்ச்சுகல் ஆகிய இரு நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்த இந்திய எல்லைப் பகுதிகளும் தவிர, ஏனைய சுதேச அரசுகள் அனைத்தும் இந்தியாவுடன் இணைந்துவிட்டன.

ஒரிசாவின் இணைவு

இந்திய அரசுடன் இணைந்த சுதேச அரசுகளில் உடனடியாகச் சட்டம், அமைதி, மக்கள் நலம், சீரான நிர்வாக முறை ஆகியன நிலவுவதற்குப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மொழி, கலாச்சாரம், இட அமைப்பு ஆகியவற்றுக்கு ஏற்ப ஆங்காங்குள்ள சிறிய அரசுகள் பெரிய அரசுகளுடனும் மாநிலங்களுடனும் இணைக்கப்பட்டன. ஒரிஸா மாநிலத்தில் இருந்த சுதேச அரசுகளைச் சர்தார் படேல், அம் மாநிலத்துடன் இணையச் செய்த செயல் ஏனைய அரசுகளுக்கு ஒரு பாடமாக அமைந்தது. இவர் சுதேச அரசர்களைச் சந்தித்து மக்களின் எழுச்சியைத் தடுக்க இயலாது என்றும், சட்டம், அமைதி பாதிக்கப்படும்போது மத்திய அரசு அவற்றில் தலையிடத் தயங்காது என்றும், அந்நிலை ஏற்படும் முன் அவர்கள் தங்கள் உரிமை, சொந்த உடைமை, ஓய்வுக்கால உதவிப்பணம் ஆகியவற்றைத் தீர்மானித்து மத்திய அரசுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார். திரு. வி. பி. மேனனும், சர்தார் காட்டிய வழிமுறைகளை ஏற்றுக் கொள்வதுதான் சிறந்த வழி என்று சுதேச மன்னர்களுக்கு அறிவுறுத்தி, இறுதியில் ஒரிஸா மாநிலத்தில் இருந்த சுதேச அரசுகளை இந்திய அரசுடன் இணையும்படி செய்தார். இப் பேச்சுவார்த்தைகள் நடந்த இரண்டு நாட்களுக்குள் ஒரிஸாவில்

இருந்த 26 சுதேச அரசுகள் ஒரிஸா மாநிலத்துடன் இணைந்தன. இம் முறையில் நாகபுரி பகுதியிலுள்ள சட்டிஸ்கார் என்ற சுதேச அரசும் இணைவுப் பத்திரத்தில் கையொப்பம் இட்டது.

கத்தியவார், திருவாங்கூர், கொச்சி

இதை அடுத்து, கத்தியவாரில் உள்ள 222 சுதேச அரசுகளின் மீது சர்தார் படேல் தம் கவனத்தைச் செலுத்தினார். வழக்கம் போல் இவ் வரசர்களைத் தனித்தனியாகவும் சந்தித்து, இந்தியா வுடன் அவர்கள் அனைவரும் இணைவதன் அவசியத்தை வலியுறுத் தினார். 1947ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15ஆம் நாள் இவ் வரசர்கள் அனைவரையும் பவநகரில் சந்தித்துப் பேசியதன் பயனாக, எல்லா அரசர்களும் கத்தியவாருடன் இணையத் தீர்மானித் தனர். இவ் விணைவின் எதிரொலி, ஏனைய பகுதிகளிலும் பரவிய தால், தக்காணம், குஜராத்து ஆகிய பகுதிகளிலுள்ள அரசுகள் பம்பாய் மாநிலத்துடன் 1948 ஜூன் மாதத்தில் இணைந்தன. குவாலியர், இந்தூர் ஆகிய இரு அரசுகளும் தங்களுக்குள் இருந்த பரம்பரைப் பகைமையை மறந்து ஒருங்கிணைந்து மத்திய பாரதம் என்ற பெயரில் இயங்கி வரத்தொடங்கின. இதைப்போன்று 1948 ஜூலை மாதம் பஞ்சாபிலுள்ள பாட்டியாலாவும், கிழக்குப் பஞ்சாப் பகுதியில் உள்ள பல சுதேச அரசுகளும் பெப்சு என்ற (Pepsu) கூட்டு இணைவில் சேர்ந்தன. 1949ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பரோடா அரசும், ராஜஸ்தான், திருவாங்கூர், கொச்சி ஆகியன 1949ஆம் ஆண்டு மே மாதத்திலும், 1949 ஜூன் மாதத்தில் மைசூர் அரசும் இந்திய ஐக்கியத்தில் இணைந்தன. தொடக்கத்தில் திருவாங்கூர், ஐதராபாத் ஆகிய இரு அரசுகளும் இந்தியாவுடன் இணைய மறுத்துவிட்டன. திருவாங்கூர் அரசின் திவானாக இருந்த சர் சி. பி. இராமசாமி ஐயர், தமது அரசு இந்தியாவுடன் இணையாது என்றும், அது தனி நாடாக இயங்க விரும்புவதாகவும் கூறிவந்தார். அத்துடன் பாக்கிஸ்தானுடன் கடல் மார்க்கமாக வியாபாரத் தொடர்பு வைத்துக்கொள்ள கரீம்கான் என்பவரைத் தமது பிரதிநிதியாகப் பாக்கிஸ்தானுக்கு அனுப்பி வைத்தார். இதைப்போன்று ஐதராபாத்தும் சுதந்திர நாடாக இருக்கப் போவதாகவும், அயல்நாடுகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளத் தனக்கு உரிமையுண்டு எனவும் தெரிவித்தது. இந்திய ஒற்றுமைக்கு எதிராக ஏற்பட்ட இவ் விரு சுதேச அரசுகளின் நடவடிக்கைகளைப் பாக்கிஸ்தான் மிகவும் தீவிரமாக ஆதரித்து வந்தது. இந் நிலையை உணர்ந்த நேருஜி, கீழ்க்கண்ட முறையில் தமது கருத்தை வெளியிட்டார். இந்த அறிவிப்பில் 'கோடிக்கணக் கான இந்தியருக்கு எதிரான யுத்த பிரகடனத்திற்குச் சமம் ஆகும்.

எந்தச் சுதேச சமஸ்தானமாவது சுதந்திரப் பிரகடனம் செய்து அச் செயலை எந்த அயல்நாடாவது அங்கீகரிக்குமானால், அதை இந்தியா பகை நாடாகக் கருதும்.' என்று தம் கருத்தை அறிவித்தார். சர். சி. பி. இராமசாமி ஐயருக்கு எதிராக மக்கள் சக்தி திரண்டு இருந்ததால், வெகு விரைவில் திருவாங்கூர் இந்தியாவுடன் இணைந்தது. அத்துடன் கொச்சி அரசும் இணைக்கப்பட்டது.

ராஜஸ்தான் : வரலாற்றுப் புகழ்பெற்ற ராஜஸ்தான் பகுதியில் தொன்மையான 15 சுதேச அரசுகள் இணைந்தன. இவை அனைத்தும் 1949ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 30ஆம் நாள் ஒன்றாக இணைந்து ராஜஸ்தான் யூனியன் (Rajasthan Union) என்ற பெயரில் இயங்கி வரலாயின. இதன் பரப்பளவு சுமார் 1,20,000 சதுர மைல்கள். இவற்றின் மக்கள் தொகை 1 கோடியே 30 லட்சம். இவற்றின் ஆண்டு வருவாய் சுமார் 10 கோடி ரூபாய். போபால், மணிப்பூர், கூச்பிஹார், ஆகிய மூன்றும் மத்திய அரசின் நேர் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டன.

1948 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இந்திய அரசாங்கம் சமஸ்தானங்களைப்பற்றிய வெள்ளை அறிக்கை (White paper on Indian States) ஒன்று வெளியிட்டது. பெரும்பாலான சுதேச அரசுகள் மக்களுக்குப் பொறுப்பாட்சியை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளன என்றும் குறிப்பிட்டிருந்தது. சுதேச அரசுகள் பலவற்றில் அதிகாரம் மக்களுக்கு மாற்றப்பட்டுவிட்டன என்றும், அவற்றில் இரத்தம் சிந்தாப் புரட்சி ஏற்பட்டுள்ளது என்றும், இம் மாறுதலுக்குக் காரணம் சுதேச மன்னர்கள் காலப்போக்கை உணர்ந்து அளித்த ஒத்துழைப்பே என்றும் இவ்வறிக்கை கூறியது.

ஐதராபாத் (Hyderabad)

சுதேச அரசுகளில் மிகப் பெரியது ஐதராபாத். இஃது இந்தியாவின் மையப்பகுதியில் நான்கு பக்கங்களிலும் இந்திய எல்லைப் பகுதிகளால் சூழப்பட்டிருந்தது. இதன் பரப்பளவு 82,000 சதுர மைல், இதன் மக்கள் தொகை ஒரு கோடியே 60 லட்சம், இதில் முஸ்லீம் மக்கள் தொகை 15 சதவீதம். ஐதராபாத்தை ஆண்டு வந்தவர், 7ஆவது நைசாம் உஸ்மான் என்ற முஸ்லீம் மன்னர் ஆவர். ஐதராபாத்தைச் சுதந்திர நாடாக நிர்வகிக்க விரும்பினார். எனவே, சர்தார் வல்லபாய் படேலும் இந்திய வைஸ்ராய் லார்ட்டு மவுன்ட்பேட்டனும் இந்தியாவுடன் ஐதராபாத்தை இணையும்படி வேண்டுகோள் விடுத்தபோது, அவர்களின் கருத்துக்கு இசையாது மறுத்து விட்டார். இந்தியா சுதந்திரம் அடைவதற்கு வெகுகாலத்

திற்கு முன்பே (1911) இவர், இந்திய அரசாங்கம் ஐதராபாத் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை எதிர்த்திருக்கின்றார்.

ஐதராபாத் நைசாம் பெரும் செல்வந்தர். அவரது சொந்தச் செலவிற்கு அரசு ஆண்டொன்றுக்குரூ. 50 லட்சம் ஒதுக்கி வந்தது. அத்துடன், 8000 சதுர மைல் பரப்பளவுள்ள தமது செழுமையான நிலத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 2½ கோடி ரூபாய் வருவாய் வந்து கொண்டிருந்தது. அத்துடன் விசேஷ நாட்களின்போது மக்களிடமிருந்து வெகுமதிகள் பெற்று வந்தார். இவ்வாறு தங்கம், வெள்ளி, நகைகள், வைரங்கள். ரூபாய் நோட்டுகள் ஆகியவற்றின் மதிப்புச் சுமார் 300 கோடி இருக்குமென மதிப்பிடப்பட்டது. ஆனால், அவர் சிக்கன முறையில் பழைய உடைகளை அணிந்து எளிய வாழ்க்கையே வாழ்ந்தார். இப் பெருஞ் செல்வத்தைப் பார்த்து மகிழ்வதிலேயே தமது பெரும்பாலான நேரத்தைச் செலவழித்து வந்தார். இவரது குறிக்கோள்கள் இரண்டு. ஒன்று அதிகாரம் செலுத்துவது ; மற்றொன்று செல்வம் திரட்டுவது. அரசபதவி இறைவனால் தமக்கு அளிக்கப்பட்டதென்றும், அதைப் பறிக்க எவராலும் முடியாதென்றும் கூறிவந்தார். இவர் எவரையும் நம்புவதில்லை. தமது குடும்பத்தினருக்கே ஒற்றர்களை நியமித்து அவர்களுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வந்தார்.

ஐதராபாத், இஸ்லாமிய சுதந்திர நாடாக இயங்கிவர நைசாம் விரும்பினார். ஆங்கிலேய மேலாண்மையின் தொடர்பு துண்டிக்கப்பட்ட நாளிலிருந்து, இக் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்டு அதைச் செயலில் காட்டி வந்தார். 1948 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் நாளிலிருந்து ஐதராபாத் சுதந்திர நாடாக இயங்கி வரும் என்று நைசாம் அறிவித்ததைத் தொடர்ந்து, இந்திய அரசு, இணைவு சம்பந்தப்பட்ட பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்தது. அத்துடன் இந்திய அரசியல் நிர்ணய சபையிலிருந்து அவர் தனது பிரதிநிதியையும் விலக்கிக் கொண்டார். இதை அடுத்து, பிரிட்டிஷ் காமன் வெல்த் (British Common wealth) நாடுகளுடன் தனது அரசை ஒரு சுதந்திர நாடாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் வேண்டிக் கொண்டார். ஆனால், வைஸ்ராய் மவுண்ட்பேட்டன், இச் செயலுக்கு இசையவில்லை. இந்தியாவுடன் ஏற்பட்ட பேச்சு வார்த்தைகளில் பாதுகாப்பு, போக்குவரத்து, வெளிநாட்டுத் தொடர்பு ஆகியவை சம்பந்தமாக, ஐதராபாத் ஒரு சுதந்திர நாடு என்ற முறையில்தான் இணைவிற்கு விருப்பம் தெரிவிக்கும் என்று கூறினார். ஆனால் சர்தார் வல்லபாய் படேல், ஐதராபாத் இந்தியாவுடன்

இணைவதுபற்றி மக்களுடைய விருப்பத்தை அறிய வாக்கெடுப்பு ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தினார். ஆனால், பாக்கிஸ்தானின் தூண்டுதலால் சர்தார் படேலின் விருப்பத்தை நைசாம் நிராகரித்தார். நைசாமின் அரசியல் ஆலோசகர், சர் வால்டர் மாங்டன் (Sir Walter Monckton), இந்திய தலைவர்களுடன் ஒரு சுமுகமான உறவை ஏற்படுத்தத் தன்னால் இயன்றவரை முயன்றார். ஆனால், ஐதராபாத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த மஜ்லிஸ் இல் தெஹாட்-உல்-முஸ்லிமின் (Majlis Iltehad-Muslimin) இயக்கமும் அதன் தலைவரான சையத் காசிம் ரஸ்வியும் (Syed Kasim Razvi) இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து, நைசாமின் மனத்தை மாற்றினர். இத் தருணத்தில் இல்தெஹாட்டின் ஆதரவாளரான லெயிக் அலிகான் (Lai Ali Khan), ஐதராபாத்தின் பிரதம அமைச்சராகப் பதவி ஏற்றார். இவர், மகமது அலி ஜின்னாவின் பரிந்துரையின் பேரில் அப் பதவியில் அமர்த்தப்பட்டார். ஐதராபாத்தின் கண்மூடிப் போக்கை அனுமதித்தால் இந்தியாவிற்குப் பெரும் ஆபத்து விளையும் என்பதை இந்திய அரசு உணர்ந்தது. எனவே, இதுபற்றி வெள்ளை அறிக்கையில் ' ஒரு நாட்டின் மத்தியில் மற்றொரு நாட்டைச் சுதந்திரமாக இயங்கச் செய்யும் நிகழ்ச்சியை என்றும் கேள்விப் பட்டதில்லை ' என்று ஐதராபாத்தைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கிடையில் 1948ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் நாள் நைசாம் இந்தியாவுடன் நடைமுறை ஒப்பந்தம் (Standstill Agreement) செய்து கொண்டதோடு, தான் பாகிஸ்தானுடன் இணையப் போவதில்லை என்ற இரகசியக் கடிதம் ஒன்றையும் டெல்லிக்கு அனுப்பி இருந்தார். அக் கடிதத்தைச் சர்தார் வல்லபாய் படேலைத் தவிர, ஏனைய தலைவர்கள் உண்மை என நம்பினர். இத்தகைய ஒப்பந்தம் செயல்பட்டால் தனது அரசின் படைப் பலத்தை அதிகப்படுத்தி இந்தியாவிற்கு எதிராகப் போரிட அவகாசம் தேடுவதற்கேயாகும் எனச் சர்தார் படேல் உணர்ந்து கொண்டார். இருப்பினும் நைசாமின் விருப்பத்திற்கிணங்க இந்தியப் பிரதிநிதி ஒருவரை (Agent General) சர்தார், ஐதராபாத்தில் நியமித்தார். இக் கடினமான பொறுப்பு, கே. எம். முன்ஷியின் (K. M. Munshi) மீது விழுந்தது. அவர் தனக்குக் கொடுத்த இப் பொறுப்பை மிகவும் திறமையாகப் பல ஆபத்துகளுக்கு இடையில் நிறைவேற்றினார். பல இன்னல்களுக்கும் பகைமைக்கும் இடையில் அவர் ஆற்றிய அரும் பணிகளுக்கு இந்திய மக்கள் என்றென்றும் கடமைப்பட்டவராவர். நடைமுறை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபின், அதைப் புறக்கணிக்கும் வகையில் நைசாம் இந்திய அரசின் அனுமதியின்றி ஐதராபாத்திலிருந்து தங்கம்,

வெள்ளி போன்ற உலோகங்கள் வெளியேறக்கூடாது என்றும், இந்திய நாணய நோட்டுகள் ஐதராபாத்தில் செல்லாது என்றும் உத்தரவு பிறப்பித்தார். அத்துடன் 22 கோடி ரூபாய்க்குக் கடன் பத்திரம் பாக்கிஸ்தானுக்குக் கொடுத்துக் கராச்சியில் ஒரு பொது மக்கள் தொடர்பு அதிகாரியையும் நியமித்தார். இந்திய அரசு இச் செயலுக்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தது.

ரஜாக்கர்களின் (Rajakars) **அட்டூழியம்:** சையத் காசிம் ரஸ்வியின் (Syed Kasim Razvi) தலைமையில் இயங்கி வந்த ரஜாக்கர்களும் கம்யூனிஸ்டுகளும் பொது மக்களைக் குறிப்பாக இந்துக்களை ஆயுதப்பலங் கொண்டு கொடுமைக்குள்ளாக்கி வந்தனர். இவர்களை ஆரம்பத்தில் ஆயுதம், பணம் ஆகியவற்றைக் கொடுத்து ஊக்குவித்து வந்த நைசாம், நாளாவட்டத்தில் அவர்களை அடக்க முடியாத நிலைக்குள்ளாகி, இறுதியில் அவர்களின் கைப்பாவையாகி விட்டார். ஐதராபாத்தின் பாதுகாப்பிற்கு வைக்கப்பட்டிருந்த இந்திய ராணுவம் அகற்றப்பட்டபின், ரஜாக்கர்களின் நடவடிக்கை மேலும் மோசமாகியது. நைசாமின் ராணுவத்தால் இவர்களைக் கட்டுபடுத்த முடியவில்லை. சென்னை, பம்பாய், மத்திய மாகாணம், ஆகிய எல்லைகளில் ரஜாக்கர்களின் நடவடிக்கைகள் பெரும் அச்சத்தை விளைவித்தன. இவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்திலிருந்து 2 லட்சமாகப் பெருகியது. இந்திய மாநிலங்களிலுள்ள முஸ்லீம்களுக்கும் ஆயுதம், பொருளுதவி அளித்துக் கிளர்ச்சியில் ஈடுபடும்படி இவ்வியக்கத்தினர் தூண்டிவிட்டனர். ஐதராபாத் அரசின் கணக்குப்படி 1946-லிருந்து 1948-க்குள் ரஜாக்கர்களும் கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து சுமார் 2000 கிராமங்களை அழித்துக் கொள்ளையடித்து 2000 பேர்களைக் கொலை செய்துள்ளனர். போலீஸ் காவல் நிலையங்களிலிருந்து 230 துப்பாக்கிகளைக் கவர்ந்து, பத்து லட்ச ரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட தானியம், நகைகள், பொருள்களைக் கொள்ளையிட்டனர். பாலங்கள், சாலைகளைத் தகர்த்தெறிந்து மக்களைப் பெரும் பீதிக்குள்ளாக்கி வந்தனர்.

இந்திய அரசுக்கு எதிராகப் போர் நடவடிக்கைகளில் ஐதராபாத் அரசு ஈடுபட்டது. ராணுவம் 42,000 ஆக உயர்த்தப்பட்டது. பல புதிய விமானத் தளங்கள் அமைக்கப்பட்டன. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சிட்னி காட்டன் (Sydeny Cotton) என்பவர், ஏராளமான ஆயுதங்களைக் கராச்சிமூலம், ஐதராபாத்திற்குக் கொண்டுவந்து குவித்தார். இந்திய அரசு, ஐதராபாத்தின் மீது படையெடுத்தால் பம்பாய், அகமதாபாத் போன்ற இந்திய நகரங்களை அழிப்பதற்குத் தங்களிடம் ஏராளமான குண்டு

போடும் விமானங்கள் (Bombers) உள்ளன என்றும் பறைசாற்றி வந்தனர். போர்ச்சுகீசிரியரிடமிருந்து கோவா (Goa) துறை முகத்தை விலை கொடுத்து வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதைப்போன்ற நெருக்கடியான சமயத்தில் இந்தியாவின், கிழக்குக் கடற்கரையிலுள்ள விசாகப்பட்டினம் துறைமுகத்தைக் கைப்பற்றி, அதன்மூலம் கீழ்த்திசையிலுள்ள இஸ்லாமிய நாடு களின் உதவியைப் பெறவும் திட்டமிட்டிருந்தது. பாகிஸ்தா னும், தனது விமானப்படையை (Paratroops) அனுப்புவதாக உறுதியளித்திருந்தது, இதைத் தொடர்ந்து இந்தியா நடை முறை உடன்படிக்கையை மீறித் தங்களுக்கு இன்னல்கள் பல விளைவிக்கின்றது என்ற ஐதராபாத், ஐக்கிய நாடுகளின் சபை யிடம் (U N O.) முறையிட்டது.

இந்த நெருக்கடியான நிலையில் ஐதராபாத் அரசிலுள்ள இந்துக்களை ரஜாக்கர் இயக்கத்தினர் பெரும் துன்பத்திற்குள்ளாக் கினர். அரசும், பொது மக்களின் உயிரையும் உடமைகளையும் காக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந் நிலையில் 1948ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ஆம் நாள் சர்தார் படேல், ஐதராபாத் அரசில் சட்டம் அமைதியை நிலைநாட்ட இந்திய ராணுவம் ஒன்றை உதவிக்கு அனுப்ப விரும்பிய கருத்திற்கு நைசாம் இசைவு தெரிவிக்கவில்லை. இதற்கிடையில் அங்கு அரசியல் நிலை நெருக்கடியான கட்டத்தை அடைந்ததால், 1948ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13ஆம் நாள் இந்திய ராணுவம் ஐதராபாத்திற்குள் நுழைந்தது. இச் சமயத்தில் செப் டம்பர் 12ஆம் நாள் பாக்கிஸ்தானின் தலைவர் மகமது அலி ஜின்னா இறந்துவிட்டதால், உலகக் கருத்து இந்தியாவிற்கு எதிராக உரு வாக்கப்படும் என்று கூறி இந்திய ராணுவத் தலைவராக இருந்த தள பதி புச்சர் (General Bucher) ஐதராபாத்தின் மீது எடுக்கப்பட்ட போலீஸ் நடவடிக்கையை (Police Action) இரண்டு நாட்களுக்குத் தள்ளிப்போடும்படி சர்தார் படேலிடம் கேட்டுக்கொண்டார். ஆனால், இக் கருத்திற்கு இசையாமல் தாம் தீர்மானித்தபடி ராணுவத்திற்கு உத்தரவு அளித்தார்.

போலீஸ் நடவடிக்கை

ஐதராபாத் சரண் அடைதல்: சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவற்றைக் காக்கும் பொருட்டு ஐதராபாத்தின்மீது போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று இந்தியா அறிவித்தது. இந்திய ராணுவம் ஐதராபாத் எல்லைக்குச் சென்ற 108ஆவது மணி நேரத்தில் நைசாமின் படைகள் இந்திய ராணுவத்திடம் சரண் அடைந்தன. நல்துர்க் (Naldurg) என்ற இடத்தில் பாதுகாப்பு

நடவடிக்கை பலமாக இருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் வெல்லமுடியாத பாதுகாப்புப் படையை, இந்திய ராணுவம் சில மணி நேரத்தில் சரணடைய வைத்தது. நைசாமின் படைகள் இந்திய ராணுவத்திடம் போரிடவில்லை என்றே சொல்லலாம். ராணுவ அதிகாரிகள், போர் முனையிலிருந்து பொறுப்பற்ற முறையில் தப்பி ஓடிவிட்டனர். வீரம் பேசிவந்த ரஜாக்கர்கள் இந்திய ராணுவத்தின் துப்பாக்கிச் சத்தம் கேட்டவுடன் தங்களுடைய சீருடையை அகற்றிவிட்டு ஓடி ஒளிந்தனர், அன்று தங்கள் தாடிகளை நீக்குவதற்காக ஏராளமான ரஜாக்கர்கள் முடி திருத்தக் கடைகளில் குழுமியிருந்தனர். சவரத் தொழிலாளர்களுக்கு நல்ல வரும்படி இருந்தது என்று கே. எம். முன்ஷி (K. M. Munshi) 'ஒரு சகாப்தத்தின் முடிவு' (End of the Era) என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்திய ராணுவ நடவடிக்கைகள் 1948ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ஆம் நாளிலிருந்து ஆரம்பிக்குமென ஐதராபாத் எதிர்பார்த்தது. ஆனால், இந்தியா செப்டம்பர் 13ஆம் தேதியே தாக்குதலைத் தொடர்ந்ததால், அது தனது பாதுகாப்புத் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்த முடியாது தோல்வியுற்றது. 13ஆம் தேதி லெப்டினன்ட் டி. டி. மூர் (Lt. T. T. Moore) என்பவர், நல்துர்க் பகுதியிலுள்ள ஆற்றுப் பாலம் ஒன்றை இந்திய ராணுவம் கடந்து வராமல் தடுக்கும்பொருட்டு ஒரு ஜீப் வண்டி நிறைய வெடி மருந்து கொண்டு சென்றார். ஆனால், அப் பாலத்தை இந்திய ராணுவம் ஏற்கெனவே கடந்து கைப்பற்றிக்கொண்டதால் அவரால் ஒன்றும் செய்ய இயலவில்லை. அவர் கைதியாக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டார். 1948ஆம் ஆண்டு செப்டம்பர் 13ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்ட போலீஸ் நடவடிக்கை செப்டம்பர் 17ஆம் நாளுக்கு முடிவுற்றது (சுமார் 108 மணி நேரம்). பொது மக்கள் இந்திய ராணுவத்தை உற்சாகத்துடன் வரவேற்றனர்.

ஐதராபாத் நைசாமிற்குத் தமது பெரும் பொருளைப் பாதுகாப்பதே பெரும் கவலையாக இருந்தது. பொது மக்களைப் பற்றியோ அவர்களின் உயிர் உடமைகளைப்பற்றியோ அவர் சிறிதேனும் கவலைப்படவில்லை. பல ஆண்டுகளாகச் சேமித்து வைத்த செல்வத்தின் பாதுகாப்பு, இந்திய ராணுவத்தால் உறுதி அளிக்கப்பட்டபின், அவர் இந்திய ராணுவத்தின் நிர்வாகத்துடன் ஒத்துழைக்க ஒப்புக்கொண்டார். ரஜாக்கர்கள் கூறிவந்தது போன்று நைசாமின் பதவி நீக்கத்திற்காக இந்திய முஸ்லீம்கள் எவரும் எதிர்ப்போ, கிளர்ச்சியோ எதுவும் செய்யவில்லை. அவர் ரஜாக்கர்களின் நடவடிக்கைகளை ஊக்குவித்ததால் அவரது நிர்வாகத்தில் வாழ்ந்து வந்த பல முஸ்லீம்

செல்வந்தர்கள் தங்களுக்கு ரஜாக்கர்களால் எந்த நிமிடத்தில் என்ன ஆபத்து ஏற்படுமோ என்று அச்சத்தில் வாழ்ந்து வந்தனர். நைசாமே இவ் வியக்கத்தினரை அடக்க முடியாது போய்விட்டது. முஸ்லீம்களின் நிலை இதுவானல், பெருவாரியான எண்ணிக்கையில் இருந்த இந்துக்களின் நிலை இன்னும் மோசமாக இருந்தது. இந்தியாவின் நடுவில் இஸ்லாமிய சுதந்திர நாடு ஒன்றை ஏற்படுத்த நைசாம் கண்ட கனவைச் சர்தார் வல்லபாய் படேல் தகர்த்தெரிந்தார்.

1948ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் நாள் வைசிராய் மவுன்ட்பேட்டன் பிரபு, இங்கிலாந்திற்குப் புறப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன் இந்தியாவுடன் ஐதராபாத் நைசாம் உடன் படிக்கை ஒன்றைச் செய்துகொள்ளும்படி எவ்வளவோ வற்புறுத் தியும், நைசாம் தீய போதனைகளின் காரணமாய் மறுத்துவிட்டார். அதற்குப் பின்னும் சுமார் இரண்டு மாதங்கள் வரை, ஐதராபாத் அரசியல் சட்டம் அமைதியை நிலைநாட்ட ஏற்கெனவே திரும்பப் பெறப்பட்ட இந்திய ராணுவத்தை அங்கு அனுப்பி வைக்க அனுமதி வேண்டும் என்றும், ஐதராபாத்திலுள்ள ரஜாக்கர்கள் படையைக் கலைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்ட கோரிக் கைகளையும் நைசாம் நிராகரித்து விட்டார். மேலும், இந்திய அரசு, ஐதராபாத்திற்கு எதிராகப் பொருளாதார நடவடிக்கை எடுத்தும் அதன் போக்கில் எவ்வித மாற்றமும் இல்லை. இவற்றுக்குக் காரணம் இந்தியா இத் தருணத்தில் காஷ்மீரத்தில் மலைச்சாதியினரின் ஆக்கிரமிப்பைச் சமாளிக்க வேண்டியிருந்த தால், ஐதராபாத்தின்மீது ராணுவ நடவடிக்கை எடுக்கத் தயங்கும் என்று நைசாம் கருதிவந்ததே ஆகும்.

4½ நாட்களில் நடந்த போர் : ஐதராபாத்தின்மீது நடந்த 4½ நாள் போலீஸ் நடவடிக்கையில் அதிகச் சேதம் ஏற்படவில்லை. 1948 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ஆம் நாள் ஐதரா பாத்தின் தளபதியான மேஜர் ஜெனரல் எல். எட்ரூஸ் (Major General El Eotroos) என்பவர், இந்தியப் படையிடம் சரண் அடைந்தார். ஐதராபாத்தின் தோல்வியை ஏற்றுக்கொண்டவர் இந்தியப் படைகளின் தலைவராக இருந்த மேஜர்-ஜெனரல் ஜெ. என். சௌத்திரி (Major-General J. N. Chaudhury) என்ப வராவர். ரஜாக்கர்களின் தலைவர் காஸிம் ரஸ்வி, இந்திய ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். ஆயினும், அவர் பாக்கிஸ்தானுக்குத் தப்பிச் சென்றுவிட்டார். ரஜாக்கர்களின் படை அழிக்கப்பட்டது. லெயிக் அலியின் (Laik Ali) அமைச் சரவை கலைக்கப்பட்டது. ஐ. நாவின் பாதுகாப்புச் சபையில்

தொடர்ந்த வழக்கை நைசாமின் சார்பில் செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதி திரும்பப் பெற்றுக்கொண்டார். சிவில் நிர்வாகத்தைக் கவனிக்கும்பொருட்டு மேஜர்-ஜெனரல் ஜே. என். சௌத்திரியின் தலைமையின்கீழ்ப் பல அனுபவம் நிறைந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இவ் விஷயத்தில் நைசாம் மன்னரும், தனது ஒத்துழைப்பை அளித்தார். சட்டம், அமைதி முதலியவை படிப்படியாகக் நிலைநாட்டப்பட்டன. சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ராணுவக் கவர்னரின் ஆட்சியின் கீழ் இருந்த ஐதராபாத் 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் நாள் இந்திய யூனியனில் சேர்ந்தது. 1956 ஆம் ஆண்டு ஏற்பட்ட மொழிவாரி மாகாணச் சீர்திருத்த அமைப்பின்படி ஆந்திர மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. ஐதராபாத் நகர் இப்பொழுது ஆந்திர மாநிலத்தின் தலைநகராக அமைந்துள்ளது.

காஷ்மீர் (Kashmir)

ஜம்மு-காஷ்மீர் என்ற சுதேச அரசு இந்தியாவின் வட பகுதியில் இமயமலைச் சரிவில் அமைந்துள்ளது. இதன் தலைநகர் ஸ்ரீநகர். இதன் பரப்பளவு 2,22,870. சதுர கிலோ மீட்டர். 1971 ஆம் ஆண்டு குடிக் கணக்குப்படி இங்கு வாழும் மக்களின் எண்ணிக்கை 46,15,176. இதில் எழுதபடிக்கத் தெரிந்தவர்கள், 18·30 சதவீதம். இவ் வரசு 10 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றது. காஷ்மீர், டோக்ரி, பால்டி, தார்டி. போதி போன்ற மொழிகள் பேசப்பட்டபோதிலும் உருது (Urudu) மொழியே அரசாங்க மொழியாக இருக்கின்றது. இந்தியாவின் விளையாட்டு அரங்கம் என்று வழங்கப்படும் இவ் வழகிய அரசின் வடக்கெல்லையில் ரஷ்யா, சீனு, திபெத் ஆகிய நாடுகளின் எல்லைகளும், தெற்கில் பாக்கிஸ்தான் இந்தியக் குடியரசின் எல்லைகளும், மேற்கில் ஆப்கானிஸ்தான், பாக்கிஸ்தான் எல்லைகளும், கிழக்கில் திபெத்நாட்டின் எல்லைகளும் அமைந்திருக்கின்றன. இங்கு வாழும் மக்கள் தொகையில் 77·11 சதவீதம் முஸ்லீம்கள். 20·12 சதவீதம் இந்துக்கள், 2·77 சதவீதம் சிக்கியர்களும், புத்தர்களும் வாழ்கின்றனர். இந்திய அரசாங்கம் 1950ஆம் ஆண்டுக்குப்பின் இவ் வரசுக்கு அளித்த தனி அந்தஸ்தின் படி இப் பகுதியில் காஷ்மீர் மக்களைத் தவிர, வேறு யாரும் நிலம் வாங்கக்கூடாது என்ற கட்டுப்பாட்டால், இங்குள்ள மக்கள் தொகையில் பெரும் மாற்றம் எதுவும் இல்லை. முக்கால் பகுதிக்கு மேல் முஸ்லீம்கள் வாழும் இச் சுதேச அரசை ஆண்டு வந்தவர் ரஜபுத்திர இனத்தைச் சேர்ந்த ஓர் இந்து அரசராவார். இங்கு வாழும் மக்களில் பெரும்பான்மையோர் முஸ்லீம்களாக இருப்பதையும், பாக்கிஸ்தானுக்கு அருகில் அமைந்திருப்பதையும்

காரணமாகக் கொண்டு பாக்கிஸ்தான் அரசாங்கம் காஷ்மீரைத் தன் அதிகாரத்தின்கீழ்க் கொண்டு வர விரும்பியது.

இந்தியா சுதந்திரம் பெற்றபின், காஷ்மீர் இந்தியாவுடன் இணையாமல் தனித்துச் சுதந்திரமாக இருக்க எண்ணங்கொண்டது. இக் காரணம்பற்றியே சர்தார் படேல், வி. பி. மேனன் ஆகியவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இசையாமல் காஷ்மீர் மன்னர் காலம் கடத்தி வந்தார். பொது மக்களின் விருப்பத்தை அறிய அவகாசம் வேண்டும் என்று இந்தியா, பாக்கிஸ்தான் ஆகிய இரு நாடுகளுடன் ஒப்பந்தங்கள் (Stand Still Agreements) செய்து கொண்டார். இதற்கிடையில் பாகிஸ்தான் அரசு வடமேற்கு எல்லைப்புறங்களிலுள்ள முரட்டு மலைவாசிகளைத் தூண்டிவிட்டு அவர்களை ஜம்மு-காஷ்மீருக்குள் அனுப்பி வைத்தது. இக் கொடிய மலைவாசிகள் மக்களைக் கொலை செய்து கொள்ளை அடித்து மக்களின் வீடுகளுக்கும், உடைமைகளுக்கும் தீயிட்டுப் பெரும் அழிவை ஏற்படுத்தினர். இத்தகைய தாக்குதலால் பொது மக்கள் பட்ட துன்பங்களுக்கு எடுத்துக்காட்டு உலக வரலாற்றில் அதிகம் இல்லை. காஷ்மீரத்தைத் தன்னுடன் இணைய வைக்கும் பொருட்டுப் பாக்கிஸ்தானிலிருந்து அத்தியாவசியப் பொருள்கள் காஷ்மீருக்குள் செல்லாதபடி தடுத்துவிட்டது. ஊடுருவல் செய்த முரட்டு மலைவாசிகள், சுமார் 200 லாரிகளில் (Lorry) பின் தொடர்ந்து வந்த பாக்கிஸ்தான் ராணுவ வீரர்களுடைய ஆதரவு கொண்டு ஸ்ரீநகருக்கு 12 கல் தொலைவுவரை நெருங்கிவிட்டனர். இந்த இக்கட்டான நிலையில் இந்தியாவுடன் இணைந்து இராணுவ உதவியைப் பெறுவதே சிறந்தது என்று உணர்ந்து காஷ்மீர் மன்னர், 1947ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் நாள் ஜம்மு-காஷ்மீர் இந்தியாவுடன் இணையக் கையொப்பம் இட்டார். அப்பொழுது அவர் நோயுற்று இருந்தார். காஷ்மீர மக்களும் அவர்களின் மதிப்பிற்குரிய பெருந்தலைவரான ஷேக் அப்துல்லாவும் (Sheik Muhammad Abdulla), மன்னரின் செயலுக்கு ஆதரவு அளித்தனர். சட்டப்பூர்வமான இவ் விணைப்பை ஒரு தற்காலிக நடவடிக்கை என ஏற்றுக்கொண்டு பிளவிசைட்டு (Plelecite), அல்லது குடி ஒப்பம்மூலம் காஷ்மீரத்தின் எதிர் காலத்தை நிர்ணயிக்கலாம் என்ற கருத்தை இந்திய அரசு வெளியிட்டது. காஷ்மீர மக்களை மலைவாசிகளின் கொடுமையிலிருந்து காக்கும்பொருட்டு இந்திய ராணுவ வீரர்கள் 1947ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 27ஆம் நாள் காலையில் விமானம்மூலம் காஷ்மீரத்திலுள்ள விமானத் தளத்தில் இறங்கினர். இவர்களை வரவேற்கும்போது காஷ்மீர மக்களின் உயிர், உடைமை, மானம், கலாச்சாரம் ஆகியவற்றைக் காக்கும்பொருட்டு வந்த மாவீரர்

களே வருக, வருக என்று காஷ்மீரத்தின் சிங்கம் என்று அழைக்கப்பட்ட ஷேக் முகமது அப்துல்லா கூறினார். இந்திய ராணுவத்திற்குத் தலைமை தாங்கியவர் மேஜர் ஜெனரல் திம்மையா (Major General Thimmiah) என்பவராவர். அக்டோபர் 31ஆம் நாள் ஷேக் அப்துல்லாவை முதலமைச்சராகக் கொண்டு அவசரக்கால அரசாங்கம் ஒன்று நிறுவப்பட்டது. இந்திய ராணுவ வீரர்களின் துணைகொண்டு படையெடுத்து வந்த மலைவாசிகளான பத்தானியர்களை நாட்டின் பெரும் பகுதியிலிருந்து விரட்டினர். இருப்பினும் பாக்கிஸ்தானியர்கள் ஜம்மு-காஷ்மீரின் மேற்குப் பகுதியைக் கைபற்றிக்கொண்டு அதற்கு அஜாத் காஷ்மீர் (Azad Kashmir) என்று பெயரிட்டு அதைத் தம் வசம் வைத்துக் கொண்டனர்.

ராணுவ நடவடிக்கைகளால் காஷ்மீர் பகுதியில் அமைதி காண நீண்ட காலம் பிடிக்கும் என்று எண்ணி, இந்தியா காஷ்மீரப் பிரச்சினையை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் குழுவிற்கு (U.N. Security Council) எடுத்துச் சென்றது. இந் நிகழ்ச்சிக்கு முன்புவரை காஷமீரின் விவகாரத்தைச் சர்தார் வல்லபாய் பட்டேல் கவனித்து வந்தார். ஜெனரல் திம்மையாவின் ஆலோசனையின்படி இன்னும் சில நாட்கள் மலைவாசிகளான பத்தானியர்களுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை தொடர்ந்திருந்தால் காஷ்மீரப் பகுதியிலிருந்து ஆக்கிரமிப்பாளர்களையும் அவர்களுக்கு ஆதரவாக இருந்த பாக்கிஸ்தான் ராணுவத்தையும் விரட்டி இருக்கலாம் என்று பல அறிஞர்களும், ராணுவ நிபுணர்களும் கருதுகின்றனர். சுமார் 5 மாதங்களுக்குப்பின் போர் நிறுத்தம் செய்யும்படி ஐக்கிய நாடுகளின் சபை கேட்டுக்கொண்டது. இவ் வேண்டுகோளுக்கிணங்க ஐ. நா. சபையின் கருத்தை இந்தியா உடனே ஏற்றுக்கொண்டது. ஆனால் அதனைப் பாக்கிஸ்தான் 1949ஆம் ஆண்டு ஜனவரி மாதம்தான் ஏற்றுக்கொண்டது. இதற்குப்பின், ஐ நா. சபை காஷ்மீரப் பிரச்சினைக்குத் தீர்வு காண என்று சர் ஓவன்டிக்சன் (Sir Owendixon) என்பவரை அனுப்பியது. ஆனால், அவரால் இச் சிக்கலுக்குத் தீர்வுகாண முடியவில்லை. இவரது முயற்சி வெற்றி பெறாததால், இவர் இப் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். இதற்குப்பின் டாக்டர் ஃபிராங்க் கிரஹாம் (Dr. Frank Graham) என்பவரை ஐ. நா. பிரதிநிதியாகப் பாதுகாப்புச் சபை 1951ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் நாள் நியமித்தது. இவரது பெரும் முயற்சிகளும் இப் பகுதியில் அமைதியை நிலைநாட்ட முடியவில்லை.

இதற்கிடையில் 1956ஆம் ஆண்டு காஷ்மீரச் சட்டசபை தனது அரசியல் அமைப்பில் காஷ்மீரை இந்தியாவுடன்

இணைக்கும்படி சட்டம் ஒன்றை நிறைவேற்றியது. இச் செயலுக்குப் பாக்கிஸ்தான் எதிர்ப்புத் தெரிவித்தது. பாக்கிஸ்தான், இந்திய எல்லைகளை ஆக்கிரமிப்புச் செய்திருந்தும் அதன் ராணுவக் கூட்டு நண்பர்களும் சமயம் சார்ந்த ஆதரவாளர்களும் ஐ. நா. சபையில் பாக்கிஸ்தானைக் கண்டிக்கவில்லை. எனவே, இந்தியா ஐ. நா. பாதுகாப்புக் குழு நிறைவேற்றிய தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள இருந்தும், காஷ்மீர் பிரச்சினைக்கு நல்ல தீர்வு ஒன்றைக் காண விரும்பிச் சுவீடன் நாட்டுப் பிரதிநிதியான கன்னர் ஜாரிங் (Gunnar Jarring) என்பவரை, ஐ. நா. சபை இந்தியாவிற்கு அனுப்பியது. அவராலும் தீர்வுகாண முடியவில்லை. அவருக்குப் பின், டாக்டர் ஃபிராங்க் கிராஹாம் என்பவரைப் பாதுகாப்புச் சபை அனுப்பியது. இவரது முயற்சியும் எவ்விதப் பயனும் அளிக்கவில்லை.

காஷ்மீரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐக்கிய நாடுகளின் ராணுவம் ஒன்றை அங்கு அனுப்பவேண்டுமென்று பிரிட்டன், ஆஸ்திரேலியா, கியூபா, அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளும் கொண்டுவந்த ஒரு தீர்மானத்தை ரஷ்யா, தனது மறுப்பாணை (Veto) அதிகாரத்தைப் பயன்படுத்தி, அது நிறைவேறாது செய்து விட்டது. கிரஹாம் குழுவை மறுபடியும் அனுப்ப வேண்டு மென்ற ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானமும் தோல்வியே அடைந்தது. 1958ஆம் ஆண்டு பாகிஸ்தான் அஜாத் காஷ்மீர் என்ற பகுதியில் (ஆக்கிரமிக்கப்பட்ட எல்லை) 'மங்களா' என்ற அணை கட்ட வெளி நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து, இப் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. அஃது இந்திய எல்லைப் பகுதி என்று இந்தியா ஆட்சேபனை தெரிவிக்கவே பாக்கிஸ்தானின் முயற்சி நிறை வேறாது போயிற்று. காஷ்மீர் பிரச்சினையைப்பற்றி இந்தியா–பாக்கிஸ்தான் அமைச்சர்கள், 1962ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சந்தித்துப் பேசினர், இப் பேச்சு வார்த்தைகளாலும், பயன் எதுவும் ஏற்படவில்லை. பாக்கிஸ்தானியர்களின் ஊடுருவல் அடிக்கடி காஷ்மீரத்தில் ஏற்பட்டதால், இரு நாடுகளுக்கும் பகை வலுத்து நல்லுறவு முறிந்தது. 1965ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இரு நாடுகளுக்கும் 28 நாட்கள் கடுமையாகப் போர் நடந்தது. இப் போரில் பாக்கிஸ்தானின் இழப்பு இந்தியாவைவிட அதிகம். இப் போரின்மூலம் காஷ்மீரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று விரும்பிய எண்ணம் சிதைந்து போயிற்று. ஐ. நா. பாதுகாப்புச் சபை இவ் விவகாரத்தில் தலையிட்டுப் போர் நிறுத்தம் செய்தது. 1965ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ஆம் நாள் இந்தியா போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டது. மறுநாள்

பாக்கிஸ்தான் ஒப்புக் கொண்டது. சோவியத் நாட்டின் அழைப் பிற்கிணங்கி இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியும், பாக் கிஸ்தான் அதிபர் மகமது அயூப்கானும் தாஷ்கன்ட் என்ற நகரில் சந்தித்துப் பேசினர். அமைதி உடன்படிக்கை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், திரு. லால்பகதூர் சாஸ்திரி உடன் படிக்கையில் கையொப்பம் இட்ட அன்று இரவே தாஷ்கன்டி லேயே உயிர் நீத்தார். 1947ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை காஷ்மீரப் பிரச்சினைக்கு ஐ. நா. சபையால் எவ்விதத் தீர்வும்காண முடியவில்லை. இதற்கிடையில் இந்தியாவுடன் இணைந்துவிட்ட காஷ்மீரப் பகுதியில் ஐந்து பொதுத் தேர்தல்கள் நடந்துள்ளன. அத் தேர்தல்கள்மூலம் காஷ்மீரம் இந்தியாவுடன் இணைந்ததை அம் மக்கள் உறுதிப்படுத்தி இருக்கின்றனர். ஆரம்பக் கட்டத்தில் மக்களின் விருப்பத்தைத் தெரிந்துகொள்ள வாக்கெடுப்பு முறை (Plelicite) காஷ்மீரத்தில் நடத்தப்படும் என்று இந்தியத் தலைவர் கள் சொல்லிய வாக்குறுதிக்கு முற்றும் மாறான சூழ்நிலை இப் பொழுது அங்கு உருவாகியுள்ளது. மேலும், காஷ்மீரத்தின் மூன்றில் ஒரு பகுதி பாக்கிஸ்தான் ஆக்கிரமிப்பில் இருக்கின்றது. எனவேதான், வாக்கெடுப்பு முறைக்கு அங்கு வாய்ப்பு இல்லை. பெருவாரியான இஸ்லாமிய மக்கள் காஷ்மீரத்தில் வாழ்வதால், வாக்கெடுப்பு ஏற்படுத்தினால் காஷ்மீரம் பாக்கிஸ்தானுடன் இணையும் என்று அபிலாஷை கொள்ளுகின்றனர். காஷ்மீரை முழுமையாக அடையும்வரை பாக்கிஸ்தான் ஓய்ந்திருக்காது என்ற பிரச்சாரத்தைப் பாக்கிஸ்தானியர் இடையறாது செய்து வருகின்றனர். இதற்கு மாறாக இந்தியா, பாக்கிஸ்தானுடன் நட்புறவு கொண்டாடவே விரும்புகின்றது.

பாண்டிச்சேரி

இதைப் புதுச்சேரி என்றும் புதுவை என்றும் தமிழ்நாட்டில் வழங்குவர். பாண்டிச்சேரி தமிழ் நாட்டின் கிழக்குக் கடற் கரையில் சென்னையிலிருந்து சுமார் 100 மைல் தூரத்தில் தெற்கில் அமைந்துள்ளது. இதன் பரப்பளவு 186 சதுர மைல்கள். 1971ஆம் ஆண்டின் குடிக்கணக்குப்படி இதன் மக்கள் தொகை சுமார், 3,50,163. இங்குத் தமிழும் ஃபிரெஞ்சு மொழியும் பேசப்படு கின்றன. பாண்டிச்சேரி, காரைக்கால், ஏனம், மாகி ஆகிய பகுதிகள் ஃபிரெஞ்சுக்காரர்களின் உடைமையாக இருந்துவந்தன. இந்தியா சுதந்திரம் அடைந்தபின்னர், இப் பகுதிகளை இந்திய அரசுடன் இணைத்துகொள்ள ஃபிரெஞ்சு அரசாங்கத்துடன் பல பேச்சு வார்த்தைகள் நடந்தன. இறுதியாக 1954ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ல் இப் பகுதிகளை இந்திய அரசுக்கு மாற்றி

விட வகைசெய்யும் உடன்படிக்கை ஒன்று புது தில்லியில் இந்தியாவிற்கும், ஃபிரெஞ்சு அரசாங்கத்திற்கும் இடையில் கையெழுத்தாயிற்று. இதன்படி கொரமண்டல் அல்லது கிழக்குக் கடற்கரையில் அமைந்திருந்த பாண்டிச்சேரியும் காரைக்காலும் ஆந்திரக் கடற் கரையில் அமைந்துள்ள ஏனும், மேற்குக் கடற் கரையில் அமைந்த மாஹி ஆகிய நான்கு இடங்களும் 1954ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாளில் இந்திய அரசுடன் இணைந்தன. இப் பகுதிகளின் இறுதி இணைப்பைப் ஃபிரெஞ்சு அரசாங்கம் 1956ஆம் ஆண்டு மே மாதம் 28ஆம் நாளில் ஏற்றுக்கொண்டது. இந்திய அரசியல் சட்டத்தின் 14ஆவது திருத்தத்தின்படி 1962ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ஆம் நாளிலிருந்து இப் பகுதிகள் இந்திய அரசாங்கத்தின் நேர் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சி, இங்கு 1963ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நாளிலிருந்து நடைபெற்று வருகிறது. இப் பகுதிகளைக் கண்காணிக்கும் தலைமைப் பொறுப்பைத் துணை ஆளுநர் (Lt. Governor) ஒருவர் கவனித்து வருகிறார்.

கோவா (Goa)

கோவாத் துறைமுகம் இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் பம்பாய் நகரத்திலிருந்து சுமார் 200 மைல் தெற்கே அமைந்துள்ளது. இதைப் போர்ச்சுகீசியர்கள் பிஜப்பூரை ஆண்ட அடில் சாஹி அரச பரம்பரையினரிடமிருந்து கி. பி. 1510ஆம் ஆண்டில் பெற்றனர். இதுவே போர்ச்சுகீசியர்களுக்கு ஆசியாவில் முதன் முதல் கிடைத்த பகுதியாகும். இதைத் தொடர்ந்து கட்ச் பகுதியில் அமைந்திருந்த டையூ, டாமன் என்ற இரு சிறிய துறைமுகங்களையும் தங்களுடைய உடைமையாக்கி இருந்தனர். இம் மூன்று பகுதிகளின் பரப்பளவு சுமார், 1426 சதுர மைல்கள். இதன் மக்கள் தொகை 6.27 லட்சமாகும். இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னும், இந் நான்கு பகுதிகளான கோவா, டையூ, டாமன், நாகர்ஹவேலி ஆகியவை போர்ச்சுகீசியர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருந்து வந்தன. இவற்றில் காலனி ஆதிக்கம் செலுத்தி வந்தனர். நேர்முகமாகவும், ஐக்கிய நாடுகளின் சபையின் (United Nations Organization) மூலமாகவும், இப் பகுதிகளை இந்தியாவுடன் இணைப்பதற்கான பேச்சு வார்த்தைகளை இந்திய அரசு போர்ச்சுகல்லுடன் நடத்தி வந்தது. மேற்கிந்திய வல்லரசு நாடுகள் சிலவற்றின் ஆதரவால் போர்ச்சுகீசிய அரசு இந்திய அரசின் முறையீடுகளுக்குச் செவி சாய்க்காமல் இருந்தது. இங்கு எழுந்த பொது மக்களின் தேசிய எழுச்சிகளைப் போர்ச்சுகீசியர்கள் வன்முறையில் அடக்கி வந்தனர். பல தலைவர்களை

நாடுகடத்திப் போர்ச்சுகல் நாட்டிற்குக் கொண்டு சென்று சிறை யிட்டனர். குடியேற்ற ஆதிக்கங்களை (Colony) ஒழிக்க வேண்டும் என்று ஐ. நா. நிறுவனம் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்குப் போர்ச்சுகல் நாட்டு அரசு ஒத்துழைப்பு அளிக்கவில்லை. ஃபிரெஞ்சு அரசு, தனது இந்திய எல்லைகளை இந்திய அரசுடன் இணைய அனு மதித்த பெருந்தன்மையை எடுத்துக் காட்டியும், போர்ச்சுகல் தனது நிலையை உணர்ந்து கொள்ளவில்லை. எனவே, வேறு வழி யின்றி இந்திய அரசு கோவாவின்மீது ராணுவ நடவடிக்கை எடுத்தது.

ராணுவ நடவடிக்கை : திரு வி. கே. கிருஷ்ணமேனன் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராகவும் ஐ. நா. சபையில் நிரந்தரப் பிரதிநிதியாகவும் இருந்தார். 14 ஆண்டுகளாக ஏற்பட்ட பேச்சுவார்த்தைகளால் எவ்விதப் பயனும் உண்டாக வில்லை என உணர்ந்து, ராணுவ நடவடிக்கையே சிறந்தது எனத் தீர்மானித்தார். அதன்படி மேஜர் ஜெனரல் காண்டத் (Major General Candeth) என்பவரின் தலைமையின்கீழ் ஓர் இந்திய ராணுவம் கோவாவை விடுவிக்க 1961 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் நாள் அனுப்பப்பட்டது. கோவா துறைமுகத் திற்குள் போர்ச்சுகீசியர்களுக்கு உதவியாக அந்நிய நாட்டுக் கப்பல்கள் வராதவாறு இந்தியக் கடற்படை அரபிக்கடலில் மிகுந்த எச்சரிக்கையுடன் பாதுகாப்புக் கொடுத்து வந்தது. இதைப் போன்று ஆகாய விமானப்படைமூலம் போர்ச்சு கீசியர்களுக்கு உதவி வராதபடி நமது விமானப்படை பாதுகாப்பளித்தது. அந்நிய நாட்டு விமானங்கள் கோவாவில் வந்து இறங்காதவண்ணம், அங்கு அமைக்கப்பட்டிருந்த பெரிய விமானத்தளத்தை விமானப்படைத் தலைவர், ஏர் வைஸ்மார்ஷல் பின்டோ (Air Vice Marshall Pinto) என்பவர், போர் ஆரம்பிக்கும் முன்பே தகர்த்தெறிந்து சேதப்படுத்தினார். தளபதி கேண்டத்தின் தலைமையின்கீழ் இயங்கிய தரைப்படையும், பீரங்கிப் படையும் அதிக எதிர்ப்பு எதுவும் இல்லாமல் ராணுவ நடவடிக்கை எடுத்த மூன்றாவது நாளில் கோவா ஆளுநரின் (Governor) மாளிகையின்மீது 1961ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் நாள் இந்திய மூவர்ணக் கொடியை நாட்டினார். கோவாவின் தலைநகர் பஞ்சிம் (Panjim) என்பது. ஏறக்குறைய 450 ஆண்டுகள் போர்ச்சுகீசியர்களின் காலனி ஆதிக்கத்திலிருந்த கோவா விடுவிக்கப்பட்டு இந்திய அரசுடன் இணைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து டாமன், டையூ என்ற பகுதிகளும் இந்தியா வுடன் இணைக்கப்பட்டன. இந்தியாவில் கோவாவின்மீது ராணுவ நடவடிக்கை நடந்து கொண்டிருக்கும்போது போர்ச்

கிசியர்களின் ராணுவ வீரர்களும், போர்த்தடவாளங்களும், நிறைந்த பல கப்பல்கள் சூயஸ் கால்வாயின் வழியாக விரைந்து கொண்டிருந்தன. இக் கப்பல்கள் கோவாவிற்கு வந்தால், இந்தியாவிற்கு நேரும் ஆபத்தை உணர்ந்து, அவற்றைச் சூயஸ் கால்வாய் வழியாகச் செல்லாதபடி எகிப்து நாட்டின் தலைவர் பெருமதிப்பிற்குரிய திரு நாசர் தடுத்து விட்டார். தக்க தருணத்தில் மேற்கொண்ட இச் செயலால், இந்திய மக்களின் அன்பிற்கும், நன்றிக்கும் அவர் இலக்கானர் என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு இந்திய சுதேச சமஸ்தானங்களைப் போன்று போர்ச்சுகல், ஃபிரெஞ்சு போன்ற அந்நிய நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்த இந்தியப் பகுதிகளை இந்திய நாட்டுடன் இணைக்கப் பெருமுயற்சிகள் எடுக்கப்பட்டன. இத் துறையில் இந்தியா பெரும் வெற்றியே கண்டது. அந்நியர் ஆதிக்கத்தால் ஆளப்பட்டு அல்லலுற்ற மக்களின் சுதந்திர உணர்வும் ஒத்துழைப்பும் இந்திய அரசின் முயற்சிகளுக்கு ஊன்றுகோலாக அமைந்தன. வேறு சில அந்நிய அரசுகளும் உடனுறை சிற்பிகளாக இருந்தனர் என்று கூறினல் அஃது உண்மையேயாகும்.

இணைப்பால் ஏற்பட்ட நன்மைகள்

சர்தார் வல்லபாய் படேல், சுதேச அரசுகளை இந்தியாவுடன் இணைக்க விரும்பியபோது, அவற்றின் அரசர்களைக் கட்டாயப் படுத்தவோ, அல்லது அவர்களைப் பாதிக்கும் வகையில் வன்முறைகளைப் பயன்படுத்தவோ விரும்பவில்லை என அவரே கூறியுள்ளார். அறிவாற்றலுள்ள பல சுதேச மன்னர்கள், காலத்தின் போக்கையும், மக்களின் சுதந்திர உணர்வையும், ஆங்காங்கு மக்களால் எழுதப்பட்ட வாசகங்களையும் தெரிந்துகொண்டு தங்கள் உயிர், உடைமை, உற்றார் ஆகியவற்றின் பாதுகாப்பைக் கருதி இந்தியாவுடன் இணைய தாங்களாகவே முன் வந்தனர் என்று பல இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுதேச மன்னர்கள், தங்கள் சொந்தச் செலவிற்கென ஆண்டொன்றுக்குப் பெற்றுவந்த மொத்தத் தொகை 20 கோடி. இத்துடன் தங்கள் குடும்பங்களில் ஏற்படும் திருமணம், குழந்தை பிறப்பு, ஏன்! புதிய கார் வாங்க வேண்டுமென்றாலும், அவற்றுக்கெல்லாம் மக்களிடம் வரியாகவும் வெகுமதியாகவும் தங்கம், வெள்ளி, பணம் போன்றவற்றைப் பெற்று வந்தனர். ஆனல் சுதேச மன்னர்கள், இந்தியாவுடன் இணைந்தபின் அவர்களுக்கு இந்திய அரசு உதவித் தொகையாக (privy purse) கொடுக்கும் மொத்தத் தொகை 5·8 கோடி ரூபாய். ஒவ்வொரு

சுதேச அரசின் ஆண்டு வருவாயைக் கணக்கிட்டு, அதன்பின் உள்நாட்டு அமைச்சரவையைக் கலந்த பின்னர், அவரவர் உதவித் தொகை நிர்ணயிக்கப்பட்டது. இம் மன்னர்களின் காலத்திற்குப் பின், அவர்களின் சந்ததியினருக்கு ஆன உதவித் தொகையை இந்திய அரசே நிர்ணயிக்கவேண்டும் என்ற நிபந்தனையும் வலியுறுத்தப்பட்டிருந்தது. 554 சுதேச மன்னர்களில் 11 பேர்களே பத்து லட்சத்திற்கு மேல் உதவித் தொகையைப் பெற்றனர். அவர்களுள், முறையே குவாலியர் 25 லட்சம், இந்தூர் 15 லட்சம், பாட்டியாலா 17 லட்சம், பரோடா 26·5 லட்சம், ஜெய்ப்பூர் 18 லட்சம், ஜோத்புரி 17.5 லட்சம், பிக்கானீர் 17 லட்சம், திருவாங்கூர் 18 லட்சம், போபால் 11 லட்சம், மைசூர் 26 லட்சம், ஐதராபாத் 50 லட்சம் ரூபாய்கள் பெற்றன. ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட உதவித் தொகை பெற்றவர்கள் தொண்ணூற்றொரு சமஸ்தானங்களாகும். 56 மன்னர்கள், ஒரு லட்சத்திற்கும் குறைவாகப் பெற்றனர். எஞ்சிய 396 மன்னர்கள் ஆண்டொன்றுக்கு 25,000 ரூபாய்க்குக் குறைவாகவே பெற்று வந்தனர்.

இந்திய அரசுக்குக் கிடைத்த லாபம்

சுதேச மன்னர்கள் தங்களுடைய சொந்த அன்றாட உபயோகத்திற்குப் பயன்படுத்திவந்த பொருள்களையும் அதிகாரப் பூர்வமான உடைமைகளையும் தவிர, ஏனைய பொருள்கள் அனைத்தையும் இந்திய அரசு எடுத்துக்கொண்டது. அத்துடன் அரசுக்குச் சொந்தமான கருவூல மிச்சத்தொகை, தொழில் துறையில் முடக்கப்பட்ட தொகை, ஈட்டுப் பொருள்கள் போன்றவை அனைத்தும் இந்திய அரசின் உடைமையாக்கப்பட்டன. இவ்வாறு சேர்க்கப்பட்ட பொருள்களின் மதிப்புச் சுமார் 77 கோடிக்குமேல் ஆகும். மேலும் 500 கிராமங்களும், ஆயிரக்கணக்கான பரப்புள்ள பயிரிடும் நிலங்களும், மன்னர்களின் அரண்மனைகளும், மாளிகைகளும், பொருட்காட்சி சாலைகளும், இந்திய அரசின் உடைமைகளாக்கப்பட்டன. உதாரணமாக, ஐதராபாத் நைசாம் ஆண்டொன்றுக்கு 1.24 கோடி ரூபாய் வருவாய் அளிக்கும் தமது சொந்த நிலத்தை இந்திய அரசிற்குக் கொடுத்தார். அதற்காக அவர், இந்திய அரசிடம் ஆண்டொன்றுக்குப் பெற்றுக்கொண்ட தொகை 25 லட்சம் ரூபாய்களாகும். இவ்வாறு தமது அரசாங்கத்தில் முடங்கியிருந்த 40 கோடி ரூபாய்க்கு எவ்வித நஷ்டஈடும் கேட்காமல் இந்திய அரசிற்கு விட்டுக்கொடுத்தார். இவற்றுக்கு மேலாக, சுதேச அரசுகளை இந்தியா இணைத்துக் கொண்டதால், சுமார் 12,000 மைல் நீளம் உள்ள இருப்புப் பாதைகள் எவ்வித நஷ்டஈட்டுத் தொகையும் கொடுக்காமல் நமக்குக் கிடைத்தன.

இந்தியா இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டதால், 3·6 லட்சம் சதுர மைல் நிலப்பரப்பை இழந்தது. அதிலுள்ள மக்கள் தொகை 8·15 கோடியாகும். ஆனால், சுதேச அரசுகளின் இணைப்பால் இந்தியாவிற்கு 5 லட்சம் சதுரமைல் நிலமும், 8·65 கோடி மக்களும் கிடைத்தன. இவ்வாறு தமது அயரா உழைப்பினால் தம் முதுமையான வயதில் சர்தார் வல்லபாய் படேல், 554 சுதேச அரசுகளை இந்திய அரசுடன் இணைத்து இந்திய வரலாற்றில் அழியாப் புகழைப்பெற்றார். இந்தியா சுதந்திரம் பெற்ற 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 நாளில் ஆரம்பித்த இந்த இணைப்பு முயற்சி 1961ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் தேதியோடு (கோவாவின் இணைப்புடன்) நிறைவுற்றது. பாக்கிஸ்தானின் தலையீட்டால் காஷ்மீரத்தின் இணைப்பு முழுமையாக நிறைவேற வில்லை. சர்தார் படேல், இன்னும் சில ஆண்டுகள் உயிருடன் இருந்திருந்தால் அவருடைய ஆயுள்காலத்திலேயே காஷ்மீர் இணைவையும் நிறைவேற்றி வைத்திருப்பார் என்பது இந்திய மக்களின் அசையாத நம்பிக்கை.

மாநிலங்கள் திருத்தி அமைக்கப்படுதல் (Reorganisation of States)

சுதேச அரசுகளின் இணைவு ஏற்பட்டபின், மாநிலங்களின் எல்லைகளைத் திருத்தி அமைக்கும் பணி தொடங்கியது. 1956-ல் இதற்கெனச் சட்டம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. பண்டித நேரு, சர்தார் படேல், பட்டாபி சீத்தாராமையா ஆகிய மூவரும் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டது. மொழிவாரி மாகாணங்கள் அமைப்பதை இக் குழு விரும்பவில்லை. இத் தருணத்தில் தெலுங்கு மாநிலம் வேண்டுமென்று ஆந்திர மக்கள் கிளர்ச்சி செய்தனர். இதைத் தொடர்ந்து பொட்டி ஸ்ரீராமுலு என்பவர் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார். இம் முயற்சியில் அவர் உயிர் நீத்தார். தெலுங்கு மக்களின் கிளர்ச்சிக்கு மத்திய அரசு இணங்க நேர்ந்தது. இதன் பயனாக, சென்னை மாநிலத்திலிருந்து ஆந்திரமாநிலம் பிரிக்கப்பட்டுத் தனி மாநிலமாக 1953-ல் ஆக்கப்பட்டது. மொழிவாரி மாநிலத்திற்கு ஆந்திராவே முதன்முதலில் வழிகாட்டியது.

1960ஆம் ஆண்டுமே மாதம்பம்பாய் மாநிலம் மகாராஷ்டிரம், குஜராத் என இரு மாநிலங்களாகப் பிரிந்தன. நாகாலந்து 1963ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் தேதியில் இந்தியாவின் 16ஆவது மாநிலமாகத் தோற்றுவிக்கப்பட்டது. பஞ்சாப்மாநிலம், பஞ்சாப், ஹரியானா என்று இரு மாநிலங்களாக 1966ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதியன்று பிரிக்கப்பட்டது. 1970-ல் மேகாலயா மலைப்பகுதி மாநிலம், அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து

தோற்றுவிக்கப்பட்டது. 1971ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25ஆம் நாள் ஹிமாச்சலப் பிரதேசம் இந்தியாவின் 18ஆவது மாநிலமாக உருவாக்கப்பட்டது. மணிப்பூர், திரிபுரா, மேகாலயா, ஆகியவை முழுத் தகுதிபெற்ற மாநிலங்களென 1971-ல் பாராளுமன்றச் சட்டத்தின்மூலம் அறிவிக்கப்பட்டது. அரசியல் சட்டம் 35ஆவது திருத்தப்படி இந்தியாவுடன் சிக்கிம் அரசு இணைக்கப்பட்டது.

அந்தமான், நிகோபார், லக்கடிவ், மினிக்காய், அம்மினிதேவித் தீவுகள் தத்ரா, நாகர்ஹவேலி, கோவா, டையூ, டாமன், பாண்டிச்சேரி, டெல்லி, சந்திகார், அருணாசலப் பிரதேசம், மிஸோரம் போன்ற பகுதிகள் மத்திய அரசின் நேர் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டன.

1970ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் நாளன்று சந்திகார் பஞ்சாப்பிற்குச் சேரவேண்டுமென்று இந்திய அரசு அறிவித்தது. ஆனால், இம் முடிவை அரசு செயல் படுத்தவில்லை. தத்ராவும், நாகர்ஹவேலியும் போர்ச்சுகீசியரின் ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டு 1961 ஆகஸ்டு 11ஆம் நாள் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன. இதைப்போன்று கோவா, டையூ, டாமன் ஆகிய மூன்று இடங்களும் போர்ச்சுகீசியருக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளின்மூலம் 1962ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 2ஆம் தேதி இந்தியாவுடன் இணைந்தன. பாண்டிச்சேரியும் 1962-ல் இந்தியாவுடன் இணைந்தது. இது ஃபிரெஞ்சுக்காரர்களின் உடைமையாக இருந்தது. இவ்வாறு அந்நியர்களின் குடியேற்றப் பகுதிகள் அனைத்தும் 1962-க்குள் இந்திய அரசுடன் இணைக்கப்பட்டன. 1965ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் நாள் நேபா (NEFA) என்று வழங்கப்பட்ட பகுதி மத்திய அரசின் நேர் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது.

2. குடியேற்ற நாட்டு அந்தஸ்திலிருந்து குடியரசிற்கு

(From Dominion Status to Republic)

அதிகார மாற்றம்

முஸ்லீம்லீக் கட்சியினர் தங்களுக்குப் பாக்கிஸ்தானைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையிலிருந்தும் சிறிதும் பின் வாங்காமல் பிடிவாதமாக இருந்தமையால், இந்தியாவில் அரசியல் குழப்பமும், பல இடங்களில் கலவரங்களும் கிளர்ச்சிகளும் ஏற்பட்டன. இந் நிலைகளை உணர்ந்த இங்கிலாந்துப்

பிரதமர் திரு அட்லி (Mr. Attlee) இந்தியாவில் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டாலும் அல்லது ஒன்றுபடாவிட்டாலும் 1948ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்தியாவிற்கு அதிகாரம் மாற்றப்படும் என்று 1947ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ஆம் நாள் அறிவித்தார். அதிகாரத்தை மத்திய அரசுக்கு மாற்றுவிட்டாலும், மக்களின் நன்மையைக் கருதி மாநில அரசுகளுக்கு மாற்றப்படும் என்றும் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் பிரதமர் அறிவித்தார்.



படம் 7.

15 மாதங்களில் சுதந்திரம் கிடைக்க இருக்கும் செய்தியால் பெருவாரியான இந்திய மக்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். ஆனால், முஸ்லீம்லீக் கட்சியினருக்குத் தாங்கள் அடைய விரும்பும் பாக்கிஸ்தான் கிடைக்குமா என்ற அச்சம் ஏற்பட்டது. எனவே, இன

வெறியைத் தூண்டிவிட்டு, இரண்டாவது முறையாக முஸ்லீம் லீக் கட்சியினர், நேரடி நடவடிக்கையில் (Direct Action) இறங்கினர். இதனால் பஞ்சாப், வங்காளம், வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஆகியவற்றில் கலவரங்கள் நிகழ்ந்தன. கற்பனை செய்து பார்க்கவும் இயலாத அளவிற்குக் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கட்டாய மத மாற்றம் போன்றவை நிகழ்ந்தன. செஞ்சட்டைத் தலைவரான கான் அப்துல் கபார்கான் பத்தானியர்களுக்குச் சுயாட்சி வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார். இக் கலவரங்களின் விளைவாக ராவல் பிண்டியில் ஏராளமான இந்துக்களும், சீக்கியர்களும் கொல்லப் பட்டனர்.

மவுண்ட்பேட்டன் பிரபு (Lord Mountbatten) 1947-48

1947ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 24ஆம் நாள் மவுண்ட் பேட்டன் பிரபு, வேவல் பிரபுவுக்குப் பின், இந்தியாவின் அரச பிரதிநிதியானார். இப் பதவிக்கு நியமிக்கப்படுமுன் இவர் இரண்டாவது உலக யுத்தக் காலத்தில் தென்கிழக்கு ஆசியாவில் நேச நாட்டுப் படைகளின் தலைமைத் தளபதியாக (Supreme Commander of Allied Forces) பணியாற்றினார். ஜப்பானியர்களைத் தோற் கடிப்பதில் இவர் முக்கியப் பங்கு எடுத்துக்கொண்டார். இவர் 1947 ஆம் ஆண்டு. மார்ச்சு மாதம் 27ஆம் நாளிலிருந்து 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்கள் 15ஆம் நாள்வரை அரச பிரதிநிதி (Viceroy) யாகவும், 1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் தேதியிலிருந்து 1948ஆம் ஆண்டு ஜூன் மாதம்வரை தலைமை ஆளுநராகவும் (Governor-General) பணியாற்றினார்.

மவுண்ட்பேட்டன் பிரபு, இந்தியாவிற்கு வருமுன்பே, வட இந்தியாவில் அரசியல் கொந்தளிப்பு மிகுந்திருந்தது. முஸ்லீம் லீக் கட்சியினர் பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஆகிய பகுதிகளில் இன வெறியைத் தூண்டிவிட்டதன் பயனாக லாகூர், ராவல்பிண்டி ஆகிய நகரங்களில் இந்து-முஸ்லீம் கலவரங்கள் ஏற்பட்டன. ராவல்பிண்டியில் 2000 சீக்கியர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். ஜூன் மாதத் திட்டத் தின்படி (3rd June Plan) இந்தியா, இந்து இந்தியா, முஸ்லீம் இந்தியா என இரு டொமினியன்களாகப் பிரிக்கப்படவேண்டும் என்று மவுண்ட்பேட்டன் பிரபு அறிவித்தார். மூல்டான் பகுதியில் மூஸ்லீம்கள் கிளர்ச்சிசெய்தபோது, ஆங்கில அதிகாரிகள் எவ்விதத் தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. இதன் விளைவாக ஏராளமான இந்துக்களும், சீக்கியர்களும் கொலை செய்யப்பட்டனர். மவுண்ட்பேட்டன் பிரபு பதவி ஏற்றபோது

முஸ்லீம் லீக் கட்சியினர், பாக்கிஸ்தான் நாளைக் (Pakistan Day) கொண்டாடினர்.

1946ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2ஆம் நாளன்று ஜவகர்லால் நேருவின் தலைமையில் ஏற்பட்ட இடைக்கால அரசில் முஸ்லீம்கள் ஆரம்பத்தில் சேர்ந்து ஒத்துழைக்க மறுத்தனர். ஆனால், சில நாட்கள் சென்றபின், அரசை உள்ளிருந்து கவிழ்க்கும் நோக்குடன் அதில் சேர்ந்துகொண்டனர். முஸ்லீம் தலைவர்கள், தங்கள் இலாக்காக்களில் பணியாற்றிய இந்து, சீக்கிய அதிகாரிகளை நீக்கிவிட்டு முஸ்லீம் அதிகாரிகளை நியமித்தனர். இத்தகைய அரசியல் முட்டுக்கட்டைகளைத் தவிர்ப்பதற்கு நாடு துண்டாக்கப்பட வேண்டும் என்பதை மவுன்ட்பேட்டன் பிரபு உணர்ந்து கொண்டார். தமது ஜூன் மாதத் திட்டத்தை இங்கிலாந்து அமைச்சரவையிடம் கலந்து ஆலோசனை செய்து அவர்களின் ஒப்புதலையும் பெற்றார். இந்தியத் தலைவர்களின் இசைவையும் பெற்றபின் இந்தியாவிற்கு 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் நாள் சுதந்திரம் அளிக்கப்படும் என்று அறிவித்தார். அதே நாளில் பாக்கிஸ்தானுக்கும் சுதந்திரம் அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தியச் சுதந்திரச் சட்டம் 1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் 18ஆம் நாள் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

மேலும் ஏற்பட இருந்த அழிவுகளைத் தவிர்த்து விரைவில் இரு நாடுகளுக்கும் அதிகார மாற்றம் செய்த மவுன்ட்பேட்டன் பிரபுவின் செயலை நாம் புகழாமல் இருக்க முடியாது. சுதந்திர இந்தியாவிற்குப் பண்டித ஜவகர்லால் நேரு முதல் பிரதமராக நியமிக்கப்பட்டார். மவுன்ட்பேட்டன் பிரபு, இந்தியாவின் தலைமை ஆளுநராக (Governor-General) இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். மகமது அலி ஜின்னா, பாக்கிஸ்தானின் தலைமை ஆளுநரானார், இவ்வாறு 1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் இந்தியா, பாக்கிஸ்தான் என்ற இரு டொமினியன்கள் ஒரே நாளில் தோன்றின.

டொமினியன் அரசு (The Dominion Government)

1947ஆம் ஆண்டு இந்திய சுதந்திரச் சட்டத்தின்படி, இந்தியா பாகிஸ்தான் ஆகிய இரு டொமினியங்களிலும் இரு சட்டசபைகளை நிறுவ வகைசெய்யப்பட்டது. இரு நாடுகளுக்கும் அரசியல் அமைப்புச் சட்டம் ஏற்படும்வரை இச் சபைகளே தேவையான சட்டங்களை நிறைவேற்றும். இங்கிலாந்து மன்னரின் அதிகாரம் இப்பொழுது அகற்றப்பட்டது. தலைமை ஆளுநருக்கு (Governor

General) அவ்வதிகாரம் வழங்கப்பட்டது. சுதேச அரசுகளின் மீது செலுத்தி வந்த மேலாணை நீக்கப்பட்டது. சுதேச அரசுகள் இரு டொமினியன்களைக் கலந்தே தங்களுடைய பிற்கால உறவை அமைத்துக் கொள்ள வேண்டும். இந்தியா அமைச்சர் (Secretary of State for India) பதவி ஒழிக்கப்பட்டது. இந்தியாவின் பேரரசர் (Emperor of India) என்ற பட்டத்தை இங்கிலாந்து மன்னர் துறக்க வேண்டும். இரு டொமினியன்களும் தாங்கள் விரும்பும் அரசியல் முறையை அமைத்துக்கொள்ள உரிமை பெற்றன. பொதுநல நாடுகளின் (Common wealth of Nations) குழுவில் சேர்வது இரு டொமினியங்களின் விருப்பத்தைப் பொறுத்தது.

காஷ்மீரம் : இந்தியா சுதந்திரம் பெற்றபின், முதல்முறையாக வடமேற்கு எல்லைப்புற மலைச்சாதியினருடன் போரிட நேர்ந்தது. பாக்கிஸ்தானியரின் தூண்டுதலால் மலைச்சாதியினர் காஷ்மீரத்தைத் தாக்கினர். காஷ்மீரத்தின் பிரதமராக இருந்த மெகர் சந்த் மகாஜன் (Meher Chand Mahajan) என்பவர், மலைச்சாதியினரின் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு இங்கிலாந்து, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளையும் மலைச்சாதியினரின் தாக்குதலைத் தடுக்கும்படி வேண்டிக்கொண்டார். ஆனால், இவ் வேண்டுகோளால் ஒருபயனும் ஏற்படவில்லை. இறுதியாகக் காஷ்மீர், இந்தியாவுடன் இணைந்தபின் இந்தியப் படைகள் விமானம்மூலம் காஷ்மீரம் சென்று மலை இனத்தவர்களின் தாக்குதலை முறியடித்து, மக்களின் உயிரையும் உடைமைகளையும் காத்தன. காஷ்மீரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்குடன் இவ்விஷயம் ஐ. நா. சபைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதன் பயனாக இந்தியா, பாக்கிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. ஜூனகாத் அரசு, நவம்பர் மாதம் 9ஆம் நாள் இந்தியாவுடன் இணைந்தது. இதைத் தொடர்ந்து நவம்பர் 29ஆம் நாள் ஹைதராபாத் நைசாமுடன் இந்திய அரசு அரசியல் உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டது.

பிரிவினையால் ஏற்பட்ட விளைவுகள் : இன அடிப்படையில் இந்தியா இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டதால், பல பிரச்சினைகள் எழுந்தன. ரேட்கிளிப்பின் எல்லை நிர்ணயக்குழுவின் (Radcliffe Boundry Commission) பரிந்துரைகளின்படி எல்லை நிர்ணயக் கோட்டை அமைக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. மேஜர் ஜெனரல் ரீசியின் (Major-General Reese) தலைமையின்கீழ் இருந்த 50,000 இந்திய வீரர்கள் எல்லை நிர்ணயக் கோட்டை அமைக்கப் போதவில்லை. இவ்வேலை நிதானமாக நடைபெற

வேண்டியிருந்தது. மேற்குப் பாகிஸ்தானில் முஸ்லீம்கள், இந்துக்களையும் சீக்கியர்களையும் தாக்கிக் படுகொலை செய்தனர். இதன் எதிரொலியாக இந்துக்களும் சீக்கியர்களும் கிழக்குப் பஞ்சாபிலுள்ள முஸ்லீம்களைக் கொலை செய்தனர். இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவரை ஒருவர் பூண்டோடு அழித்துவிடவேண்டுமென்று முயன்றனர். 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து சுமார் 9 மாதத்திற்குள் ஒன்றரைக் கோடி மக்கள் கொலைக்கும், கொடுமைக்கும் தப்பித் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறினர். இதே காலத்தில் 6 லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். 50 லட்சம் மக்கள் மேற்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்குள் பாதுகாப்புத் தேடி வந்தனர். இதே எண்ணிக்கையுள்ள மக்கள் கிழக்குப் பஞ்சாப், டெல்லி, மத்திய மாகாணங்கள், ஆஜ்மீர், ஆள்வார், பரத்பூர், குவாலியர், இந்தூர் போன்ற இடங்களிலிருந்து மேற்குப் பாகிஸ்தானுக்குச் சென்றனர். 10 லட்சத்திற்கு மேற்பட்ட முஸ்லீம் அல்லாத மக்கள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து மேற்கு வங்காளத்திற்கு வந்து சேர்ந்தனர். இறுதியாக 40 லட்சத்திற்கு மேற்பட்ட இந்துக்கள் சிந்து மாகாணத்திலிருந்து இந்தியாவிற்கு ஓடி வந்தனர்.

இவ்வாறு கொலை, கொள்ளை, இடப்பெயர்ச்சி போன்றவை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது உயிர்தப்பி அகதிகளாக வரும் மக்களை வழிமறித்துக் கொலை செய்யும் கொடுமையும் நிகழ்ந்தவண்ணமிருந்தது. அகதிகள் பிரயாணம் செய்த ரயில்களை வழிமறித்து அதில் இருந்த மக்கள் அனைவரையும் கொன்றனர். இவ்வாறு உயிரிழந்த மக்களின் எண்ணிக்கை 5 லட்சம் இருக்கும் என்று ஜி. டி. கோஸ்லா (G. D. Khosla) என்ற நீதிபதி கூறியுள்ளார். மேற்குப் பாக்கிஸ்தானிலிருந்து வரும் மக்கள் அனைவரையும் கிழக்குப் பஞ்சாபில் குடியமர்த்த இயலவில்லை. எனவே, பலர் டெலிக்கு வரவேண்டி நேர்ந்தது. இவ்வாறு வந்தவர்கள் டெல்லியில் தெருக்களிலும், மசூதிகளிலும் இடம்பிடித்துக் கொண்டிருந்தனர். டெல்லியில் இந்து, முஸ்லீம் கலகம் ஏற்படும் நிலை தோன்றியது. எனவே, வங்காளத்தில் கலவரப்பகுதிகளில் அமைதிப்பணியாற்றி வந்த காந்தியடிகள் 1947ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தில்லிக்கு வந்தார். பாக்கிஸ்தானுக்கு இந்தியா கொடுக்க ஒப்புக்கொண்ட 55 கோடி ரூபாயைக் கொடுத்துவிடவேண்டுமென்றும், மசூதிகளில் தங்கி இருந்த இந்துக்கள் அவற்றைவிட்டு வெளியேற்றப்படவேண்டுமென்றும், தில்லியில் அமைதியை ஏற்படுத்தவேண்டுமென்றும் காந்தியடிகள் இந்திய அரசுக்குக் கூறினார். காஷ்மீரப் போரின் காரணமாக இத்தொகை பாக்கிஸ்தானுக்குக் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்

பட்டிருந்தது. காந்தியடிகளின் வேண்டுகோளின்படி உடனடியாக 55 கோடியை இந்தியா பாக்கிஸ்தானுக்குக் கொடுத்ததோடு, தில்லி மசூதிகளில் தங்கி இருந்த இந்துக்களையும் அகற்றியது. இதற்குப் பின்னரே, காந்தியடிகள் தாம் மேற்கொண்ட உண்ணா விரதத்தை 1948ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 18ஆம் நாள் கைவிட்டார்.

காந்தியடிகள் கொல்லப்படுதல் : பாக்கிஸ்தானுக்குச் சாதகமாகக் காந்தியடிகள் செய்த செயலை இந்துக்களில் பலர் விரும்பவில்லை. எனவே, உண்ணா நோன்பைக் கைவிட்ட 12ஆவது நாள், அதாவது, ஜனவரி 30ஆம் நாள் காந்தியடிகள் பிர்லா மாளிகையிலிருந்து மாலை வழிபாட்டுக் கூட்டத்திற்குச் சென்றுகொண்டிருக்கும்போது நாதுராம் கோட்சே என்ற மராட்டிய வாலிபரால் சுட்டுக்கொல்லப்பட்டார். பஞ்சாப், தில்லி, ஆகிய இடங்களிலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதற்கு இந்துக்களும், சீக்கியர்களுமே காரணம் என்று முஸ்லீம்கள் குற்றம் சாட்டினர். ஆனால், இம் மக்களின் உற்றார் உறவினர், உடன்பிறந்தார் பாக்கிஸ்தானில் வேண்டுமென்றே கூட்டங்கூட்டமாகக் கொல்லப்பட்டபோதும், அவர்களின் உடைமைகள் பறிக்கப்பட்டபோதும் அவர்களால் பழிவாங்காமல் இருக்க முடியவில்லை. பாக்கிஸ்தானிலிருந்து உயிர்தப்பி வந்த ஆயிரக்கணக்கான மக்கள் தங்களைச் சார்ந்தோர் கொடூர முறையில் கொல்லப்பட்ட விவரங்களைக் கூறும்போது, மக்கள் மாக்களாக மாறுவது இயற்கையேயாகும். நாடு பிரிக்கப்பட்டதன் விளைவாக அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்கள் சீக்கியர்களேயாவர். இம் மக்களில் 40 சதவீதம் தங்கள் வீடு, தொழில் ஆகியவற்றை இழந்து, அகதிகளாக வாழ்க்கையைப் புதிதாக ஆரம்பிக்க வேண்டிய அவல நிலைக்குள்ளானார்கள். இந்தியாவிலிருந்து சென்ற முஸ்லீம்களைவிட, பாக்கிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்த இந்துக்கள் அதிகமாக இருந்தனர்.

அகதிகள் பிரச்சனை ; குடி பெயர்ந்து வந்த அகதிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதென்பது பெரும் பிரச்சினையாக இருந்தது. இதைப் பொறுமையோடும் திறமையோடும் இந்திய அரசு நிறைவேற்றி வெற்றி கண்டது. இந்தியாவில் முஸ்லீம்கள் விட்டுச் சென்ற வீடுகள், நிலங்கள் ஆகியவற்றைப் பாக்கிஸ்தானிலிருந்து வந்த மக்களுக்கு அளித்தனர். வாழ்வைப் புதிதாக ஆரம்பிக்க இவர்களுக்குக் கடன் தொகை வழங்கப்பட்டது. பாக்கிஸ்தானில் விட்டுவந்த உடைமைகளுக்கு ஈடான தொகையை இந்திய அரசு இந்தியாவிற்கு வந்த மக்களுக்கு அளித்தது. அகதிகளின் சொத்து மதிப்பைக் கணக்கிடத் தனிக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

மறுவாழ்வு உதவித்தொகையும் அளிக்கப்பட்டது. அகதிகள் தங்குவதற்கெனப் புதியவீடுகளும் தனிக்குடியிருப்புகளும் அமைக்கப்பட்டன. நகரங்கள் விரிவுபடுத்தப்பட்டன. பரிடாபாத் என்ற நகரத்தைச் சுற்றிப் பல சிறிய நகர்ப்புறங்கள் எழுந்தன. அகதிகளும் புதிய சூழ்நிலையில் தங்களுக்குக் கிடைத்த உதவியைப் பயன்படுத்தி வாழ்வைச் சீர்திருத்தி அமைத்துக்கொண்டனர்.

சுதேச அரசுகளின் இணைவு

நாடு பிரிக்கப்படும் முன்பே, மவுன்ட்பேட்டன் பிரபு இந்தியாவின் ஒற்றுமைக்காக அரும்பாடுபட்டார். 1947ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் நாள் பிரிட்டீஷ் மேலாணை நீக்கப்படுவதால் ஏற்படும் பிரச்சினை குறித்து ஆராய சுதேச அரசுகளின் மகாநாடு ஒன்றைக் கூட்டினர். 100 சுதேச அரசர்களும் அரசப் பிரதிநிதிகள் பலரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதிக்குள் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு டொமினியன் நாடுகளில் சுதேச அரசர்கள் சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற அவசியத்தை மவுன்ட்பேட்டன் வலியுறுத்தினர். இவரும், உள்நாட்டுத் துறைச் செயலாளராக இருந்த வி. பி. மேனனும் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியால் 1947-க்குள் ஒரு சிலவற்றைத் தவிர, ஏனைய அரசுகள் அனைத்தும் தாங்கள் விரும்பிய டொமினியனில் இணைந்து விட்டன. மவுன்ட்பேட்டன், இந்தியாவின் ஒற்றுமைக்காக ஆற்றிய செயலை மறக்க இயலாது. இந்திய சுதந்திர அறிக்கை அறிவிக்கப்படுவதற்கு முன்பே, காஷ்மீர மன்னரை இரு டொமினியங்களில் ஒன்றில் இணையும்படி கேட்டுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது முயற்சி பயனளிக்கவில்லை. இதைப்போன்று ஹைதராபாத் நைசாமையும் இந்தியாவுடன் இணைந்து கொள்ளும்படி வேண்டினர். இவர், தமது பதவிக்காலம் முடிந்து, இங்கிலாந்து செல்லும்போது இந்திய மக்கள் அன்புடன் அவரது சேவைகளைப் பாராட்டினர். இவரது துணைவியார் திருமதி மவுன்ட்பேட்டன், இந்திய மக்களின் துன்பம் துடைக்கும் துறையில் பெரும் சேவைகள் செய்துள்ளார். எனவே, இந்த அம்மையார் இறந்தபோது இந்திய மக்கள் உண்மை நண்பர் ஒருவரை இழந்தது போன்ற துக்கத்தில் ஆழ்ந்தார்கள்.

இராஜகோபாலச்சாரியார் (1948–50)

மவுன்ட்பேட்டன் பிரபுவுக்குப் பின், திரு. இராஜகோபாலச்சாரியார், இந்தியாவின் தலைமை ஆளுநராக (Governor General), 1948-ல் பதவி ஏற்றார். இவர் இப் பதவியில் சுமார் இரண்டு ஆண்டுகள் இருந்தார். இவரது நிர்வாகக் காலத்தில்

ஹைதராபாத் நைசாமுக்கு எதிராகப் போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அங்கு மக்களை அடக்கு முறையில் அதிகாரம் செலுத்தி வந்த காசிம் ரஸ்வியும் அவரது சகாக்களும் தோற்கடிக்கப்பட்டு ஹைதராபாத் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. உள் நாட்டு அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய்படேல் ஹைதராபாத்தின் வீழ்ச்சியில் பெரும் பங்கெடுத்துக் கொண்டார். அரசியல் நிர்ணய சபை உருவாக்கிய இந்திய அரசியல் சட்டம், 1950ஆம் ஆண்டு செயல் முறைக்குக் கொண்டுவரப்பட்டது. காஷ்மீரைப் பற்றியும், அகதிகளின் சொத்துகள் பரிவர்த்தனைபற்றியும் இந்தியாவிற்கும் பாக்கிஸ்தானுக்கும் பகை நீடித்து வந்தது. செய்தி நிறுவனம் (press trust) ஒன்றை இந்திய அரசு நிறுவியது. செய்தித் தாள்கள் ஒழுங்குமுறை செய்யப்பட்டன. இந்தியச் செய்தி நிறுவனம் ராய்டர் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இயங்கிவர ஏற்பாடு செய்யப்பட்டது. தற்பொழுது இந் நிறுவனம் ராய்டரின் உதவியின்றி இயங்கி வருகின்றது.

1948-ல் சர் எஸ். இராதாகிருஷ்ணனின் தலைமையின்கீழ் பல்கலைக் கழக விசாரணைக்குழு (University Commission) ஒன்று நியமிக்கப்பட்டது. பல்கலைக் கழகங்களின் செயல்முறை, நிதி, ஆசிரியர்களின் ஊதியம், வேலைத் திட்டம், பாதுகாப்பு, மாணவர்களின் கட்டுப்பாடு, பரிட்சைமுறை போன்றவற்றை ஆராய்ந்து அறிவிக்கும்படி பணிக்கப்பட்டது. இக் குழு தனது அறிக்கையை 1949-ல் வெளியிட்டது. 1948ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாக்கிஸ்தானின் தலைமை ஆளுநராக இருந்த திரு. மகமது அலி ஜின்னா நோய்வாய்ப்பட்டு இறந்தார். மொழிவாரி மாகாண விசாரணைக்குழு (Linguistic provinces Committee) ஒன்று நியமிக்கப்பட்டது. நேபாள நாட்டில் ராணாவின் ஆட்சி ஒழிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டில் பூட்டான் நாட்டுடன் இந்தியா நட்பு உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டது. 1949, டிசம்பர் மாதம் செஞ்சீனா இந்தியாவைச் சுதந்திர நாடாக அங்கீகரித்தது.

டாக்டர் ராஜேந்திர பிரசாத் 1950-62

டாக்டர் ராஜேந்திரபிரசாத், இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக 1950-ல் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாடு சுதந்திரம் பெற்றபின் ஏற்பட்ட பிரச்சினைகளை இந்தியத் தலைவர்களான டாக்டர் ராஜேந்திரப் பிரசாத், நேரு, சர்தார் படேல் ஆகியவர்கள் மிகவும் திறமையாகச் சமாளித்த முறையை நாம் புகழாமல் இருக்கமுடியாது. ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு வெளியேறும்போது வேண்டுமென்றே நிர்வாகத்தில் முட்டுக்கட்டைகள் பல ஏற்படுத்தினர். பல அனுபவம் நிறைந்த அதிகாரிகளைச் சில

காலம் இந்தியாவில் தங்கியிருந்து செல்லவேண்டுமென்று கேட்டுக் கொண்ட பின்னரும், அவர்கள் அதற்கு இசையவில்லை. இத்தகைய இக்கட்டான நிலையைச் செம்மை செய்தவர் சர்தார் வல்லபாய் படேல் ஆவர். இவர் உதவிப் பிரதமராகவும் உள்நாட்டு அமைச்சராகவும் இருந்தார். ஆங்கிலேயர்களின் நிர்வாகத்தில் பணியாற்றிய பழைய உயர் அதிகாரிகள் புதிய சூழ்நிலைக்குத் தகுந்தவாறு தங்கள் மனநிலையை மாற்றிக்கொண்டு திறமையுடன் பணி செய்யும்படி செய்த பெருமை சர்தார் படேலையே சாரும். இவர், 1950-ல் இறக்கும்வரை உள்நாட்டுத் துறையைக் கவனித்து வந்தார். 1950ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிக்கிம் நாட்டுடன் இந்தியா நட்பு உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டது.

நாட்டில் சட்டம் அமைதி ஆகியவற்றைக் காக்கும் பொறுப்பு அதிகரித்தது. அமைதியைக் காக்கப் பல தடவைகள் ராணுவ உதவியை நாடவேண்டிய நிலை ஏற்பட்டது. லட்சக்கணக்கான மக்கள், தங்கள் உற்றார் உறவினரை இழந்து இடம் பெயர்ந்து பாக்கிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு வந்தனர், இவர்களை அமைதிப்படுத்திக் குடியமர்த்தி அவர்கள் இழந்த உடைமைகளுக்கு ஈடாக உதவித்தொகை அளித்து மறுவாழ்வு தருவது என்பது மிகவும் சிக்கலான செயலாகும். தங்களை இத்தகைய கொடுமைகளுக்கு உள்ளாக்கியவர்கள்மீது வஞ்சம் தீர்க்கவேண்டுமென்று இம் மக்கள் கிளர்ச்சி செய்துவந்தனர். அத்தகையோரை அமைதிப் படுத்துவதே இந்திய அரசுக்குப் பெரும் பிரச்சினையாகிவிட்டது. அகதிகளின் நலன்களைக் கவனிக்க அமைச்சர் ஒருவர் நியமிக்கப் பட்டார்.

இந்திய அரசியல் சட்டம் (The Constitution of India)

இடைக்கால அரசு ஏற்பட்டிருந்தபோது சுதந்திர இந்தியாவிற்குத் தேவையான அரசியல் சட்டம் ஒன்றை உருவாக்கும் பொருட்டு 1946ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 9ஆம் நாள் டாக்டர் சச்சிதானந்த சின்ஹா என்பவரின் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் டாக்டர் ராஜேந்திரபிரசாத் நிரந்தரத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இக் குழுவில் இடம்பெற்ற அங்கத்தினர்கள் முறையே ஜவகர்லால் நேரு, ராஜேந்திரபிரசாத், சர்தார் படேல், மௌலானா ஆஸாத், அப்துல் கபார்கான், டாக்டர் ராதாகிருஷ்ணன், கே.எம். முன்ஷி, சர். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், குன்சுரு, டாக்டர் எம். ஆர். ஜெயகர், ஜி. பி. பந்த், புருஷோத்தம்தாஸ் தாண்டன்,

ஆச்சாரியா கிருபளானி, டாக்டர் அம்பேத்கார், டி. டி. பிரோஷ் கான் நூன், குவாஜா நாஜ்முதின், சுகரவர்த்தி, சர். ஹிரிசிங் கௌர் முதலியோராவர். இடைக்கால அரசில் முஸ்லிம் லீக் கட்சியினர் சேர்ந்திருந்த போதிலும், அரசியல் நிர்ணய சபைக் கூட்டங்களில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் 1946ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் நாள் கூடியது. காங்கிரஸ் கட்சியின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு அங்கத்தினர்களே கூட்டத்திற்கு வந்திருந்தனர். அரசியல் நிர்ணயசபைக் கூட்டம் நான்கு தடவைகள் கூடின. இச் சபை நாட்டிற்குத் தேவையான சட்டங்களையும் அரசியல் சட்டத்தையும் இயற்றியது.

1947ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29ஆம் நாள் அரசியல் சட்டம் தயாரிக்கும்பொருட்டு வழக்கறிஞர் டாக்டர் அம்பேத்கார் தலைமையில் ஏழுபேர் அடங்கிய குழு ஒன்று நிறுவப் பட்டது. இதில் கே. எம். முன்ஷி, சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், டி. டி. கிருஷ்ணமாச்சாரி, கோபாலசாமி ஐயங்கார், பி. என் ராவ் ஆகியவர்கள் இடம் பெற்றிருந்தனர். அரசியல் சட்டத்தின் இறுதி மேற்பார்வையின் பொறுப்பை எஸ். என். முகர்ஜி என்பவர் ஏற்றுக்கொண்டிருந்தார். அரசியல் நிர்ணய சபையில் இச் சட்டம் மூன்று முறைகள் வாசிக்கப்பட்டு, விவாதிக் கப்பட்டு, இறுதியாக 1949-ல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அரசியல் சட்டத்தை முடிக்க இரண்டு ஆண்டுகள், 11 மாதம் 18 நாள்கள் ஆயின. 114 நாள்கள் வரை இச் சட்டத்தைப்பற்றி விவாதித்தனர். இறுதியாக 1950 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் சுதந்திர இந்தியாவில் அரசியல் சட்டம் செயல் படத் தொடங்கியது.

இந்திய அரசியல் சட்டத்தில் ஏற்பட்ட பல பிரச்சினை களுக்கும் சிக்கல்களுக்கும் தீர்வு காணப்பட்டன. இந்தியா விற்குக் கூட்டாட்சி முறையே பொருத்தமானது என்று வற்புறுத் தப்பட்டபோது, இதனால் நாடு பிளவுபடுவதோடு மக்களுடைய அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுமென டாக்டர் அம்பேத்கார் எடுத்துக் கூறினார். மேலும் முற்போக்கான திட்டங்களைச் செயல் படுத்த முடியாது என்று வாதிட்டார். எனவே, இந்தியாவிற்கு ஒருமுகப்பட்ட வலுவான ஆட்சியே தேவையானது என்று எடுத் துரைத்தார். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் அமைந்துள்ள ஜனாதிபதி முறையையும், இங்கிலாந்திலுள்ள பாராளுமன்ற முறையையும் இணைத்து இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப் பட்டது. அமெரிக்காவில் ஆளுநர்கள் (Governors) தேர்ந்

தெடுக்கப்படுவது போன்று இந்தியாவிலும் அம் முறையைப் பின் பற்றி ஆளுநர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

இந்திய அரசியல் சட்டத்தில் ஆதார உரிமைகளைப் (Fundamental rights)பற்றி ஓர் அத்தியாயம் சேர்க்கப்பட்டுள்ளது. பிறப்பால் யாவரும் சமம். எனவே, ஜாதி, சமய, இன வேற்று மைகள் இன்றிச் சமஉரிமை வழங்கப்பட வேண்டுமென்று வலியுறுத் தப்பட்டது. சமூகத்தில் பின்தங்கிய மக்களுக்குக் குறிப்பிட்ட காலங்களுக்குக் கல்வி, உத்தியோகம், சட்டசபை ஆகியவற்றில் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் சட்டம் உலகத்திலேயே நீளமான சட்டமா கும். இதில் 395 பிரிவுகளும் 9 அத்தியாயங்களும் அடங்கியுள்ளன. அமெரிக்க அரசியல் சட்டத்தைவிட, இந்திய அரசியல் சட்டம் பன்மடங்கு பெரியது. இச் சட்டம் 1935ஆம் ஆண்டு இந்தியச் சட்டத்தின் அடிப்படையில் காலத்திற்கும் தேவைக்கும் ஏற்றாற்போல மாற்றங்கள் அமைத்து உருவாக்கப்பட்டுள்ளது. 1950-லிருந்து இன்றுவரை முப்பது தடவைகளுக்குமேல் அரசியல் சட்டத்தில் திருத்தங்கள் (amendments) செய்துள்ளனர்.

ஐந்தாண்டுத் திட்டம் : ஜவகர்லால் நேருவின் தலைமை யின்கீழ்ப் பொருளாதார முன்னேற்றத்தின்பொருட்டுத் திட்டக் குழு (Planning Commission) ஒன்று அமைக்கப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1951-ல் செயல்படத் தொடங்கியது. இதுவரை நான்கு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. இன்னும் பல ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற் றப்பட இருக்கின்றன. நாடு முழுவதும் இருந்த ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டது. நிலஉச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இம் முறைகளால் கிடைக்கப்பெற்ற உபரி நிலங்கள் நிலமில்லா விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன.

அந்நியர் குடியேற்றப் பகுதிகள் (Foreign Settlement): நீண்டநாள் பேச்சுவார்த்தைகளுக்குப்பின், 1950ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் நாள் ஃபிரெஞ்சுக் குடியேற்றப்பகுதியான சந்திர நாகூர் மேற்கு வங்காளத்துடன் இணைக்கப்பட்டது. பாண்டிச் சேரி, காரைக்கால், மாகி, ஏனம் ஆகிய ஃபிரெஞ்சுக் குடியேற்றப் பகுதிகளும் இந்தியாவுடன் இணைக்கப்பட்டன. எல்லா நாடுகளுட னும் இந்தியா நட்புறவு கொண்டாடும் என்று நேரு, தமது வெளி நாட்டுக் கொள்கையை 1950-ல் அமைத்துக்கொண்டு, அதைத்தாம் இறக்கும்வரை கடைப்பிடித்து வந்தார். இவர் உருவாக்கிய உலக நாடுகளுடன் நட்புறவு, கூட்டுச்சேராக் கொள்கை

ஆகியவற்றை அவருக்குப்பின் வந்த தலைவர்கள் பின்பற்றி வருகின்றனர்.

இந்தியக் குடியரசின் அமைப்பு

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 15ஆம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றது. 1950ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26ஆம் நாளிலிருந்து இந்தியா ஜனநாயகக் குடியரசு நாடாக ஆக்கப் பட்டது. டாக்டர் ராஜேந்திர பிரசாத் இந்தியக் குடியரசிற்கு முதல் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். சுதந்திர இந்தியாவிற் கென ஓர் அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. இஃது உலகி லேயே மிகப்பெரிய அரசியல் சட்டமாகும். இது 270 பக்கங்களைக் கொண்டது.

இந்திய அரசியல் சட்டம், இந்தியாவிற்கு ஒரு கூட்டாட்சி முறையை வகுத்துக் கொடுத்துள்ளது. இதில் மத்திய, மாநில அரசுகளுக்கெனத் தனித்தனி அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக் கின்றன. கூட்டாட்சிமுறை வலியுறுத்தப்பட்டிருப்பினும் மத்திய அரசின் அதிகாரமே நடைமுறையில் மிகுந்த செல்வாக்குப் பெற் றிருக்கிறது. இந்திய அரசியல் சட்டம் நெகிழும் தன்மையதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

குடியரசுத் தலைவர்: இந்தியக் குடியரசிற்குக் குடியரசுத் தலைவர் ஒருவரை நியமிக்க வகை செய்யப்பட்டுள்ளது. இவரை ஜனாதிபதி என்றும் அழைக்கின்றனர். 35 வயது நிரம்பிய இந்தியக் குடிமகன் யாரும் குடியரசுத் தலைவர் தேர்வுக்கு அருகதையுள்ளவர். இவர் மத்திய, மாநில அரசுகளில் ஊதியம் பெறும் எவ்விதப் பதவியும் வகிக்கக்கூடாது. பாராளுமன்றத்தின் இரு சபைகளும் இவரை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கும். ஒருமுறை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர் மறுமுறையும் தேர்ந்தெடுக்கப்படலாம். இவர் நாட்டின் பிரதம அமைச்சரையும், இவருடைய ஆலோசனையின் பேரில் இதர அமைச்சர்களையும் நியமிக்கின்றார். அட்டர்னி ஜெனரல் என்று வழங்கப்படும் அரசாங்கச் சட்ட ஆலோசகர், அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவர், தலைமை நீதிமன்றத்தின் நீதிபதிகள், கூட்டு அரசின் பொதுப்பணிக் குழுவின் அங்கத் தினர்கள், தேர்வு ஆணையர், வெளிநாட்டுத் தூதுவர்கள் போன்ற வர்களை நியமிக்கின்றார். பாராளுமன்றத்தின் இரு சபைகளைக் கூட்டவும் கலைக்கவும் தள்ளி வைக்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. கொலைக்குற்றம் புரிந்தோர்களுக்கு மன்னிப்பு அளிக்கவும், தண்டனையைக் குறைக்கவும் இவருக்கு அதிகாரம் உண்டு.

உதவிக் குடியரசுத் தலைவர்: இவரை உதவிஜனாதிபதி என்றும் அழைக்கின்றனர். குடியரசுத் தலைவருக்கு உண்டான தகுதிகள் இவருக்கும் அமைய வேண்டும். பாராளுமன்ற இரு சபை அங்கத்தினர்களும் ஒன்றுசேர்ந்து இவரை ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கின்றனர். ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டவர் மறுமுறையும் தேர்ந்தெடுக்கப்படலாம். உதவிக் குடியரசுத் தலைவர் மேல்சபைக்குப் பதவியற்ற தலைவராக இருப்பார். குடியரசுத் தலைவர் இறந்தாலோ, பதவிநீக்கம் செய்யப்பட்டாலோ, பதவியைவிட்டு விலகினாலோ அப் பதவிக்கு உதவிக் குடியரசுத் தலைவர் நியமிக்கப்படுவார். ஆறு மாதத்திற்குள் புதிய குடியரசுத் தலைவரின் தேர்வு நடைபெறவேண்டும்.

அமைச்சரவை : பிரதம அமைச்சருடன்கூடிய ஓர் அமைச்சரவை குடியரசுத்தலைவருக்கு ஆலோசனை கூறி உதவிபுரியும். நாட்டின் நிர்வாகத்தில் அமைச்சரவை பெரும்பங்கு வகிக்கின்றது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மைக் கட்சியின் தலைவரைக் குடியரசுத் தலைவர் பிரதமராக நியமிக்கின்றார். பிரதமரின் ஆலோசனையின்பேரில் ஏனைய அமைச்சர்கள் நியமிக்கப்படுகின்றனர். அமைச்சரவை மக்கள் சபைக்குப் பொறுப்பானது.

பாராளுமன்றம் : இந்தியப் பாராளுமன்றம், இரு சபைகளைக் கொண்டது. அவை முறையே மேல்சபை என்றும், மக்கள் சபை என்றும் வழங்கப்படுகின்றன. இவ்விரு சபைகளில் மக்கள் சபை மிகுந்த அதிகாரமும் செல்வாக்கும் உடையது. இதில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 545 அங்கத்தினர்களுக்கு மிகாமல் இடம் பெறுவர். 25 வயது நிரம்பிய இந்தியக் குடிமகன் அல்லது குடிமகள் எவருக்கும் பாராளுமன்றத் தேர்வுக்கு நிற்க அருகதையுண்டு. சட்டம் இயற்றுவதில் இரு சபைகளுக்கும் சம அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தபோதிலும், பணம் சம்பந்தப்பட்ட மசோதாக்கள் மக்கள் சபையிலேயே நிறைவேற்றப்பட வேண்டும் என்ற முறை அமைந்துள்ளது. குடியரசுத் தலைவரின் கையொப்பம் பெற்றுத்தான் ஒரு மசோதாவைச் சட்டமாக்க முடியும்.

மேல்சபை, அல்லது ராஜ்யசபை என்றும் கலைக்கப்படுவதில்லை. ஆனால் மூன்றில் ஒரு பகுதி அங்கத்தினர், இரண்டு ஆண்டுக் காலம் முடிவடைந்ததும், தங்கள் அங்கத்தினர் பதவியிலிருந்து விலகிக் கொள்வர். மக்கள் சபை, இடையில் கலைக்கப்படாமல் இருந்தால் ஐந்தாண்டுகள்வரை நீடித்திருக்கும். இரு சபைகளும் ஆண்டிற்கு இரு முறையாவது கூட்டப்படவேண்டும்.

தலைமை நீதி மன்றம்: இந்தியத் தலைமை நீதிமன்றத்தில் தொடக்கத்தில் ஒரு தலைமை நீதிபதியும், 7 வேறு நீதிபதிகளும் இருந்தனர். இப்பொழுது இந்த எண்ணிக்கை 7-லிருந்து 14 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தலைமை நீதி மன்றத்தின் நீதிபதிகள், குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் 65 வயதுவரை பதவியில் இருப்பர். மேலும், இவர்கள் பாராளு மன்றத்தின் அனுமதியுடனே பதவி நீக்கம் செய்யப்படவேண்டும்.

தலைமை நீதிமன்ற நீதிபதி இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். உயர்நீதி மன்றத்தில் ஐந்தாண்டுகளாவது நீதிபதியாகப் பணியாற்றி இருக்கவேண்டும்: அல்லது உயர்நீதிமன்றத்தில் 10 ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றியவராக இருக்க வேண்டும்; அல்லது ஒரு தலைசிறந்த வழக்கறிஞர் என்ற பெயரடைந்திருக்க வேண்டும். மாநிலங்களின் நீதிமன்றங்கள் இயற்றும் சட்டங்களை மறு பரிசீலனை செய்யவும், நிராகரிக்கவும் தலைமை நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

ஆளுநர் (Governor): ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஓர் ஆளுநர் இருப்பார். இவரைக் குடியரசுத் தலைவர் நியமிக்கின்றார். இவரது பதவிக்காலம் ஐந்நாண்டுகள். 35 வயது நிரம்பியவராகவும் மத்திய, மாநில அரசுகளில் உத்தியோகம் வகிக்காதவராகவும் இந்தியக் குடிமகனாகவும் இருக்கவேண்டும். முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஓர் அமைச்சரவை ஒவ்வொரு மாநிலத்திலும் உண்டு. இச் சபை ஆளுநருக்கு ஆலோசனை கூறி உதவி புரியும். முதலமைச்சரை ஆளுநர் நியமிப்பார். முதலமைச்சரின் ஆலோசனையின்பேரில் ஏனைய அமைச்சர்களை ஆளுநர் நியமிப்பார். ஆளுநரைத் தலைவராகக் கொண்ட சட்டசபை ஒன்று ஒவ்வொரு மாநிலத்திலும் இயங்கி வருகிறது.

சட்டசபைக் கூட்டங்கள் நடைபெறுதபோது ஆளுநருக்குச் சட்டங்களைப் பிறப்பிக்க அதிகாரம் உண்டு. பொதுப்பணிக் குழு அங்கத்தினர்கள், அரசாங்க சட்ட ஆலோசகர் ஆகியவர்களை நியமிக்க அதிகாரம் உண்டு. மாநில நிர்வாகம் அமைச்சர்களின் பொறுப்பில் அமைக்கப்பட்டுள்ளது. குற்றத் தண்டனைகளைக் குறைக்கவும் குற்றவாளிகளை மன்னிக்கவும் ஆளுநருக்கு அதிகாரம் உண்டு.

சட்டசபை (The Legislature): மாநிலச் சட்டசபையில் ஆளுநர் ஒருவர் இருப்பார். ஒன்று, அல்லது இரு அவைகள் இருக்கும். இவை மேல்சபை (Legislative Council), கீழ்ச்சபை (Legislative Assembly) என்று வழங்கப்படும். 60-க்குக் குறையாமலும்

500-க்கு மேற்படாமலும் இதில் அங்கத்தினர்கள் இருப்பர். கீழ்ச் சபையில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறைந்த எண்ணிக்கையுள்ள அங்கத்தினர்களே மேல் சபையில் அங்கம் வகிப்பர். இவ்வெண்ணிக்கை 40-க்குக் குறையக்கூடாது.

கீழ்ச்சபை அங்கத்தினர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நகராட்சி மன்றங்கள், மாவட்டக் குழுக்கள், பட்டதாரிகள், ஆசிரியர் கழகங்கள் போன்றவையாலும், ஆளுநராலும் மேல்சபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அங்கத்தினராவதற்கு மேல்சபைக்கு 30 வயதும், கீழ்ச் சபைக்கு 25 வயதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கீழ்ச்சபையின் காலவரையறை ஐந்து ஆண்டுகள். மேல்சபை கலைக்கப்படுவதில்லை. ஆனால், மேல்சபையில் மூன்றில் ஒரு பகுதியினர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை விலகிக்கொள்கின்றனர், பண மசோதாக்கள் கீழ்ச்சபையிலேயே கொண்டுவரப்படவேண்டும்.

நீதித் துறை (Judiciary): சிவில், கிரிமினல் குற்றங்களை விசாரிப்பதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் பலவித நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் மிக உயர்ந்தது உயர்நீதிமன்றமாகும் (High Court). உயர்நீதிமன்றத்தில் ஒரு தலைமை நீதிபதியும் வேறு பல நீதிபதிகளும் இருப்பர். இந் நீதிபதிகள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் 62 வயதுவரை பணியாற்றி வருவர். உயர்நீதிமன்றத்தில் நேர்முக வழக்குகளும், அப்பீல் வழக்குகளும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

3. ஜவகர்லால் நேரு (1889–1964) (Jawaharlal Nehru)

உலக விவகாரங்களில் இந்தியாவின் பங்கு

ஜவகர்லால் நேரு அலகாபாத் நகரில் 1889ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் நாள் தந்தை மோதிலால் நேருவுக்கும், தாய் சொரூபராணிக்கும் மகனாய்ப் பிறந்தார். புகழ்பெற்ற வழக்கறிஞரான மோதிலால் நேரு, தமது ஒரே மகனான ஜவகர்லால் நேருவைப் பல வசதிகளுடன் வளர்த்து வந்தார். வில்லியம் புருக் என்ற ஆங்கிலேயர் ஒருவர், நேருவுக்குத் தனி ஆசிரியராக இருந்து வீட்டில் கல்வி பயிற்றுவித்து வந்தார். இதற்குப் பின் நேரு இங்கிலாந்து சென்று புகழ்பெற்ற ஹேரோ பள்ளியிலும், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் பயின்று விஞ்ஞானத்திலும், சட்டத்திலும் பட்டங்கள் பெற்று, 1912-ல் இந்தியா திரும்பினார்.

சுமார் ஏழு ஆண்டுகள் வரை நேரு இங்கிலாந்தில் தங்கி இருந்து கல்வி பயின்றார். இவர் அங்கு இருக்கும்போதே விடுதலை இயக்கத்தில் தனி ஆர்வம் காட்டி வந்தார். விபின் சந்திரபால், லாலா லஜபதிராய், கோபாலகிருஷ்ண கோகலே போன்ற இந்தியத் தலைவர்களின் தேசீய உணர்வூட்டும் சொற்பொழிவுகள் நேருவைக் கவர்ந்தன.

தாயகம் திரும்பிய தம் மகன், தம்முடன் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபடுவார் என்று மோதிலால் நேரு எதிர்பார்த்தார். ஆனால், நேருவின் நாட்டம் இத் தொழிலில் செல்லாமல் தாய் நாட்டுப் பணியில் சென்றது. வழக்கறிஞர் தொழிலில் பெரும் பொருளீட்டி வந்த தந்தை மோதிலால் நேருவைத் தாய்நாட்டுப் பற்றுக்கொள்ளச் செய்து. நாட்டின் விடுதலை இயக்கத்தில் ஈடுபடச் செய்த பெருமை ஜவகர்லாலைச் சாரும். காந்தியடிகளின் தொடர்பால் இந்திய மக்கள் அந்நியர் ஆட்சியின்கீழ்ப்படும் துயரைக்கண்டு, நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட நேரு தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். மக்கள் துன்பம் துடைக்கும் துறையில் தமது இறுதிமூச்சுவரை பாடுபட்டு இந்திய மக்களின் வாழ்வில் ஒரு புதிய ஒளியை இவர் ஏற்றிவிட்டுச் சென்றார். அகில உலகத்திலும் மக்கள் நலங்கருதி நேருவைப் போன்று உழைத்த உத்தமரைக் காண்பதரிது. உலகச் சமாதானத்தின்பொருட்டு வழங்கப்படும் நோபிள் பரிசு நேருவுக்குக் கிடைக்காதது ஒரு பெரும் குறையேயாகும்.

அன்னிபெசன்ட் அம்மையார், லோகமான்ய பால கங்காதர திலகர் ஆகிய இருவரும் ஆரம்பித்த உள்நாட்டுச் சுயாட்சி இயக்கத்தில் (Home Rule Movement) நேரு சேர்ந்து உழைத்து வந்தார். தொடக்கத்தில் தம் தந்தையாரைப் போலவே இவரும் மிதவாதியாக இருந்தார். 1915ஆம் ஆண்டு காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பிய பின், நேருவுக்கு அன்னாரது தொடர்பு கிட்டியது. அப்பொழுது நேருவுக்கு வயது 26. கமலா அம்மையாரைத் திருமணம் செய்திருந்தார். இவர்கள் இருவருக்கும் இந்திரா பிரியதர்சனி என்ற மகள் 1917ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பிறந்தார். கமலா நேரு நோய்வாய்ப்பட்டார். உயர்தர மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டும் குணம் பெறாது 1936ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து நாட்டில் உயிர் நீத்தார்.

'இந்தியாவைக் கண்டறிதல்' (Discovery of India), சுய சரிதை (Auto-biography) என்னும் நூல்களில் தமது வாழ்வைத்

திசை திருப்பியவர்கள் மூவர் எனக் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் முறையே மோதிலால் நேரு, ரவீந்திரநாத் தாகூர், மகாத்மா காந்தியாவர். காந்தியடிகளின் உண்மை வாரிசு என்றே நேருவைக் கூறலாம். தமது மகனைவிடக் காந்தியடிகள் நேருவிடம் நம்பிக்கை வைத்து அன்பு பாராட்டி வந்தார். மோதிலால் நேருவும் இத்தகைய அன்புப் பிணைப்பின் தன்மையை உணர்ந்திருந்தார். மோதிலால் நேருவுக்கும், ஜவகர்லால் நேருவுக்கும் அரசியல் சம்பந்தப்பட்ட கருத்து வேற்றுமைகள் ஏற்படும்போது இருவரும் காந்தியடிகளின் தீர்ப்பை நாடுவதுண்டு. அரசியலில் தமது வலது கைபோன்றவர் ஜவகர் என்று காந்தியடிகள் அடிக்கடி கூறுவதுண்டு.

ஜவகர், விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டபோது அவருடைய குடும்பத்தினர் அனைவரும் அதில் சேர்ந்து பல தியாகங்களைச் செய்துள்ளனர். மோதிலால் நேரு, தாய் நாட்டு விடுதலைப் பணியில் ஈடுபட்டுப் பல தியாகங்கள் செய்துள்ளார். இவர் உடல் நலங்குன்றி 1932-ல் இறந்தார். நேருவின் தங்கைகள் விஜய லட்சுமியும், கிருஷ்ணாவும், மகள் இந்திரா பிரியதர்சினியும் தேசத் தொண்டில் ஈடுபட்டுச் சிறை சென்றனர். காந்தியடிகள் தொடங்கிய எல்லாச் சத்தியாக்கிரகப் போராட்டங்களிலும் ஜவகர் முன்னணியில் நின்று கலந்துகொண்டார். இவர் மொத்தம் ஒன்பது முறை சிறை சென்றுள்ளார். ஆங்கில அரசு, நேருவைத் தங்கள் முதல் எதிரியாகவும், முக்கிய எதிரியாகவும் கருதி வந்தது. ஜவகர் சிறையில் இல்லாத காலங்களில் காங்கிரஸ் செயலாளராகவும், இருமுறை அதன் தலைவராகவும், செயற்குழு உறுப்பினராகவும் இடைவிடாது பணியாற்றி வந்துள்ளார். அலகாபாத் நகராட்சித் தலைவராகவும் இருந்திருக்கின்றார்.

காங்கிரஸ் இயக்கத்தில் நேரு சேர்ந்தபின், அதன் நோக்கிலும் போக்கிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. இவர் சுதந்திர இயக்கத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தார். 1929-ல் தமது தந்தையின் தலைமையில் இயங்கி வந்த காங்கிரசின் பொறுப்பை நேரு ஏற்றுக்கொண்டார். அதே ஆண்டில் லாகூரில் நடந்த காங்கிரஸ் மகாநாட்டில் இந்தியர்களின் நோக்கம், பூரண சுயாட்சியே தவிர, குடியேற்ற நாட்டு அந்தஸ்து (Dominion Status) அன்று என்று முழக்கமிட்டார். இந்தியத் தேசிய இயக்கத்தின் முடிசூடா மன்னராக விளங்கிய ஜவகர்லால் நேருவுக்கும் காந்தியடிகளுக்கும் அவ்வப்போது கருத்து வேற்றுமை ஏற்படத்தான் செய்தது. ஆனால், அது விரைவில் மறைந்துவிடும். 'ஜவகர் எனது வாரிசு; நான் மறைந்த பின், எனது பணிகளை நேரு

தொடர்வார்' என்று நேருவைப்பற்றிக் காந்தியடிகள் கூறுவதுண்டு.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பே, நேரு இந்திய மக்களுடைய மனத்தைக் கவர்ந்திருந்தார், நாடு முழுவதும் பயணம் செய்து நாட்டு மக்களின் தன்மைகளை நன்கு அறிந்திருந்தார். நேருவை இளமையின் பிரதிபலிப்பு என்று இந்திய மக்கள் மாத்திரமன்றி உலக மக்களும் போற்றி வந்தனர். மக்களின் பெரு மதிப்பிற்கும் நம்பிக்கைக்கும் உகந்தவராக வாழ்ந்தார். எனவே, இந்தியா சுதந்திரம் பெற்றபின், இவரே நாட்டின் பெரும் பொறுப்பை ஏற்றுத் தாம் இறக்கும்வரை நாட்டின் பிரதமராகப் பணியாற்றி வந்தார். பிறர் நலங்கருதி உழைக்கும் உத்தமராகவும் தியாகச் சீலராகவும் வாழ்ந்து வந்தார். சமூக, பொருளாதாரத் துறைகளில் இந்தியா முன்னேறவேண்டுமென்று நாள் ஒன்றுக்குப் பதினெட்டு மணி நேரம் உழைத்து வந்தார். எல்லாரும் எல்லாமும் பெற்று வாழ வேண்டுமென்று விரும்பினார். நேருவின் உழைப்பின் பயனாக இந்தியா பல துறைகளில் இன்று முன்னேற்றம் கண்டுள்ளது.

1947ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 14—15ஆம் நாள்களுக்கு இடையில் நடு இரவு 12 மணியளவில் இந்தியா சுதந்திரம் பெற்றது. 15ஆம் நாள் அன்று காலை நேரு சுதந்திர இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்றார். அன்றிலிருந்து தொடர்ந்து 17 ஆண்டுகள்வரை 'என் கடன் பணி செய்வதே' என்ற பண்பிற்கேற்ப மக்கள் முன்னேற்றங் கருதி இரவு பகலாக உழைத்து வந்தார். நாடு சுதந்திரம் பெற்றபின் சுதேச அரசுகளின் பிரச்சினை எழுந்தது. இப் பிரச்சினைகளை உதவிப் பிரதமராக இருந்த சர்தார் வல்லபாய் படேல் வெற்றிகரமாக நிறைவேற்றி ஐக்கிய இந்தியாவை உருவாக்கினார். இதையொட்டி அகதிகள் பிரச்சினை ஏற்பட்டது. இடம்விட்டுப் பெயர்ந்துவந்த மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் கடமை நாட்டின் பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது. இதை நேருவும், படேலும் ஒருங்கிணைந்து சமாளித்தனர், பாக்கிஸ்தான் பிரிந்து சென்றதால் கணிசமான நிலப்பரப்பை இந்தியா இழந்தபோதிலும், சுதேச அரசுகள் இந்தியாவுடன் இணைந்ததால் பிரிவினையால் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட முடிந்தது.

பிரிவினையால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும் முன்பு, நாடு பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் நாள் டெல்லியிலுள்ள பிர்லா மாளிகையிலிருந்து மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்திற்குக் காந்தியடிகள் வந்துகொண்டிருக்கும்போது நாதுராம் கோட்சே என்ற வாலிபன் அவரைத்

துப்பாக்கியால் சுட்டுக் கொன்முன். நேருவுக்கு இந் நிகழ்ச்சி பெரும் வருத்தத்தைக் கொடுத்தது. 'நமது வாழ்வில் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒளி மறைந்து எங்கும் இருள் சூழ்ந்து கொண்டது. நமது அன்புக்குரிய தலைவர், நாட்டுத் தந்தை மறைந்து விட்டார்' என்று காந்தியடிகள் இறந்த அன்று நேரு கண்ணீர்விட்டுக் கதறினர்.

திட்டமிட்டுச் செயல்பட்டு நாட்டின் வளமையைப் பெருக்க வேண்டுமென்று ஜவகர்லால் நேரு எண்ணினர். எனவே, 1950ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் திட்டக்குழு (Planning Commission) ஒன்றை நிறுவினர். இக் குழுவிற்கு அவரே தலைவராக இருந்து வந்தார். நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களும் மூன்று ஓராண்டுத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் பல ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. இத் திட்டக் காலத்தில் அணைகள், நீர்ப்பாசனக் கால்வாய்கள், மின் உற்பத்தி நிலையங்கள், எண்ணெய் சுத்திகரிக்கும் சாலைகள் போன்றவை ஏற்படுத்தப்பட்டன. இவற்றல் இந்தியாவின் பொருளாதார நிலை மேம்பாடு அடைந்துள்ளது. நேருவின் திட்டங்களால் இந்தியாவின் சிறு தொழில்களும், குடிசைத்|தொழில்களும் ஆக்கம் பெற்றுள்ளன. அவரது திட்டங்கள் அனைத்தும் அவருக்குப் பின் வந்த பிரதமர்களான லால்பகதூர் சாஸ்திரியும், இந்திரா காந்தி அம்மையாரும் செயல்படுத்தியுள்ளனர்.

சுதந்திரத்திற்குப்பின் இந்தியாவில் மக்களாட்சி மலரச் செய்ததின் பயனுக, இன்று இந்தியா உலகிலேயே பெரிய ஜனநாயக நாடாக விளங்குகின்றது. இந்தியாவின் பொருளாதார முன்னேற்றங் கருதி இங்கிலாந்தின் தலைமையில் இயங்கிவரும் பொது நல நாடுகளின் (Common-wealth of Nations) குழுவில் உறுப்பு நாடாக இந்தியா விளங்க வகைசெய்தார். வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை கூட்டுச் சேராக் கொள்கையைப் பின்பற்றி வந்தார். எல்லா நாடுகளுடனும் நட்புறவு கொண்டிருந்தார். இதனல் பல உலகப் பிரச்சினைகளுக்கு நேருவின் ஆலோசனைகளை உலகத் தலைவர்கள் நாடியுள்ளனர். தமது வாழ்நாளில் நேரு செல்லாத நாடு இல்லை என்றே கூறலாம். பெருவாரியான உலக நாடுகளில் இந்தியாவின் நல்லெண்ணத் தூதராலயம் அமைக்கப்பட்டு இருக்கின்றன. பஞ்சசீலக் கொள்கையைத் தமது அயல் நாட்டுக் கொள்கையாக அமைத்துக் கொண்டிருந்தார்.

பஞ்சசீலக் கொள்கையை ஏற்றுக்கொண்ட நாடுகளில் சீனுவும் ஒன்று. இருப்பினும், 1962ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சீன

இந்திய எல்லைகளுக்குள் புகுந்து வன்முறையில் பல ஆயிரக்கணக்கான மைல் பரப்புள்ள நிலத்தை ஆக்ரமித்துக் கொண்டது. இந் நிகழ்ச்சி நேருவை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சீனர்களின் தாக்குதலை இந்திய மக்களின் ஏகோபித்த ஒத்துழைப்பாலும், அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் உதவியினாலும் நேரு சமாளித்தார். நாள்தோறும் பாக்கிஸ்தான் இந்திய எல்லைக்குள் ஊடுருவல் நடத்தி வந்தது. இருப்பினும் தமது பஞ்சசீலக் கொள்கையிலிருந்து சிறிதும் பிறழாமல் பின்பற்றி வந்தார். இதனால் ஐ. நா. சபை நேருவின் கொள்கைகளுக்குப் பெரும் மதிப்புக் கொடுத்து வந்தது. ஐ. நா. சபையின் குறைகளையும், பாரபட்சப் போக்கையும் அவர் நன்கு அறிந்திருந்தார். இருப்பினும் ஐ. நா. சபையின் கொள்கைகளுக்கும், அதன் செயல் திட்டங்களுக்கும் தமது முழு ஆதரவை அளித்து வந்தார். கொரியா, இந்தோசீனா, சைப்ரஸ், எகிப்து, காங்கோ போன்ற நாடுகளில் போர் ஏற்பட்டபோது அங்கு அமைதியை நிலை நாட்ட இந்திய ராணுவத்தை அனுப்பி, ஐ. நா. சபையின் அமைதிப் பணிக்குத் தமது ஒத்துழைப்பை நல்கினார்.

ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் காங்கிரஸ் மகாநாட்டில் தவறாமல் கலந்து கொண்டு தமது முதிர்ந்த அனுபவத்தின் வாயிலாக மக்களுக்கு நல்வழி புகட்டி வந்தார். அவர் செல்லும் இடங்கள் அனைத்திலும் லட்சக்கணக்கில் மக்கள் குழுமி இருந்து அவரைக் கண்டு மகிழ்ந்தனர். இந்தியா, மற்றும் உலக விவகாரங்கள் பலவற்றில் காந்தியடிகளின் வழிகளைப் பின்பற்றி வந்தார். குழந்தைகளிடம் அதிக அன்பு பாராட்டி வந்தார். எனவேதான், அவரது பிறந்த நாளாகிய நவம்பர் மாதம் 14ஆம் நாளைக் குழந்தைகள் தினம் என்று நாடு முழுவதும் கொண்டாடுகின்றனர்.

1964ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் நாள் டெல்லியிலுள்ள விக்யான் பவனில் பத்திரிக்கையாளருக்குப் பேட்டியளிக்கும்போது நேருவுக்குப் பின் யார் என்ற கேள்வியை எழுப்பினர். அதற்கு என் வாழ்நாள் அவ்வளவு விரைவில் முடியப் போவதில்லை என்று வேடிக்கையாகக் கூறினார். ஆனால் எதிர்பாராத வகையில் இச் சம்பவம் நடந்த 5 நாட்களுக்குப்பின், 1964ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் நாள் மாரடைப்பால் உயிர் நீத்தார். நேருவின் மரணச்செய்தி கேட்டு உலகமே துக்கக் கடலில் ஆழ்ந்தது. பெருவாரியான உலக நாடுகள் தங்கள் நாட்டுக்கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிட்டு நேருவுக்குத் தங்களின் இறுதி மரியாதையை செலுத்திக் கொண்டன. மாந்தருள் மாணிக்கம், ஆசிய ஜோதி என்று பலபடப் பெருமையாகவும் அன்புடனும் அழைக்கப்பட்ட வெற்றித் திருமகன் நம்மிடமில்லை.

நேருவைப் போன்று, ஐ. நா. சபையின் உரிமைச் சாசன விதிகளில் வேறு எத்தலைவரும் நம்பிக்கை வைத்ததில்லை. அணு யுகத்தில் போர் ஏற்பட்டால், உலகமும் உலக நாகரிகமும் அழிந்து விடும் என்பதை நன்கு தெரிந்திருந்தார். உலக வல்லரசுகளுக்கிடையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளை அகற்றி, அதன்மூலம் உலகப்போர் நிகழ்வதைத் தடுத்திருக்கின்றார். நேருவைப் போன்று வேறு எந்த இந்தியத் தலைவராலும் இத்தனை நூல்கள் எழுதப்படவில்லை. இவர் எழுதிய நூல்கள் அனைத்தும் சிறைச்சாலையிலேயே எழுதப்பட்டவை. இவை நேருவின் உள்ளத்தையும் சீரிய பண்புகளையும் தெள்ளத் தெளிவாகப் பிரதி பலிக்கின்றன. நேரு இறப்பதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பு உயில் (will) ஒன்று எழுதியுள்ளார். இஃது உலக இலக்கியங்களின் வரிசையில் வைத்து எண்ணத் தகுந்த தகுதி படைத்திருக்கின்றது. நேரு ஒரு சிறந்த எழுத்தாளர். சிறந்த பேச்சாளரும் தேசபக்தரு மாவார். நாட்டுப்பற்றின் காரணமாக 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளார். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தீர்க்கதரிசி நேரு என்றால் அது முற்றிலும் உண்மையே.

விடுதலைப் போரில் நேருவின் பங்கு

நேரு இங்கிலாந்தில் ஏழு ஆண்டுகள் படித்துப் பட்டம் பெற்ற பின் தாயகம் திரும்பினார். காந்தியடிகளின் செல்வாக்கால் தேசிய இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். தனிப்பட்ட வாழ்க்கையையும், குடும்ப வாழ்வையும் புறக்கணித்து நாட்டின் நலனிற்காகவே நேரு வாழ்ந்து வந்தாரெனக் கூறலாம். 1920-ல் உத்தரப் பிரதேசக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன்பின் மத்திய செயற்குழுவின் அங்கத்தினராக்கப்பட்டார். நேரு சமரசக் கொள்கையில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். 1929ஆம் ஆண்டில் ஏற்பட்ட காங்கிரஸ் மகாநாட்டின் தலைவருக்கு வலுத்தபோட்டி இருந்தும் காந்தியடிகள் நேருவையே தலைவராகத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்தார். இம் மகாநாடு லாகூரில் நடைபெற்றது. இங்குத்தான் இந்தியாவின் குறிக்கோள் 'பூரண சுயராஜ்யம்' என்று நேரு முழங்கினார். நேருவைச் சந்தேகிப்பதற்கு ஒன்றும் இல்லை என்றும், அவர் நேர்மையாளர் என்றும், நாடு அவரது நிர்வாகத்தில் நலனடையும் என்றும் காந்தியடிகள் கூறியுள்ளார். வல்லபாய் படேல், ராஜேந்திர பிரசாத் ஆகிய தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தும் 1939ஆம் ஆண்டு காங்கிரஸ் மகாநாட்டின் தலைவராக நேரு தேர்ந்தெடுக்கப்பட்டார். பொதுமக்களைக் கவரும் பல பண்புகள் நேருவிடம் அமைந்திருந்ததே அவரது அரசியல் செல்வாக்கிற்குக் காரணம்

என்று காந்தியடிகளே கூறியுள்ளார். 1946-ல் இந்தியாவில் இடைக்கால அரசு ஏற்பட்டபோது அரசின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளும்படி நேருவைக் காந்தியடிகள் வேண்டிக்கொண்டார். அன்றிலிருந்து 1964 மே மாதம் 27ஆம் நாள் வரை, நேரு இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றி வந்தார்.



படம் 8.

பிரதம அமைச்சர் : நேரு இந்தியாவின் பிரதம அமைச்சரான பின், அதன் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை அவரே உருவாக்கி அவற்றைச் சீரிய முறையில் செயலாற்றி வந்தார். இந்தியாவின் விஞ்ஞான வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தார். இவர் அணுசக்திக் குழுவிற்குத் தலைவராக இருந்து போற்றத்தக்க வகையில் அரும்பணி ஆற்றியுள்ளார். அதன்

பயனுக அணு ஆராய்ச்சியில் முதன்மை பெற்ற நாடுகளுடன் ஒப்பிடும் வகையில் இந்தியா அத் துறையில் முன்னேறியுள்ளது. அணுசக்தியை அமைதிக்காலப் பணிக்கே பயன்படுத்தவேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கெனத் திட்டக் குழுவை ஏற்படுத்தி, பல ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற வழிவகை செய்தார். இந்தியாவில் சமதர்ம சமுதாயம் ஏற்பட வேண்டுமெனின், திட்டம் இட்டே செயல்பட வேண்டுமென வற்புறுத்தி வந்தார். இந்தியாவிற்கு முதலாளித்துவப் பொருளாதார நிலை நடைமுறைக்கு ஏற்றதன்று எனக் கருதினுர். இதற்கு மாருக, இங்குச் சம உடைமைப் பாணியில் சமூகம் அமைய வேண்டுமெனக் கருதினுர். இந்தியாவில் குடியரசு முறையை வலுப் படுத்தினுர். இவர் சமூக, சமய வெறியர்களை வெறுத்தார்.

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை இனவேற்றுமை, காலனி ஆதிக்கம் ஆகியவற்றுக்கு எதிராக நேரு போராடி வந்தார். பஞ்சசீலக் கொள்கையை உருவாக்கி, இதை மற்ற நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் வகையில் பாடுபட்டு வந்தார். நாடுகள் ஒன்றை ஒன்று மதித்து நடந்துகொண்டு, தங்களுக்குள் நட்புறவு கொண்டாடி வரவேண்டுமென்று தமது அயல்நாட்டுப் பயணங்களில் எடுத்துரைத்து வந்தார்.

கூட்டுச் சேராக் கொள்கைக்கு இவரே தந்தை என்று கூறலாம். இக் கொள்கையை 70 நாடுகளுக்கு மேலாக ஏற்றுக்கொண்டு அதன் வழி முறைகளைச் செயல்படுத்தி வருகின்றன. ஐக்கிய நாடுகளின் சபையின் அமைதிகாக்கும் பணிக்குத் தமது முழு ஆதரவையும் அளித்து வந்தார். கொரியா, இந்தோசீனு, மத்திய ஆசியா, காங்கோ போன்ற நாடுகளில் ஏற்பட்ட அரசியல் சிக்கல்களைத் தீர்க்கத் தன்னுலான உதவிகளை அளித்து வந்தார். ஆப்பிரிக்கா, ஆசியா, லத்தீன், அமெரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள பின்தங்கிய நாடுகள் சுதந்திரத்துடன் வாழ ஆதரவு அளித்து வந்தார்.

ஆட்சியாளர் : நேரு ஒரு திறமையான நிர்வாகியும் ஆட்சியாளருமாவார். அரசியல், சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு லகுவில் தீர்வுகாணும் திறம்படைத்திருந்தார். உள்நாட்டில் அமைதியை நிலவச் செய்தார்.

சிந்தனையாளர் : 'உலக வரலாற்றின் கண்ணேட்டம்', 'இந்தியாவின் கண்டுபிடிப்பு', 'சுய சரிதை' ஆகிய நூல்களை

நேரு எழுதியுள்ளார். இவை உலகப்புகழ் பெற்றவை. இவை அனைத்தும் நேரு சிறைச்சாலைகளில் இருக்கும்போது எழுதப்பட்டவை. இருப்பினும் வரலாற்றுப் போக்கு, பொருளடக்கம், காலக்கட்டங்கள் போன்ற ஏனைய விஷயங்களில் எவ்விதச் சந்தேகத்திற்கும் இடமின்றி மிகத்தெளிவாக எழுதப்பட்டுள்ளன. இம் மூன்று நூல்களும் நேருவின் அறிவின் திறத்திற்கும் ஆழ்ந்த நினைவாற்றலுக்கும் எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளன. அகில உலக சிந்தனையாளர்கள் வரிசையில் வைத்துப் போற்றும் அளவிற்கு அவரது எழுத்தோட்டமும் கருத்தும் அமைந்துள்ளன. இந்திய மக்களின் வரலாற்றையும் கலாச்சாரம், பண்பாட்டு முறைகளைப்பற்றியும் 'இந்தியாவின் கண்டுபிடிப்பு' (Discovery of India) என்ற தமது நூலில் மிகத் தெளிவாக எழுதியுள்ளார். இவரது 'சுயசரிதை' என்னும் நூல் எளிய, இனிய, தெளிவான உரைநடைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

உலகத் தலைவர்கள் என்ற வரிசையில் நேரு இடம் பெறத் தகுதி படைத்தவர். நாட்டின் நிர்வாகி, எழுத்தாளர், பேச்சாளர் போன்ற துறைகளில் ஒரு மேதையாகவே நேரு திகழ்ந்தார். இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடாக விளங்க ஆவன செய்தார். உலக நாடுகளிடையே இந்தியாவின் புகழை ஓங்கச் செய்தார். இவரது பாராளுமன்றச் சொற்பொழிவுகள் கருத்துச் செறிவு கொண்டவை. காந்தியடிகளின் வாரிசாகவும், ஆசியாவின் ஜோதியாகவும், உலகத்தின் ஒளியாகவும் திகழ்ந்தார் என்றால் அஃது உண்மையே.

உலக விவகாரங்களில் இந்தியாவின் பணி (India's Role in World Affairs)

சுதந்திர இந்தியா தனித்து வாழாது. தன்னால் இயன்ற பணிகளை உலக மக்களின் நலன் கருதி இடையறாது பல துறைகளில் நிறைவேற்றி வருகிறது. இப் பணிகளின் மூலம் ஏற்பட்ட நன்மை தீமைகளைப் பொருட்படுத்தாது 'என் கடமை பணி செய்து கிடப்பதே' என்ற முதுமொழிக்கிணங்க விருப்பு, வெறுப்பு இன்றி செம்மையான வழியின்மூலம் நற்பணிகள் பல ஆற்றி வருகின்றது. இவ் உலகில் மனித இனம் அழிந்து போகாதவாறு கூட்டுச் சேரா முறையில் தனது அயரா உழைப்பை நல்கி வருகிறது. உலக அரங்கில் இத்தகைய பணியை மேற்கொள்வதற்குத் தேவையான பல தகுதிகளை இந்தியா பெற்றிருக்கின்றது. உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியை இந்தியா பெற்றுள்ளது. மக்களாட்சி (Democracy) நடைபெறும் நாடுகளில் இந்தியா

முதலிடம் வகிக்கின்றது. ஏராளமான கனி வளமும் பொருள் வளமும் பெற்றுள்ளது. நீண்ட நெடுங்காலந்தொட்டே இந்தியா பல்வேறு நாகரிகம், கலாச்சாரம் போன்றவை கலந்த நாடாக விளங்கி வந்துள்ளது. எனவேதான், இந்தியர்களிடம் சகிப்புத் தன்மையும் எதிலும் தீவிரமற்ற பண்பும், எதிரிகளின் கருத்திற்கு மதிப்பு அளிக்கும் பெருந்தன்மையும் அமைந்துள்ளன. இனம், மொழி கலை, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றால் பாகுபட்டு விளங்கும் உலக மக்களிடையே மற்றவர்களின் கருத்திற்கு மதிப்புக்கொடாத காரணங்களாலேயே பலவிதச் சச்சரவுகளும் போர்களும் ஏற்பட்டு வருகின்றன. தொன்றுதொட்டு வந்த சகிப்புத் தன்மையின் பிரதிபலிப்பாக மகாத்மா காந்தி, நேரு, வல்லபாய் பட்டேல் போன்ற இந்தியப் பெருந் தலைவர்கள் தோன்றி இருந்தனர். பகைமையைச் சமாதான முறையில் நீக்கலாமே தவிர, வன்முறையில் அகற்ற முடியாது என்பதற்கு 20ஆம் நூற்றாண்டில் தோன்றிய இரு பெரும் போர்களும் எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளன. காந்தீயக் கொள்கைகளில் அசையா நம்பிக்கை கொண்ட பண்டித ஜவகர்லால் நேரு, உலக அரசியல் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் காந்தீய முறைகளையே பின்பற்றி வந்தார். இதன் காரணமாக, பிற நாடுகளில் பெரும் சிக்கல்கள் சில ஏற்பட்டபோது, அவற்றை அமைதியான முறையில் தீர்த்து வைத்து, மூன்றாவது உலகப் போரைத் தடுத்த பெருமை நேருவுக்கு உண்டு. இத்தகைய பெரு மதிப்பிற்குரிய நேருஜி, நம் இந்திய நாட்டின் பிரதமராகப் பதினேழு ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றி, இந்தியாவின் செல்வாக்கை உலகில் உயர்த்தினார்.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை

சுதந்திர இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை திடீரென்று உருவாக்கப்பட்டதன்று. இந்தியாவின் நீண்டகாலப் பண்பாட்டிலிருந்தும், சமீப கால வரலாற்று நிகழ்ச்சிகளிலிருந்தும், சுதந்திரப் போராட்டக் காலங்களிலும், வெவ்வேறு கட்டங்களில் தோற்றுவிக்கப்பட்ட கொள்கைகளின்மூலம் உருவாக்கப்பட்டது. இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை, சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து அதிக மாற்றம் எதுவும் இன்றி ஒரே சீராக இருந்து வருகிறது. இக் கொள்கை அகில உலக சமாதானத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. 1948ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 8ஆம் நாள் இந்தியப் பாராளுமன்றத்தில் பேசும்போது, 'நாங்கள் உலக நாடுகள் அனைத்துடனும் சமாதானமாக வாழ விரும்புகின்றோம். அகில உலக மக்களிடம் அமைதியுடனும்,

நட்பு மனப்பான்மையுடனும் அணுகுகின்றோம். எனவே, ஒரு சாராருடன் கூட்டுச் சேர்ந்து மற்றொரு சாராரை ஏன் பகைக்க வேண்டும்? அதனால் எங்களுக்கு ஏன் பாதகம் நேரவேண்டும்' என்று பண்டித நேரு குறிப்பிட்டார்.

உலக மக்களிடம் பகையை ஒழித்து நட்புறவை வலுப்படுத்துவதும், பாதுகாப்பு அளிப்பதுமே இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையின் தலையாய நோக்கமாகும். உலகில் காலனி ஆதிக்கத்தை ஒழித்து, மக்களை அப் பிடியிலிருந்து விடுவிப்பது இரண்டாவது நோக்கமாகும். காலனி ஆதிக்கம் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு மாறுபட்டு இருப்பதோடு, அதுவே பல உலகப் பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது என்று இந்தியா கருதுகின்றது. இன வேற்றுமையை அகற்றி, மக்களிடையே இன, நிற, சமயப் பாகுபாடுகள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவது மூன்றாவதாகும். உலகில் எழும் பல்வேறு பிரச்சினைகளுக்குச் சமாதான முறையில் தீர்வு காண்பது நான்காவது நோக்கமாகும். இக் கருத்தைக் குறிப்பிடும்போது வன்முறைகளாலும், போர்களாலும் எப் பிரச்சினைக்கும் தீர்வு கண்டுவிட முடியாது. எத்தகைய சிக்கலான பிரச்சினையாக இருந்தபோதிலும், நட்பு முறையிலும் அமைதியான முறையிலும் அணுகினால் நிச்சயம் நல்ல தீர்வு காண இயலும் என நேரு கூறியுள்ளார். மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதும் ஐக்கிய நாடுகளின் சபையின் நடவடிக்கைகளில் திடமான நம்பிக்கை வைப்பதும் இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு கூறாகும். ஐ. நா. சபையில் பல குறைகள் நிறைந்திருந்தபோதிலும், இந்த நிறுவனம் இல்லையேல் உலகிற்குப் பெருங் கேடு விளையும் எனக் கருதி, அதற்குத் தன்னாலான ஆதரவுகளை அளிக்க இந்தியா உறுதி பூண்டுள்ளது.

கூட்டுச் சேராக் கொள்கை (Non Alignment)

மக்கள் ஒற்றுமை உணர்வு கொண்டு உலக அரசு ஒன்றை உருவாக்க எண்ணி, அதற்கேற்ற நடைமுறைகளைச் சிந்தித்து வருவது உண்மை என்றாலும், இக் குறிக்கோளை அடைய நீண்ட காலம் ஆகும் என்பது கண்கூடு. தற்போதைய நிலையில் பெரும் போர் ஏற்பட்டால், எந்த நாடும் தனித்து இருக்க இயலாது. ஆனால் உலக வல்லரசுகளுடன் கூட்டுச் சேராது நடுநிலை வகித்தால், கொள்கை வேறுபாடுகளால் ஏற்படும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என இந்தியா எண்ணியது. சுதந்திரம், சட்டம், அமைதி ஆகியவற்றுக்கு ஊறு ஏற்பட்டு, ஆக்கிரமிப்பு நேரும் போது நடுநிலைக் கொள்கையை இந்தியா பின்பற்றிக்கொண்டு

இருக்காது எனவும் பண்டித நேரு கூறியுள்ளார். கொரியாவில் கொடுமையான போர் ஏற்பட்டபோது, போர் நிறுத்தம் ஏற்பட ஐ. நா. சபை எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளுக்கு இந்தியா தனது முழு ஆதரவையும் அளித்தது. ஆனால் கொரியாப் போருக்குச் சீனாதான் காரணம் என்று ஐ. நா. பாதுகாப்புச் சபை அறிவித்தபோது, இந்தியா இக் கருத்து உண்மைக்குப் புறம்பானது என்று அதை ஏற்றுக்கொள்ள மறுத்தது. தென்கிழக்கு ஆசியா வின் பாதுகாப்பு நிறுவனத்தில் (SEATO) அங்கம் வகிக்காதது மாத்திரமன்றி, இந்தியா இம் முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்தது. தென் ஆப்பிரிக்காவில் ஐரோப்பியர்கள் கையாண்டு வரும் நிற வெறிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இன்றும் ஐ. நா. சபை மூலமாக ஆவன செய்து வருகின்றது. இவ்வாறு, தான் வகுத்துக் கொண்ட நடுநிலைக் கொள்கை, கூட்டுச் சேராமை போன்ற கொள்கைகளின்படி உலகில் அவ்வப்போது தோன்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு வருகின்றது. நிறவெறி, காலனி ஆதிக்கம் போன்ற வற்றை வன்மையாகக் கண்டித்து வருகிறது.

1954ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் நாள் திபேத் நாட்டில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினை காரணமாக நேருவுக்கும், சீனப் பிரதமர் சூ என்-லாய்க்கும் (Mr. Chou-En-Lai) ஏற்பட்ட சீன-இந்திய உடன்படிக்கையில் இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கை மிகவும் தெளிவாக வெளியிடப்பட்டது. சீனாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கை பஞ்சசீலக் கொள்கையின் (Panch Shila) அடிப்படையில் அமைந்தது.

கூட்டுசேராக் கொள்கை, நடுநிலைக்கொள்கை (Neutrality) ஆகியவை இந்தியாவைப் போன்று வளர்ந்து வரும் நாடுகளுக்குப் பொருந்தாது என்று பல வட்டாரங்களிலிருந்தும் எதிர்ப்புத் தெரிவித்தனர். எல்லா நாடுகளுடனும் நட்புக்கொண்டொழு குதல் நன்மை பயக்காது என்றும், ஆபத்துக் காலங்களில் தனித்துக் கைவிடப்படும் என்றும் சுட்டிக்காட்டினர். ஆனால், இந்தியாவின் கூட்டுசேராக் கொள்கை நாட்டின் மதிப்பையும் செல்வாக்கையும் உயர்த்தியுள்ளது. விருப்பு, வெறுப்பு இன்றி நேர்மையுடன் உலக அரசியலில் நடந்துகொண்ட காரணத்தால், ஆபத்துவந்தபோது எல்லா நாடுகளிலிருந்தும் உதவிபெற முடிந்தது. 1962ஆம் ஆண்டில் சீனா, இந்திய எல்லைகளைத் தாக்கி 12,000 மைல் பரப்பளவுள்ள இடங்களைக் கைப்பற்றிக் கொண்ட போது, உலக வல்லரசுகள் இந்தியாவிற்கு ராணுவத் தளவாடங் களும் பொருளுதவியும் அளித்து உதவி செய்தன. கனடா, படைகளை ஏற்றிச்செல்லும் C-130 என்ற போர்க்குவரத்து ஆகாய

விமானங்களைக் கொடுத்து உதவியது. எதிரிகளின் நடமாட்டங்களை எளிதில் கண்டுபிடிக்கும் ராடார் கருவிகள் பலவற்றை இமயமலைப் பகுதிகளில் நிறுவ அமெரிக்கா உதவியது. ரஷ்யா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளும் இந்திய ராணுவத்திற்குத் தேவையான பொருள்களைக் கொடுத்து உதவி செய்தன. இத்தகைய தாராள உதவிகளைக்கண்ட சீனு, தனது ஆக்கிரமிப்புச் செயலை விடுத்துப் பின்வாங்கியது. இச் சம்பவம் இந்தியாவின் கூட்டுசேராக் கொள்கையால் கிடைத்த பெரும் வெற்றி ஆகும். இதைப்போன்று இந்தியாவின் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் உலகின் பல நாடுகள் பொருளுதவி அளித்து வருகின்றன. எத்தகைய அரசியல் பிரச்சினைகள் உலகில் எங்குத் தோன்றினும், அவற்றுக்குத் தீர்வுகாணும் முயற்சியில் இந்தியாவிற்கு ஓர் இடம் கிடைத்துவருகின்றது. இவை அனைத்தும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி என்றால் அது மிகையாகாது.

இந்தியாவும் ஐ. நா. சபையும்

தனது வெளிநாட்டுக் கொள்கைக்கு இணங்க, ஐ. நா. சபை எடுக்கும் முக்கியத் தீர்மானங்களைப் பரிசீலனை செய்து அவற்றுக்கு ஏற்ப இந்தியா, தனது ஆதரவை அளித்துவருகின்றது. காஷ்மீர் பிரச்சினையை ஐ. நா. விற்கு எடுத்துச்சென்றது. டுனீஸியா (Tunisian) பிரச்சினை ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு வந்தபோது, இப் பிரச்சினைக்கு ஆதரவாக ஆசிய, ஆப்ரிக்க, தென் அமெரிக்க நாடுகளுள் பல, தங்கள் கருத்துகளைத் தெரிவித்தும், ஐ நா. அதை விவாதிக்கக்கூட அனுமதி மறுக்கப்பட்ட சம்பவத்தை நேரு மிகவும் வன்மையாகக் கண்டித்தார். இதைப்போன்று பொது உடைமைக் கொள்கையை மேற்கொண்ட காரணத்தால் சீனுவை நீண்ட நாட்கள்வரை ஐ.நா. சபையில் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளாததைக் கண்டித்துப் பலதடவை இந்தியா வாதாடியுள்ளது. இந்திய நிலப்பகுதியை வன்முறையில் ஆக்கிரமித்துக் கொண்டபோதிலும், உலகிலே அதிக மக்கள்தொகை கொண்ட சீனுவை ஐ. நா.வின் அங்கத்தினராக்காமல் இருப்பது இழுக்கு என்று இந்தியா வலியுறுத்தி வந்தது. இக் கட்டத்தில் 'ஆசிய, ஆப்ரிக்க நாடுகள், ஐ. நா. சபையைப் புறக்கணித்து, அதன்மூலம் மேற்கிந்திய நாடுகளுக்குக் கேடுவிளைவிக்கும் நாள்கள் வெகு தூரம் இல்லை' என்று நேரு தெரிவித்துள்ளார். தற்கால விஞ்ஞானமும் தொழிலும் உலகில் வறுமை, அறியாமை, நோய் ஆகியவற்றைப் போக்கி வளமான வாழ்வு வாழ்வதற்கு ஏற்ற எல்லையற்ற சக்தியைக் கொடுத்திருக்கின்றது. இச் சக்தியைக்

கொண்டு மனித இனம் இதுகாறும் முயன்று உருவாக்கிய நாக ரிகத்தையும், ஏன்! அந்த மனித இனத்தையுமே அழித்துவிடலாம். இந்த ஆபத்து எல்லா மக்களையும் எதிர்நோக்கி இருக்கிறது. இத்தகைய அழிவுச் சக்திகளை ஆக்கப்பணிகளில் பயன்படுத்தி மக்களை வாழவைக்கும் ஸ்தாபனம் உலகிற்கு இன்றியமையாத ஒன்ருகும் என டாக்டர் ராஜேந்திர பிரசாத் (Dr. Rajendra Prasad) ஐ நா. சபையின் முக்கியத்துவம்பற்றிக் கூறியுள்ளார்.

எனவே இந்தியா, ஐ. நா. சபையில் அமைந்துள்ள பொதுச் சபை, பாதுகாப்புச் சபை, அகில உலக நீதிமன்றம், தொழிலாளர் நிறுவனம், பொருளாதாரச் சமூக அமைப்புப் போன்றவற்றிலும் சுகாதாரம் குழந்தைகள் நலம், கல்வி, விஞ்ஞானம், காலச்சாரம் போன்ற அமைப்புகளிலும் தீவிரப் பங்கு கொண்டு அயராது உழைத்து வருகிறது. சுருங்கக்கூறின், ஐ. நா. நிறுவனத்திலும், அதன் கிளைக்கழகங்களிலும், இந்திய உறுப்பினர்கள் பங்கேற்று உலக நட்புறவை வளர்த்து வந்துள்ளனர். 1953ஆம் ஆண்டில் விஜயலட்சுமி பண்டிட் (Mrs. Vijayalakshmi Pandit) ஐ. நா. பொதுப் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐ. நா. நிறுவனத்திற்கு நம் நாட்டின்மீதுள்ள நம்பிக்கைக்கும் உயர்வான எண்ணத்திற்கும் இஃது ஓர் எடுத்துக்காட்டாகும். திரு ஆர்க்காடு லட்சுமணசாமி முதலியார் உலகச் சுகாதார நிறு வனத்தின் தலைவராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்து நம் நாட்டின் பெருமையை உயர்த்தியுள்ளார். அத்துடன் கல்வித் துறையின் நிறுவனத்திலும், தமது முதிர்ந்த அனுபவத்தைக் கொண்டு திரு. லட்சுமணசாமி முதலியார் பணியாற்றியுள்ளார். 1950ஆம் ஆண்டில் திரு B. N. ராவ் என்பவர், பாதுகாப்புச் சபையின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்குப்பின் அவர், தி ஹேக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பணியாற்றினர். 1955ஆம் ஆண்டில் ஜெனிவாவில் நடைபெற்ற அணுசக்தி ஆராய்ச்சி மகாநாட்டிற்கு இந்திய விஞ்ஞானியான டாக்டர் H. J. பாபா (Dr. H. J. Baba) தலைமை வகித்தார். இவ்வாறு ஐ. நாவுக்கும் இந்தியாவுக்கும் பலவகைகளில் தொடர்பு இருந்து வருகின்றது. உலக அமைதிக்காக நம் நாடு ஆற்றிவரும் தொண்டின் காரணமாகக் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம், உலகச் சுகாதார நிறுவனம், உலக உணவு நிறுவனம், விவசாய நிறுவனம் ஆகியவற்றின் கிளை அலுவலகங்கள் இந்தியாவில் நிறுவப்பட்டுள்ளன.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின், ரஷ்ய நாட்டிற்கும், அமெக்காவிற்கும் பல துறைகளில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு,

இரண்டும் பகை நாடுகளாக இருந்து வருகின்றன. ஸ்டாலின், ரஷ்ய நாட்டின் தலைவராக இருந்தபோது, அவருக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் செயலாளர் டீன் அச்சீனுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக ரஷ்யா, ஐ. நா. நிறுவனத்தி லிருந்து விலகத் தீர்மானித்தது. அப்போது பண்டித ஜவகர்லால் நேரு இம் முரண்பாட்டினைத் தவிர்த்து, ஐ. நா.வில் ரஷ்யா தொடர்ந்து அங்கம் வகிக்க வழிவகுத்தார். மேலும் அமெரிக்க, ரஷ்ய வல்லரசுகளின் நட்புறவை வளர்க்கவும் நம் நாடு அரும்பாடு பட்டு வருகிறது. காஷ்மீரப் பிரச்சினையின் காரணமாக அமெரிக்கா, பாக்கிஸ்தானுக்கு ஆதரவாக இருந்து வருவதோடு இந்தியாவிற்கும் பாக்கிஸ்தானுக்கும் போர் ஏற்பட்ட காலங்களில் ஏராளமான போர்க் கருவிகளைக் கொடுத்து உதவியது. அன்றியும் ஐ. நா. சபையில் இந்தியாவிற்கு எதிராகவே பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. இருப்பினும் இப்பகையை மறந்து இந்தியா, அமெரிக்காவிடம் நட்புறவே கொண்டாடி வருகின்றது. காஷ்மீரப் பிரச்சினை தென் ஆப்பிரிக்க இந்தியர் பிரச்சினை முதலியவற்றில் தீர்வு காணும் பொறுப்பினை இந்தியா, ஐ. நா. நிறுவனத்திடம் விட்டு வைத்துள்ளது. ஐ. நா. நிறுவனத்திலும், அதன் கிளைக் கழகங்களிலும், இந்திய உறுப்பினர்கள் பங்கேற்று உலக நட்புறவை வளர்க்க முயன்று வருகின்றனர்.

இந்தியாவும் அமெரிக்காவும்

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் நீண்ட நாட்களாக நட்புறவு இருந்து வருகிறது. ஜனாதிபதி ரூஸ்வெல்ட் என்பவர் இந்தியாவிற்குச் சுதந்திரம் அளிக்கவேண்டுமென்று இங்கிலாந்தை நெடு நாட்களாக வற்புறுத்தி வந்துள்ளார். எனவே, இந்தியா சுதந்திரம் அடைந்த செய்தியை முதன்முதலில் பிரதமர் நேரு அமெரிக்காவிற்கே தெரிவித்தார். ரஷ்யாவிற்கு இரண்டாவது தந்தியை அனுப்பி வைத்தார். இந்தியாவின் வளர்ச்சித் திட்டங் களுக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் அமெரிக்கா ஏராளமான நிதி உதவி அளித்துள்ளது. இந்தியாவில் 1951ஆம் ஆண்டு உணவுப்பஞ்சம் ஏற்பட்டபோது அமெரிக்கா, 190 மில்லியன் டாலர் கொடுத்துதவியது. இத் தொகையைக் கொண்டு நாம் அமெரிக்காவில் கோதுமையை வாங்கிப் பஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டோம். போர்டு தர்ம ஸ்தாபனத்தின்மூலம் இந்தியா ஏராளமான உதவித் தொகையைப் பெற்று வருகிறது. இந்தோ-அமெரிக்கத் தொழில் நுட்பக் கழக ஒத்துழைப்பின்மூலம் இந்தியத் தொழில்களுக்கு உதவித் தொகையும், தொழில் நுட்ப அறிவும் கிடைத்துள்ளன. கிராமப்புற வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கும் அமெரிக்கா பலவகைகளில் உதவியுள்ளது.

அமைதி காக்கும் தொண்டர்கள் என்ற நிறுவனத்தின்மூலம் இந்தியாவிற்கு ஏராளமான நிபுணர்கள் வந்து பணியாற்றி அமெரிக்கா திரும்பியுள்ளனர். பலர் இன்னும் இந்தியாவில் தங்கிப் பணியாற்றி வருகின்றனர். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அமெரிக்கா பெருவாரியான பண உதவி அளித்துள்ளது.

இந்தியா இவ்வளவு உதவிகளைப் பெற்ற பின்பும், அமெரிக்கக் கொள்கைகள் பலவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. அதன் காரணமாக இந்திய அமெரிக்க உறவு நல்ல முறையில் அமையவில்லை. இதற்குக் காரணம் இந்தியாவின் கூட்டுச் சேராக் கொள்கையை அமெரிக்கா விரும்பவில்லை. செஸ்டர் பவல்ஸ் போன்ற அமெரிக்கத் தூதுவர்கள் பலரின் நன்முயற்சியால் இந்திய அமெரிக்க உறவு நல்ல முறையில் வளர்ந்து வருகிறது. இந்தியாவில் பொது உடைமைக்கொள்கை பரவவிடாதபடி இந்திய மக்களுக்கு உதவியளிக்க அமெரிக்கா விருப்பம் கொண்டுள்ளது. இந்தியா, குடியரசு முறையில் தோல்வியுற்றால் பொது உடைமைக் கொள்கையைப் பின்பற்றும் என்ற அச்சம் அமெரிக்கர்களுக்கு இருந்து வருகிறது. இதற்கிடையில் பாக்கிஸ்தானுக்கு ஆயுத உதவி செய்து நாட்டின் அமைதியைக் குலைத்து வருகிறது.

இந்தியாவில் உற்பத்தியாகும் சணல், மைகா, மாங்கனீஸ் போன்ற பொருள்கள் அமெரிக்கப் பொருளாதார ஏற்றத்திற்கு மிகவும் அவசியமானவை. இந்தியா, தற்சமயம் தனது தொழில் வளத்தைப் பெருக்க முனைந்து கொண்டிருக்கிறது. எனவே, அதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை அமெரிக்கா அளித்துவருகிறது. இத்துறையில் இரு நாடுகளும் பொருளாதாரத்துறையில் ஒன்றுக்கொன்று உறுதுணையாக இருந்து வருகின்றன.

இந்தியாவும் ரஷ்யாவும்

இந்தியா சுதந்திரம் அடைந்தபோது ரஷ்யாவுடன் அதிகத் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. இரண்டாவது உலக யுத்தத்தில் ரஷ்யா நாசி ஜெர்மனியால் தாக்கப்பட்டபோது நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டோம். அத்துடன் ஜெர்மனியின் தாக்குதலை ரஷ்யா வீரத்துடன் எதிர்த்து வெற்றி கொண்டதைக் கண்டு புகழ்ந்தோம்.

இந்தியா சுதந்திரம் பெற்றபின், இரு நாடுகளுக்கும் பல கொள்கைகளில் ஒற்றுமை ஏற்பட்டதால் நட்புறவு அதிகப்

பட்டது. 1956-ல் சூயஸ் கால்வாய்ப் பிரச்சினை சம்பந்தமாக இந்தியா எகிப்திற்கு ஆதரவு அளித்தபோது, ரஷ்யாவும் பிரிட்டனுக்கு எதிராக எகிப்தை ஆதரித்தது. செஞ்சீனாவை ஐக்கிய நாடுகளின் சபையில் சேர்த்துக்கொள்ள இந்தியா ஆதரவு தேடியபோது ரஷ்யாவும் சீனாவின் சார்பாக உழைத்து வந்தது. ஆயுத நிராகரிப்புக் கொள்கையை இந்தியாவும் ரஷ்யாவும் ஆதரிக்கின்றன. இவ் விஷயத்தில் இரு நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. ஆப்ரிக்காவிலுள்ள காலனி நாடுகள் சுதந்திரம் பெற வேண்டுமென்ற கருத்தில் இரு நாடுகளுக்கும் ஒற்றுமை இருந்துவருகிறது. இருப்பினும் ரஷ்யாவின் கொள்கைகள் முழுவதையும் இந்தியா ஆதரிக்கவில்லை. ரஷ்யா, ஹங்கேரியைத் தாக்கியபோது இந்தியா, தனது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டதோடு ரஷ்யப்படைகள் ஹங்கேரியை விட்டு வெளியேற வேண்டுமென்று வற்புறுத்தியது.

இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவின் மாஸ்கோ விஜயமும் குருசேவ், புல்கானின் ஆகிய இருவரின் இந்திய விஜயமும் ரஷ்யா, இந்தியாவின் நட்புறவை அதிகப்படுத்தின. ரஷ்யாவின் உதவி கொண்டு பிலாய் இரும்பு ஆலை உருவாக்கப்பட்டது. இந்த ஆலை இரு நாடுகளின் நல்லெண்ணச் சின்னமாக விளங்குகின்றது.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன், சுமார் 20 ஆண்டுக் காலமாக இந்தியா சுதந்திரம் பெற வேண்டும் என்று எடுத்துக் கூறி வந்தது. சுதந்திரம் அடைந்தபின் காஷ்மீர்ப் பிரச்சினையில் ரஷ்யா இந்தியாவிற்கு ஆதரவு அளித்து வருகிறது. இந்தியாவைச் சீனா தாக்கியபோது ரஷ்யா, தனது ஆதரவை இந்தியாவிற்கு அளித்தது. ஐக்கிய நாடுகளின் சபையிலும் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக ரஷ்யா இந்தியாவின் முயற்சிகளுக்கு ஆதரவு அளித்து வருகிறது. 17 தடவைகள் தனது 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தியாவின் கொள்கைகளுக்கு ஆதரவு அளித்து வந்துள்ளது. இந்தியா, பாக்கிஸ்தான் போர்களிலும் ரஷ்யா இந்தியாவிற்கே தனது அனுதாபத்தையும் ஆதரவையும் தெரிவித்துக்கொண்டது. மிக் (Mig) ரக விமானத்தை இந்தியாவில் உற்பத்தி செய்ய ரஷ்யா உதவியுள்ளது.

இந்தியாவும் சீனாவும்

இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஜப்பானியர்கள் சீனாவைத் தாக்கினர். அப்பொழுது இந்தியா, தனது ஆதரவையும் அனுதாபத்தையும் சீனாவிற்குத் தெரிவித்துக்கொண்டது. 1941-ல் சீனாவின் அதிபர் சியாங்கே ஷேக் என்பவரும் அவரது மனைவியும்

இந்தியாவிற்கு வந்திருந்தனர். 1947-ல் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது தேசிய சீனுவிற்கு இந்தியா, தனது தூதரை அனுப்பிப் கௌரவித்தது. அங்கு ஒரு தூதரகமும் இந்தியா அமைத்தது. தேசிய சீனுவின் ஆட்சி அகற்றப்பட்டு, பொது உடைமை அரசு நிறுவப்பட்டபோது இந்தியா, பொது உடைமைச் சீனுவை (செஞ்சீனு) அங்கீகரித்தது (1949ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் நாள்). இதற்குப்பின், பல அரசியல் தூதுவர்களை இரு நாடுகளும் மாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்தியாவின் தூதுவராகப் பணியாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர் சர்தார் K. M. பணிக்கர் ஆவர். இவர் ஒரு வரலாற்று நிபுணர். 1949-லிருந்து செஞ்சீனுவை ஐக்கிய நாடுகளின் சபையில் சேர்த்துக் கொள்வதற்கு இந்தியா பெரும் முயற்சிகள் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறது.

திபேத்தைச் சீனு ஆக்கிரமித்துக்கொண்டபோது இந்தியா, தனது எதிர்ப்பைத் தெரிவித்தது. ஆனுல் சிறிது காலத்திற்குப் பின் இந்தியா, சீனுவுடன் உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டது. அதன்படி திபேத்தின் மீதுள்ள சீனுவின் மேலாணையை இந்தியா அங்கீகரித்தது. சீனுவின் பிரதமரான சூயன்லாய்க்கும் இந்தியப் பிரதமர் நேருவுக்கும் 1954-ல் உடன்படிக்கை ஒன்று டெல்லியில் ஏற்பட்டது. இதன்பயனுகப் பஞ்சசீலக் கொள்கை உருவாகியது. இந்தியர்களும் சீனர்களும் சகோதரர்கள் என்ற எதிரொலி நாடு முழுவதிலும் பரவி இருந்தது. ஆனுல் திபேத்தின் அதிபரான தலாய்லாமாவிற்கு இந்தியா அபயம் கொடுத்த காரணத்தால், இந்தியாவிற்கும் சீனுவிற்கும் இருந்த உறவு பகையாக மாறியது. இதன் தொடர்பாக 1962-ல் சீனு இந்தியாவின் வடக்கு எல்லையைக் கடந்து இமயமலைச் சாரலில் சுமார் 12,000 சதுர மைல் நிலப்பரப்பைக் கைப்பற்றிக்கொண்டது. நேச நாடுகளின் துணைகொண்டு இந்தியா இத் தாக்குதலைச் சமாளித்துக்கொண்டது. இந்தியா சீனுவுடன் நட்புறவு கொள்ள முயன்று வருகிறது.

இந்தியாவும் பாக்கிஸ்தானும்

இந்தியா சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து பாகிஸ்தானுடன் நல்லுறவு ஏற்படுத்திக்கொள்ள முயன்று வருகிறது. ஆனுல், இத் துறையில் இது வெற்றி காண முடியவில்லை. பாக்கிஸ்தான், இந்தியாவின்மீது பகைமையே கொண்டாடி வருகிறது. இந்தியா, பாக்கிஸ்தானுல் மூன்று முறை ராணுவப் பலம்கொண்டு தாக்கப் பட்டிருக்கிறது. இன்னும் ராணுவ நடவடிக்கை ஓய்ந்தபாடில்லை.

இதற்கு வழிகாட்டியாக இருந்தவர் லியாகத் அலிகான் என்ற பாக்கிஸ்தான் அமைச்சர் ஆவர். பாக்கிஸ்தான் காஷ்மீரின் மீது உரிமை கொண்டாடி ராணுவப் பலம் கொண்டு தாக்கி அழிவு ஏற்படுத்திய சம்பவங்கள் மக்கள் மனத்திலிருந்து நீங்கவில்லை. இவ்விரு நாடுகளுக்கும் காஷ்மீர் பிரச்சினை ஒரு தீராத நோயாக அமைந்துள்ளது. அத்துடன் கால்வாய்நீர்ப் பிரச்சினையும் இரு நாடுகளின் நட்புறவைக் குலைத்து வருகிறது. அகதிகளின் சொத்துப் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. அடிக்கடி 'ஜெகாத்' போர் நடத்த வேண்டுமென்று பாக்கிஸ்தானில் மக்கள் கிளர்ச்சி செய்கின்றனர்.

இந்தியாவும் பிரிட்டிஷ் பொதுநல அரசுகளும் (India and British Common wealth of Nations)

ஆங்கிலப் பேரரசிலிருந்து 1947-ல் இந்தியா சுதந்திரம்பெற்றவுடன் ஒரு முக்கிய முடிவை எடுக்கவேண்டிய இக்கட்டான நிலையில் இருந்தது. அது பிரிட்டிஷ் பொதுநல அரசுகளுடன் சேர்வதா என்ற பிரச்சினையேயாகும். மக்களாட்சியைக் கொண்ட ஒரு சுதந்திர நாடு, மன்னர் ஆட்சியைக் கொண்ட நாட்டுத் தலைமையில் செயல்படும் கூட்டுப் பேரவையில் சேருவதென்பது பொருந்தாத செயலாகும். இருப்பினும் நாட்டின் பொதுநலம் கருதி, 1949ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் லண்டனில் நடந்த பொதுநல அரசுகளின் மகாநாட்டில் இந்தியா கலந்துகொண்டு, பிரிட்டிஷ் மன்னரை இந் நிறுவனத்தின் தலைவராக ஏற்றுக்கொண்டது. ஆனல், அவர் சுதந்திர நாடுகளின் கூட்டு இணைவின் அடையாளத் தலைவரே (Symbol) என்ற நிலையை வலியுறுத்தியது. மன்னருக்குச் சுதந்திர நாடுகள் கட்டுப்பட்டுப் பணிந்து செல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. மன்னர், பிரிட்டிஷ் பொதுநல அங்கத்தினர் நாடுகளை இணைக்கும் தலைவராகவும் மதிப்பிற்குரிய மன்னராகவும் இருக்கின்ருர். ஆனல் சுதந்திரமுள்ள உறுப்பு நாடுகள் மன்னரைத் தங்கள் தலைவர் என்று ஏற்றுக்கொள்ளும் அவசியம் இல்லை. பண்டித நேருவின் விருப்பத்திற்கிணங்க பிரிட்டிஷ் என்ற வார்த்தை நீக்கப்பட்டு இப்பொழுது அது பொதுநல அரசுகள் (Commonwealth of Nations) என்ற பெயரில் வழங்கப்படுகிறது. தற்சமயம் அவ்வப்போது நடைபெறும் பொதுநல அரசுக் கூட்டங்களில் இந்தியா கலந்துகொள்வதன்மூலம் இதர உறுப்பு நாடுகளுடன் தொடர்புகொண்டு நட்புறவை வளர்த்து வருகின்றது.

சுதந்திர இந்தியா, இங்கிலாந்து மன்னரைத் தலைவராகக் கொண்ட பொதுநல அரசுகளுடன் (British Commonwealth of

Nations) தொடர்பு கொள்வது தன்மானத்திற்கு இழுக்கு என்று பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன் சுமார் 200 ஆண்டுகளாக இந்தியர்களை அடிமைகளாக நடத்தி வந்த அரசின் தலைமையில் உள்ள நிறுவனத்தில் அங்கம் வகிப்பது முறையன்று என்றும் எடுத்துரைத்தனர். பொதுநல அரசுகளின் கூட்டில் சேர்ந்திருப்பது கட்டாயம் இல்லை. விருப்பப்பட்டால் எந்த நாடும், எந்த நேரமும் இதிலிருந்து வெளியேறலாம். அத்துடன் பிரிட்டிஷ் மன்னருக்கு இதில் எவ்வித வேலையும் இல்லை என்று நேரு கூறினார். இத் தொடர்பினால் இந்தியாவிற்கு அரசியல், பொருளாதாரம், ராணுவம் போன்ற துறைகளில் நன்மை உண்டு என்றும் தெளிவுப்படுத்தினார். மேலும், பொதுநல அரசுகளில் உறுப்பினராக இருப்பதால், இங்கிலாந்தின் மீது இந்தியருக்கு உள்ள பழைய பகைமையும் வெறுப்பும் மாறுவதற்கு வாய்ப்பு உண்டு என்றும் உலக அமைதிக்கு இரு நாடுகளும் நல்ல வகையில் பணியாற்ற முடியும் என்று விளக்கினார்.

பஞ்சசீலக் கொள்கை (Panch Shila)

உலக அமைதிக்காகப் பெரு முயற்சி எடுத்துக்கொண்ட பண்டித ஜவகர்லால் நேரு, உலக ஒற்றுமையைக் காக்கப் பஞ்ச சீலக் கொள்கைகளை உலகுக்கு வகுத்து அளித்துள்ளார். போருக்குக் காரணங்களான வன்முறை, ஆக்கிரமிப்பு, இன வேற்றுமை, அச்சம், சந்தேகம் போன்றவற்றை மக்களிடையே அகற்றப் பல வழிமுறைகளைக் காணத் தலைப்பட்டார். இப் பெரும் முயற்சியின் காரணமாகத் தோன்றியதே பஞ்சசீலக் கொள்கை. 1954ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ஆம் நாள் திபேத் நாட்டில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினை காரணமாக, இந்தியப் பிரதமரான நேருவுக்கும் சீனாவின் பிரதமர் சூ-என்-லாய் (Mr. Chou-En-Lai)-க்கும் ஏற்பட்ட சீன-இந்தியா (Sino-Indian) உடன்படிக்கையின் முன்னுரையில் பஞ்சசீலக் கொள்கை மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கொள்கையின்படி, (1) ஒவ்வொரு நாடும் பிற நாட்டின் எல்லைகளையும், உரிமைகளையும் மதித்து நடத்தல் வேண்டும். (2) எந்த நாடும் மற்ற நாட்டின்மீது ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது. (3) ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் மற்ற நாடுகள் தலையிடக்கூடாது. (4) எல்லா நாடுகளும் ஏற்றத்தாழ்வு இன்மை, ஒன்றுக்கொன்று உதவுதல் முதலியவற்றில் நம்பிக்கை கொள்ள வேண்டும். (5) நாடுகள் அரசியலில் குறுகிய மனப்பான்மையை விடுத்து அமைதியான கூட்டுறவு நோக்கத்தைப் பின்பற்ற வேண்டும். இப் பஞ்சசீலக் கொள்கைகளின் சிறப்பினையும் அவசியத்தையும் உணர்ந்த சீனப்

பிரதமர் சூ-என்-லாய், இதனை 1954-ல் ஏற்றுக்கொண்டார். இதைத் தொடர்ந்து 1955ஆம் ஆண்டில் இந்தோனேஷியாவில் பாண்டுங் (Bandung) என்னுமிடத்தில் கூடிய ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டில் கலந்துகொண்ட 29 நாடுகள் இப் பஞ்சசீலக் கொள் கையை ஏற்றுக்கொண்டன. ஐரோப்பிய நாடுகளுள் முதன் முதலில் இக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட நாடு யூகோஸ்லாவி யாவாகும். இதை ஏற்றுக்கொண்ட இதர முக்கிய நாடுகள் முறையே இந்தோனேஷியா, ருஷியா, எகிப்து, அரபு நாடுகள் ஆகியன.

இந்தியாவும் ஆசிய நாடுகளும்: சுமார் 200 ஆண்டுகளாக ஆசிய நாடுகள் பலவற்றில் ஐரோப்பியர்களின் செல்வாக்கு இருந்து வந்தது. ஆனால், இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின், ஏறத் தாழ எல்லா நாடுகளுமே விழிப்புணர்ச்சி பெற்று அந்நியர்களின் ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டன. இருப்பினும், இந் நாடுகளுக்குள் ஒற்றுமை உணர்வு ஏற்படுத்தி அவற்றின் சக்தியை ஒருமுகப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படவில்லை. ஒரு காலத்தில் நாகரிகத்திற்கும் ஆன்மீக வாழ்விற்கும் இருப்பிடங்க ளாக இருந்த இப் பகுதிகள், ஐரோப்பிய வல்லரசுகளால் அடிமைப் படுத்தப்பட்டன. எனவே, ஆசிய நாடுகளின் எழுச்சியைப் பலப் படுத்த ஆசிய நாட்டவரின் மகாநாடு ஒன்றை 1947-ல் புது தில்லி யில் நேரு கூட்டினார். 'இக் கூட்டத்தில் ஆசியா நாட்டவர்களான நாம், நீண்ட காலமாக ஐரோப்பிய நாடுகளின் நீதிமன்றங்களில் நீதி கோரி மனுக்கள் அனுப்புவோராக இருந்துவிட்டோம். ஆனால், அது கடந்த கால வரலாறு ஆகிவிட்டது. நாம் நம் பலத்திலே தனித்து நின்று நம்முடன் ஒத்துழைக்கும் மக்களுடன் நமது ஒத்துழைப்பை நல்கத் தயாராகிவிட்டோம். நாம் மற்ற வர்களின் எடுப்பார்க் கைப்பிள்ளையாக இருக்க விரும்பவில்லை.' என்று தற்கால ஆசியாவின் நிலையைப் பிரதிபலிக்கும் முறையில் எடுத்துக் கூறினார். பஞ்சசீலக் கொள்கைகளை உலகிற்கு அளித்த ஜவகர்லால் நேரு, ஆசிய நாடுகளின் ஒற்றுமையிலும் வளர்ச்சி யிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஒவ்வொரு நாடும் சுயாட்சி பெற்று வாழ வேண்டும் என்று விரும்பினார். இதைத் தொடர்ந்து 1949ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் இந்தோ னேஷியாவின் பிரச்சினை சம்பந்தமாகத் தில்லியில் கூடிய மகாநாடு ஆசிய நாட்டவர்களின் நட்புறவை மேலும் வலுப்படுத்தியது.

இந்தியாவும் இந்தோனேஷியாவும்

தூரக் கிழக்குப் பகுதியிலுள்ள பல தீவுகளில் 17ஆம் நூற் றாண்டில் டச்சுக்காரர்கள் தங்களுடைய அரசியல் செல்வாக்கை

நிறுவி வளமான வியாபாரம் செய்து வந்தனர். அதன் பின், அங்கு நிலவிய அரசியல் குழப்பங்களைப் பயன்படுத்தி ஒரு பேரரசை நிறுவினர். 20ஆம் நூற்றாண்டில் இங்கு டச்சுக்காரர்களுக்கு எதிராக இம் மக்கள் சுதந்திரக் கிளர்ச்சிகள் செய்தனர். இதன் பயனாக, இந்தோனேஷியத் தேசியக் கட்சி ஒன்று தோன்றியது. இரண்டாவது உலகப் போரில் ஜப்பானியர், இந்தோனேஷியத் தீவுக் கூட்டங்களைக் கைப்பற்றி டச்சுக்காரர்களை வெளியேற்றினர். ஆனால், போரின் இறுதியில் நேச நாடுகள் ஜப்பானைத் தோற்கடிக்கவே அவர்கள் வெளியேறும் தருணத்தில் இந்தோனேஷியாவுக்குச் சுதந்திரம் அளித்துச் சென்றனர். வெளியேற்றப் பட்ட டச்சுக்காரர்கள் மறுபடியும் தங்கள் ஆட்சியை இந்தோனேஷியாவில் நிறுவ முயன்றனர். இதன் காரணமாக, இந்தோனேஷியத் தேசியப்படைக்கும் டச்சுக்காரர்களுக்கும் கடுமையான போர் நடந்தது. இந்தோனேஷியாவின் தலைவராக இருந்த டாக்டர் சுகர்னோ பல துறைகளில் முயன்றும் போரை முடிவுக்குக் கொண்டுவர இயலவில்லை. இக் கட்டத்தில் நமது இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு, 1948ஆம் ஆண்டில் ஆசிய மகாநாடு ஒன்றைத் தில்லியில் கூட்டிக் காலனி ஆதிக்கம் அகற்றப் படவேண்டுமென்று வற்புறுத்தினார். அத்துடன் நில்லாது இந்தோனேஷியப் பிரச்சினையை இந்தியா, ஐ. நா. சபைக்கு எடுத்துச் சென்று, அதற்குத் தன்னாலான ஆக்கப்பூர்வமான உதவிகளை அளித்தது. பாதுகாப்புச் சபை இப் பிரச்சினையில் தலையிட்டுப் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வந்தது. அதன்பின், இரு தரத்தாருக்கும் ஐ. நா. சபையின் ஆதரவில் பேச்சு வார்த்தை நடந்தது. இறுதியில் டச்சுக்காரர்கள் இந்தோனிஷியாவின் சுதந்திரத்தை ஹேக் உடன்படிக்கையின்மூலம் ஒப்புக்கொண்டனர். ஐ. நா. சபை தலையிட்டு இந்தோனிஷியாவிற்குச் சுதந்திரம் அளித்ததால் இதை ஐ. நா. சபையின் குழந்தை என்று வழங்குகின்றனர். இதற்குப் பின், டாக்டர் சுகர்னோ, இந்தோனேஷியாவின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், இந்தோனேஷியாவில் சுதந்திரக் கிளர்ச்சி நடந்துகொண்டிருந்தபோதும், அது சுதந்திர நாடானபோதும் இந்தியப் பிரதமர் நேரு, அங்குச் சென்று நம் நாட்டின் முழு ஆதரவையும் அம் மக்களுக்குத் தெரிவித்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் தலையீட்டால் சுதந்திரம் பெற்றபோதிலும், டாக்டர் சுகர்னோவின் தவறான கொள்கையால் இரு நாட்டிற்கும் நட்புறவு பல ஆண்டுகளாக முறிந்து விட்டது. இந்தியப் பெருங்கடல் என்ற பெயரை இந்தோனேஷியப் பெருங்கடல் என்று மாற்ற டாக்டர் சுகர்னோ முற்பட்டார். ஆனால், அவரது ஆட்சியை ராணுவத் தலைவர் சுகார்டோ என்ற தளபதி கைப்பற்றிய பின், நடந்த தவறுதல்களை

உணர்ந்து இப்பொழுது இந்தியாவுடன் நட்புறவு கொண்டாடி வருகின்றனர்.

கொரியாப் பிரச்சினை (Korean Crisis)

இந்தியாவின் கூட்டுச்சேராக் கொள்கையின் வெற்றிக்குக் கொரியாப் பிரச்சினை ஒரு பெரும் வாய்ப்பளித்தது. தொடக்கத்தில் கொரிய தீபகற்பம், சீனப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. 1895–96-ல் ஏற்பட்ட சைனு–ஜப்பானியப் போரின் காரணமாகக் கொரியா சுதந்திரநாடாக அறிவிக்கப்பட்டது. ஆனால், 1904–5-ல் ஏற்பட்ட ரஷ்ய–ஜப்பானியப் போருக்குப் பின், கொரியா ஜப்பானின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது. இரண்டாவது உலகப் போரின் இறுதிக் கட்டத்தில் ரஷ்யர்கள் வடகொரியா வழியாக முன்னேறிச் சென்று ஜப்பானியர்களைச் சரண் அடையச் செய்தனர். கொரியாவை 38° அட்சரேகை இரண்டாகப் பிரிக்கின்றது. 37° அட்ச ரேகைக்கு வடக்கிலுள்ள பகுதியில் ரஷ்யர்கள் கம்யூனிஸக் கொள்கையின் அடிப்படையில் அரசாங்கம் ஒன்றை அமைத்தனர். 38° அட்சரேகைக்குத் தென் பகுதியில் அமெரிக்கர்கள் சிங்மேன் ரீ (Syngman Rhee) என்பவரின் தலைமையில் ஓர் அரசை நிறுவினர். இதற்குப்பின், ரஷ்யர்களும் அமெரிக்கர்களும் கொரியாவிலிருந்து வெளியேறினர். வட கொரியாவிலுள்ள பொது உடைமை அரசு, தென் கொரியாவைத் தன்னுடன் இணைத்துக்கொண்டு கொரியாவில் ஐக்கியம் உண்டுபண்ணும் பொருட்டுப் போர் தொடங்கியது. தென்கொரியா ஐ. நா. விடம் முறையிட்டது. ஐ. நா. கொரியாவில் தலையிட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தது.

கொரியாவில் 1950ஆம் ஆண்டு ஜூன் மாதம் போர் தொடங்கியது. இப்போர் தொடங்கிய நாளிலிருந்து இந்தியா ஐ. நா. சபையினுள்ளும் வெளியிலும் தீவிரமாகத் தலையிட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவந்தது. காரணம், இப் போர் நீடித்தால் உலகப் பெரும் போராக மாறும் என்ற சூழ்நிலை இருந்தது. இரண்டாவது உலகப் போரில் எஞ்சிய ராணுவத் தளவாடங்களை அமெரிக்கர்களும் ரஷ்யர்களும் கொரியாவுக்கு அனுப்பி வைத்தமையால் ஒரே நாட்டைச் சேர்ந்த மக்கள் ஒருவரை ஒருவர் கொடுமையான முறையில் தம்மை அழித்துக் கொண்டிருந்தனர். இப் போரில்தான் முதன்முதலில் ரஷ்யர்கள் ஜெட் விமானத்தை உபயோகப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. பண்டித நேரு, கொரியாவின் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும்பொருட்டு மார்ஷல் ஸ்டாலின், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெளி நாட்டுறவு அமைச்சர், இங்கிலாந்தின் பிரதமர் போன்றவர்களுக்குக் கடிதம்

எழுதினுர். அத்துடன் ஐ. நா. வின் பாதுகாப்புச் சபையில் செஞ் சீனுவின் பிரதிநிதித்துவம் அவசியம் என்று வலியுறுத்தினுர். ஆனுல் வல்லரசுகள் இக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளவில்லை. இருப்பினும் மனம் தளராது கொரியாவில் போரிடும் இரு தரப்பி னரும் 38° அட்சரேகையைக் கடக்கக்கூடாது என்று இந்தியா வற் புறுத்தியது. 38° அட்ச ரேகையைக் கடந்தால், கொரியாவின் போர் நீடிக்கும் என்று இந்தியா கருதியது. சீனுவே கொரியாவில் ஆக்கிரமிப்பு ஏற்படுவதற்குக் காரணம் என்று வல்லரசுகள் கூறிய கூற்றை இந்தியா மாற்றி அமைக்க எடுத்துக்கொண்ட முயற்சி யிலும் தோல்வியடைந்தது. தனது கருத்துகள் ஏற்றுக்கொள்ளப் படவில்லையாயினும் மனந்தளராது இந்தியா, கொரியாவின் பிரச் சினைக்குத் தீர்வுகாணும் வகையில் ஒரு மகா நாடு கூட்ட முயன்றது. இதற்கிடையில் ஐ. நா. சபையும், கொரியாவின் ராணுவ அதிகாரி களும் கைதிகளைப் பரிவர்த்தனை செய்துகொள்ளும்படி சுமார் 18 மாதங்கள்வரை முயன்றனர், இத்தருணத்தில் திரு வி. கே. கிருஷ்ணமேனன் (V. K. Krishna Menon) இரு தரப்பினரையும் கலந்து எல்லாரும் ஒப்புக்கொள்ளும் வகையில் ஒரு திட்டத்தை ஐ. நா. வின் பொதுச்சபையில் இந்தியாவின் சார்பில் சமர்ப் பித்தார். இத் திட்டம் ஐ. நா. பொதுச் சபையில் நிறைவேறிய பின், ரஷ்யாவும் சீனுவும் இத் திட்டத்தை நிராகரித்தன. இருப்பி னும் கொரியாவிலுள்ள இரு தரப்பு ராணுவக் குழுவும் இந்தியா வின் திட்டப்படி போர்க் கைதிகளைப் பரிவர்த்தனை செய்ய ஒப்புக் கொண்டு உடன்படிக்கை ஒன்று செய்துகொண்டன, இவ்வாறு மூன்று ஆண்டுகளாக நடந்த கொரியாப் போர் முடிவடைந்தது. இந்தியா எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாகக் கொரியாவிலுள்ள இரு அரசாங்கங்களும் இந்தியாவைப் போர்க் கைதிகளின் பரிவர்த்தனை 'செயற்குழுவின் தலைவராக இருக்க வேண்டிக்கொண்டன. இப் பொறுப்பை இந்தியா ஏற்றுக் கொண்டது.

கொரியாவில் அமைதிப்பணி : மேஜர் ஜெனரல் திம்மையா (Major-General Thimmiah) என்பவரின் தலைமையின்கீழ் 6,000 இந்திய வீரர்கள் அமைதியின் தூதுவர்களாகக் கொரியா சென்றனர். ராணுவ வீரர்கள் அமைதியைக் காக்கச் செல்வது இதுவே முதல் தடவையாகும். இப் படையினர் 38° அட்ச ரேகையை மையமாக வைத்து வடக்கு, தெற்கு எனப் பாகுபடுத்தி இவ் விரு அரசுகளும் தனித்தனியே இயங்கும்படி செய்வித்தனர். போரின் முடிவில் கைதிகளின் பிரச்சினை கொடிய உருக்கொண்டு எழுந்தது, போர் வெறி கொண்ட யுத்தக் கைதிகளை அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி, மறு வாழ்வு அளித்து, அவர்களை

அமைதியான குடிமக்களாக்குவது மிகவும் கடினமான ஒரு செயல். இப் பொறுப்பை இந்திய வீரர்களும் தளபதி திம்மையாவும், மிகவும் பொறுமையுடன், மிகுந்த ஆபத்துகளுக்கிடையில் வெற்றிகரமாக நிறைவேற்றினர். இவர்கள் இச் சிக்கலைத் தீர்க்கக் கையாண்ட முறைகளைப் பல வெளிநாட்டு ராணுவ நிபுணர்கள் புகழ்ந்துள்ளனர். தளபதி திம்மையாவும் இந்தியர்களும் அமைதி காக்கும் துறையில் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு ஐ. நா. சபை பாராட்டுத் தெரிவித்துள்ளது. இவ் வெற்றி இந்திய வீரர்கள் நமக்குத் தேடி தந்த பெருமையாகும்.

இந்தோ-சீனு போர் (Indo-China Conflict)

இந்தோ-சீனு, தென்கிழக்கு ஆசியாவிலுள்ள ஒரு சிறிய நாடு. இஃது அன்னும், கொச்சின் சீனு கம்போடியா போன்ற நாடுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. 17ஆம் நூற்றுண்டில் ஃபிரெஞ்சுக்காரர்கள் கொச்சின்-சீனு அரசுடன் வியாபார உடன்படிக்கை ஒன்று செய்து கொண்டிருந்தனர். ஆனுல் ஃபிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு இங்கு அதிகரிக்கவே, இவர்கள் இந்தோ-சீனுவிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இங்குக் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்காகச் சென்ற ஃபிரெஞ்சுப் பாதிரியார்கள் துன்புறுத்தப் பட்டனர். இதைக் காரணமாகக் கொண்டு ஃபிரெஞ்சு மன்னர் மூன்றும் நெப்போலியன், ஒரு படையை அனுப்பிச் சிறிது சிறிதாக இந்தோ சீனுவின் பெரும் பகுதியை கி. பி. 1862-க்குள் தம்முடைய ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தார். 20ஆம் நூற்றுண்டில் இங்குக் கம்யூனிஸக் கொள்கை பரவியது. எனவே, மக்களிடம் தேசிய உணர்ச்சி ஏற்பட்டு அந்நியர்களாகிய ஃபிரெஞ்சுக்காரர்களை எதிர்க்கத் தலைப்பட்டனர். வியட்நாம் சுதந்திரச் சங்கம் ஒன்றை நிறுவி, ஹோ-சி-மின் (Ho-Chi-Minh) என்பவரை அதற்குத் தலைவராக்கினர்.

இரண்டாவது உலகப் போரில் ஜப்பானியர்கள் இந்தோ-சீனுவிலிருந்த ஃபிரெஞ்சுப் படைகளை முறியடித்து அவர்களை அங்கிருந்து விரட்டினர். ஹோ-சி-மின் இந்தோ-சீனுவை வியட்நாம் என்ற பெயருடன் சுதந்திர நாடாக ஆக்கினுர். இக் குடியரசு இந்தோ-சீனுவின் வட பகுதியில் அதாவது, 17° அட்ச ரேகைக்கு வடக்கில் அமைந்துள்ளது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின், தென்பகுதியில் ஃபிரெஞ்சுக்காரர்கள் மீண்டும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். ஆனுல் அவர்களுக்கு எதிராகச் சுதந்திரத் தாகம் கொண்ட மக்கள் 1946-ல் போரிட்டனர். இந்தப் போர் 1954 வரை நடந்தபோதிலும் ஃபிரெஞ்சு நாடு எவ்வித

முன்னேற்றமும் அடையவில்லை. ஃபிரெஞ்சு நாட்டிற்கு ஏராள மான பொருள் நஷ்டமும் உயிர் இழப்பும் ஏற்பட்டன. இறுதி யாக, எழுச்சி பெற்ற மக்களோடு போரிடுவதால் தனக்கு நன்மை பயக்காது என்பதை ஃபிரான்ஸ் உணர்ந்துகொண்டது. இதன் பயனாக அஃது அமைதியை விரும்பி, 1954-ல் ஜெனிவா மாநாட்டைக் கூட்டியது. இம் மாநாட்டில் இந்தியாவின் வெளி நாட்டுத் தூதுவராக இருந்த திரு. வி. கே. கிருஷ்ணமேனனின் முயற்சியால் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டது. இதில் ஒன்பது நாடுகள் கையொப்பம் இட்டன. 1954ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் நாள் பாராளுமன்றத்தில் ஆறு அம்சத் திட்டத்தைப்பற்றி நேரு விளக்கினார். அவை, (1) பயமும் சந்தேகமும் இல்லாத சூழ்நிலை ஒன்று அமைதிப் பேச்சு வார்த் தைகள் தொடங்கும்பொருட்டு உருவாக்கப்பட வேண்டும். (2) போர் நிறுத்த முயற்சிகள் ஜெனிவா மாநாட்டில் முதலிடம் பெறவேண்டும். இப் போர் நிறுத்தக் குழுவில் ஃபிரான்சும், அதன் கூட்டாளிகளும், வியட்நாமும் இடம் பெற வேண்டும். (3) ஃபிரான்சு இந்தோ-சீனாவிற்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும். என்ற நிபந்தனைக்கு ஒப்புதல் அளிக்க வகைசெய்ய வேண்டும். (4) பாதிக்கப்பட்ட இரு தரப்பினருக்கிடையே உடனே பேச்சு வார்த்தைகள் தொடங்க வசதிகளை அமைத்துத் தரவேண்டும். (5) அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத் ரஷ்யா, இங்கிலாந்து, சீனா ஆகிய நாடுகள் இந்தோ-சீனாவுக்கு எவ்வித ஆயுத உதவி யும் அனுப்பக்கூடாது என்று மனப்பூர்வமான உறுதிமொழி வழங்க வேண்டும். (6) இறுதியாக, இந்தோ-சீனா பிரச்சினை காரணமாக ஏற்படும் பேச்சு வார்த்தையின் போக்கையும் பல் வேறு நிலைகளையும் அவ்வப்போது ஐ. நா. சபைக்குத் தெரிவிக்க வேண்டும் என்பன.

மேலே கண்ட நடவடிக்கைகளுடன் அமையாது, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பிரதமர்கள், 1954ஆம் ஆண்டு மே மாத முதல் வாரத்தில் இந்தோ-சீனா பிரச்சினை சம்பந்தமாகக் கொழும்பில் மாநாடு ஒன்றைக் கூட்டினர். இதில் இந்தோ-சீனா போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற அவசி யத்தை வலியுறுத்தினர். சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் இக் கருத்தை ஏற்றுக்கொண்டார். இறுதியாகப் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது.

1954ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஜெனிவா உடன்படிக்கை யின்படி, இந்தோ-சீனா நாடுகளின் எல்லைகள் வரையறுக்கப்

பட்டன. ஃபிரெஞ்சு ராணுவம் வெளியேற்றப்பட்டது. லாவோசும், கம்போடியாவும் ஜனநாயக முறைப்படி தம் நாடுகளை ஆளவகை செய்யப்பட்டன. வியட்நாம் 17° அட்சரேகையை மையமாகக் கொண்டு இரு கூறுகளாகப் பிரிக்கப்படவேண்டும். இவற்றில் மக்களாட்சி நிறுவப்பட வேண்டும். இவ் வரசுகள் தேர்தல்கள் நடத்திக் குடியரசு ஆட்சிமுறையை நிறுவும் செயலைக் கண்காணிக்கும் பொறுப்பு இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தியாவிற்கு உறுதுணையாகப் போலந்தும் கனடாவும் நடுநிலை நாடுகளின் அங்கத்தினர்களாக இருந்து ஒத்துழைப்பு நல்கின. இக் குழுவிற்குத் தலைவராகத் திரு. கோ. பார்த்தசாரதி என்பவர் இருந்து பணிபுரிந்தார். இக் குழுவின் முதல் கூட்டம் நேருவின் தலைமையில் 1954ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் நாளில் தில்லியில் கூடியது. சுமார் 6 ஆண்டுகள்வரை நடந்த போரினால் அவதியுற்ற மக்களை அமைதிப்படுத்தி அவர்களுக்கு ஏற்றவகையில் அரசு அமைப்பது என்பது மிகவும் கடினமான செயல். இதை இந்தியா வெற்றிகரமாக முடித்தது.

சூயஸ் கால்வாய்ப் பிரச்சினை (Suez Crisis)

சூயஸ் கால்வாயின் முக்கியத்துவம்: மத்திய ஆசிய நாடுகளில் எகிப்து மிகவும் செல்வாக்குப் பெற்ற நாடு. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இது நாகரிகத்தில் சிறந்த நாடு. இஃது ஆப்பிரிக்காவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இரண்டாவது உலகப் போருக்குப்பின், ராணுவத் தளபதிகள் இதைப் பஃரோ என்ற மன்னரது ஆட்சியிலிருந்து விடுவித்துக் குடியரசு நாடாக்கினர். தளபதி நகிப் (Nagib) என்பவரின் ஆட்சியைக் கைப்பற்றிக் கர்னல் கமால் அப்துல் நாசர் என்பவர் எகிப்தின் தலைவரானார். இவர் பதவிக்கு வந்தபின், சூயஸ் கால்வாயை 1956-ல் நாட்டுடைமை ஆக்கினார். சூயஸ் கால்வாய் இன்றைய வாணிபத்திற்கும் போக்குவரத்துக்கும் முக்கியமான ஒரு நீர்வழியாக அமைந்துள்ளது. இது செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைக்கின்றது. இதன் நீளம் சுமார் 103 மைல்கள். கி. பி. 1859-ல் தொடங்கப்பட்ட இக் கால்வாய் கட்டும் வேலை 1869-ல் முடிவுற்றது. எகிப்து மக்களின் அயரா உழைப்பும் பிரிட்டன், ஃபிரான்ஸ் முதலிய வல்லரசுகளின் பொருளும் தொழில் நுட்பமும் சேர்ந்து இக் கால்வாயை உருவாக்கின. இக் கால்வாயை நிர்மாணித்தவர் பெர்டினண்ட்-டி-லஸப்ஸ் (Ferdinand-de-Lesseps) என்ற ஃபிரெஞ்சு நாட்டுப் பொறியியல் வல்லுநர் ஆவார். இதுகாறும் சூயஸ் கால்வாய் ஆங்கிலோ, ஃபிரெஞ்சு அரசுகளின் கூட்டு நிர்வாகத்தில் இருந்து வந்தது. சூயஸ் கால்வாயின்

மூலம் ஆண்டொன்றுக்கு 300 கோடி பவுன் வருவாய் வந்துகொண்டிருந்தது. இத்தகைய கணிசமான வருவாய், ரஷ்யாவின் உதவியுடன் நைல் நதியின் குறுக்கே கட்டவிருக்கும் ஆஸ்வான் அணைக்கட்டிற்குப் பேருதவியாக இருக்கும் என்று திரு. நாசர் எண்ணினார். எனவே, ஆங்கிலோ-ஃபிரெஞ்சு அரசுகள், எகிப்துடன் 1890-ல் செய்துகொண்ட உடன்படிக்கையை அது முடிவதற்குப் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பே கி.பி. 1956ஆம் ஆண்டில் நாட்டுடைமை ஆக்கினார். இதற்கு முன்பு கர்னல் நாசர் பேச்சு வார்த்தைகள்மூலம் ஆங்கிலோ-ஃபிரெஞ்சு அரசுகளுக்கு, அவர்களின் முதலீட்டுப் பங்குத் தொகையை அன்று இருந்த மதிப்பின்படி திருப்பிக் கொடுப்பதாகக் கூறினார். ஆனால், அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். எனவேதான், சூயஸ் கால்வாயை நாசர் நாட்டுடைமையாக்கினார்.

சூயஸ் கால்வாயைக் காலவரையறை முடியும் முன்பே நாட்டுடைமையாக்கியது சட்டவிரோதம் என்று ஆங்கிலேயரும் ஃபிரெஞ்சுக்காரரும் எகிப்து நாட்டின்மீது படையெடுத்தனர். தனக்குச் சூயஸ் கால்வாயைப் பயன்படுத்த அனுமதி தர மறுக்கிறது என்ற காரணத்தைக் காட்டி இஸ்ரேல் நாடும் ஆங்கிலோ-ஃபிரெஞ்சுப் படையெடுப்பில் கலந்துகொண்டது. இம் மூவருடைய நோக்கம், சூயஸ் கால்வாயைக் குண்டு போட்டு அழித்து, அதைக் கப்பல் போக்குவரத்திற்குப் பயன்படாமல் செய்வதேயாகும். இங்கிலாந்தில் பிரதமராக இருந்த அந்தோனி ஈடன் (Anthony Eden) என்பவர், இப் படையெடுப்பில் தீவிர அக்கறை காட்டினார். இம் மூன்று நாடுகளின் போர் முழக்கத்தையும் அதனால் ஏற்பட இருக்கும் ஆபத்தையும் பண்டித நேரு உணர்ந்து உடனடியாக ஐ. நா. சபையைக் கூட்ட ஏற்பாடு செய்தார். அத்துடன் இந்தியத் தூதர் திரு. வி. கே. கிருஷ்ணமேனனை ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு அனுப்பி, ஆங்கிலோ-ஃபிரெஞ்சு-இஸ்ரேல் படையெடுப்பால் நேர இருக்கும் அழிவைத் தடுத்து அதற்குரிய வழி வகை காணும்படி தூண்டினார். ஐ. நா. சபையில் எகிப்து நாட்டிற்கு ரஷ்யாவின் ஆதரவு கிடைத்தது. இதன் பயனாக, 1956-ல் ஏற்பட இருந்த பெரும் போர் இந்தியா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளின் தலையீட்டால் தடுக்கப்பட்டது. ஆங்கிலோ-ஃபிரெஞ்சு நாட்டிற்குக் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையை அமைதியான முறையில் கொடுத்துத் தீர்த்தனர். இம் முடிவு ஏற்பட இந்தியத் தூதுவர் திரு. வி. கே. கிருஷ்ணமேனன் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலோ-ஃபிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக இஸ்ரேல் எகிப்தைத் தாக்கியதால், எகிப்தியர் இஸ்ரேலுடன் மேலும் பகைமை கொண்டனர். இப் பகைமை, இரு நாடுகளையும் இரண்டு தடவை போர்க் களத்திற்கு இழுத்துச் சென்றது. 1956ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் ஏற்பட்ட மனக்கசப்புப் போரில் முடியக் கூடாது என்று ஐ.நா. சபை தலையிட்டு, இரண்டு நாடுகளுக்கும் இடையிலுள்ள காசா நிலப் பகுதியில் (Kasa strip) அமைதி காக்கும்பொருட்டு ஐ.நா. படைப் பிரிவு ஒன்றை அமைத்தது. இதில் பெரும் பகுதி இந்தியர்களாக இருந்தனர். இந்த அமைதிப்படை 1956-லிருந்து 1967ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை அப் பகுதியில் அமைதிக்குக் கேடு விளையாதபடி பாதுகாத்து வந்தது. ஆனால், துர்அதிர்ஷ்டவசமாக 1977ஆம் ஆண்டு ஜுன் மாதம் எகிப்தின் அதிபர் நாசர், இவ் வமைதிப் படையைக் காசா நிலப்பகுதியிலிருந்து வெளியேறும் படி, அதன் தலைவராக இருந்த கன்னர் ஜாரிங்கிடம் (Gunner Jarring) கேட்டுக்கொண்டார். வேறு வழி இன்றி, அமைதி காக்கும் படையை அங்கிருந்து வெளியேற்ற வேண்டிய அவசியம் நேரிட்டது. இப் படைகள் வெளியேறிய உடனேயே எகிப்து, இஸ்ரேல் நாட்டின்மீது போர் தொடுத்தது. இந்திய ராணுவம் இப் பகுதியில் இருந்த சுமார் பதினோர் ஆண்டுகளில் இரு நாடுகளுக்கும் எவ்விதச் சச்சரவும் ஏற்படவில்லை. இஃது, இந்தியா உலக அமைதிக்காக எடுத்துக்கொண்ட முயற்சிக்குக் கிடைத்த நற்சான்றாகும்.

இந்தியாவும் பெல்ஜியன் காங்கோவும்

காங்கோ நாடு ஆப்பிரிக்கா கண்டத்தில் பூமத்திய ரேகையை அடுத்து இருக்கும் பிரதேசமாகும். இஃது இயற்கைச் செல்வங்கள் நிறைந்த ஒரு நாடு என்பதைப் பெல்ஜியத்தைச் சேர்ந்த ஸ்டான்லி (Stanley) என்பவர் கண்டு தெரிவித்தார். இதை அறிந்த பெல்ஜியத்தின் மன்னர் இரண்டாம் லியோபால்டு (Leopold II), ஸ்டான்லியைப் பெல்ஜியத்தின் ஆதிக்கத்தைக் காங்கோவில் நிறுவுமாறு பணித்தார். சுமார் ஆறு ஆண்டுக் காலத்தில் ஸ்டான்லி தமது பணியை முடித்தார். 1885-ல் காங்கோ, பெல்ஜிய மன்னரின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப் பட்டது. அதற்குப்பின், இப் பகுதி பெல்ஜியன்-காங்கோ என்று வழங்கப்பட்டது. இப் பிரதேசத்தின் பெரும் பகுதி 1,000 அடி உயரத்திற்கு மேற்பட்ட பீடபூமிப் பகுதியாகும்.

1960ஆம் ஆண்டுக்குப்பின், காங்கோ சுதந்திர நாடாக்கப் பட்டது. ஆனால் அங்குப் பெல்ஜிய நாட்டவரின் தூண்டுதலால்

உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டது. அந் நாட்டின் தலைவர் பாட்ரிஸ் லுமும்பா (Patrice Lumumba) என்பவரைப் பொது உடைமைக் கொள்கையின் ஆதரவாளர் என்று குற்றம் சாட்டிக் கைதியாக்கி, இறுதியில் சுட்டுக் கொன்றனர். மக்கள், ஒருவரை ஒருவர் கொலை செய்து பெரும் அழிவை ஏற்படுத்தி வந்தனர். காங்கோவில் ஏற்பட்ட இந்த உள்நாட்டுக் கலகத்தை அடக்கும் பொருட்டு, ஐ. நா. சபை அங்கு அமைதியை நிலைநாட்டுவதற்காக ராணுவம் ஒன்றை அனுப்பத் தீர்மானித்தது. இப் பெரும் பொறுப்பை இந்தியா ஏற்றுக்கொண்டது. இரண்டாவது தடவையாக, இந்தியா அமைதியைக் காக்கும்பொருட்டுத் தனது ராணுவத்தை அந்நிய நாட்டிற்கு அனுப்பியது. பிரிகேடியர் கே. எஸ். ராஜா (Brigadier K. S. Raja) என்பவரின் தலைமையின்கீழ் இந்திய ராணுவம் ஒன்றும் விமானப்படை ஒன்றும் 1961ஆம் ஆண்டு மே மாதம் காங்கோ நாட்டிற்குச் சென்றன. பெரும் எதிர்ப்புகளுக்கு இடையில் இந்திய அமைதிப்படையினர் அம் மக்களின் சந்தேகத்தையும் அச்சத்தையும் போக்கி, அவர்களிடையே அமைதியை உண்டாக்கினர். அந்நிய நாட்டுப் புரட்சிக்காரர்களையும், நாட்டைவிட்டு வெளியேற்றி நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற வழி வகுத்தனர். அதன் பயனாக, 1961-லிருந்து இன்றுவரை காங்கோ நாட்டில் எவ்விதக் கிளர்ச்சியும் கலகமும் இல்லை. இந்திய ராணுவம் நமக்கு ஈட்டித்தந்த பெருமைகளில் ஒன்று காங்கோவில் நிரந்தர அமைதி நிலவும்படி செய்ததாகும்.

இந்தியாவும் சைப்பிரஸ் தீவும் (India and Cyprus Island)

சைப்பிரஸ் என்பது மத்தியதரைக் கடலில் கிரேக்க நாட்டிற்கு அருகிலுள்ள ஒரு சிறிய தீவு. இதன் மக்கள் தொகை 6 லட்சம் பேர். 5 லட்சம் கிரேக்கக் கிறிஸ்தவர்களும் ஒரு லட்சம் துருக்கியர்களும் வாழ்ந்து வந்தனர். இவர்கள் திடீரென்று ஒருவரையொருவர் பகைத்துக்கொண்டு, இவ் விரு இனத்தவர்களும் உள்நாட்டுக் கலகத்தில் ஈடுபட்டனர். கிரேக்கக் கிறிஸ்தவர்கள், தங்கள் தலைவர் ஆர்ச் பிஷப் மகாரியஸ் (Arch Bishop Macarius) என்பவரின் தலைமையின்கீழ்ப் போராடினர். இவ்விரு இனத்தவர்களுக்கும் வல்லரசுகள் ஆயுத உதவி அளித்துப் பகைமையை வளர்த்தன. இறுதியாக, ஐ. நா. சபை, சைப்பிரஸ் பிரச்சினையில் தலையிட்டு, அங்கு அமைதியைக் காக்க ஐ. நா. சபையின் சார்பில் ராணுவம் ஒன்றை அனுப்பியது. அப் படைக்குக் கொரியா நாட்டில் அமைதியை நிலைநாட்டப் பேருதவியாக இருந்த திறமைமிக்க தளபதி திம்மையா தலைமை தாங்கினார். பெரும் ஆபத்துகளுக்கிடையில் அவருக்கே உரித்தான பொறுமை

சகிப்புத்தன்மை, திறமை ஆகியவற்றைச் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு பயன்படுத்தி, வெகு விரைவில் அமைதியை நிலைநாட்டினார். ஆனால், திடீரென்று மாரடைப்பால் சைப்பிரஸ் தீவில் தளபதி திம்மையா உயிர்நீத்தார். உண்மை வீரனைப்போன்று தமக்குக் கொடுத்த பணியை நிறைவேற்றும் கடமையின் நடுவில் உயிர்நீத்தார் என்று அன்று ஜனாதிபதியாக இருந்த டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் திம்மையாவின் மரணம்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறும்போது இந்தியத் தாய், தனது தலைசிறந்த வீரமகன் ஒருவனை இழந்து கண்கலங்கும் காட்சியைக் காண்கின்றேன் என்று கூறினார். தளபதி திம்மையாவுக்கு அடுத்து, தளபதி ரிக்வே (General Rickway) என்பவரை இந்திய அரசாங்கம் சைப்பிரஸுக்கு அனுப்பி, அங்கு வாக்கெடுப்பு ஒன்றை நடைபெறச் செய்து, ஆர்ச் பிஷப் மகாரியஸ் என்பவரையே இரு சாராரும் ஜனாதிபதியாக ஏற்றுக்கொள்ள வகைசெய்தது.

'வறுமையில் செம்மை' என்ற முதுமொழிக்கிணங்க இந்தியப் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நிலையில் இருந்த போதிலும், மானிட இனம் துன்புற்றபோதெல்லாம் அவர்களின் துயர் துடைக்க ஐ. நா. சபையுடன் எல்லாத் துறைகளிலும் ஒத்துழைத்து வருகின்றது. பூகம்பம், பெரும் வெள்ளம், புயல் போன்ற இயற்கைக் கோளாறுகளால் மக்கள் பாதிக்கப்பட்டு அவதிப்படும்போது அவர்களுக்குத் தேவையான மருந்துகள், குளிர்தாங்கும் உடை, தேயிலை, அழிவுற்ற வீடுகளைக் கட்டுவதற்கு ஏற்ற பொருள்களான சிமிண்ட், தகரம், இரும்புச் சாதனங்கள் போன்றவற்றைக் கொடுத்துதவி நிவாரணம் அளித்து வருகிறது. கிழக்குப் பாக்கிஸ்தான் (இப்போது பங்களாதேஷ்) இத்தகைய சோதனைகளால் துன்புற்றபோது, இந்தியா பிரதி உபகாரம் பாராது தனது கடமையைச் செய்து வந்துள்ளது. இதைப் போன்று ஈரான் நாடு, பூகம்பத்தால் பாதிக்கப்பட்டபோது இந்தியா பலவகைகளில் நிவாரணம் அளித்துள்ளது.

கொழும்புத் திட்டம் (Colombo Plan)

தென்கிழக்கு ஆசிய நாடுகளின் வளர்ச்சிக்காக ஆறு ஆண்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. இத் திட்டத்தின்படி ஒன்றுக்கொன்று உதவிபுரிந்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதே இதன் அடிப்படைக் கொள்கையாகத் தீர்மானிக்கப்பட்டது. இக் கருத்து 1950ஆம் ஆண்டு ஜுன் மாதம் பொது நல அரசுகளின் பிரதமர்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. இது 1951ஆம் ஆண்டு ஜுலை மாதம் செயல்படத்

தொடங்கியது. இத் திட்டத்தின்படி, தங்கள் நாடுகளின் வளர்ச்சிக்காக இந் நிறுவனத்தில் சேர்ந்த நாடுகள், தங்களால் இயன்ற வரை முயன்று அபிவிருத்தி அடைய வேண்டும். இந் நாடுகளுக்கு அந்நிய நாட்டவர் பொருள் அல்லது தொழில்நுட்ப அறிவு போன்றவற்றைக் கொடுத்துதவ வேண்டும். தொடக்கத்தில் இந் நிறுவனத்தில் ஆஸ்திரேலியா, கனடா, இலங்கை, இந்தியா, நியூசிலாந்து, பாக்கிஸ்தான், இங்கிலாந்துபோன்ற நாடுகள் இடம் பெற்றிருந்தன. கம்போடியா, இந்தோனேஷியா, மலேயா, பர்மா, லாவோஸ், நேபாளம், அமெரிக்க ஐக்கிய நாடுகள், வியட்நாம் போன்றவை அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளப் பட்டன. பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகள் கொழும்புத் திட்டத்தில் அங்கத்தினர்களாக இல்லாவிட்டாலும், இத் திட்டத்தின்கீழ் உதவி பெற்றிருந்தன. முதல் மூன்று ஆண்டுகளில் இந்தியா, 1,11,137 பவுன் மதிப்புள்ள பொருள்களை உதவியாக அளித்துள்ளது. மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித்தொகை பொறியியல் கல்வி, விஞ்ஞானம் போன்ற பாடங்களில் உயர் பயிற்சியளிப்பது போன்றவற்றுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தால் ஆசிய நாட்டவர், ஒருவருக்கொருவர் விஞ்ஞான அறிவு, ஆராய்ச்சியின் பயன்கள் போன்ற துறைகளில் உதவி பெற்றுப் பெரும் பயன் அடைந்துள்ளனர் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவும் பாக்கிஸ்தானும் : இந்தியாவிற்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே, இவை சுதந்திர நாடுகளாக அறிவிக்கப்பட்ட காலத்திலிருந்தே பகைமை வளர்ந்து வந்துள்ளது. இப் பகை, குறிப்பாகச் சமய அடிப்படையில் தோன்றிற்று. இவ்விரு நாடுகளும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று விரும்பி எடுத்துக் கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வி அடைந்தன. காரணம், பாக்கிஸ்தான் 1948-ல் பத்தானிய மலைவாசிகளைத் தூண்டி விட்டுக் காஷ்மீரத்தில் ஒரு பகுதியைப் பிடித்துக்கொண்ட காலம் தொடங்கி, 1971ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ஆம் நாள் இந்திய நகரங்களைத் திடீர் விமானத் தாக்குதல் நடத்தியதுவரை இரு நாடுகளும் இரண்டு போர்க்களங்களில் கடுமையாகப் போரிட்டிருக்கின்றன. சமய அடிப்படையில் ஏற்பட்ட பகைமையோடு அகதிகளின் சொத்து, கால்வாய் நீர்ப்பங்கீடு, எல்லை ஊடுருவல்கள், பாக்கிஸ்தானிலுள்ள சிறுபான்மையினரின் பிரச்சினை, அமெரிக்க ராணுவ உதவி, இவற்றுக்கு மேலாக காஷ்மீரப் பிரச்சினை போன்ற சிக்கல்களால் இரு நாடுகளுக்கும் மன வேறுபாடு ஏற்பட்டுள்ளது. பங்களாதேசம் பாக்கிஸ்தானிலிருந்து பிரிந்து செல்வதற்கு இந்தியா காரணமாக இருந்தது என்ற குற்றசாட்

டையும் கூறி, இந்தியாவைப் பகை நாடாகக் கருதி வருகிறது. இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் ஏற்பட்டுள்ள பல பிரச்சினைகளையும், 1971-ல் ஏற்பட்ட பங்களாதேஷ் போரில் கைதியாக்கப்பட்ட 93,000 வீரர்களை விடுவித்துப் பாக்கிஸ்தானுக்கு அனுப்பும் பிரச்சினை குறித்தும் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும் பாக்கிஸ்தான் பிரதமர் சுல்பீர் அலி புட்டோவுக்கும் சிம்லா ஒப்பந்தம் (Simla Pact) ஒன்று ஏற்பட்டது. இந்திய உபகண்டத்தில் அமைதி காண இம்முயற்சி எடுக்கப்பட்டது. ஆனல், அமைதிக்கான அறிகுறி ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

கூட்டுச்சேரா நாடுகளின் உச்ச மாநாடுகள் (Non-Aligned Summit Conferences)

கூட்டுச்சேராக் கொள்கையின் முக்கியத்துவம் 1955ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆசிய-ஆப்பிரிக்க (Asian-African) நாடுகள் இந்தோனேஷியா நாட்டிலுள்ள பாண்டுங் (Bandung) என்ற இடத்தில் மாநாட்டின்மூலம் உணரப்பட்டது. பர்மா, இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, பாக்கிஸ்தான் ஆகிய ஐந்து நாடுகளின் பிரதம அமைச்சர்கள் ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களிலுள்ள சுதந்திர நாடுகள் தங்களுக்குள் ஒற்றுமையை வலுப்படுத்திக்கொள்ளவும், தங்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், உலக அமைதிக்கு வழிவகை காணவும், இந்தோனேஷியாவில் உச்ச மாநாடு ஒன்று கூட்டத் தீர்மானித்தனர். 25 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஒரு நாட்டைத் தவிர, ஏனைய 24 நாடுகளும் இம் மாநாட்டில் கலந்துகொண்டன.

இம் மாநாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கென ஐ. நா. சபையில் பொதுப்பொருள் சேமிப்புத் தொகை உருவாக்குதல், தொழில்நுட்ப உதவி, வியாபாரப் பொருள்களின் தரம், விலை ஆகியவற்றை ஒழுங்குபடுத்தி, அவை முறையாக ஒவ்வொரு நாட்டிற்கும் கிடைக்க வழிவகை செய்தல், இவற்றைக் கண்காணிக்க ஓர் அதிகாரியை நியமித்தல், மூலப்பொருள்கள் கிடைக்க வகைசெய்தல், போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்துதல், தேசிய, பிராந்திய வங்கிகளை நிறுவுதல், ஆயுள் இன்சூரன்ஸ் கம்பெனிகளை ஆரம்பித்தல், அணு ஆராய்ச்சியின் பயன்களை அமைதிப் பணிகளுக்குப் பயன்படுத்துதல், இத் துறைகளில் கண்டுபிடிப்புப் பயன்களை மற்ற நாடுகளுடன் பரிவர்த்தனை செய்துகொள்ளுதல் போன்ற விஷயங்களைப்பற்றி விவாதித்தனர். அத்துடன் இந் நாடுகளுக்கிடையில் கலை, கலாசாரம், பண்பாடு, உறவுகளை வளர்த்தல் போன்ற கருத்துகளிலும் கவனம் செலுத்தினர். காலனி ஆதிக்கம், இன வேற்றுமை போன்றவற்றை

அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தனர். உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்குப் பஞ்சசீலக் கொள்கையை ஒட்டிப் பத்து அம்சங்கள் கொண்ட திட்டம் ஒன்றையும் இம் மாநாட்டில் வெளியிட்டனர். ஆசிய மக்களின் எழுச்சிக்கேற்ப இம் மாநாட்டில் கருத்துகளை வாதிட்டுப் பரிமாறிக்கொண்டமையால், இஃது ஒரு பெரும் வெற்றி மாநாடாக முடிந்தது. அத்துடன் மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்திற்கு எதிராக ஆசிய, ஆப்பிரிக்க மக்களின் எதிர்ப்பையும் இது பிரதிபலித்தது. உலக மக்கள் தொகையில் பாதிக்குமேல் உள்ள ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள், தங்களின் பிரச்சினைகளுக்கு மேற்கத்தியர்களின் தலையீடு இன்றித் தீர்வுகாண இயலும் என்றும், உலகப் போக்கையும் நிகழ்ச்சிகளையும் தங்களால் திசை திருப்ப முடியும் என்ற தன்னம்பிக்கையும் பெற்றனர். இம் மாநாட்டில் முக்கியப் பங்கு வகித்து வெற்றி பெறச் செய்த பெருமை பண்டித நேருவையே சாரும்.

1961ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடு யுகோஸ்லேவியாவின் தலைநகர் பெல்கிரேடில் கூடியது. இதைத் தொடர்ந்து 1964-ல் இரண்டாவது மாநாடு எகிப்தின் தலைநகரான கெய்ரோ நகரில் நடந்தது. பெல்கிரேட் மாநாட்டில், கூட்டுச்சேராக் கொள்கையை ஆதரித்த 25 நாடுகளும் கலந்துகொண்டன. 1964ஆம் ஆண்டு நடந்த கெய்ரோ மாநாட்டில் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்து 46 நாடுகள் கலந்துகொண்டன. கூட்டுச்சேரா நாடுகளின் மூன்றாவது மாநாடு ஜாம்பியா (Zambia) நாட்டின் தலைநகரான லூசாகா (Lusaka) என்ற நகரில் 1970ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ஆம் நாள் முதல் 10ஆம் நாள் வரை நடைபெற்றது. இதில் 54 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். உலக அமைதிக்கு அரசியலில் குறுகிய மனப்பான்மையை விடுத்து அமைதியான கூட்டுறவு நோக்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்ற பஞ்சசீலக் கொள்கையின் கருப்பொருளை மாநாடுகளில் வலியுறுத்தி வந்தனர்.

தென் ஆப்பிரிக்காவில் கையாளப்பட்டு வரும் இனவெறிக் கொள்கைக்கு எதிராக இந்தியா, 1946-லிருந்து ஆண்டுதோறும், ஐ. நா. சபையில் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. காலனி ஆதிக்கத்திற்கும், இனவெறிக் கொள்கைக்கும் எதிராக இந்தியா, தனது வெளிநாட்டுக் கொள்கையை அமைத்துக்கொண்டு அதைச் செயல்படுத்தி வருவது போற்றத் தகுந்த செயலாகும். இவ்விரு முறைகளும் உலகில் எந்த இடத்திலும், எந்த உருவிலும் இருந்தாலும், அது மனித அடிப்படை உரிமைக்கு எதிரானவை என்று

வலியுறுத்தி வந்திருக்கிறது. ரொடீசியாவில் செயல்படுத்தப் படும் இனவெறி, நிறவெறிக் கொள்கைகளுக்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்து வருவது உலகம் அறிந்ததே.

ஆப்பிரிக்க, ஆசியர்களின் ஒற்றுமையை வலுப்படுத்துவதை இந்தியா தனது அயல்நாட்டுக் கொள்கையின் முக்கிய அம்சமாகக் கொண்டுள்ளது. அந்நியர்களின் ஆதிக்கத்திலிருந்தே சமீப காலத்தில் விடுவிக்கப்பட்ட நாடாகையால், ஏனைய நாடுகளும் அந்நியர்களின் பிடியிலிருந்து ஒதுங்கிச் சுதந்திரத்துடன் வாழ வேண்டுமென இந்தியா விரும்புகின்றது. இக்கொள்கைக்கிணங்க ஆப்பிரிக்காவில் போர்ச்சுகீசியர்களின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள் விடுதலை பெறத் தன்னுலான ஒத்துழைப்புகளை நல்கி வருகின்றது. ஆசியாவில் போர்ச்சுகீசியர்களின் காலனி ஆதிக்கத்தை முதன் முதலில் அகற்றி அப்பகுதிகளை மக்களாட்சிக்குட்படுத்தியது இந்தியாவே என்பது குறிப்பிடத்தக்கது. ஐ. நா. சபையிலும், ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளுடன் இணைந்து தங்களைப் பாதிக்கும் பொதுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் இந்தியா ஒத்துழைப்பு நல்கிச் செயலாற்றி வருவதை இந் நாட்டவர் வெகு வாகப் பாராட்டி வருகின்றனர்.

ராணுவக் கூட்டிற்கு எதிப்பு (Opposition to Military Blocks)

இரண்டாவது உலகப் போருக்குப் பின் அமெரிக்காவும், ரஷ்யாவும், உலக வல்லரசுகள் என்ற நிலையை அடைந்தன. இவ்விரு நாடுகளும், தங்களுக்குள் ஏற்பட்ட பயத்தால் நட்பு நாடுகளை நாடிச் சென்றன. இம்முயற்சியின் பயனுகப் பல ராணுவக் கூட்டு உடன்படிக்கைகள் தோன்றின. முதலாளித்துவக் கொள்கைகளைக் கொண்ட அமெரிக்கா, வட அட்லான்டிக் கூட்டு நிறுவனம் (NATO), மத்திய ஆசியப் பாதுகாப்பு நிறுவனம் (MEDO), மணிலா கூட்டுஒப்பந்தம் (Manila Pact), தென் கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டு நிறுவனம் (SEATO) போன்ற ராணுவக் கூட்டுகளை உருவாக்கிப் பொது உடைமைக் (Communist) கொள் கையைக் கொண்ட நாடுகளால் தமக்கு ஆபத்து ஏற்படாதவாறு செய்துகொண்டன. இதைப்போன்று முதலாளித்துவ முறை யைக் கடைப்பிடிக்கும் நாடுகளும், அமெரிக்காவின் நட்பு நாடு களும் இணைந்து தமக்கு ஆபத்து விளைவிக்காதவாறு பொது உடைமைக் கொள்கையைப் பின்பற்றும் நாடான ரஷ்யா, மத்திய ஐரோப்பிய நாடுகளின் கூட்டு நிறுவனம் (CETO) என்ற ஒன்றை நிறுவியது. இத்தகைய கூட்டு உடன்படிக்கைகளினுல் உலகில் பீதியும், அச்சமும், அவநம்பிக்கையும் நாடுகளிடையே ஏற்பட்டு

இருக்கின்றன. இந்தப் பதற்றநிலை நீடித்தால், உலகில் அமைதிக்கு ஆபத்து ஏற்படும் என்று இந்தியா கருதியது. எனவே, இத்தகைய ராணுவக் கூட்டுகள் எதிலும் இந்தியா சேர்ந்துகொள்ளவில்லை. கொடிய ராணுவத் தளவாடங்களின் உற்பத்தி அதிகரிப்பதால், நாடுகளிடையில் போர் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன என்று இந்தியா கருதியது. இருப்பினும் அண்மையில் நம் நாட்டின் பாதுகாப்பைக் கருதியும், பாக்கிஸ்தான், சீனு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் முதலியவற்றின் தொல்லைகளிலிருந்து விடுபடவும், இந்திய-சோவியத் நட்பு உடன்படிக்கையை நாம் மேற்கொண்டுள்ளோம். இவ் உடன்படிக்கை ராணுவக் கூட்டு உடன்படிக்கையன்று என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. பல்வேறு நிலைகளிலும் சந்தர்ப்பங்களிலும் இந்தியா, சமாதானத்தை விரும்பும் நாடு என்பதை உலக அரங்கில் நிரூபித்து வந்துள்ளது. இருப்பினும், 1962-ல் இந்திய வெளிநாட்டுக் கொள்கைக்கு ஒரு சோதனைக் காலமாக இருந்தது. இந்தியாவுடன் சகோதரப் பாசமும், நட்புறவும், கொண்டுள்ளோம் என்று கூறிவந்த செஞ்சீனு 1960ஆம் ஆண்டிலிருந்தே இந்தியாவின் வட எல்லையில் சுமார் 12,000 சதுர மைல் பரப்புள்ள நிலத்தைக் கைப்பற்றிக்கொண்டு, 1962ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நமது பாதுகாப்பு வீரர்களைத் தாக்கி இந்திய எல்லைக்குள் முன்னேறியது. எதிர்பாராத இத் தாக்குதலைச் சமாளிக்க இந்தியா, பல நட்பு நாடுகளின் உதவியை நாடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நாம் இதுவரை கூட்டுச் சேராக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்த போதிலும், நமக்கு ஆபத்து நேர்ந்தகாலத்து அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் உதவி அளிக்க முடவந்தன.

இரண்டாவது சோதனையைப் பாக்கிஸ்தான் கொடுத்தது. 1965ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் காஷ்மீரிலுள்ள போர் நிறுத்தக் கோட்டைத் தாண்டி இந்திய எல்லைக்குள் பாக்கிஸ்தான் வன்முறையில் நுழைந்தது. இவ் வாக்கிரமிப்பைத் தடுக்க இந்தியா, ஆயுதந் தாங்கிப் பாக்கிஸ்தானுக்கு எதிராகப் போரிட நேர்ந்தது. இதைப்போன்று 1971ஆம் ஆண்டு மேற்குப் பாக்கிஸ்தானிய ராணுவ ஆட்சி, 30 லட்சத்திற்கு மேற்பட்ட கிழக்குப் பாக்கிஸ்தானிய மக்களைப் படுகொலை செய்தபோது, சுமார் ஒரு கோடி மக்கள் இந்திய எல்லைக்குள் பாதுகாப்புத் தேடி வந்தனர். அவர்களை 9 மாதங்கள்வரை இந்தியா உணவு, உடை, உறைவிடம் கொடுத்து ஆதரித்தது. இதன் காரணமாக இந்தியாவின் மீது பாக்கிஸ்தானியர், 1971ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் நாள் எதிர்பாராத விமானத் தாக்குதல்கள் நடத்தினர். இதற்கு

இந்தியா எதிர் நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இத்தகைய சோதனைகள் ஏற்பட்டபோதிலும், இந்தியா தனது கூட்டுச் சேராக் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றி வந்திருக்கிறது.

பண்டித ஜவகர்லால் நேரு பின்பற்றிய நடுநிலைமைக் கொள்கை காரணமாக, உலக நாடுகள் அனைத்தும் அவரை விரும்பித் தமக்குரிய உற்ற நண்பராக ஏற்றுக்கொண்டன. உலக சமாதானத்தின் தூதர் என்று அவர் புகழப்பட்டார். 1964ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் நாள் நேரு இறக்கவே, அவருக்குப் பின் இந்தியாவின் பிரதமராக லால்பகதூர் சாஸ்திரி நியமிக்கப்பட்டார். நேரு வகுத்த அயல்நாட்டுக் கொள்கையையே இவரும் பின்பற்றினர். 1965ஆம் ஆண்டு இந்தியாவிற்கும், பாக்கிஸ்தானுக்கும் போர் ஏற்பட்டபோது இரு நாடுகளும் தங்கள் பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ள வேண்டுமென ரஷ்யப் பிரதமர் யோசனை கூறினர். அத்துடன் இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியையும் அன்றைய பாக்கிஸ்தான் அதிபர் அயூப்கானையும் ரஷ்யாவிலுள்ள தாஷ்கண்டு என்ற நகரில் சந்திக்கும்படி ஏற்பாடு செய்தார். இதன்படி இரு தலைவர்களும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். இதற்குத் தாஷ்கண்டு ஒப்பந்தம் என்று பெயர். ஆனல், ஒப்பந்தம் முடிந்த அன்று இரவு, இந்தியப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி, தாஷ்கண்டிலேயே இறந்துவிட்டார்.

5. இந்தியாவின் கவர்னர் - ஜெனரல்களும் வைசிராய்களும்

1858 நவம்பர், 1	*வைக்கவுன்ட் கானிங் (பிரபு)*-Viscount (Earl) Canning.
1862 மார்ச்சு	*எல்ஜின், முதலாம் கின்கார்டின் பிரபு* Earl of Elgin and Kincardines I.
1863	*சர் ராபர்ட் நேப்பியர் (மாக்தலாவின் நேப்பியர் பாரன்)*-Sir Robert Napier (Baron Napier of Magdala).
1863	*சர் வில்லியம் டி. டெனிசன்*-Sir William T. Denison.
1864 ஜனவரி	*சர் ஜான் (பிரபு) லாரன்ஸ்*-Sir John (Lord) Lawrence.
1869 ஜனவரி	*மேயோ பிரபு*-Earl of Mayo.
1872	*சர் ஜான் ஸ்ட்ராச்சி* - Sir John Strachey.
1872	*மெர்ச்சிஸ்டவுன் நேப்பியர் பிரபு*-Lord Napier of Marchistown.
1872 மே	*பேரன் நார்த்புருக் (பிரபு)* - Baron (Earl of) Northbrook.
1876 ஏப்ரல்	*பேரன் லிட்டன் பிரபு* I - Baron (Earl of) Lytton I.
1880 ஜூன்	*ரிப்பன் (மார்க்குவிஸ்) பிரபு* - Marquess of Ripon.

1884 டிசம்பர்	டப்ரின் பிரபு (டப்ரின், அவாவின் மார்க்குவிஸ்)-Earl of Dufferin (Marquess of Dufferin and Ava)
1888 டிசம்பர்	மார்க்குவிஸ் லான்ஸ்டவுன்-Marquess of Lansdowne.
1894 ஜனவரி	எல்ஜின், கின்கார்டின் பிரபு II.-Earl of Elgin and Kincardine II.
1899 ஜனவரி, 6	பாரன் (மார்க்குவிஸ்) கெட்லஸ்டனின் கர்சான்-Baron (Marquess) Curzon of Kedleston.
1904 ஏப்ரல்	அம்த்ஹில் பிரபு-Lord of Ampthill.
1904 டிசம்பர்	பாரன் (மார்க்குவிஸ்) கெட்லஸ்டனின் கர்சான் (இரண்டாம் முறை நியமிக்கப்படுதல்)-Baron (Marquess) Curzon of Kedleston. (re-appointed).
1905 நவம்பர்	மின்டோ பிரபு II-Earl of Minto II.
1910 நவம்பர்	பென்ஸ்ஹர்ஸ்டின், ஹார்டிஞ்ஜ் பாரன் - Baron of Hardinge of Penshurst.
1916 ஏப்ரல்	செம்ஸ்ஃபோர்டு பாரன்-Baron Chelmsford.
1921 ஏப்ரல்	ரீடிங் பிரபு-Earl of Reading.
1925	லிட்டன் பிரபு-Lord of Lytton II.
1926 ஏப்ரல்	இர்வின் பிரபு-Lord of Irwin.
1929	கோஷன் பிரபு (இர்வின் பிரபு விடுமுறைக்காகச் சென்றிருந்தபோது)-Lord Goschen (during the absence of Lord Irwin on leave).
1931 ஏப்ரல்	வில்லிங்டன் பிரபு-Earl of Willington.
1934 மே-ஆகஸ்டு	சர் ஜார்ஜ் ஸ்டேன்லி (தற்)-Sir George Stanley.
1936 ஏப்ரல், 18	லின்லித்கோ மார்க்குவிஸ்-Marquess of Linlithgow.

கவர்னர்-ஜெனரல்களும், அரசப் பிரதிநிதிகளும்

(Governors-General and Crown Representatives)

(1935ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி)

1937 மார்ச்சு, 31	லின்லித்கோ மார்க்குவிஸ் – Marquess of Linlithgow.
1938 ஜூன்-அக்டோபர்	பிராபோர்ன் பாரன் (தற்) – Baron of Brabourne (offg).
1938	லின்லித்கோ மார்க்குவிஸ் – Marquess of Linlithgow.
1943	வைக்கவுன்ட் வேவல் (பிரபு)-Viscount (Earl) Wavell.
1945	சர் ஜான் கால்வில் (தற்காலிகப் பொறுப்பேற்ற) – Sir John Colvill (offg).
1947 மார்ச்சு-ஆகஸ்டு	வைக்கவுன்ட் மவுன்ட்பேட்டன் பிரபு ஐக்கிய இந்தியாவின் இறுதி வைசிராய், இந்திய டொமினியனின் 1947 - 48 முதல் கவர்னர்-ஜெனரல்-Viscount (Earl) Mountbatten (Last Viceroy of United India and First Governor-General of the Indian Dominion, 1947-48).

கவர்னர்-ஜெனரல்கள்

(Governors-General)

(இந்திய சுதந்திரச் சட்டம் இயற்றப்பட்ட பின்னர்)

இந்திய யூனியன்

1947	மவுன்ட்பேட்டன் பிரபு – Earl Mountbatten.
1947 நவம்பர்	திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி-Thiru, Chakravarthi Rajagopalachari (offg).
1948 ஜூன்	திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி.

பாக்கிஸ்தான்

1947 காயிதே - ஆஜம், எம். ஏ. ஜின்னு- Qaid-i-Azam, M. A. Jinnah.

1948 செப்டம்பர் குவாஜெ நாஜிமுத்தீன் - Khwajeh Nazimuddin.

பிரதம அமைச்சர்கள்

(Prime Ministers)

இந்திய யூனியன்

1947 பண்டித ஜவகர்லால் நேரு - Pandit Jawaharlal Nehru.

பாக்கிஸ்தான்

1947 லியாகத் அலி கான்-Liaquat Ali Khan.

இந்தியக் குடியரசின் தலைவர்

(President of the Republic of India)

1950 டாக்டர் இராஜேந்திர பிரசாத்-Doctor Rajendra Prasad.

1962 டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்- Dr. S. Radhakrishnan.

6. கால வரிசைப் பட்டியல்

(Chronology)

1857–1858	சிப்பாய்க் கலகம்.
1858	பிரிட்டிஷ் இந்தியாவை ஆங்கில அரசு, நேரடியாக ஆட்சி செய்தல். பேரரசியார் விக்டோரியாவின் அறிக்கை.
1859	கருநீலம்பற்றி வங்காளத்தில் எழுந்த தகராறுகள்
1861	இந்தியக் கவுன்சில்கள் சட்டம்.
1861	இந்திய உயர்நீதி மன்றங்கள் சட்டம்; பீனல் சட்டம் ஏற்படுத்தப்படுதல்.
1862	தலைமை நீதி மன்றங்களையும் சாதா நீதி மன்றங்களையும் இணைத்து உயர்நீதிமன்றங்கள் தோற்றம்.
1864	பூட்டான் போர்.
1865	ஐரோப்பாவுடன் தந்திப் போக்குவரத்துத் தொடக்கம்.
1868	அம்பாலாவிலிருந்து தில்லி வரையிலும் இருப்புப் பாதை அமைத்தல். ஆப்கானிஸ்தானத்தின் அமீரான ஷெர் அலி ஆறு லட்ச ரூபாயை ஆண்டு உதவித் தொகையாகப் பெறுதல்.
1870	மேயோவின் மாகாண ஏற்பாடு.
1875	பரோடா கெய்க்வாரின் வழக்கு. வேல்ஸ் இளவரசர் வருகை.
1877	டில்லிதர்பார்–இங்கிலாந்தின் அரசியார் இந்தியாவின் பேரரசியாரென அறிவிக்கப்படல்.

1878 இரண்டாம் ஆங்கில ஆப்கானியப் போர் ஆரம்பம்—தாய்மொழிச் செய்தித் தாள்கள் சட்டம்.

1881 மைசூரின் ஆட்சி, திரும்ப சுதேச அரசர்களுக்குக் கொடுக்கப்படல்.

1882 ஹண்டர் கமிஷன்.

1883 இல்பர்ட் மசோதா.

1885 இந்திய தேசியக் காங்கிரசின் முதற் கூட்டம். வங்காளத் தல சுயாட்சிச் சட்டம். மூன்றும் ஆங்கில–பர்மியப் போர்.

1886 மேல் பர்மா இணைப்பு.

1889 காஷ்மீர் மன்னர் பதவியை இழத்தல். வேல்ஸ் இளவரசர் இரண்டாம் முறையாக வருதல்.

1895 சித்ரால் படையெடுப்பு.

1897 எல்லை எழுச்சிகள். பம்பாயில் பிளேகு.

1897 பஞ்ச ஆய்வுக் குழு.

1899 கர்சான் பிரபு கவர்னர்-ஜெனரலாக நியமிக்கப் படல்.

1900 பஞ்ச ஆய்வுக் குழு.

1904 பிரிட்டிஷ் படை திபெத்திற்குச் செல்லுதல். பல்கலைக்கழகச் சட்டம். கூட்டுறவுச் சங்கங் களின் சட்டம்.

1905 முதல் முறையாக வங்காளத்தைப் பிரித்தல், மின்டோ பிரபு-கவர்னர் ஜெனரலாக நியமிக்கப் படல். இந்தியக் காரியதரிசியாக மார்லி என்பவரை நியமித்தல்.

1906 முஸ்லிம் லீக்கின் அமைப்பு. சுயராஜ்யம்பற்றிக் காங்கிரசின் தீர்மானம்.

1907 ஆங்கில- ரஷ்ய மாநாடு.

1908 செய்தித் தாள்களின் சட்டம்.

1909	மார்லி – மின்டோ சீர்திருத்தங்கள். கவர்னர்-ஜெனரல் ஆலோசனைச் சபையில் எஸ். பி. சின்ஹா என்பவரை அங்கத்தினராக நியமித்தல்.
1910	கிரீவ் பிரபு என்பவர், இந்தியக் காரியதரிசியாக நியமிக்கப்படல்.
1911	தில்லி தர்பார். வங்காளப் பிரிவினையை மாற்றியமைத்தல். இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு.
1912	தலைநகரைத் தில்லிக்கு மாற்றுதல்.
1913	இந்திய அரசாங்கத்தின் கல்வித் தீர்மானம்.
1914–1918	முதலாம் உலகப் போர்.
1915	இந்தியப் பாதுகாப்புச் சட்டம்.
1916	சாட்லர் (Sadler) ஆணைக் குழு. இந்திய தேசியக் காங்கிரசும் அகில இந்திய முஸ்லிம் லீக்கும் லக்னோவில் செய்துகொண்ட உடன்படிக்கை. சுயாட்சிக் குழுவின் அமைப்பு. பூனாவில் பெண்கள் பல்கலைக்கழகத்திற்கு அடிப்படை அமைப்பு.
1917	மக்கள் சபையில் திரு. மான்டேகுவின் அறிக்கை; இந்தியாவிற்கு அவர் வருகை.
1917—1918	அரசர் கமிஷனைப் பெற இந்தியர்கள் தகுதியுடையவர்களாகச் செய்யப்படல். இந்திய தேசிய மிதவாத சமஷ்டி. தொழிற் கமிஷனின் அறிக்கை.
1919	மான்டேகு – சேம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்—பஞ்சாப் குழப்பம். அரசாங்கப் பிரகடனம்.
1920	கிலாபத்து இயக்கம். ஒத்துழையாமை இயக்கம். பீஹார், ஒரிஸா, மாகாணங்களின் கவர்னராகச் சின்ஹா பிரபு நியமிப்பு. காங்கிரசுக்கு மகாத்மா காந்தி தலைமை வகித்தல்.
1921	சுதேச அரசர்களின் சங்கம். மாப்பிள்ளைமார்களின் புரட்சி. வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வருதல். இந்திய மக்கள் தொகையின் கணக்கெடுப்பு.

1922 திரு. மாண்டேகுவின் ராஜிநாமா.

1923 இந்தியக் கவுன்சிலில் சுயராஜ்ய வாதிகள்-உப்பு வரியைக் குறைத்தல். சில படைப் பகுதிகளின் தலைமையை இந்திய மயமாக்கும் பிரச்சினை. எட்டுப் பிரிவுக் கொள்கை.

1925 அகில இந்தியத் தாழ்த்தப்பட்டோர் சங்கம்—சீர் திருத்த விசாரணைக் குழுவின் அறிக்கை, சி.ஆர். தாஸின் மறைவு. பல்கலைக்கழகங்கள் போர்டு அமைப்பு.

1926 வேளாண்மைக் கமிஷன்.

1927 இந்தியக் கடற்படைச் சட்டம். சைமன் கமிஷன் அமைப்பு.

1928 நேருவின் அறிக்கை. வேளாண்மைபற்றி இராயல் கமிஷன் அறிக்கை.

1928—1933 நாதிர்ஷா, ஆப்கானிய அரசர்.

1929 அக்டோபர் 31-ல் இர்வின் பிரபுவின் அறிக்கை. தொழிற்சங்கத்தில் பிளவு; வேளாண்மையின் ஆராய்ச்சிக்காக இம்பீரியல் கவுன்ஸில் அமைப்பு; லாகூர் காங்கிரஸ். இந்தியத் தொழிலாளர்களைப்பற்றி ராயல் கமிஷனின் அமைப்பு.

1930 சட்ட மறுப்பு இயக்கம். சட்டக் கமிஷனின் அறிக்கை. பர்மாவில் புரட்சி. வட்டமேஜை மகாநாடு (முதற் கூட்டம்).

1931 இர்வின்-காந்தி உடன்படிக்கை. இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு. வட்டமேஜை மாநாடு (இரண்டாம் கூட்டம்).

1931 ராயல் தொழிலாளர் கமிஷனின் அறிக்கை வெளியிடப்படல்.

1931 காங்கிரஸை ஒடுக்குதல். வட்டமேஜை மாநாடு (மூன்றும் கூட்டம்). இனவழித் தீர்ப்பு. பூனா உடன்படிக்கை. இந்திய ராணுவக் கழகம், டேராடூன்.

1933	வெள்ளை அறிக்கை வெளியிடப்படல். கூட்டுப் பொறுக்குக் குழு.
1934	சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தம். இந்தியத் தொழில் நிறுவனச் சட்டம். பீஹார் பூகம்பம். இந்திய அரசியலமைப்புச் சீர்திருத்தம்பற்றிய கூட்டுக் குழு. ராயல் கடற்படை (இந்தியா).
1935	புதிய இந்திய அரசுச் சட்டம்.
1936	(ஜனவரி 21-ல்) பேரரசர் ஐந்தாம் ஜார்ஜ் இறத்தல். எட்டாம் எட்வர்டு பதவி ஏற்றலும் பதவி துறத்தலும், ஆறும் ஜார்ஜ் பதவி ஏற்றல்.
1937	(ஏப்ரல் 1-ல்) மாகாண சுயாட்சி ஆரம்பம்; இடைக்கால அமைச்சரவைகள்; ஜூனில் வைசிராயின் அறிக்கை; ஜூலை முதல் பெரும் பான்மையாய் உள்ள மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபை. சமஷ்டி நீதிமன்றம்.
1939	(செப்டம்பர் 3-ல்) இரண்டாம் உலகப் போர் ஆரம்பம். காங்கிரஸ் மந்திரி சபைகளின் ராஜினாமாவும், இந்தியாவில் அரசியல் மந்தமும்.
1940	(ஆகஸ்டு 8-ல்) லின்லித்கோ பிரபுவின் உறுதி மொழி.
1941	(டிசம்பர் 7-ல்) ஜப்பான் போரில் ஈடுபடுதல்; பெர்ல் துறைமுக நிகழ்ச்சி.
1942	(பிப்ரவரி 15-ல்) சிங்கப்பூரின் வீழ்ச்சி.
	(மார்ச்சு 7-ல்) இரங்கூனிலிருந்து வெளியேற்றம்.
	(மார்ச்சு 22ஆம் தேதி முதல் ஏப்ரல் 12 வரை) கிரிப்ஸ் தூது.
	(ஏப்ரல் 29-ல்) பர்மாவிலிருந்து வெளியேற்றம். ஆகஸ்டுப் புரட்சியும் இந்தியத் தலைவர்களைக் கைது செய்தலும்.
1943	வேவல் பிரபு கவர்னர்-ஜெனரல் பதவி ஏற்றல்; மவுன்ட்பேட்டன் பிரபு, தென்கிழக்கு ஆசியாவின் தலைமைத் தளபதியாக நியமிக்கப்படுதல்.

1944 (செப்டம்பர் 9-ல்) அரசியல் மந்தத்தைத் தீர்ப்பதற்காகத் திரு. இராஜகோபாலாச்சாரியாரின் திட்டத்தைப்பற்றிப் பேசுவதற்காகக் காந்தி-ஜின்னு பேச்சு வார்த்தை ஆரம்பம்.

(செப்டம்பர் 27-ல்) பாக்கிஸ்தான் திட்டத்திஞல் பேச்சு முறிவு.

1945 (செப்டம்பர் 19-ல்) சுய ஆட்சிக்கு இந்தியாவைத் தயார் செய்யும் பணியில் ஆங்கில அரசாங்கம் கொண்டுள்ள உறுதியை வாஞெலி மூலம் வேவல் பிரபு அறிவித்தல்.

1945 (நவம்பர் 5-ல்) இந்திய தேசிய ராணுவப்படையினரின் முதல் வழக்கின் ஆரம்பம்.

1946 (பிப்ரவரி 18-ல்) இராயல் இந்தியக் கடற்படையின் கலகம்.

(பிப்ரவரி 19-ல்) இந்தியாவிற்கு விசேஷ அமைச்சர் அனுப்ப இருப்பதை மக்கள் சபையில் அறிவித்தல்.

(ஜூன் 6-ல்) சீக்கியர்கள் திட்டத்தை நிராகரித்தல்.

(மே 2-ல்) சிம்லாவில் மாநாடு.

(மே 16-ல்) அமைச்சர் குழுத் தூதின் திட்டம் அறிவித்தல்.

(ஜூன் 10-ல்) அமைச்சர்கள் தூதுக் குழுவின் திட்டத்தைச் சுதேச அரசர்கள் தாற்காலிகமாக ஏற்றுக்கொள்ளுதல்.

(ஜூன் 16-ல்) இடைக்கால அரசு அமைப்பதற்கான திட்டத்தைப் பிரிட்டீஷ் மந்திரிசபை அறிவித்தல். இடைக்கால மந்திரிசபையில் சேர்வதற்கான முடிவை முஸ்லிம் லீக் அறிவித்தல்.

1946 (நவம்பர் 30-ல்) ஆங்கில அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக வேவல் பிரபுவுடன் இந்தியத் தலைவர்கள் இலண்டனுக்குப் புறப்படுதல்.

1946 (டிசம்பர்) அரசியல் நிர்ணய சபையின் முதற் கூட்டம்.

1947 1948ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள்ளாகவே பொறுப்பு வாய்ந்த இந்தியத் தலைவர்களுக்கு அரசாங்கத்தை மாற்றும் சிறப்பு மிக்க அறிக்கையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்தல்.

(பிப்ரவரி 20-ல்) வேவல் பிரபுவுக்குப் பிறகு வைசிராயாக மவுண்ட்பேட்டன் பிரபு நியமிக்கப் படுதல்.

(மார்ச்சு 3-ல்) பஞ்சாப்பில் வகுப்புவாதக் கலவரங்கள் தொடர்ந்து நடத்தல்; வடமேற்கு எல்லை மாகாணத்தில் வகுப்புக் கலவரம்.

(ஜூன் 3-ல்) இந்தியாவைப் பிரிக்கும் திட்டத்தை மவுண்ட்பேட்டன் பிரபு அறிவித்தல்.

(ஆகஸ்டு 15-ல்) இந்திய சுதந்திரச் சட்டம்.

1948 (ஜனவரி 30-ல்) மகாத்மா காந்தி இறத்தல்.

(ஜூன் 21-ல்) திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் கவர்னர்-ஜெனரலாக நியமனம்.

(செப்டம்பர் 11-ல்) காய்-தே ஆஜம் ஜின்னு இறத்தல்.

(செப்டம்பர்) இந்திய ராணுவம் ஹைதராபாத்தில் நுழைதல்.

1949 (நவம்பர் 26-ல்) இந்தியாவின் புதிய அரசியல் சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் கையெழுத்திடப்பட்டது.

1950 (ஜனவரி 26-ல்) புதிய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வருதல்.

1951 பூதான இயக்கத்தின் தொடக்கம். ஏழைகளுக்கு வழங்குவதற்காகத் தம் விருப்ப நிலங்களை வழங்குதல். முதல் ஐந்து ஆண்டுத் திட்டத்தின் தொடக்கம்.

1952 முதல் பொதுத் தேர்தல். இரண்டாம் எலிச பெத்து அரசியார் அரியணை ஏறுதல். இந்தியாவுடன் சந்திரநாகூரின் இணைப்பு.

1953 புதிய ஆந்திர மாநிலம் பிறத்தல். சண்டிகார், பஞ்சாபின் தலைநகரமாக ஆதல்.

1954 இந்திய அரசாங்கக் கொள்கையின் அடிப்படையாகப் பஞ்சசீலம் அறிவிக்கப்படுதல். பாண்டிச்சேரியும் காரைக்காலும் மாஹியும் ஏனமும் இந்தியாவுடன் இணைதல். மேற்குப் பாக்கிஸ்தான், கிழக்குப் பாக்கிஸ்தான் ஆகிய இரு பகுதிகளின் கூட்டாட்சியாகப் பாக்கிஸ்தான்.

1955 (மே 18-ல்) இந்து விவாகச் சட்டம்.

1956 (ஜனவரி 19-ல்) இன்சூரன்ஸ் கம்பெனிகள் அரசாங்க உடைமையாதல். (மார்ச்சு 23-ல்) இஸ்லாமியக் குடியரசாகப் பாக்கிஸ்தான் அறிவிக்கப்படுதல்.

(ஜூன் 17-ல்) இந்து வாரிசுச் சட்டம்.

(ஆகஸ்டு 4-ல்) அணு ரியாக்டரின் (reactor) வேலை தொடக்கம்.

(நவம்பர்) மொழிவாரி மாநிலப் பிரிவினை.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பம்.

கௌதம புத்தரின் 2,500ஆம் ஆண்டு நிறைவு விழா.

1957 நாளந்தாவில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு தனிப் பட்ட விழாவில், திபேத்தின் தலைலாமா, ஹுவான் சுவாங்கின் நினைவுச் சின்னத்தை அளித்தல் (ஜனவரி 12).

(ஜனவரி 13-ல்) ஹிராகுட் அணைக்கட்டின் திறப்பு. இரண்டாவது பொதுத் தேர்தல்.

முதல் சுதந்திரப் போரின் நூற்றாண்டு விழா.

1958 (ஜனவரி 13) நால்வர் அங்கத்தினராகக்கொண்ட ஒரு கலாசார தூதுக்குழு ரஷ்யாவிலிருந்து இந்தியாவிற்கு வருதல்.

(அக்டோபர் 1-ல்) மெட்ரிக் முறைகள் ஏற்பாடு.

1956 (மார்ச்சு 31-ல்) அரசியல் அடைக்கலம் கேட்டுத் தலைலாமா இந்தியாவிற்குள் நுழைதல்.

(ஏப்ரல் 17-ல்) சிந்து நதித் தண்ணீர் உபயோகம் பற்றிய இந்தியா-பாக்கிஸ்தான் உடன்பாடு.

சீன-இந்திய எல்லைத் தகராறு.

இந்தியா-போர்ச்சுகீசியத் தகராறு.

மேற்கோள் நூற்பட்டியல்
(Bibliography)

1. Roberts, P. E. —'History of British India'.
2. Keith, A. P. —'Constitutional History of India'.
3. Edwardes, M. —'British India since 1772'.
4. Allan and others—'Shorter Cambridge-History of India'.
5. Smith, V. A. —'Oxford History of India.'
6. Majumdar, R. C. and others—'Advance History of India'.
7. Moor, R. J. —'Liberalism and Indian Politics.'
8. Ingham, K. —'Reformers in India'.
9. Edwardes, M.—'The Last Year of British Rule in India'.
10. Desai, A. K.—'Social Background of Indian Nationalism'.
11. Packianathan, S. I.—'Modern India'.
12. Dutta, K. K. —'Text-Book of Modern Indian History'.
13. Garratt and Thompson—'Rise and Fulfilment of British Rule in India'
14. Rawlinson —'India, A Cultural History'.
15. Dodwell, H. H. —'A. Sketch of the History of India, 1858-1918'.
16. Davies, C. C. —'Problem of the North-West Frontier (1932)'.

கலைச்சொற்கள்

A

Advisory Committy	—	ஆலோசனைக் குழு
Administration	—	நிர்வாகம், ஆட்சி
Agent	—	ஏவலாள், பிரதிநிதி
Alderman	—	நகராட்சி மன்ற உறுப்பினர்
Autonomy	—	சுய ஆட்சி, தன்னாட்சி
Adult franchise	—	வயதுவந்தோர் வாக்குரிமை
Arms Act	—	படைக்கலச் சட்டம்
Auxiliary forces	—	துணைப் படைகள்
Auxiliary studies	—	துணை அறிவியற் கலைகள்
Amendment	—	திருத்தம்
Assembly	—	அவை, சபை
Aviation	—	வான் போக்குவரவு
Aristocracy	—	உயர்குடி, உயர்குடி ஆட்சி
Anarchy	—	அரசியல் குழப்பம், ஆட்சி குலைந்த நிலை
Annexation	—	வல்லிணைப்பு
Annulment	—	ரத்துச் செய்தல், தள்ளிவிடல்
Anti-colonization	—	குடியேற்ற எதிர்ப்பு
Antiquities	—	தொல்பொருள்கள்
Arbitration	—	நடுவர் தீர்ப்பு
Armament race	—	ஆயுதப் பெருக்கப் போட்டி
Armed forces	—	போர்ப்படை
Armistice	—	போர்நிறுத்த உடன்பாடு
Article of Constitution	—	அரசியல் அமைப்பு
Assasination	—	கொலை
Association	—	சங்கம்
Assurance	—	உறுதி
Atheism	—	நாத்திகம்

B

Balance of Trade	—	வணிகச் சமநிலை
Ballot	—	தேர்வு
Balance of Power	—	சக்திச் சமநிலைக் கொள்கை
Ban	—	தடை உத்தரவு
Ballot	—	தேர்வு, மறைவு வாக்கெடுத் தேர்தல்
Banishment	—	நாடு கடத்தல்
Barricades	—	தடுப்பரண்கள்
Backward class	—	பிற்பட்ட வகுப்பு
Ballot paper	—	வாக்குச் சீட்டு
Basic Law	—	ஆதாரச் சட்டம்
Bengal Tenancy Act	—	வங்காளக் குடிவாரச் சட்டம்
Bi-cameral Legislature	—	ஈரங்கச் சட்டசபை
Bill	—	சட்ட வரைவு, மசோதா
Bill of Rights	—	உரிமைகள் மசோதா
Board of Control	—	கட்டுப்பாட்டு வாரியம், ஆணைக்குழு, கண்காணிப்புக் குழு
Board of Directors	—	இயக்குநர் வாரியம்
Board	—	சபை, வாரியம்
Bolshvik party	—	போல்ஷ்விக் கட்சி
Boycott	—	புறக்கணிப்பு
Blackade	—	கடல் மறியல், முற்றுகை
Breach of trust	—	நம்பிக்கை மோசம்
Bribery	—	இலஞ்சம்
Budget	—	வரவுசெலவுத் திட்டம்
Bureau	—	நிலையம்
Bureaucracy	—	அதிகாரவர்க்கம்
Buffer-state	—	இடைப்படு நாடு
Bund	—	கூட்டமைப்பு, கூட்டரசு
By-law	—	துணைச்சட்டம்

C

Cabinet	—	அமைச்சரவை
Cabinet Mission	—	அமைச்சர் தூதுக் குழு
Census	—	குடிக் கணக்கு
Charter Aet	—	சாசனச் சட்டம், பட்டயச் சட்டம்

Chief Commissioner	—	தலைமை ஆணையர்
Chief Justice	—	தலைமை நீதிபதி
Civil	—	பொதுத்துறை, ஊரியத்துறை
Civil disobedience	—	சாத்துவிகச் சட்ட மறுப்பு
Code	—	சட்டத் தொகுப்பு
Co-existence	—	ஒருங்கிருத்தல், சகவாழ்வு
Commission	—	தரகு, குழு, ஆணைக்குழு
Communal electorates	—	வகுப்புவாரித் தேர்தல் தொகுதி
Constitution	—	அரசியலமைப்பு
Constituency	—	வாக்காளர்த் தொகுதி
Constituent Assembly	—	அரசியல் நிர்ணய சபை
Corporation	—	மாநகராட்சி
Council of States	—	நாட்டு மேலவை
Covenanted servants	—	ஒப்பந்த அலுவலாளர்கள்
Communal Representation	—	வகுப்புவாரி அல்லது இனவழி பிரதிநித்துவம்
Coalition Government	—	கூட்டு அரசாங்கம்
Confederation	—	நாடுகளின் இணைவு
Communist manifesto	—	பொதுவுடைமை அறிக்கை
Coercion Act	—	அடக்குமுறைச் சட்டம்
Colonial power	—	குடியேற்ற நாடுடை அரசு
Colony	—	குடியேற்ற நாடு
Committee	—	குழு
Commander-in-Chief	—	படைத்தலைவர், தளபதி
Convention	—	மாநாடு, உடன்படிக்கை, வழக்காறு
Conservative	—	பழைமைவாதி
Concordal	—	ஒற்றுமைப் பத்திரம்
Covenant	—	உடன்படிக்கை
Conciliation	—	சமரசம்
Concurrent list	—	பொதுத்துறைப் பட்டியல்
Conscription	—	கட்டாயப் படைச்சேர்ப்பு
Cosent	—	சம்மதம், இசைவு
Conspiracy	—	சதி
Chairman	—	அவைத் தலைவர்
Chamber of Commerce	—	வணிக மன்றம்
Civil liberty	—	மக்களுரிமை
Civil war	—	உள்நாட்டுப் போர்
Clan	—	வகுப்பு

Clauses — பிரிவுகள்
Classless Society — வகுப்பற்ற சமுதாயம்

D

Deficit — பற்றுக்குறை
Defence of India Act — இந்தியப் பாதுகாப்புச் சட்டம்
Declaration of Independence — விடுதலை அறிக்கை
Democracy — மக்களாட்சி, ஜனநாயகம்
Domination — ஆதிக்கம்
Dependency — சார்பு நாடு
Defact — உண்மையில், நடைமுறையில்
De Jure — சட்டப்படி
Depreciation — மதிப்பு இறக்கம், குறைவு
Deadlock — முட்டுநிலை
Documents — பத்திரங்கள், ஆவணங்கள்
Dual alliance — இரட்டைக் கூட்டுறவு
Director — இயக்குநர்
Divided — பிரிவினை
District — மாவட்டம்
Diplomacy — அரச தந்திரம், வெல்திறம்
Dominion — தன்னுட்சியுடன் கூடிய குடியேற்ற நிலை, டொமினியன் நிலை
Duke — கோமகன், டியூக்
Duchies — கோமக நாடுகள்
Durbar — அரசரவை, தர்பார்
Dyarchy — இரட்டையாட்சி

E

East India Company — கிழக்கிந்திய வணிகக்குழு (கம்பெனி)
East India House — கிழக்கிந்தியக் கம்பெனி: அலுவலகம்
Electorate — தேர்தல் தொகுதி, வாக்காளர்த் தொகுதி
Edict — ஆணை, கட்டளை
Electors — தேர்வாளர்கள்
Empire — பேரரசு
Emperess — பேரரசி

Era — சகாப்தம், ஆண்டு, காலம், ஊழி

Emancipation — விடுதலை

Embassy — தூதுக்குழு, தூதர் பணிமனை, தூதரகம்

Epoch — முக்கியக் காலப்பகுதி, வரலாற்றில் முக்கியக் கட்டம்

Economic equality — பொருளாதாரச் சமத்துவம்

Economic planning — பொருளாதாரத் திட்டம்

Efficiency bar — தகுதிக் கட்டம்

Election — வாக்கெடுப்பு

Emergency powers — நெருக்கடிநிலை அதிகாரங்கள்

Emigration — குடியேற்றம்

Emissary — தூதன்

Emolument — ஊதியம்

Enactment — சட்டம், சட்டம் செய்தல்

Enclaves — ராஜ்யத் திட்டுகள்

Enfranchisement — வாக்குரிமை அளிப்பு

Envoy — தூதன்

Equity — நியாயம், அறம்

Espionage — உளவறிதல், ஒற்றறிதல்

Estate — ஜமீன்

Ethnography — மக்களின் விவர இயல்

Ethnology — மக்களின் இயல்

Ethics — ஒழுக்கவியல்

Evolution — பரிணாமம்

Excise duty — ஆயத் தீர்வை

Executive Committee — செயற்குழு, ஆட்சிக்குழு

Extremists — தீவிரவாதிகள்

External security — புறநிலைப் பாதுகாப்பு

Exile — நாடு கடத்தல்

Exclusive right — தனி உரிமை, அதிகாரம்

Exploitation — சுரண்டல்

Ex-offico president — பதவி முறையால் தலைவர்

External affairs — வெளிநாட்டு விவகாரங்கள்

Extract — வடிப்பு, பொறுக்கு

Extraordinary powers — சிறப்பதிகாரங்கள்

F

Factors — கூறுகள்
Fascism — பாசிசம்
Favouritism — தனிச்சலுகை
Federal Constitution — கூட்டாட்சி அமைப்பு
Federal Court — கூட்டாட்சி நீதிமன்றம்
Federal State — கூட்டாட்சி அரசு
Federation — கூட்டாட்சி
Feudatory — திறை அரசு
Flexible — நெகிழ்வுடைய, மாற்றக்கூடிய
Foreign policy — அயல்நாட்டுக் கொள்கை
Franchise — வாக்குரிமை, ஓட்டுரிமை
Fraternity — சகோதரத்துவம்
Free election — தடையிலாத் தேர்தல்
Functions — பணிகள்
Fund — நிதி
Fundamental rights — அடிப்படை உரிமைகள்
Fief — மானியம்
Field Marshall — படை உயர்தனித் தலைவர்
Foreign Secretary — அயல்நாட்டு அமைச்சர்
Forced loan — கட்டாயக் கடன்
Free trade — தடையிலா வாணிகம்
Freedom of expression — பேச்சுரிமை
Freedom from fear — அச்சமின்றி வாழும் உரிமை
Freedom from want — தேவைகளைப் பெறும் உரிமை
Freedom of worship — வழிபாட்டுரிமை

G

Garrison — காவற்படை
Gandhism — காந்தீயம்
Gazette — கஜட்
General Assembly — பொதுச் சபை
Geographical factors — நில இயல் கூறுகள்
Genealogy — குடிவழி
Genesis — தொடக்கம், தோற்றம்
General will — பொதுமக்கள் விருப்பம்
Genocide — இன அழிப்பு
Geopolitics — பூதத்துவ அரசியல்
Government — அரசாங்கம், துரைத்தனம்

Government, Responsible	—	பொறுப்புடை ஆட்சி
Government, Securities	—	அரசாங்கக் கடன் பத்திரங்கள்
Government, Self	—	சுயாட்சி
Governor	—	ஆளுநர், கவர்னர்
Governor-General	—	தலைமை ஆளுநர், கவர்னர் ஜெனரல்
Grade	—	தரம்
Great war	—	உலகப் போர்
Great Powers	—	வல்லரசுகள்
Grand Alliance, the	—	பெருங்கூட்டு
Gun boat	—	சிறு பீரங்கிப் படகு
Guerilla warfare	—	கொரில்லாப்போர்முறை
Grand monarchy	—	மிக்குயர் முடியாட்சி
Grand master	—	மிக்குயர் ஆட்சித் தலைவர்

H

Hereditary claim	—	பரம்பரை உரிமை
Heresy	—	புறச்சமயம்
Historical Geography	—	வரலாற்று நிலநூல்
Hisorical Method	—	வரலாற்று முறை
History	—	வரலாறு
Historian	—	வரலாற்றறிஞன்
Hostage	—	பிணை
Homage	—	இறை வணக்கம், கீழடக்கம்
Homogeneity	—	ஒரே சீரான அமைப்பு, ஓரினத் தன்மை
Home Government	—	உள்நாட்டு அரசாங்கம்
Home rule	—	தன்னாட்சி
Home policy	—	உள்நாட்டுக் கொள்கை
Holy land	—	புண்ணிய பூமி
Humanitarian	—	மனிதாபிமானம்
Huns	—	ஹூணர்கள்
Home Rule Movement	—	தன்னாட்சி இயக்கம்
Honorarium	—	நன்மதிப்பூதியம், கௌரவ ஊதியம்
Hostilities	—	பகைமைச் செயல்கள்
House of Assembly	—	சட்டசபை
House of Commons	—	மக்கள்சபை
House of Representatives	—	பிரதிநிதிகள் சபை

I

Idealism	— கொள்கை
Illegitimate	— முறையற்ற
Immigration	— குடியிறக்கம்
Illegality	— சட்ட விரோதம்
Immemorial	— தொன்றுதொட்டு
Impeachment	— துரோகக் குற்ற விசாரணை
Imperialism	— ஏகாதிபத்தியம், ஏகாதிபத்தியக் கொள்கை
Incorporation	— இணைத்தமைத்தல்
Independence	— விடுதலை, சுதந்திரம்
Indian Administration	— இந்திய ஆட்சி நிர்வாகம்
Individualism	— தனியாள் உரிமைக் கொள்கை
Initiative	— தொடக்க உரிமை
Insecurity	— பாதுகாப்பின்மை
Integration	— ஒன்றுபடுதல், ஒருங்கிணைத்தல்
Interim Government	— இடைக்கால அரசாங்கம்
Interegnum	— ஆட்சி இடையீடு
Inter State	— நாடுகளுக்கிடைப்பட்ட
Investiture	— அதிகார நியமனச் சடங்கு
Inheritance	— வழியுரிமையாகப் பெறுதல், தாயம்
International Relation	— பன்னாட்டுத் தொடர்பு
Isolation	— தனிப்படுத்துதல்
Internationalism	— பன்னாட்டு ஒற்றுமை உணர்வு
Invasion	— படை எடுப்பு
Indemnity	— நட்டஈடு
Institutions	— நிலையங்கள்
Interdict	— தடை ஆணை
International arbitration	— சர்வதேச மத்தியஸ்தம்
Investiture contest	— பதவிச்சின்னப் போட்டி
Investment	— முதலீடு
Ipso facto	— அதே காரணத்தினால்
Irrationalism	— பகுத்தறிவின்மை
India Office	— இந்திய அமைச்சர் அலுவலகம்
Indian Civil Service	— இந்திய சிவில் பணி, இந்தியப் பொதுப் பணி
Instrument of accession	— கூட்டாட்சி ஏற்பு, ஒப்பந்தப் பத்திரம்

Industrial Commission — தொழில் ஆய்வுக்குழு
Imperial power — பேரரசு அதிகாரம்
Implementation — செயற்படுத்துதல்
Implied power — பொதிந்துள்ள அதிகாரம்
Indian Council Act — இந்திய சட்டசபைச் சட்டம்
Indian Nationalism — இந்திய தேசிய இயக்கம்
Indirect election — மறைமுகத் தேர்தல்
Individual Satyagrah — தனி நபர் சாத்விக மறுப்பு, சத்தியாக்கிரகம்
Injunction — தடைக் கட்டளை
Interium stay — இடைக்காலத் தடையாணை
Inquiry — ஆய்வு

J

Joint Parliamentary — பாராளுமன்றக் கூட்டுக்குழு அறிக்கை,
Committee Report — கூட்டுச் சட்டசபை
Joint Session — கூட்டு அமர்வு
Joint Select Committee — கூட்டுத் தேர்வுக் குழு
Judges — நீதிபதிகள்
Judgment — தீர்ப்பு, நீதி முடிவு
Judicial Review — நீதிப் புனராய்வு
Judiciary — நீதித்துறை
Jurisdiction — அதிகார எல்லை
Jurist view — சட்ட வல்லுநர் கருத்து
Juriprudence — சட்ட இயல், சட்டத் தத்துவம்
Justice — நியாயம், நீதி
Justice of peace — அமைதிகாண் நீதிபதிகள்
Juvenile offenders — இளங் குற்றவாளிகள்
Jesuits — ஏசு சங்கத்தார்
Jesuit fathers — ஏசு சங்கப் பாதிரிகள்
Jews — யூதர்கள்
Jesuit order — ஏசு சபை அமைப்பு
Jury — தீர்ப்புச் சான்றுளர் குழு
Joint Stock Company — கூட்டுப் பங்குக் கம்பெனி
Jus Civil (Civil Law) — சிவில் நீதி, சட்டம்
Jus Gentrum (Law of Nations) — நாடுகளின் நீதி
Jus Naturale (Natural Law) — இயற்கை நீதி
Judicious patron — நடுநிலைப் புரவலர்

K

King — அரசர், மன்னர்
Kingship — அரச பதவி, கோன்மை
Kinship — உறவு
King's Council — அரசர் ஆலோசனை சபை
Knight — 'நைட்' என்னும் வீரன்
Kinghthood — நைட் பட்டம்
Kingdom — அரசு

L

Labour Party — தொழிற்கட்சி
Labour Front — தொழிலாளர் முன்னணி
Labour Organisation — தொழில் அமைப்பு
Laity, the — லௌகிகர்
Land tenure — நில உரிமைமுறை
Leadership — தலைமை
League of Nations — சர்வ தேசச்சங்கம்
Legal Sovereignty — சட்டப்படியான அரசுரிமை
Legislation — சட்டம் இயற்றல்
Legislative Assembly — சட்டசபை
Legislative Council — மேல் சட்டசபை
Legislature — சட்டசபை
Liberalism — தாராளத்தன்மை
Local Administration — ஸ்தல ஸ்தாபன ஆட்சி, தல ஆட்சி, வட்டார ஆட்சி
Localism — தன்தலப் பற்று
Lokh Sabha — மக்கள் சபை
Layalty — பற்று, விசுவாசம்
Lower House — கீழ்ச் சபை
Law and Order — சட்டமும் அமைதியும்
Laissez faire — தலையிடாமை
League — சங்கம்
Legacy — உயிலுடைமை
Lieutenant — துணைத்தலைவர், படைத் தலைவர்
Liberals — தாராளவாதிகள்
Licensing Act — அனுமதிச் சீட்டுச் சட்டம்
Lingua Franca — பொதுமொழி

Liberty — உரிமை
Land-lord — நிலக்கிழார்
Lawful — சட்டத்திற்குட்பட்ட
Law of inheritance — மரபு முறைப்படி பெறும் சட்டம்
Leader of the House — சட்டமன்றத் தலைவர்
Legate — மதகுருவின் தூதர்
Linguistic — மொழிசார்ந்த
Lexicography — அகராதிக் கலை
Lend lease system — கடன் குத்தகைத் திட்டம்

M

Majority community — பெரும்பான்மை வகுப்புகள்
Mandate — முடிவு
Material progress — லௌகீகத் துறையில் முன்னேற்றம்
Martial Law — ராணுவச் சட்டம்
Meritime Supremacy — கடலாதிக்கம்
Magistrate — குற்றத் தண்டனை அதிகாரி
Massacre — படுகொலை
Martyr — உயிர்த்தியாகி
Martyrdom — உயிர்த்தியாகம்
Mandatory system — காப்பு முறை
Mayor — தலைநகரத் தலைவர்
Maritime spirit — கடலோடும் ஊக்கம்
Mercenary army — கூலிப்படை
Metropoliton — தலைநகரைச் சார்ந்த
Middle age — இடைக்காலம்
Mediaeval period — இடைக்காலம்
Mercantile system — வணிகக் கூட்டுமுறை
Missionaries — சமயம் பரப்பும் குழுவினர்
Moderate — மிதவாதி
Modern period — தற்காலம்
Monopoly — தனி உரிமை
Monarchy — முடியரசு
Moral rearmament — புதிய அறநெறிக் காப்பு
Mutiny — படைக்கலகம்
Money Bill — பண மசோதா
Movement — இயக்கம்

Municipality — நகராட்சிக் கழகம்
Moral teachings — ஆன்ம போதிப்பு
Management — நிர்வாகம்
Managing body — நிர்வாகக் குழு
Manifesto — நோக்க விளக்கம்
Manouvers — தந்திரம்
Materialism — பொருள் சார்பு
Matriarchal system — தாய்வழி முறை
Mediation — மத்தியஸ்தம், நடுநிலைத் தீர்ப்பு
Mercantalism — வர்த்தகத் தத்துவம்
Methodology — செயல் முறை இயல்
Migration — குடிப்பெயர்ச்சி
Military Alliance — ராணுவ உதவி ஒப்பந்தம்
Minister — அமைச்சர்
Ministry — அமைச்சரவை
Minorities — சிறுபான்மை வகுப்புகள்
Mobocracy — பாமரக் கும்பல் ஆட்சி
Monism — ஒருமைக் கோட்பாடு

N

Nation — நாட்டு இனம், நாட்டினர்
Nationality — நாட்டினம்
National Character — தேசியப் பண்பு
National Assembly — நாட்டுச்சபை
National Council — தேசிய ஆலோசனைக் குழு
Nationalism — நாட்டுணர்ச்சி
Nationalisation — அரசுடைமையாக்கல்
Native States — சுதேச அரசுகள்
Navy — கடற்படை
Naval battle — கடற்போர், நாவாய்ப் போர்
Navigation — நீர்வழிச் செலவு
Naturalisation — குடியுரிமை பெறுதல்
Naval power — நாவாய் வலிமை, கடலாதிக்க நாடு
National Guard — தேசியக் காவற்படை
Nation making — நாடு உருவாதல்
National State — தேசிய அரசு
Natural rights — இயல்புரிமை
Nazism — நாசிக் கொள்கை

Neutrality — நடுநிலைமை
Nobility — பிரபுத்துவம் (பிரபுக்கள்)
Non-Co-operation Movement — ஒத்துழையாமை இயக்கம்
Non-violence — அகிம்சை
News chronicle — காலமுறைச் செய்திக்கோவை
Negotiation — உடன்படிக்கை ஏற்பாடுகள்
Neutrality — நொதுமல் கொள்கை, நடுநிலை
Non-alignment — கூட்டுச் சேராமை
Nomads — நாடோடிகள்
Novice — புதுவன்
Non agression — சாத்விகம், வலுவந்தமின்மை
Non-intervention — தலையிடாக் கொள்கை
Non-official — அரசுப் பணித்துறை சாராதவர்
Null and void — முற்றிலும் செல்லாது

O

Oath — உறுதிமொழி
Oath of allegiance — விசுவாச உறுதி, நம்பகச் சூளுரை
Office — பதவி
Official hierarchy — பதவி ஏணி, உத்தியோக வரிசை
Opposition, the — எதிர்க்கட்சி
Organisation — அமைப்பு
Ordinance — தனி ஆணை, அவசரச் சட்டம்
Orthodox — வைதிகம்
Out law — சமூகத்திலிருந்து விலக்கப் பட்டவன்
Overseas Empire — கடல் கடந்த பேரரசு
Over-Lordship — ஆதிபத்தியம்
Over-riding power — மீறும் அதிகாரம்
Ostracism — நாடு கடத்தல்
Occupation — வேலை
Occupancy — அனுபோக உரிமை
Organisation — நிறுவன அமைப்பு
Origin — தோற்றுவாய்
Quasi-Government — ஆட்சிமுறை போன்ற
Quasi-Parliamentary — பாராளுமன்றத்தைப் போன்ற

Partition	—	பிரிவினை
Pacifist	—	அமைதிக் கொள்கையினர்
Passive resistance	—	சாத்வீக எதிர்ப்பு
Peaceful co-existence	—	அமைதியாக ஒன்றிவாழ்தல்
Persecution	—	துன்புறுத்தல்
Periodical	—	சஞ்சிகை, பருவ வெளியீடு
Plantation	—	குடியேறிடம், தேயிலை, காப்பித் தோட்டம்
Preamble	—	தோற்றுவாய், முகவுரை
Parliament	—	பாராளுமன்றம்
Parliamentary	—	பாராளுமன்றத்திற்குரிய
Party Government	—	கட்சி அரசியல்
Party system	—	கட்சி முறை
Paternalism	—	தந்தை தன்மை
Patriarchal	—	தந்தை வழிமுறை
Patriotism	—	நாட்டுப்பற்று
Patronage	—	பேராதரவு
Penalty	—	தண்டனை
Pact	—	ஒப்பந்தம்
Primogeniture law of	—	மூத்தமகன் சொத்துரிமைச் சட்டம்
Picketing	—	மறியல்
Plebiscite	—	மக்கள் வாக்கெடுப்பு
Pluralism	—	பன்மைக் கொள்கை
Pluralists	—	பன்மைக் கொள்கையர்
Policy	—	கொள்கை, கைக்கோள்
Political parties	—	அரசியல் கட்சிகள்
Political philosophy	—	அரசியல் தத்துவம்
Political Science	—	அரசியல்
Political Sovereignty	—	அரசியல் இறைமை
Political Theory	—	அரசியல் கோட்பாட்டியல்
Polis	—	நகரம்
Politics	—	அரசியல்
Polity	—	அரசியல் அமைப்பு
Precedent	—	முன்நிகழ்வு, மேற்கோள்
Political breakdown	—	அரசியல் முறிவு
Political traditions	—	அரசியல் மரபுகள்
Prerogative	—	தனிச்சிறப்புரிமை

Principality	சிற்றரசன் நாடு
Protectorate	காப்பாளர் அரசு
President	தலைவர்
Prima facie	முதற் பார்வையளவில்
Prime Minister	பிரதம அமைச்சர்
Primitive	பூர்வீக
Principle	விதி, தத்துவம்
Private ownership	தனியார் உடைமை
Privy Council	பிரிவி கவுன்சில்
Proclamation	பேரறிக்கை, பிரகடனம்
Proletariate	பாட்டாளிகள்
Promulgation	அரசறிக்கை
Propaganda	பிரச்சாரம், விளம்பரம்
Property	சொத்து, உடைமை
Proportional representation	விகிதப் பிரதிநிதித்துவம்
Prorogue	ஒத்திவைப்பு
Protectorate	காப்பரசு நாடு
Provincial autonomy	மாநில சுயாட்சி
Provincial Government	மாகாணத் துரைத்தனம், மாநில அரசு
Public Administration	பொதுத்துறை ஆட்சி
Public Finance	அரசு நிதி
Public openion	பொதுமக்கள் கருத்து
Public relations	பொதுநல உறவு
Public bill	பொதுவரைவு
Public debt	பொதுக் (அரசாங்க) கடன்
Public expenditure	பொதுச் (அரசாங்க) செலவு
Puisne (Judge)	சாதாரண நீதிபதி
Paramountcy	தலைமை அதிகாரம்
Penal law	தண்டனைச் சட்டம்
Pension	ஓய்வுக்கால ஊதியம்
Permanent land revenue settlement	நிலையான நிலவரித் திட்டம்
Proportion	விதாசாரம்
Private bill	தனிநபர் வரைவு
Police Service	காவற்பணி

Q

Quasi-Governmental — ஆட்சிமுறை போன்ற
Quorum — கோரம், கணிசமான, குறைந்த அளவு எண்ணிக்கை
Quota — பங்கு வீதம்
Quadruple Alliance — நான்முனை உடன்பாடு

R

Race — மக்கள், இனம்
Radicalism — தீவிரவாதம்
Reproachment — இணைந்துற வாழல்
Rajpramukh — இராசப் பிரமுகர்
Reactionary — பிற்போக்காளன்
Recall, Right of — மீட்புரிமை
Red tapism — சிவப்புநாடா முறை
Referendum — குடி ஒப்பம்
Reformation — சீர்திருத்தம்
Regionalism — வட்டாரத்துவம்
Regulation — ஒழுங்கு விதிகள்
Reparation — போர் நட்ட ஈடு, இழப்பீடு
Repeal — சட்ட இரத்து
Report — ஆய்வறிக்கை
Republic — குடியரசு
Republicanism — குடியரசுக் கொள்கை
Repudiation — நிராகரிப்பு
Representation — பிரதிநிதிக் கொள்கை
Reserved Subjects — ஒதுக்கிய துறைகள்
Residuary powers — எஞ்சிய அதிகாரங்கள்
Resolution — தீர்மானம்
Responsibility, Collective — கூட்டுப் பொறுப்பு
Retrospective — பின்னோக்கிய
Review — மறுநோக்கு, மறு ஆய்வு
Revisionism — திருத்தவாதம்
Revisionists — திருத்தவாதிகள்
Revival — மறுமலர்ச்சி, உயிர்ப்பித்தல்
Revocation — அதிகாரத்தை ரத்துச்செய்தல்
Revolution — புரட்சி
Reprisal — பழிவாங்குதல், இழப்பீடு

Representative — பிரதிநிதி
Regime — ஆட்சிமுறை
Reunion — திரும்ப ஒன்றுபடுதல்
Relief and rehabilitation — நிவாரணமும், மறுவாழ்வளிப்பும்
Reorientation — புதுநோக்கம்
Reign of terror — பயங்கர ஆட்சி
Reformatory — திருத்தகம்
Republic — குடியரசு
Resources — சாதனங்கள், வளஆதாரங்கள்
Renaissance — மறுமலர்ச்சி
Resignation — பதவி துறத்தல், கைவிடல்
Rival claimants — உரிமைப் போட்டியினர்
Rebellion — புரட்சிக் கலகம்
Remedial measures — பரிகார நடவடிக்கைகள்
Responsible Government — பொறுப்பாட்சி
Resident — நிலையர் (ரெசிடெண்ட்)
Reinforcement — படைவலுப் பெருக்கு
Regiment — படைப் பகுதி
Revolutionaries — புரட்சியாளர், புரட்சி செய்கின்றவர்
Representative Government — பிரதிநிதித்துவ ஆட்சி
Romantic — புதுமை உணர்வு ஊட்டுகிற
Right to equality — சமத்துவ உரிமை
Right to Freedom — உரிமையாக வாழும் உரிமை
Right to property — சொத்துரிமை
Right from exploitation — சுரண்டப்படாமல் வாழும் உரிமை
Rule of law — சட்ட நீதி
Right of citizenship — குடிமை யுரிமை

S

Self-Government — சுயாட்சி, தன்னாட்சி
Separation of Executive from the Judiciary — நீதி நிர்வாகப் பிரிவினை
Servants of Indian Society — இந்தியத் தொண்டர் சங்கம் (கழகம்)
Session — அமர்வு

Speaker — அவைத் தலைவர், சபாநாயகர்
Subsidiary system — துணைப்படைத் திட்டம்
Sufferage — வாக்குரிமை
Subsidy — காப்புப் பணம், ஈர்ப்புப்பணம்
Supreme Court — தலைமை நீதிமன்றம்
Self-determination — தனியாட்சிப் பண்புரிமைக் கொள்கை
Self-preservation — தற்காப்பு
Secretary of State — இந்தியா அமைச்சர்
Statutory Civil Service — தேர்வின்றிச் சட்டவாயிலாக நியமிக்கப்பட்ட சிவில்பணி
Schism — சமயப்பிளவு, கட்சிப்பிளவு, உட்பிரிவு
Secretary-General — தலைமைச் செயலாளர்
Self-Governing Colony — சுயாட்சிக் குடியேற்ற நாடு
Senior — முன்னவர்
Senate — செனட் சபை
Separation of powers — அதிகாரப் பிரிவினை
Social contract — சமூக ஒப்பந்தம்
Secession — நாடு பிரிதல்
Second Chamber — மேல்சபை, இரண்டாம் சபை
Secular State — சமய சார்பற்ற நாடு
Shadow Cabinet — பின்னணி அமைச்சரவை
Sine die — நாள் குறிப்பிடாமல்
Social Insurance — சமூக ஈட்டுறுதி
Social Legislation — சமூக நலச் சட்டம்
Socialisation — பொதுஉடைமையாக்கல்
Socialism — சமதர்மம்
Social Security — சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பு
Social pattern of Society — சமதர்மச் சமூக அமைப்பு
Society — சமுதாயம்
Sovereignty — இறைமை
Staff — பணியாளர்
State — அரசாங்கம், நாடு, மாநிலம், அரசு
State Administration — மாகாண ஆட்சி, மாநில ஆட்சி
State enterprise — அரசாங்கத் தொழில்
Statemanship — அரசியல் வல்லமை
State of Nature — இயற்கை நிலை

Stateless Society — நாடற்ற சமுதாயம்
State suzerain — மேலாதிக்க அரசு
Status, Legal — சட்டப்பூர்வநிலை
Statute Law — சட்டநீதி
Statutory — சட்டப்பூர்வ
Statutory powers — சட்டப்பூர்வ அதிகாரங்கள்
Suppression — அடக்குமுறை
Supermacy — ஆதிக்கம். மேம்பாடு
Suspensive veto — தாற்காலிக மறுப்பாணை
Stamp duty — முத்திரைக் கட்டணம்
Standing army — நிலைப்படை
Strategic — படைத்துறைச் சூழ்ச்சிவாய்ந்த
Status quo — நடைமுறை நிலை
Standard of life — வாழ்க்கை நிலை
Suspending power — நிறுத்திவைக்கும் அதிகாரம், விலக்கும் அதிகாரம்

T

Tanks — இயங்கும் கோட்டை, டாங்கிகள்
Territory — இடம், நிலம்
Tenancy Act — குடிவாரச் சட்டம்
Tenure — பதவிக்காலம்
Theosophical Society — பிரம்மஞான சபை
Transferred Subjects — மாற்றப்பட்ட துறைகள்
Transition period — நிலைமாறும் காலம்
Treasury — கருவூலம்
Truce — தாற்காலிக உடன்பாடு
Tory — டோரி கட்சி
Territorial waters — நாட்டதிகாரத்திற்குட்பட்ட கடற்பகுதிகள்
Territorial integrity — நாட்டெல்லைகளை மதித்தல்
Theology — சமய சித்தாந்தம்
Theatres of war — போர்க்களங்கள்
Treason — அரச துரோகம்
Truce Commission — தாற்காலிக உடன்பாட்டு ஆணைக்குழு
Theocracy — சமய ஆட்சி

Toleration	—	சமயப் பொறை, சகிப்புத் தன்மை
Tragedy	—	துயர நிகழ்ச்சி
Tribunate	—	பொதுமக்கள் பேராட் குழு
Trench	—	அகழி
Trusteeship Council	—	தர்மகர்த்தா அரசாட்சிக் குழு
Turning point	—	திருப்பு முனை, திருப்புக் கட்டம்
Tradition	—	மரபு
Trade union	—	தொழிலாளர் சங்கம்
Transitional provisions	—	இடைக்கால ஏற்பாடுகள்
Treasurer	—	கருவூலத்தார்
Treaty	—	உடன்படிக்கை
Tyrannicide	—	கொடுங்கோலரைக் கோறல்
Tyranny	—	கொடுங்கோன்மை
Two Nation Theory	—	இருநாட்டினக் கோட்பாடு
Talent	—	திறமை
Term	—	வாசகம்
Theory	—	தத்துவம், கோட்பாடு

U

Under-developed Countries	—	வளர்ச்சிக்குறை நாடுகள், பொருளாதார வளர்ச்சி யடையாத நாடுகள்
Ultimatum	—	இறுதி எச்சரிக்கை
Ultra vires	—	வரம்பு கடந்த
Unification	—	ஐக்கியம், ஒற்றுமைப்படுதல்
Unparliamentary	—	மன்ற முறையற்ற, மன்ற நடைமுறைக்கொவ்வாத
Universal manhood suffrage	—	ஆடவர் வாக்குரிமை
Unconditional surrender	—	நிபந்தனையற்ற சரணாகதி, தடையற்ற கீழ்ப்படிதல்
Unsectarian	—	குறுகிய உள்வகுப்புப் பற்றில்லாத
Union List	—	யூனியன் அரசாங்கப் பட்டியல்
Union of India	—	இந்திய யூனியன்
Unity	—	ஒற்றுமை
Unitary	—	ஒருமுக
United Nations Organisation	—	ஐக்கிய நாடுகள் சபை

Unicameralism — ஒருசபை முறை
Universalism — சர்வலோகத்துவம்
Unwritten Constitution — எழுதா அரசியலமைப்பு
Upper House — மேல்சபை
Utilitarianism — பயன்கருது தத்துவம்
Unprecedented — முன் நிகழ்ந்திராத
Usurping — உரிமையின்றிக் கைப்பற்றல்
Utilitarian — பயன் கருது கொள்கை சார்ந்த

V

Vassal — படைமானியக் குடி, கீழாள்
Vassal State — அடிமை நாடு
Veto — மறுப்பாணை (வீட்டோ)
Viceroy — அரசப் பிரதிநிதி, வைசிராய்
Vote — வாக்கு, ஓட்டு
Volunteer — தொண்டர், தானாக முன் வருவோர்
Viscount — இளங்கோமான் (வைக்கௌண்ட்)
Vernacular Press Act — (தாய்) மொழிப் பத்திரிகைச் சட்டம். தாய்மொழிச் செய்தித்தாள்கள் சட்டம்
Vice-President — துணைத் தலைவர்
Vocational Education — தொழில்முறைக் கல்வி
Vote of confidence — நம்பிக்கை வாக்கு
Voters' list — வாக்காளர் பட்டியல்
Vote of transferable — மாறிவரும் வாக்கு

W

War of Independence — உரிமைப் போர்
Woman franchise — பெண்கள் வாக்குரிமை
Working Committee — செயற்குழு
World Government — உலக அரசாங்கம்
Written Constitution — எழுதிய அரசியலமைப்பு
Writ — கட்டளை, ஆணை
Worship of reason — பகுத்தறிவு வழிபாடு
White paper — வெள்ளை அறிக்கை
Writ of Mandamus — கடமைக் கட்டளை

Y

Young Italy — இத்தாலிய இளைஞர் சங்கம்
Young Turk Movement — துருக்கிய இளைஞர் இயக்கம்
Year book — ஆண்டுத் தகவல் தொகுதி

Z

Zamindar — பெரு நிலக்கிழார்
Zone — மண்டலம், வட்டம்
Zenith — உச்சம், உச்ச நிலை, மிக உயர்ந்த நிலை
Zamindaries — ஜமீன் நிலங்கள்